www.tntextbooks.in

# இந்தியப் பண்பாடு

## மேல்நிலை - இரண்டாம் ஆண்டு

தீண்டாமை ஒரு பாவச்செயல்
தீண்டாமை ஒரு பெருங்குற்றம்
தீண்டாமை மனிதத்தன்மையற்ற செயல்

**தமிழ்நாட்டுப்**
**பாடநூல் கழகம்**
கல்லூரிச் சாலை, சென்னை - 600 006.

www.tntextbooks.in

© தமிழ்நாடு அரசு
முதற்பதிப்பு - 2004


**குழுத் தலைவர்**

**மேஜர். முனைவர். ரா. முருகேசன்**
தலைவர் - இந்தியப் பண்பாட்டுத் துறை,
அருள்மிகு பழநி ஆண்டவர் கலை
பண்பாட்டுக் கல்லூரி, பழநி

**மேலாய்வாளர்கள்**

**திரு. ஆர். கண்ணன்**
தேர்வு நிலை விரிவுரையாளர்,
இந்தியப் பண்பாட்டுத் துறை,
அருள்மிகு பழநி ஆண்டவர்
கலை பண்பாட்டுக் கல்லூரி,
பழநி.

**முனைவர். வெ. சந்திர சேகர்**
விரிவுரையாளர் - தத்துவத் துறை
இராமகிருஷ்ணா மிஷன்,
விவேகானந்தா கல்லூரி,
மைலாப்பூர்,
சென்னை - 600 004.

**நூலாசிரியர்கள்**

**திரு.வி. சந்தானம்**
முதுகலையாசிரியர்
பி.எஸ். மேல்நிலைப்பள்ளி,
மைலாப்பூர், சென்னை - 600 004.

**திருமதி. சி. காளீஸ்வரி**
முதுகலையாசிரியை,
நார்த்விக் மகளிர் மேல்நிலைப் பள்ளி,
இராயபுரம், சென்னை - 600 013.

**திரு. எஸ். சௌந்தரராசன்**
முதுகலையாசிரியர்,
ஆவிச்சி மேல்நிலைப் பள்ளி,
சாலிகிராமம்
சென்னை - 600 093.



பாடங்கள் தயாரிப்பு : தமிழ்நாடு அரசுக்காக
பள்ளிக் கல்வி இயக்ககம், தமிழ்நாடு.

இந்நூல் 60 ஜி எஸ் எம் தாளில் அச்சிடப்பட்டுள்ளது.


## முன்னுரை

"பண்புடையார் பட்டுண்டு உலகு". "பாருக்குள்ளே நல்ல நாடு" நம் பாரத நாடு. "இந்திய நாட்டின் தூசு கூட மிகப் புனிதமானது" என்பார் மாக்ஸ்முல்லர். 'வேற்றுமையில் ஒற்றுமை,' இந்தியப் பண்பாட்டின் அடித்தளம். 'ஆன்மிகம்,' நம் பண்பாட்டின் ஆணிவேர். மிகப்பழமை வாய்ந்த பண்பாட்டிற்குச் சொந்தக்காரர்கள் நாம். பன்னெடுங்காலமாக பல்வேறு தாக்கங்களை, இந்தியா சந்தித்த பொழுதும், இதன் புறநிலையில் சில மாற்றங்கள் தோன்றினவேயொழிய, இந்தியப் பண்பாட்டின் அடித்தளம் அப்படியே இருந்துவருகிறது. அவ்வப்பொழுது பேரரசர்களும், சிற்றரசர்களும் இந்தியப் பண்பாட்டு வளர்ச்சிக்கு தங்கள் கொடைகளைச் செய்திருக்கின்றனர். ஞானிகள், முனிவர்கள், ரிஷிகள், சித்தர்கள், அவதார புருஷர்கள் ஆகிய அருளாளர்களின் உயர்ந்த சிந்தனையின் தொகுப்பே இந்தியப் பண்பாடு. மனிதனின் புற, அகத் தூய்மையை வலியுறுத்தி அதனடிப்படையில் வளர்ச்சியை வலியுறுத்தும் 'யோக' அடிப்படையை கொண்டுள்ளது நமது பண்பாடு. வேதங்கள், உபநிடதங்கள், இதிகாசங்கள், புராணங்கள், பகவத்கீதை போன்ற தத்துவ மறைகள், பன்னிரு திருமுறைகள், நாலாயிரத் திவ்யப் பிரபந்தம் போன்ற பக்தி இலக்கியங்கள், மகாகவி காளிதாசன், கம்பன் போன்ற அருட்கவிகளின் படைப்புகள் யாவும் இந்தியப் பண்பாட்டிற்கு உரம் சேர்ப்பன. பல்வேறு இனமக்களின் பண்பாடும், நாகரிகமும், சமயங்களும் இந்தியப் பண்பாட்டின் வளர்ச்சிக்கு உதவியிருக்கின்றன. சமணம், பௌத்தம், யூதசமயம், கிறித்துவம், இசுலாம் போன்ற பல்வேறு சமயங்கள் தங்கள் சீரிய சிந்தனைகளை இந்தியப் பண்பாட்டிற்கு வழங்கி, இந்தியப் பண்பாடு ஒரு கலப்புப் பண்பாடாக வளர வழிவகுத்துள்ளன. "மேன்மையான சிந்தனைகள் எல்லாப் பகுதிகளிலிருந்தும் நம்மிடம் வரட்டும்" என்னும் ரிக் வேதக் கருத்துக்கேற்ப, அனைத்துப் பண்பாடுகளிலுமுள்ள நல்லனவற்றை உள்வாங்கி, இமயமென உயர்ந்து நிற்பது நமது பண்பாடு. இந்தியக் கட்டடக்கலை, சிற்பக்கலை, படிமக்கலை, ஓவியக்கலை, இசைக்கலை நாட்டுப்புறக் கலைகள், ஆகிய கலைகள் யாவும், இந்தியப் பண்பாட்டின் சிறப்பை உலகிற்கு உணர்த்துவன.

www.tntextbooks.in

இந்தியாவிலுள்ள வழிபாட்டு ஸ்தலங்கள் யாவும் பக்தி இயக்கத்தின் பெருமையை பறைசாற்றும். அகிம்சை, அன்பு, உண்மை, நேர்மை, சகிப்புத்தன்மை, சகோதரத்துவம், சமாதானம், சாந்தம், ஒற்றுமை, தியாகம் ஆகிய அழிவில்லாத மதிப்பீடுகளை உள்ளடக்கி இருப்பது இந்தியப் பண்பாடு. ஸ்ரீ இராமகிருஷ்ண பரமஹம்சர், சுவாமி விவேகானந்தர், ஸ்ரீ அரவிந்தர், மகாத்மா காந்திஜி போன்ற பெருமக்கள், இந்தியப் பண்பாட்டின் மதிப்பீடுகளை உணர்த்தியுள்ளனர். மனிதனின் ஆத்மசக்தியைப் போற்றுகிறது இந்தியப் பண்பாடு மனிதன் மனப்பக்குவமடைந்து ஆன்ம நேய ஒருமைப்பாட்டை உணர்ந்து, இறைத்தன்மை பெறுவதை இந்தியப் பண்பாடு வலியுறுத்துகிறது. பெண்மையையும், தாய்மையையும் இந்தியப் பண்பாடு மதிக்கின்றது. பறப்பன, ஊர்வன, விலங்குகள், மனிதன் முதலாய உயிர்த்தொகுதிகள் அனைத்தும் ஒருங்கிணைந்து, இயற்கையோடு இயைந்த வாழ்வு வாழ வழிவகுப்பது இந்தியப் பண்பாடாகும். "எல்லாரும் இன்புற்றிருக்க நினைப்பதுவேயல்லாமல் வேறொன்று மறியேன் பராபரமே" என்னும் தாயுமானாரின் வாக்கிற்கேற்ப, உலக நலமே இந்தியப் பண்பாட்டின் சாரம்.

இன்றைய இளைஞர் சமுதாயம், நமது பாரம்பரியத்தின் பெருமையையும், கலாசாரத்தின் மேன்மையையும், பண்பாட்டின் சிறப்பையும், நாகரிகத்தின் நன்மையையும் உணர்ந்து, நம் 'பாரத மாதாவின்' ஒப்பற்ற உயர்வை நம் இளைஞர்கள் தாமும் படித்து உலகிற்கு எடுத்துரைக்க வேண்டும் என்ற நல்லெண்ணத்துடனும், நம் இளைஞர்கள் சிறந்த குடிமக்களாக, பண்புள்ளவர்களாக நாட்டுப்பற்றுமிக்கவர்களாக வாழ வேண்டும் என்னும் குறிக்கோளுடனும் மனிதனை சான்றோனாக்கும் 'இந்தியப்பண்பாடு' பாடத்தை மேல்நிலை இரண்டாமாண்டு மாணவர்களுக்கு பாடமாக வைத்துள்ள தமிழக அரசுக்கு பாடநூல் குழுவினர் தங்களது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.

"கல்வியின் சிறப்பு - பண்பு"

**பாட நூல் குழுவினர்**



# பொருளடக்கம்

## 1. பண்பாடு பற்றிய கருத்துகளும் அதன் தொடர்களும்

**1. 1 பண்பாடு விளக்கம்** 1

1. 1. 1. பண்பாடு வரையறை

**1. 2. பண்பாட்டின் இயல்புகள்** 3

1. 2. 1. நிலைத்த தன்மை
1. 2. 2. நெகிழுந் தன்மை
1. 2. 3. நடைமுறை வாழ்விற்கு பயன்படுதல்
1. 2. 4. முழு வளர்ச்சிக்கு உதவுதல்
1. 2. 5. பொது அனுபவம்
1. 2. 6. அனுபவ அறிவின் விளைவு

**1. 3. இந்தியப் பண்பாட்டின் சிறப்பியல்புகள்** 5

1. 3. 1. ஆன்மிக அடிப்படை
1. 3. 2. அழியாத் தன்மை
1. 3. 3. பல பண்பாட்டுக் கூறுகளை உள்ளடக்கியது
1. 3. 4. சகிப்புத் தன்மையும் நல்லிணக்கமும்
1. 3. 5. மனித நேயம்
1. 3. 6. வேற்றுமைகளுக்கிடையே ஒற்றுமையை வளர்ப்பது
1. 3. 7. தத்துவக் கோட்பாடுகள்
1. 3. 8. அழிவில்லாத மதிப்பீடுகளின் நிலைக்களன்
1. 3. 8. 1. அன்பு
1. 3. 8. 2. சத்யம்
1. 3. 8. 3. தர்மம்
1. 3. 8. 4. அஹிம்சை
1. 3. 8. 5. சாந்தி

www.tntextbooks.in

1. 3. 8. 6. சகோதரத்துவம்

1. 3. 8. 7. கருணை

**1. 4. பண்பாடும் நாகரிகமும் 8**

1. 4. 1. நாகரிகம்

1. 4. 2. நாகரிகம் – விளக்கம்

1. 4. 3. பண்பாடு – நாகரிகம் – ஒற்றுமை – வேற்றுமைகள்

**1. 5. பண்பாட்டுக் கல்வியின் பயன்கள் 11**

1. 5. 1. அடிப்படை கோட்பாடுகளை அறியச் செய்தல்

1. 5. 2. தவறைத் தவிர்த்து சரியை உணரச் செய்வது

1. 5. 3. பிரச்சினைகளில் தீர்வுகாண உதவுதல்

1. 5. 4. இயற்கையோடு இயைந்த நிறைவாழ்வு

## 2. வேற்றுமையில் ஒற்றுமை

**2. 1. வேற்றுமையில் ஒற்றுமை வரையறை 16**

**2. 2. வேற்றுமை கூறுகள் 16**

2. 2. 1. நிலவியல் வேற்றுமைகள்

2. 2. 2. இன வேறுபாடு

2. 2. 3. மொழி வேறுபாடு

2. 2. 4. சமய வேறுபாடு

2. 2. 5. சமுதாய அமைப்பில் வேற்றுமைகள்

2. 2. 6. பொருளாதார வேற்றுமை

**2. 3. ஒற்றுமைக் கூறுகள் 18**

2. 3. 1. நிலவியல் அமைப்பில் ஒற்றுமை

2. 3. 2. அரசியல் ஒற்றுமை

2. 3. 3. சமய ஒற்றுமை

2. 3. 4. பண்பாட்டு ஒற்றுமை



2. 3. 5. மொழி ஒற்றுமை

2. 3. 6. உடலமைப்பில் ஒற்றுமை

**2. 4. பண்பாட்டு ஒற்றுமையை வளர்க்க துணைபுரிந்த காரணிகள் 21**

2. 4. 1. அரசர்கள்

2. 4. 2. ஒரே சீரான நிர்வாகம்

2. 4. 3. மொழியும் சமயமும்

2. 4. 4. போக்குவரத்தும் செய்தித் தொடர்பும்

2. 4. 5. வரலாறும் நாட்டுப் பற்றும்

2. 4. 6. பாரம்பரியமிக்க பண்பாட்டு பின்னணியில் வாழும் நாம் செய்ய வேண்டுவன.

## 3. சிந்து சமவெளி நாகரிகம்

**3. 1. குடிமக்கள் 27**

**3. 2. நகர அமைப்பு (Town Planning) 28**

**3. 3. கட்டடக்கலை (Architecture) 29**

**3. 4. சமுதாய நிலை 31**

3. 4. 1. உணவு

3. 4. 2. உடை

3. 4. 3. நாகரிகம்

3. 4. 4. அணிகலன்கள்

3. 4. 5. பொழுது போக்கு

3. 4. 6. பெண்களின் நிலை

3. 4. 7. போக்குவரத்துத் தொடர்பு

3. 4. 8. இறந்த உடல்களை அடக்கம் செய்தல்

www.tntextbooks.in

3. 4. 9. மருத்துவம்

**3. 5. பொருளாதார வாழ்க்கை முறை** 33

3. 5. 1. விவசாயம்

3. 5. 2. வீட்டுவிலங்குகள்

3. 5. 3. வேட்டையாடுதல்

3. 5. 4. நூற்றலும் நெய்தலும்

3. 5. 5. மட்பாண்டங்கள்

3. 5. 6. உலோகங்களும் தாதுப் பொருள்களும்

3. 5. 7. வாணிகம்

3. 5. 8. அளவீடுகள்

**3. 6. சமயம்** 35

3. 6. 1. தாய் வழிபாடு

3. 6. 2. சிவ வழிபாடு

3. 6. 3. விலங்கு வழிபாடு

3. 6. 4. நீர்வழிபாடு

3. 6. 5. மரவழிபாடு

3. 6. 6. 'சூரியன் மற்றும் நெருப்பு' வழிபாடு

3. 6. 7. மூடநம்பிக்கைகள்

**3. 7. கலை** 36

**3. 8. எழுத்துக்கள்** 37

**3. 9. ஹரப்பா நாகரிகத்தின் அழிவு** 37

**3. 10. இந்தியப் பண்பாட்டிற்கு சிந்து வெளிநாகரிகத்தின் கொடை** 39



## 4. வேதங்கள் மற்றும் புராணங்களில் காணப்படும் பண்பாட்டுக் கூறுகள்

**4. 1. வேதம் - சொல் விளக்கம், இலக்கியங்கள்** 41

4. 1. 1. வேத காலம்

4. 1. 2. ஆரிய வர்த்தம்

4. 1. 3. வேத இலக்கியங்கள்

4. 1. 3. 1. சம்ஹிதைகள்

4. 1. 3. 2. பிராமணங்கள்

4. 1. 3. 3. ஆரண்யகங்கள்

4. 1. 3. 4. உபநிடதங்கள்

4. 1. 3. 5. சுருதி மற்றும் ஸ்மிருதி

4. 1. 3. 6. நான்கு வேதங்கள்

4. 1. 4. உபவேதங்கள் - **(Upa vedas)**

**4. 2. முற்கால வேதகாலப் பண்பாடு** 46

4. 2. 1. அரசியல் அமைப்பு

4. 2. 1. 1. அரசியல் பிரிவுகள்

4. 2. 1. 2. அரச சபைகள்

4. 2. 1. 3. சமிதி என்னும் சட்டமன்றம்

4. 2. 1. 4. சபா என்ற முதியோர் அவை

4. 2. 2. சமுதாய நிலை

4. 2. 2. 1. குடும்பம்

4. 2. 2. 2. பெண்கள் நிலை

4. 2. 2. 3. கல்வி

4. 2. 2. 4. உணவு, உடை

4. 2. 2. 5. விளையாட்டும் பொழுதுபோக்கும்

www.tntextbooks.in

4. 2. 3. பொருளாதார நிலை
4. 2. 3. 1. தொழிலும், வணிகமும்
4. 2. 4. சமயம்
**4. 3. பிற்கால வேதகாலப் பண்பாடு 51**
4. 3. 1. இலக்கியம்
4. 3. 2. அரசியல் துறை
4. 3. 2. 1. அமைச்சர்களும் அலுவலர்களும்
4. 3. 2. 2. நீதிமுறை
4. 3. 2. 3. வருவாய்
4. 3. 3. சமுதாய நிலை
4. 3. 3. 1. பிராமணர்கள்
4. 3. 3. 2. க்ஷத்திரியர்கள்
4. 3. 3. 3. வைசியர்கள்
4. 3. 3. 4. சூத்திரரர்கள்
4. 3. 4. ஆசிரம முறை
4. 3. 4. 1. பிரம்மச்சர்யம்
4. 3. 4. 2. க்ருரஹஸ்தம்
4. 3. 4. 3. வனப்பிரஸ்தம்
4. 3. 4. 4. சந்நியாசம்
4. 3. 5. குடும்ப வாழ்வும் மணமுறையும்
4. 3. 5. 1. மகளிர் நிலை
4. 3. 5. 2. உணவு, உடை மற்றும் பொழுது போக்குகள்
4. 3. 6. பொருளாதார நிலை
4. 3. 6. 1. வேளாண்மை
4. 3. 6. 2. கால் நடை வளர்ப்பு
4. 3. 6. 3. வாணிகமும் தொழில் துறையும்



4. 3. 7. கல்வி முறை
4. 3. 8. சமய நிலை
4. 3. 8. 1. தவம்
4. 3. 8. 2. தத்துவம்
4. 3. 8. 3. ஆன்மாவும் பிரம்மமும்
4. 3. 8. 4. வினை, வீடுபேறு, மறு பிறவி
**4. 4. வேதங்களின் மேன்மையும் இன்றியமையாமையும் 58**
4. 4. 1. பாரதப் பண்பாட்டின் மூல ஆதாரம் வேதங்களே
4. 4. 2. வேதங்களின் இன்றியமையாமை
**4. 5. புராணங்கள் 60**
4. 5. 1. புராணம் சொல் விளக்கம்
4. 5. 2. உணர்த்தும் செய்திகள்
4. 5. 3. காலம்
4. 5. 4. புராணப் பண்புகள்
4. 5. 5. புராணங்களின் எண்ணிக்கையும் எழுதியவரும்
4. 5. 6. புராணங்களின் நோக்கம்
**4. 6. நவீன காலத்திற்கு வேதங்கள் மற்றும் புராணங்களின் ஏற்புடைமை 65**

## 5. இந்தியப் பண்பாட்டிற்கு தமிழகத்தின் கொடை

**5. 1. தென்னகப் பண்பாடு 71**
5. 1. 1. தமிழ்ப் பண்பாடு
5. 1. 2. தமிழ்ப் பண்பாட்டின் கூறுகள்
5. 1. 2. 1. காதல்
5. 1. 2. 2. வீரம்
5. 1. 2. 3. நட்பு

www.tntextbooks.in

5. 1. 2. 4. விருந்தோம்பல்

5. 1. 2. 5. ஈகை

5. 1. 2. 6. கொடை

5. 1. 2. 7. கற்புடைமை

5. 1. 2. 8. உலக ஒருமைப்பாடு

**5.2. முத்தமிழ்** **77**

5. 2. 1. இயற்றமிழ்

5. 2. 2. இசைத்தமிழ்

5. 2. 3. நாடகத்தமிழ்

**5.3. தொல்காப்பியம் உணர்த்தும் வாழ்க்கை முறை (அகம், புறம்)** **83**

5. 3. 1. உலகத்தோற்றம் பற்றிய கருத்து

5. 3. 2. அகவாழ்வு

5. 3. 3. திணை வகைகள்

5. 3. 3. 1. குறிஞ்சித்திணை

5. 3. 3. 2. முல்லைத்திணை

5. 3. 3. 3. மருதத்திணை

5. 3. 3. 4. நெய்தல் திணை

5. 3. 3. 5. பாலைத்திணை

5. 3. 4. புறவாழ்வு

5. 3. 4. 1. வெட்சித்திணை

5. 3. 4. 2. கரந்தைத் திணை

5. 3. 4. 3. வஞ்சித்திணை

5. 3. 4. 4. காஞ்சித்திணை

5. 3. 4. 5. உழிஞைத் திணை

5. 3. 4. 6. நொச்சித் திணை



5. 3. 4. 7. தும்பைத்திணை

5. 3. 4. 8. வாகைத்திணை

5. 3. 4. 9. பாடாண் திணை

5. 3. 4. 10. பொதுவியல் திணை

**5. 4. சங்க இலக்கியங்களில் காணப்படும் சமயக்கருத்துகள்** **90**

5. 4. 1. கடவுள், இயவுள், இறை

5. 4. 1. 1. சிவவழிபாடு

5. 4. 1. 2. வருணன் வழிபாடு

5. 4. 1. 3. இந்திரன்

5. 4. 1. 4. திருமால்

5. 4. 1. 5. நிமித்தங்கள்

5. 4. 1. 6. ஊழ்வினை

5. 4. 1. 7. தென்புலத்தார்

5. 4. 1. 8. நடுகல் வணக்கம்

5. 4. 1. 9. பத்தினி வணக்கம்

5. 4. 1. 10. பேய், பூதம், அணங்குகள்

5. 4. 1. 11. இயற்கை வழிபாடு

5. 4. 2. பிறசமயங்கள்

**5. 5. இந்தியப் பண்பாட்டிற்குத் தமிழ்ப்பண்பாட்டின் கொடை** **94**

5. 5. 1. மொழிக்கொடை

5. 5. 2. திருக்கோயில்கள்

5. 5. 2. 1. கோயில்களின் சிறப்பு

5. 5. 3. சிற்பம்

5. 5. 4. ஓவியம்

5. 5. 5. நாட்டியம்

www.tntextbooks.in

5. 5. 6. விழாக்கள்
5. 5. 7. கிராமிய விளையாட்டு
5. 5. 7. 1. ஜல்லிக்கட்டு
5. 5. 7. 2. இந்திர விழா
5. 5. 8. பிற கொடைகள்
5. 5. 8. 1. திருக்குறள்
5. 5. 8. 2. மருத்துவம்
5. 5. 8. 3. இசை
5. 5. 8. 4. கப்பல் கட்டுமானம்
5. 5. 8. 5. விருந்தோம்பல்
5. 5. 8. 6. நட்பு
5. 5. 8. 7. காதல்
5. 5. 8. 8. வீரம்
5. 5. 8. 9. மானம்
5. 5. 8. 10. கற்பு

**6. இந்தியப் பண்பாட்டிற்கு சமயங்களின் கொடை**

**6. 1. இந்து சமயம்** **109**
6. 1. 1. சனாதன தர்மம்
6. 1. 2. இந்து சமயப் பெருமைகள்
6. 1. 3. ஆறுவகை சமயங்கள்
6. 1. 4. இந்து சமய இலக்கியங்கள்
6. 1. 5. இந்து சமயக் கோட்பாடுகள்
6. 1. 5. 1. அத்வைதம்
6. 1. 5. 2. விசிஷ்டாத்வைதம்
6. 1. 5. 3. துவைதம்:



6. 1. 6. கீதை உணர்த்தும் நான்கு மார்க்கங்கள்
6. 1. 6. 1. ஞான மார்க்கம்
6. 1. 6. 2. இராஜ மார்க்கம்
6. 1. 6. 3. கர்ம மார்க்கம்
6. 1. 6. 4. பக்தி மார்க்கம்
6. 1. 7. இந்து சமய விழாக்கள்
6. 1. 7. 1. விநாயக சதுர்த்தி விழா
6. 1. 7. 2. நவராத்திரி விழா
6. 1. 7. 3. தீபாவளி
6. 1. 7. 4. கந்தவிரத விழாக்கள்
6. 1. 7. 5. திருக் கார்த்திகை விழா
6. 1. 7. 6. சிவராத்திரி விழா
6. 1. 8. சடங்குகளும் சம்பிரதாயங்களும்
6. 1. 9. இந்து சமயக் கோட்பாடுகளின் முக்கியத்துவம்
6. 1. 10. இந்தியப் பண்பாட்டிற்கு இந்து சமயத்தின் கொடை

**6. 2. சமண சமயம்** **134**
6. 2. 1. சமணம் - சொல்விளக்கம்
6. 2. 2. தீர்த்தங்கரர்
6. 2. 3. சமண சமயப் பிரிவுகள்
6. 2. 4. வர்த்தமான மகா வீரர்
6. 2. 5. சமணக் கோட்பாடுகள்
6. 2. 5. 1. மும்மணிகள்
6. 2. 5. 2. சியாத்வாதம் அல்லது அநேகாந்த வாதம்

www.tntextbooks.in


6. 2. 5. 3. அகிம்சை

6. 2. 5. 4. ஐந்து பெரும் நோன்புகள் அல்லது பஞ்சமஹாவிரதம்

6. 2. 5. 5. நவபதார்த்தம்

6.2.5.6. சமண சமய இலக்கியம்

6. 2. 6. இந்தியப் பண்பாட்டிற்கு சமணத்தின் பங்கு

6. 2. 6. 1. சமண இலக்கியமும் வளர்ச்சியும்

6. 2. 6. 2. சமணர்களின் அறக்கோட்பாடுகள்

6. 2. 6. 3. அகிம்சை

6. 2. 6. 4. சமண தத்துவம்

6. 2. 6. 5. கலை

**6.3. புத்த சமயம்** **143**

6.3.1. புத்தர்

6.3.2. புத்தரது சமய போதனைகள்

6.3.2.1. நான்கு உயரிய உண்மைகள் (அ) ஆரிய சத்தியங்கள்

6.3.2.2. எண்வகை வழிகள்

6.3.2.3. இடைவழி அல்லது மத்திய மார்க்கம்

6.3.2.4. நிர்வாணம்

6.3.2.5. கர்மவினை

6.3.2.6. ஒழுக்கம்

6.3.2.7. துறவறத்தார் பின்பற்ற வேண்டியவை

6.3.3. புத்த சமயத்தின் பிரிவுகள்

6.3.4. இந்தியப் பண்பாட்டிற்கு பௌத்த சமயக் கொடை





**7. இந்தியப் பண்பாட்டிற்கு பேரரசுகளின் கொடை**

**7. 1. மௌரியர் காலப் பண்பாடு** **151**

7. 1. 1. காலம்

7. 1. 2. சான்றுகள்

7. 1. 3. முக்கிய அரசர்கள்

7. 1. 4. அரசியல் நிலை

7. 1. 5. சமுதாய நிலை

7. 1. 6. சமய வளர்ச்சி

7. 1. 7. கலை வளர்ச்சி

7. 1. 8. இந்திய பண்பாட்டிற்கு மௌரியர்களின் கொடை

**7. 2. குப்தர் காலப் பண்பாடு** **166**

7. 2. 1. காலம்

7. 2. 2. சான்றுகள்

7. 2. 3. முக்கிய அரசர்கள்

7. 2. 4. அரசியல் நிலை

7. 2. 5. சமுதாய நிலை

7. 2. 6. சமய வளர்ச்சி

7. 2. 7. கலை வளர்ச்சி

7. 2. 8. இந்திய பண்பாட்டிற்கு குப்தர்களின் கொடை

**7. 3. பிற்காலப் பல்லவர் காலப் பண்பாடு** **179**

7. 3. 1. காலம்

7. 3. 2. சான்றுகள்

7. 3. 3. முக்கிய அம்சங்கள்

7. 3. 4. அரசியல் நிலை

7. 3. 5. சமுதாய நிலை

7. 3. 6. சமய நிலை

7. 3. 7. கலை வளர்ச்சி

www.tntextbooks.in

**7. 4. பிற்காலச் சோழர்காலப் பண்பாடு 193**

7. 4. 1. காலம்

7. 4. 2. சான்றுகள்

7. 4. 3. முக்கிய அரசர்கள்

7. 4. 4. அரசியல் நிலை

7. 4. 5. சமுதாய நிலை

7. 4. 6. சமய வளர்ச்சி

7. 4. 7. கலை வளர்ச்சி

7. 4. 8. இந்திய பண்பாட்டிற்கு சோழர்களின் கொடை

**7. 5 பிற்காலப் பாண்டியர் பண்பாடு 212**

7. 5. 1. காலம்

7. 5. 2. சான்றுகள்

7. 5. 3. முக்கிய அரசர்கள்

7. 5. 4. அரசியல் நிலை

7. 5. 5. சமுதாய நிலை

7. 5. 6. சமய வளர்ச்சி

7. 5. 7. கலை வளர்ச்சி

7. 5. 8. இந்திய பண்பாட்டிற்கு பிற்காலப் பாண்டியரின் கொடை

## 8. இந்தியப் பண்பாட்டில் இசுலாம்மற்றும் கிறித்துவ சமயங்களின் பங்கு

**8. 1. இசுலாம் விளக்கம் 227**

8. 1. 1. நபிகள் நாயகம்

8. 1. 2. சமயக் கோட்பாடுகள்

8. 1. 3. இந்திய பண்பாட்டிற்கு இஸ்லாமிய சமயத்தின் கொடை



**8. 2. கிறித்துவம் 230**

8. 2. 1. ஏசுகிறிஸ்து

8. 2. 2. சமயக்கோட்பாடுகள்

8. 2. 3. கிறித்துவ தொண்டு நிறுவனங்களின் பணிகள்

8. 2. 4. இந்திய பண்பாட்டிற்கு கிறித்துவ சமயத்தின் கொடை

## 9. பக்தி இயக்கம் ( இடைக்காலம் )

**9. 1. பக்தி நெறி விளக்கம் 235**

9. 1. 1. பக்தி நெறி தோன்றக் காரணங்கள்

9. 1. 2. பக்தி இயக்கத்தின் சீரிய பண்புகள்

9. 1. 3. பக்தி இயக்கத்தின் விளைவுகள்

**9. 2. இடைக்கால பக்தி இயக்கம் 240**

9. 2. 1. இராமனுஜர்

9. 2. 2. மத்துவர்

9. 2. 3. இராமாநந்தர்

9. 2. 4. நிம்பர்க்கர்

9. 2. 5. கபீர்

9. 2. 6. நாமதேவர்

9. 2. 7. குருநானக்

9. 2. 8. வல்லபாசாரியார்

9. 2. 9. மீராபாய்

9. 2. 10. சைதன்யர்

9. 2. 11. துக்காராம்

9. 2. 12. துளசிதாசர்

9. 2. 13. பசவர்

9. 2. 14. ஏகநாதர்

9. 2. 15. சூர்தாசர்

www.tntextbooks.in


**9. 3. ஆழ்வார்கள்** **245**

9. 3. 1. ஆழ்வார்கள் விளக்கம்

9. 3. 1. 1. ஆழ்வார்கள்பிரிவு

9. 3. 1. 2. முற்காலத்தவர்கள்

9. 3. 1. 3. இடைக்காலத்தவர்கள்

9. 3. 1. 4. பிற்காலத்தவர்கள்

9. 3. 2. ஆழ்வார்கள் சிறு குறிப்பு பாடல்கள்

9. 3. 2. 1. பொய்கை ஆழ்வார்

9. 3. 2. 2. பூதத்தாழ்வார்

9. 3. 2. 3. பேயழ்வார்

9. 3. 2. 4. திருமழிசையாழ்வார்

9. 3. 2. 5. நம்மாழ்வார்

9. 3. 2. 6. மதுரகவியாழ்வார்

9. 3. 2. 7. குலசேகராழ்வார்

9. 3. 2. 8. பெரியாழ்வார்

9. 3. 2. 9. ஆண்டாள்

9. 3. 2. 10. தொண்டரடிப் பொடியாழ்வார்

9. 3. 2. 11. திருப்பாணாழ்வார்

9. 3. 2. 12. திருமங்கை ஆழ்வார்

9. 3. 3. ஆழ்வார்களின் அரிய தொண்டு

**9. 4. நாயன்மார்கள்** **258**

9. 4. 1. சமயாசாரியர்

9. 4. 2. நாயன்மார்களுள் சிலர் சிறுகுறிப்பு பாடல்கள்

9. 4. 2. 1. திருஞான சம்பந்தர்

9. 4. 2. 2. அப்பர்

9. 4. 2. 3. சுந்தரர்





9. 4. 2. 4. மாணிக்கவாசகர்

9. 4. 2. 5. திருநீலகண்டர்

9. 4. 2. 6. இயற்பகை நாயனார்

9. 4. 2. 7. இளையான்குடிமாறனார்

9. 4. 2. 8. மெய்பொருள் நாயனார்

9. 4. 2. 9. சிறுத் தொண்டர்

9. 4. 2. 10. சேரமான் பெருமாள் நாயனார்

9. 4. 2. 11. மங்கையர்க்கரசியார்

9. 4. 2. 12. திலகவதியார்

9. 4. 3. சந்தானாச்சாரியார்கள்

9. 4. 4. நாயன்மார்களின் சமயத் தொண்டு


## 10. சமய, சமுதாய சீர்திருத்த இயக்கங்கள்


**10. 1. சமய, சமுதாய சீர்திருத்த இயக்கங்கள் தோன்ற காரணங்கள்** **279**

10. 1. 1. இந்தியாவின் நிலை

10. 1. 2. சீர்திருத்த இயக்கங்கள் தோன்றக் காரணிகள்

10. 1. 3. சீர்திருத்த இயக்கங்களின் விளைவுகள்

**10. 2. பிரம்ம சமாஜம்** **284**

10. 2. 1. பிரம்மசமாஜத்தின் தொண்டுகள்

10. 2. 1. 1. சமயத் தொண்டு

10. 2. 1. 2. சமுதாயத் தொண்டு

10. 2. 1. 3. எழுத்துரிமை

10. 2. 2. இராசாராம் மோகன்ராய் - ஒரு மதிப்பீடு

10. 2. 3. பிரமசமாஜம் - இராசாராம் மோகன்ராய் காலத்திற்குப்பின்

www.tntextbooks.in

**10. 3. ஆரிய சமாஜம்** **288**

10. 3. 1. ஆரியசமாஜம் விளக்கம்
10. 3. 2. ஆரியசமாஜத்தின் கோட்பாடுகள்
10. 3. 3. ஆர்ய சமாஜத்தின் செயல்பாடுகள்
10. 3. 3. 1. வேதங்களைப் பரப்புவது
10. 3. 3. 2. இந்தியப் பண்பாட்டை மக்களிடம் எடுத்துச் செல்வது
10. 3. 3. 3. கல்வி நிறுவனங்களை உருவாக்குதல்
10. 3. 4. சமுதாய தொண்டு
10. 3. 4. 1. பெண்கள் நலம்பேணுதல்
10. 3. 4. 2. குழந்தைகள் இல்லம்
10. 3. 4. 3. விதவைகள் இல்லம்
10. 3. 4. 4. கைவிடப்பட்ட / அநாதை பெண்களுக்கான ஆசிரமம்
10. 3. 4. 5. தொண்டர் குழுக்கள்
10. 3. 5. சமுதாய மறுமலர்ச்சி
10. 3. 5. 1. குழந்தை மணத்திற்கு எதிராக
10. 3. 5. 2. பலதார மணத்திற்கு எதிராக
10. 3. 5. 3. வயதான ஆண்மகனின் திருமணத்திற்கு எதிராக
10. 3. 5. 4. ஆண்களும் பெண்களும் சரிநிகர் சமானம்
10. 3. 5. 5. சாதி முறைகளும் தீண்டாமைகளும்
10. 3. 5. 6. புனிதப்படுத்துதல் (நட்ன்க்க்ட்ண்)
10. 3. 5. 7. ஆரியசமாஜத்தின் தொண்டுகள் நடைபெறும் இடங்கள்
10. 3. 6. சுவாமி தயானந்தர் ஒரு மதிப்பீடு



**10. 4. இராமகிருஷ்ண இயக்கம்** **296**

10. 4. 1. இராமகிருஷ்ணரின் வாழ்வு
10. 4. 2. இராமகிருஷ்ணரின் கொள்கைகள்
10. 4. 3. சுவாமி விவேகானந்தர்
10. 4. 4. இராமகிருஷ்ண இயக்கம் நிறுவப்படல்
10. 4. 5. இராமகிருஷ்ண இயக்கத்தின் நோக்கங்களும் குறிக்கோள்களும்
10. 4. 6. விவேகானந்தர் பொன்மொழிகள்

**10. 5. பிரம ஞான சபை** **303**

**10. 6. காந்தியடிகள் வாழ்க்கை வரலாறு** **305**

10. 6. 1. மகாத்மாவின் இளமைப்பருவம்
10. 6. 2. இந்திய விடுதலையும் மகாத்மாவும்
10. 6. 2. 1. சுதேசி இயக்கம்
10. 6. 2. 2. சுயராஜ்ஜியம்
10. 6. 2. 3. சர்வோதயம்
10. 6. 2. 4. அகிம்சை
10. 6. 2. 5. சத்தியாகிரஹம்
10. 6. 3. சமுதாய சேவைகள்

## 11. உலகப் பண்பாட்டிற்கு இந்தியாவின் கொடை

**11. 1. பிற நாடுகளில் இந்தியப் பண்பாடு** **325**

11. 1. 1. பௌத்த சமயம்
11. 1. 2. சமஸ்கிருதமும் தமிழும்
11. 1. 3. இந்திய விடுதலையும் மகாத்மா காந்தியும்
11. 1. 4. தேர்தல்கள்
11. 1. 5. அறக் கோட்பாடு

www.tntextbooks.in

11. 1. 6. பஞ்ச சீலம்

11. 1. 7. வேறு சில இந்தியப் பரிசுகள்

11. 1. 8. பல்வேறு இயக்கங்கள்

11. 1. 8. 1. மனித நேயம்

11. 1. 8. 2. உயர்ந்த தத்துவங்கள்

11. 1. 8. 3. சிறந்த உலகத்தரம் வாய்ந்த இலக்கியங்கள்

11. 1. 8. 4. தாய்மை, பெண்மை

11. 1. 8. 5. அகிம்சை

11. 1. 8. 6. அமைதி

11. 1. 8. 7. நுண்கலை

11. 1. 8. 8. யோகா

11. 1. 8. 9. எளிமையானவாழ்வும் உயர்ந்த சிந்தனைகளும்

## 12. இந்தியப் பண்பாடும், சுற்றுச் சுழல் கல்வியும்

**12. 1. சுற்றுப்புறச் சூழல் கல்வி - விளக்கம்** **333**

**12. 2. இந்திய சுற்றுச்சூழல்** **334**

12. 2. 1. மலைகள்

12. 2. 2. நதிகள்

12. 2. 3. மரங்கள்

12. 2. 4. பறவைகளும் விலங்குகளும்

12. 2. 5. கடலும், காடும்

12. 2. 6. பஞ்சபூதங்கள்

**12. 3. இயற்கையோடு இயைந்த வாழ்வு** **339**

**12. 4. சுற்றுப்புறச் சூழலில் மாணவர்களின் பங்கு** **340**

www.tntextbooks.in

# 1. பண்பாடு பற்றிய கருத்துகளும் அதன் தொடர்புகளும்

உலகில் வாழும் மக்கள் அனைவரும் இயல்பாகவே சீரும் சிறப்புமாக வாழ விரும்புகின்றனர். அமைதியும் மன மகிழ்ச்சியும் நிறைந்த வாழ்வே நல்வாழ்வு ஆகும். இத்தகைய நல்வாழ்வு வாழ சமுதாயம் சான்றோர்கள் நிறைந்ததாக இருக்க வேண்டும். இதனாலேயே வள்ளுவப் பெருந்தகை,

"பண்புடையார்ப் பட்டுண்டு உலகம் அஃது இன்றேல்
மண்புக்கு மாய்வது மன்" - என்கிறார்.

செம்மையான வாழ்விற்கு அடித்தளமாய் அமைவது பண்பாடு. இச்சொல் 'கலாசாரம்' என வழங்கப் பெற்றது. 'கலாசாரம்' என்ற சொல்லுக்கு இணையான தமிழ்ச் சொல்லாக 'பண்பாடு' என்ற சொல்லை திரு. டி.கே.சிதம்பரநாதனார் அவர்கள் உருவாக்கிக் கொடுத்துள்ளார். இப்பாடத்தில் பண்பாடு பற்றிய கருத்துகளையும் பண்பாட்டுக் கல்வியால் நாம் பெறும் நன்மைகள், மற்றும் இந்தியப் பண்பாட்டின் சிறப்புகளையும் விரிவாகக் காண்போம்.

## 1. 1. பண்பாடு விளக்கம்

'பண்படு' என்னும் சொல் 'பண்பாடு' ஆயிற்று என்பர் பண்படுத்துதல் என்றால் சீர்படுத்துதல், செம்மைப் படுத்துதல் எனப் பொருள்படும் உலக உயிர்களின் வாழ்கைக்கு இன்றியமையாதது உணவு. இவ் உணவை நல்கும் உழவுத் தொழில் பற்றி கூறுமிடத்து வள்ளுவர் உழவன் நிலத்தை பலசால் உழ வேண்டும் என்கிறார். பெரிய மண் கட்டிகள் துகளாகும் வரை உழ வேண்டும். அவ்வாறு உழுவதால் அந் நிலத்திற்கு ஒரு பிடி எருவும் இட வேண்டா என்கிறார். இவ்வாறு உழுவதால் மண் துகள்களிடையே காற்றும் சூரிய வெளிச்சமும் புகுந்து பயிர்கட்கு வேண்டிய ஊட்டச் சத்தை தருகின்றன என்ற பேருண்மையை உணர்த்துகிறார். இதனையே, 'பண்படுத்துதல்' என்கிறோம்.

www.tntextbooks.in

இத்தகைய பண்பட்ட நிலத்தில் உழவன் தான் விதைத்தவற்றை பன்மடங்கு பெருக்கி விளைபொருளைப் பெறுகிறான். அதுபோல நம் மனத்தை நல்ல பழக்க வழக்கங்களாலும். கல்வியறிவாலும், உயர்ந்த அனுபவங்களாலும் பக்குவப்படுத்தி நற்குணத்தை வளர்ப்பதே 'பண்பாடு' ஆகும். மனதை முதன்மை படுத்தக் காரணம் நாம் எதை மனதில் சிந்திக்கின்றோமோ அதனையே சொல்லாகவும் செயலாகவும் வெளிப்படுத்துகிறோம். எனவே தான் "அகத்தின் அழகு முகத்தில் தெரியும்" என்ற பழமொழி வழக்கில் உள்ளது. எனவே மனதில் நல்ல எண்ணங்களை வளர்த்துக் கொள்ள வேண்டும். நல்ல எண்ணங்களாகிய சிறந்த அறிவு, ஒழுக்கம், அடக்கம், பணிவு, இன்சொல் பிறர்க்கு உதவும் மனிதநேயம் போன்ற உயரிய பண்புகளை வளர்த்துக்கொள்ள வேண்டும்.

### *1. 1. 1. பண்பாடு-வரையறை*

பண்பாடு பற்றி சான்றோர்களும், வரலாற்று வல்லுநர்களும் கூறியுள்ள கருத்துகள் பண்பாட்டின் சிறப்பினை விளக்குவதாக அமைகின்றன.

1. **E.B. டெய்லர் :-** "மனிதன் சமுதாயத்தில் ஓர் அங்கத்தினன். இந்நிலையில் அவன் அடைந்துள்ள அறிவு, நம்பிக்கை, கலை, ஒழுக்கக் கோட்பாடுகள், சட்டம், பழக்க வழக்கங்கள் ஆகியவற்றை தன்னுள் அடக்கிய ஒரு முழுமையான தொகுப்பே பண்பாடு"

2. ***வால்டேர்:-*** "அவரவர் அன்றாடப் பணிகளை நேர்மையான மனநிலையுடனும், நேர்மையான நோக்குடனும், மகிழ்ச்சியுடனும் செய்வதில் தான் பண்பாடு மிளிர்கிறது."

3. ***கே.எம். முன்ஷி:-*** "பண்பாடு என்பது சீரிய வாழ்வு முறை, இவ்வாழ்வு முறை மக்கள் நம்பிக்கை வைத்துள்ள அடிப்படை மதிப்பீடுகளால் ஊக்குவிக்கப்படுகிறது."

4. ***டாக்டர் சர்.சி.பி. இராமசாமி அய்யர்:-*** "வாழ்விற்குரிய வழக்கமான பணிகளை திறமையாகச் செய்வதை உபநிடதங்கள் வலியுறுத்துகின்றன. உபநிடதக் கருத்துகளை பிரதிபலிப்பதே பண்பாடு."

5. ***தமிழறிஞர் கருத்து:-*** தமிழ் மொழியில் 'பண்பாடு' என்பது "சான்றாண்மையாகிய ஒழுக்கம்" அல்லது "உயர்ந்த வழிச் செல்லுதல்" என்ற பொருளை தன்னுள் கொண்டு வாழ்வை சிறப்படையச் செய்வது என்று பொருள்படுகிறது.



பண்பாட்டை சுருங்கக் கூறுமிடத்து ஒரு மனிதனிடம் காணப்படும் மூன்று கூறுகள் முறையே உடல், உள்ளம், ஆன்மா. இவற்றுள் உடல் அழியக்கூடியது. அழியாத தன்மையுடைய உயிரின் பிரதிபலிப்பே உள்ளம். எனவே பண்பாடாவது உயிரையும் உள்ளத்தையும் செம்மைப்படுத்தி அக வளர்ச்சியை மையமாகக் கொண்டதே என்பர்.

## 1. 2. பண்பாட்டின் இயல்புகள்

பண்பாடு கற்று உணரத் தக்கது. உலகில் தோன்றும் எவரும் இயல்பாகவே உயரிய பண்பாளராகப் பிறப்பதில்லை. தான் வாழும் சமுதாயத்தில் இருந்து கற்றுக்கொள்ளும் உயரிய வாழ்க்கை நெறிமுறைகளே சிறந்த பண்பாளராக உருவாக்குகின்றது.

### 1. 2. 1. நிலைத்த தன்மை:

பண்பாடு நிலையான தன்மை கொண்டது. பண்பாட்டுக் கூறுகள் மாறாத, அழியாத தன்மையுடையன. மனிதன் அழிந்தாலும் அழியாத தன்மையுடைய பண்பாடு அவனைத் தொடர்ந்து வரும். இதனையே வள்ளுவர்,

"ஒருமைக்கண் தான்கற்ற கல்வி ஒருவற்கு
எழுமையும் ஏமாப்பு உடைத்து".

என்ற குறள் மூலம் விளக்குகிறார். கல்வி என்பது நூலறிவை மட்டும் கொள்ளாமல் நன்னெறிகளைப் பின்பற்றுதலையும் வள்ளுவர் கல்வி என்றே கூறுகிறார்.

www.tntextbooks.in

### 1. 2. 2. நெகிழுந் தன்மை:

பண்பாடு நிலைத்த தன்மை கொண்டதுடன் நெகிழும் தன்மை கொண்டது. விடாப்பிடியாக ஒன்றையே கொள்ளாமல் சூழ்நிலைக்குத் தகுந்தாற்போல வளைந்து தரும் இயல்பு கொண்டது சில இடங்களில் கடினமான உறுதியுடனும், சில இடங்களில் எளிமையானதாகவும் பண்பாட்டுக் கூறுகள் செயல்படுவதைக் காண்கிறோம். வள்ளுவர் வாய்மையே உயர்ந்த அறம் என்றும் வாய்மையினின்று தவறுதல் கூடாது என்றும் வலியுறுத்துகிறார். ஆனால் அவரே 'பொய்மையும்' குற்றமற்ற நன்மையைப் பிறர்க்குத் தருமாயின் வாய்மையாகவே கருதப்படும் என்கிறார்.

"பொய்ம்மையும் வாய்மை இடத்த புரைதீர்ந்த
நன்மை பயக்கும் எனின்"

என்னும் குறள் மூலம் விளக்குகிறார்.

### 1. 2. 3. நடைமுறை வாழ்விற்குப் பயன்படுதல்

பண்பாடு தனி மனிதனின் முன்னேற்றத்திற்கும் சமுதாய முன்னேற்றத்திற்கும் உரிய குறிக்கோளை அடிப்படையாகக் கொண்டது. நடைமுறை வாழ்விற்கு வேண்டிய இன்றியமையாத வாழ்வியல் நெறிகளைக் கொண்டது. வாய்மையாகிய பொய் பேசாமை, அஹிம்சையாகிய பிற உயிர்கட்கு தீங்கு செய்யாமை, இரக்கமாகிய கருணை மனப்பான்மை என்று பல அன்றாட வாழ்வியல் உண்மைகளை எடுத்துக்காட்டாகக் கூறலாம்.

### 1. 2. 4. முழு வளர்ச்சிக்கு உதவுதல்

ஒவ்வொரு நாடும் பிற நாடுகளுடன் ஏதேனும் ஒரு வகையில் தொடர்பு கொண்டுள்ளன. பழங்காலத்தில் வாணிகத்தாலும் படையெடுப்புகளாலும் தொடர்பு ஏற்பட்டது. இத்தொடர்பு பண்பாட்டுத் தாக்கத்திற்கு வித்திட்டது. இன்றைய நாளில் அறிவியல் மற்றும் தொழில்நுட்ப வளர்ச்சியால் அனைத்துத் துறைகளிலும் உலக நாடுகள் ஒன்றுடன் ஒன்று நெருங்கிய தொடர்பு கொண்டுள்ளன. இந்த நிலையில் பண்பாட்டுத் தாக்கம் உண்டாவது இயற்கையே. ஆனால் இந்த பண்பாட்டுத் தாக்கம் எவ்வகையிலும் அந்நாடுகளின் முழுமையான வளர்ச்சிக்கு தடையாக இல்லாமல் "யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்ற பரந்த உலகளாவிய மனப்பான்மையை நிலைநாட்டுவதற்கு உறுதுணையாக உள்ளது.



### 1. 2. 5. பொது அனுபவம்

பண்பாட்டுடன் செயல்படுவது ஒரு மனிதனுக்கு மட்டுமோ அல்லது ஒரு சமுதாயத்திற்கு மட்டுமோ உரிய அனுபவம் அன்று. அது உலகம் முழுவதும் வாழும் மனித இனம் அனைத்திற்கும் உரிமையான பொது அனுபவம் ஆகும்.

### 1. 2. 6. அனுபவ அறிவின் விளைவு

உலகில் எந்த இரு நாடுகளின் பண்பாடும் ஒன்றாக இருப்பதில்லை. ஒவ்வொன்றும் மற்றொன்றிலிருந்து மாறுபட்டு விளங்குகின்றது. ஒவ்வொரு பண்பாடும் ஒரு குறிப்பிட்ட மக்களின் அனுபவ அறிவினால் வந்த விளைவு ஆகும்.

## 1. 3. இந்தியப் பண்பாட்டின் சிறப்பியல்புகள்

இந்தியப் பண்பாடு உலக அளவில் உன்னத இடத்தைப் பெற்றுள்ளது. இப் பண்பாட்டின் உன்னதக் கருத்துகளாவன.

### 1. 3. 1. ஆன்மிக அடிப்படை

இறையுணர்வு, ஆன்மிக வேட்கை இவ்விரண்டுமே இந்தியப் பண்பாட்டின் அடித்தளம். அழியாத ஆன்மாவின் வேட்கையாகிய வீடுபேற்றையடைய இறை உணர்வு இன்றியமையாதது. இறை உணர்வை வளர்க்க சமயம் இன்றிய மையாதது. சமயம் இந்தியப் பண்பாட்டின் ஆணி வேர். சமயத்தைப் புறக்கணித்தால் இந்தியப் பண்பாடு பொருளற்றதாகி விடும். சத்யம், தர்மம், அஹிம்சை போன்ற பல்வேறு அறக்கோட்பாடுகளையும் கர்மநெறி, மறுபிறவிக் கோட்பாடு, அவதாரக் கோட்பாடு ஆகிய அனைத்தையும் ஒரு சேரப் பெற்று சிறந்து விளங்குவது இந்தியப் பண்பாட்டின் முதலாவது சீரிய தன்மை எனலாம்.

www.tntextbooks.in

### 1. 3. 2. அழியாத் தன்மை

நமது இந்தியப் பண்பாடு மிகவும் பழமை வாய்ந்தது. சம காலத்தில் தோன்றி உன்னத நிலையில் திகழ்ந்த எகிப்திய, கிரேக்க, உரோமானிய, பாபிலோனியப் பண்பாடுகள் கால வெள்ளத்தில் அழிந்து போயின. ஆனால் நமது இந்தியப் பண்பாடு இன்றும் நிலைபெற்று உறுதியுடனும் உன்னத நிலையிலும், திகழ்ந்து வருகிறது. அரசின் ஆதரவு இல்லாமலும், பல்வேறு அந்நியப் படையெடுப்புகள் நிகழ்ந்த போதும் நமது இந்தியப் பண்பாடு அவற்றால் எவ்வித பாதிப்பும் இல்லாமல் ஆலமரமென விரிந்து பரந்துள்ளது.

### 1. 3. 3. பல பண்பாட்டுக் கூறுகளை உள்ளடக்கியது

வரலாற்றுக் காலத்திற்கு முன்பிருந்து இன்றுவரை ஆரிய, திராவிட, பாரசீக, கிரேக்க, அரேபிய, ஐரோப்பிய, இசுலாமிய, கிறித்தவ பண்பாடுகளின் சீரிய கோட்பாடுகளின் கூட்டிணைப்பாகச் சிறந்து விளங்குவதே இந்தியப் பண்பாட்டின் தனிச் சிறப்பு எனலாம்.

### 1. 3. 4. சகிப்புத் தன்மையும் நல்லிணக்கமும்

இந்தியப் பண்பாட்டின் மிகச் சிறந்த பண்பு அதன் சகிப்புத் தன்மை எனலாம். அது தன்னை நாடி வந்த யூதர்கள், இசுலாமியர், கிறித்தவர்களின் பண்பாட்டுக் கூறுகளை வெறுக்கவில்லை. மாறாக அவற்றில் காணப்பட்ட அரிய உண்மைகளை தாமும் ஏற்றுக்கொண்டு அரவணைத்துச் செல்வது இதன் உயரிய பண்பாகும்.

### 1. 3. 5. மனித நேயம்

இந்தியப் பண்பாடு, இரக்கம், கருணை, அஹிம்சை, இன்னா செய்யாமை போன்ற பல்வேறு கூறுகளை அடிப்படையாகக் கொண்டது. பிறர்க்கு உதவும் அருங்குணம், இந்தியப் பண்பாட்டின் சிறந்த கூறாகும்.

இதனையே வள்ளுவர்,

“அற்றார் அழிபசி தீர்த்தல் அஃது ஒருவன்
பெற்றான் பொருள்வைப் புழி”



என்னும் குறள் மூலம் பொருளைப் பெற்றவர் பிறர்க்கு உதவுதலே பொருளைப் பெற்றதன் பயன் என்கிறார். பொருளுதவி மட்டும் அன்று, பிற அனைத்து வகை உதவிகளைப் பண்பட்டோர் பிறர்க்கு செய்து அழியாப் புகழ் பெற்று விளங்குவதை வரலாற்றில் நாம் காண்கிறோம்.

### 1. 3. 6. வேற்றுமைகளுக்கிடையே ஒற்றுமையை வளர்ப்பது

இந்தியத் துணைக் கண்டத்தில் இனம், மொழி, எண்ணம், சமயம், தத்துவம், சடங்கு, பழக்கவழக்கம் போன்ற பல்வேறு வாழ்க்கை நிலைகளில் வேற்றுமைகள் இருப்பினும் அந்த வேற்றுமைகளுக் கிடையே ஒற்றுமை உணர்வை ஊட்டுவது இந்தியப் பணபாட்டின் சிறப்பு.

### 1. 3. 7. தத்துவக் கோட்பாடுகள்

பொருளுலக வாழ்க்கைக்குத் தேவையான மருத்துவம், அறிவியல், கலைகள், சமுதாய அறிவு, போர்முறை, வரவு, செலவு, பொருளாதாரக் கோட்பாடுகள் ஆகியவற்றின் முக்கியத்துவத்தை உணர்த்துவது இந்தியப் பண்பாடு. ஒரு பொருளின் பல நிலைகளில் இருந்து அதன் உண்மை நிலையை அறிய உதவும் தத்துவக் கோட்பாடுகளை அடிப்படையாகக் கொண்டது இந்தியப் பண்பாடு.

### 1. 3. 8. அழிவில்லாத மதிப்பீடுகளின் நிலைக்களன்

#### *1. 3. 8. 1. அன்பு*

ஒருவர் மீது ஒருவர் செலுத்தும் பாசமே அன்பு எனப்படும். இஃது இரக்கம், பரிவு, கருணை போன்ற பல சொற்களால் அழைக்கப்படுகின்றது. அருளின் அடிப்படையே அன்பாகும்.

#### *1. 3. 8. 2. சத்யம்*

சத்யம் என்பது உண்மை எனப்படுகிறது. உள்ளத்திலிருந்து வருவது உண்மையெனவும், வாயிலிருந்து வருவதால் வாய்மை எனவும் அழைக்கப்படுகிறது. உடலால் வருவது மெய்மை இம்மூன்றையும் உள்ளடக்கிய சொல் சத்யமாகும்.

www.tntextbooks.in

### *1. 3. 8. 3. தர்மம்*

இப்பிரபஞ்சம் இயங்கி கொண்டிருப்பதே தர்மத்தின் அடிப்படையிலேயாகும். பிறருக்கு உதவுவது (வறியவருக்கு) தமிழில் அறம், ஈகை எனப் பொருள் கொள்ளப்படுகிறது.

### *1. 3. 8. 4. அஹிம்சை*

கொல்லாமை என்பதே அகிம்சையாகும். எண்ணம், சொல், செயல் இவைகளின் மூலம் பிறருக்கு துன்பம் செய்யாமை.

### *1. 3. 8. 5. சாந்தி*

மன நிம்மதியே சாந்தியாகும். மன நிம்மதியே மன அமைதிக்கு வழிவகுக்கிறது. ஒருவன் இறைவனிடத்தில் தன்னை அர்ப்பணிக்கும்பொழுது சாந்தி கிடைக்கிறது.

### *1. 3. 8. 6. சகோதரத்துவம்*

அனைவரும் சகோதரரே. எல்லாரும் ஓரினம், எல்லாரும் ஓர்நிறை என்பதும் சகோதரத்துவத்தை எடுத்து இயம்புவதேயாகும். "யாதும் ஊரே யாவரும் கேளிர்", என்ற கணியன் பூங்குன்றனாரின் கருத்தும் இதுவே.

### *1. 3. 8. 7. கருணை*

பிற உயிர்களிடைத்துக் காட்டும் அன்பே கருணை. மரம், செடி, கொடி, புழு, பூச்சி, விலங்கு போன்ற அனைத்து உயிர்களிடத்தும் செலுத்தப்படும் 'இரக்கமே' கருணையாகும்.

## 1. 4. பண்பாடும் நாகரிகமும்

### 1. 4. 1. நாகரிகம்

மனித வாழ்வின் தொடக்க காலமாகிய பழைய கற்காலம், புதிய கற்காலத்தில் மன வளர்ச்சி மற்றும் அறிவு வளர்ச்சி இல்லாமல் விலங்குகளைப் போல மனிதன் வாழ்ந்தான். பழைய கற்காலத்தில் கரடுமுரடான கற்களைக் கருவிகளாக பயன்படுத்தினான். புதிய கற்காலத்தில் கூர்மையும், வழுவழுப்பும் உடைய கற்களை



கருவிகளாகப் பயன்படுத்த முற்பட்டான். இதிலிருந்து மனிதரிடையே படிப்படியான அறிவு வளர்ச்சி தோன்றியதை அறியலாம்.

இத்தகைய மனிதன் அடுத்து உலோகங்களை அறிந்து உலோகங்களால் ஆன கருவிகளைப் பயன்படுத்தினான். தொடக்கத்தில் வேட்டையாடியே வாழ்ந்த மனிதன் படிப்படியாக கால்நடை வளர்ப்பு, பயிர்த் தொழில், நெசவுத் தொழில் என பல தொழில்களில் ஈடுபட்டான். பொருளாதார முன்னேற்றத்தால் வசதியான வீடுகளை அமைத்து வாழத் தொடங்கினான். மேலும் தன் புறவாழ்வைச் சிறப்படையச் செய்யும் ஆடை, அணிகலன்கள், ஒப்பனைப் பொருள்கள், உணவு வகைகள், பாத்திரங்கள், வானளாவிய கோபுரங்கள், மாட மாளிகைகள், அழகிய நெடுஞ்சாலைகள், ஊர்திகள், தொழிற்சாலைகள், வானொலி, தொலைபேசி, தொலைக்காட்சி, மின்னஞ்சல் போன்ற துறைகளில் வளர்ச்சியடைந்துள்ளான். எனவே மனிதன் தன் அன்றாடத் தேவைகளின் அடிப்படையில் வாழ்க்கை வசதிகளை பெருக்கிக் கொண்டான். இப்புறத் தேவைகளின் வளர்ச்சியே நாகரிகம்.

### 1. 4. 2. நாகரிகம் - விளக்கம்

நாகரிகம் என்ற சொல் நகர் என்னும் சொல்லடியாகப் பிறந்தது. நகர் + அகம் – நகரகம் – நகரிகம் – நாகரிகம். சிற்றூர் மக்களினும் நகர மக்கள் புறவாழ்விற்குரிய வசதிகள் அனைத்தும் பெற்று விளங்குபவர்கள். நகர வாழ்க்கையே நாகரிக வாழ்க்கை என்பது கருத்து. நாகரிகம் நகரும் தன்மையுடையது. புறவளர்ச்சி நாளுக்கு நாள் வளர்ச்சியடைந்து வருவதைக் காண்கிறோம்.

### 1. 4. 3. பண்பாடு - நாகரிகம் - ஒற்றுமை - வேற்றுமைகள்

நாகரிகமும் பண்பாடும் ஒன்றோடு ஒன்று தொடர்புடைய இரு மாறுபட்ட கூறுகள் எனலாம். நாகரிகம் என்பது புற வளர்ச்சியைக் கூறுகின்றது. பண்பாடு என்பது அகவளர்ச்சியாகிய ஆன்மிக உயர் வளர்ச்சிக்கு உறுதுணையாக அமைகிறது.

மனித வாழ்வின் இரு அடிப்படைக் கூறுகள் முறையே உடலும் உயிரும் ஆகும். இதில் நாகரிகத்தை உடல் எனலாம்.

www.tntextbooks.in

புறத் தேவைகளின் வளர்ச்சியால் ஒரு நாடு இன்றுள்ள சூழலில் வாழ்வின் எல்லாத் துறைகளிலும் உலகப் புகழ் பெற்று முதலிடத்தைப் பெறலாம். அந்நாடு அடைந்துள்ள அறிவியல் துறை, தொழில் துறை மற்றும் பல்வேறு கண்டுபிடிப்புகள் அந்நாட்டு மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தலாம். தொழில் வளர்ச்சியால் பொருளாதார உயர்வும் ஏற்படலாம். இவ்வளர்ச்சிகள் அனைத்துமே புறவளர்ச்சி.

பண்பாடு உயிருக்கு இணையானது. பண்பாடு மக்களின் அக வளர்ச்சி. மக்கள் மனதில் தோன்றி ஒளிர்கின்ற உயர் குணங்களின் தொகுப்பு. இச்சீரிய பண்பாடு மக்களின் எண்ணம், சொல், செயல் இவற்றால் வெளிப்படுகிறது. மனித வாழ்வில் புற வளர்ச்சிக்கிடையே அகவளர்ச்சிசயாகிய ஒழுக்கம், பணிவு, வாய்மை, தூய்மை, இரக்கம் மனிதநேயம் முதலான அகவளர்ச்சிக் கூறுகளின் செயல் பாடே 'பண்பாடு' எனலாம்.

எனவே 'உடலின்றி உயிர் அமையாது' என்பதற்கேற்ப நாகரிகமும் பண்பாடும் ஒன்றுடன் ஒன்று தொடர்புடைய இரு அடிப்படைக் கூறுகள் எனலாம்.

### வேற்றுமைகள்

அ. நாகரிகம் புறவளர்ச்சி – பண்பாடு அகவளர்ச்சி.

ஆ. புறவளர்ச்சியைக் குறிக்கும் நாகரிகத்தின் காலத்தை, தன்மையை அளவிட்டுக் கூறலாம். ஆனால் சூழ்நிலைகளுக்கு ஏற்ப மாறுபடுகின்ற அகமாற்றத்தை ஏற்படுத்தும் பண்பாட்டை அளவிட முடியாது.

இ. நாகரிக வளர்ச்சி வேகமானது. பண்பாடு ஒரு முறையான சீரான வளர்ச்சியைக் கொண்டது.

ஈ. நாகரிக மாற்றங்கள், வளர்ச்சிகள் உலகில் எந்த நாட்டில் எந்த இடத்தில் ஏற்பட்டாலும் அவற்றை எவ்வித கடினமும் இல்லாமல் எளிதாக எல்லோரும் அறிந்து பின்பற்றலாம். பண்பாடு என்பது மிகுந்த முயற்சியின் அடிப்படையில் மனம் ஒன்றியவர்கள், ஒருமித்தக் கருத்துடையவர்கள் மட்டுமே பின்பற்றக் கூடியது.



**எடுத்துக்காட்டு :** தகவல் தொடர்பு சாதனங்களின் பயன்பாடு இப்பரந்த உலகின் எந்தப் பகுதியிலும் மாறாத ஒன்று. மாற்றங்களை உடனுக்குடன் அறிந்து பின்பற்றலாம். மாறாக கலைகள், இலக்கியங்கள், சமயக் கோட்பாடுகள் ஆகிய அகக்கோட்பாடுகளில் ஒவ்வொரு நாட்டிற்கும் இனத்திற்கும் இடையே வேறுபாடுகள் நிலவுகின்றன. எனவே அவற்றை ஏற்குமிடத்து வேண்டியன, வேண்டாதனவற்றை ஆராய்ந்து மேற்கொள்ள வேண்டியுள்ளது.

உ. நாகரிகத்திற்கும் பண்பாட்டிற்குமிடையே வேறுபாடுகள் காணப்படினும் சிறந்த புற வாழ்க்கையை அடிப்படையாகக் கொண்ட நாகரிகம் இல்லையெனில் சிறந்த பண்பாட்டைக் காண இயலாது. அமைதியின்மை, அச்சம், குழப்பம், பொறாமை, பூசல், உடலிலும், உள்ளத்திலும், முதிர்ச்சியற்ற நிலை அல்லது ஒவ்வாத நிலை காணப்பட்டால் பண்பாடு வளர்ச்சியை காண முடியாதோ அதே நிலை தான் நாகரிக வளர்ச்சிக்கும் ஏற்படும்.

சுருங்கக் கூறின் பண்பாடாகிய அகவளர்ச்சியின் அடிப்படையில் ஆன்ம வேட்கையை நிறைவு செய்து கொண்டு புறவளர்ச்சியாகிய நாகரிகக் கூறுகளில் சிறந்தனவற்றை ஏற்று அல்லாதனவற்றை நீக்கி வாழ்ந்தால் இவ்வுலக வாழ்க்கை இனியதாகும். எடுத்துக்காட்டாக இன்று அணு சக்தித் துறையில் பெரும் மாறுதலும் வளர்ச்சியும் ஏற்பட்டுள்ளது. இந்த வளர்ச்சியை மின்சக்தி மற்றும் பல்வேறு நலப் பணிகளுக்கு பயன்படுத்தலாம் மாறாக அணுசக்தியை அழிவிற்கு பயன்படுத்த வேண்டா.

## 1. 5. பண்பாட்டுக் கல்வியின் பயன்கள்

வரலாற்றுக் கல்வியானது நம் முன்னோர்களைப் பற்றியும் வாழ்க்கை முறைகள், அரசியல் பண்பாட்டு முறைகளை அறிய உதவுகிறது. அறிவியல் கல்வி இன்றைய வாழ்விற்கு உகந்த அறிவியல் தொழில் நுட்ப அறிவை வளர்க்கிறது. அது போல மருத்துவம், வானநூல், வணிகம், பொருளாதாரம் போன்ற பல்வேறு பாடங்களை அறிவதன் வாயிலாக வாழ்வை வளப்படுத்திக் கொள்கிறோம். இனிப் பண்பாட்டுக் கல்வியால் நாம் அடையும் பயன்களை விரிவாகக் காண்போம்.

www.tntextbooks.in

### 1. 5. 1. அடிப்படைக் கோட்பாடுகளை அறியச் செய்தல்

உலகின் உறுதிப் பொருள்களாகிய அறம், பொருள், இன்பம் வீடு ஆகிய நான்கினையும் அறிந்து அறவாழ்வு வாழ உதவுவது பண்பாட்டுக் கல்வி. 'பயன் கருதாது கடமையை செய்தல்' என்னும் கடமை உணர்வு, இன்னா செய்யாமை, வாய்மை, சகிப்புத் தன்மை போன்ற பல்வேறு உயரிய அடிப்படை உண்மைகளை அறியச் செய்வது பண்பாட்டுக் கல்வி என்றால் அது மிகையாகாது.

### 1. 5. 2. தவறைத் தவிர்த்து சரியை உணரச் செய்வது

வாழ்வியல் பண்பாட்டு நெறிகளை அறிந்து நம் செயல்களில் சரியானவை எவை? தவறானவை எவை? என அலசி, ஆராய்ந்து சரியானவற்றை ஏற்கவும் தவறானவற்றை தவிர்ப்பதற்கும் உரிய ஆற்றலைத் தருவது பண்பாட்டுக் கல்வி.

### 1. 5. 3. பிரச்சினைகளில் தீர்வுகாண உதவுதல்

இன்றைய பிரச்சினைகள் எவ்வளவு சிக்கலானவையாக இருப்பினும் அவற்றிற்கு தீர்வு காண உதவுவது இந்தியப் பண்பாடு. அரசியல், பொருளாதார, வானவியல், மருத்துவ கருத்துகளை நமது அற நூல்களான திருக்குறள் முதலானவை பிரதிபலிக்கின்றன. இவற்றைக் கற்பதன் வாயிலாக பிரச்சினைகளுக்கு தீர்வு எளிதில் காணலாம்.

### 1. 5. 4. இயற்கையோடு இயைந்த நிறைவாழ்வு

பண்பாட்டுக் கல்வி வாயிலாக நம் முன்னோர் வாழ்ந்த இயற்கை வாழ்வு முறையை அறிந்து நாமும் பின்பற்றி வாழ்ந்து உயர உதவுகின்றது வேதங்கள். புராணங்கள் ஆகிய சமய இலக்கியங்கள் இயற்கை வழிபாடு. இயற்கை உணவு, இயற்கை மருத்துவ முறைகளைத் தெளிவாகக் கூறுகின்றன. அவற்றை கற்பதால் நாமும் நம் வாழ்வில் பின்பற்றி சிறப்படைய உதவுகிறது. நமது தொன்மையான சிறந்த பண்பாட்டு பாரம்பரியத்தை அறிய இக்கல்வி பயன்படுகிறது. பழமையில் புதுமையை இணைத்து சீரிய வாழ்வு வாழ பண்பாட்டுக் கல்வி உதவுகிறது.



## பயிற்சி வினாக்கள்

### அ. ஓரிரு வரிகளில் விடையளி

1. மக்கள் எத்தகைய வாழ்வு வாழ விரும்புகின்றனர்?
2. 'நல்வாழ்வு' என்பது எத்தகையது?
3. சமுதாயம் எத்தகையோர் நிறைந்ததாய் இருக்க வேண்டும்?
4. 'பண்பாடு' என்ற சொல்லிற்கு இணையான வேறு ஒரு சொல்லை எழுது.
5. 'பண்பாடு' என்னும் சொல்லின் அடிப்படையான சொல் எது?
6. 'பண்படுத்துதல்' என்ற சொல்லின் பொருள் யாது?
7. மனத்தை எவற்றால் பண்படுத்தலாம்?
8. 'பண்பாடு' பற்றி E.B. டெய்லரின் கருத்து யாது?
9. 'பண்பாடு' பற்றி வால்டேர் கூறுவது யாது?
10. கே.எம். முன்ஷியின் 'பண்பாடு' பற்றிய கருத்து யாது?
11. பண்பாட்டைப் பற்றி ஸர். ஸி.பி. இராமேஸ்வாமி ஐயர் கூறுவது யாது?
12. 'பண்பாட்டின் இயல்புகள்' குறித்து ஏதேனும் இரண்டைக் கூறு?
13. பண்பாடு - ஒரு பொது அனுபவம் எவ்வாறு?
14. அனுபவ அறிவின் விளைவே பண்பாடு எவ்வாறு?
15. இந்தியப் பண்பாட்டின் சிறப்பு இயல்புகளில் ஏதேனும் இரண்டைக் கூறு?
16. இந்தியப் பண்பாட்டின் தனிப் பெருஞ்சிறப்பாவது எது?
17. புறவாழ்வை சிறப்படைய செய்யும் கண்டுபிடிப்புகள் எவை?
18. 'நாகரிகம்' - சொல்விளக்கம் தருக.
19. 'நாகரிக' வளர்ச்சி எத்தகையது?
20. 'நாகரிக' வளர்ச்சியும் 'பண்பாட்டு' வளர்ச்சியும் எத்தகையன?
21. 'பண்பாட்டுக் கல்வியால்' நாம் அடையும் பயன்கள் இரண்டைக் கூறுக.
22. வரலாற்றுக் கல்வியால் நாம் அறிவன யாவை?
23. அறிவியல் கல்வியறிவால் நாம் அறிவன யாவை?
24. உலகின் 'உறுதிப்பொருள்கள்' யாவை?
25. அகவளர்ச்சிக் கூறுகளின் செயல்பாட்டை எவ்வாறு அழைக்கலாம்?

**ஆ. ஒரு பத்தி அளவில் அல்லது பத்து வரிகளுக்கு மிகாமல் விடையளி**

1. நிலத்தைப் பண்படுத்த வேண்டியதன் அவசியத்தை வள்ளுவர் எவ்வாறு கூறுகிறார்.
2. 'பண்பாடு' பற்றிய தமிழர்களின் கருத்தைக் கூறு.
3. பண்பாட்டின் மையக்கருத்தாக கூறப்படுவது யாது?
4. 'பண்பாடு நிலைத்த தன்மையது' என்பதை விளக்குக.
5. நடைமுறை வாழ்வில் பண்பாட்டின் பயன்பாட்டை எழுதுக.
6. இந்திய பண்பாட்டிற்கு 'ஆன்மிக உணர்வே' அடிப்படை எவ்வாறு?
7. இந்தியப் பண்பாடு 'அழியாத் தன்மை' உடையது எங்ஙனம்?
8. மனிதரிடையே படிப்படியாக அறிவு வளர்ச்சி ஏற்பட்டதை விளக்குக
9. 'நாகரிகம்' - புறவளர்ச்சி என்பதை விளக்குக.
10. உலகின் உறுதிப்பொருள்கள் என கூறப்படுவன யாவை?
11. நாகரிகம் தோன்றிய விதத்தை விவரி.
12. பண்பாட்டை எவ்வாறு மேம்படுத்திக் கொள்ளலாம்.

**இ. ஒரு பக்க அளவில் அல்லது முப்பது வரிகளுக்கு மிகாமல் விடையளி**

1. 'பண்பாடு' பற்றி சான்றோர்களின் கருத்துகளை தொகுத்துக் கூறுக.
2. பண்பாடு 'நெகிழுந்தன்மை' கொண்டது என்பதை விளக்குக.
3. முழுவளர்ச்சிக்குப் பண்பாடு உதவுகிறது - இதனை ஆய்வு செய்
4. இந்தியப் பண்பாடு 'பல பண்பாட்டுக் கூறுகளை' உள்ளடக்கியது என்பதை விவரி.
5. 'மனித நேயமே' இந்தியப் பண்பாட்டின் அடித்தளம் என்பதை விவரி.
6. 'இந்தியப் பண்பாட்டின் அழிவில்லாத மதிப்பீடுகளின் நிலைகளை' விவரி.
7. பண்பாடு அகவளர்ச்சி என்பதை விவரி.
8. பண்பாட்டுக் கல்வியின் பயன்கள் இரண்டினை விவரி.

**ஈ. நான்கு பக்கங்களுக்கு மிகாமல் விடையளி**

1. பண்பாட்டின் இயல்புகளை விவரித்து எழுதுக.
2. பண்பாடு பற்றியும் பண்பாட்டுக் கல்வியால் நலம்பெறும் பயன்களை விவரி.
3. இந்தியப் பண்பாட்டின் சிறப்பியல்புகளைத் தொகுத்துக் கூறுக.
4. 'நாகரிகம்'- 'பண்பாடு' என்னும் சொற்களை விளக்கி, தொடர்பு மற்றும் வேற்றுமைகளை எழுது.

www.tntextbooks.in

# 2. வேற்றுமையில் ஒற்றுமை

"பாரத நாடு பழம்பெரும் நாடு
நீர் அதன் புதல்வர் - இந்நினைவு அகற்றாதீர்"
என்றார் மகாகவி பாரதியார்.

இத்தகைய பெருமை வாய்ந்த பாரத நாட்டை முன்னொரு காலத்தில் பரதன் ஆண்ட காரணத்தால் 'பரதகண்டம்' எனவும் 'பாரத வருஷ்' என்றும் அழைக்கப்படுவதாகப் புராணச் செய்திகளால் அறிகிறோம். 'ஜம்புத்தீவு' என்ற மற்றொரு பெயரும் வழக்கில் உள்ளது.

ஆரம்ப காலத்தில் பாரசீக, கிரேக்கப் படையெடுப்புகளின் விளைவால் இந்தியா, இந்துஸ்தானம் என்ற பெயர்கள் உருவாயின. இவர்களது படையெடுப்புகள் சிந்து நதி தீரத்துடன் நின்று போயின. சிந்து என்பதை அவர்கள் ஹிந்து என்று உச்சரித்தார்கள். இதனைத் தொடர்ந்து இடைக்காலத்தில் வந்த முஸ்லீம்களும் நம் நாட்டை 'ஹிந்துஸ்தான்' என்று அழைத்தனர்.

இத்தகைய பழமையும் பெருமையும் வாய்ந்த நம் நாடு ஒரு தீபகற்ப நாடு என்ற நிலவியல் பெருமையை உடையது. பனி மூடிய இமயமலைத் தொடர்கள் வடக்கில் இயற்கை அரணாகவும், தெற்கே இந்துப் பெருங்கடலும், கிழக்கிலும் மேற்கிலும் முறையே வங்கக் கடலும், அரபிக் கடலும் இயற்கை அரணாக உள்ளன. மேலும் இந்தியா நீண்ட கடற்கரையை உடைய நாடு என்ற பெருமையும் உடையது.

இதன் நிலப்பரப்பு, பல்வகைப்பட்ட இனக் கூறுகள், மாறுபட்ட தட்ப வெப்பநிலைகள், நில அமைப்புகள். இதனை குறுகிய இருள் சூழ்ந்த கலங்கிய குட்டையாக்காமல் ஒரு கண்டத்தின் பண்பினைக் கொடுத்துள்ளன. இந்த அமைப்பு வரலாற்றில் ஒரு சிறப்பான இடமாக 'துணைக் கண்டம்' என்ற பெருமையை தோற்றுவித்துள்ளன.

www.tntextbooks.in

## 2. 1. வேற்றுமையில் ஒற்றுமை வரையறை

பரந்த நமது பாரத தேசம் நிலவியல் அமைப்பு, இனம், மொழி, இலக்கியம், சமயம், சமுதாய அமைப்பு, பொருளாதாரம், வாழ்க்கைச் சடங்குகள் மற்றும் சம்பிரதாயங்களால் வேறுபட்ட கூறுகளைக் கொண்டிருந்தாலும் 'இந்தியர்' என்ற ஒருமைப்பாட்டு உணர்வு மக்களிடம் நீண்டகாலமாகவே நிலவி வருகின்றது. இதனையே வேற்றுமையில் ஒற்றுமை என்கிறோம். இந்த 'வேற்றுமையில் ஒற்றுமை' என்னும் உயரிய கோட்பாடே இந்திய பாரம்பரியத்தின் தனிச் சிறப்பு எனலாம்.

## 2. 2. வேற்றுமைக் கூறுகள்

### 2. 2. 1. நிலவியல் வேற்றுமைகள்

நமது நாடு பரந்த நாடு. இத்தகைய பரந்த நாட்டில் ஒரே சீரான இயற்கை அமைப்பைக் காண முடியாது. பல்வேறு வகைப்பட்ட தட்பவெப்ப நிலைகளையும், புவியியல் அமைப்புகளையும் காண்கிறோம். ஒரு புறம் செழிப்பான சிந்து கங்கைச் சமவெளியையும் அதே நேரத்தில் மறுபுறம் ராஜபுதன, சிந்து பாலைவனங்களையும் காண்கிறோம். செழிப்பான பள்ளத்தாக்குப் பகுதிகளும் மேடான பீடபூமிகளும் உள்ளன. ஆண்டு முழுதும் மழை பெறுகின்ற அஸ்ஸாம் மாநில சிரபுஞ்சியும், மழையே காணாத வறண்ட தென்னிந்தியப் பகுதிகளும் உள்ளன. கடுங்குளிரும், கோடையும் மாறி மாறி நிலவி வருவதைக் காண்கிறோம். இத்தகைய நிலவியல் வேறுபாடுகள் நம் நாட்டில் நிலவுகின்றன.

### 2. 2. 2. இன வேறுபாடு

பழம்பெரும் நாடாகிய நமது நாட்டில் பல்வேறு இனங்களைச் சார்ந்த மக்கள் வாழ்ந்து வருகின்றனர். ஆரம்பத்திலிருந்தே இந்தியாவில் மக்கள் தொகை மிகுந்து காணப்பட்டதாகவே அறிகிறோம். நமது நாட்டில் கிரேக்க, சாக்கிய, ஹூன, குஷான, அராபிய, துருக்கிய ஆப்கானிய இனமக்களைக் காண்கிறோம். இன்றைய சூழலில் இன்னும் பழங்குடியினரையும், நாகரிகத்தில்



மூழ்கிய நகரவாசிகளையும், காண்கிறோம். கேரள மலபார் வாழின மக்கள் தீர்க்கமான முகப்பொலிவுடனும், காஷ்மீர் மக்கள் நல்ல நிறத்தையும் அழகையும் பெற்றவர்களாய் இருப்பதைக் காண்கிறோம். அஸ்ஸாமியர்கள் இத்தகைய கூறுகள் தேவைப்படும் விதத்தில் இருப்பதையும் காண்கிறோம். எனவே டாக்டர் ஸ்மித் இந்தியாவை 'இன அருங்காட்சியகம்' என்கிறார்.

### 2. 2. 3. மொழி வேறுபாடு

நமது நாடு இங்கிலாந்து, பிரான்ஸ் போன்ற நாடுகளைப் போல ஒரே மொழியைப் பேசும் நாடு அன்று. நம் நாட்டில் சற்றே ஏறத்தாழ 845 மொழிகள் நிலவி வருகின்றன. இவற்றுள் சில மொழிகள் குறிப்பிடத்தக்கவை. சமஸ்கிருதம், தமிழ், ஹிந்தி, வங்காளி, பஞ்சாபி, குஜராத்தி, மராத்தி, தெலுங்கு, கன்னடம், மலையாளம் போன்றவை சிலவாகும்.

மொழிகளைப் போலவே எழுத்து வடிவங்களிலும் இத்தகைய வேறுபட்ட அமைப்புகள் உள்ளன. ஒரே சீரான எழுத்து முறை இல்லை. பண்டைய பாலி, தேவநாகரி, கிரந்தம் ஆகிய மொழிகளின் எழுத்துமுறை இன்றைய மொழிகளின் எழுத்துமுறைகளினின்று முற்றிலும் மாறுபட்டு உள்ளன.

### 2. 2. 4. சமய வேறுபாடு

இந்தியாவில் வாழும் மக்கள் அனைவரும் ஒரே சமயத்தைப் பின்பற்றுவதில்லை. உலகின் தலை சிறந்த சமயங்களான இந்து சமயம், சமண சமயம், பௌத்த சமயம், இசுலாமிய சமயம், கிறித்தவ சமயம் பார்சி சமயம் ஆகியவை இந்தியாவில் பின்பற்றப்பட்டு வருவதைக் காண்கிறோம். மேலும் இம்மதங்களில் பல உட்பிரிவுகள் இருப்பதையும், அவற்றையும் மக்கள் பின்பற்றி வருவதையும் பார்க்கிறோம்.

### 2. 2. 5. சமுதாய அமைப்பில் வேற்றுமைகள்

மக்களிடம் காணப்படும் உணவு, உடை, அணிகலன்கள், பழக்க வழக்கங்களும் மாறுபட்டு இருப்பதைக் காண்கிறோம். வாழும்

www.tntextbooks.in

முறையில் வேறுபாடுகள் உள்ளன. வட இந்திய மக்களின் வாழ்க்கை முறை தென்னக மக்களின் வாழ்க்கை முறையினின்று மாறுபட்டு இருப்பதைக் காண்கிறோம். ஆடை அணிகலன்களை அணியும் முறை, உணவுப் பொருள்களை உண்ணும் முறை ஆகியவற்றில் காணப்படும் வேறுபாடுகள் வெளிப்படையாகத் தெரிகின்றன. மக்களின் மரபு முறைகளும் சமுதாய அமைப்புகளில் வேறுபாடுகள் இருப்பதைக் காண்கிறோம்.

### 2. 2. 6. பொருளாதார வேற்றுமை

எந்த ஒரு நாட்டிலும் ஒரே சீரான பொருளாதார வாழ்க்கை நிலையைக் காண இயலாது. நமது நாடும் அதற்கு விலக்கன்று. இங்கும் ஒரு சாரார் உண்ணும் உணவுக்கு ஏங்கியும் ஒரு சாரார் உண்ணும் உணவை வீணடித்தும் வாழும் நிலை உள்ளது. மாட மாளிகைகளில் வாழ்பவர் ஒருபுறமிருக்க, ஓலைக் குடிசைகளிலும் ஒண்ட முடியாமல் தவிக்கும் மக்கள் மறுபுறம் எனப் பொருளாதார வேற்றுமையைக் கண்கூடாகக் காணலாம்.

இவ்வாறு நம் நாட்டின் அனைத்துத் துறைகளிலும் நிலைகளிலும் வேற்றுமைக் கூறுகள் நிறைந்து கிடப்பதைக் காண்கிறோம். எனினும் ஒற்றுமை நிலவுவது தான் இதன் தனிச் சிறப்பு.

## 2. 3. ஒற்றுமைக் கூறுகள்

### 2. 3. 1. நிலவியல் அமைப்பில் ஒற்றுமை

நிலவியல் கூறுகளில் எத்தகைய வேற்றுமைகள் காணப்படினும் புராண காலந்தொட்டே நம்நாடு ‘பாரத நாடு’ என்னும் பெயரினைக் கொண்டுள்ளது. நிலவியல் அடிப்படையில் விந்திய சாத்பூரா மலைத் தொடர்கள் நம் நாட்டை வடஇந்தியா என்றும் தென்னிந்தியா என்றும் பிரிப்பது போன்று காணப்படினும் நம் இந்திய நாடு ‘பாரத கண்டம்’ என்றே வழங்கப்படுகிறது. இந்த ஒரே பெயரே ஒற்றுமை உணர்வுக்கு முக்கியச் சான்று ஆகும். இக்கருத்தின் அடிப்படையில் தான் தாய்



நாடாகிய பாரத நாட்டை தாயாக உருவகம் செய்து ‘பாரத மாதா’ என அனைவரும் கொண்டாடி வருகிறோம்.

### 2. 3. 2. அரசியல் ஒற்றுமை

இந்திய வரலாற்றில் ‘சக்ரவர்த்தி’ என்னும் சீரிய சொல் மிகத் தெளிவாக இந்தியா முழுமையையும் ஒரே அரசர் ஆண்ட நிலையை விளக்குகிறது. எனவே அரசியலும் நாடு முழுமைக்கும் ஒற்றுமை உணர்வை ஏற்படுத்தியுள்ளது. மேலும் நம் நாட்டை ஆண்ட மன்னர்கள் முறையே இராஜாதி ராஜன், அதிராஜன், ஏக்ராட், சாம்ராட், விராட், சர்வபௌம போன்ற பட்டங்களைப் பெற்று சீரும் சிறப்புமாக ஆண்டமை வரலாற்றால் அறியப்படுகிறது. இந்தியா முழுமையையும் வெற்றி கொண்டு ஆண்டமையை இப்பட்டங்கள் தெளிவு படுத்துகின்றன. மேலும் அரசர்கள் இராஜசுயம், அசுவமேதம், வாஜபேயம் என்ற வேள்விகளைச் செய்ததாக அறிகிறோம். அரசியல் ஒற்றுமை நிலவினால் மட்டுமே இத்தகைய வேள்விகளை செய்ய இயலும். எனவே வேதகாலந் தொட்டே அரசியல் ஒற்றுமை இந்தியாவில் நிலவியது.

இடைப்பட்ட காலத்தில் ஆண்ட மொகலாயப் பேரரசர்களான அக்பர், ஔரங்கசீப் போன்றோர் இந்தியா முழுமைக்கும் ஒரே மத்திய நிர்வாக அமைப்பை ஏற்படுத்தினர். நாடு முழுமைக்கும் ஒரே சீரான சட்டங்கள், பொது நாணயங்கள், அலுவலக மொழியாக பாரசீக மொழி, நீண்ட நெடுஞ்சாலைகள் என உருவாக்கி ஒற்றுமையை நிலைநாட்டினர். ஆங்கிலேயர் நாடு முழுமைக்கும் பொதுவான இரயில் பாதைகள், தபால் தந்தி இலாகா என ஒற்றுமை உணர்வை வளர்க்கும் விதத்தில் ஆண்டனர். சுதந்திரத்திற்கு பின் சுதேச சமஸ்தானங்கள் இந்தியக் குடியரசுடன் இணைந்து இந்தியக் குடியரசு நாடாக இன்று உலகில் திகழ்கிறது.

### 2. 3. 3. சமய ஒற்றுமை

இந்தியாவில் உள்ள சமயங்கள் பலவற்றில் பெரும்பாலானவை ஒரு கடவுள் கோட்பாடு, ஆன்மாவின் அழிவற்ற தன்மை, அவதாரக்

www.tntextbooks.in

கோட்பாடு, வீடுபேறு என்று பல கருத்துகளில் ஒத்த தன்மை யுடையனவாக உள்ளன. சமயச் சடங்குகளிலும், பழக்க வழக்கங்களிலும் அடிப்படையான தன்மைகள் ஒன்றாகவே உள்ளன. வட இந்தியர்கள் தெற்கே இராமேஸ்வரம் வரை புனிதப் பயணங்களை மேற்கொள்கின்றனர். தென்னிந்தியாவில் வசிப்போர் காசி யாத்திரை மேற்கொள்கின்றனர். இந்தியா முழுமைக்கும் இராமாயணம், மகாபாரதம் ஆகிய இரு இதிகாசங்களும் வீரகாவியங்களாக திகழ்வதுடன் கவிதை வடிவில் பக்திப் பெருக்குடன் பாடப்படுகின்றன. நம் நாட்டில் காணப்படும் அனைத்து சமயங்களின் மையக் கோட்பாடு பக்தி, அஹிம்சை, வீடு பேறு. இதை அடைவதற்குரிய ஆன்மிக நெறிகளும் அறக்கோட்பாடுகளும் இந்தியர் அனைவருக்கும் ஏற்புடையனவாக உள்ளமையால் மதநல்லிணக்கம் நம்மிடையே ஒளிர்வதைக் காண்கிறோம்.

### 2. 3. 4. பண்பாட்டு ஒற்றுமை

பல்வேறு இனத்தைச் சார்ந்த மக்கள் ஒருங்கே கூடி வாழ்ந்து உயரிய பண்பாட்டை உலகறியச் செய்துள்ளனர். இந்தியப் பண்பாட்டை பிரதிபலிக்கும் இலக்கியங்கள் பலவற்றில் ஒரே சீரான பண்பாட்டுக் கூறுகள், சிந்தனைகள் இருப்பதைக் காண்கிறோம். ஒரே சீரான இலக்கியக் கருத்துகள், தத்துவ நெறிகள். மரபுகள், வாழ்க்கை முறைகள் நாடு முழுவதற்கும் ஒரே மாதிரியாக இருப்பதைக் காண்கிறோம். சமுதாய வாழ்வின் பண்பாட்டு அடித்தளமாக உள்ள சமயச் சடங்குகள், சமுதாய வாழ்க்கை முறை, விழாக்கள், வாழ்வியல் நெறிகள் ஆகியவை ஒரே தன்மையுடன் இருப்பதைக் காண்கிறோம். தீபாவளி, தசரா, பொங்கல், கிருஷ்ண ஜெயந்தி, சரஸ்வதி பூஜை, விநாயகர் சதுர்த்தி, இரம்ஜான், கிறிஸ்துமஸ், மகாவீர் ஜெயந்தி மற்றும் புத்த பூர்ணிமா போன்ற பண்டிகைகள் நம் பண்பாட்டு ஒற்றுமையை உலகறியச் செய்கின்றன.

### 2. 3. 5. மொழி ஒற்றுமை

அசோகருடைய காலத்தில் புத்தமதக் கருத்துகள் மக்களுக்கு எளிதில் விளங்கும் ‘பாலி’ மொழியில் பரப்பப்பட்டதாக அறிகிறோம்.



சமஸ்கிருத மொழி, ஹிந்தி, மராத்தி, குஜராத்தி, வங்காளி மொழிகள் இந்திய ஒற்றுமைக்கு உரம் சேர்த்தன. தக்காணத்தில் தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம், துளு என்னும் திராவிட மொழிகள் ஐந்து என்ற பெருமையை பெற்றன. எனவே மொழிகள் பலவாயினும் அவற்றிற்கிடையே கருத்தொற்றுமை நிலவியது என்பது ஏற்புடையதாகும்.

### 2. 3. 6. உடலமைப்பில் ஒற்றுமை

ஆரியர்கள், சாக்கியர்கள், ஹூனர்கள் என பல்வேறு இனத்தவர்கள் இந்தியாவில் குடியேறினர். நாளடைவில் இந்தியர்களுடன் முழுமையாகக் கலந்து தங்கள் தனித்தன்மையை இழந்தனர். இசுலாமியர்களும், கிறித்தவர்களும் இங்கே வந்து தங்கி வாழ்ந்தனர். இந்தியாவிலே வாழ்ந்து, இங்குள்ள உணவுப் பொருள்களை உண்டு, ஒரேவிதமான தட்பவெப்ப நிலைகளில் வாழ்ந்து அன்றாட கடமைகளை நிறைவேற்றி அயல்நாட்டவரும் நாளடைவில் இந்தியராயினர். ஆகவே இங்கு வாழும் மக்கள் அனைவரும் இந்தியப் பண்பாட்டுத் தாக்கத்தால் ஒரே ஆளுமைப் பண்பையும் பெற்று வாழ்ந்து வருகின்றனர்.

இத்தகைய பல்வேறு நிலைகளில் வேற்றுமைகள் ஒவ்வொன்றும் ஒற்றுமையை நிலைநாட்டும் அம்சங்களாக செயல்படுகின்றன.

## 2. 4. பண்பாட்டு ஒற்றுமையை வளர்க்கத் துணைபுரிந்த காரணிகள்

நம் பாரத நாட்டின் சீரிய கோட்பாடாகிய ‘வேற்றுமையில் ஒற்றுமை’ எவ்வாறு மிளிர்கிறது என்பதை அறிந்தோம். இனி ஒற்றுமையை வளர்க்கின்ற காரணிகளைக் காண்போம்.

### 2. 4. 1. அரசர்கள்

இந்தியப் பெருநாட்டை ஆட்சி புரிந்து வரலாற்றில் சிறப்புமிக்க இடம் பெற்றவர்கள். அசோகர், சந்திரகுப்தன், சமுத்திரகுப்தன், அலாவுதீன், அக்பர், ஔரங்கசீப் போன்றவர்களாவர். இவர்கள் மண்

www.tntextbooks.in

ஆசை காரணமாக இந்தியாவின் பெரும்பகுதியை வெற்றி கொண்டனர். பல சிற்றரசுகளை இணைத்து இந்தியாவை ஒரு குடையின் கீழ் ஆள முற்பட்டனர். அரசர்களை தொடர்ந்து வீரர்கள் தங்கள் தீரச் செயல்களை நிலைநாட்ட விரும்பினர். இவர்களுடைய செயல்களும் நமது பண்பாட்டையும் ஒற்றுமையையும் வளர்த்தன.

### 2. 4. 2. ஒரே சீரான நிர்வாகம்

நாட்டையாண்ட குப்தர்கள், மொகலாயர்கள், ஆங்கிலேயர்கள் ஆட்சி காலத்தில் எல்லா மாநிலங்களையும், ஒன்றாக்கி சீரான ஆட்சி அமைப்பினால் நிர்வாகம் செய்தனர். இச்சீரிய நிர்வாக அமைப்பு பண்பாட்டு ஒற்றுமைக்கு வித்திட்டது.

### 2. 4. 3. மொழியும் சமயமும்

பழங்காலத்தில் சமஸ்கிருதமும், தற்காலத்தில் ஆங்கிலமும், ஹிந்தியும், தமிழும், பண்பாட்டு ஒற்றுமையைப் பேணிவளர்க்க துணைபுரிந்தன. இலக்கியங்கள், காப்பியங்கள், புராணங்கள், இதிகாசங்கள் என அனைத்தும் இம்மொழிகளில் மொழி பெயர்க்கப் பட்டன. சில மூலக்கருத்தைக் கொண்டு தத்தம் பண்பாடுகட்கும் ஏற்பத் தயாரிக்கப்பட்டன. இராமாயணம் வடமொழியில் வான்மீகி முனிவராலும், ஹிந்தியில் துளசிதாசராலும், தமிழில் கவிச் சக்கரவர்த்தி கம்பராலும் இயற்றப்பட்டமையை காண்கிறோம். இம்மூவருமே மையக் கருத்து மாறாமல் தத்தம் பண்பாட்டிற்கிணங்க தொடர்புடைய செய்திகளைக் கூறியுள்ளனர்.

பல்வேறு சமயங்களுக்கும் நிலைக்களனாகத் திகழும் இந்து சமயம் மக்களின் ஆன்மிக வாழ்விலும், அகச் சிந்தனையிலும் உயரிய ஒற்றுமையை பேணிவளர்க்கத் துணை புரிந்தன.

### 2. 4. 4. போக்குவரத்தும் செய்தித் தொடர்பும்

ஆங்கிலேயர் காலத்தில் கொண்டுவரப்பட்ட இருப்புப் பாதைகள், தபால் மற்றும் தந்தி முறை, தொலைபேசி, வானொலி, வான ஊர்தி, பேருந்துகள், சாலைகள் போன்றவை பயண நேரத்தை குறைத்ததுடன் பாதுகாப்பானப் பயணத்திற்கு உதவியது. செய்தித்



தொடர்பை அளித்தது. இதனால் மக்கள் பல இடங்கட்கும் எளிதாக சென்று வந்தனர். பண்பாட்டு ஒற்றுமைக்கு இது வித்திட்டது. இன்று வளர்ந்து வரும் அறிவியல் தொழில் நுட்பத்தின் காரணமான தொலைக்காட்சி, கணினி, மின்னணு அஞ்சல் முறை **(E-mail)**, தொலை நகலி **(FAX)** இவற்றின் பயன்பாடுகளை அறிந்து மேலும் ஒருவருடன் ஒருவர் நெருங்கிய தொடர்பு கொண்டு வாழ்கின்றோம்.

### 2. 4. 5. வரலாறும் நாட்டுப் பற்றும்

பொதுவான வரலாற்று மரபுகளை நமது இலக்கியங்களும் பிற பாடங்களின் வாயிலாகவும் அறிகிறோம். வரலாற்று மரபுகளை அறிந்து நாமும் நமது பண்பாட்டு ஒற்றுமையை வளர்க்க வேண்டும் என்ற உணர்வு தோன்றுகிறது. விடுதலை இயக்க வரலாற்றை அறிந்து நாடு, நாட்டுப்பற்று மிக்கவர்களாய் வாழ வேண்டும் என்ற உணர்வு மேம்படுகிறது. எனவே பண்பாட்டு ஒற்றுமையை நமது வரலாற்று அறிவு நாட்டுப் பற்று, தேசிய உணர்வு ஆகியவை வளர்க்க துணைபுரிகின்றன.

### 2. 4. 6. பாரம்பரியமிக்க பண்பாட்டு பின்னணியில் வாழும் நாம் செய்ய வேண்டுவன

‘வேற்றுமையில் ஒற்றுமை காண்பதே’ இந்தியரின் அடிப்படைக் கோட்பாடு என்பதை உணர வேண்டும். இதனை எதார்த்தமாய் உணர்ந்து நாம் நம் ஒற்றுமை உணர்வை போர் மற்றும் அமைதிக்குத் தீங்குதரும் புயல், வெள்ளம், பூகம்பம் போன்ற இயற்கைச் சீரழிவின் போது மட்டுமே உலகறியச் செய்கிறோம். இத்தகைய நெருக்கடிக் காலங்களைத் தவிர்த்து அமைதிக் காலத்திலும் அன்றாட வாழ்விலும் அன்பு, அமைதி, சகோதர மனப்பான்மை, ஒற்றுமை, பிற மதத்தவரை அரவணைத்துச் செல்வதும் நல்லிணக்க மனப்பான்மை உடையவராய் வாழ வேண்டும்.

“பிறபொக்கும் எல்லா வுயிர்க்கும்” என்ற வள்ளுவரின் வாக்கிற்கிணங்க எவ்வித வேறுபாடும் கருதாமல் அனைவரையும் சமமாகக் கருதிப் பழக வேண்டும். அவர்களின் இன்ப துன்பங்களில் பங்கு கொள்ள வேண்டும். குறிப்பாகத் தன்னால் இயன்ற உதவியை மற்றவர்கட்கு செய்ய வேண்டும்.

www.tntextbooks.in

பிற மதத்தவர்களின் உணர்வுகளை மதித்து நடக்க வேண்டும். "எம் மதமும் சம்மதம்" என்ற பரந்த சமய உணர்வு வேண்டும். "ஒன்றே குலம், ஒருவனே தேவன்" என்ற உயரிய கோட்பாட்டினை நடைமுறை வாழ்வில் பின்பற்ற வேண்டும்.

நாட்டுப் பற்று மிக்கவராய் 'நாடு நமக்கு என்ன செய்தது' என்பதைக் கருதாமல் 'நாம் நாட்டிற்கு என்ன செய்தோம்' என்ற உணர்வுடன் நாட்டின் நலனுக்குப் பாடுபட வேண்டும். நமது அறிவையும் ஆற்றலையும் நம் நாட்டிற்கு பயன்படுத்த வேண்டும். உலகின் அனைத்துத் துறைகளிலும் நம் நாடு வளம் வாய்ந்ததாக திகழப் பாடுபட வேண்டும்.

இன்று உலக அரங்கில் வேண்டப்படுவது 'சமாதானம்'. எத்தகைய வேற்றுமைகளுக்கும், உயர்வு தாழ்வுகளுக்கும் இடம் தராமல் சமாதான உணர்வுடன் விட்டுக் கொடுத்து வாழ வேண்டும். உலக அமைதியே உயர்வுக்கு வழி என்பதை அனைவரும் உணர்ந்து அதற்கு அயராது உழைக்க வேண்டும்.

சமாதான வாழ்விற்கு அடிப்படை சகோதரத்துவ மனப்பான்மை. மனிதனாய்த் தோன்றிய இராமன், வேடர் குலத்தலைவனான குகனையும், குரங்கினத் தலைவனான சுக்ரீவனையும் சகோதரனாக ஏற்றுக் கொண்டதிலிருந்து சகோதரத் தத்துவத்தை அறியலாம். நாமும் நம் வேற்றுமைகளுக்கு அப்பாற்பட்ட சகோதர மனப்பான்மையை வளர்த்துக் கொள்ள வேண்டும்.



## பயிற்சி வினாக்கள்

### அ. ஓரிரு வரிகளில் விடையளி

1. 'பாரத நாட்டை' பாரதியார் எவ்வாறு சிறப்பிக்கிறார்?
2. இந்தியாவிற்கு வழங்கும் வேறு பெயர்கள் யாவை?
3. இந்தியாவை நிலவியல் கூறுகளின் அடிப்படையில் எவ்வாறு அழைக்கலாம்?
4. இந்தியாவின் இயற்கை அரணாக உள்ளன எவை?
5. இந்தியாவின் உயரிய 'தனிச்சிறப்பு' யாது?
6. இந்தியாவை டாக்டர் ஸ்மித் எவ்வாறு சிறப்பிக்கிறார்?
7. இந்தியாவில் வழக்கில் உள்ள சில முக்கிய மொழிகளைக் கூறு.
8. இந்தியாவில் மக்கள் பின்பற்றும் 'சமயங்கள்' சிலவற்றைக் கூறு.
9. நம் தாய்நாட்டை,ட தாயாக உருவகம் செய்து எவ்வாறு அழைக்கிறோம்?
10. அரசர்கள் சூட்டிக்கொண்ட பட்டப் பெயர்கள் சிலவற்றைக் கூறு.
11. அரசர்கள் மேற்கொண்ட வேள்விகள் சிலவற்றைக் கூறு
12. நம் மக்கள் கொண்டாடி மகிழும் சில 'பண்டிகைகளைக்' கூறு.
13. இந்தியாவில் வாழும் பல்வேறு இனத்தவர்கள் யாவர்?
14. இந்தியாவை ஆண்ட பெருமன்னர்கள் சிலரைக் கூறு.
15. இந்தியாவின் இருபெரும் 'இதிகாசங்கள்' எவை?

### ஆ. ஒரு பத்தி அளவில் அல்லது பத்து வரிகளுக்கு மிகாமல் விடையளி

1. பாரதநாடு இந்தியா எனவும் ஹிந்துஸ்தான் எனவும் வழங்கப்பெற்றதேன்?
2. இந்தியா 'துணைக்கண்டம்' என்றழைக்கப்படுவதேன்?

3. ‘வேற்றுமையில் ஒற்றுமை’ என்னும் கோட்பாட்டை விவரி.

4. நம் நாட்டில் நிலவும் ‘வேற்றுமைக் கூறுகள்’ யாவை?

5. இந்தியாவை ‘இன அருங்காட்சியகம்’ என டாக்டர் ஸ்மித் கூறக்காரணம் யாது?

6. நம் நாட்டில் காணப்படும் பொருளாதார வேற்றுமையைக் கூறு.

7. ஆங்கிலேயர் ஒற்றுமை உணர்வு தோன்ற எவ்வாறு காரணமாயினர்?

8. இந்தியாவின் பண்பாட்டு ஒற்றுமையை விவரி.

9. போக்குவரத்தும் செய்தித் தொடர்பு எவ்வாறு ஒற்றுமைக்குத் துணை புரிகின்றன?

10. ‘நாட்டுப் பற்று மற்றும் தேசிய உணர்வை’ வளர்க்க துணைபுரிந்தது எவ்வாறு?

**இ. ஒரு பக்க அளவில் அல்லது முப்பது வரிகளுக்கு மிகாமல் விடையளி**

1. இந்தியாவின் நிலவியல் வேற்றுமைகள் யாவை?

2. இந்தியாவில் காணப்படும் மொழி வேற்றுமைகளைக் கூறு.

3. இந்தியாவின் சமுதாய அமைப்பில் காணப்படும் வேற்றுமைகளைக் கூறு.

4. இந்தியாவின் நிலவியல் அரசியல் ஒற்றுமையை விவரி.

5. சமய ஒற்றுமை இந்தியாவில் நிலவுகிறது என்பதை விவரி.

6. வேற்றுமையில் ஒற்றுமை சிறப்புடன் மலர நாம் செய்ய வேண்டுவன யாவை?

**ஈ. நான்கு பக்கங்களுக்கு மிகாமல் விடையளி**

1. இந்தியாவில் நிலவும் வேற்றுமைக்கிடையே ஒற்றுமை எவ்வாறு திகழ்கிறது?

2. இந்தியப் பண்பாட்டு ஒற்றுமைக்குத் துணைபுரிந்த காரணிகளைத் தொகுத்துக் கூறுக?

www.tntextbooks.in

# 3. சிந்து சமவெளி நாகரிகம்

1922 ஆம் ஆண்டில் திரு. **R.D.** பானர்ஜி அவர்கள் நடத்திய அகழ்வாராய்ச்சியில் சிந்துப் பகுதியில் லார்க்கான மாவட்டத்தில் அமைந்துள்ள மொஹஞ்சதாரோ என்னுமிடத்திலும்; **R.B.** தாயாராம் சஹானி என்பவர் நடத்திய தொல்பொருள் அகழ்வாராய்ச்சியில் பஞ்சாப் பகுதியில் மாண்ட்கோமரி மாவட்டத்தில் ஹரப்பா என்னும் இடத்திலும் மிகச் சிறந்த நாகரிகம் வளர்ந்திருந்தது என எடுத்துக் கூறினர். 1924-ல் தொல் பொருள் ஆராய்ச்சித் துறையின் ஆணையராக இருந்த சர் ஜான் மார்சல் என்பவர் தாமே முன்னின்று இந்த ஆராய்ச்சினைச் செய்து அதனை உலகத்திற்குத் தெரியப் படுத்தினார். இந்த நாகரிகம் மிகவும் மேன்மை உடையதும் ஆரியர்கள் வருகைக்கு முந்தையதும் ஆகும் என்பதே அவரது கருத்தாகும். இது தவிர சிந்து-பலுசிஸ்தான் பகுதியில் சான்குடாரோ **(Chanhudaro),** சுக்கார் **(Jhukar)** நல் **(Nal)** மற்றும் கெலட் **(Kelat)** ஆகிய இடங்களில் நடத்திய அகழ்வாராய்ச்சியின் மூலம் இத்தகைய நாகரிகம் வளர்ந்திருந்தது என்பது நிரூபனம் ஆயிற்று. இந்த நாகரிகம் சுமார் கி.மு. 3250லிருந்து கி.மு. 2750 வரையிலான காலகட்டத்தில் இருந்ததாகத் தெரிகிறது.

## 3. 1. குடிமக்கள்

இவர்கள் எந்த இனத்தைச் சேர்ந்தவர்கள் என்பதில் சரித்திர ஆசிரியர்களிடையே பல கருத்துகள் நிலவுகின்றன. இவர்கள் ஆரியர்கள் என்று ஒரு சாரார் கூறுவதை மார்சல் **(Sir John Marshall)** முற்றிலும் மறுத்து இவர்கள் ஆரியர்கள் அல்ல என்பதை பல ஆதாரங்களுடன் எடுத்துக் கூறுகிறார். கார்டன் சில்டே **(Gordon Childe)** என்பவர், இவர்கள் சுமேரியர்கள் என்று கூறுகிறார். ஆனால் அதற்கான ஆதாரத்தை எடுத்துக்கூற இயலவில்லை. திராவிட இனத்தைச் சேர்ந்தவர்கள் என்று ராகலதாஸ் பானர்ஜி **(Rakhal Das Banerjee)** கூறுகிறார். அகழ்வாராய்ச்சியில் கிடைத்த சான்றுகளைக் கொண்டு டாக்டர் குகா **(Dr. Guha)** போன்றோர் இவர்கள் பல இனத்தைச் சேர்ந்தவர்கள் என்று கூறுகிறார்கள். பெரும்பாலான

www.tntextbooks.in

அறிஞர்கள் சிந்து சமவெளி நாகரிகம் திராவிட மக்களின் கொடை என ஒத்துக் கொண்டுள்ளனர். எனவே இங்கு வாழ்ந்தவர்கள் திராவிட இன மக்கள் என்பது தெளிவாகிறது. இம்மக்கள் எந்த இனத்தைச் சேர்ந்தவர்கள் என்பதைத் தெளிவாகக் கூற இயலாவிட்டாலும், நாகரிகத்தில் உன்னத நிலையை அடைந்திருந்தார்கள் என்பது மட்டும் தெளிவான உண்மை என வேறு சில வரலாற்று ஆசிரியர்கள் கூறுகின்றனர்.

## 3. 2. நகர அமைப்பு ( Town Planning )

'மொஹஞ்சாதாரோ' மற்றும் 'ஹரப்பா' போன்ற நகரங்கள் நதிக்கரையில் அமையப் பெற்றிருந்தன. சிந்து நதியிலிருந்து 3 மைல் தொலைவில் மொஹஞ்சாதாரோவும் 'ரபி' நதியிலிருந்து 6 மைல் தொலைவில் 'ஹரப்பா' அமைந்துள்ளன. இவ்வாறு நதிகளுக்கு அருகாமையில் அமைந்ததால் ஆற்று வெள்ளத்தில் இந்நகரங்கள் பல தடவை அடித்துச் செல்லப்பட்டன. ஒவ்வொருமுறை அழிந்த போதும் மீண்டும் மீண்டும் இந்நகரங்கள் நிர்மாணிக்கப்பட்டன என்பதை ஆராய்ச்சிகள் நிரூபிக்கின்றன.

சாலைகளின் அமைப்பைப் பார்க்கும் போது நகர அமைப்பு உன்னத நிலையை எட்டி இருந்தது என்பதை உணரலாம். முக்கியமான சாலைகள் 33 அடி அகலம் கொண்டவைகளாக இருந்தன. மற்ற சாலைகள் 9 அடியிலிருந்து 12 அடி வரை அகலமுடையவைகளாகவும் இருந்தன. தெருவோரங்களில் தெருவிளக்குகள் அமைக்கப்பட்டிருந்தன. கழிவுநீர்க் கால்வாய்களும் சிறப்பாக அமைக்கப்பட்டிருந்தன.

திட்டமிடப்பட்ட பல தெருக்கள் மாபெரும் கழிவு நீரகற்றும் கால்வாய்கள் முறைப்படி அவற்றைச் சுத்தப்படுத்துதல் போன்றவற்றை பார்க்கும்போது முறைப்படியான நகர நிர்வாகம் ஒன்று இருந்திருக்க வேண்டும்; அந்த நிர்வாகம் மிகவும் பலமுள்ளதாக இருந்திருக்க வேண்டும்; அதனால் தான் விதிமுறைகளின்படி வீடுகளும் தெருக்களும் அமைந்திருந்தன என கார்டன் சில்டே **(Gordon Childe)** கூறுகிறார்.



கழிவுநீர் கால்வாய்கள் பெரிய செங்கற்களாலும் மற்றும் கற்களாலும் மூடப்பட்டிருந்தன. சிறு சிறு கால்வாய்கள் தெரு வோரங்களில் பெரிய கால்வாயுடன் இணைக்கப்பட்டிருந்தன. இவை செங்கற்களால் கட்டப்பட்டிருந்தன. வீடுகளில் சேரும் குப்பைகளைக் கொட்ட தெருவின் இருபக்கங்களிலும் குப்பைத் தொட்டிகள் அமைக்கப்பட்டிருந்தன. மேற்கூறியவற்றைக் கவனத்தில் கொண்டு பார்த்தால் நகரம் சுத்தமாகவும் தூய்மையாகவும் இருக்க மிகுந்த அக்கறை எடுத்துக் கொண்டனர் என்பது தெளிவாகும்.

## 3. 3. கட்டடக்கலை ( Architecture )

நகரத்தில் அமைக்கப்பட்ட அனைத்துக் கட்டடங்களும், சில குறிப்பிட்ட வரையறைகளுக்குட்பட்டே கட்டப்பட்டிருந்தன. சிறு கட்டடங்கள் 30 அடி நீளமும் 26 அடி அகலமும் கொண்டிருந்தன. அவற்றில் நான்கு அல்லது ஐந்து அறைகள் அமைக்கப்பட்டிருந்தன. பெரிய கட்டடங்கள், சிறிய கட்டடத்தைப் போன்று இரண்டு பங்கு நீள, அகலங்களைக் கொண்டிருந்தது. அதிகபட்சம் 30 அறைகள் கொண்டதாக இருந்தன. பல முறை அழிவுகள் ஏற்பட்டாலும் அவற்றை மூன்று பிரிவுகளாகக் கொள்ளலாம். முதலாவது பழங்காலம், இரண்டாவது மத்திய காலம் மற்றும் மூன்றாவது பிற்காலமாகும். வெள்ளத்தால் அழிந்தாலும் மீண்டும் ஒரே சீராக திட்டமிட்டப்படி முதல் இரண்டு காலத்திலும் கட்டப்பட்டிருந்தன. ஆனால் பிற்காலத்தில் கட்டப்பட்ட கட்டடங்கள் சரியாகத் திட்டமிடப்படாமல் தரத்தில் தாழ்ந்தவைகளாக இருந்தன. இது பிற்காலத்தில் கட்டடக்கலையின் அழிவையே குறிக்கிறது என்பார். டாக்டர் புஸால்கர் **(Dr. Pusalkar).** தோண்டியெடுக்கப்பட்ட வீடுகளை மூன்று வகைகளாகப் பிரிக்கின்றார்.

1. குடியிருக்கும் வீடுகள்
2. பெரிய கட்டடங்கள்
3. பொதுக் குளியலறைகள்.

முதல் இரண்டு வகைக்கட்டடங்களைப் பற்றி மேலே பார்த்தோம். மூன்றாவது வகையான கட்டடங்களை இனி பார்ப்போம்.

www.tntextbooks.in

'மொஹஞ்சதாரோ' வின் மிகப்பெரிய கட்டடம். நீச்சல்குளம் 8 அடி ஆழம் கொண்டதாகவும் இருந்தது. அதைச் சுற்றி படித்துறைகளும் குளியல் அறைகளும் அமைக்கப்பட்டிருந்தன. அதைக் கட்டுவதற்கு சுட்ட செங்கற்கள் பயன்படுத்தப்பட்டிருந்தன. நீச்சல் குளத்தில் நீரைச் செலுத்தவும் அழுக்கு நீரை வெளியேற்றவும் தனித்தனியே ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. கிணறுகளிலிருந்து நீர் நீச்சல் குளத்திற்குக் கொண்டு செல்லப்பட்டது. கிணறுகள் சுட்ட செங்கற்களினால் கட்டப்பட்டிருந்தன. அதே போன்று 'ஹரப்பா' விலும் நீச்சல் குளம் அமைக்கப்பட்டிருந்தது. அதனுடைய அளவு நீளம் 39 அடியாகவும் அகலம் 13 அடியாகவும் ஆழம் 8 அடியாகவும் இருந்தது. திருவிழாக் காலங்களிலும், சமயச் சடங்குகள் செய்யும் போதும் மக்கள் நீச்சல் குளத்தில் நீராடினர். சமயத் திருவிழாக்காலங்களில் "நீராடுவதை" புனிதமாகக் கருதி அதற்கு முக்கியத்துவம் அளித்தனர்.

'அரசாங்கம்' அல்லது 'பொது'க் கட்டடங்களும் தோண்டி எடுக்கப்பட்டன. அவைகள் 460 அடி நீளமும் 280 அடி அகலமும் கொண்டனவாகும். இது தவிர 'ஹரப்பா' வில் தானியக் கிடங்குகளும் காணப்பட்டன. 50 அடி நீளமும் 20 அடி அகலமும் கொண்டிருந்தன. அதன் நுழைவாயில்கள் நதியை நோக்கி அமைந்திருப்பதால் நீர் வழியைப் போக்குவரத்திற்கு மக்கள் பயன்படுத்தி கருதுகிறார்கள் என்பது தெளிவாகும். இதே தானியக்கிடங்குகள் அரசாங்கத்தின் 'சேமிப்புக் களஞ்சியமாக' திகழ்ந்திருக்க வேண்டும். இது தவிர 150 அடி நீளம் 75 அகலம் கொண்ட கட்டடம் ஒன்றும் 280 அடி நீளமும் 78 அடி அகலமும் கொண்ட மற்றொன்றுமாக இரண்டு கட்டடங்கள் தோண்டி எடுக்கப்பட்டுள்ளன.

இதுவரை சிந்து சமவெளி காலத்திய மக்கள் கட்டடக்கலைக்கு முக்கியத்துவம் கொடுத்தது மட்டுமில்லாமல் மிகத் தூய்மையான வாழ்க்கையை மேற்கொண்டிருக்கிறார்கள் என்பதைக் கண்டோம்.



## 3. 4. சமுதாய நிலை

### 3. 4. 1. உணவு

சைவ மற்றும் அசைவ உணவு வகைகளை மக்கள் உண்டனர். முக்கியமாக கோதுமை, பார்லி, அரிசி, பால், மீன், கடல் ஆமை மற்றும் ஆட்டிறைச்சி ஆகியன உணவுப் பொருள்களாக இருந்தன. இது தவிரவும் பேரிச்சம்பழம் அவர்களது விருப்பமான உணவாக இருந்தது.

### 3. 4. 2. உடை

பருத்தி மற்றும் கம்பளி ஆடைகளை அணிந்தனர். நூற்பாடைகள் 'மொஹஞ்சாதாரோ' நகரின் முக்கிய வணிகமாக இருந்தது. எளிமையான ஆடைகளே உடுத்தினர். ஆண்கள் மேலே துண்டு போன்ற ஆடையும் கீழே வேட்டி போன்ற ஆடையையும் அணிந்தனர். பெண்கள் தலைமேல் விசிறி போன்ற அமைப்பு கொண்ட ஆடைகளை அணிந்தனர்.

### 3. 4. 3. நாகரிகம்

இம்மக்கள் மிகவும் நாகரிகத்தில் நாட்டம் கொண்டவர் களாயிருந்தனர். சிலர் தாடியும் மீசையும் வைத்திருந்தனர். தந்தத்தில் ஆன சீப்பும், வெண்கலத்தால் ஆன கண்ணாடியும், உபயோகப் படுத்தினர். பெண்களும் நாகரிகத்தில் நாட்டம் கொண்டிருந்தனர்.

### 3. 4. 4. அணிகலன்கள்

தங்கம், வெள்ளி, பித்தளை போன்ற உலோகங்களினால் செய்யப்பட்ட அணிகலன்களை அணிவதில் அக்காலத்தில் பெண்களும் மிகுந்த ஆர்வம்கொண்டிருந்தனர் என்பதையும் ஆராய்ச்சிகள் புலப்படுத்துகின்றன. தந்தத்தினால் ஆன அணிகலன் களும் விரும்பி அணியப்பட்டன. கழுத்தணி, வளையல், மோதிரம் மற்றும் காதணிகள் ஆகியவை முக்கிய அணிகலன்களாகும்.

www.tntextbooks.in

### 3. 4. 5. பொழுது போக்கு

'பகடைக்காய்கள்' ஒரு வகையான சதுரங்கம் ஆகியவை பொதுவான பொழுதுபோக்காக இருந்தது. சூதாட்டம் மிகவும் விருப்பம் உள்ளதாக இருந்தது. இதற்கு பல பகடைக்காய்கள் உபயோகிக்கப்பட்டன. வேட்டையாடுவதிலும் மிகுந்த ஆர்வம் கொண்டிருந்தனர். குழந்தைகள் களிமண்ணால் பொம்மைகள் செய்து விளையாடினார். பறவைகள் வளர்ப்பதிலும் ஆர்வம் காட்டியிருக் கின்றனர். ஒரு வேளை பறவைகளைச் சண்டையிட விட்டு அதைப்பார்த்து மகிழ்ச்சி அடைந்திருக்கக் கூடும்.

### 3. 4. 6. பெண்களின் நிலை

பெண்களின் வாழ்க்கை பெரிதும் மேன்மை அடைந்திருந்தது. ஆண்களுக்கு நிகராக சம உரிமைகளைப் பெண்களும் சமுதாயத்தில் பெற்றிருந்தனர். 'தாய்த்தெய்வ' வழிபாட்டுமுறை இருந்தது என்று அறிகிறோம். இதுவே பெண்கள் மிகவும் போற்றப்பட்டார்கள் என்பதற்குச் சான்றாகும்.

### 3. 4. 7. போக்குவரத்துத் தொடர்பு

மாட்டு வண்டியே முக்கியமான போக்குவரத்துச் சாதனமாய் பயன்படுத்தப்பட்டது.

### 3. 4. 8. இறந்த உடல்களை அடக்கம் செய்தல்

இறந்த உடலை அடக்கம் செய்வதில் மூன்று வகையான வழிகளைப் பின்பற்றினர். முதலாவதாக இறந்த உடலைப் புதைத்தனர். இரண்டாவதாக எரித்த உடலின் எஞ்சிய பாகங்களைப் புதைத்தனர். மூன்றாவதாக இறந்த உடல்களை காட்டு விலங்கு களிடத்தில் விட்டு விடுதலாக இருந்தது. சர் ஜான்மார்ஸல் **(Sir. John Marshall)** கூற்றுப்படி இரண்டாவது வழிமுறைகளே பெரிதும் பழக்கத்தில் இருந்தது.

### 3. 4. 9. மருத்துவம்

எந்த வகையான மருத்துவமுறையைப் பயன்படுத்தினார்கள் என்பது தெளிவாக அறிய முடியவில்லை. இருப்பினும் வேப்பிலையின் முக்கியத்துவத்தை அறிந்திருந்தனர்.



## 3. 5. பொருளாதார வாழ்க்கை முறை

மிக வளர்ச்சி அடைந்த மொஹஞ்சதாரோ மற்றும் ஹரப்பா ஆகிய நகரங்களில் வாழ்ந்த மக்களின் பொருளாதார வாழ்க்கை முறைகளே அதற்குச் சான்றாகும். அவற்றைக் கீழ்க்கண்ட தொழில் மற்றும் வாணிகம் ஆகியவைற்றின் மூலமாக அறிவோம்.

### 3. 5. 1. விவசாயம்

விவசாயம் அவர்களது முதன்மையானத் தொழிலாக அமைந்திருந்தது. கோதுமை, பார்லி, அரிசி, பருத்தி மற்றும் காய்கறிகள் ஆகியவற்றைப் பயிர் செய்தனர். 'கலப்பை' யின் உபயோகத்தை அறிந்திருந்தனர்.

### 3. 5. 2. வீட்டுவிலங்குகள்

முக்கியமாக பசு, எருது, எருமை, செம்மறி ஆடு, வெள்ளாடு மற்றும் ஒட்டகம் ஆகியவற்றை வளர்த்து வந்தனர் என்பதை ஆராய்ச்சியில் தோண்டி எடுத்த முத்திரைகள் மூலமாகக் காணலாம். இவர்கள் குதிரைகளைப் பற்றி அறிந்திருக்கவில்லை.

### 3. 5. 3. வேட்டையாடுதல்

பொழுதுபோக்கு மட்டுமின்றி வாழ்க்கைத் தேவையினைப் பெறுவதற்காகவும் வேட்டையாடுதலை மேற்கொண்டனர். மிருகங்களின் தோல், முடி மற்றும் எலும்பு ஆகியவற்றை வாணிகம் செய்தனர். மீன் பிடித்தலும் மிகவும் பெயர் பெற்றிருந்தது.

### 3. 5. 4. நூற்றலும் நெய்தலும்

நூற்றலும், நெய்தலும் மக்களிடையே பழக்கத்தில் இருந்தன என்பதை அகழ்வாராய்ச்சியின் சான்றுகள் எடுத்துக் காட்டுகின்றன. பருத்தியும், விலங்குகளின் தோல்களும் ஆடை நெய்வதற்குப் பயன்படுத்தப்பட்டன.

### 3. 5. 5. மட்பாண்டங்கள்

சிந்து சமவெளி மக்கள் மட்பாண்டங்கள் தயாரிப்பதில் மிகவும் தேர்ச்சி பெற்றிருந்தார்கள். அவை சக்கரத்தினால் செய்யப்பட்டன.

www.tntextbooks.in

தண்ணீர் சுட வைப்பதற்கான பாத்திரம், பொருள்களை சேமிப்பதற்கான பாத்திரம் போன்றன செய்யப்பட்டன. இத்துடன் செம்பு, வெள்ளி, பித்தளை மற்றும் பீங்கான் ஆகிய உலோகங்களைக் கொண்டு வேலைப்பாடு அமைந்த பாத்திரங்களைச் செய்தனர்.

### 3. 5. 6. உலோகங்களும் தாதுப் பொருள்களும்

தங்கம், வெள்ளி, பித்தளை போன்ற உலோகங்களைப் பயன்படுத்தினர். அகழ்வாராய்ச்சியில் கண்டுபிடித்தவைகளில் பெரும்பாலானவை செம்பு மற்றும் வெண்கலத்தால் செய்யப்பட்டவைகள் ஆகும். இவர்கள் ஒருவேளை இரும்பின் உபயோகத்தை அறியாமல் இருந்திருக்கக் கூடும்.

### 3. 5. 7. வாணிகம்

பழங்கால நாகரிகம், அண்டை நாடுகளுடன் கொண்டிருந்த வர்த்தகத்தை எடுத்துரைக்கிறது. முக்கியமாக துணிகள் வர்த்தகத்தில் பயன்படுத்தப்பட்டன. சுமேரியாவில் சில குறிப்பிட்ட பொருள்கள் கண்டுபிடிக்கப்பட்டன. அவை சிந்து சமவெளி மக்களுடையதைப் போன்றே இருந்தது. இது இவ்விரு நாடுகளிடையே வர்த்தகம் நடைபெற்றது என்பதை உறுதி செய்கிறது. மேற்காசிய நாடுகளுடனும் வர்த்தகம் நடைபெற்றுள்ளது. பெரும்பாலும் நீர் வழிகளே வர்த்தகத்திற்கு பயன்படுத்தப்பட்டன.

### 3. 5. 8. அளவீடுகள்

வாணிகத்திற்கு தராசுகள் எடைக்கற்கள் ஆகியவற்றைப் பயன்படுத்தினர். சில படிக்கற்கள் அதிக எடை கொண்டவை. அவற்றை பெரிய கயிற்றைக் கட்டியே தூக்க முடியும். சிறிய எடைக்கற்களை நகை வியாபாரிகள் உபயோகப்படுத்தினர். இத்துடன் நீளத்தை அளப்பதற்கு ‘அடி’ முறைகள் பயன்படுத்தப்பட்டன.

இதுவரையில் சிந்து சமவெளி மக்கள் மிகவும் ஆக்கபூர்வமான பொருளாதார நடவடிக்கைகளை மேற்கொண்டு வாழ்வில் பெரிதும் மேம்பாடு அடைந்திருந்தனர் என்பதைக் கண்டோம்.



## 3. 6. சமயம்

அகழ்வாராய்ச்சியில் கிடைத்த பல்வேறு வகையான சிலைகளும் முத்திரைகளும் சிந்துசமவெளி மக்கள் சமயப்பற்று அதிகம் கொண்டவர்கள் என்பதை பறைசாற்றுகின்றன. அதிகப் படியான சிலைகளும், களிமண்ணால் ஆன பொம்மைகளும் (Terro-Cotta) இவர்கள் உருவவழிபாட்டில் அதிகம் நம்பிக்கை கொண்டவர்கள என்பதை நமக்கு உணர்த்துகின்றன.

### 3. 6. 1. தாய் வழிபாடு

‘தாய் வழிபாடு’ இம்மக்களின் சமயவாழ்வில் பெரும் பங்கு வகித்தது. ஹரப்பாவில் கிடைத்த மிக நீண்ட முத்திரையின் மூலம் தாய்த் தெய்வத்தின் உருவத்தை நாம் அறியலாம்.

### 3. 6. 2. சிவ வழிபாடு

இம்மக்கள் சிவனை வழிபடுதலை தங்களுக்குள் பழக்கமாகக் கொண்டிருக்கலாம். ‘ஹரப்பாவில்’ கண்டெடுத்த முத்திரை ஒன்றில் ‘சிவன்’ போன்ற உருவம் பொறிக்கப்பட்டுள்ளதை அறிகிறோம். அது மூன்று முகங்களைக் கொண்ட கடவுள் யோக நிலையில் அமர்ந்திருப்பது போலவும் அதனைச் சுற்றி யானை, புலி மற்றும் எருமை போன்ற விலங்கினங்கள் சூழ்ந்திருப்பது போலவும் அமைந்துள்ளது. இது சிவனுக்குரிய ‘திருமுக,’ ‘பசுபதி’ மற்றும் ‘மகாயோகி’ என்னும் அம்சங்களை உணர்த்துகின்றன.

### 3. 6. 3. விலங்கு வழிபாடு

முத்திரைகள் மூலம் நமக்கு தெரிவது சிந்து சமவெளி மக்களிடையே விலங்கு வழிபாடு இருந்தது தெரிய வருகிறது. இவ்வழிபாட்டை மூன்று வகையாகப் பிரிக்கலாம் முதலாவதாக பாதி மனிதன் உருவைக் கொண்டன. இரண்டாவதாக, அறிந்து கொள்ள முடியாதன; மூன்றாவதாக உண்மையான விலங்குகளின் உருவங்களைக் கொண்டதாகவும் அமைந்துள்ளன.

www.tntextbooks.in

### 3. 6. 4. நீர்வழிபாடு

ஆரம்ப கால முதற்கொண்டே நதிகள் புனிதமானவையாகவே கருதப்பட்டன. ‘மொஹஞ்சதாரோ’ வில் கண்டுபிடிக்கப்பட்ட பெரிய நீராடுதல் என்ற வழக்கம் மக்களின் சமயவாழ்வில் நீர் மிகச் சிறந்த முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதப்பட்டது. சமயச் சடங்குகளை ஆரம்பிப்பதற்கு முன் தன்னைச் சுத்தப்படுத்திக் கொள்வதற்காக ‘நீராடுதல்’ வழக்கத்தில் இருந்து வந்துள்ளது.

### 3. 6. 5. மரவழிபாடு

கண்டுபிடிக்கப்பட்ட முத்திரை ஒன்றில் கடவுள் ஒருவர் மரங்களுக்கு நடுவே இருப்பது போல் சித்திரிக்கப்பட்டுள்ளது. மேலும் “வேம்பு” போன்ற மரங்கள் புனிதமானவையாக கருதப்பட்டன.

### 3. 6. 6. ‘சூரியன் மற்றும் நெருப்பு’ வழிபாடு

பல முத்திரைகளில் ‘சக்கரமும்,’ ‘சுவஸ்திக்’ **(Wheel and Swastika)** இருப்பதைக் கொண்டு சூரிய கடவுளை மக்கள் வழிபட்டதாகத் தெரிகிறது. இதே போன்று நெருப்புக்குரிய கடவுளை வழிபடுதலையும் அறியலாம்.

### 3. 6. 7. நம்பிக்கைகள்

மக்கள் பல நம்பிக்கைகளைக் கொண்டிருந்தார்கள் என்பதற்கான ஆதாரங்களும் அகழ்வாராய்ச்சியில் கிடைத்துள்ளன.

இதுவரை நாம் படித்த பல செய்திகளான ‘மரம்,’ ‘நீர்,’ ‘சூரியன்’ ‘நெருப்பு’ மற்றும் விலங்குகள் ஆகியவற்றை வழிபடுதல் என்னும் இயற்கை வழிபாடு இருந்தது.

## 3. 7. கலை

முத்திரைகளின் வாயிலாக நாம் இவர்களது கலை நுணுக்கங்களை காண இயலும். ஆண் தெய்வம், பெண் தெய்வம், பல்வேறு வகையான விலங்குகள் ஆகியவற்றின் உருவங்கள் பொறிக்கப்பட்டுள்ளன. மண்பாண்டங்களில் கூட மிருகங்களின்



உருவங்கள் பொறிக்கப்பட்டள்ளன. முத்திரைகள், தந்தத்தினாலும், கற்களினாலும் மற்றும் களிமண்ணாலும் பொறிக்கப்பட்டுள்ளன. விலை மதிக்கமுடியாத கற்கள் நகைகளில் பதிக்கப்பட்டன. மேலும் இவர்கள் இசை மற்றும் நடனத்தில் அதிக நாட்டம்கொண்டிருந்தனர். வெண்கலத்தினாலான நடனமாதுவின் சிலை இவர்களின் உன்னதமானப் படைப்பாற்றலைக் காட்டுகிறது.

## 3. 8. எழுத்துகள்

ஆராய்ச்சியில் கண்டுபிடிக்கப்பட்ட எழுத்துகளை சித்திர எழுத்து என்றோ அல்லது கண்ணெழுத்து வகை என்றோ குறிப்பிடலாம். இதனுடைய வடிவம் என்னவென்று காண இயலவில்லை. எழுத்துகள் இடமிருந்து வலமான ஒரு வரியிலும், வலமிருந்து இடமாகவும் எழுதப்பட்டுள்ளன. இவை சுமேரிய, எகிப்து ஆகிய எழுத்துகளுக்கு தொடர்புடையன போல காணப்படுகின்றன. ஈராசுப் பாதிரியார் சிந்து சமவெளி எழுத்துகளும், மொழியும் தமிழே என்று கூறியுள்ளார். இவர்களின் எழுத்துமுறை ‘சித்திர எழுத்துமுறை’ ஆகும். **(Pictography)**

## 3. 9. சிந்துவெளி நாகரிகத்தின் அழிவு

இந்திய நாகரிகத்தில் மிகச் சிறந்து விளங்கிய சிந்துவெளி நாகரிகம் அழிந்ததற்கான காரணங்கள் பல உள்ளன.

1. சிந்து ஆற்றில் ஏற்பட்ட வெள்ளத்தால் இந்நகரம் மூழ்கியிருக்கக் கூடும்.

2. அகழ்வாராய்ச்சயின் போது கிடைத்த மனித எலும்புக் கூடுகளை ஆராய்ந்த அறிஞர்கள் அவைகளின் மேல் காணப்படும் சிதைவுகள் போர்க் காலங்கள் என முடிவு செய்கின்றனர். அந்நியர் படையெடுப்பு நடைபெற்றிருக்க வேண்டும்.

பொருளாதார வீழ்ச்சியினால் மக்கள் இடம் பெயர்ந்து நாட்டை விட்டுச் சென்றிருக்கலாம். ஆரியர்கள் வருகையால் பல மாற்றங்கள் ஏற்பட்டன. அவற்றின் விளைவால் நகர நாகரிகம் அழிந்திருக்கலாம்.

www.tntextbooks.in

இறுதியாக சிந்துசமவெளி நாகரிகத்திற்கும் வேதகால நாகரிகத்திற்கும் உள்ள வேற்றுமைகளை திரு. ஜான்மார்சல் **(Sir. John Marshall)** என்பவர் கீழ்கண்டவாறு கூறுகிறார்.

1. சிந்து சமவெளி நாகரிகம் அடிப்படையில் நகர நாகரிகம் ஆகும். ஆனால் வேதகால நாகரிகமோ அடிப்படையில் கிராம நாகரிகமாகும். சிந்து சமவெளி மக்கள் விவசாயத்தையும், வாணிகத்தை முதன்மையான தொழிலாகக் கொண்டிருந்தனர். வேதகால மக்களோ நாடோடிகளாக இருந்தனர்.

2. சிந்து சமவெளி மக்கள் உருவ வழிபாட்டில் நம்பிக்கை கொண்டவர்கள். 'தாய் வழிபாடு' சிவ வழிபாடு 'மர வழிபாடு' மற்றும் 'விலங்கு வழிபாடு' ஆகிய வழிபாடுகளைச் செய்தவர்கள். ஆனால் வேதகால மக்களோ 'உருவ வழிபாட்டை' போற்றவில்லை. இவர்கள் இயற்கையை வழிபட்டனர். நீர், நெருப்பு, ஆகாயம், சூரியன் ஆகியவற்றை வழிபட்டனர். அவர்கள் நெருப்பிற்கு முக்கியத்துவம் கொடுத்தனர். ஆனால் சிந்து சமவெளியினால் அவ்வாறு செய்யவில்லை.

3. சிந்துசமவெளியினர் முற்றிலுமாக இரும்பின் உபயோகத்தை அறிந்திருக்கவில்லை. ஆனால் வேதகாலத்தினர் ஆரம்பத்தில் தங்கம், தாமிரம் ஆகியவற்றை உபயோகப்படுத்தினர். நாளடைவில் வெள்ளி, இரும்பு மற்றும் வெண்கலம் ஆகியவற்றை உபயோகப்படுத்தினார்.

4. குதிரைகளின் முக்கியத்துவம் மற்றும் அதன் பயன்பாடு ஆகியவற்றை சிந்து சமவெளியினர் உணர்ந்திருக்கவில்லை. ஆனால் வேதகாலத்தினரோ, குதிரை மற்றும் பசு ஆகியவைகளுக்கு முக்கியத்துவம் கொடுத்தனர்.

5. சிந்து சமவெளியினர் எழுதவும், எழுத்து முறையும் கற்றிருந்தனர். அதனால் கலை மற்றும் கலாசாரத்தில் மேலோங்கி இருந்தனர்.



## 3. 10. இந்தியப் பண்பாட்டிற்கு சிந்துவெளி நாகரிகத்தின் கொடை

பழமையும் பெருமையும் வாய்ந்த சிந்துவெளி நாகரிகம் இந்தியப் பண்பாட்டிற்கு பின்வரும் அரிய கொடைகளை வழங்கியுள்ளது.

1. சிந்துவெளி மக்களின் நாகரிகம் 'ஒரு சிறந்த நகர நாகரிகம்' ஆகும்.

2. சிந்து வெளி நாகரிக காலத்தில் தோன்றிய நகரங்களின் வடிவமைப்பு இன்றைய நகரங்களின் அமைப்பைக் காட்டிலும் மேம்பட்டதாக இருந்தது.

3. நகரம் மாசு அடைவதை தவிர்க்க சுண்ணாம்பு காளவாய்கள், நகரின் ஒதுக்குப் புறத்தில் அமைக்கப்பட்டதாக அறிகிறோம். 'புகை நமக்கு பகை' என்பதை உணர்ந்திருந்தனர் என்பதை இச்செயல் நமக்கு உணர்த்துகிறது.

4. சிந்து வெளி மக்கள் "தாயிற் சிறந்த கோயிலுமில்லை" என்பதை உலகறியச் செய்யும் பொருட்டு தாய்வழிபாட்டினை மேற்கொண்டனர்.

5. அரிய விலங்கினமான ஒற்றைக் கொம்பு எருது பற்றி இவர்களுக்கு தெரிந்திருந்தது. களிமண்ணால் ஆன ஒற்றைக் கொம்பு எருதின் பொம்மைகள் கிடைத்துள்ளன. மேலும் அவர்கள் இந்த ஒற்றைக் கொம்பு எருதினை தெய்வமாக போற்றி வணங்கினர்.

6. இவர்களின் கலைத்திறனை 'வெண்கலத்திலான நடனமாதின் சிலை' உலகறியச் செய்கிறது.

www.tntextbooks.in

## பயிற்சி வினாக்கள்

### அ. ஓரிரு வரிகளில் விடையளி

1. ‘சிந்துவெளி நாகரிகத்தை’ உலகறிய செய்தவர் யார்?
2. ‘சிந்துவெளி நாகரிக காலம்’ எது?
3. சிந்துவெளி நாகரிக மக்கள் ‘இனம்’ பற்றி கூறு.
4. சிந்துவெளி மக்களின் ‘பொழுது போக்கினை’ கூறுக.
5. சிந்துவெளி மக்களின் ‘எழுத்து முறை’ யாது?
6. சிந்துவெளி ‘மக்களின் நிலை’ யாது?
7. சிந்துவெளி மக்களின் ‘மருத்துவ அறிவினை’ குறிப்பிடுக.
8. சிந்துவெளி மக்களின் ‘அணிகலன்களை’ குறிப்பிடுக.

### ஆ. ஒரு பத்தி அளவில் அல்லது பத்து வரிகளுக்கு மிகாமல் விடையளி

1. சிந்துவெளி மக்களின் சமுதாய வாழ்வினை எழுதுக. ஹரப்பா நாகரிகத்தின் அழிவிற்கான காரணங்கள் யாவை?
2. சிந்துவெளி மக்களின் உடை, உணவு பற்றி எழுது.

### இ. ஒரு பக்க அளவில் அல்லது முப்பது வரிகளுக்கு மிகாமல் விடையளி

1. சிந்துவெளி நாகரிக மொஹஞ்சாதாரோ, ஹரப்பா நகரங்கள் பற்றி விவரி.
2. சிந்துவெளி மக்களின் ‘சமயம்’ பற்றி விவரி.
3. சிந்துவெளி மக்களின் ‘கலையினை’ விவரி.
4. சிந்துவெளி மக்களின் ‘பொருளாதாரம்’ பற்றி எழுதுக.
5. சிந்துவெளி மக்கள் இந்தியப் பண்பாட்டிற்கு அளித்த ‘கொடையினை’ விவரி.

### ஈ. நான்கு பக்கங்களுக்கு மிகாமல் விடையளி

1. சிந்துவெளி நாகரிகம் பற்றி விவரித்து எழுதுக.

www.tntextbooks.in

# 4. வேதங்கள் மற்றும் புராணங்களில் காணப்படும் பண்பாட்டுக் கூறுகள்

## 4. 1. வேதம் - சொல் விளக்கம், இலக்கியங்கள்

வேதம் என்ற சொல் **'வித்' (Vid)** என்ற சமஸ்கிருதச் சொல்லின் அடியாகப் பிறந்தது. வேதம் என்பது 'அறிவு' என்றும் தெய்விகச் சிந்தனைகள் நிரம்பப் பெற்றமையால் 'புனித அறிவு' எனவும் பொருள் கொள்ளப்படுகிறது.

தமிழில் 'வித்' என்ற சொல் விதை என்ற பொருளைத் தருகிறது. விதையானது முறையாக வளர்ந்து பெரிய மரமாகி பூத்துக் காய்த்து குலுங்குவது போல் வேதங்கள் மனித வாழ்வின் அனைத்துத் துறைகளிலும் ஆன்மிக மற்றும் அருள் உணர்வை வளர்ப்பனவாக உள்ளன.

வேதங்கள் முறையே ரிக், யஜீர், சாமம், அதர்வணம் என்ற நான்கு ஆகும்.

இவ்வேதங்கள் தோன்றிய காலம், உணர்த்தும் அரிய கருத்துகள், இலக்கியங்கள் மக்களின் வாழ்க்கை முறை மற்றும் உயரிய பண்பாட்டு நெறிகளைக் காண்போம்.

### 4. 1. 1. வேத காலம்

சிந்து வெளிநாகரிகத்திற்குப்பின் அதற்கு முற்றிலும் மாறுபட்ட கிராம நாகரிகம் இந்தியாவில் வேரூன்றியது. இதற்கு வித்திட்டவர்கள் ஆரியர்கள். ஆவர். இவர்களது பூர்வீகம் பற்றி பல்வேறுபட்ட கருத்துகள் நிலவுகின்றன. மத்திய ஆசியாவிலிருந்து இந்தியாவின் வடமேற்கே உள்ள கைபர் மற்றும் போலன் கணவாய்கள் வழியாக வந்தவர்கள் என்பது பெரும்பாலோர் கருத்து. இங்ஙனம் வந்தவர்கள் 'இந்தோ ஆரியர்கள்' எனப்பட்டனர்.

## 4. 1. 2. ஆரிய வர்த்தம்

இந்தியாவில் ஆரியர்கள் சிந்து மற்றும் கங்கைச் சமவெளியில் வந்து குடியேறி நிலையாக வாழ்ந்தனர். செழிப்பான நிலப்பகுதியும், வற்றாத நீர் வளமும் அவர்களது வாழ்க்கைக்கு வளமை சேர்த்தது. ஆரியர்கள் குடியேறிய இப்பகுதி 'ஆரிய வர்த்தம்' என்று அழைக்கப்பட்டது.

இந்தியா ஆரியர்களின் பாதையில் நடைபோட்டுக் கொண்டிருந்த சமயம் வேதங்கள் தோன்றின. இக்காலமே வேத காலம் என அழைக்கப்படுகிறது. பழமையான "ரிக்" வேதம் தோன்றிய காலம் முந்திய வேதகாலம் எனவும் மற்ற வேதங்களின் தோற்றம் மற்றும் இலக்கியம் வளர்ந்த காலத்தைப் பிந்தைய வேதகாலம் என்றும் வழங்குவர்.

## 4. 1. 3. வேத இலக்கியங்கள்

வேத இலக்கியங்கள் மிகவும் போற்றிப் பாதுகாக்கப்பட வேண்டிய, மிகவும் முக்கியமான மதிப்புள்ள ஆரியர்களின் அரிய கொடையாகும். இவ்விலக்கியங்கள் ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக மக்களுக்கு நல்வழி காட்டி பண்பாட்டினை வளர்த்தன. அறிவு, கர்மம், வழிபாடு என்பன வேத இலக்கியங்கள் உணர்த்தும் அரிய உண்மைகளாகும். இவற்றை விரிவாகக் காண்போம்.

இலக்கியங்கள் - வகைப்பாடு

1. சம்ஹிதைகள் - **Samhitas**
2. பிராமணங்கள் - **Bramhanas**
3. ஆரண்யகங்கள் - **Aranyakas**
4. உபநிடதங்கள் - **Upanishads**
5. "சுருதி" மற்றும் "ஸ்மிருதி" - **Sruti and Smruti**
6. வேதங்கள் - **Vedas**

என வகைப்படுத்தி விரிவாகக் காண்போம்.



### *4. 1. 3. 1. சம்ஹிதைகள்*

அறிவுக் கருவூலமாகத் திகழ்வன. இவற்றின் துணையால் அக்கால மக்களின் அரசியல், பொருளாதார, சமூக, சமய வாழ்க்கை முறைகளை அறிய முடிகிறது. ஒவ்வொரு வேதத்திற்கும் தனித்தனியே சம்ஹிதைகள் உள்ளன. இவற்றுள் ரிக் வேத சம்ஹிதைகள் மிகப் பழமையானவை. ரிக் வேத சம்ஹிதையைக் கொண்டு 'முற்கால வேத கால பண்பாட்டை விரிவாக அறியலாம். பிற வேதங்களின் சம்ஹிதைகள் வாயிலாக 'பிற்கால வேதகால' மக்களின் வாழ்க்கை நிலை மற்றும் பண்பாட்டுச் சிறப்பினை அறியலாம்.

சம்ஹிதைகள் என்பன துதிப்பாடல்கள், வழிபாட்டு முறைகள், வேள்விகளுக்கான சூத்திரங்கள், ஆகியவற்றைக் கொண்ட தொகுப்பாகும். வேள்விக் காலங்களில் இவை முழுமையாக பயன்பட்டன. அதர்வண வேத சம்ஹிதை மட்டும் பில்லி, சூனியம், பிசாசு, மந்திரக் கட்டு என்பனவற்றைக் கூறுகிறது.

### *4. 1. 3. 2. பிராமணங்கள்*

வேத மந்திரங்களுக்கான விளக்கவுரையுடன் எழுதப்பட்ட பகுதிகள் பிராமணங்கள் ஆகும். வேதங்களில் உள்ள துதிப்பாடல்களுக்குரிய உரைநடை நூல்கள் எனலாம். சமயச் சடங்குகள், வேள்விகள் பற்றிய விளக்கங்களும் அவற்றைச் செய்யும் முறைகளும் உள்ளன. புரோகிதர்களுக்கு சரியான வழியைக் காட்ட இவை பெரிதும் உதவுகின்றன.

### *4. 1. 3. 3. ஆரண்யகங்கள்*

அமைதியாகக் காட்டிற்குச் சென்று அங்கு கற்றுத் தெரிந்து கொள்ள வேண்டிய செய்திகளைக் கொண்டமையால் ஆரண்யகங்கள் என்ற பெயர் பெற்றன. வேள்விகளைச் செய்ய இயலாத முதியவர்கள், துறவிகள் ஓய்வு பெற்று காட்டிற்குச் சென்று பின்னர் கற்பதற்காக உருவானவை. இவற்றில் வேள்வியை விட அமைதியான தியானமே மிகவும் மேலானது என்று வலியுறுத்தப்படுகிறது. அநுபூதி நெறிகள் மற்றும் தத்துவக் கருத்துகள்

www.tntextbooks.in

அடங்கிய கருத்துப் பெட்டகம் எனலாம். ஆரியர்கள் ஆன்மிகத் துறையில் அடைந்த பண்பாட்டின் உன்னத நிலையை எடுத்துக்காட்டுவனவாகும்.

### *4. 1. 3. 4. உபநிடதங்கள்*

வேதங்களின் சாரமே 'உபநிடதம்' என்றால் அது மிகையாகாது. ஆரியர்களின் ஆன்மிக, சமயக் கருத்துகளை இவை விவரிக்கின்றன. இறைவன் ஆன்மா, உலகம், கர்மவினை, முக்தி போன்ற கருத்துகளை ஆராய்ந்து தெளிவான விளக்கங்களை உலகிற்கு அளிக்கின்றன. மேலும் மறைபொருள், ஞானங்களை விளக்குகின்றன. உலக பந்த பாசங்களினின்று விடுபட்டு வீடு பேற்றினை அடைய ஞானம் தேவை என்பதை விளக்குகின்றன. பரம்பொருளாகிய "பிரம்மன்" ஒன்றே என்ற கருத்தையும் நிலைநாட்டுகிறது. ஏறத்தாழ 200 உபநிடதங்களுக்கு மேல் உள்ளன.

### *4. 1. 3. 5. சுருதி மற்றும் ஸ்மிருதி*

#### *சுருதிகள்*

செவி வழியே கேட்டு உணரப் பெற்ற செய்திகளின் தொகுப்பு சுருதி எனப்படும்.

ஆரியர்கள் காலத்தில் எழுத்துமுறை இல்லாமையால் மனப்பாடமாகவே இலக்கியங்கள் வந்திருக்கின்றன. நினைவாற்றல் வழியாக வரும் அறிவுக் கருவூலமாக வந்தவை சூத்திரங்கள். இவை வேதங்களின் ஒரு பகுதி அல்ல. வேதங்களோடு நெருங்கிய உறவுடையவை. இவை மூன்று வகைப்படும். அவையாவன.

அ) **தரும சூத்திரம்:-** ஆரியர்களின் நம்பிக்கைகளைக் கூறுகின்றது.

ஆ) ***ச்ரௌத்த சூத்திரம்:-*** இது யாகங்கள் மற்றும் சடங்குகள் செய்யும் முறைகளைக் கூறுகின்றது.

இ) **கிருஹ்ய சூத்திரம்:-** இது ஆரியர்களின் வாழ்வைக் கூறுகின்றது.



#### *ஸ்மிருதிகள்*

"இவை உயர்ந்த உள்ளங்களின் சிந்தனைத் தொகுப்புகள்" சூத்திரங்கள், தரும சாஸ்திரங்கள், இதிகாசங்கள், புராணங்கள் என்பன ஸ்மிருதிகளாகும். இவை எழுதப் பெற்றவை. இதில் தரும சாஸ்திரம் என்பது சட்டம், சமுதாய நடைமுறைகளை விவரிக்கின்றன. பல்வேறு சாதிக் கடமைகளையும், பல்வேறு நிறுவனங்களையும் (அமைப்புகளை) விளக்குகின்றன. நடைமுறை வாழ்வில் குற்றம், குற்றங்களுக்குரிய தண்டனை முறை, மகவேற்பு **(adoption),** மரபுரிமையாக சொத்தை பெறும் சட்ட உரிமைகள் விவரிக்கப்பட்டுள்ளன.

### *4. 1. 3. 6. நான்கு வேதங்கள்*

வேதம் என்பது பற்றிய கருத்துகளை முன்னரே அறிந்தோம். இவ்வேதங்கள் ஒரு குறிப்பிட்ட காலத்தில் எழுதப்படவில்லை. இவை பல்வேறு ரிஷிகளால் பல்வேறு காலத்தில் எழுதப்பட்டவை. சில அறிஞர்கள் இவை கி.மு. 1000ல் தொகுக்கப்பட்டவையென்றும் வேறு சிலர் கி.மு. 2000க்கும் 3000க்கும் இடைப்பட்ட காலத்தில் தொகுக்கப்பட்டவை என்றும் கூறுகின்றனர். முதலில் தோன்றியது ரிக் வேதம் எனவும் பிற வேதங்களாகிய யஜூர், சாமம், அதர்வணம் பின்னர் தோன்றியன என்றும் கூறுகிறார்கள்.

#### *அ) ரிக் வேதம்* - **(Rig veda)**

மிகப்பழமையானதும் முதலில் தோன்றியது என்ற பெருமையும் கொண்டது. இது பத்து மண்டலங்களையும் 1028 சூக்தங்களையும் கொண்டது. அக்னி, வருணன், இந்திரன் போன்ற தெய்வங்களைப் பற்றிய குறிப்பு காணப்படுகிறது. இது கி.மு. 1200ல் எழுதப்பட்டிருக்கலாம் எனத் தெரிகிறது.

#### *ஆ) யஜீர் வேதம்* - **(Yajur veda)**

இவ்வேதம் நடைமுறை சடங்குகள், வேள்விகளுக்கான பாடல்களைக் கொண்டது. இது சுக்ல யஜூர் வேதம், கிருஷ்ண யஜூர் வேதம் என்னும் இரு பிரிவுகளைக் கொண்டது. 40 அத்தியாயங்களைக் கொண்டது.

www.tntextbooks.in

*இ) சாம வேதம்* - **(Sama veda)**

இது வக்கதர் என்னும் ஒரு குறிப்பிட்ட புரோகிதர்களால் பாடப்பெற்ற பாடல்களின் தொகுப்பாகும். இது 1459 பாடல்களைக் கொண்டது எனவும் இசையோடு இறைவனை துதிப்பதற்கான பாடல் தொகுப்பு எனவும் கூறுவர்.

*ஈ) அதர்வண வேதம்* - **(Atharvana)**

இது பிரம்மவேதம் எனப்படும். இது 731 பாடல்களைக் கொண்டு 20 பகுதிகளாக உள்ளது. இது உச்சாடனம் மாந்ரீகம் போன்றவற்றால் தீயசக்திகளையும் எதிரிகளையும் வென்று உலகத்தில் வெற்றி பெறும் வழிகளைக் கூறுவது எனலாம்.

### 4. 1. 4. உபவேதங்கள் - (Upa vedas)

ஒவ்வொரு வேதமும் உபவேதங்களைக் குறிப்பிடுகின்றன. அவை நான்கு. ஆயுர் வேதம், தனுர் வேதம், காந்தர்வ வேதம், சில்ப வேதம் என்பனவாகும்.

அ) **ஆயுர்வேதம்:-** ரிக் வேதத்தின் உபவேதம். இது மருந்து, மூலிகை போன்றவற்றைக் குறிப்பிடுகின்றது.

ஆ) **தனுர் வேதம்:-** யஜூர் வேதத்தின் உபவேதம். இது போர்க்கலையை விவரமாகக் கூறுகின்றது.

இ) **காந்தர்வ வேதம்:-** சாம வேதத்தின் உபவேதம். இது இசை, நடனம், ஆகிய நுண்கலைகளை விளக்குகின்றது.

ஈ) ***சில்ப வேதம்:-*** அதர்வண வேதத்தின் உபவேதம். இது கட்டடக் கலையை விவரிக்கின்றது.

## 4. 2. முற்கால வேதகாலப் பண்பாடு

மிகப்பழமையும் பெருமையும் வாய்ந்த ரிக் வேதகாலத்தில் வாழ்ந்த மக்களின் அரசியல், பொருளாதார சமூக, சமய வாழ்க்கை - முறை மற்றும் மக்களது இலக்கிய கலை மேம்பாட்டையும் குறிப்பதே பண்பாட்டின் வெளிப்பாடு ஆகும்.



### 4. 2. 1. அரசியல் அமைப்பு

இந்தியாவில் குடியேறிய ஆரியர்கள் இக்காலத்தில் பல குழுக்களாகப் பிரித்து வேறுபட்ட இடங்களில் வாழ்ந்தனர். இக்குழுக்களுக்கு 'ஜனா' என்று பெயர். ஒவ்வொரு ஜனாவிற்கும் ஓர் அரசன் இருந்தான். அவன் பொதுவாக 'இராஜன்' என்றழைக்கப்பட்டான். அரச உரிமை பெரும்பாலும் பரம்பரை வழி வந்து கொண்டிருந்தது. சில சமயங்களில் சிறந்த அரசன் அரச மற்றும் பிரபுக்கள் குடும்பத்திலிருந்து தேர்வு செய்யப்பட்டான்.

#### *4. 2. 1. 1. அரசியல் பிரிவுகள்*

குடும்பம் அல்லது குலம் என்பது ஓர் அரசின் சிறு தொகுதி. அதன் தலைவன் '*குலவன்*' என்றழைக்கப்பட்டான். பல குடும்பங்கள் சேர்ந்தது '*கிராமம்*'. அதன் தலைவன் '*கிராமணி*' என்று அழைக்கப்பட்டான். பல கிராமங்கள் சேர்ந்து *விஷு* எனவும் பல விஷுக்கள் சேர்ந்தது ஒரு ஜனம் என்றும் அழைக்கப்பட்டது.

அதிகாரம்:- அரசனிடம் நிதி, நீதி ஆகிய இரண்டும் இருந்தன. அரசர்கள் சரியாக இயங்காத போது அவர்களை விலக்கி தகுந்தவர்களை தேர்ந்தெடுக்கும் அதிகாரம் மக்களுக்கு இருந்தது. அரசனுக்கு உதவ அமைச்சர்கள் நியமிக்கப்பட்டனர். அமைச்சர்கள் அரசனுக்கு பல்வேறு துறைகளில் அறிவுரை கூறி நல்வழிகாட்டி நல்லாட்சி நடைபெற உதவினர்.

#### *4. 2. 1. 2. அரச சபைகள்*

அரசனது அதிகார வரம்பு '*சமிதி*', 'சபா' என்ற இரு அவைகளின் கட்டுப்பாட்டில் இருந்தது. அரசன் தான் விரும்பியவாறு எந்த முடிவும் எடுக்கமுடியாத நிலை இருந்தது.

#### *4. 2. 1. 3. சமிதி என்னும் சட்டமன்றம்*

பொதுவாக மக்கள் மன்றம் சமிதி என்று அழைக்கப்பட்டது. மக்கள் மன்றத்தில் கலந்து கொள்வதும், அதில் கருத்துகளை விவாதித்து முடிவுமேற்கொள்வதும் அரசனின் கடமையாக கருதப்பட்டது. மேலும் அரசனை தேர்ந்தெடுப்பதும் அதன் முக்கிய பணிகளில் ஒன்று என்று பேராசிரியர் ஜெய்ஸ்வால் கூறுகிறார்.

www.tntextbooks.in

#### *4. 2. 1. 4. சபா என்ற முதியோர் அவை*

முதியோர்கள் அல்லது பிரபுக்களின் அவையாக இது விளங்கியது. சபாவின் கூட்டங்களை சட்டமன்ற அறையில் கூட்டப்பட்டன. அரசியல் மற்றும் அரசியல் அல்லாத பொதுவாழ்வு முறைகளை நடைமுறைப்படுத்த உதவியது.

நீதி:- அரசனே நீதி வழங்குவதைப் பொறுத்தமட்டில் உயர்ந்தோனாகத் திகழ்ந்தான். குற்றங்கள் குறைந்து காணப்பட்டன. கடுமையானக் குற்றங்களுக்கு மரண தண்டனையும், சில குற்றங்களுக்கு சிறைத் தண்டனையும் அபராதமும் விதிக்கப்பட்டன.

### 4. 2. 2. சமுதாய நிலை

#### *4. 2. 2. 1. குடும்பம்*

ரிக் வேத காலத்தில் மக்கள் கிராமங்களில் வாழ்ந்தார்கள். சமுதாயத்தில் மிகச் சிறிய கூறான குடும்பமே வாழ்வின் அடிப்படை அலகு. ஒவ்வொரு குடும்பத்திற்கும் அக்குடும்பத்தின் மூத்தவனே தலைவனாக இருந்தான். அவன் "*கிருஹபதி*" என்றழைக்கப் பட்டான். தவறுகளைக் கண்டிப்பதும் சமயச் சடங்குகளை செய்து நல்வாழ்வு வாழ்வதும் குடும்பத் தலைவனின் கடமையாக கருதப்பட்டது.

#### *4. 2. 2. 2. பெண்கள் நிலை*

சமுதாயத்தில் பெண்கள் மதிப்பும் மரியாதையும் மிக்கவராய் இருந்தனர். திருமணம் தூய்மையானதாகவும், புனிதமானதாகவும் பிரிக்க முடியாத ஒன்றாகவும் மதித்து போற்றப்பட்டது. குழந்தை மணம் இல்லை. விதவை மணம் ஆதரிக்கப்பட்டது. சதி அல்லது உடன்கட்டையேறும் வழக்கம் இல்லை. மகளின் திருமணத்தை அவளது இசைவினைப் பெற்றே பெற்றோர் முடித்து வைத்தனர். இக்கால மகளிர்அறிவும் பண்பாடும் ஒருங்கே அமையப் பெற்றவராய் விளங்கினர்.



#### *4. 2. 2. 3. கல்வி*

கல்வி வாய்மொழியாகவே அமைந்தது. கல்வி மாணவரின் உடல், உயிர் இவற்றின் வளர்ச்சிக்கு வழி செய்தது. கல்வியின் குறிக்கோள் பேரறிவு அல்லது வீடுபேற்றை அடைவது என்ற உயரிய நிலை இருந்தது.

#### *4. 2. 2. 4. உணவு, உடை*

ஆரியர்கள் எளிமையான வாழ்வை மேற்கொண்டனர். கோதுமை முதலான தானியங்கள், பழவகைகள், பால், வெண்ணெய், தயிர், தேன் போன்றவை அவர்களது உணவுப் பொருள்களாகும். வேள்விக் காலத்தில் அவிர்பாகமாக இறைச்சியையும், சோம, சுரா பானங்களையும் அருந்தினர்.

பருத்தி, உரோமம், மான்தோல், கம்பளம் போன்றவற்றால் ஆன ஆடைகளை அணிந்தனர். பொதுவாக ஆடையை வஸ்திரம் என்றழைத்தனர். கீழாடையை 'நிவி' என்றும் மேலாடையை 'ஆதிவாஸ்' என்றும் அழைத்தனர். பொதுவாக தலைப்பாகை அணிந்தனர். அழகிய பூ வேலைப்பாடு கொண்ட, தங்க வேலைப்பாடமைந்த ஆடைகளை விரும்பி அணிந்தனர்.

#### *4. 2. 2. 5. விளையாட்டும் பொழுதுபோக்கும்*

தேர், குதிரைப் பந்தயம், சூதாட்டம், நடனமாடுதல், இசைபாடுதல் அக்கால மக்களின் பொழுது போக்குச் செயல்களாக இருந்தன. இசைக் கருவிகளின் பயனை அவர்கள் அறிந்திருந்தனர்.

### 4. 2. 3. பொருளாதார நிலை

வேளாண்மையே முக்கிய தொழிலாக இருந்தது. கோதுமை, பார்லி, நெல், பருத்தி, எண்ணெய் வித்துக்கள் போன்றவற்றை பயிரிட்டனர். நீர்ப்பாசனத்திற்குரிய நீர் கிணறுகள், கால்வாய்கள், ஏரிகள் மூலம் பெறப்பட்டது. மக்கள் பெரும்பாலும் மழையையே நம்பி இருந்தனர். இரு எருதுகளை நுகத்தடியில் இணைத்து நிலத்தை நன்கு உழுது விளைநிலமாக்கிப் பயிரிட்டனர்.

www.tntextbooks.in

பசுவைப் புனிதமானத் தெய்வமென மதித்துப் போற்றிப் பாதுகாத்தனர். கால்நடை வளர்த்தல் இவர்களது மற்றொரு தொழிலாகும். ஒருவரது செல்வத்தின் மதிப்பு அவர் பெற்றிருந்த பசுக்களின் எண்ணிக்கையையும் அவற்றின் பயன்பாடுகளையும் அடிப்படையாகக் கொண்டு மதிப்பிடப்பட்டது. வீடுகளில் பசுக்கள், எருதுகள், குதிரைகள், ஆடுகள், கழுதைகள், நாய்கள் முதலியன வீட்டு விலங்குகளாக வளர்க்கப்பட்டன.

#### *4. 2. 3. 1. தொழிலும், வணிகமும்*

இக்காலத்தில் வேளாண்மையைத் தவிர பிற தொழில்களையும் வாணிகத்தையும் மக்கள் மேற்கொண்டனர். பண்டமாற்று முறை வழக்கத்தில் இருந்தது. புனிதமான பசுவினை அளவு கோலாகக் கொண்டு பண்டமாற்று வாணிகம் நடந்தது. வணிகம் பெரும் பகுதி தரை வழியே நடைபெற்றது. கடல் வணிகத்தையும் அறிந்திருந்தனர். கப்பல்களையும், படகுகளையும் போக்குவரத்திற்கும், வணிகத்திற்கும் பயன்படுத்தினர். அக்காலத்தில் பொற்கொல்லர், தச்சர், கருமார், நெசவாளர் என பல தொழில் புரிவோர் வாழ்ந்து சிறந்தனர்.

### 4. 2. 4. *சமயம்*

இவர்களது சமயம் எளிமையானது. இயற்கையை தெய்வமாக வழிபட்டனர். வானம், சூரியன், இந்திரன், வாயு வருணன், பிருதிவி போன்ற எண்ணற்ற கடவுளர்களை வழிபட்டனர். ஆரியர்கள் தெய்வங்களை,

அ) விண்ணுலகத் தெய்வங்கள்

ஆ) பனிமண்டலத் தெய்வங்கள்

இ) மண்ணுலகத் தெய்வங்கள்

என வகைப்படுத்தினர். தெய்வங்களை மகிழ்விக்க வேள்விகளைச் செய்தனர். பால், நெய், தானியங்கள், மாமிசம், சோமா என்னும் பானம் முதலானவற்றை கடவுளுக்கு காணிக்கையாக்கினர். மனித உயிர்களைப் பலியிடும் வழக்கம் இல்லை. ஆலயங்கள் இருந்ததாக சான்றுகள் இல்லை. மோட்சத்தை அடைய கடவுளை வணங்கி வேள்விகளைச் செய்தனர்.



பொதுவாக கூறுமிடத்து ஆரியர்கள் இயற்கையோடு இயைந்த வாழ்வு மேற்கொண்டனர். எளிமையும் நேர்மையும் இறையுணர்வும் மிக்கவராய்த் திகழ்ந்தனர். நல்வாழ்வு வாழ்ந்து நற்கனி அடைவதை தம் வாழ்வின் உயரிய குறிக்கோளாகக் கொண்டு வாழ்ந்தனர்.

## 4. 3. பிற்கால வேதகாலப் பண்பாடு

தொடக்கம்:- ரிக் வேதத்தைத் தொடர்ந்து சாம, யஜூர், அதர்வண வேதங்களும் இலக்கியச் செறிவுமிக்க சம்ஹிதைகள் பிராமணங்கள், ஆரண்யங்கள், உபநிடதங்கள் தோன்றி பண்பாட்டை உயர்வடையச் செய்த காலமே பிற்கால வேத காலமாகும்.

### 4. 3. 1. *இலக்கியம்*

இக்காலத்தில் தோன்றிய இலக்கியங்களை விரிவாக முதலில் கண்டோம். மேலும் வேத அங்கங்கள் என்ற ஆறும் தோன்றி வளர்ச்சியடைந்தன.

| | | | |
|---|---|---|---|
| அ) | சிட்சை | - | எனப்படும் ஒலியியல் |
| ஆ) | கல்பம் | - | எனப்படும் சடங்கியல், சமய ஒழுக்கம் |
| இ) | வியாகரணம் | - | எனப்படும் இலக்கணம் |
| ஈ) | நிருக்தம் | - | எனப்படும் சொல்லாக்க விளக்கம் |
| உ) | ஜோதிடம் | - | எனப்படும் வானநூல் |
| ஊ) | சந்தம் | - | எனப்படும் சீர். என்ற ஆறாகும். |

### 4. 3. 2. *அரசியல் துறை*

முடியாட்சியே வேத கால இறுதியில் நிலையான ஆட்சி முறையாக அமைந்தது. அரசுரிமை பரம்பரை வழி வந்தது. முடியரசு முறை பெரும்பாலும் இருந்த போதிலும் சில பகுதிகளில் குடியாட்சி முறையைக் காண முடிந்தது. அரசர்களைத் தேர்வு செய்யும் முறையும் இருந்ததாக சில அறிஞர்கள் கூறுகிறார்கள். அரசர்கள் மிகுந்த அதிகாரம் பெற்றிருந்தாலும் அவர்களது அதிகாரத்திற்கு சில தடைகளும், வழிகாட்டி நெறிகளும் காணப்பட்டன. சமிதி, சபா அமைப்புகளும் காணப்பட்டன.

www.tntextbooks.in

### *4. 3. 2. 1. அமைச்சர்களும் அலுவலர்களும்*

இக்காலத்தில் அரசனுக்குத் துணை புரியவும் நல்வழி காட்டவும் அமைச்சர்கள் மற்றும் அலுவலர்கள் எண்ணிக்கை பெருகியது. அவற்றுள் சில.

புரோகிதர், கருவூலத்தார், வரிவசூலிப்போர், தேரோட்டி, அரண்மனை அக வினைஞர், படைத்தலைவர், கிராமணி, சடபதி (நூறு கிராமங்களை ஆள்வோர்), சட்சிவன் - (அமைச்சர்) என்போர் சிலராவர்.

### *4. 3. 2. 2. நீதிமுறை*

அரசர்கள் நீதி வழங்குவதில் முக்கிய பொறுப்பு ஏற்றனர். கொலைக் குற்றம் கடுமையானதாக கருதப்பட்டது. அதிலும் பிராமணரைக் கொலை செய்வது பெருங்குற்றமாக கருதப்பட்டது. அரசத்துரோகம் மிகக் கடுமையானதாக கருதப்பட்டு மரண தண்டனை விதிக்கப்பட்டது. சில சிக்கலான வழக்குகளை மன்னர் சபாவின் துணை கொண்டு தீர்ப்பளித்தார்.

### *4. 3. 2. 3. வருவாய்*

முற்கால வேத காலத்தில் மக்களிடமிருந்து முறையான வரி வசூலிக்கப்பட வில்லை. இக்காலத்தில் அது சீராக்கப்பட்டது. வரிசூலிக்க "பஹதுஹன்" என்ற அலுவலர் நியமிக்கப்பட்டார். அதர்வண வேதத்தல் கூறப்பட்டிருப்பது போல் வருவாயில் ஆறில் ஒரு பங்கு தானியமாகவோ விலங்குகளாகவோ வசூலிக்கப்பட்டது.

### 4. 3. 3. சமுதாய நிலை

இக்காலத்தில் சாதிப் பாகுபாடு தொழில் அடிப்படையில் காணப்பட்டது. அவையாவன. பிராமணர், க்ஷத்ரியர், வைசியர், சூத்திரர் ஆகும்.

### *4. 3. 3. 1. பிராமணர்கள்*

கல்வி கற்பது, சமயச் சடங்குகள் செய்வது, வெகுமதிகளைப் பெறுவது, சமுதாயத்திற்கு நல்வழி காட்டுவது. உலக நன்மைக்காக இறைவனை தியானிப்பது இவர்களது வாழ்வியல் ஒழுக்கம்.



### *4. 3. 3. 2. க்ஷத்திரியர்கள்*

நாட்டை ஆள்வதும், நாட்டைக் காப்பதும் இவர்களுக்குரிய கடமைகள். வீரம் பொருந்தியவராயும் ஆளுந்தன்மை உடையோராகவும் திகழ்ந்தனர். தன்னலம் கருதாமல் பிறரைக் காக்கும் கடமை உணர்வு மிக்கவர்கள்.

### *4. 3. 3. 3. வைசியர்கள்*

வாணிகத்திலும், பொருளியியல் நடவடிக்கைகளிலும் ஈடுபாடு உடையவர்கள். நேர்மையான வாணிகம் செய்து அறவழியில் பொருளீட்டுவதை குறிக்கோளாகக் கொண்டு வாழந்தனர்.

### *4. 3. 3. 4. சூத்திரரர்கள்*

முதல் மூன்று பிரிவினர்களுக்கும் வேண்டிய பணிகளைச் செய்தல், நிலத்தை உழுது பயிரிடுதல் இவர்களது பணிகளாகும். தமக்கு இடப்பட்ட பணியை நிறைவேற்றி உண்டு வாழும் சுக வாழ்க்கையை அனுபவித்தனர்.

### 4. 3. 4. ஆசிரம முறை

மனிதனின் நிறை வாழ்வு என்பது நூறு ஆண்டுகளாக கருதப்பட்டது. அதனாலேயே பெரியோர்கள் ஆசீர்வதிக்கும் போது சமஸ்கிருதத்தில் "ஸதமானம் பவது" சதம் - என்றால் நூறு - நூறாண்டுகள் வாழ்வாயாக! என்று வாழ்த்துகின்றனர். இந்நூற்றாண்டுகால வாழ்வு நான்கு பகுதிகளாக அல்லது நிலைகளாக பிரிக்கப்படுகிறது. இதனை ஆசிரமம் என்று குறிப்பிட்டனர். அவை முறையே

1). பிரம்மச்சர்யம் 3). வனப் பிரஸ்தம்

2). கிரஹஸ்தம் 4) சந்நியாசம் என்பனவாகும்.

### *4. 3. 4. 1. பிரம்மச்சர்யம்*

தன்னடக்க நிலை அல்லது மாணவப் பருவம் ஆசிரியர் களுக்குக் கட்டுபட்டு அவர்களுக்கு பணிவிடைகளை செய்து

www.tntextbooks.in

பயின்று சமயச் சடங்குகளை செய்து நன்னடத்தை உடையவராய் திகழும் மாணவப் பருவமே பிரம்மச்சரியம்.

#### *4. 3. 4. 2. கிரஹஸ்தம்*

இல்லற வாழ்வில் ஈடுபட்டு அறம் பிறழாமல் தான தர்மங்களைச் செய்து வாழ்தல், மக்களை பெற்றெடுத்து கல்வி புகட்டி, நன்னிலை அடையச் செய்தல். அவர்களுக்கு மணம் செய்வித்து நல்வாழ்வு வாழச் செய்வதுமான காலம். இருபத்தைந்துக்கு மேற்பட்டு ஐம்பதுக்கு உட்பட்ட காலம்.

#### *4. 3. 4. 3. வனப்பிரஸ்தம்*

இல்லற வாழ்வில் கடமைகளை முறையாகச் செய்து முடித்தபின் மனைவியுடன் காட்டிற்கு சென்று தவ வாழ்வினை மேற்கொள்ளுதல். பொருளாசையை முற்றும் துறத்தலும் பாச பந்தங்களிலிருந்து படிப்படியாக விடுபடுதலும். இக்காலத்தில் ஆற்ற வேண்டிய கடமைகளாகும். சுருங்கக் கூறின் துறவற வாழ்க்கைக்கு ஆயத்தப்படுத்துதல் ஆகும். ஐம்பது வயதிற்கு மேல் எழுபத்தைந்து வயதுக்கு உட்பட்ட காலமாகும்.

#### *4. 3. 4. 4. சந்நியாசம்*

பந்த பாசங்களினின்று விடுபட்டு தன்னை வருத்தி துறவு மேற்கொள்ளுதல். இக்காலத்தில் இடம் விட்டு இடம் சென்று உடல் சுகத்தைத் துறந்து, கடவுளை தியானிப்பதும், தான் அறிந்த உண்மைகளையும் நீதிகளையும் மக்களுக்கு கூறுதலும் ஆகும். சமய வாழ்வில் மக்களை ஈடுபடச் செய்தல். ‘முற்றும் துறந்த நிலையே’ சந்நியாசமாகும். எழுபத்தைந்து வயதிற்கு மேற்பட்ட காலம்.

### 4. 3. 5. குடும்ப வாழ்வும் மணமுறையும்

அமைதியான குடும்ப வாழ்வே இக்காலத்தின் சிறந்த அம்சம். கலப்பு மணங்கள் ஏற்றுக் கொள்ளப்பட வில்லை. பலதார மணம், வரதட்சணை முறை, குழந்தை மணம், ‘சதி’ என்னும் உடன்கட்டையேறும் வழக்கம் போன்ற தவறான முறைகள் சமுதாயத்தில் இருந்தன. ஒரே இடத்திலும் உறவு முறையிலும் திருமணம் செய்வது தடுக்கப்பட்டது.



#### *4. 3. 5. 1. மகளிர் நிலை*

மகளிர் உயர்கல்வி பெற்றுச் சீரிய அறிவுடன் திகழ்ந்தனர். கார்கி, மைத்ரேயி போன்ற பெண்பால் தத்துவ ஞானிகள் வாழ்ந்ததாக அறிகிறோம். எனினும் மகளிர் ஆடவருக்கு சமமானவராக கருதப்படவில்லை. பெண் மகவின் பிறப்பு பெரும் வேதனை தருவதாகவும் ஆண்மகனின் பிறப்பு அளவில்லா மகிழ்ச்சி தருவதாகவும் கருதப்பட்டது. பெண்கள் புனிதச் சடங்குகள் செய்யவும், வேதங்களைக் கற்கவும் அனுமதியளிக்கப்படவில்லை. சொத்துரிமை அளிக்கப்படவில்லை. கற்பு நெறி போற்றப்பெற்றது.

#### *4. 3. 5. 2. உணவு, உடை மற்றும் பொழுது போக்குகள்*

உணவு மற்றும் உடையில் எவ்வித மாற்றமும் இல்லை. வீடு கட்டும் முறையில் சில மாற்றங்கள் இருந்தன். இறைச்சி உண்பது போற்றப்படவில்லை. சோமபானத்தை ஒரு சுவை நீராகக் கருதி அருந்தினர்.

குதிரைப் பந்தயம், தேரோட்டப் பந்தயம், வாய்ப்பாட்டுக் கருவி, இசை, நடனம், சூதாட்டம் போன்றவை முக்கிய கேளிக்கைகளாக இருந்தன.

### 4. 3. 6. பொருளாதார நிலை

#### *4. 3. 6. 1. வேளாண்மை*

வேளாண்மையே மக்களின் முக்கியத் தொழிலாக இருந்தது. செழிப்பான சமவெளிப் பகுதியில் இருமுறை சாகுபடி செய்தனர். நிலத்தை உழுதல், விதை விதைத்தல், அறுவடை செய்தல் போன்ற வேலைகளை ஆரியர்களும் செய்தனர். கோதுமை, பார்லி, நெய் போன்ற தானியங்களைப் பயிரிட்டனர். அளவற்ற நிலங்களைப் பெற்ற பிரபுக்கள் இருந்ததாக அறிகிறோம்.

#### *4. 3. 6. 2. கால் நடை வளர்ப்பு*

பசு மதிப்பீட்டு அலகாகத் திகழ்ந்தது. மக்கள் பெரும் எண்ணிக்கையில் பசுக்களை வைத்திருக்க விரும்பினர். அரசர்கள் பசு, காளைகள், குதிரைகள் அதிகம் பெற இறைவனைத் துதித்தனர்.

www.tntextbooks.in

யானையையும், வீட்டுவிலங்காக வளர்க்க முயன்றதாக அதர்வண வேதத்தால் அறிகிறோம்.

### *4. 3. 6. 3. வாணிகமும் தொழில் துறையும்*

தொழில் துறையில் நல்ல முன்னேற்றம் காணப்பட்டது. தச்சர், மீன் பிடிப்போர், உழவர், வீட்டு வேலை செய்வோர், வயல் வேலை செய்வோர், சமையல் தொழில் புரிவோர், கூடைமுடைவோர், கயிறு தயாரிப்போர், தேர் செய்வோர், ஆடை நெய்வோர், சலவை செய்வோர், பொற்கொல்லர், சாயமிடுவோர் என பல தொழில் புரிவோர் வாழ்ந்தனர். அழகிய ‘பூ வேலைப் பாடமைந்த’ ஆடைகளை அணிந்தனர். வெள்ளியினால் தயாரிக்கப்பட்ட பலவகை அணிகலன்களை அணிந்தனர். பண்டமாற்று முறையில் வாணிகம் செய்தனர். “நிஷ்கா” என்ற நாணயம் வழக்கத்தில் இருந்ததாக அறிகிறோம்.

### 4. 3. 7. கல்வி முறை

கல்வியின் குறிக்கோள் ஆன்மா, இறைவன் அல்லது பரம்பொருள் பற்றிய அறிவைப் பெறுவதே என்றிருந்தது. குருகுலக் கல்வி முறையில் 12 ஆண்டுகள் ஆசிரியருடன் தங்கி கல்வி பயின்றனர் ஆசிரியருக்கு வேள்வியில் உதவுதல், கால் நடையைப் பராமரித்தல், மேலும் குருவிற்கு வேண்டிய உணவை தேடி வருதல் இன்றியமையாதக் கடமைகளாகக் கருதப்பட்டன.

கல்வியில் பெரும் முன்னேற்றத்தை காணமுடிந்தது. பேச்சுப் போட்டிகள், பட்டி மன்றங்கள் நடத்தப்பட்டு பரிசுகள் அளிக்கப் பட்டன. கல்வி வாழ்க்கைக்கு உகந்ததாக படிப்படியாக மாற்றம் பெற்றது.

### 4. 3. 8. சமய நிலை

இக்காலத்தில் சடங்குகள், ஆன்மதத்துவக் கோட்பாடுகள் துறவுநிலை போன்றவை சமய வாழ்க்கையில் மாற்றங்களை தோற்றுவித்தன. “பிரம்மா,” “விஷ்ணு” “சிவன்” ஆகிய மும்மூர்த்திகளை வணங்கினர்.



### *4. 3. 8. 1. தவம்*

தவம் செய்வது சிறப்பானதாகக் கருதப்பட்டது. மனதையும், ஆன்மாவையும் தூய்மைபடுத்த தவம் பெருந்துணை புரிவதாகக் கருதினர். பேரறிவையும், மனித ஆற்றலுக்கு அப்பாற்பட்ட நிலையையும் அடைய தவம் உதவுவதாகக் கருதினர்.

### *4. 3. 8. 2. தத்துவம்*

சடங்குகளுடன் தத்துவக் கருத்துகளும் பெருகின. ஆன்மா, இறைவன், நரகம், மறுபிறவி கர்மவினை, சொர்க்கம், வீடுபேறு போன்றவை தத்துவத்தில் இடம்பெற்றன. மக்கள் இத்தகையத் தத்துவக் கருத்துகளை உணர்ந்து பின்பற்றி நற்கதியடைந்தனர். அரசர்களும், ஆட்சியாளர்களும் ஈடுபாடு கொண்டிருந்தனர். மேலும் இத் தத்துவக் கருத்துகள் வளரத் துணை புரிந்தனர்.

### *4. 3. 8. 3. ஆன்மாவும் பிரம்மமும்*

ஆன்மா உயிரின் அழியாத அடிப்படைக்கூறு. இவ் உண்மையை உபநிடதங்கள் ஏற்றுக்கொள்கின்றன. உடநிடதங்கள் சடங்குகளையும் வேள்விகளையும் ஏற்கவில்லை. ஆன்மாவின் முக்கிய குறிக்கோள் அழிவற்ற பரப்பிரம்மத்தை அடைவது. இதை உபநிடதமாக வாக்கியமான “தத்வமஸி” “நீ தான் அது” என்பதும் அகம் பிரம்மாஸ்மி “நான் பிரம்மம்” என்பதுமாகும். இப்பேருண்மையை அடைய உலக ஆசைகளும் ஆணவமுமே தடைகளாக உள்ளன என்ற கருத்து நிலவியது.

### *4. 3. 8. 4. வினை, வீடுபேறு, மறு பிறவி*

இக்காலத்தில் அவரவர் செய்கின்ற வினைக்கேற்ப வாழ்வு அமையும் என்ற கருத்து நிலவியது. வினையாவது நல்வினை, தீவினை எனப்பட்டது. இவ்விரு வினைகளில் இருந்து விடுபட்டு வீடுபேற்றை அடைவதே முக்கியம் என கருதப்பட்டது. இந்நிலை அடையாதவரை செய்வினைக்கேற்ப மறுபிறவி உண்டு என்ற கோட்பாடு இருந்தது.

இவ்வாறு முற்கால, பிற்கால வேத காலங்களில் கண்ட மக்களின் வாழ்க்கை முறைகள் சமய, தத்துவக் கோட்பாடுகள் அக்கால மக்களின் பண்பாட்டுக் கருவூலங்களாக அமைந்திருந்தன.

www.tntextbooks.in

## 4. 4. வேதங்களின் மேன்மையும் இன்றியமையாமையும்

### 4. 4. 1. பாரதப் பண்பாட்டின் மூல ஆதாரம் வேதங்களே

அ) வேதங்கள் காலம் கடந்தவை. மனிதனை மீறியவை. மனித சம்பந்தமே இல்லாமல் தோன்றியவை. எடுத்துக்காட்டாக புவியீர்ப்பு சக்தி என்ற சாதாரண சக்தி மனிதனுக்கு முன்னரே இருப்பது. இச்சக்தி எவ்வாறு என்று தோன்றியதோ அதுபோலத்தான் வேதங்களும். அந்த மனித சக்திக்கு மீறிய வேத உண்மைகளைக் கண்டறிந்தவர்கள் தான் ரிஷிகள்.

ஆ) வேதமாகிய ஒலியில் இருந்து தான் பிரபஞ்சம் - உலகம் தோன்றியதாகக் கருதப்படுகிறது.

இ) பிழையின்றித் திருத்தமாய் உச்சரிப்பதால் வேத மந்திரங்களுக்கு சக்தி ஏற்படுகிறது என்பதால் அவற்றைக் காதால் கேட்டு கற்பதே சிறந்தது. இதனாலேயே வேதங்களுக்கு 'சுருதி' என்ற பெயரும் தோன்றியது. மேலும் இதனால் தான் வேதங்களுக்கு 'எழுதாக் கிளவி' - எழுதப்படாமல் கேட்டு உணரத்தக்கவை என்னும் பெயர் நிலவி வருகிறது.

ஈ) வேதங்கள் எண்ணற்றவை. அதில் நம் ரிஷிகளுக்குத் தோன்றியவை நான்கு.

உ) வேதம் பல்வேறு உணர்வுகளைத் தூண்டக்கூடிய ஒலிகளை உடையது. வார்த்தைகளாயினும் மிக உயர்ந்த பொருள் உடையவை. உலக வாழ்க்கை, ஆன்மிக வாழ்க்கை இரண்டிற்கும் பயன்தரும் உபதேசங்கள் வேதத்தில் உண்டு. ஒவ்வொரு உயிரும் தோன்றி மடிகின்ற வரையில் எவ்வாறு வாழ்ந்தால் மனநிறைவை அடைய முடியும் என்பதற்கானத் தத்துவங்களைக் கொண்டது.

ஊ) தனிமனித வாழ்க்கை, சமூக வாழ்க்கை, தனிமனிதன் சமூகத்தில் எவ்வாறு நடந்து கொள்ளவேண்டும், பொது மக்களின் கடமை பற்றியெல்லாம் வேதங்கள் விளக்கியுள்ளன.



எ) "தன்னைத்தானே அறிந்து கொள்ளும்" ஆத்ம பலமே வேதத்தின் முக்கிய இலட்சியம் ஆகும். எனவே உபநிடதங்கள் "எல்லா வேதங்களும் சேர்ந்து ஒரு பொருளைத்தான் சொல்கின்றன" என்பதை விளக்குகின்றன.

இத்தகைய மேன்மை பொருந்திய வேதத்தைக் கற்றுணர்ந்து நம் வாழ்வில் பின்பற்றி உயர்வதே மனித வாழ்வின் குறிக்கோளாய் இருக்க வேண்டும்.

### 4. 4. 2. வேதங்களின் இன்றியமையாமை

வேதங்கள் இறைவன், ஆன்மா, உலகைப் பற்றி மட்டுமே கூறவில்லை. இவற்றோடு நெருங்கிய தொடர்புடைய மனித ஒழுக்கம் பற்றியும் விரிவாகக் கூறியுள்ளன. இறைவன் ஆன்மா பற்றி ஒருவன் எத்தகையக் கருத்துகளை கொண்டுள்ளானோ அவ்வாறே அவனது ஒழுக்கமும் அமையும். மேலும் இறைவன் ஆன்மா என உண்டு என்பதை ஏற்றுக்கொள்பவனுக்கும் ஏற்காதவனுக்கும் வேற்றுமைகள் இருந்தே தீரும்.

வேதங்கள் மனிதனின் கடமையை ஐந்தாகப் பிரித்துள்ளன: தெய்வம், ஞானிகள், பிதிரர், உடன்வாழும் பிற மாந்தர், மற்றும் இதர பிராணிகளுக்கும் தன்னால் இயன்றவற்றைச் செய்ய மனிதன் கடமைப்பட்டவன் என்கின்றன.

இதனையே வள்ளுவர்,

"தென்புலத்தார் தெய்வம் விருந்து ஒக்கல் தான் என்றாங்கு
ஐம்புலத்தாறு ஓம்பல் தலை".

என்பது குறிப்பிடத் தக்கது.

வேதங்களும் ஐந்து கடமைகளைக் கூறுகின்றன. குறளும் அதே ஐந்து கடமைகளை வலியுறுத்துகின்றது.

வேதங்கள் மனித வாழ்வியல் ஒழுக்கநெறிகளை முறைப்படுத்தி பின்பற்ற வேண்டுவன, செய்ய வேண்டுவன, தவிர்க்க வேண்டுவன என வகைப்படுத்திக் கூறுகின்றன.

www.tntextbooks.in

மேலும் சுயநலமின்மை, தியாகம், அன்பு, விருந்தோம்பல் ஆகியவற்றை இன்றிமையாத அறங்களாக வேதங்கள் கூறுகின்றன. சூதாடல், பிறன் மனை விழைதல், பொய் பேசுதல், மது அருந்துதல் ஆகியவற்றை பெரும் பாவச் செயல்களாக வேதங்கள் கண்டிக்கின்றன.

எனவே வேதங்கள் தனி மனித வாழ்விற்கும் சமுதாய வாழ்விற்கும் உரிய உயரிய கருத்துகளைக் கூறுவதால் மதித்து போற்றப்பட வேண்டிய அறிவுப் பெட்டகங்கள் என்பதை உணர்தல் அவசியம்.

## 4. 5. புராணங்கள்

இந்தியாவின் இருபெரும் இதிகாசங்களாகிய இராமாயணம், மகாபாரதம் தோன்றி இந்து சமயத்தின் தத்துவக் கோட்பாடுகளை பிரதிபலித்தன. கற்றறிந்த சான்றோரும், கல்வியறிவில்லாத பாமரமக்களும் அரிய உண்மைகளை உணரும் வண்ணம் செய்த பெருமைக்குரியன. இவ்விரு இதிகாசங்களும், புராணங்களும் நம் பண்டைய வாழ்க்கை நெறிமுறைகளை நாம் அறியும் வண்ணம் உதவுகின்றன. இனி இப்புராணங்கள் தோன்றிய காலம் மற்றும் அவற்றின் பண்புகள், நோக்கங்கள், உணர்த்தும் முக்கியக் கருத்துகளை விரிவாகக் காண்போம்.

### 4. 5. 1. புராணம் சொல் விளக்கம்

புராணம் என்பது வடமொழிச்சொல். இச் சொல்லுக்கு ‘பழமை’ என்பது பொருள். எனவே இவற்றில் கூறப்படும். செய்திகள் பழங்காலத்தைச் சார்ந்தவை எனக் கருதப்படுகின்றன. புராணம் என்ற சொல் பொதுவாகத் தொன்று தொட்டு வழங்கிவந்த தெய்விகக் கதைகளைக் குறிக்கின்றது. ‘புராணம்’ என்பது பழைய கதை என்று பொருள்படும்.

### 4. 5. 2. உணர்த்தும் செய்திகள்

புராணங்கள் பண்டைய வரலாற்றுப் பட்டியல்கள், மரபுரைக் கோவைகள், தத்துவம், யோகம், அனுபூதிநிலைகள் ஆன்மிகத்தை



உய்த்துணரும் நிலை போன்றவற்றை தன்னகத்தே கொண்டன. இக்கருத்துகளை அடிப்படையாகக் கொண்டு அவற்றை எளிமையாக உணர்த்தும் வண்ணம் நீண்ட அல்லது குறுகிய உரையாடல்கள் நிரம்பிய அறிவும் பெட்டகங்கள் எனலாம்.

### 4. 5. 3. காலம்

புராணங்கள் மிகப்பழமையானவை. எப்பொழுது தோன்றியன எனத் திட்டவட்டமாகக் கூற இயலாது. ஒவ்வொன்றும் வேறு வேறு கால வரையறையில் எழுந்ததாகத் தெரியவருகிறது. சில அறிஞர்கள் அவை உபநிடதங்களைப்போன்று பழமையானவை என்று கருதுகின்றனர். புராணகாலம் கி.பி. 300லிருந்து கி.பி. 1000க்கு உட்பட்டதென யு.எஸ்.சர்மா குறிப்பிடுகிறார். கி.பி. நான்காம் நூற்றாண்டிற்கும் கி.பி. ஆறாம் நூற்றாண்டிற்கும் இடைப்பட்டது என்று வேறு சிலர் கருதுகின்றனர். இப்புராணங்களில் மிகப் பழமையானதாக கருதப்படும் “வாயு புராணம்” கி.பி. நான்காம் நூற்றாண்டில் எழுதப்பட்டிருக்க வேண்டும் என்ற கருத்து நிலவுகிறது.

### 4. 5. 4. புராணப் பண்புகள்

பொதுவாகப் புராணங்களில் பின்வரும் ஐந்து கருத்துகள் இடம் பெற்றிருக்கும். இவற்றை “பஞ்சலட்சணங்கள்” என்று வழங்குவர். அவை முறையே:

1. படைப்பு (அண்டப்படைப்பு)
2. உலகின் படைப்பின் விரிவும், ஒடுக்கமும் (அடுத்து கீழுள்ள படைப்பு)
3. ஆதி வம்சாவளி - மன்வந்திரர்களைப் பற்றிய செய்தி
4. அக்காலச் சம்பவங்கள் - வரலாறு
5. சூரிய சந்திரகுல அரசர்களின் வம்ச விளக்கம் (அரச குடிவழிப்பட்டியல்).

### 4. 5. 5. புராணங்களின் எண்ணிக்கையும் எழுதியவரும்

புராணங்களைத் தொகுத்தவர் “வேதவியாசர்” எனவும், எழுதியவரும் இவரே என்ற மற்றொரு கருத்தும் நிலவுகிறது.

இப்புராணங்களின் தொகுப்பை உலகிற்குத் தெளிவு படுத்திக்காட்டிப் புரிந்துகொள்ளும் நிலையை ஏற்படுத்தியவர் "சூத புராணிகர்" எனவும் கூறுகின்றனர்.

புராணங்கள் மும் மூர்த்திகளின் அடிப்படையில் சிவபுராணம், விஷ்ணு புராணம், பிரம்ம புராணம் எனப் பிரிக்கப்பட்டுள்ளன.

***சிவ புராணங்கள்*** : இப்பத்தும் சிவபெருமானின்
பெருமையைக் கூறுவன.
சிவ புராணம் (எ) வாயு புராணம்
பவிஷ்ய புராணம்
மார்க்கண்டேய புராணம்
இலிங்க புராணம்
வராக புராணம்
மத்ஸ்ய புராணம்
கூர்ம புராணம்
பிரம்மாண்ட புராணம் என்பனவாம்.

***விஷ்ணு புராணம்*** - இந்நான்கும் திருமாலின் பெருமையை கூறுவன ஆகும்.

| | |
|---|---|
| வைனவம் எனப்படும் | விஷ்ணு புராணம் |
| பாகவதம் எனப்படும் | பாகவத புராணம் |
| நாரதீயம் எனப்படும் | நாரத புராணம் |
| காருடம் எனப்படும் | கருட புராணம் |

***பிரம்ம புராணங்கள்*** - இவ்விரண்டும் பிரம்மனின் பெருமையை விளக்குவன ஆகும்.

பிரம்மம் எனப்படும் பிரம்ம புராணம்

பதுமம் எனப்படும் பத்ம புராணம்

***அக்னி***யின் பெருமையக் கூறும் 'ஆக்னேயம்' எனப்படும் அக்னி புராணமும், ***சூரியனின்*** பெருமையைக் கூறும் பிரமை வர்த்தம் எனப்படும் பிரமைவர்த்த புராணம்.

ஆக இப்புராணங்கள் எண்ணிக்கை 'பதினெட்டு' என்பர்.



### தமிழ்ப் புராணங்கள்

பிற்காலத்தில் தமிழில் தோன்றியவை தமிழ்ப்புராணங்கள். சிவபெருமான் மனித உருவில் தோன்றி சிவனடியார்களுக்கு தீட்சை அளித்தும், துயரங்களை போக்கவும் செய்தார். இச்செயல்களை திருவிளையாடல் எனவும் இவற்றை இனிய தமிழில் நான்கு புராணங்களாக சுவாமி சிவானந்தர் கூறுகிறார். அவை முறையே 'சிவ புராணம்,' 'பெரிய புராணம்,' 'சிவபராக் கிரமம்' மற்றும் 'திரு விளையாடற் புராணம்' என்பனவாகும்.

பதினெண புராணங்களை ***'மகா புராணங்கள்'*** என்று வழங்குவர். இவற்றைத் தவிர பதினெட்டு புராணங்கள் உப புராணங்கள் என்றழைக்கப்படும். அவையாவன

| | | |
|---|---|---|
| சூரிய புராணம் : | கணேசபுராணம் | காளிகா புராணம் |
| கல்கி புராணம் | சனத்குமார புராணம் | நரசிம்ஹ புராணம் |
| துர்வாச புராணம் | வாசிஷ்ட புராணம் | பார்க்கவ புராணம் |
| கபில புராணம் | பராசர புராணம் | கம்ப புராணம் |
| நந்திகேஸ்வர புராணம் | பிருகத்தர்ம புராணம் | பரான புராணம் |
| பசுபதி புராணம் | மானவ புராணம் | முத்கலா புராணம் |

என்பன வாகும்.

### 4. 5. 6. புராணங்களின் நோக்கம்

புராணம் சமயக் கருத்துகளை கொண்ட இலக்கியம். புராணம் ஓர் அறிவியல், அது உலகின் தொடக்க காலம் முதல் வாழ்ந்து வரும் மக்களின் வாழ்க்கை நெறிமுறைகளையும் சீரிய பண்பாட்டையும் சிறந்த எடுத்துக்காட்டுகள் மூலமாகவும் கதைகள் வாயலாகவும் விளக்குகின்றன. கற்பவர்களை வாழ்வின் உயரிய நிலையை அடையத் தூண்டுகின்றன. ஆழ்ந்த நுண்ணிய கருத்துகளைச் சுவையான கதைகள் மூலம் மக்களின் மனதில் எளிதாக பதியச் செய்வதே இதன் தலையாய நோக்கம்.

வேதக் கட்டளைகளான "உண்மை பேசு" - ஸத்யம் வத "தர்மம் செய்" - தர்மம் சர என்பவனவற்றை எளிய நீதிக்கதைகள் வாயிலாக மக்கள் மனதில் உணர்த்தி கடைபிடிக்கச் செய்வது புராணத்தின்

www.tntextbooks.in

நோக்கமாகும். சமய நல்லறிவையும், இறை பக்தியையும் கலந்த தெய்விக உணர்வை வளர்ப்பது புராணங்களாகும்.

உலகின் படைப்பு, மனுவின் காலம், அரச மரபுகள் தலம் (இடப் பெருமை) தீர்த்தம் (புண்ணிய நீர் நிலைகள்) விரதம் (காப்பது விரதம்) மந்திரம், யோகம், பக்தி, ஞானம், கருமம், துதி, இறைவனை போற்றுதற்குரிய ஸகஸ்ர நாமம், அஷ்டோத்திரம், தருமம், சிவனின் திருவிளையாடல்கள் விஷ்ணு அவதாரங்கள் என பல்வேறு கருத்துகளை மக்கள் அறியும்படி செய்வதே நோக்கம் எனலாம்.

### புராணங்களின் இன்றியமையாமை

புராணங்கள் பழமை வாழ்ந்தவை என்றும் சமயக் கருத்துகளை மட்டுமே பிரதிபலித்தன எனவும் கொள்ளுதல் தவறு. புராணங்கள் வாழ்வின் பல்வேறு நிலைகளில் மக்களுக்கு பயன்படும் அரிய உண்மைகளை எளிமையாக ஏற்றுக்கொள்ளும் வண்ணம் கூறியுள்ளன.

1. புராணங்கள் தெய்வங்கள், அத் தெய்வங்கள் அவதாரங்கள் மூலம் நிகழ்த்திய அருஞ் செயல்களைக் கூறுகின்றன. அத்துடன் அரசியல், மருத்துவம், சடங்குகள், சமூக விதிமுறைகள் வேதாந்தம், தத்துவம், சமயம் என்ற பல்வேறு நிலைகட்கு நீண்ட விளக்கங்களைத் தருகின்றன.

2. பண்டைய நாகரிகத்தின் சிறப்புக் கூறுகள் என போற்றப்பட்டு இன்றும் உலகில் நிலைத்துள்ள உறுதிப் பொருள்களாகிய அறம், பொருள், இன்பம், வீடு ஆகியவற்றைப் பற்றித் தெளிவான கருத்துகளைத் தருகின்றன.

3. படைப்பு, அனுபூதி நெறி, விஷ்ணு புராணத்தில் கூறப்படும் "பரமாத்மாவிற்கு மேலானது ஏதுமில்லை" என்ற உயரிய கருத்துகள் புராணங்களில் இடம் பெற்றுள்ளன.

4. கர்ம வினைகளிலிருந்தும், அவற்றின் விளைவுகளில் இருந்தும் விடுபட்டு அமைதி பெறுவதற்கான வழிமுறைகளைக் கூறுகின்றன.



5. அக்கால மக்களின் வாழ்க்கை, அரசு முறை முதலானவற்றை அறியப் பெருந்துணை புரிகின்றன.

6. புராணங்கள் கடவுள் எங்கும் இருக்கிறார், அவருக்குப் பல திருநாமங்கள் உண்டு, மனித இதயத்தில் கடவுள் இருக்கிறர் என்ற கருத்துகளை விளக்கிக் கூறுகின்றன. பக்தன், சத்யம், தருமம், புலனடக்கம், தெய்வபக்தி, சகிப்புத் தன்மை, தன்னம்பிக்கை ஆகிய குணங்களை வளர்த்துக் கொள்ள வேண்டும். இக்குணங்களுக்கு எடுத்துக்காட்டுகளாக இராமன், கண்ணன், அர்ச்சுனன், ஹனுமன், சபரி, கஜேந்திரன் போன்ற பாத்திரங்கள் படைக்கப்பட்டுள்ளன.

இத்தகைய நல்ல நூல்களைப் படிப்பதன் மூலம் நல்ல குடிமக்கள் உருவாக்கப்படுகிறார்கள். அரிச்சந்திர நாடகத்தைப் பார்த்து மகாத்மா காந்தியும், புராணக் கதைகளை கேட்டு இராம கிருஷ்ணரும், விவேகானந்தரும், சிவாஜியும் உருவானதாக வரலாறு கூறுகின்றது. பொதுவாக மக்கள் அதிகமாக தம் வாழ்வியல் உயரிய நெறிகளை எளிதாகப் புரிந்துகொண்டு பின்பற்ற உதவுவன புராணங்களே என்றால் அது மிகையாகாது.

## 4. 6. நவீன காலத்திற்கு வேதங்கள் மற்றும் புராணங்களின் ஏற்புடைமை

வேதங்களில் கூறப்பட்டுள்ள அரிய உண்மைகள் இன்றைய உலகில் அறிவியல் உண்மைகளோடு மிகவும் ஏற்படையனவாய் காணப்படுகின்றன. மேலும் இன்றைய வாழ்வின் அடிப்படைப் பண்பாட்டுக் கூறுகளையும் பிரதிபலிக்கின்றன.

1. புவியின் வயது, விண்வெளிகளின் எல்லைகள், சூரியனின் உட்பகுதி, வானநூல் பற்றிய கருத்துகளை வேதங்களும், புராணங்களும் கூறியுள்ளன. அவை அனைத்தும் இன்றைய அறிவியல் உலகால் ஏற்றுக்கொள்ளப்பட்ட உண்மைகளாகும்.

2. ஆயுர்வேதம் எனப்படும் மருத்துவ இயல், தனுர், வேதம் எனப்படும் போர்க்கலை, காந்தர்வ வேதம் எனப்படும் நுண்கலை ஆகிய மூன்றும் வேதங்களாலும், இதிகாசங்களாலும்

www.tntextbooks.in

விளக்கப்படுகின்றன. இன்றைய அறிவியல் கண்டுபிடிப்புகளும் இதனை ஏற்றுக்கொள்கின்றன.

3. மருத்துவத்துறையில் உயர்ந்த நிலையாக இன்று உறுப்புகளை மாற்றும் அறுவைச் சிகிச்சையைத் தமிழ்ப் புராணம் கூறுகிறது. நாயன்மார்களுள் ஒருவரான திண்ணனார் எனப்பெற்ற கண்ணப்பர் தன் இறைபக்தி மிகுதியால் சிவபெருமானின் கண்ணில் இருந்து வழியப்பெற்ற இரத்தத்தை நிறுத்த தன் ஒரு கண்ணைப் பெயர்த்து அப்பியதாகவும் மேலும் மற்றொரு கண்ணிலிருந்து இரத்தம் வர உடனே மறு கண்ணைப் பெயர்த்து அப்பி இறைவனின் துயரை போக்கியதாகவும் அறிகிறோம்.

4. சித்த வைத்தியம் என்ற முறை ஆன்மிகத்தையும் மருத்துவத்தையும் இணைக்கிறது.

5. மூலிகை மருத்துவம் பற்றிய தெளிவான அறிவை ஆயுர்வேத சாஸ்திரம் கூறுகிறது.

6. உலோக வியல் பற்றிய கருத்துகள் வேதங்களில் தெளிவாகக் கூறப்பட்டுள்ளன.

7. காலக் கணக்குக்கு உதவும் கணிதசாஸ்திர அறிவும் வேதத்தில் கூறப்பட்ட வாய்பாடேயாகும்.

8. விண்வெளியில் காணப்படும் பல்வேறு கிரகங்கள் நட்சத்திரங்கள் பற்றி விளக்கமான செய்திகள் வேதத்தில் காணப்படுகின்றன.

9. நியாய வைசேடிகம் என்ற அணு விஞ்ஞானம் அணுவின் அமைப்பையும், தன்மையையும், ஆற்றலையும் குறிப்பிடுகின்றது.

10. வேதத்தில் இந்தியாவின் இருப்பிடம் புவியியல் வல்லுநர்களால் கூறப்பட்டுள்ள அட்ச, தீர்க்க ரேகைகள் தவறாமல் கூறப்பட்டுள்ளன. கிரஹணங்கள் சம்பவிக்கின்ற காலத்தை முன்கூட்டியே கணக்கிடும் கலையை வேதங்கள் விளக்கிக் கூறுகின்றன.



இவ்வாறே வாழ்வில் இன்றியமையாத அறக்கருத்துகள் பலவற்றையும் வேதங்கள் தெளிவாகக் கூறுகின்றன. மனித நேயமே வாழ்வின் உயர்ந்த நெறி என்பதை உலகு இன்று போற்றுகின்றது. ஆனால் மிகப்பழமையான வேதங்களோ தாவரங்கள், விலங்குகள் முதலானவற்றையும் புனிதமாகப் பேணி வளர்க்க வேண்டும் என்கின்றன. இச் செயலை மனித நேயத்திற்கு அப்பாற்பட்ட ‘ஜீவகாருண்ய ஒழுக்கம்’ எனலாம்.

“வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடினேன்,”

என்ற வள்ளலார் வாக்கு இதனை மெய்ப்பிக்கின்றது. இவ்வாறு நம் நடைமுறை வாழ்வில் நடைபெறும் ஒவ்வொரு நிகழ்விலும் வேதங்களும், புராணங்களும் உணர்த்தும் பண்பாட்டு நெறிகள், அறிவியல் பூர்வமாகவும் ஆன்மிக உணர்வாகவும் மிளிர்கின்றன.

www.tntextbooks.in

## பயிற்சி வினாக்கள்

### அ. ஓரிரு வரிகளில் விடையளி

1. ‘வேதம்’ என்ற சொல்லின் பொருள் யாது?
2. தமிழில் ‘வித்’ என்னும் சொல்லின் பொருள் என்ன?
3. வேதங்கள் எத்தனை? அவையாவை?
4. முற்கால வேதகாலம் எனப்படுவது யாது?
5. பிற்கால வேதகாலமாவது யாது?
6. இந்தோ ஆரியர்கள் குறிப்பு வரைக.
7. ஆரியவர்த்தம் என்றால் என்ன?
8. பிராமணங்களில் கூறப்படும் செய்திகள் யாவை?
9. ‘நான்கு வேதங்கள்’ யாவை?
10. ‘உபவேதங்கள்’ யாவை?
11. ‘ஜனா’ என்றால் என்ன?
12. கிராமத் தலைவன் எவ்வாறு அழைக்கப்பட்டான்?
13. ரிக் வேத கால விளையாட்டு, பொழுதுபோக்குகள் யாவை?
14. பிற்கால வேதகாலத்தில் தோன்றிய இலக்கியங்கள் யாவை?
15. ‘வேத அங்கங்கள்’ யாவை?
16. பிற்கால வேதகாலத்தில் வரிவசூல் செய்தவரின் பெயரைக் கூறு.
17. பிற்கால வேதகாலத்தில் குடும்ப வாழ்வு, மணமுறை பற்றி எழுதுக.
18. பிற்கால வேதகாலத்தில் சிறந்து விளங்கிய பெண்மணிகள் இருவரைக் கூறுக.
19. பிற்கால வேத கால மக்களின் பொழுது போக்குச் செயல்கள் யாவை?
20. தவத்தால் அடையும் நன்மைகள் யாவை?
21. தத்துவக் கருத்துகள் மக்களுக்கு உணர்த்துவன யாவை?
22. இருவினைகளாகக் கூறப்படுவன யாவை?



23. பிற்கால வேதகால மக்களின் பண்பாட்டுக் கருவூலங்களாக அமைந்தவை யாவை?
24. இந்தியாவின் இருபெரும் இதிகாசங்கள் எவை?
25. ‘புராணம்’ என்ற சொல்லின் பொருள் யாது?
26. புராணங்களில் மிகப் பழமையானது எது?
27. புராணங்களைத் தொகுத்தவர் யார்?
28. ‘புராணங்கள்’ எவ்வாறு பிரிக்கப்பட்டுள்ளன?
29. விஷ்ணுபுராணங்கள் யாவை?
30. ‘ஆக்னேயம்’ என்றால் என்ன?
31. ‘பிரம்மபுராணங்கள்’ எவை?
32. ‘பிரமைவர்த்த புராணம்’ என்பது யாது?
33. புராணத்தின் நோக்கம் யாது?
34. வேதங்களில் காணப்படும் அறிவியல் கண்டுபிடிப்புகள் யாவை?

### ஆ. ஒரு பத்தி அளவில் அல்லது பத்து வரிகளுக்கு மிகாமல் விடையளி

1. வேத இலக்கியங்கள் யாவை? அவற்றை வகைப்படுத்து
2. ‘சம்ஹிதைகள்’ - விவரி.
3. ஆரண்யகங்களின் வாயிலாக நாம் அறிவன யாவை?
4. ‘உபநிடதங்கள்’ - விளக்குக.
5. ‘சுருதி’, ‘ஸ்மிருதி’ பற்றி நீவிர் அறிவன யாவை?
6. வேதங்களின் தோற்றம் பற்றிய கருத்துகளை கூறு?
7. உபவேதங்கள் கூறும் செய்திகளைத் தொகுத்துக் கூறுக?
8. ‘சமிதி’, ‘சபா’ பற்றி விவரி.
9. ரிக் வேத கால பொருளாதார நிலையை விளக்குக?
10. முற்கால வேதகாலத் தொழில் - வணிகம் பற்றி குறிப்பு வரைக.
11. ரிக் வேதகால சமயநிலை விளக்குக.
12. பிற்கால வேதகாலத்தில் நிலவிய அரசியல் முறையை விவரி.

13. பிற்கால வேதகாலத்தில் மகளிர் நிலை எவ்வாறு இருந்தது?
14. ஆன்மா, பிரம்மம் பற்றிய பிற்கால வேத கால கருத்துகள் யாவை?
15. புராணம் உணர்த்தும் செய்திகள் யாவை?
16. புராணங்கள் தோன்றிய காலம் பற்றி அறிவன யாவை?
17. 'பஞ்சலட்சணங்கள்' பற்றி ஒரு பக்க அளவில் விடையளி
18. 'சிவபுராணங்கள்' யாவை?
19. 'தமிழ்ப் புராணங்கள்' பற்றிக் கூறு.
20. புராணங்களின் நோக்கங்கள் யாவை?
21. 'ஜீவகாருணிய ஒழுக்கம்' என்றால் என்ன?

### இ. ஒரு பக்க அளவில் அல்லது முப்பது வரிகளுக்கு மிகாமல் விடையளி

1. நான்கு வேதங்களில் கூறப்படும் செய்திகளைத் தொகுத்துக் கூறுக?
2. ரிக் வேதகால அரசியலமைப்பை விவரி.
3. ரிக்வேத கால சமுதாய நிலையை விவரி.
4. பிற்கால வேதகாலத்தில் சமுதாயநிலைப் பற்றித் தொகுத்து எழுதுக?
5. பிற்கால வேதகால மக்களின் பொருளாதார நிலைபற்றி விளக்குக.
6. பிற்கால வேதகால சமயநிலைப் பற்றி நீவிர் அறிவன யாவை?
7. பதினெண் புராணங்கள் யாவை? வகைப்படுத்துக.
8. புராணங்களில் இன்றியமையாமையை விவரி.

### ஈ. நான்கு பக்கங்களுக்கு மிகாமல் விடையளி

1. முற்கால வேதகாலப் பண்பாடு பற்றி தொகுத்துக் கட்டுரை வரைக.
2. பிற்கால வேதகாலப் பண்பாடு பற்றிய செய்திகளைக் கட்டுரை வடிவில் விளக்குக.
3. வேதத்தின் மேன்மை இன்றியமையாமையைப் பற்றி கட்டுரை வரை.
4. நவீன காலத்திற்கு வேதங்கள், புராணங்களின் ஏற்புடைமையை விவரி.

www.tntextbooks.in

# 5. இந்தியப் பண்பாட்டிற்கு தமிழ்நாட்டின் கொடை

## 5. 1. தென்னகப் பண்பாடு

"கல்தோன்றி மண்தோன்றாக் காலத்தே வாளொடு முன் தோன்றிய மூத்தகுடி". தமிழ்க்குடி. இதனால் தமிழ்க் குடியின் பழமையும் வீரமும் புலப்படுகின்றது. மனிதனின் தோற்றம் எவ்வளவு தொன்மையானதோ அவ்வளவு பழமையானது தென்னகப்பண்பாடு. தென்னவர் வாழ்ந்த நாட்டை 'திராவிடம்' என்றும் அவர்களின் மொழியைத் திராவிட மொழி என்றும் வரலாறு கூறுகிறது.

பண்பாடு மிக்க அவர்கள் பேசிய மொழி தமிழ். மொழியினால் சிறப்புப் பெற்றவர்கள் தமிழர்கள். 'உணவு தேடல்' காரணமாக பிரிந்தவர்கள், தங்களுக்குள் தொடர்பு இன்மையால் பேசிய மொழிகளில் மாற்றங்கள் ஏற்பட்டன. அவையே இன்று திராவிட மொழிகள் என்று கூறப்படும் தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம் ஆகும்.

### 5. 1. 1. தமிழ்ப் பண்பாடு

தமிழர் சுமார் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே பண்பாட்டிலும் நாகரிகத்திலும் சிறந்திருந்தனர் என்பதை சங்க இலக்கியங்கள் உணர்த்துகின்றன. மொழிக்கு இலக்கணம் வகுத்த தமிழர்கள் மனித வாழ்வியலுக்கும் இலக்கணம் வகுத்து வாழ்ந்தனர். தமிழர் வாழ்வை அகவாழ்வு, புறவாழ்வு என இரண்டாக இலக்கணம் வகுத்து வாழ்ந்தமை பண்பாட்டின் சிகரமாகக் கருதப்படுகிறது.

### 5. 1. 2. தமிழ்ப் பண்பாட்டின் கூறுகள்

இலக்கியங்கள் காலத்தின் கண்ணாடி; தான் தோன்றிய கால மக்களின் நாகரிகம், பண்பாடு, பழக்கவழக்கங்கள், வாழ்க்கை முறை, அரசு, அமைச்சர், ஆட்சிமுறை, போர், வீரம், காதல் போன்றவற்றை

www.tntextbooks.in

நமக்குக் காட்டி நிற்கின்றன. நமக்குக் கிடைத்திருக்கும் சங்க இலக்கியங்களிலிருந்து தமிழர் பண்பாட்டை நன்கு அறிகிறோம். பண்பாட்டின் கூறுகள் சிலவற்றைப் பற்றி இங்கு காண்போம்.

### *5. 1. 2. 1. காதல்*

தமிழர் காதலை அன்பின் ஐந்திணை என்றனர். இஃது ஒருவனும் ஒருத்தியும் கொண்ட உளமொத்தத் தூயகாதல் வாழ்க்கையாகும். இது களவு, கற்பு என இரண்டாக அமையும். ஐந்திணை ஒழுக்கத்தில் தலைமக்களாக விளங்குபவர்கள். அறிவும், செல்வமும் உடைய நல்லகுலத்தில் பிறந்தவர்கள்.

இக்காதல் நாடகத்தில் தலைவன், தலைவி நற்றாய், செவிலித்தாய், தோழி, பாணன், பாடினி போன்றோரும் ஊர் மக்களும் பாத்திரங்களாக வருவர். இக்காதல் வாழ்வு அறத்திலிருந்து மாறுபடாமல் அன்பின் வழிப்பாட்டாக அமையும்.

“மங்கலம் என்ப மனைமாட்சி மற்றதன்
நன்கலம் நன்மக்கட் பேறு”

என்று வள்ளுவரும் காதல்வழிவந்த மனை மாட்சியைச் சிறப்பிக்கின்றாார்.

### *5. 1. 2. 2. வீரம்*

பண்டைய தமிழர்கள் வீரத்தைத் தொல்காப்பியப் புறத்திணை இயல் எடுத்துக் கூறுகின்றது. பெரும்பாலும் தற்காப்பு முறையில் தான் போர் நடைபெற்றது. தேர்ப்படை, யானைப்படை, குதிரைப்படை, காலாட்படை என்ற நால்வகைப் படைகளும் போரில் ஈடுபட்டன. வெட்சி, வஞ்சி, உழிகை, தும்பை என்ற நான்கு புறத்திணை பகுதிகளிலும் தமிழர்களின் போர்முறைகள் தொல்காப்பியத்தில் காணப்படுகின்றன.

அக்காலத் தமிழரிடம் அறப்போர் முறையே அமைந்திருந்தது. இதனை நெட்டிமையார் புறப்பாடலால் அறியலாம்.

பசுக்களும், பசுவை ஒத்த பார்ப்பனர்களும், பெண்களும், நோயுடையவர்களும், புதல்வர்களை பெறாதவரும், யாம் அம்பு



விடுவதற்குமுன் பாதுகாப்பான இடத்திற்குச் செல்லுங்கள், என வீரன் ஒருவன் கூறுவதிலிருந்து தமிழரின் அறப்போர் முறை விளங்கும்.

“ஆவும் ஆனியற் பார்ப்பன மாக்களும்
பெண்டிரும் பிணியுடை யீரும் பேணித்
தென்புல வாழ்நர்க்கு அருங் கடன் இறுக்கும்
பொன் போற் புதல்வர்ப் பெறாஅ தீரும்
எம் அம்பு கடிவிடுமுன் நும் அரண்சேர்மின்”

மேலும் வீரர் அல்லாதவர்கள், புறங்காட்ட ஓடுவார், புண்பட்டார், முதியோர், இளையோர், இவர்கள் மீது படைக்கலம் செலுத்தலாகாது என்பதும் புறநானூற்றால் அறிய முடிகிறது.

### *5. 1. 2. 3. நட்பு*

சங்ககாலத் தமிழர் நட்பினை பெரிதும் மதித்து வாழ்ந்தனர். திருவள்ளுவரும் உண்மையான நட்புக்கு இலக்கணம் கூறியுள்ளார்.

“முகம்நக நட்பது நட்பன்று நெஞ்சத்து
அகநக நட்பது நட்பு”.

உள்ளன்புடன் மனம் மகிழ்ந்து நட்பு கொள்வதே உண்மையான நட்பாகுமென்றார்.

கபிலரும் பறம்பு மலைத்தலைவன் பாரியும் நட்பாயிருந்தனர். பாரியின் மகளிர் இருவரையும் பாரி இறந்தபின் கபிலரே மணமுடித்து வைக்கிறார். மேலும் கபிலர் சேரன் செல்வக் கடுங்கோ வாழியாதனைக் கண்டு பறம்பு நாட்டின் வளம், பாரியின் சிறப்பு, அவன் வீரம், அவனைப் பிரிந்து வாடும் மக்கள் நிலையைக் கூறுகிறார். தன் வறுமையைக் கூறாது, நண்பனின் பிரிவை சேரமன்னனிடம் கூறும் நிலை அவர்கள் நட்பின் ஆழத்தைக் காட்டுகிறது.

கோப்பெருஞ்சோழன் தம் மக்களிடம் நாட்டை விட்டு மனம் நொந்து வடக்கிருந்து உயிர் துறக்க முயல்கிறான். அது கேட்டு, இதுவரை கோப்பெருஞ்சோழனை நேரில் பாராமலே நட்புக்

www.tntextbooks.in

கொண்டிருந்த புலவர் பிசிராந்தையார் தாமும் நண்பனுடன் வடக்கிருந்து உயிர்துறக்க வந்து விரும்பியவாறு உயிர் துறக்கிறார்.

“அழிவி னவை நீக்கி, ஆறுய்த்து அழிவின்கண்
அல்லல் உழப்பதாம் நட்பு”

என்ற வள்ளுவரின் வாக்குப்படி தீமையை நீக்கி, நல்வழியில் செலுத்தி, துன்பம் வரும்போது உடனிருந்து அனுபவிப்பதே நட்பாகும் என்பதற்குத் தாமே சான்றாகிறார் பிசிராந்தையார்.

அதியமான் நெடுமானஞ்சியிடம் நட்பு கொண்ட ஔவையார் தொண்டை மானிடம் சென்று அதியமானின் வீரம் வெளிப்படுமாறு வஞ்சப்புகழ்ச்சியாகப் பாடி நடக்க விருந்த பெரும்போரைத் தடுத்ததும் சங்க இலக்கியங்களால் அறியப்படும் செய்திகளாகும். அதியமானும் அமிழ்தினும் இனிய நெல்லிக்கனியை தானுண்ணாது ஔவைக்குக் கொடுத்து மகிழ்ந்தான். சங்க காலத் தமிழர் நட்பினை பெரிதும் மதித்துப் போற்றினர்.

### *5. 1. 2. 4. விருந்தோம்பல்*

‘விருந்து’ என்ற சொல்லுக்குப் ‘புதுமை’ என்பது பொருள். உறவினரும் நண்பரும் அல்லாதவராய் புதியராக நம்மிடம் வரும் மக்களை ‘விருந்து’ என்றனர் தமிழர். அறியாதவர்களையும் அழைத்து உணவளித்து இடமளித்து உபசரித்து மகிழ்ந்தனர் தமிழர்.

“செல்விருந்து ஓம்பி வருவிருந்து பார்த்திருப்பான்
நல்விருந்து வானத் தவர்க்கு”

என்கிறார் திருவள்ளுவர். “அறவோர்க்கு அளித்தல், அந்தணர் ஓம்புதல், ஆகிய அறங்களைத் தான் செய்யாது விட்டேன்” என்று கண்ணகி வருந்திக் கூறுவதை சிலப்பதிகாரம் உணர்த்துகிறது.

விருந்தினர்களை வெளியில் இருக்கச் செய்து தான் மட்டும் வீட்டின் உள்ளே உண்ணுதல் சாவாமைக்கு மருந்தாகிய அமிர்தமாக இருந்தாலும் வேண்டப்படுவதில்லை என்பதை வள்ளுவர்,

“விருந்து புறத்ததாத் தானுண்டல் சாவா
மருந்தெனினும் வேண்டற்பாற் றன்று”



என்று கூறுவதிலிருந்து விருந்தோம்பல் சங்க கால மக்களின் பண்பாக இருந்தமை அறிய முடிகிறது.

### *5. 1. 2. 5. ஈகை*

கொடையிலிருந்து வேறுபட்டது ஈகை. திருவள்ளுவர் ஈகைக்கு இலக்கணம் வகுத்துள்ளார்.

“வறியார்க்குஒன்று ஈவதேஈகை; மற்று எல்லாம்
குறியெதிர்ப்பை நீரது உடைத்து”

என்னும் குறளில் பதில் உதவி செய்ய முடியாத ஏழைகளுக்குக் கொடுப்பதே ஈகையாகும்; பிற கொடைகள் யாவும் பயன் எதிர்பார்த்துக் கொடுக்கும் தன்மையை உடையது என்கிறார். இதிலிருந்து ஈகை என்பது வறியவர்களுக்கு பதில் உதவி எதிர்பாராது கொடுக்கும் சிறு உதவியே ஈகை எனக் கொள்ளலாம். வறியோர் பசி தீர்த்தலே ஒருவன் தான் செல்வத்தைச் சேர்த்து வைக்கும் இடமென்று சங்ககால மக்கள் எண்ணி வாழ்ந்தனர்.

### *5. 1. 2. 6. கொடை*

சங்க காலத்தில் அரசர்கள் கொடை வள்ளல்களாக இருந்திருக்கிறார்கள். தம்மைப் பாடி வரும் புலவர்களுக்கும் மற்றவருக்கும் பொன்னையும் பொருளையும் வரையாது கொடுத்து மகிழ்ந்தமை சங்க இலக்கியங்களால் உணர முடிகிறது. பாரி, ஓரி, காரி, பேகன் போன்றோர் கடையேழு வள்ளல்கள் என்று போற்றப்பட்டனர். பாரி முல்லைக்குத் தேரையும் பேகன் மயிலுக்குப் போர்வையையும் அளித்து அழியாப் புகழ் பெற்றனர்.

ஆற்றுப்படை இலக்கியங்கள் மன்னர்களின் கொடைத் தன்மையைக் கூறுவனவாக இருத்தலைக் காண்கிறோம். கல்வெட்டுக்கள், செப்பேடுகள் மூலமும் மன்னர்களின் கொடைத்தன்மை அறிய முடிகிறது.

### *5. 1. 2. 7. கற்புடைமை*

சங்க கால மக்களின் இல்லறம் நல்லறமாக நடந்தமை இலக்கியங்களால் அறிய முடிகிறது. பெண்கள் தற்காத்துத்தற்

www.tntextbooks.in

கொண்டாள் பேணி. சொற்காத்துச் சோர்வு இல்லாதவர்களாகக் கற்புக் கடம்பூண்டு இருந்தமை அறிய முடிகிறது. திருவள்ளுவர்

"தெய்வம் தொழாஅள் கொழுநன் றொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யும் மழை"

என்று கூறுகிறார். காலத்தில் பெய்து காக்கும் மழைக்குச் சமமானவர்களாகக் கற்புடைய பெண்டிர் மதித்து வணங்கப்பட்டனர். ஆண்கள் போர் முதலியவற்றால் இறந்து படுதலின், ஆண் இனம் குறைந்தே இருந்தமையால் ஒரு ஆண் இரண்டு அல்லது மூன்று பெண்களை மணந்து வாழ்ந்தமை அறிய முடிகிறது..

#### *5. 1. 2. 8. உலக ஒருமைப்பாடு*

பண்டைத் தமிழர்கள் நாகரிகம் பண்பாட்டில் சிறந்து இருந்தனர். தமிழ்நாட்டில் உழவு, நெசவு, வாணிகம் போன்ற தொழில்களும் அவற்றின் சார்பு தொழில்களும் சிறந்திருந்தன. கடல்கடந்து வெளிநாடுகளுக்கும் சென்று தமிழர் வணிகம் செய்து சிறந்தனர். நமது பண்பாடு, நாகரிகம், மொழி யாவும் வெளிநாடுகளில் சிறக்கக் காரணம் பண்டைத் தமிழர்களே.

கணியன் பூங்குன்றனார் என்னும் புலவரின் புறப்பாடல் ஒன்றே நம் தமிழரின் உலக ஒற்றுமைக் கொள்கையை உலகுக்குப் பறைசாற்றும்.

"யாதும் ஊரே யாவரும் கேளிர்
தீதும் நன்றும் பிறர்தர வாரா"

உலக மக்கள் யாவரையும் உறவாக எண்ணும் பண்டைத் தமிழரின் உள்ளம் உயர்ந்ததேயாகும்.

கணியன் பூங்குன்றனாரின் "யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்ற புறப்பாடல் வரி ஐக்கியநாடுகள் சபை நுழைவு வாயிலில் ஆங்கில மொழிபெயர்ப்புடன் கல்லில் வடித்து பதிக்கப் பெற்றிருக்கிறது என்று எண்ணி மகிழத்தக்கது.



## 5. 2. முத்தமிழ்

உயர்தனிச் செம்மொழியாம் தமிழ்மொழி மிகவும் தொன்மை வாய்ந்தது. மொழியியல் வல்லுநர்கள் ஆய்வுகள் பல செய்து தமிழ் மொழியின் தொன்மையைச் சான்றுகள் கூறி நிறுவியுள்ளனர்.

"திங்களோடும் செழும்பரிதி தன்னோடும் விண்ணோடும் உடுக்களோடும் பொங்கு கடல் இவற்றோடும் பிறந்த தமிழ்" என்று பாரதிதாசன் கூறிய கருத்து இங்கு நோக்கத்தக்கது.

ஆண்டு பல ஆயினும் சீரிளமைத் திறத்தோடு திகழும் தீந்தமிழ் மொழி இயற்றமிழ், இசைத்தமிழ், நாடகத்தமிழ் என்னும் முப்பிரிவுகளைக் கொண்டு விளங்குகிறது.

மனித வளத்தை மேம்படுத்தி, மனித நேயத்தை வளர்க்கின்ற இலக்கியப் படைப்புகள் நிறைந்தது தமிழ்மொழி. அது இயல், இசை, நாடகம் என முத்தமிழாக முகிழ்ந்து உடல், உள்ளம், ஆன்மா ஆகிய மூன்றின் வளர்ச்சியை முழுமையாக்கி நல்ல வளமான ஆளுமையை அளிக்கிறது எனில் மிகையாகாது. எனவேதான் நாட்டு மக்களுக்கு நல்வழி கூறவிழைந்த தமிழ் மூதாட்டி ஔவையாரும் விநாயகரை "சங்கத் தமிழ் மூன்றும் தா" என்று வேண்டுகின்றார்.

மொழியியல் விளக்கப்படி இயற்றமிழ் அகச்சிந்தனைகளையும், இசைத்தமிழ் ஆன்மாவின் இயல்பினையும், நாடகத்தமிழ் உடலின் மெய்ப்பாடுகளையும் குறிப்பிட்டு நிற்கின்றன.

கண்ணுக்கும் கருத்துக்கும், செவிக்கும், சிந்தனைக்கும் விருந்தளிப்பது முத்தமிழ். மூவேந்தர் மடி தவழ்ந்து முச்சங்கம் தனில் வளர்ந்த முத்தமிழ், சுவைக்க வல்லார்க்கு முக்கனிச் சாறாக இனிக்கும் தன்மை கொண்டது.

### 5. 2. 1. இயற்றமிழ்

முத்தமிழில் முதலில் நிற்கும் இயற்றமிழ், ஏனைய இரண்டிற்கும், மொழிக்கும் அடிப்படையாய் அமைகிறது. மொழி முதற்காரணமாகிய அணுத்திரள் ஒலி, அங்காத்தல், இதழ்குவிதல், நா, அசைவு இவற்றால் வெவ்வேறு எழுத்தாகிறது. இவ்வெழுத்துகள் தனித்தோ தொடர்ந்தோ

www.tntextbooks.in

சொல்லாகிறது. சொற்களும் சொற்றொடர்களும் பொருள் குறித்தனவாக அமைகின்றன.

கட்டுரைகள், சிறு கதைகள், புதினங்கள், கவிதைகள், செய்யுள்கள், புதுக்கவிதைகள், நாடக இலக்கியங்கள், விமர்சனங்கள் திறனாய்வுகள், உரையாசிரியர்களின் விளக்கங்கள் என்று அனைத்தும் இதனுள் அடங்கும்.

ஆழமாகவும், அகலமாகவும் வளர்ந்து வரும் அறிவியல் துறைசார்ந்த மருத்துவம், பொறியியல், தொழில் நுட்பம், கணக்கியல், வணிகவியல், விண்ணியல் ஆகிய எண்ணற்ற இயலுக்கான நூல்களும் இயற்றமிழில் அடங்கும்.

உலகை ஆட்கொள்கின்ற அனைத்து அறிவியல் துறைசார்ந்த நூல்களும் தமிழில் உரைநடை வடிவில் வர வேண்டும். "பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்களைத் தமிழ் மொழியில் பெயர்த்தல் வேண்டும்." "இறவாத புகழுடைய புதுநூல்கள் தமிழ் மொழியில் இயற்றப்படுதல் வேண்டும்".

இயற்றமிழ் மனிதனுக்குரிய கல்வியைப் புகட்டப் பயன்படுகிறது. மனிதனின் சிந்தனையை வளப்படுத்தி வாழ்வு செழிக்க வழிவகை செய்கிறது. சுற்றம் காக்கும் கருவியாய் அறிவினைப் பெருக்கப் பயன்படுகிறது.

### 5. 2. 2. இசைத்தமிழ்

ஆன்மாவோடு பேசுகிற அந்தரங்க மொழி இசை, இறைவனே ஏழிசையாய் இசைப்பயனாய் விளங்குபவன் தானே! தமிழ் என்று தோன்றியதோ அன்றே இசையும் தோன்றியது. தமிழர் வாழ்வில் இசைப்பாட்டு இணைந்து வளர்ந்தது. கருவறை தொடங்கி கல்லறை வரைக்கும் இசையோடு இயைந்த வாழ்வு வாழ்ந்தனர் தமிழர்.

பிறந்த குழந்தைக்குத் தாலாட்டுப் பாட்டு, விளையாட்டுப் பாட்டு, வேடிக்கையோடு அறிவுக்கு விருந்து வைக்கும் விடுகதைப் பாட்டு, தொழில் பாட்டு, நாற்று நடவுப் பாட்டு, எதிர்பாட்டே இல்லாத ஏற்றப்பாட்டு, திருமணப் பாட்டு, ஊஞ்சல் பாட்டு, வழிநடைப் பாட்டு, இறைவழிபாட்டுக்கு உரிய பக்திப் பாட்டு, இறுதியில் கையறு



நிலையாக ஒப்பாரிப் பாட்டு. இப்படி ஏற்றமிகு தமிழர் வாழ்வில் எண்ணற்ற பாட்டுக்கள் இடம் பெற்றிருந்தன.

'பண்' என்னும் தமிழ்ச் சொல் இசையைக் குறித்து நின்றது. திருத்தியமைக்கப்பட்ட, பண்படுத்தப்பட்ட இசையை 'பண்' என்றனர் தமிழர். மனிதன் தன் இயல்பான உணர்ச்சிகளை, ஒழுங்குப்படுத்தப்பட்ட ஓசையுடன் கூடிய பாட்டாக்கி இன்புறுகிறான். இசை உலக உயிர்களின் களைப்பையும், அலுப்பையும் அறவே அகற்றுகிறது. நாடோடிப் பாடல்களும், நாட்டுப்புறப் பாடல்களும் இத்தன்மை வாய்ந்தவையே! இறைவழிபாட்டிலும் இசை உயர்ந்த இடத்தைப் பெற்றிருக்கிறது. இறைவனோடு கலக்க இசையைக் கருவியாக்கி மகிழ்ந்தனர் தமிழர். இவ்வழிபாட்டு முறையை "நாதோபாசனை" என்றனர் வடமொழியாளர். இதயத்தைத் தொட்டுவிடும் இசை, "காதுகளுக்கும் போர்த்து விடுகிற கௌரவப் பொன்னாடை" என்று கூறுகிறார் கவிஞர் மு.மேத்தா.

பழந்தமிழ் இசை நூல்களாக இன்று அறியப்பெறுபவை பெருநாரை, பெருங்குருகு, பஞ்ச பாரதீயம், இசை நுணுக்கம், பஞ்ச மரபு, தாள சமுத்திரம், கச்சபுட வெண்பா, இந்திரகாளியம், பதினாறு படலம், தாளவகை கோவையோத்து, இசைத் தமிழ்ச் செய்யுள் துறைக்கோவை, இன்னபிற பலவாம். இந்நூல்கள் நமக்கு முழுமையாகக் கிடைக்கப்பெறவில்லை.

"இன்பத் தமிழிசை எமது – அது
இன்பந்தரும்படி வாய்ந்த நல்அமுது"
என்பார் பாவேந்தர் பாரதிதாசன்.

நாயன்மார்களுள் சம்பந்தர், அப்பர், சுந்தரர் மூவரும் இறைவழிபாட்டிற்கு உறுதுணையாக இசையைப் போற்றி வளர்த்தனர். "நாளும் இன்னிசையால் தமிழ்ப் பரப்பும் ஞானசம்பந்தன்" என்று ஞானசம்பந்தப் பெருமான் போற்றப்படுகிறார்.

திரிகூடராசப்பக் கவிராயர், இராமலிங்க அடிகளார், கோபால கிருஷ்ண பாரதியார், குணங்குடி மஸ்தான் சாகிபு, சென்னி குளம் அண்ணாமலை ரெட்டியார், பாவேந்தர் பாரதிதாசன் போன்றோர் நிறைய இசைப் பாடல்களை இயற்றியுள்ளனர்.

www.tntextbooks.in

தமிழிசையை வளர்க்கக் காலஞ்சென்ற இராஜா சர் அண்ணாமலைச் செட்டியார் ஆற்றிய அருந்தொண்டு அளவிடற்கரியது. தமிழிசைச் சங்கம், தமிழிசைக் கல்லூரி இவற்றை நிறுவியும், தமிழிசைப் போட்டி, தமிழிசை ஆராய்ச்சி போன்றவற்றை நடத்தியும் அவர் தமிழிசை சிறக்க அனைத்து வழிகளிலும் முயன்றார்.

சங்க காலத்தில் ஐவகை நிலத்திலும் முறையே குறிஞ்சிப்பண், பாலைப்பண் (பஞ்சுரம்) முல்லைப்பண் (சாதாரி), மருதப்பண், நெய்தல் பண் (செவ்வழி) என்ற அடிப்படைப் பண்கள் பொதுவாக இசைக்கப்பட்டன. மேலும் வைநளம், சீகாமரம் போன்ற பண்களும் இருந்ததாக அறியமுடிகிறது.

சங்க கால இசைக் கருவிகள், யாழ், குழல், ஆகுளி, பதலை, பாண்டில், தடாலி, தண்ணுமை, கரடிகை முதலானைவையாகும்.

குறிஞ்சியாழ், பாலையாழ், முல்லையாழ், மருதயாழ், விளரியாழ், சீறியாழ், பேரியாழ் போன்றவை இசைக்கப்பட்டன.

பிற்காலத்தில் புல்லாங்குழல், நாதசுவரம், கிளாரிநெட், ஆர்மோனியம், வீணை, முகவீணை, வயலின், கிட்டார், ஜலதரங்கம் முதலிய இசை வாத்தியங்களும் தவில், பஞ்சமுகம் வாத்தியம் டமாரம், உடுக்கை, பம்பை, கடம், முகர்சிங், மிருதங்கம், கஞ்சிரா, டோலக், ஜாலரா போன்ற தாள வாத்தியங்களும் தோன்றின.

பத்துப்பாட்டு, எட்டுத்தொகை, திருக்குறள், சிலப்பதிகாரம், மணிமேகலை, பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள் முதலியன இசையைப் பற்றிய குறிப்புகளைத் தருகின்றன.

### 5. 2. 3. நாடகத்தமிழ்

முத்தமிழின் மூன்றாம் பகுதியான நாடகத் தமிழ் சிறப்பு மிக்கது. இது இயற்றமிழையும், இசைத்தமிழையும் தன்னுள் கொண்டு உள்ளதால் மக்களிடத்தில் இதன் தாக்கம் அதிகம் காணப்படுகிறது. மக்களின் அக,புற இயல்புகளை நடிப்பின் மூலம் மேடையில் வெளிப்படுத்துவது நாடகம். வாழ்வின் நல்ல, தீய கூறுகளை எடுத்துக்காட்டி, அதனால் விளையும் பலன்களையும் சித்திரிப்பது



நாடகம். நற்பண்புகளைக் கடைப்பிடித்து ஒழுகுவதன் சிறப்பை விளக்குவது நாடகம்.

தமிழிசை போல், தொன்மையான தமிழ் நாடக நூல்களும், நாடகக் கலை நுணுக்க நூல்களும் அழிந்து போயின. தொல்காப்பியரின் மெய்ப்பாட்டியல், நாடகக் கலைஞர்கள் வெளிப்படுத்த வேண்டிய நகை, அழுகை, இளிவரல் (இழிவு), மருட்கை (வியப்பு), அச்சம், பெருமிதம், சினம், உவகை என்னும் எட்டு மெய்ப்பாடுகளையும், அவை தோன்றுவதற்கு வேண்டும் நிலைக்களன்களையும் குறிப்பிட்டுள்ளது.

முறுவல், சயந்தம், குணநூல், செயிற்றியம், செயன்முறை, மதிவாணனார் நாடகத்தமிழ் என்னும் நூல்கள் முறையே அடியார்க்கு நல்லார், யாப்பருங்கல உரையாசிரியர், இறையனார்களவியலுரை ஆசிரியர் ஆகியோரால் குறிப்பிடப்பட்டுள்ளன.

கூத்தும், நாடகமும் நடக்கின்ற ஆடுகளம் பற்றி விரிவான செய்திகள் சிலப்பதிகாரத்தில் கூறப்பட்டுள்ளன.

இடைக்காலத்தில் தோன்றிய ‘இராச ராச விஜயம்’ ‘பூம்புலியர்’, ‘குலோத்துங்க சோழ சரிதை’ போன்ற நாடகங்கள் இருந்தமை பிற்காலச் சோழர் காலத்தில் நாடகக்கலை சிறந்திருந்ததைக் காட்டுகிறது.

18-ஆம் நூற்றாண்டில் அருணாசலக் கவிராயரின் ‘இராம சரித நாடகமும்,’ கோபால கிருஷ்ண பாரதியின் ‘நந்தனார் சரித்திரக் கீர்த்தனை’ என்ற நாடகமும் புகழ் பெற்றனவாகும்.

19-ஆம் நூற்றாண்டில் நாடகம் மேன்மேலும் நன்கு வளரத்தொடங்கியது. பரிதிமாற் கலைஞரின் ‘கலாவதி,’ ‘ரூபாவதி,’ ‘மானவிசயம்’ என்னும் நாடகங்களும் ‘நாடகவியல்’ என்னும் நாடக இலக்கணம் பற்றிய நூலும் பெருமைப்படத்தக்கனவாகும்.

பேராசிரியர் சுந்தரம் பிள்ளையின் ‘மனோன்மணீயம்’ நாடக நூலும், அவரைப் பின்பற்றி அண்மையில் புலவர் ஆ. யூனி எழுதிய ‘அனிச்ச அடி’ நாடக நூலும் நல்ல கவனிப்பைப் பெற்றன.

www.tntextbooks.in

நாடகத்தின் தந்தை என போற்றப்பட்ட பம்மல் சம்பந்த முதலியாரின் 'மனோகரா', 'லீலாவதி,' 'வேதாள உலகம்', 'சபாபதி' போன்ற பல்வேறு நாடகங்கள் சிறப்பாக அமைந்து அனைவரது பாராட்டையும் பெற்றன.

'நாடக உலகின் இமயம்' எனக் கருதப்பட்ட சங்கரதாஸ் சுவாமிகள் 'பவளக்கொடி', 'சதி அநுசுயா', 'வள்ளிதிருமணம்', 'சத்தியவான் சாவித்திரி' என்னும் புராண நாடகங்களையும், ஆங்கிலம், வடமொழி ஆகிய மொழிகளிலிருந்து மொழி பெயர்த்துச் செய்யப்பட்ட தமிழ் நாடகங்களையும் இயற்றினார்.

நவாப் இராசமாணிக்கம் பிள்ளை, எம். கந்தசாமி முதலியார் போன்ற நாடக உலக ஜாம்பவான்களை யாராலும் மறக்க முடியாது. மாரியப்ப சுவாமிகள், கிட்டப்பா, கே.பி. சுந்தரம்பாள் ஆகியோர் நடிப்பாற்றலும் குரல் வளமும் கொண்ட கலைஞர்களாகத் திகழ்ந்தனர்.

இருபதாம் நூற்றாண்டில் எண்ணற்ற நாடகக் குழுக்களும், நாடக ஆசிரியர்களும், நாடகத் தமிழுக்குத் தொண்டாற்றி வருகின்றனர். தமிழ்நாடு அரசும் இயல், இசை, நாடக மன்றத்தின் மூலம் நற்பணி ஆற்றி வருகின்றது.

குசா. கிருஷ்ண மூர்த்தியின் 'அந்தமான் கைதி', ப.நீலகண்டனின் 'முள்ளில் ரோஜா,' என்.எஸ்.கே. நாடகக் குழுவின் 'நாம் இருவர், பைத்தியக்காரன்', நாரண துரைக்கண்ணனின் 'உயிரோவியம்' டாக்டர். மு. வரதராசனாரின் 'டாக்டர் அல்லி', அரு. ராமநாதனின், 'இராசராச சோழன்', பேரறிஞர் அண்ணாவின் 'வேலைக்காரி', 'ஓர் இரவு', 'சந்திரோதயம்', 'நீதி தேவன் மயக்கம்', கலைஞர். கருணாநிதியின் 'மந்திரி குமாரி', 'தூக்குமேடை' போன்ற நாடகங்கள் மக்கள் மத்தியில் பெரும்பாராட்டைப் பெற்றன. வீரபாண்டிய கட்டபொம்மன், மருத சகோதரர்கள் போன்ற வரலாற்று நாடகங்களும் புகழ் மிக்கவையாகத் திகழந்தன.

கரம்பை டி.கே. சண்முகமும், டி.கே.பகவதியும், நாடகக்கலைக்கு ஆற்றிய தொண்டு அளவிடற்கரியது. ஆர்.எஸ். மனோகர் காட்சிகளைக் கண்முன் கொண்டுவந்து நிறுத்தும் அற்புதமான மேடை அமைப்புகளுடன் நாடகங்களை நடத்தி நாடகக் கலைக்கு



அருமையான தொண்டு செய்துள்ளார். சகஸ்ரநாமம், என்.எஸ். கிருஷ்ணன், கே.ஆர்.ராமசாமி, எஸ்.எஸ்.இராசேந்திரன், எம்.ஜி.ராமச்சந்திரன், சிவாஜி கணேசன் போன்ற திரைக்கலைஞர்கள் நாடகத்துறை மூலம் திரைஉலகுக்கு வந்தவர்கள் என்று அறியும்போது நாடகத்தின் சிறப்பு மேலும் கூடுகிறது.

கோமல் சுவாமிநாதனின் 'தண்ணீர், தண்ணீர்' நாடகம் மக்களிடையே பெரும் பரபரப்பை உண்டாக்கியது.

சோ. இராமசாமி, மௌலி, பூரணம் விஸ்வநாதன், மெரீனா, எஸ்.வி.சேகர், கிரேஸி மோகன் போன்றவர்களும், தெருக்கூத்துக் கலைக்கு புது மெருகு தரும் கூத்துப்பட்டரை அமைப்பாளர்களும் நாடகக் கலைக்கு புத்துயிரூட்டி வருகின்றனர்.

காலவெள்ளத்தின் வேகத்தாலும், அறிவியல் முன்னேற்றத் தாலும், வானொலி நாடகங்கள், தொலைக்காட்சித் தொடர்கள், மேடை நாடகங்கள், கவிதை நாடகங்கள் என்று பல்வேறு பரிமாணங்களில் நாடகக்கலை வளர்ந்து வருவது பெருமைப்பட வேண்டிய ஒன்றாகும்.

சைவர் வணங்கும் சிவபெருமான் கைச்சூலம் மூன்று முனையாக இருப்பதுபோல் தமிழர்களின் தமிழ் மொழியும் இயல், இசை, நாடகம் என மூன்றாக அமைந்து தமிழர்களைத் தலை நிமிர்ந்து நிற்கச் செய்கிறது.

## 5. 3. தொல்காப்பியம் உணர்த்தும் வாழ்க்கை முறை (அகம், புறம்)

இன்றுள்ள தமிழ் நூல்களில் மிகப்பழைமையான நூல் தொல்காப்பியம் ஆகும். இது முதல் நூலாக திகழ்ந்தாலும் 'அகத்தியம்' என்னும் இலக்கண நூலுக்கு வழிநூலென்பர். குள்ளமுனிவர், அகத்தியர் என்னும் முனிவரால் செய்யப்பட்ட முதல் தமிழ் இலக்கண நூல் 'அகத்தியம்' என்று கூறுவர். அஃது தற்போது கிடைக்கப் பெறாமையால் தொல்காப்பியம் முதல் நூலாகியது.

தமிழுக்கு மட்டுமல்லாமல் தமிழர் வாழ்வுக்கும் அமைக்கப்பட்ட அற்புதமான இலக்கண நூல் எனக் கருதப்படுகிறது. இதன் காலம்

www.tntextbooks.in

பற்றி வெவ்வேறு கருத்துகள் நிலவுகின்றன. எனினும் கி.மு. இரண்டாம் நூற்றாண்டு என அறிஞர் பலரும் ஏற்றுக் கொண்டுள் ளனர். தொல்காப்பியத்தை இயற்றியவர் பழமையான 'காப்பியக் குடியில்' தோன்றிய 'தொல்காப்பியர்' என்று கருதப்படுகிறது. இந்நூல் எழுத்து, சொல், பொருள் பற்றி விளக்குகிறது.

### 5. 3. 1. உலகத்தோற்றம் பற்றிய கருத்து

நிலம், நீர், நெருப்பு, காற்று, வான் ஆகிய ஐவகை இயற்கைப் பொருள்களைக் கொண்டு தானாகவே இவ்வுலகம் தோன்றியது என்ற கருத்தை தொல்காப்பியர் வெளிப்படுத்தியுள்ளார்.

"நிலம், நீர், தீ, வளி, விசும்பொடு ஐந்தும்
கலந்த மயக்கம் உலகம்"

என்று உலகத்தோற்றம் பற்றி அறிவு அடிப்படையில் அழகாகக் கூறுகின்றார்.

### 5. 3. 2. அகவாழ்வு

பெரியோர்களாலும், பெற்றோர்களாலும் நிச்சயிக்கப்பட்ட திருமண முறைகளும், ஆடவர் பெண்டிர் தாமாகவே கண்டு காதலித்துத் திருமணம் செய்து கொள்ளும் பழக்கமும் இருந்ததாக தொல்காப்பியம் கூறுகிறது. சடங்குகளில் புரோகிதர்கள் பயன்படுத்தப்படவில்லை.

ஆடவர், பெண்டிரின் நிலைபற்றி தொல்காப்பியர் விளக்குகிறார். சமுதாயத்தில் ஆடவர் பெண்டிரினும் உயர்வாகவே கருதப்பட்டனர். ஆண் 'ஆளப்பிறந்தவன்' என்றும், பெண் 'கற்பைப் பேணிக் காத்து' இல்லறம் புரிய துணை நிற்பவள் என்றும் தொல்காப்பியர் கூறுகிறார். பரத்தையர் என்னும் ஊர்ப் பொதுமகளிர் சமுதாயத்தில் இருந்தனர். பொருந்தாத காமவேட்கையால் வயது வரம்பின்றி ஆசை கொள்வதும், ஒருவர் மட்டும் காதல்கொள்வதும் தொல்காப்பியரால் கண்டிக்கப்படுகிறது. இதிலிருந்து இல்லறம் சிறப்புமிக்கதாகக் கருதியமையும், மக்கள் வீரம், அறிவாற்றல் மிக்கவர்களாக இருந்தனர் என்பதும் அறியமுடிகிறது.



உருவத்தாலும், பருவத்தாலும், அகவையாலும் அறிவாலும் ஒத்த தலைவன் - தலைவி சேர்ந்து வாழ்வது அகவாழ்வு. தலைவனும் தலைவியும் ஊழ்வினைப் பயனால் ஒன்று கூடித் தாம் துய்த்த இன்பம் இத்தகையது என பிறர்க்குப் புலப்படுத்த முடியாததே அகவாழ்க்கையாகும். இதை விளக்குவது அகத்திணை எனப்படும். 'திணை' என்பது ஒழுக்கம் பற்றிய பெரும்பிரிவு, "துறை" என்பது அகத்திணையில் அமைந்த சிறுஉட்பிரிவுகள் ஆகும்.

### 5. 3. 3. திணை வகைகள்

தமிழ் மக்கள் வாழ்ந்த நிலம் ஐந்தாகப் பிரிக்கப்பட்டது. அங்கு வாழும் மக்கள் ஒழுக்கமும் நிலத்தோடு இயைந்ததாய்க் காணப்பட்டதால் சில வேறுபாடுகள் இவர்களுக்குள் இருந்தன. நில அமைப்பு மேற்கு தொடங்கி கிழக்கு வரை, முறையே மலைகளும், காடும், சமவெளிகளும், கடற்கரையும் இருப்பதை குறிஞ்சி, முல்லை, மருதம். நெய்தல் எனப் பெயரிட்டு பின்னர் பாலை என்ற புதிய நிலத்தையும் அதில் வாழ்மக்களின் ஒழுக்கத்தையும் அறிந்து இயம்பினர். ஆகவே திணை ஐந்தாக பிரிக்கப்பட்டது. இத்திணைகள் மக்களின் அக வாழ்க்கையை விளக்குவதால் அதில் சிறப்பில்லாது விளங்கும் மற்ற இரண்டு ஒழுக்கங்களுக்குக் கைக்கிளை, பெருந்திணை எனப் பெயரிட்டு அதை புறத்திணைகளோடு சேர்த்தனர். கைக்கிளை என்பது ஒரு 'தலைக்காமம்'. ஆண் பெண் இருவரில் ஒருவர் மட்டும் காதல் கொண்டு இருப்பது. பெருந்திணை என்பது 'பொருந்தாக் காமம்'. வயது முதிர்ந்தவர் மிக இளையவர் பால் காதல் கொள்வதும் பலவந்தம் செய்வதும் ஆகும்.

#### *5. 3. 3. 1. குறிஞ்சித்திணை*

மலை நிலமாகிய குறிஞ்சி நிலத்தில் வாழும் மக்களின் ஒழுக்கத்தைக் கூறுவது குறிஞ்சித்திணை ஆகும். மலையும் மலையைச் சார்ந்த இடமுமே குறிஞ்சியாகும். தலைவனும் தலைவியும் சேர்ந்து மகிழ்ந்து இருப்பதை அதிகம் விரும்புவது இதன் உரிப்பொருள். இவ்விருவருக்கிடையே நிகழும் சந்திப்பு, அதற்குரிய காரணங்களை எடுத்துரைப்பதே 'குறிஞ்சி ஒழுக்கம்'

www.tntextbooks.in

அல்லது ‘குறிஞ்சித் திணை’. இத்திணையின் தெய்வம் ‘மாயோன்’ எனப்படும் முருகன் ஆவார்.

*5. 3. 3. 2. முல்லைத்திணை*

காடும், காடு சார்ந்த நிலமும் முல்லை நிலம். இதன் தெய்வம் மாயோன் (திருமால்) பிரிந்து சென்ற தலைவன் திரும்பும்வரை காதலி தன் கற்பின் வலிமையால் தன் துயரத்தைப் பொறுத்துக் கொண்டிருப்பது முல்லையொழுக்கம். அவள் ஆறுதல் பெறுதற்குரிய காரணங்களைக் கூறுதலும், முல்லைத் திணையே. இத்திணையின் ஒழுக்கம் ‘ஆற்றி இருத்தல்’ ஆகும்.

*5. 3. 3. 3. மருதத்திணை*

வயலும், வயல் சார்ந்த இடமும் மருத நிலம் ஆகும். நீர் வளம், நிலவளம் அமைந்த நிலப்பகுதியாகும். இதன் தெய்வம் ‘இந்திரன்’. நல்ல அரசும், நாகரிகமும், கூட்டு வாழ்க்கையும் அமையப் பெற்ற நிலம் மருதம் ஆகும்.

தலைவன், தலைவி இருவரிடையே தோன்றும் ஊடல், அவ்வூடலின் காரணங்கள் பற்றிக் கூறும் இத்திணை. ஊடல் நீக்கும் வாயிலாக பாணன், கூத்தன், பாங்கன், தோழி ஆகியோர் செயல்படுவதைக் கூறுவதும் இத்திணையாகும்.

*5. 3. 3. 4. நெய்தல் திணை*

கடலும், கடல் சார்ந்த இடமும் நெய்தல் நிலமாகும். இந்நில ஒழுக்கத்தைக் கூறுவது நெய்தல் திணையாகும். இந்நிலத்துத் தெய்வம் ‘வருணன்’. தலைவன் வரவுக்குக் காத்திருத்தல், தன்மனத் துயரை பிறரிடம் கூறுதலும் நெய்தல் ஒழுக்கமாகும். ‘இரங்கல்’ என்ற நிலையே நெய்தலின் ஒழுக்கமாகும்.

பண்டைத் தமிழர் வாழ்வில் அமைந்த காதல் களவு, கற்பு என்ற நிலைகளில் மணவாழ்வாக அமையும். இந்நெறிமுறைகளை எடுத்துக் கூறுவதே அகத்தின் மையக்கோட்பாடு.



*5. 3. 3. 5. பாலைத்திணை*

பாலை நிலத்திலே நிகழும் ஒழுக்கத்தைப் பற்றிக் கூறுவது பாலைத் திணை. நீரில்லாது வறண்டுபோன நிலப்பகுதியே பாலை நிலம். இதற்குத் தொல்காப்பியர் தனிநிலம் குறிப்பிடவில்லை. வானம் பொய்த்து வறண்டு போனால் எந்த நிலத்திலும் பாலை தோன்றலாம். எனினும் ‘சிலப்பதிகாரத்தில்’ இளங்கோவடிகள் பாலைநிலம் பற்றிக் கூறும்போது. “குறிஞ்சி நிலமும் அதை அடுத்து அமைந்துள்ள முல்லை நிலமும் சந்திக்கும் இடத்தில் நிலம் மயங்கி பாலை என்ற நிலம் மீது தோன்றுகிறது” என்பது தோன்ற “குறிஞ்சியும் முல்லையும் முறைமையிற் றிரிந்து பாலை என்பதோர் படிமம் கொள்ளும்” என்கிறார். இதற்குத் தெய்வம் கொற்றவை. இத்திணைக்குரிய ஒழுக்கம் “பிரிவு”. தலைவன் தலைவி பிரிவைப் பாடும் பாடல்கள் பாலையின் பாடல்களாகவே கருதப்படும்.

### 5. 3. 4. புறவாழ்வு

மனித வாழ்வின் உறுதிப்பொருள்களில் அறம், பொருள், வீடு என்ற மூன்றைப் பற்றிய செய்திகள் இங்கு கூறப்படுகின்றன. புறத்தூர் யாவருக்கும் புலப்படும் ஒழுக்கத்தைப் பற்றி கூறுவதால் “புறப்பொருள்” எனப்பட்டது. இப்புற ஒழுக்கம் பத்து வகைப்படும் அவை முறையே வெட்சித்திணை, கரந்தைத் திணை, வஞ்சித்திணை, காஞ்சித்திணை, உழிஞைத் திணை, நொச்சித் திணை, தும்பைத் திணை, வாகைத் திணை, பாடாண் திணை, பொதுவியல் திணை என்பனவாகும். சிலர் கைக்கிளை, பெருந்திணை என்ற இரண்டு அகப்பொருள் புறத்திணைகளையும் சேர்த்து எண்ணுவர்.

*5. 3. 4. 1. வெட்சித்திணை*

பகைவர் நாட்டின் மீது படையெடுக்க விரும்பும் அரசன் தன் பகைமையை உணர்த்த பகைவர் நாட்டு பசுக்களை கவர்ந்து வரச் செய்வான். அவ்வாறு கவர்ந்து வரச்செல்லும் வீரர்கள் ‘வெட்சிப் பூமாலை’ அணிந்து செல்வர். இதுவே போருக்குக் காரணமாக அமைகிறது.

www.tntextbooks.in

### *5. 3. 4. 2. கரந்தைத் திணை*

வெட்சி மாலை சூடிய வீரர்கள் கவர்ந்து செல்லத் தொடங்கிய பசுக்களை பகைமன்னனின் வீரர்கள் 'கரந்தைப்பூமாலை' அணிந்து மீட்டுச் செல்வர். இது கரந்தைத் திணையாகும். அக்காலத்தில் மாடுகளே செல்வமாகக் கருதப்பட்டது. அதிக மாடுகள் உள்ளவனே செல்வந்தனாகக் கருதப்பட்டான். அதனால் 'மாடு' என்ற சொல்லுக்கும் செல்வம் என்ற பொருள் வழங்கலாயிற்று.

திருவள்ளுவரும்,

"கேடுஇல் விழுச்செல்வம் கல்வி ஒருவற்கு
மாடுஅல்ல மற்றை யவை"

என்ற இடத்தில் 'மாடென்ற சொல்லுக்கு செல்வம்' எனப்பொருள் கொள்ளுதல் நோக்கற்பாலது.

### *5. 3. 4. 3. வஞ்சித்திணை*

பகைவர் நாட்டின் மேல் படையெடுத்துச் செல்லுதல் வஞ்சித்திணையாகும். இவ்வீரர்கள் 'வஞ்சிப்பூமாலையை' சூடிச்செல்வர்.

### *5. 3. 4. 4. காஞ்சித்திணை*

நாட்டின் மேல் படையெடுத்து வரும் வஞ்சிமலர் சூடிய வீரர்களை காஞ்சித்திணை வீரர்கள் நாட்டு எல்லையில் தடுத்து நிறுத்துவர். இவ்வீரர்கள் 'காஞ்சிப்பூமாலையை' சூடிச்செல்வர்.

### *5. 3. 4. 5. உழிஞைத் திணை*

பகைவர் நாட்டின் மீது படையொடு சென்று மதிலை வளைத்துப் போரிடுவது உழிஞைத் திணையாகும். இவ்வீரர்கள் 'உழிஞைப்பூ' மாலை சூடுவர்.

### *5. 3. 4. 6. நொச்சித் திணை*

மதிலை வளைத்துப் போர் செய்யும் உழிஞைத் திணை வீரர்கள் மதிலுள் புகாமல் தடுத்துப் போரிடுபவர். நொச்சித் திணை வீரராவர். இவர்கள் 'நொச்சிப்பூ' மாலையைச் சூடிப் போர் செய்வர்.



### *5. 3. 4. 7. தும்பைத்திணை*

இருபெரும் வேந்தர்களும் நாள் குறித்து, பொதுவிடத்தில் போர் செய்தல் தும்பைத் திணையாகும். இவ்வீரர் இருபக்கத்தவர்களும் 'தும்பைப் பூமாலை' சூடிப் போர் செய்வர்.

### *5. 3. 4. 8. வாகைத்திணை*

போர் செய்யும் இருவேந்தருள் ஒருவர் வெற்றி பெறுவர். அவ்வீரர்கள் 'வாகைப்பூச்சூடி' வெற்றியை மகிழ்ந்து கொண்டாடுவர். வெற்றி பெற்றவரைப் புகழ்ந்து பாடும் பாடல்கள் வாகைத் திணையைச் சார்ந்த பாடலாகும்.

### *5. 3. 4. 9. பாடாண் திணை*

தனிப்பட்ட ஒருவரின் வீரம், கொடை, புகழ் முதலிய ஒழுக்கத்தைச் சிறப்பித்துப் பாடுதல் பாடாண் திணை எனப்படும்.

### *5. 3. 4. 10. பொதுவியல் திணை*

மேற்கூறப்பட்ட ஒன்பது திணைகளில் வகைப்படுத்த முடியாத பாடல்களான அறம் கூறும் பாடல்களையும், அறிவு கூறும் பாடல்களையும் இப்பொதுவியல் திணையில் அடக்கிக் கூறுவர்.

இவற்றுள் வெட்சி, கரந்தைத் திணைகள் பசுக்களை கவர்தல், அவற்றை மீட்டல் எனவும், வஞ்சி, காஞ்சித் திணைகள் பகைவர் நாட்டின்மேல் படையெடுத்தல், அவர்களை நாட்டுள் விடாமல் தடுத்தல் எனவும், உழிஞை, நொச்சித்திணைகள் மதிலை வளைத்தல், அதைக் காத்தல் என அமைந்து எதிர் எதிர் திணைகளாக அமைந்திருத்தல் சிறப்புடையது.

அடுத்துக் கூறப்படும் தும்பைப் போர்முறை, இடம், நாள், நேரம் குறித்துச் செய்யப்படும் அறப்போராக வீரம் விளைய நின்றது என்பது குறிப்பிடத்தக்கது.

வெற்றியைப் பாராட்டுதல் வாகை என்பதோடு அமையாமல், தோற்றவர் பக்கத்தும் வீரம் வெளிப்பட போர் செய்தவர்களையும் சிறப்பித்து, பொதுவான வீரம், கொடை இவற்றைப் பேசும் பாடாண்

www.tntextbooks.in

திணை. தமிழர் நாகரிகத்திற்கு எடுத்துக் காட்டாகத் திகழ்கிறது. உலகில் எந்த மொழியிலும் இல்லாத உயரிய திணைப்பாகுபாடு என்பது ஒழுக்கத்தின் உன்னத நிலை என்றால் அது மிகையாகாது.

## 5. 4. சங்க இலக்கியங்களில் காணப்படும் சமயக்கருத்துகள்

சங்ககாலத் தமிழரிடையே அவர்களுக்கே உரிய சமயம் இருந்தது. இச்சமயத்தின் செல்வாக்கைத் தனிமனிதனிடமும் காண முடிந்தது. இச்சமயம் அவர்களின் சமூக வாழ்வில் குறுக்கிடவில்லை.

சமயத்தின் துணை கொண்டு மனித உறவையும், கடவுளுடன் பிணைப்பையும் பெற விரும்பினர். சிற்சில சடங்குகள் இருந்தன. இறப்பிற்குப் பின்னால் நிகழ விருப்பதைச் சிந்திக்கத் தலைப்பட்டனர்.

தன்னுடைய நிலத்தின் தெய்வத்தை வழிபட்டதோடு அமையாமல் வைதீக சமய வழிபாட்டு முறையும் இருந்தது. சொர்க்கம், நரகம், வீடுபேறு, மறுபிறப்பு, வினைப்பயன் பற்றிய நம்பிக்கைகளும் இருந்தன.

வீரர்களின் நடுகல் வணக்கமும், இறந்துபட்ட முன்னோர் வணக்கமும் இருந்தது. மரம், கல், மலை, விலங்குகள் போன்றவையும் வணங்கப்பட்டன. மேலே கூறியவற்றிற்குச் சான்றுகளாகச் சிலவற்றைப் பார்ப்போம்.

### 5. 4. 1. கடவுள், இயவுள், இறை

தனி முதற்பொருள், அளவில் ஆற்றலுடைய ‘இயவுள்’ எனப்பட்டது. அதைக் கடவுள் என்றும் அழைத்தனர். நம்மை இயக்குபவன் ‘இயவுள்’ என்றழைக்கப்பட்டான். நம்மைக் கடந்தவன், அறியமுடியாதவன், ஆனால் உள்ளவன் என்பது தோன்ற ‘கடவுள்’ என்றும் அழைக்கப்பட்டான். உலகப்பொருள்களின் உள்ளீடாகவும், அவற்றைக் கடந்தும் இருப்பவன் ‘கடவுள்’ என கூறப்பட்டான். அனைத்திலும் நீக்கமற நிறைந்து ஒளிர்பவன் ‘இறை’ என அழைக்கப்பட்டான்.



#### *5. 4. 1. 1. சிவவழிபாடு*

சங்ககாலத் தமிழர் சிவனை வழிபாடு செய்தனர். முப்புரம் எரித்தவர், முக்கண் முதல்வர், வார்சடைக் கடவுள், என்றெல்லாம் அழைக்கப்பட்ட சிவபெருமான் வழிபடுகடவுளாகக் கையில் சூலம் ஏந்தி இருந்தான் என அறியப்படுகிறது.

#### *5. 4. 1. 2. வருணன் வழிபாடு*

மழைக்குக் கடவுள் வருணன், திருவள்ளுவரும் ‘வான்சிறப்பு’ என மழையைப் போற்றியுள்ளமையும், இளங்கோவடிகளும் ‘மாமழை’ போற்றதும் என வருண வழிபாட்டைக் காண முடிகிறது. நெய்தல் நிலத்தெய்வம் வருணன் என சான்றோர் வகுத்தனர் இலக்கியங்களும் இதனைப் பகிர்கின்றன.

#### *5. 4. 1. 3. இந்திரன்*

மருதநில மக்கள் இந்திரனை வழிபட்டிருக்கிறார்கள். எப்போதும் இன்பம் விழைந்து ஆடல் பாடல்களில் மனம் செலுத்தும் இந்திரனைப் போலவே இன்பம் விழைந்து வாழ்ந்தமை சங்க இலக்கியங்களால் அறிய முடிகிறது.

#### *5. 4. 1. 4. திருமால்*

திருமால் முல்லை நில மக்களின் தெய்வம் ஆவார். திருமால் பண்டைத் தமிழர்களால் வணங்கப்பட்டவர். பரிபாடல் என்னும் இலக்கியம் திருமால் பெருமையினைப் பகரும் பலராமர் வழிபாடும் சிறப்புப் பெற்றிருந்தது.

#### *5. 4. 1. 5. நிமித்தங்கள்*

நிமித்தங்கள் தமிழர் மக்களால் பெரிதும் மதிக்கப்பட்டன. எதிர்வரும் தீமையை முன் உணர்த்துவன நிமித்தங்கள் ஆகும். போருக்கு செல்லும் முன் நிமித்தமறியும் பண்பு நம் தமிழரிடையே இருந்தது.

www.tntextbooks.in

*5. 4. 1. 6. ஊழ்வினை*

'ஊழ்' என்னும் 'வினைப்பயனை மக்கள் மதித்தனர். முற்பிறப்பில் செய்த வினைப்பயன்களை ஊழ்வினைப் பயன் என்றனர். தொடர்ந்து அடுத்த பிறவியும் இவ்வினைப் பயன் காரணமாகவே அமையும் என நம்பினர் தமிழர்.

திருவள்ளுவரும் "ஊழிற் பெருவளி யாவுள" என்று வினவுகின்றார். மாடலனும் கோவலன் பற்றி கவுந்தி அடிகளாரிடத்துக் கூறுங்கால் இக்கோவலன் இம்மை செய்தலே யன்றி நல்வினை இத்திருத்தகு மாமணிக் கொழுந்துடன் ஈண்டுப் போயிருந்தது முன்வினை என்றார். இதனால் ஊழ்வினைப் பயன் தப்பாது வந்து சேரும்.

*5. 4. 1. 7. தென்புலத்தார்*

இறந்துபட்ட முன்னோர்கள் இடையுலகம் ஒன்றில் வாழ்வதாக எண்ணினர். அவர்கள் வாழும் உலகம் தென் திசையில் இருப்பதாக நம்பினர். அதனால் அவர்கள் "தென்புலத்தார்" என்றழைக்கப் பட்டனர்.

*5. 4. 1. 8. நடுகல் வணக்கம்*

போர்க்களத்தில் வீரமரணம் அடைந்த வீரர்களை அடக்கம் செய்த இடத்தில் அவ்வீரனது பெயர், புகழ், சிறப்பியல்புகளை எழுதிய கல்லை நட்டு வணங்கினர். இதற்கு நடுகல் வணக்கம் என்ற பெயர் வந்தது.

*5. 4. 1. 9. பத்தினி வணக்கம்*

கணவனைத் தெய்வமாக மதித்து வாழ்ந்த பெண்களுக்குச் சிலையெடுத்துச் சிறப்பு வழிபாடுகள் செய்தமையை சிலப்பதிகாரம் வாயிலாக அறிகிறோம்.

*5. 4. 1. 10. பேய், பூதம், அணங்குகள்*

பேய், பூதம், அணங்குகள் இருப்பதாகவும் அவை மக்களை அச்சுறுத்துவதாகவும் கருதி அஞ்சினர். அணங்குகள், மலை, குளம், கடல் போன்ற இடங்களில் இருப்பதாக நம்பினர். பேய்கள் சுடுகாட்டில் பிணம் தின்று வாழ்வதாக நம்பினர். குற்றம் செய்பவர்களை பூதம் தண்டிக்கும் என்றும் நம்பினர்.



*5. 4. 1. 11. இயற்கை வழிபாடு*

பழந்தமிழர் இயற்கையை வழிபாடு செய்தனர். சூரியன், மழை, ஆறு, மரம், (வேம்பு, அரசு) ஆகியவற்றை வழிபாடு செய்து வாழ்ந்தனர்.

**5. 4. 2. பிறசமயங்கள்**

'மணிமேகலை' என்ற சிறப்பு வாய்ந்த காப்பியத்தை தமிழ்மொழி அச்சமயத்திற்கு வழங்கிச் சிறப்பிக்கிறது. வளையாபதியும், குண்டலகேசியும், பௌத்த காப்பியங்களே. வீரசோழியம் என்ற இலக்கணநூலும் பௌத்தர்கள் இயற்றியதே.

இந்திய நாட்டின் தொன்மையான சமயங்களில் சமண சமயமும் ஒன்று. சமணர்கள் மதுரையில் 'வச்சிர நந்தி சங்கத்தை' நிறுவித் தமிழ்த் தொண்டு புரிந்து வந்தனர். சங்க கால சமணப்புலவர் உலோச்சனார், நிகண்டனார் என்னும் இருவர். சமணரான இளங்கோவடிகள் 'சிலப்பதிகாரத்தைப்' படைத்தார். 'சீவக சிந்தாமணி' திருத்தக்க தேவர் என்ற சமணச் சான்றோரால் இயற்றப்பட்டது. இவை தவிர ஐஞ்சிறு காப்பியங்களாகிய உதயண குமார காவியம், நாக குமார காவியம், யசோதர காவியம், சூளாமணி, நீலகேசி ஆகியவையும் சமணப் பெரியோர்கள் பாடியதேயாகும்.

நீதி நூல்கள் பலவும், இலக்கண் நூல்களும், நிகண்டும், சமணப் பெரியோர்களால் செய்யப்பட்டிருக்கின்றன.

சமயத்தில் சாராது ஆன்மிகத்தை அடித்து கூறும் 'திருக்குறள்.' உலகத்தின் தலைசிறந்த மொழிகள் அனைத்திலும் மொழியாக்கம் செய்யப்பட்டு, அதனுடைய அறிவியல், பொருளியல், இன்பவியல் கருத்துகளுக்காகப் பெரிதும் போற்றிப் பாராட்டும் நிலையைப் பெற்றிருக்கிறது. இது வட இந்திய மொழிகள் அனைத்திலும் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது.

www.tntextbooks.in

## 5. 5. இந்தியப் பண்பாட்டிற்குத் தமிழ்ப்பண்பாட்டின் கொடை

தமிழர்கள் மிகச் சிறந்த பண்பாட்டையும், நாகரிகத்தையும் உடையவர்கள். இதனை உலக வரலாற்று ஆசிரியர்கள் ஒருமனதாக ஏற்றுக் கொள்கின்றனர். இவர்கள் இந்தியப் பண்பாட்டு வளர்ச்சிக்கு வழங்கியுள்ள கொடை அளவிடற்கரியது.

### 5. 5. 1. மொழிக்கொடை

மொகஞ்சதாரோ, ஹரப்பா போன்ற இடங்களில் பல நூற்றாண்டுகளுக்கு முன்பே திராவிடர்கள் மிக உயர்நத நாகரிகத்துடன் வாழ்ந்ததை அறிகிறோம். வடநாட்டு மொழிகள் பலவற்றிலும், தென்னாட்டு மொழிகள் அனைத்திலும் தமிழ்ச் சொற்களை இன்றும் காண முடிகிறது. இந்தியாவிற்கு வெளியே கடல்கடந்த நாடுகளிலெல்லாம், இந்திய நாகரிகத்தோடு சென்று பரவியுள்ள இந்திய மொழி தமிழ்மொழியே என்பது உலகறிந்த உண்மை. வேதகாலத்திலேயே சமஸ்கிருதத்தில் கலந்த தமிழ்ச் சொற்கள் பலவாகும்.

### 5. 5. 2. திருக்கோயில்கள்

வானுயர்ந்து நின்று இந்நாட்டின் சமயப் பண்பாட்டு வளர்ச்சிகளை எடுத்துக்காட்டும் அழகிய சின்னங்கள் தமிழகத்தின் திருக்கோயில்களாகும். திருக்கோயில்கள் பண்டைக்காலத்தில் பண்பாட்டு மையங்களாகத் திகழ்ந்தன. கலைக் கூடங்களாகத் திகழந்தன. இவை உயர்ந்த கட்டட, சிற்ப, ஓவியக்கலைகள் நிறைந்து விளங்குவனவாக இருந்தன.

பாண்டிய, பல்லவ, சோழ மன்னர்கள் காலத்தில் இக்கலைகள் பெரிதும் போற்றப்பட்டன. எண்ணற்ற கோயில்கள் எழுந்தன. இவையனைத்தும் தமிழகம் இந்தியாவிற்கு வழங்கிய கொடை எனலாம். இதே அமைப்பில் வடஇந்தியாவில் பலகோயில்கள் எழுந்துள்ளதைக் காணலாம். தமிழகக் கலைப் பாரம்பரியம் உலகமே வியந்து பாராட்டும் வகையில் அமையப்பெற்றுள்ளது. சமய பௌத்த சமயங்களைச் சார்ந்த பள்ளிகளும், கோயில்களும், குடைவரைக் கோயில்களையும் தமிழகமெங்கும் காணமுடிகிறது. திருச்சி, தஞ்சை, திருவானைக்கா, சிதம்பரம், மதுரை, திருச்செந்தூர், தென்காசி, காஞ்சி,



சுசீந்தரம், திருவரங்கம், திருக்கழுக்குன்றம், குடந்தை, கன்னியாகுமரி, இராமேஸ்வரம் போன்ற இடங்களில் மிகச்சிறப்பு வாய்ந்த இந்து சமயத்திருக்கோயில்களைக் காணலாம்.

#### *5. 5. 2. 1. கோயில்களின் சிறப்பு*

கோயில்களில் மனிதனை விலங்கு நிலையிலிருந்து உயர்த்தி மனித நிலைக்கு மேலும் தெய்வ நிலைக்கும் உயர்த்தப் பல அரிய கருத்துகளை கேட்டு பயன்பெற சொற்பொழிவுகள் நடத்தப்பட்டன. தமிழர் பண்பாட்டை விளக்கும் நிகழ்ச்சிகள் நடைபெற்று கோயில்கள் பண்பாட்டு மையங்களாகத் திகழ்ந்தன.

மக்கள் தன் நிலையில் உயர மக்கள் பணி செய்ய, தியாக உணர்வு பெற பக்தியும், அன்பும் அவசியம் என உணர்ந்தனர். சிறந்த வழிபாட்டுமுறை, ஆகமங்களின் சாரமான மந்திரவழிபாடு கொண்ட கோயில்கள் பக்தியின் பிறப்பிடமாகத் திகழ்ந்தன.

கடவுள் இருக்குமிடத்தை மோட்சம், வைகுண்டம், சிவலோகம், வீடுபேறு எனும் வார்த்தைகளால் உணர்த்தினர். சங்கத்தமிழ் அன்புள்ளம் கொண்டவர் உள்ளம், ஏழையின் சிறிப்பு இவற்றில் இறைவன் இருப்பதாக எண்ணி வாழ்ந்தனர். அவ்விடத்தை கோயிலாகக் கொண்டு சிறப்பித்தனர்.

வயது என்பது உயிரோடு கூடிய உடலுக்கு உண்டு என்றும் ஆன்மாவிற்கு இல்லை. ஆன்மா தான் எதிலிருந்து வந்ததோ அதிலே சேர முயன்று வருதலை ‘லயமாகுதல்’ என்பர். இவ்விடங்கள் பெரும்பாலும் கோயிலாகவே இருந்தன. ஆதலால் கோயில்கள், ஆன்மா லயமாகுமிடங்களாக இருந்தன எனவே கோயில்களை ஆலயங்கள் எனவும் அழைத்தனர்.

கோயில்களில் கலைகள் வளர்ந்து சிறந்ததாலும் மக்கள் அவற்றைக் கண்டு மகிழந்ததாலும் கோயில்கள் நுண்கலைகள் வளருகின்ற இடமாகத் திகழ்கின்றன.

தேவார, திருவாசகப் பாடல்கள், சிவன் கோயில்களில் பாடப்பெற்றன. பெரியோர்களுக்கும் குழந்தைகளுக்கும் போதிக்கப்பட்டன. கோயில்கள் திருமுறைகள் வளருமிடமாக

www.tntextbooks.in

இருந்தன.

மழை, புயல், வெள்ளம் போன்ற காலங்களில் மக்களுக்குப் புகலிடமாகத் திகழ்ந்தவை திருக்கோயில்களாகும். மேலும் திருமணம், விழாக்கள் போன்றவை கோயில்களின் மண்டபங்களில் நடைபெற்று வந்தன. எனவே கோயில்கள் சமுதாய புகலிடமாகவும், ஊர்ப்பணி மன்றங்களாகவும் இருந்தன என அறியமுடிகிறது.

தமிழர் வாழ்வு கோயிலோடு இணைந்ததாகவே அமைந்தது. ஔவையாரும், 'ஆலயம் தொழுவது சாலவும் நன்று' என்றார். 'கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்' என்பது பழமொழி. இக்கோயில்கள் மூலம் ஆன்மிகம் வளர்ந்தது. மக்களிடையே ஒற்றுமை ஓங்கி மனித நேயம் மலருமிடமாகத்திருக்கோயில்கள் திகழ்ந்தன என்பதை அறிகிறோம்.

### 5. 5. 3. *சிற்பம்*

தமிழ்நாட்டின் திருக்கோயில்கள் சிறபக்கலைக்கு எடுத்துக்காட்டாகத் திகழ்கின்றன. இறைவன் இறைவி திருமேனிகள், தூண்களில் வடிக்கப்பட்டுள்ள சிற்பங்கள், கோபுரங்களில் அமைக்கப்பட்டுள்ள சுதை வேலைச் சிற்பங்கள் இவை அற்புதமாக வடிவமைக்கப்பட்டவை. புராண இதிகாசக் கதைக் காட்சிகளை விளக்கும் வண்ணம் அமைந்துள்ளன. பஞ்ச உலோகங்களால் வடிவமைக்கப்பட்ட இறைவன் திருமேனிகள் இன்றும் தமிழ்நாட்டில் வடிவமைக்கப்பட்டு உலகின் பல நாடுகளுக்கும் அனுப்பப் படுவதைக் காணும்போது பண்டைத் தமிழர் சிற்பக்கலை நுணுக்கங்களை வருங்காலச் சந்ததியினருக்கு விட்டுச் சென்றுள்ள பொக்கிஷமாகும்.

### 5. 5. 4. *ஓவியம்*

மொழி தோன்றுவதற்கு முன்பே ஓவியம் தோன்றியது எனலாம். ஓவிய எழுத்துக்கள் இன்றும் மொழி எழுத்துகளாகப் பயன்படுத்தப்படுவதை ஜப்பான், சீன மொழிகளில் காணலாம். ஓவியங்களை பண்டைத் தமிழர்கள் கற்களில் வடித்தும், கோயில்களில் வரைந்தும் வளர்த்தனர். வண்ணம் தீட்டப்பெற்ற ஓவியங்கள் கோயில் சுவற்றிலும் மேல் கூரை விதானங்களிலும்



வரைந்தனர். இதிகாச, புராணக்காட்சிகள் இதன் மூலம் விளக்கப்பட்டன. தஞ்சைப் பெரிய கோயிலில் இராசராச சோழனின் வரலாற்று நாடகக் காட்சிகள் இன்றும் இருப்பதைப் பார்க்க முடிகிறது. இவ்வண்ணக் கலவைகள் காலவெள்ளத்தால் அழியா வண்ணமும், மாறா வண்ணமும் தீட்டப்பெற்றிருக்கும் விந்தை இன்றும் போற்றுதற்குரியது.

### 5. 5. 5. நாட்டியம்

பண்டைத் தமிழர்கள் நாட்டியக் கலையில் சிறந்து விளங்கினர். நாட்டியம் என்பது இசையோடு கூடிய கூத்து ஆகும். சிலப்பதிகாரம் கூத்து வகைகள் பற்றி இயம்புகிறது. கட்புலனாகும் இன்பத்தைத் தருவது ஆடற்கலை. உடல் சோர்வு, மனச்சோர்வையும் நீக்கும் வடிகால் ஆடலும், பாடலும் என்றால் மிகையாகாது. பண்டைக்காலத்தே ஆடல் நிகழ்வதற்கு அரங்குகள் இருந்தன. மரநிழல்களிலும் தெருக்களிலும், கோயில் முற்றத்திலும், மாடமாளிகைகளிலும், மண்டபங்களிலும் மகளிர் சிலம்பொலிக்க ஆடினர். "கை வழிக்கண்களும் கண்வழி மனமும் செல்ல ஆடுதலே" ஆடலின் நுட்பமாகும்.

ஆடவல்ல நடனமகள் 'விறலி' என்றழைக்கப்பட்டாள். நடன மகன் 'கூத்தன்' என்றழைக்கப்பட்டான். வள்ளிக் கூத்து, முருகனை வழிபட்டு ஆடும் 'குன்றக்குரவை,' திருமாலை வழிப்பட்டு ஆடும். 'ஆய்ச்சியர் குரவை' பெண்கள் கைகோத்தாடும் குரவைக் கூத்து துணுங்கைக் கூத்து, குணலைக் கூத்து போன்றவை இலக்கியங்களில் காணப்படும் கூத்து வகைகளாகும்.

சிவன் ஆடுகின்ற கூத்து 'தாண்டவம்' எனப்படும். சைவப்பெருமக்கள் தன் இறைவனை ஆடும் கடவுளாக, அம்பலக் கூத்தனாக, ஆடல் வல்லானாக நடராசனாகப் போற்றி வணங்கினர்.

வைணவப் பெருமக்களும் திருமாலைக் குழலூதிக் கோபியருடன் ஆடும் கண்ணனாகப் போற்றினர்.

தமிழ் நாட்டுத் திருக்கோயில்களின் நடனமாந்தர்கள் பலர் நாட்டிய நிகழ்ச்சிகளை நிகழ்த்தியிருக்கிறார்கள். இவர்கள்

www.tntextbooks.in

இறைவனின் திருவிளையாடற் காட்சிகளை நாட்டியமாடி மக்களை பக்திப் பரவசப்படுத்தியிருக்கிறார்கள் என்பதும் கல்வெட்டுகள் மூலம் அறியப்படுகிறது. இந்நடன மாந்தர்களின் நடனக்காட்சிகள் கோயில்களில் சிற்பங்களாக வடிவமைக்கப்பட்டன. இவற்றிலிருந்தே இன்றைய பரத நாட்டியம் என்ற கலை தோன்றியது. இறைவனையும் ஆடல் அரசனாகப் பார்த்தது. நம் தமிழர் சமுதாயம் காலைத் தூக்கி நின்றாடும் திருநடராசர் திருமேனி, நடனக்கலைக்கு ஓர் எடுத்துக்காட்டாகும். இந்தியப் பெருநாட்டிற்கு பரதக்கலை ஒரு சிறந்த கொடை என்றால் மிகையாகாது.

### 5. 5. 6. விழாக்கள்

தமிழ் மக்கள் உழைப்பே செல்வமாக கொண்டு வாழ்ந்தனர். திரை கடலோடியும் திரவியம் தேடிப் பொருள் வளம் பெருக்கினர். மகிழ்ச்சி நிறைந்த மக்கள் வாழ்வில் விழாக்களுக்குப் பஞ்சமில்லை. தன் நிலத் தெய்வங்களை வணங்கி விழாக்கள் செய்தனர். உயிர்த்தொழிலாம் உழவுத்தொழில் செய்து மகிழ்ந்தனர். பயிர் வளர்வதற்கும் மழைக்கும் காரணமான சூரியனை வணங்கி விழா வெடுத்தனர். சர்க்கரை பொங்கலிட்டு, கரும்பு வைத்துப் படையல் செய்து சூரியனை வழிபட்டனர். அத்திருநாளை தைமாதம் முதல்நாள் பொங்கல் திருநாளாகக் கொண்டாடினர். உழவுக்கும் தொழிலுக்கும் உதவிய கால்நடைகளுக்கு நன்றி பாராட்டும் விழாவாக மறுநாள் மாட்டுப் பொங்கல் விழா கொண்டாடினர். அன்பு பாராட்டி உதவிய உறவுக்கும் நட்புக்கும் விருந்து வைத்து காணும் பொங்கல் விழாவெடுத்தனர். இவ்வாறு பொங்கல் திருநாள் தமிழர் திருநாளாக இன்றும் விளங்குவதைக் காணலாம். மேலும் இந்நாளில் “மஞ்சுவிரட்டு, விற்போர் - மற்போர், வாள்போர்” போன்ற வீர விளையாட்டுக்களை விளையாடி மகிழ்வர்

தொழில் செழிக்க உதவிய காவரியாற்றுக்கு விழா எடுத்தனர். ஆடிமாதம் 18-ஆம் நாள் ஆடிப்பெருக்காக கொண்டாடி நாடும் வீடும் சிறக்க மேலும் அருளுமாறு வேண்டி வழிபட்டனர்.

இத்தமிழர் பொங்கல் விழாவே வடக்கில் மகர சங்கராந்தியாகக் கொண்டாடப்படுகிறது. இந்திய பெருநாட்டுக்குத் தமிழர் வழிபாட்டுமுறையிலும் வழிகாட்டியாக இருந்தனர்.



### 5. 5. 7. கிராமிய விளையாட்டு

பண்டைத் தமிழருடைய வீரமும் விளையாட்டும் இணைந்தே இருந்தன. மற்போரும், விற்போரும், வீர விளையாட்டாகவே இருந்திருக்கிறது. இது தவிர பெண் குழந்தைகளுக்கு அம்மானை, ஊசல் போன்றவையும் ஆண் குழந்தைகளுக்கு சிற்றில், சிறுபறை, சிறுதேர் போன்றவை விளையாட்டாக இருந்தமை அறிய முடிகிறது. தமிழர் கூடிச் சேர்ந்து விளையாடும் விளையாட்டுக்கள் மூலம் ஒற்றுமை உணர்ச்சியும், சேர்ந்து வாழும் ஆர்வமும் பெருகி நாட்டுப்பற்றையும் மொழிப்பற்றையும் வளர்த்தது எனலாம்.

#### 5. 5. 7. 1. ஜல்லிக்கட்டு

பண்டைத் தமிழரின் வீரவிளையாட்டில் ஜல்லிக்கட்டும் ஒன்று. இதை அக்காலத்து ‘ஏறுதழுவல்’ என்பர். அடக்கமுடியாத காளைகளை அடக்கிப் பரிசாகப் பெண்களை மணப்பர். பண்டைத் தமிழர். இவ்விழாவே தற்போதும் காணும் பொங்கலன்று ஜல்லிக்கட்டாக நடைபெறுகிறது.

#### 5. 5. 7. 2. இந்திர விழா

மருத நிலக்கடவுள் - இந்திரன். இந்திரனை வழிபட்ட மக்கள் இந்திரன் கேளிக்கைகளில் மகிழ்ந்திருப்பதைப் போலவே தாங்களும், மகிழ்ந்திருக்க விரும்பி, வசந்த காலத்தின் - முழு நிலா நாளை இந்திர விழாவாகக் கொண்டாடி மகிழ்வர். இவ்விழா முன்னும் பின்னுமாக 5, 6 நாட்கள் நடைபெறும். மக்கள் கேளிக்கைகளிலும் வீர விளையாட்டுக்களில் மகிழ்ந்திருப்பதையே விரும்புவர். பொருள் படைத்தோர், உணவும், பொருளும் அளித்து மகிழ்வர். பல மேடைகளில் இசையும், கூத்தும் நடைபெறும். இவ்விழா சங்ககாலத்தில் சிறந்திருந்தது என்பதை சிலப்பதிகாரம் மூலம் அறிகிறோம்.

### 5. 5. 8. பிற கொடைகள்

***5. 5. 8. 1. திருக்குறள் :*** உலகப்பொதுமறையாம் திருக்குறள் தமிழர்களின் கொடையாகும்.

www.tntextbooks.in

***5. 5. 8. 2. மருத்துவம் :*** சித்த மருத்துவம் என்னும் மூலிகை மருத்துவத்தை உலகிற்கு வழங்கியவர்கள் தமிழர்கள்.

***5. 5. 8. 3. இசை :*** தமிழிசை தமிழர்களின் பண்பட்ட உணர்விற்கு சிறந்த எடுத்துக்காட்டாகும்.

***5. 5. 8. 4. கப்பல் கட்டுமானம் :*** பன்னெடுங்காலத்திற்கு முன்னரே கப்பல் கட்டுமானத்தையும், தொழில் நுட்பத்தையும் அறிந்திருந்தனர். தமிழர்கள் கப்பல் போக்குவரத்து தமிழர்கள் கண்ட தொழில் நுட்பமாகும்.

***5. 5. 8. 5. விருந்தோம்பல் :*** பழந்தமிழர் விருந்தினரை வரவேற்று உபசரிப்பதில் பெருமகிழ்ச்சி அடைந்தனர்.

***5. 5. 8. 6. நட்பு :*** பழந்தமிழர் நட்பினை உயிரினும் மேலானதாய் மதித்துப் போற்றினர். உணர்ச்சியொத்து பழகுதலே நட்பு என்றனர்.

***5. 5. 8. 7. காதல் :*** தமிழர் காதல் என்னும் சொல்லை அன்பு செலுத்துதல் முதலாய பல நிலைகளில் பயன்படுத்தினர்.

***5. 5. 8. 8. வீரம் :*** பண்டைத் தமிழரின் வாழ்வு முறையே அவர்களது வீரம் செறிந்த வாழ்வு முறை எனலாம்.

***5. 5. 8. 9. மானம் :*** "மயிர் நீப்பின் உயிர் வாழாக் கவரிமான்" என்று தமிழர்கள் மானத்தை உயிரினும் மேலானதாய் போற்றினர்.

***5. 5. 8. 10. கற்பு :*** கடவுள் நெறிக்கு மேலானதாய் பெண்கள் கற்பு நெறியில் வாழ்ந்து அழியாப் புகழ் பெற்றனர். இக்கற்புடைமை தமிழரின் உயரிய ஒழுக்க நெறியாம்.

இவற்றை நோக்கும்போது பண்டைத் தமிழர், இந்தியப் பெருநாட்டிற்கு வழங்கிய அளவற்ற பண்பாட்டுக் கொடை பற்றி அறிய முடிகிறது.



## 5. 1. பயிற்சி வினாக்கள்

***அ. ஒரிரு வரிகளில் விடையளி***

1. திராவிட மொழிகள் யாவை?
2. தமிழர் பண்பாட்டின் சிகரமாய் எதனைக் கூறலாம்?
3. பண்டைத் தமிழரின் பண்பாட்டை அறிய உதவுவன யாவை?
4. தமிழரின் அகவாழ்வு எவ்வகையில் அமைந்தது?
5. ஐந்திணை ஒழுக்கத்தின் தலைமக்கள் யாவர்?
6. மனைமாட்சியை வள்ளுவர் எவ்வாறு சிறப்பிக்கிறார்?
7. பண்டைத் தமிழரின் வீரத்தை எவற்றில் அறியலாம்?
8. நால்வகைப் படைகளாக கூறப்படுவன யாவை?
9. சங்ககாலத்தில் போர் எம்முறையில் நடைபெற்றது?
10. தொல்காப்பியம் கூறும் புறத்திணைகள் யாவை?
11. விருந்தாவது யாது?
12. அமிழ்தமேயாயினும் வேண்டுவதில்லை எப்போது?

***ஆ. ஒரு பத்தி அளவில் அல்லது பத்து வரிகளுக்கு மிகாமல் விடையளி***

1. சங்க இலக்கியங்களால் அறியப்படும் செய்திகள் யாவை?
2. தமிழர் பண்பாட்டின் சிறப்புக் கூறாகிய மணவாழ்க்கை பற்றிக் கூறுக.
3. அகவாழ்வின் பாத்திரங்களாக படைக்கப்பட்டோராய் இலக்கியங்கள் கூறுவன யாவை?
4. சங்க காலத் தமிழின் அறப்போர் முறையை விவரி.
5. எவர் மீது படைக்கலம் செலுத்தக் கூடாதென புறநானூறு கூறுகிறது?
6. சங்க காலத்தில் 'நட்பின்' மேன்மையைச் சான்றால் விளக்குக.

www.tntextbooks.in

7. ‘விருந்து’ பற்றி சங்க இலக்கியங்களால் அறியப்படும் செய்தி யாது?
8. ‘கற்புடைமை’ பற்றி சங்க இலக்கியங்கள் கூறுவன யாவை?

**இ. ஒரு பக்க அளவில் அல்லது முப்பது வரிகளுக்கு மிகாமல் விடையளி**

1. தமிழர் பண்பாட்டுக் கூறுகளில் தலையாயதாகிய ‘காதல், வீரம்’ பற்றி விவரி.
2. ‘ஈகை’ மற்றும் கொடையை சங்க இலக்கியச் சான்றுகளால் விளக்கு.
3. சங்கத் தமிழரின் ‘நட்பு,’ ‘விருந்தோம்பல்’ பாங்கினை தொகுத்துக் கூறுக.
4. உலக ஒருமைப்பாட்டில் சங்க கால மக்களின் பங்கினை விவரி.

**ஈ. நான்கு பக்கங்களுக்கு மிகாமல் விடையளி**

1. பழந்தமிழரின் பண்பாட்டுக் கூறுகளைத் தொகுத்து எழுதுக.

## 5. 2. பயிற்சி வினாக்கள்

**அ. ஓரிரு வரிகளில் விடையளி**

1. ஆசிரியர் தமிழின் தொன்மையை எவ்வாறு விளக்குகிறார்?
2. ‘முத்தமிழாவது’ யாது?
3. ‘அகச் சிந்தனைகளை’ எத்தமிழ் குறிப்பிடுகின்றது?
4. ஆன்மாவின் இயல்பினை எது குறிப்பிடுகின்றது?
5. உடலின் மெய்பாடுகளை எத்தமிழ் குறிப்பிடுகின்றது?
6. இசைக்கு “பண்” எனப் பெயர் வரக் காரணம் யாது?
7. இசைப்பாடல்களை இயற்றிய சான்றோர் இருவரைக் கூறு?
8. இசை பற்றிய குறிப்புகள் காணப்படும் இலக்கியங்கள் இரண்டைக் கூறுக?



9. சிலப்பதிகாரத்தில் நாடகம் பற்றி அறிவன யாவை?
10. பிற்கால சோழர்காலத்தில் நாடகக் கலையைப் பற்றி கூறு.
11. ‘மனோன்மணியத்தின்’ ஆசிரியர் யார்?
12. ‘நாடக உலகின் தந்தை’ எனப்படுபவர் யார்? அவரது நாடகங்களைக் கூறு.
13. நாடக உலகின் இமயம் எனப் போற்றப்படுபவர் யார்?
14. பேரறிஞர் ‘அண்ணாவின்’ நாடகங்கள் இரண்டினைக் கூறு.
15. நாடகத்துறை வாயிலாக திரையுலகில் பிரகாசித்த நால்வரைக் குறிப்பிடு.
16. நாடக உலகின் ஜாம்பவான்கள் யார்? ஏன்?
17. புகழ்மிக்க இரு வரலாற்று நாடகங்களைக் கூறுக?

**ஆ. ஒரு பத்தி அளவில் அல்லது பத்து வரிகளுக்கு மிகாமல் விடையளி**

1. ‘சங்கத் தமிழ் மூன்றும் தா’ என ஔவையார் வேண்டக் காரணம் யாது?
2. இயல், இசை, நாடகம் என்னும் மூன்றும் எவற்றை விளக்குகின்றது?
3. ‘இயற்றமிழ்’ பற்றி ஆசிரியர் கூறுவன யாவை?
4. இயற்றமிழில் அடங்கும் செய்திகளையும் அமைப்பையும் கூறுக.
5. ‘இசைத்தமிழின்’ சிறப்பினைக் கூறு?
6. தமிழர் தம் வாழ்வில் இடம் பெற்ற பாடல்களை வரிசைப்படுத்துக.
7. ‘நாதோபாசனை’ என வடமொழியார் எதனைக் கூறினார்?
8. இராஜா சர் அண்ணாசை செட்டியார் ‘தமிழிசைக்கு’ ஆற்றிய அரும்பணி யாது?
9. ‘நாடகத் தமிழின்’ சிறப்பாக ஆசிரியர் கூறுவன யாவை?
10. எண் வகை ‘மெய்ப்பாடுகளைக்’ கூறு.

www.tntextbooks.in

**இ. ஒரு பக்க அளவில் அல்லது முப்பது வரிகளுக்கு மிகாமல் விடையளி**

1. இயற்றமிழ் பற்றி ஆசிரியர் கூறும் செய்திகளைத் தொகுத்து எழுதுக.
2. பழந்தமிழர் 'இசை நூல்களாக' அறியப்படுவன யாவை?
3. சங்க காலப் 'பண்களும்', 'இசைக்கருவிகளும்' பற்றிய செய்திகளை தொகுத்துக் கூறுக.
4. 18 மற்றும் 19ஆம் நூற்றாண்டுகளில் நாடகத் துறையின் வளர்ச்சியை விவரி.
5. நாடகக் கலை பற்றி பெருமைப்பட வேண்டிய செய்திகளைத் தொகுத்து எழுதுக.

**ஈ. நான்கு பக்கங்களுக்கு மிகாமல் விடையளி**

1. 'இசைத் தமிழ்' பற்றி ஆசிரியர் கூறும் செய்திகளைத் தொகுத்து எழுதுக.
2. 'நாடகத் தமிழ்' பற்றியும் அதன் வளர்ச்சி மற்றும் அதன் இன்றியமையாமையையும் விவரி.

## 5. 3. பயிற்சி வினாக்கள்

**அ. ஓரிரு வரிகளில் விடையளி**

1. தொன்மையான இரு தமிழ் இலக்கண நூல்களைக் கூறுக.
2. தொல்காப்பியத்தின் ஆசிரியர் யார்?
3. திணை என்ற சொல்லின் பொருள் யாது?
4. ஐந்திணைகள் என தொல்காப்பியர் கூறுவன யாவை?
5. குறிஞ்சித்திணையின் உரிப்பொருள் மற்றும் தெய்வம் பற்றி எழுதுக?
6. மருதநிலமாவது யாது? இந்நில உரிப்பொருள் யாது?
7. புறப்பொருளாவது யாது?



8. வெட்சி, கரந்தை திணைகள் குறிப்பு எழுதுக?
9. வஞ்சி, காஞ்சித் திணைகள் பற்றி எழுதுக?
10. பாடாண் திணையாவது யாது?

**ஆ. ஒரு பத்தி அளவில் அல்லது பத்து வரிகளுக்கு மிகாமல் விடையளி**

1. உலகத் தோற்றம் பற்றி தொல்காப்பியர் கூறுவன யாவை?
2. ஆடவர் மற்றும் பெண்டிர் நிலையாக தொல்காப்பியர் கூறுவன யாவை?
3. அகத்திணையாவது யாது?
4. குறிஞ்சித் திணை பற்றிய செய்திகளைக் கூறுக.
5. முல்லைத் திணை பற்றிய செய்திகள் யாவை?
6. நெய்தல் திணை பற்றிய செய்திகள் யாவை?
7. தொல்காப்பியர் கூறும் புற ஒழுக்கங்கள் பத்தினைக் கூறுக?
8. தும்பை, வாகைத் திணைகளை விவரி.

**இ. ஒரு பக்க அளவில் அல்லது முப்பது வரிகளுக்கு மிகாமல் விடையளி**

1. தொல்காப்பியர் திணை வகைகளாகப் பாகுபடுத்தியமையை விவரி.
2. பாலையின் தோற்றம் பற்றியும் இந்நிலச் செய்திகளாக தொல்காப்பியர் கூறுவன யாவை?
3. தொல்காப்பியரின் புறத்திணை செய்திகளைத் தொகுத்த பாங்கினை விவரி?
4. ஐவகை நிலப்பாகுபாடுகளையும், மெய்ப்பாட்டு உணர்வுகளையும் விவரி?

**ஈ. நான்கு பக்கங்களுக்கு மிகாமல் விடையளி**

1. தொல்காப்பியம் பற்றியும், தொல்காப்பியர் கூறும் அகத்திணை பாகுபாடுகளை விவரி?
2. தொல்காப்பியர் கூறும் புறத்திணை பாகுபாடுகளைத் தொகுத்துக் கூறு?

www.tntextbooks.in

## 5. 4. பயிற்சி வினாக்கள்

**அ. ஓரிரு வரிகளில் விடையளி**

1. சங்க கால மக்களின் சமயத் தொடர்பான நம்பிக்கைகள் யாவை?
2. இயற்கையை வணங்கினர் தமிழர் - என்பதை எவ்வாறு அறியலாம்?
3. ‘கடவுள்’ என்று பெயரிடக் காரணம் யாது?
4. சிவபெருமானின் வேறு பெயர்கள் யாவை?
5. திருமால் பற்றி சங்க நூல்களால் அறியப்படுவன யாவை?
6. நிமித்தங்கள் - குறிப்பு வரைக.
7. ‘தென்புலத்தார்’ என்றழைக்கப்பட்டவர் யாவர்?
8. ‘பத்தினி வணக்கமாய்’ சிலப்பதிகாரம் கூறுவன யாவை?
9. திராவிட உபநிடதம் என்ற பெருமைக்குரியது எது?
10. பௌத்த சமயக் காப்பியங்கள் இரண்டினைக் கூறு?
11. சிலப்பதிகாரத்தை இயற்றியவர் யார்?
12. சீவகசிந்தாமணி யாரால் இயற்றப்பட்டது?

**ஆ. ஒரு பத்தி அளவில் அல்லது பத்து வரிகளுக்கு மிகாமல் விடையளி**

1. கடவுள், இயவுள், இறை என சங்க இலக்கியங்களால் அறியப்படுவன யாவை?
2. வருண வழிபாடு பற்றி ஆசிரியர் கூறுவன யாவை?
3. ‘நடுகல்’ வணக்கம் பற்றி நீவிர் அறிவன யாவை?
4. சைவ நெறியை எடுத்துரைக்கும் நூல்கள் சிலவற்றைக் கூறுக?
5. சமண சமயக் காப்பியங்கள் பற்றி ஆசிரியர் கூறுவன யாவை?
6. திருக்குறளின் பெருமையை ஆசிரியர் எங்ஙனம் குறிப்பிடுகிறார்?
7. ஐஞ்சிறுகாப்பியங்கள் யாவை?
8. தமிழரின் இயற்கை வழிபாடு பற்றி ஆசிரியர் கூறுவன யாவை?

**இ. ஒரு பக்க அளவில் அல்லது முப்பது வரிகளுக்கு மிகாமல் விடையளி**

1. ஊழ்வினை பற்றிய செய்திகளைத் தொகுத்துக் கூறுக?
2. சமயத்துறைக்கான பக்தி இலக்கியங்களாக தமிழகம் வழங்கியனவற்றை தொகுத்துக் கூறுக?

**ஈ. நான்கு பக்கங்களுக்கு மிகாமல் விடையளி**

1. சங்க இலக்கியங்களில் காணப்படும் சமயக் கருத்துகளாக ஆசிரியர் கூறுவனவற்றை தொகுத்து எழுதுக?



## 5. 5. பயிற்சி வினாக்கள்

**அ. ஓரிரு வரிகளில் விடையளி**

1. திருக்கோயில்கள் ‘பண்பாட்டு மையங்கள்’ எவ்வாறு?
2. ‘ஆலயம்’ இச்சொல்லின் பொருளைக் கூறு?
3. ‘கோயில்கள் சமுதாயப் புகலிடங்கள்’ எனப்பட்டதேன்?
4. தஞ்சைப் பெரிய கோயில் யாரால் கட்டப் பெற்றது?
5. பொங்கல் திருநாள் வடநாட்டில் என்ன பெயரில் கொண்டாடப் படுகிறது?
6. பழந்தமிழரின் வீர விளையாட்டுகள் எவை?
7. ‘ஜல்லிக்கட்டு’ இதன் சங்ககாலப் பெயர் என்ன?
8. ஆடல்வல்ல நடனமகள், நடனமகன் எவ்வாறு அழைக்கப் பட்டனர்?

### ஆ. ஒரு பத்தி அளவில் அல்லது பத்து வரிகளுக்கு மிகாமல் விடையளி

1. இந்தியப் பண்பாட்டுக்கு தமிழ்மொழிக் கொடை என ஆசிரியர் கூறுவன யாவை?

2. திருக்கோயில்களின் பெருமைகளை ஆசிரியர் குறிப்பிடும் செய்திகளைக் கூறுக.

3. கோயில்கள் நுண்கலைகளின் பிறப்பிடம் - எங்ஙனம்?

4. ஓவியங்களின் சிறப்பை ஆசிரியர் எங்ஙனம் விளக்குகிறார்.

5. தமிழர் பண்டிகையாம் பொங்கல் திருநாளைப் பற்றி எழுதுக.

### இ. ஒரு பக்க அளவில் அல்லது முப்பது வரிகளுக்கு மிகாமல் விடையளி

1. திருக்கோயில்கள் இந்தியப் பண்பாட்டில் தமிழக பங்கினை உலகறியச் செய்தமையை விவரி.

2. நாட்டியக் கலையின் சிறப்பாக ஆசிரியர் கூறும் செய்திகளை தொகுத்துக் கூறுக.

3. தமிழக கிராமிய விளையாட்டுகள் சிலவற்றை விவரி.

### ஈ. நான்கு பக்கங்களுக்கு மிகாமல் விடையளி

1. இந்தியப் பண்பாட்டிற்கு தமிழகத்தின் கொடையினைத் தொகுத்து எழுதுக.

www.tntextbooks.in

# 6. இந்தியப் பண்பாட்டிற்கு சமயங்களின் கொடை

உலக மனிதர்கள் அனைவரும் துன்பத்தை நீக்கி இன்பத்தை அடைய விரும்புகின்றனர். அவ்வின்பமும் நீடித்து நிலைத்து இருக்கவேண்டும் என்று மேலும் விரும்புகின்றனர். ஆனால் உலக மக்கள் அனைவரும் தங்கள் வாழ்நாளில் சிறிதுகாலம் இன்பத்தையும் சிறிதுகாலம் துன்பத்தையும் மாறிமாறி அனுபவித்து வருவதைக் காண்கிறோம்.

உலகப் பொருள்கள் வழியாக மக்கள் அனுபவிக்கும் இன்பம் சிற்றின்பம் எனப்படும். வீடு, வாசல், மனைவி மக்கள் சொத்து, சுகம் என்பனயாவும் இச்சிற்றின்பத்தையே தரவல்லன. உலகப்பொருள்கள் அனைத்தும் அழியும் தன்மை உடையவை ஆதலால் சிற்றின்பமும் நிலைபெற்று நில்லாமல் அழிந்துவிடுகிறது. உலகில் அழியாமல் நிலைபெற்று நின்று இடையறாமல் அனுபவிக்கத் தகுந்த இன்பம் உள்ளது. அவ்வின்பம் பேரின்பம் எனப்படும் பெருவாழ்வு. இப்பேரின்பப் பெருவாழ்வை மக்கள் அனுபவிக்க பெரியோர்கள் இறைவனது அருளோடு வகுத்த வழியே சமயங்களாகும் இச்சமயங்களில் இந்து சமயம், சமண, பௌத்த சமயங்களின் தோற்றம், கோட்பாடுகள், மற்றும் அவற்றின் பண்பாட்டுக் கூறுகளை விரிவாக இப்பாடத்தில் காணலாம்.

## 6. 1. இந்து சமயம்

ஆரியர்கள் சிந்துநதி தீரத்தில் வசித்துவந்தபோது அவர்களை ‘சிந்துக்கள்’ அல்லது ‘இந்துக்கள்’ எனப் பாரசீகரும், கிரேக்கரும் அழைத்துவந்தனர். அவர்கள் பின்பற்றிய சமயமே இந்து சமயம் என்று சில சரித்திர ஆசிரியர்கள் கூறிகின்றனர். இந்திய நாட்டினரின் மதமே இந்து மதம் எனப்பொருள் கூறுவாரும் உண்டு.

www.tntextbooks.in

ஒரு நாட்டின் பெயராலோ, ஒரு ஆற்றின் பெயராலோ நமது ஒப்புயர்வற்ற மதம் ஏற்பட்டது என்பது பொருத்தமற்றது. ஆதலால் இதன் உண்மைப்பொருளை அறிய வேண்டுவது அவசியமாயிற்று. இந்து மதம் என்னும் பெயர் அதன் கொள்கையை மேற்கொண்டுவந்ததாகும்.

இந்து அல்லது ஹிந்து என்ற சொல்லை ஹிம்+து எனப் பிரிக்கலாம். ஹிம் – ஹிம்சையில், து – துக்கிப்பவன் எனப் பொருள் படும். ஓர் உயிர் எந்த காரணத்தினாலாவது வருந்துவதாக இருந்தால், அத்துயரத்தை தனக்கு ஏற்பட்ட துயரமாகக் கருதி அகற்ற முன்வர வேண்டும். அத்தகையவனே இந்து ஆவான். அப்பண்புமிக்க மக்களை கொண்ட மதமே இந்து மதமாகும்.

அன்பே கடவுள். இறைவன் எல்லா உயிர்களிடத்தும் நீங்காமல் வாழ்கிறான். எல்லா உயிர்களின் உடம்பையே அவன் கோயிலாக கொண்டுள்ளான். ஆதலால் எந்த உயிரின் உடலுக்கும் துன்பம் நேராவண்ணம் அவைகளிடம் அன்பு செலுத்தினால் அருள் வடிவமாகிய ஆண்டவனது அருள் பெறலாம். இதனை திருமூலர் தம் திருமந்திரத்தில்,

“அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலார்
அன்பே சிவமாவ தாரும் அறிகிலார்
அன்பே சிவமாவ தாரும் அறிந்தபின்
அன்பே சிவமாய் அமர்ந்திருந் தாரே” – என்கிறார்.

### 6. 1. 1. சனாதன தர்மம்

இந்து மதம் என்பதற்கு “சனாதன தர்மம்” என வேறு ஒரு பெயர் கூறுவாரும் உண்டு. இதற்கு அழிவில்லாத அறம் என்பது பொருள். மேலும் இந்து சமயம் முறையே திருநெறி, அருள்நெறி தவநெறி, மெயந்நெறி, சன்மார்க்கம் என்ற பல பெயர்களைக் கொண்டது. சமயம் என்பதற்கு ‘சமை’ என்பது பகுதியாய் உடம்பை வளர்ப்பதற்கு உணவுப் பொருளைச் சமைப்பது போல இறைவனை அடைவதற்கு பக்குவப்படுத்துவது இதன் பொருளாகும்.



### 6. 1. 2. இந்து சமயப் பெருமைகள்

இந்து சமயம் காலத்தால் மிகவும் தொன்மையானது. அது ஒருகாலத்தில் உலகெங்கும் பரவியிருந்தது என்பதை தற்கால நவீன புதைபொருள் ஆராய்ச்சி முதலியவற்றால் அறியலாம்.

பிற சமயங்கள் கூறும் கொள்கைகள் பல நமது இந்து சமயத்தில் முக்கிய இடம் பெற்றுள்ளன. ஆதலால் உலகில் உள்ள எல்லா மதங்களுக்கும் தாய்ச் சமயமாக இந்து சமயம் உள்ளது எனலாம்.

இந்து சமயம் பிற சமயங்களை இழிவுபடுத்தாமல் அவற்றின் கோட்பாடுகளை மதித்து அரவணைத்துச் செல்கிறது. பிற மதங்கள் தங்கள் மதமே உயர்ந்தது என பிரசாரம் செய்த போதும் அது பற்றி அஞ்சாமல் தன் நிலையில் இருந்து தாழாமல் உயர்ந்து விளங்குகிறது.

இந்து சமயம் வெறும் நம்பிக்கை உணர்வோடு நின்றுவிடாமல் ஒவ்வொரு கொள்கையையும் ஆராய்ந்து சந்தேகங்களை அகற்றி அறிவினைப் புகட்டுவது.

மனித உணர்வுகளைக் கட்டுப்பாட்டுக்குள் உட்படுத்தாமல் சுதந்திரமாய் வாழும் உரிமையை அளிப்பதும் இந்து சமயத்தின் சிறப்பான அம்சம் ஆகும்.

இல்லறத்தாரும் துறவறத்தாரும் நல்வாழ்வின் வாயிலாக முக்தி பெறலாம் என்னும் உண்மையை உலகறியச் செய்கிறது.

உலக வாழ்க்கையோடு சமய வாழ்க்கையையும் இணைத்து நற்கதி அடையச் செய்வது இதன் தனிச் சிறப்பு.

முக்தி பெறுவதற்கான வழி முறைகளை மக்களின் வயது. அறிவு முதிர்ச்சிக்கு ஏற்ப எளிதாக்கி பின்பற்றச் செய்வதும் சீரிய கூறாகும்.

மக்கள் செய்த நல்வினை தீவினைகளுக்குத் தகுந்தவாறு மறுபிறப்பு உண்டு என்பதை வலியுறுத்தி, மக்களின் இன்ப, துன்ப வாழ்வுக்குக் காரணம் அவையே என்பதை விளக்குவது.

www.tntextbooks.in

சில மதங்கள் அறிவியலுக்கு பொருத்தமற்ற கொள்கைகளை உடையனவாய் இருக்க. இந்து மதம் விஞ்ஞானத்தாலும் உணர முடியாத மெய்ப்பொருளை தனது மெய்ஞ்ஞானத்தால் இனிதாக இயம்புகிறது.

இத்தகைய பெருமைகளை வேற்று நாட்டுப் பெருமக்களின் கூட்டங்களில் "சுவாமி விவேகானந்தர்" போன்ற இந்துமத ஞானிகள் எடுத்தியம்பியுள்ளனர். அவற்றைக் கேட்ட பல மேலை நாட்டு அறிஞர்களும், பத்திரிகைகளும் இந்து மதத்தை பெருமைப்படுத்தி பேசியும் எழுதியும் பாராட்டியுள்ளனர்.

இத்தகைய சீரும் சிறப்பும் மிக்க சமய பெருமைகளை நாம் அறிவதுடன் பிறர் அறியும் வண்ணம் விளக்கிக் கூறி நற்பணியாற்ற வேண்டும்.

### 6. 1. 3. அறுவகைச் சமயங்கள்

இந்து சமயம் முறையே சைவம், வைணவம் காணாபத்யம், கௌமாரம், சாக்தம், சௌரம் என்று ஆறுவகையாகப் பகுத்துக் கூறப்படுகிறது. திருமூலர் இதனை "ஒன்றது பேரூர் வழி ஆறு அதற்குள" என்று கூறுகிறார்.

**சைவம்:** சிவ பெருமானை முழுமுதற் கடவுளாக ஏற்றுக்கொண்ட சமயம் 'சைவம்' எனப்பட்டது. சைவத்தில் பதி, பசு, பாசம் என்னும் முப்பொருள் உண்மை மிகவும் விளக்கமாய் கூறப்படுகிறது. இவற்றை இறைவன் உயிர், தளை எனவும் கூறுவர். பசு-இதனை உயிர் எனவும் ஆன்மா எனவும் கூறுவர். உலகில் எண்ணிலா உயிர்கள் உள. பசுவாகிய உயிர் பாசத்தை விட்டு நீங்கினால் வீடு பேற்றை அடையலாம் என்ற கோட்பாட்டை விளக்குகிறது.

**வைணவம் :** விஷ்ணுவை முழுமுதற் கடவுளாகக் கொண்டு வழிபடும் சமயம் வைணமாகும். இது வடகலை, தென்கலை என இருவகைப்படும். வட கலையார் வட மொழியில் உள்ள வேத சாத்திரங்களுக்கு முதலிடம் கொடுப்பர். தென் கலையார் தமிழ் மொழியில் உள்ள ஆழ்வார்களால் அருளப்பெற்ற பிரபந்தங்களுக்கு ஏற்றும் தருவர்.



**காணாபத்யம் :** "கணபதியே முழுமுதற்பரம் பொருள்". ஓங்கார வடிவினனாக அவரை வழிபட வேண்டும் என்ற கோட்பாட்டை உடையது காணாபத்யம். இதனை கணாபத்யம் எனவும் வழங்குவர்.

**கௌமாரம்:** குமாரனாகிய முருகனே கடவுள். பேரின்ப வடிவினனாக அவனை வழிபட வேண்டும் என்ற கோட்பாட்டை உடையது.

**சாக்தம்:** சக்தியை வழிபடு கடவுளாகக் கொள்ளும் சமயமே சாக்தம் ஆகும். சக்தி வழிபாடு - சக்தியே தெய்வம். அவரைத் தாயாக வழிபட வேண்டும் என்ற கோட்பாட்டை உடையது.

**சௌரம்:** சூரியனை வழிபடுகடவுளாகக் கொள்வது சௌர சமயமாகும். பேரொளி வடிவினனாக அவனை வழிபட வேண்டும் என்று கூறுவது இச்சமயமாகும்.

சிவஞான சித்தியார், "அறுவகைச் சமயத்தோர்க்கும் அவ்வவர் பொருளாய்" கடவுள் இயங்குகிறார் என இயம்புகிறது. இதன் அடையாளமாகவே நமது சிவ ஆலயங்களில் கணபதி, முருகன், சூரியன், விஷ்ணு, அம்மையப்பர் மற்றும் துர்க்கையம்மன் ஆகிய திருவுருவங்களை அமைத்து வழிபாடு செய்து வருகின்றோம்.

### 6. 1. 4. இந்து சமய இலக்கியங்கள்

ஒவ்வொரு சமயத்திற்கும் முக்கியமான சமய நூல் ஒவ்வொன்று உள்ளது. நமது இந்து சமயத்திற்கும் வேதம், ஆகமம், தோத்திரம், சாத்திரம், இதிகாசம், புராணம் எனப் பல நூல்கள் உள்ளன.

**வேதங்கள்:** தெய்விகமான கருத்துகளைத் தன்னுள் அடக்கி மறைத்து வைத்திருப்பதால் அது மறையெனப் பெயர் பெற்றது. வேதங்கள் நான்கு. வேதங்களைப் பற்றி விரிவாக முன்னரே பார்த்தோம். வேதங்களை வியாசர் நான்காக வகுத்துள்ளார். வேதங்களோடு தொடர்புபடைய சம்ஹிதைகள், பிராம்மணங்கள், ஆரண்யகங்கள் மற்றும் உபநிடதங்கள் இந்து சமய இலக்கியங்களாய் பெருமை சேர்க்கின்றன.

www.tntextbooks.in

***ஆகமங்கள்:*** இவை மொத்தம் இருபத்தெட்டு என்பர். ஆகமம் என்றால் ஆன்மாக்களின் பாசங்களை நீக்கி வீடுபேற்றை அருளுதல் எனலாம்.

**தோத்திரம்:**

***பன்னிரு திருமுறைகள் :*** திருமுறை என்பதற்கு தம்மை அடைந்தவர்களை சிவமேயாக்குகின்ற முறையெனப் பொருள் கூறுவர். சைவத் திரு முறைகள் பன்னிரண்டு.

திருஞானசம்பந்தர் அருளிய தேவாரம் முதல் மூன்று திருமுறைகளாகும். (திருக்கடைக்காப்பு)

திருநாவுக்கரசர் அருளிய தேவாரம் நான்கு, ஐந்து, ஆறு திருமுறைகளாகும். (திருப்பாட்டு)

சுந்தர மூர்த்தி சுவாமிகள் அருளிய தேவாரம் ஏழாம் திருமுறையாகும்.

மாணிக்கவாசக சுவாமிகள் அருளிய திருவாசகம், திருக்கோவையார் - எட்டாம் திருமுறை

திருமாளிகைத் தேவர் முதலாய ஒன்பதின்மர் அருளிய திருவிசைப்பா, திருப்பல்லாண்டு - ஒன்பதாம் திருமுறையாகும்.

திரு மூலதேவநாயனார் (திருமூலர்) அருளிய திருமந்திரம் - பத்தாம் திருமுறை

திருவாலவாயுடையார், காரைக்காலம்மையார் முதலிய பன்னிருவர் அருளியவை - பதினொன்றாம் திருமுறை

சேக்கிழார் சுவாமிகள் அருளிச் செய்த பெரிய புராணம் எனப்படும் திருத்தொண்டர் புராணம் - பன்னிரண்டாம் திருமுறை

***நாலாயிரத் திவ்யப் பிரபந்தம்:***

வைணவ சமயத்தில், விஷ்ணுவை தமிழ்ப் பாமாலைகளால் வழிபட்ட பன்னிரு ஆழ்வார்கள் அருளிச் செய்தவை. அமிழ்தினும் இனிய தமிழினில் விளம்பிய இவர்களது பாசுரங்கள் தேன் போன்ற தெய்வீக உணர்வை ஊட்டுவன ஆகும்.



***சைவசித்தாந்த சாத்திரங்கள்:***

சாத்திரங்கள் 14 ஆகும். இவற்றை மெய் கண்ட சாத்திரங்கள் என்பர். இவற்றில் தலை சிறந்தது சிவஞான போதம். சிவம் என்றால் ஒப்பற்ற மெய்ப் பொருள். ஞானம் என்றால் அதனை அறிதல். போதம் என்றால் தெளிதல். எனவே சிவஞான போதம் என்றால் ஒப்பற்ற மெய்ப்பொருளாகிய கடவுளை அறிந்து தெளிய உதவும் நூல் என்று பொருள் இது மெய் கண்ட தேவரால் அருளிச் செய்யப்பட்டது.

இதனையடுத்து அருணந்தி சிவாசாரிய சுவாமிகளால் இயற்றப்பட்டது சிவஞான சித்தியார் என்பதாம். மேலும் உமாபதி சிவாசாரியாரால் எட்டு நூல்கள் எழுதப்பட்டன. மெய் கண்டார், அருள் நந்தி, உமாபதி சிவம் ஆகிய சந்தனாச்சாரியார்கள் சைவ சித்தாந்தத்தை முறைப்படுத்தியவர் என்ற பெருமை படைத்தோராவர்.

***இதிகாசங்கள்:***

இந்தியாவின் இரு ஒப்பற்ற வீர காவியங்கள் இராமாயணம் மற்றும் மஹாபாரதம் ஆகும். இதிகாசம் என்பதற்கு “ஐதீகத்தை நிரூபணம் செய்யும் வரலாறு” என்று பொருள். இராமாயண காவியத்தை இயற்றியவர் வால்மீகி முனிவராவார். இதில் அரசநீதி, சத்ய பரிபாலனம். பிள்ளைகளின் கடமை, பெரியோர் வழிபாடு, கற்பின் மேன்மை ஆகிய உயரிய நெறிகள் விளக்கப்பட்டுள்ளன.

பாரதத்தை இயற்றியவர் வியாச முனிவர். இதனை ஐந்தாம் வேதம் என்று சிறப்பித்துக் கூறுவர். இதில் இல்லாதது வேறு எங்கும் சொல்லப்படவில்லை என்ற சிறப்பினை உடையது. ஞானநூல்களில் தலைசிறந்த பகவத்கீதை இதனுள் அடங்கியுள்ளது. இவ்வாறு இதிகாசங்களும் தர்ம, அதர்ம போராட்டத்தில் தர்மமே முடிவில் வெற்றி பெறும் என்பதை நன்கு விளக்கியுள்ளன.

***புராணங்கள்:***

புராணம் என்பதற்கு பழமையான வரலாறு என்பது பொருள் என்பதையும் புராணங்களை எழுதியவர் வேத வியாசர் என்பதையும்

www.tntextbooks.in

இதனை உலகிற்கு அளித்தவர் சூதபுராணிகர் என்பதையும் அறிவோம். மேலும் மகாபுராணங்கள் பதினெட்டு என்றும் அவற்றால் உணர்த்தப்படும் உண்மைகளையும் அறிவோம்.

இத்தகைய இந்து சமய இலக்கியங்கள் அனைத்தும் வேதம் உணர்த்தும் "ஸத்யம் வத", "தர்மம் சர" என்பதையே வலியுறுத்து கின்றன. இந்து சமயத்தவர் அனைவரும் இம்மேலான உண்மைகளைத் தம் வாழ்வில் கடைபிடித்து சீரிய வாழ்வை மேற்கொள்வோம்.

### 6. 1. 5. இந்து சமயக் கோட்பாடுகள்

இந்து சமயம் வலியுறுத்தும் சாதாரண அறக் கோட்பாடுகள் தவிர முக்கியமானவை இரண்டு;

1) வேதாந்த நெறிகள்

2) பகவத் கீதையில் கூறப்படும் நான்கு யோகங்களாகிய மார்க்கங்கள்.

வேதாந்த நெறிகள் முறையே அத்வைதம், விசிஷ்டாத் வைதம், துவைதம் ஆகும்.

#### *6. 1. 5. 1. அத்வைதம்*

அத்வைதக் கோட்பாட்டை உலகிற்களித்தவர் சங்கரர். இவர் சுமார் 1200 ஆண்டுகளுக்குமுன் கேரளமாநிலத்தில் காலடி என்னும் ஊரில் அவதரித்தார். இளம் வயதிலேயே துறவியாகி வேதாந்தக் கருத்துகளில் கரைகண்டவராய் காஷ்மீரம் வரை கால்நடையாகவே சென்றார். சென்ற இடங்களில் எல்லாம் நமது உயரிய அத்வைதக் கருத்துகளை பரப்பினார். மடாலயங்களை நிறுவினார். சமண, பௌத்த மதக் கொள்கைகளைக் கண்டித்து வாதாடி வெற்றி கண்டார். இவரது வெற்றியால் பழைய வேதாந்த நெறி மீண்டும் தழைத் தோங்கியது. அத்வைதக் கோட்பாடுகள் "வேதாந்த மதம்" என்றும் இதனைப் பின்பற்றுவோர் வேதாந்திகள் எனவும் கூறுவர்.

அத்வைதம் என்னும் சொல்லை அ + துவைதம் எனப் பிரிக்கலாம் அ = இல்லை, துவைதம் - இரண்டு. அத்வைதம் =



இரண்டற்ற ஒன்று "அகம்பிர்மாஸ்மி" - நான் பிரம்மமாய் இருக்கிறேன் என்பது. "பிரம்மம்" என்ற ஒரு பொருளே உண்மை, நிலையானது. ஜீவன்கள் அனைத்துமே பிரமம் ஆவர். இறைவனைப் பரமாத்மா என்றும் உயிர்களை ஜீவாத்மா என்றும் ஒவ்வொரு ஜீவாத்மாவும் "பரமாத்மா தான்" என்பதே இவ் உயரிய கோட்பாடு ஆகும். நாம் காணும் உலகம், கயிற்றில் காணும் பாம்பைப்போல் பொய்த் தோற்றப் பொருளாகும். ஒரே சூரியன் நீர்த் திவலைகள் பலவற்றில் பலவாகத் தோன்றுதல் போல ஒரு பிரமமே எல்லா உயிர்களிலும் நிலைத்துள்ளான். நம்மிடம் உள்ள அவித்தையால் (பாசம்) இப்பேரின்பத்தை உணர முடியாமல் இருக்கிறோம். அவித்தைக் கட்டுகள் அனைத்தும் விலகி ஞானம் தோன்றும் போது உண்மையான இன்பம் கிடைக்கும் என்கிறார். இந்நிலையில் பிரம்ம மயமாகி வீடுபேற்றை அடையலாம் என்றார்.

#### *6. 1. 5. 2. விசிஷ்டாத்வைதம்*

இவ்வேதாந்த நெறியை உலகிற்கு அளித்தவர் இராமானுஜர் ஆவார். இவர் செங்கற்பட்டு மாவட்டத்தில் உள்ள ஸ்ரீபெரும்புதூரில் கி.பி. 1017-ல் அவதரித்தார். தமது பதினைந்தாம் வயது வரை வீட்டிலேயே வேதாந்தத் தத்துவங்களை கற்றறிந்தார். பின்னர் ஸ்ரீரங்கம் சென்று பெரிய நம்பிகளைக் குருவாகக் கொண்டு மேலும் தம் தத்துவக் கோட்பாடுகளை அறிந்துகொண்டார். இல்லறத்தில் இருந்த இவர் தம் பதினெட்டாம் வயதில் துறவு மேற்கொண்டார். பிரம்ம சூத்திரம் பகவத் கீதை முதலியவற்றிற்கு தமது விசிஷ்டாத்வைதக் கொள்கைப்படி உரை எழுதினார்.

விசிஷ்ட + அத்வைதம் = விசிஷ்டாத்வைதம். அத்வைதம் இரண்டற்ற ஒன்றாக உள்ளது. விசிஷ்டம் - விசேஷம். விசிஷ்டாத்வைதமானது ஜீவாத்மாவும் பரமாத்மாவும் ஒரே பொருளாலானவை என்றும் ஜீவாத்மா பரமாத்மாவிலிருந்து வெளிப்பட்டது என்றும் கூறுகிறது. சித்து, அசித்துச் சேர்க்கையால் விளங்கும் இரண்டற்றதான பிரம்மம் உண்டென்பதே உட்கருத்து.

பிரம்மம் ஒருவரே. அவர் சத்து என்றும் பிரம்மம் என்றும் ஈஸ்வரன் என்றும் விஷ்ணு என்றும் பெயர் பெறுகிறார். அவர்

www.tntextbooks.in

சித்து என்னும் ஆத்மாவுடனும் அசித்து எனப்படும் சடத்தோடும் எப்போதும் சேர்ந்திருக்கிறார். பரமாத்மாவே நிலையானவர். சுதந்திரம் உடையவர் சித்தும் அசித்தும் அவரைச் சார்ந்திருப்பவை. ஆசாரிய அன்பு, சுருதி, ஸ்மிருதி - நம்பிக்கை, மோட்ச விருப்பம், உலக ஆசை அறுதல், தரும சிந்தனை, வேத பாராயணம், சாது சங்கமச் சேர்க்கை முதலானவற்றால் கர்மபந்தத்தை விட்டு முக்தி பெறலாம்.

### *6. 1. 5. 3. துவைதம்*

இந்நெறியை அல்லது சமயத்தைப் பரப்பியவர் மத்துவர். இவர் துளுவ நாட்டில் உள்ள உடுப்பிக்கு அருகில் அநந்தேஸ்வரம் என்னும் கிராமத்தில் அவதரித்தார். தமது ஒன்பதாம் வயதில் அச்சுதபிரகாசரின் சீடராகி துறவு மேற்கொண்டார்.

***துவைதம்:*** துவி என்றால் இரண்டு. பிரபஞ்சமும், பரமாத்மாவும் வேறானவை. பரமாத்மா தனி, மற்றவை அதில் சேராதவை என்பதாம். பரமாத்மா, ஜீவாத்மா, ஜட உலகம் - இவை எவராலும் உண்டாக்கப்படாத நித்தியப் பொருள்கள். உலகம் ஒரு தோற்றம் அன்று. சுதந்திரம் இறைவனுக்கு மட்டும் உண்டு. கர்மத்தை நீக்கினால் வீடுபேற்றை அடையலாம்.

### 6. 1. 6. கீதை உணர்த்தும் நான்கு மார்க்கங்கள்

மனிதன் தான் போகின்ற போக்கிலேயே தன்னை விட்டால் அவன் படிப்படியாக நிதானமாய் வளர்ச்சியடைவான். ஓர் அறிவு உயிரிலிருந்து ஆறறிவுள்ள மனிதனாக வளர்ந்த "பரிணாம வளர்ச்சி" யைக் காண்கிறோம். மேலும் ஒருபடி சென்று தெய்விகத் தன்மை அடையலாம். இப்படி காலத்தே வளர்ச்சி தானே நிகழும் என இருதலை "எறும்பு வழி" அல்லது பிப்பீலிகா மார்க்கம் என்பர். மாறாக மனிதன் தன் உடல் மூச்சு, மனம் அறிவு ஆகியவற்றை பயன்படுத்தி பெரு முயற்சி செய்து இறையருளைப் பெற்று விரைவில் தன்னை முன்னேற்றிக் கொள்வது "விஹங்கம மார்க்கம்" அல்லது "பறக்கும் வழி" எனப்படும்.

தன்னைத் தானே உயர்த்திக் கொள்ளும் மார்க்கங்கள் (நெறிகள்) முறையே,



1. ஞான மார்க்கம்
2. இராஜ மார்க்கம்
3. கர்ம மார்க்கம்
4. பக்தி மார்க்கம் - என்பனவாம்.

இவை முறையே ஞானநெறி, இராஜநெறி, கர்மநெறி மற்றும் பக்தி நெறி என்னும் யோகம் என்றும் போற்றப்படுகின்றன.

### *6. 1. 6. 1. ஞான மார்க்கம்*

கூர்மையான அறிவுடையவர்கள் நல்லதையும் கெட்டதையும் அறிந்து, என்றும் நிலைத்திருப்பதையும், விரைவில் அழிந்து விடுவதையும் சிந்தித்து உணரும் ஆற்றல் உடையவர்கள். இவ் அறிவின் துணை கொண்டு சத்தியத்தையும் முழுமையான பரம்பொருளை தேடும் வழியே 'ஞானமார்க்கம்' எனப்படும். நல் அறிவிற்கு வழிகாட்டுவன முறையே வேதாந்தங்கள், உபநிடதங்கள். பகவத்கீதை ஆகியனவும், இரமணமகரிஷி, அரவிந்தர், தாயுமானவர் மற்றும் திருமூலர் மற்றும் பல ஆன்றோர் ஆகியோரின் உபதேசங்களும் ஆகும்.

### *6. 1. 6. 2. இராஜ மார்க்கம்*

மனிதன் சுய உணர்வுடன் உடம்பு, மூச்சு, மனம் இவற்றைக் கட்டுப்படுத்தி, ஒழுங்குபடுத்தி, தனக்குள்ளே ஒளிந்துகிடக்கும் சக்திகளைத் தூண்டி வெளிப்படுத்துவது 'ராஜயோகம்' எனப்படும் இதுவே இராஜமார்க்கம் எனப்படுகிறது. இதன் இறுதி இலட்சியம் மனதில் அல்லது உணர்வில் தோன்றும் அலைகளை அடக்குவது ஆகும். "ஓம்" என்ற பிரணவம் இங்கு வழிபடப்படுகின்றது.

### *6. 1. 6. 3. கர்ம மார்க்கம்*

வாழ்க்கையில் மனிதன் செய்கின்ற ஒவ்வொரு செயலுக்கும் இரண்டு விதமான பயன்கள் இருக்க வேண்டும்.

1. அச்செயலினால் சமுதாயத்திற்கு லாபம் கிடைக்க வேண்டும்.
2. அச்செயல் அவனுடைய தெய்வ பக்தியை வளர்க்க வேண்டும்.

www.tntextbooks.in

இந்த இருவிதமான பயன்கள் உடையவையாக ஒவ்வொரு செயலையும் ஆக்கும் விதியைக் கர்ம நெறி என்ற பெயரில் பகவத் கீதை உணர்த்துகிறது. தொழில் வாழ்க்கை, புறவாழ்க்கை என்ற வெளி வாழ்க்கையையும் குளித்தல், நடத்தல், உண்ணுதல், தானம் செய்தல் போன்ற சொந்த வாழ்க்கையின் செயல்கள் ஆகிய அனைத்துமே தனக்கு அக இன்பமும் சமுதாய நலமும் வளரும்படி செய்கின்றன. ஒரு மனிதன் தன் சொந்த வாழ்க்கையில் செய்கின்ற ஆசனம், பிராணாயாமம், தவம், நன்னூலறிவு ஆகிய அனைத்தும் உலக நன்மைக்கும் உதவும்படி எல்லோரும் இன்ப வாழ்வுவாழ கீதை வழி சொல்கின்றது.

எனவே சமுதாயத்தின் அங்கத்தினராகிய ஒவ்வொருவரும் தத்தம் கடமைகளை முறையாகவும் திறமையாகவும் ஆற்றுவதை கர்மமார்க்கம் எனலாம்.

### *6. 1. 6. 4. பக்தி மார்க்கம்*

பரம்பொருள் மீது கொண்ட அன்பினால் மனிதன் அகந்தையை ஒழித்து, தன் சிறுமையைத் தவிர்த்து, உலகளாவிய உணர்வுள்ளவனாய் தியாகம், அன்பு வாயலாக உயரிய நிலையை அடைவது பக்தி மார்க்கம்.

பக்தன் எதை நம்புகிறானோ அதுவாகவே தான் ஆகிவிடுகிறான் என்பது கீதையில் கண்ணன் கருத்து. இதை உணரும் விதம் நாம் பின்வருவனவற்றில் காணலாம். அடக்கமுடைய சரஸ்வதி போன்ற தெய்வங்களை வணங்கும்போது பக்தனும் பணிவுடையுவன் ஆகிறான். பற்றற்ற சிவனாரை வணங்கும் போது பக்தனும் பற்றற்றவனாகிறான். அன்பு மிகுந்த கண்ணனை வணங்கும் போது தருமம் ஆகிய ஆறு நற்குணங்களைக் கொண்ட இறைவனை பக்திப்பரவசத்தால் வழிபடும்போது நாமும் அந்த ஆறு நற்குணங்களை உடையவராகிறோம்.

## 6. 1. 7. *இந்து சமய விழாக்கள்*

இறைவனது பரிபூரண அருள் பக்தனுக்கு கிடைக்கும் என்பதை நினைவூட்ட விழாக்கள் கொண்டாடப்படுகின்றன. இவ்விழாக்கள்



மக்கள் மனதில் அன்பு, இரக்கம், ஈகை, மனித நேயம் முதலான நற்பண்புகளை வளர்த்து ஆன்மிக அறிவைப் பெருக்கி வளமான வாழ்க்கை வாழ உதவுகின்றன. இத்தகைய விழாக்கள் பல அவற்றுள் சில.

### *6. 1. 7. 1. விநாயக சதுர்த்தி விழா*

விநாயகர் ஆதிமூலப் பொருள். அவரே ஓங்காரத்தின் வரிவடிவம். இறைவனிடத்திலிருந்து முதற் கண் தோன்றிய ஒலியே ஓங்காரமாகும். ஆதலின் அவரை அனைவரும் வழிபட்டு தம் குறைகளை களைந்து இன்புறுகின்றனர். அவருக்கு ஆண்டுதோறும் ஆவணி மாதம் அமாவாசைக்குப் பின் வரும் நான்காம் நாள் சதுர்த்தி அன்று விழாக் கொண்டாடி மகிழ்கின்றனர். இவ்விழாவை எல்லா ஆலயங்களிலும், ஆலயமில்லாத இடங்களிலும், வீடுகளிலும் நடத்தி மகிழ்கின்றனர். ஆலயமில்லாத இடங்களில் தற்காலிகமாக மஞ்சள், சந்தனம், பசுஞ்சாணம், களிமண் முதலியவற்றால் உருவம் செய்து வழிபடுவர். இவற்றை விழா முடிந்தபின் நீரில் கரைத்துவிடுவர். வட இந்தியாவில் “கணேஷ் சதுர்த்தி” என கொண்டாடப்படுகிறது.

### *6. 1. 7. 2. நவராத்திரி விழா*

நவராத்திரி என்பதற்கு ஒன்பது இரவுகள் என்பது பொருள் புரட்டாசி மாத்தில் அமாவாசைக்குப் பின் வரும் ஒன்பது நாட்கள் இரவில் சர்வ வல்லமை பொருந்திய பராசக்தியைப் பல வடிவாக வழிபட்டு விழா நடத்தி வருகின்றனர். முதன் மூன்று நாட்கள் பார்வதி தேவியையும். நடு மூன்று நாட்கள் இலட்சுமி தேவியையும் இறுதி மூன்று நாட்களில் சரஸ்வதி தேவியையும் முறையாக வழிபட்டு பத்தாம் நாள் விஜயதசமி விழாவைச் சிறப்பாகக் கொண்டாடி வருகின்றனர். வட நாட்டிலும், தென் நாட்டிலும் உள்ள எல்லா கோயில்களிலும் இவ்விழா சிறப்பாக கொண்டாடப்படுகிறது. பத்து இரவுகள் இவ்விழா நடந்து வருவதால் இதனை ‘தசரா’ எனவும் வழங்குகின்றனர். மகிடா சுரன் என்ற அரக்கனை அழித்து தேவர்களைக் காத்த பராசக்தியைக் கொண்டாடும் விழா வாகும்.

www.tntextbooks.in

### *6. 1. 7. 3. தீபாவளி*

அரக்க குணம் படைத்த நரகாசுரனை வதம் செய்து நல்லவர்களைக் காத்தவர் திருமால். தன் சக்ராயுதத்தால் நரகாசுரனை அழித்து மக்களை காத்தருளினார். மேலும் இந்நாளை மகிழ்வுடன் கொண்டாடும் விதத்தில் அன்று விடியலில் எண்ணெய் தேய்த்து குளித்து புத்தாடை அணிந்து இனிப்புகளை உண்டு மகிழ்வர். பட்டாசுக்களை வெடித்து சிறுவர் மகிழ்வர். வட இந்தியாவில் தீப ஒளித் திருநாளாகக் கொண்டாடப்படுகிறது.

### *6. 1. 7. 4. கந்தவிரத விழாக்கள்*

கலியுகத்தில் கண்கண்ட தெய்வமாய்த் திகழும் முருகப் பெருமானை நினைந்து தவம் இயற்றும் விழாக்கள் மூன்று. அவை வாரவிரதம் எனப்படும் வெள்ளிக்கிழமை விரதம்.

நட்சத்திர விரதம் எனப்படுவது மாதந்தோறும் கிருத்திகை நட்சத்திரத்தன்று முருகனை வழிபடுதல், விரதம் இருத்தல்.

திதி விரதம் எனப்படும் சஷ்டிதிதியன்று முருகனை வழிபட்டு மேற்கொள்ளும் விரதம்.

இம்மூன்று விழாக்களுமே சூரனை அழித்து தேவர்களைக் காத்த முருகப் பெருமானை வழிபடும் விழாக்களாகும்.

### *6. 1. 7. 5. திருக் கார்த்திகை விழா*

கார்த்திகை மாதம் பௌர்ணமி நாளில் கார்த்திகை நட்சத்திரம் வரும் அன்று கொண்டாடப்படும் விழாவாகும்.

கார்த்திகை நாளில் வரிசை வரிசையாக திருவிளக்கேற்றி எங்கும் பிரகாசமாய் கொண்டாடும் வழக்கம் மிகப் புராதன காலந்தொட்டே இருந்துவருகிறது. இத்திருவிழா திருவண்ணாமலையில் மிகச் சிறப்பாகக் கொண்டாடப்பட்டு வருகிறது. அன்று அண்ணாமலை அழற் சோதி மலையாய், அருணாசலமாய், சோண கிரியாய்த் திகழும் (அருணம், சோணம் - சிவப்பு நிறம் - சோதி மயம்). இம்மலை ஏறத்தாழ மூவாயிரம் அடி உயரத்தில் உள்ளது. கார்த்திகை அன்று மலைமேல் பெரிய பாத்திரம் ஒன்றில் நெய் ஊற்றி, துணித் திரியிட்டு,



கற்பூரத்தை இட்டு விளக்கிடுவர். பல கி.மீ. தொலைவிற்கு அப்பாலும் பல நாட்களும் இச்சோதி ஒளிவீசும்.

“நினைக்க முக்தி தரும்” தலமாகிய திருவண்ணாமலையில் இறைவன் மலைவடிவாய் காட்சி அளிப்பதாய் கருதுகின்றனர் பௌர்ணமி, அமாவாசை, தமிழ் மாதப் பிறப்பு, பிரதோஷம் முதலாய நாட்களில் மலையை வலம் வருகின்றனர்.

### *6. 1. 7. 6. சிவராத்திரி விழா*

இவ்விழா மாசி மாதம் தேய்பிறை சதுர்த்தசியில் நடைபெறும் விழாவாகும். அன்று சிவாலயங்களில் இரவு நான்கு கால பூஜைகள் நடைபெறும். அன்று கண் விழித்து பகலும் இரவும் உபவாசம் இருப்பர். இந்நாளில் திருவருள் பெற விழைவோர் ஆகமங்களை ஆராய்ந்து, அவற்றில் சொல்லியருளிய பூஜையை அன்பினாலேயே மனதில் தியானித்து மூர்த்தி, தீர்த்தம், தலம் எனும் மூன்றும் சிறந்து விளங்கும் தலத்தை அடைந்து அங்கு எழுந்தருளியுள்ள சிவபெருமானை வழிபடுவர். இவ்விரதத்தை மேற்கொள்வதால் அறம் பெருகி, செல்வத்தைப் பெற்று, இன்பத்திறம் பெற்றுத் திளைக்கலாம். சிவனருள் முழுமையாய் கிடைக்கும் என்பதில் ஐயமில்லை.

இவ்விழாக்களைத் தவிர இராமன், கண்ணன் போன்ற அவதாரங்களின் பிறந்த நாட்கள் முறையே இராமநவமி என்றும், ‘ஸ்ரீஜெயந்தி’ அல்லது ‘ஸ்ரீகிருஷ்ண ஜன்மாஷ்டமி’ எனவும் நாடு முழுவதும் சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது. வேத வியாசரின் நினைவு நாளான “குரு பூர்ணிமா” சிறப்புடன் கொண்டாடப்படுகிறது.

மேலும் பல விழாக்களை கொண்டாடப்படுகின்றன. அவை

அ) *மாசி மக விழா* - மாசி மாதம் - பௌர்ணமி - மகநட்சத்திரம்

ஆ) *பங்குனி உத்திர விழா* - பங்குனிமாதம் பௌர்ணமி - உத்திர நட்சத்திரம்

இ) *சித்ரா பௌர்ணமி விழா* - சித்திரைமாதம் - பௌர்ணமி - சித்திரை நட்சத்திரம்

www.tntextbooks.in

ஈ) *வைகாசி விசாக* விழா - வைகாசி மாதம். பௌர்ணமி - விசாக நட்சத்திரம்

உ) *ஆனித் திருமஞ்சனம்* - ஆனிமாதம் - உத்திர நட்சத்திரம்

ஊ) *ஆடிப் பூரம்* - சிவத் தலங்களில் அம்பாளுக்கும். திருவல்லிபுத்தூரில், ஆண்டாளுக்கும் இவ்விழா மிகச் சிறப்புடன் கொண்டாடப்படுகிறது.

எ) *பிரதோஷ விழா* - ஒவ்வொரு மாதத்திலும் வளர்பிறை, தேய்பிறை ஆகிய இரு காலங்களிலும் திரயோதசி அன்று கொண்டாடப்படுகிறது.

### 6. 1. 8. சடங்குகளும் சம்பிரதாயங்களும்

#### சடங்குகள் - விளக்கம்

வேதத்தை புரிந்து கொள்ளவும், விளக்கிக் கொண்டு முழுமை அடையவும் ஆறு அங்கங்கள் உள்ளன. இவற்றை வேதாங்கங்கள் என்பர். அவை முறையே

1. சிட்சை என்ற எழுத்திலக்கணம்
2. வியாகரணம் என்ற சொல்லிலக்கணம்
3. நிருக்தம் என்ற பொருளிலக்கணம்
4. கல்பம் என்ற செயல் முறை
5. சந்தஸ் என்ற யாப்பிலக்கணம்
6. ஜ்யோதிஷம் என்ற சோதிடம்

இந்த ஆறு அங்கங்களை பயன்படுத்தி செய்யும் செயல்கள் உடலாலும், மனத்தாலும், ஐம்புலன்களினாலும் செய்யப்படும். இவை ஆறும் வேதத்தின் ஆறு அங்கங்களை ஆதாரமாகக் கொண்டவை. இவை ஷடங்கங்கள் அல்லது 'சடங்குகள்' என்று வழங்கப்படுகிறது.

#### முக்கியச் சடங்குகள்

இந்து மதத்தில் பிறப்பதற்கு முன்னும், பிறந்து வாழும் காலத்திலும், இறந்த பிறகும் சடங்குகள் விதிக்கப்பட்டுள்ளன.



இச்சடங்கினை கிரியை என்பர். தொல்காப்பியர் இதனை கரணம் என்றார். மந்திரங்களுடன் செய்யப்படுவன சிறப்பானவை என்றும் மந்திரம் அதிகம் கலவாமல் செய்யப்படுவன பொதுவானவை என்றும் கூறப்படுகின்றன. அவற்றில் சில மட்டுமே தற்காலத்தில் நடைமுறையில் உள்ளன.

#### 1. கருக்கொள்ளல் (பும்ஸவனம்)

ஒரு பெண் கருவுற்ற மூன்றாவது மாதத்தில் கர்ப்பத்திற்கு எவ்வித ஊறும் உண்டாகாதவாறு இறைவனை வேண்டுவதாகும்.

#### 2. வளைகாப்பு (ஸீமந்தம்)

பெண் கருவுற்ற நான்காவது அல்லது எட்டாவது மாதத்தில் குழந்தையின் காப்பிற்காக சில தேவர்களை வேண்டுதலாகும். கர்ப்பிணியின் தலைமுடியை வகுத்தல், கீதங்கள் பாடுதல், வளைகாப் பிடுதல் முதலான சம்பிரதாய முறைகள் பின்பற்றப்படுகின்றன.

#### 3. ஜாதகம் கணித்தல் (ஜாதகர்மம்)

இது குழந்தை பிறந்தவுடன் செய்ய வேண்டிய கிரியையாகும் தேனும் நெய்யும் கலந்து தேவதைகளை ஆராதிப்பர். வந்திருப்பவர்களுக்கு பழமும் சர்க்கரையும் வழங்குவர். குழந்தை நீண்ட ஆயுளுடன் வாழவும், புத்திக் கூர்மை உண்டாகவும், சாமர்த்தியம் அழகு முதலானவை பெறவும் பிரார்த்தனை செய்வர். இந்திரன் செல்வ வளத்தை கொடுக்கவும் வேண்டுவர்.

#### 4. பெயர் சூட்டல் (நாமகரணம்)

தந்தையின் தந்தை அல்லது தாய் அல்லது தாயின் தந்தை அல்லது தாய், மற்றும் தம் குலத்தில் போற்றப் பட்டவர்கள் பெயரை குழந்தைக்கு வைத்து ஆசீர்வதிப்பர். சிலர் இறைவனின் திருப்பெயரைச் சூட்டுவர். தற்காலத்தில் எண் ஜோதிஷப்படி பெயர் சூட்டுகின்றனர்.

#### 5. தூய்மைப்படுத்தல் (புண்யா வாசனம்)

இதில் விசேட மந்திரக் கிரியைகள் எதுவும் இல்லை. சுத்தியின் பொருட்டு புண்யா வாசனம் செய்து அந்நீரை மாவிலைகளால்

www.tntextbooks.in

வீட்டின் பல பகுதிகளிலும் தெளிப்பர். மனிதர்கள் மீதும் அப்புனிதநீரை தெளிப்பர். இதனால் சுத்தி ஏற்படுவதாக கருதுவர்.

**6. குழந்தையை வெளியே கொண்டு செல்லல் (நிஷ்க்ராமணம்)**

குழந்தை பிறந்து நான்குமாதம் ஆனபின் முதன் முதலாகக் குழந்தையை வீட்டைவீட்டு கோயிலுக்கு அல்லது உறவினர் வீட்டிற்கு எடுத்துச் செல்வர். இவ்வாறு குழந்தையின் பயணங்கள் வெற்றிகரமாய் அமைய இறைவனை வேண்டுவர்.

**7. சோறூட்டுதல் (அன்னப்பிராசனம்)**

ஆறாம் மாதத்தில் சோறும், தயிரும், நெய்யும், தேனும் கலந்து பிள்ளைக்கு முதன் முதலாக சோறூட்டுதலாகும். குழந்தை உடல் நலத்தோடும், நீண்ட நாள் உணவு முறையாக உண்டு வாழவும் கடவுளின் அருளை வேண்டுவர்.

**8. கல்வி தொடங்குதல் (வித்யாரம்பம்)**

இது குழந்தையைப் பள்ளியில் சேர்க்கின்ற விழாவாகும். குழந்தைக்கு ஐந்து வயதானதும் நவராத்திரி விழா முடிவான விஜயதசமி தினத்திலோ வேறு நல்ல நாளிலோ முதன் முதலில் கல்வி கற்க குழந்தைகளை பள்ளியில் சேர்ப்பர்.

“ஹரி ஓம், ஸ்ரீ கணபதியே நம” எனக் கூறி கணபதியை வணங்கச் செய்து பின் “குருவாழ்க! குருவே துணை” என்று கூறி குருவை வணங்கும்படி செய்வர். பின் சரஸ்வதி தேவியை வணங்கி தானியத்தில் அதாவது நெல் அல்லது அரிசியில் “ஹரி” என்னும் எழுத்தை எழுதவும் சொல்லவும் செய்வர். இவ்வாறு கல்வியைக் கற்கத் தொடங்கும் நிலையே “வித்யாரம்பம்” எனப்படுகிறது.

**9. காது குத்துதல் (கர்ண பூஷணம்)**

காது குத்துதலின் நோக்கம் குண்டலம். தோடு முதலிய காதணிகளை அணிவதாகும். தங்கத்தின் வழியாகப் பாயும் நீர்



உடம்புக்கு ஆரோக்கியம் தருகிறது. நல்ல செய்திகளை, நற் கருத்துகளை செவியின் உள்ளே செலுத்தவேண்டும்; கெட்ட தீய செய்திகளை உள்ளே செலுத்தாமல் துளை வழியாக வெளியே செலுத்தி விட வேண்டும் என்பதையும் இச்சடங்கு குறிக்கிறது.

**10. குடுமி வைத்தல் (சௌளம்)**

குழந்தைக்கு முதன் முதலாக சவரஞ் செய்து வைத்தலாகும். தாயின் மடியில் குழந்தையை வைத்துத் தந்தையும் உடன் இருந்து செய்யும் கிரியை ஆகும்.

**11. பூணூல் அணிவித்தல் (உபநயனம்)**

குழந்தைக்கு ஏழுவயதானதும் உபநயனம் அல்லது பூணூல் இடுதல் என்னும் சடங்கை நடத்தி வைக்க வேண்டும். இதில் முக்கிய அம்சம் “காயத்ரி” மந்திர உபதேசம் ஆகும். உபநயனக் கிரியை செய்யாதவர்களுக்கு தீட்சை செய்து வைக்க வேண்டும். உபநயனம் அல்லது தீட்சை பெறுவதற்கு முன் ஒரு பிறப்பும் உபநயனம் அல்லது தீட்சைப் பெற்றபின் ஒரு பிறப்புமாக ஒரு மனிதனுக்கு ஒரு பிறப்பிலேயே இரு பிறப்பு உண்டு என இந்து மதம் கூறுகிறது.

**12. பள்ளியில் சேர்த்தல் (குருகுலவாசம்)**

குழந்தைகள் குருகுலத்தில் குருவுடன் இருந்து கல்வி பயின்று வருவது நமது பூர்வீக வழக்கமாகும். குருகுலத்தில் கல்வியும் நன்னடத்தையும் கற்றுக்கொடுக்கப்படும். மாணவர் குரு கூறிய பணிவிடைகளை செய்ய வேண்டும். ஆடம்பர வாழ்க்கையின்றி அமைதியோடும் கீழ்ப்படிதலோடும் கல்வி பயில வேண்டும்.

**13. திருமணம் (கல்யாணம்)**

குருகுல வாசம் முடிந்த பின், குருவின் அனுமதியுடன் திருமணம் செய்து கொள்வர். திருமணச் சடங்குகள் நாம் அறிந்ததே. திருமணமானதற்கு அடையாளமாக மணமகன் தனது சகோதரியின் உதவியோடு திருமங்கலநாணை ஆச்சாரியன் கொடுக்க மணமகள் கழுத்தில் அணிவிப்பர்.

www.tntextbooks.in

**14. அறுபதாம் ஆண்டு நிறைவு விழா (சஷ்டி அப்த பூர்த்தி)**

பெற்றோரிடம் நன்றி செலுத்தும் பொருட்டும் அவர்களின் உடல் நலம் குன்றாமல் திடம்பட நலத்துடன் நீடித்து வாழ வேண்டும் என வேண்டி பிள்ளைகள் கொண்டாடுவதாகும். சிற்றின்ப வாழ்வை வெறுத்துக் கடவுள் பணியை மேற்கொண்டு இனிமேல் ஆன்மிக நெறியில் நிலைபெற வேண்டும் என அத்தம்பதியர் உறுதி மேற்கொள்வதை இந்நிகழ்ச்சி விளக்குகிறது.

**15. ஆயிரம் பிறை கண்டவிழா (சதாபிடேகம்).**

எண்பது அல்லது எண்பத்தி நான்கு ஆண்டுகளில் செய்யும் சடங்கிற்கு சதாபிடேகம் என்று பெயர். எண்பது ஆண்டுகளுக்கு மேல் வாழ்ந்தவர்களை “ஆயிரம் பிறை கண்டவர்” எனக் கூறுவர்.

**16. இறந்தபின் செய்யும் கிரியை (அபரக்கிரியை).**

ஒருமனிதன் இறந்தபின் அவனது ஆன்மா நலம் அடையும் பொருட்டு, அவனது மகன் முதலாயோர் செய்யும் கிரியைக்கு அபரக்கிரியை என்று பெயர். மகன் செய்யும் கிரியை இறந்தவனை ஈடேற்றுகிறது. மகனைப் புத்திரன் என்பர். “புத்திரன்” என்பதற்கு புத்தென்னும் நரகத்தில் தந்தை விழுந்து வருந்தாமல் கரையேற்றுபவன் என்பது பொருளாகும்.

இறந்தவர்கட்கு புதல்வர் முதலாயோர் செய்யும் கிரியைகள் சாந்தி அளிக்கின்றன. ஆதலால் தாய், தந்தையர்க்கு அவர்கள் இறந்தபின் பிள்ளைகள் செய்ய வேண்டிய கடமைகளை நம்பிக்கையுடனும், சிரத்தையுடனும் செய்ய வேண்டும். இப்படிச் செய்வதால் நம் சந்ததி தழைக்கும் என்பது ஆன்றோர் வாக்கு.

**முக்கியத்துவம்:**

இத்தனை சடங்குகளை செய்வதால் ஒரு மனிதனுக்கு என்ன பயன் என்ற எண்ணம் பலருக்கு எழலாம். நல்ல அறிவும் ஆற்றலும் உடைய ஒருவன் இத்தனை சடங்குகளும் விழாக்களும், மரியாதையும், அன்பும் தன்னுடைய வெறும் உடலுக்கு அல்ல என்பதை உணர வேண்டும். உள்ளே உறையும் தெய்வமயமான



ஆத்மாவிற்கு என உணர வேண்டும். சர்வ வல்லமை பொருந்திய பரம்பொருளை தேடி அடையவே இச்சடங்குகள் வழிகாட்டி களாகவும் தூண்டு கோல்களாகவும் இருக்கின்றன.

### 6. 1. 9. இந்து சமயக் கோட்பாடுகளின் முக்கியத்துவம்

இந்து சமயக் கோட்பாடுகள் எல்லாமே உயர்ந்த தத்துவ அடிப்படையில் விளக்கப்பட்டவை. பக்குவப்படாத ஆன்மாக்கள் வீடுபேறடையும் வழிபாட்டு முறைகளான உருவம் மற்றும் ஆலய வழிபாட்டையும் கூறுகின்றன.

இந்து சமயம் சடங்குகள், பழக்க வழக்கங்கள், விழாக்கள் போன்றவற்றிற்கு காரண காரியங்கள் உண்டு என்று எடுத்துக் கூறுகிறது. இந்து சமயமானது ஆன்மிகத் துறையில் கடைநிலையில் இருப்பவனும், கடைத்தேற்றம் பெறுவதற்கு எளிய வழிமுறைகளைக் கூறி ஒவ்வொரு மனிதனின் எதிர்காலத்திற்கும் ஒளியைத் தந்து கொண்டிருக்கிற இணையற்ற சமயமாகும்.

### 6. 1. 10. இந்தியப் பண்பாட்டிற்கு இந்து சமயத்தின் கொடை

1. இந்து சமயத்தில் காணப்படும் இல்லறம், துறவறம், பலகடவுட் கோட்பாடு, மனிதாபிமான உணர்வு, சகிப்புத் தன்மை, உயர்ந்த ஆன்மிகக் கோட்பாடுகள் போன்றவை இந்திய பண்பாட்டைச் சிறப்படையச் செய்கின்றன.

2. இந்து சமய இலக்கியங்களான வேதங்கள், உபநிடதங்கள், இதிகாசங்கள், புராணங்கள் போன்றவை இந்துக்களுக்கோ, இந்தியாவிற்கு மட்டுமோ சொந்தம் என எண்ணமுடியாமல் உலகமே இவற்றை போற்றுவதன் மூலமும், அமைதியான வாழ்க்கைக்கான யோக நெறியை வழங்குவதன் மூலமும் இந்தியப் பண்பாட்டிற்கு இந்து இலக்கியங்கள் மேலும் சிறப்பைக் கூட்டி இந்து சமய சமயத்தின் உயர்வுக்கு வழிவகுக்கின்றன.

3. கட்டடக்கலை, சிற்பக்கலை, ஓவியக்கலை, இசைக்கலை இவற்றில் மனிதனின் ஆன்மிக உணர்வுகள் பொதிந்து

www.tntextbooks.in

கிடக்கின்றன என்பதை உலகிற்குக் காட்டிய சமயம் இந்து சமயம் ஆகும்.

4. உருவ வழிபாட்டுமுறை, வீடுபேறடைவதற்கான அறநெறிக் கோட்பாடுகள் அத்வைதம், விசிட்டாத்வைதம், துவைதம், சைவ சித்தாந்த நெறிகள் போன்ற தத்துவக் கோட்பாடுகளையும் இந்திய பண்பாட்டிற்கு அளித்திருப்பபது இந்து சமயந்தான் என்பதில் சிறிதும் ஐயமில்லை.

5. சமயம், தத்துவம் இரண்டின் அடிப்படையில் வாழ்ந்து ஆன்ம ஈடேற்றம் பெறலாம் எனக் கூறிய ரிஷிகள், ஞானிகள், யோகிகள், சித்தர்கள், சமயச் சான்றோர்கள், தத்துவ ஞானிகள், தீர்க்கதரிசிகள் போன்றவர்களையும் தியாக உணர்வினை வெளிப்படுத்தும் 'ஹோமம்', 'யாகம்' போன்ற வழிபாட்டு முறைகளையும், ஐம்புலன்களுக்கும் அப்பாற்பட்ட முடிவுகளை உலகிற்கு உணர்த்தி, இந்தியப் பண்பாட்டை எல்லாரும் போற்றச் செய்வதும் நமது பழம்பெரும் இந்து சமயத்தின் வாயிலாகத்தான் என்றால் அது மிகையாகாது. எல்லாவற்றிற்கும் மேலாக எல்லா சமயத்தைச் சார்ந்தவர்களும் ஏற்றுக்கொள்ளும் தத்துவ நெறிகளடங்கிய புனித நூலான பகவத் கீதையைத் தந்துள்ள சமயம், இந்து சமயம் என்பது உலகெங்கும் பிரசித்தமான உண்மையாகும்.



## 6. 1. பயிற்சி வினாக்கள்

*அ. ஓரிரு வரிகளில் விடையளி*

1. 'இந்து'என்ற சொல்லின் பொருளைக் கூறுக.
2. 'இந்து சமயத்தின்' சிறப்பம்சம் யாது?
3. 'அறுவகை சமயங்கள்' யாவை?
4. 'வைணவ' சமயத்தின் இருபிரிவுகள் யாவை?
5. 'சாக்தம்' குறிப்பு வரைக.
6. வேதங்கள் 'மறை' எனப்படுவதேன்?
7. 'ஆகமங்கள்' என்றால் என்ன?
8. 'திருமுறை' என்பதன் பொருள் யாது?
9. 'மாணிக்கவாசகர்' எழுதிய நூல்கள் எவை?
10. 'திருமூலர்' எழுதிய நூல் எது?
11. 'நாலாயிரத் திவ்யப் பிரபந்தம்' - குறிப்பு வரைக.
12. 'சிவஞான போத' ஆசிரியர் யார்?
13. 'இதிகாசம்' என்பதன் பொருள் யாது?
14. 'இராமயணத்தை' இயற்றியவர் யார்?
15. 'இந்து சமயக் கோட்பாடுகள்' பற்றி எழுது. இந்து சமயம் வலியுறுத்தும் முக்கிய வேதாந்த நெறிகள் யாவை? அந்நெறிகளைத் தோற்றுவித்தவர் யார்?
16. இந்து சமயம் வலியுறுத்தும் 'நான்கு மார்க்கங்கள்' யாவை?
17. 'இராஜமார்க்கம்' என்றால் என்ன?
18. 'பக்திமார்க்கம்' என்றால் என்ன?

www.tntextbooks.in

19. இந்து சமய விழாக்கள் பற்றி எழுதுக.
20. 'கணேஷ்' சதுர்த்தி எங்கு எப்போது கொண்டாடப்படுகிறது?
21. 'கிரியை' என்றால் என்ன?

**ஆ. ஒரு பத்தி அளவில் அல்லது பத்து வரிகளுக்கு மிகாமல் விடையளி**

1. 'சமயம்' என்றால் என்ன? அவற்றுள் சிலவற்றைக் கூறு?
2. இந்து மதத்தின் தோற்றம் பற்றி எழுதுக.
3. 'இந்து மதம்' பற்றி திருமூலர் கூறுவது யாது?
4. சைவ சமயக் கோட்பாட்டை விவரி.
5. 'பன்னிரு திருமுறைகளை' வரிசைப்படுத்து?
6. 'சைவ சித்தாந்த சாத்திரங்கள்' யாவை?
7. 'இதிகாசங்கள்' உணர்த்தும் உயரிய நெறிகள் யாவை?
8. 'எறும்பு வழி', 'பறக்கும் வழி' பற்றி எழுதுக.
9. 'ஞானமார்க்கம்' - பற்றி எழுதுக.
10. 'கர்ம நெறி' பற்றி கீதை கூறுவன யாவை?
11. 'பக்தி மார்க்கம்' பற்றி விவரி.
12. 'தசரா பண்டிகையைப்' பற்றி எழுதுக.
13. 'கந்த விழாக்கள்' பற்றி விவரி.
14. இந்துக்கள் கொண்டாடும் 'தீபாவளிப்' பண்டிகைப் பற்றி எழுதுக.
15. 'திருக்கார்த்திகை' விழாவின் சிறப்பைக் கூறு.
16. 'சடங்குகள்' என்றால் என்ன?
17. 'வித்யாரம்பம்' பற்றி சிறுகுறிப்பு வரைக.
18. 'உபநயனம்', குருகுல வாசம்' பற்றி எழுதுக.



**இ. ஒரு பக்க அளவில் அல்லது முப்பது வரிகளுக்கு மிகாமல் விடையளி**

1. இந்து சமயப் பெருமைகளாக ஆசிரியர் கூறுவன யாவை?
2. 'அறுவகை சமயங்களை' விவரித்தெழுது.
3. 'சங்கரரின் அத்வைதக் கோட்பாட்டை' விவரி.
4. 'இராமானுஜர் விவரித்த விசிஷ்டாத்வைத நெறியை' விவரி.
5. 'மத்துவர் பரப்பிய துவைத நெறியைப்' பற்றி எழுதுக.
6. இந்து சமய விழாக்களை விவரி.
7. 'சிவராத்திரி விழா' மற்றும் மாத விழாக்கள் பற்றி தொகுத்து எழுதுக.
8. 'மத்வரின்' வாழக்கையை விவரி?
9. 'அபரக்கிரியை' என்றால் என்ன? அவற்றை செய்ய வேண்டியதன் அவசியம் என்ன?

**ஈ. நான்கு பக்கங்களுக்கு மிகாமல் விடையளி**

1. இந்து சமயத்தவர் பின்பற்ற வேண்டிய சடங்குகளையும், சம்பிரதாயங்களைப் பற்றி விவரி.
2. இந்து சமயக் கோட்பாடுகளின் முக்கியத்துவத்தை விவரி (அல்லது) இந்தியப் பண்பாட்டிற்கு இந்து சமயத்தின் பங்கினை விவரி.

www.tntextbooks.in

## 6. 2. சமண சமயம்

இந்தியாவிலுள்ள பழம்பெரும் சமயங்களுள் சமண சமயம் ஒன்றாகும். பழமையான ரிக் வேத மந்திரங்களில் இரு சமண தீர்த்தங்கரர்களைப் பற்றிய தெளிவான குறிப்புகள் உள்ளன. பல சான்றுகள் வாயிலாக இச்சமயமும் வைதிக சமயத்தைப் போன்று பழமையான சமயம் என்பதை அறியலாம். இருபத்தி நான்கு தீர்த்தங்கரர்களின் போதனைகள் அடங்கியது “சமணம்” எனக் கருதுகின்றனர். முதல் 22 தீர்த்தங்கரர்களைப் பற்றிய வரலாறு கிடைக்கப் பெறவில்லை. கடைசி இருவராகிய பார்சவ நாதரையும் மகா வீரரையுமே வரலாற்று ஆசிரியர்கள் ஏற்றுக் கொண்டு விளக்குகின்றனர்.

பார்சவநாதர் உயிர்க்கொலை கூடாது, பொய் பேசுதல் கூடாது, சொத்துக்கள் பெற்றிருத்தல் கூடாது. திருடுதல் கூடாது என்ற நான்கு உண்மைகளை உலகம் அறிந்து ஏற்று வாழும்படிச் செய்தார். பக்தர்கள் வெண்ணிற ஆடை அணிய அனுமதிக்கப்பட்டனர். மகாவீரரின் பெற்றோரும் பார்சவநாதரது போதனைகளைப் பின்பற்றியதாய்த் தெரிகிறது.

### 6 .2. 1. சமணம் - சொல்விளக்கம்

ஜீனரின் வழிச் செல்பவர்கள் ஜெயினர் - ***சமணர்*** எனப்பட்டனர். ஜைன் என்பது ஜீத் என்ற பகுதியின் அடியாகப் பிறந்தது. ஜீத் என்பதற்கு ஜெயித்தல், வெற்றிபெறுதல் என்பது பொருள். ஜீனன் என்றால் வெற்றி கண்டவன் - அதாவது தனது மனதையும் பொறிகளையும் அடக்கி வெற்றி கண்டவர் என்பது பொருள். அத்தகைய ஜீனர்களைக் கொண்ட சமயமே சமண சமயம்.

### 6. 2. 2. தீர்த்தங்கரர்

தீர்த்தம் என்பது ஆறு - குளத்தின் துறை என்று பொருள் தெய்வத் தன்மையும், மெய்யுணர்வும் பெற்ற தீர்த்தங்கரர்கள் மக்கள் மனதில் உள்ள அறியாமை மற்றும் அஞ்ஞானமாகிய இருளை அகற்றி ஆன்ம ஒளி வீசி கரையேற்றுபவர்கள் ஆவர். ‘தான் கண்ட நெறியைப் பிறருக்குப் பயன்பட’ உதவியவர்கள் என்று பொருள் கொள்ளலாம்.



### 6. 2. 3. சமண சமயப் பிரிவுகள்

சமண சமயத்தில் ‘திகம்பரர்கள்’, ‘சுவேதம்பரர்கள்’ என்ற இரு பிரிவினர் உள்ளனர்.

திகம்பரர் = திக் + அம்பரம் - திக் - திசை. அம்பரம் - ஆடை

திகம்பரர் என்றால் ஆடை அணியாதோர் என பொருள்படும். எவன் திசைகளை ஆடையாகக் கொண்டு வாழ்கிறானோ அவன் திகம்பரன் ஆவான்.

#### சுவேதம்பரர்

வெண்ணிற ஆடை அணிவோர் சுவேதம்பரர் என்று அழைக்கப்பட்டனர். சுவேதம் - தூய்மையான வெண்ணிறம் என்பது பொருள்.

### 6. 2. 4. வர்த்தமான மகாவீரர்

இவரது இயற்பெயர் வர்த்தமானர். இவர் சமண சமயத்தின் கடைசி தீர்த்தங்கரர் ஆவார். இவரது தந்தையார் சித்தார்த்தர் என்றும் தாயார் திரிசலா என்றும் அறிகிறோம். இவர் வைசாலிக்கு அருகில் உள்ள குண்டக் கிராமம் என்னுமிடத்தில் கி.மு. 546ல் பிறந்ததாக டாக்டர் இராதா குமுத் முகர்ஜி குறிப்பிடுகிறார். இவரது மறைவு கி.மு. 468ல் என்பதனை வரலாற்று ஆசிரியர்கள் ஏற்றுக் கொள்கின்றனர்.

இவர் யசோதை என்ற மங்கையை மணந்து இல்லற வாழ்வை மேற்கொண்டார். “பிரியதர்சனா” என்ற பெண் மகவைப் பெற்றார். பின்னர் வர்த்தமானர் துறவு மேற்கொண்டார். பன்னிரண்டு ஆண்டுகள் அலைந்து திரிந்தார். தவவாழ்வினை மேற்கொண்டார். பதின்மூன்றாம் ஆண்டில் இரிஜீபாலிகா என்னுமிடத்தில் சால் மரத்தினடியில் ‘நிர்வாணம்’ எனப்படும் உயர் நிலையை அடைந்தார் என்று கூறப்படுகிறது. அதன் பிறகே “மகாவீரர்” என்ற சிறப்புப் பெயர் வழங்கப்பட்டது. மகதம், கோசலம் ஆகிய நாடுகளிலும், பிற அருகிலுள்ள பகுதிகளிலும் சமண சமயக் கருத்துகளை விளக்கி

www.tntextbooks.in

வாழ்ந்தார். தமது 72ஆம் வயதில் "பாவா" என்னுமிடத்தில் உயர் நீத்தார்.

**போதித்த உண்மைகள்:**

சமணக் கொள்கைகளை செம்மைப்படுத்தி முறையாக அனைவரும் ஏற்கும் விதம் வழங்கியவர் மகாவீரர் ஆவர். பார்சவ நாதர் உலகிற்கு அளித்த அஹிம்சை, சத்யம், அஸ்தேயம், அபரிக்ருஹம் என்ற நான்குடன் மகாவீரர் 'பிரம்மசரியம்' எனப்படும் 'தன்னடக்கத்தை' மேற்கொள்ள வேண்டும் என்று குறிப்பிட்டார். கடவுள் என்ற ஒருவர் இல்லை என்றும் "மனிதரிடம் மறைந்திருக்கின்ற உயர்ந்த குணங்களும் மிகச் சிறந்த பண்புகளும் கடவுள் தன்மை பொருந்தியது" என்னும் நிலையில் உலகம் இயற்கையாக இயங்குகிறது என்பதை வலியுறுத்தினார்.

## 6. 2. 5. சமணக் கோட்பாடுகள்

வினைப் பயனிலிருந்த விடுதலை பெற்று நற்கதி அடைவதே சமணத்தின் முக்கிய நோக்கமாகும். இதற்கு மும்மணிகள் அல்லது மூன்று இரத்தினங்கள் என்னும் உயரிய நெறிகளை பின்பற்ற வேண்டும். மும்மணிகளாவன நன்னம்பிக்கை, நல்லறிவு, நல்லொழுக்கம் என்பனவாகும்

### *6. 2. 5. 1. மும்மணிகள்*

*1. நன்னம்பிக்கை:*

வீடு பேற்றினை அடைய வர்த்தமான மகாவீரர் போதித்த ஏழுதத்துவங்களிலும் முழுமையான நம்பிக்கை கொள்ள வேண்டும். இதுவே நல்ல நம்பிக்கை எனப்பட்டது. இதனை "சம்யக் தரிசனம்" எனவும் வழங்குபர்.

*2. நல்லறிவு:*

இந்த உலகத்தை யாரும் படைக்கவில்லை, இது இயற்கையாகத் தோன்றியது. என்ற முழுமையான "ஞானம்" அல்லது "சம்யக்ஞானம்" பெற்று பொருள்களைப் புரிந்து கொள்வதே நல்லறிவாகும்.



*3. நற்செயல்:*

கொல்லாமை, பொய்பேசாமை, திருடாமை சொத்து சேர்க்காமை, கற்புடைமை ஆகிய ஐந்து நல்லொழுக்கங்களை பின்பற்றுவது. இதனை "சம்யக் சரித்திரம்" என வழங்குவர்.

### *6. 2. 5. 2. சியாத்வாதம் அல்லது அநேகாந்த வாதம்*

சமண சமயத்தின் மிக உயர்ந்த கொள்கை "சியாத் வாதம்" அல்லது அநேகாந்த வாதம் ஆகும். ஒரே பொருள் பல இயல்புகள் பொருந்திய தாய் இருப்பதே அநேகாந்தம் பல்வேறு கோணங்களில் பார்க்கும்போது ஒரே பொருள் அநேக இயல்புகள் உள்ளதாய் காணப்படுகின்றன. எப்பொருளைக் குறித்தும் திட்டவட்டமான தெளிவான கருத்தினை வெளியிட முடியாது என்பதே இதன் விளக்கம்.

எடுத்துக்காட்டாக இராமன் என்பவன் ஒருவனுக்கு மகன் என்றால் இன்னொருவனுக்கு தந்தையாகவும், மூன்றாமவனுக்கு அண்ணன் அல்லது தம்பியாகவும். நான்காமவனுக்கு மாமனாகவும் இருக்கலாம். மேலும் ஒருவன் மற்றவனுக்கு நண்பனாயும் வேறு ஒருவனுக்கு பகைவனாயும் காட்சியளிக்கிறான். இவ்வாறு ஒவ்வொரு பொருளையும் அநேக கோணங்களில் பார்ப்பது 'அநேகாந்த வாதம்'ஆகும். ஒரு பொருள் எழுவகையாக இருக்கலாம் என வாதிடுவது சியாத்வாதம் ஆகும்.

### *6. 2. 5. 3. அகிம்சை*

சமணர்களின் அடிப்படைக் கோட்பாடுகளான இன்னா செய்யாமை, அருளுடைமை, கொல்லாமை, புலால் மறுத்தல் ஆகிய நான்கும் இணைந்த 'அகிம்சையே' சமணம் என்ற சமயக்கப்பலின் நங்கூரமாகும்.

### *6. 2. 5. 4. ஐந்து பெரும் நோன்புகள் அல்லது பஞ்சமஹாவிரதம்*

1. அகிம்சை (அ) இன்னா செய்யாமை
2. சத்யா (அ) வாய்மை

www.tntextbooks.in

3. அஸ்தேயா (அ) பிறர் பொருளைக் கவராமை
4. அப்பரிகிரஹா (அ) பற்று பாசம் இவற்றிலிருந்து விடுபடுவது
5. பிரம்மச்சரியம் (அ) ஐம்புலன்களையும் அடக்கியாளுகின்ற தன்னடக்கம்

*6. 2. 5. 5. நவபதார்த்தம்*

**ஆன்மாவின் பரிணாமங்கள் ஒன்பது**

1. நல்வினை தீவினை அகற்றி தானாகவே அனைத்தையும் உள்ளது உள்ளபடியே அறியும் ***ஜீவன்.***
2. உடலோடு கட்டுண்ட நிலையில் இன்ப துன்பங்களைத் துய்க்கும் ***அஜீவன்*** (உயிர் அற்றவை).
3. நல்லெண்ணம், நல்ல செயல், நல்ல சொல் இவற்றால் விளைந்த **புண்ணியம்**. (நல்வினை).
4. தீய எண்ணம், தீய செயல், தீய சொல் இவற்றால் விளைந்த **பாவம்**. (தீவினை).
5. உயிர்கள் செய்த புண்ணிய பாவங்களுக்கேற்ப பயன்கள் வந்து சேரும் என்னும் ***ஊற்று*** (ஆஸ்ரமம்).
6. மனம், வாக்கு, காயங்களை அடக்கி நல்வினை, தீவினை உயிரை வந்து அடையாமல் தடுக்கும் ***செறிப்பு***. (சம்வளா)
7. இரு வினைகளும் உயிருடன் சேராமல் தடுத்தபின்பு ஏஞ்சிய வினைகளை நீக்கும் ***உதிர்ப்பு***. (நிர்ஜரை).
8. சிந்தை, சொல், செயல், ஐம்புலன்கள் ஆகியவற்றால் உண்டான வினைகள் உயிரோடு கலப்பதாகிய **பந்தம்**. (கட்டு).
9. ஐம்புல ஆசைகளையும் அறவே அழித்து இரு வினைகளினின்றும் நீங்கி உயர்ந்த வீடுபேறு அடைவது. (மோட்சம்) இவையே சமணத்தில் கூறப்படும் நவபதார்த்தங்களாகும்.



***6. 2. 5. 6. சமண சமய இலக்கியங்கள்***

சமணத்தின் இலக்கியமான ஆகமசித்தாந்தம் 12 அங்கங்களைக் கொண்டது. ஜைனத்திருமுறையானது அர்த்தமகதி மொழியில் “தேவாதி” என்பவரின் தலைமையில் திருத்தியமைக்கப்பட்டது. இவை உரைநடையும் செய்யுள் நடையும் கலந்தவையாகும்.

### 6. 2. 6. இந்தியப் பண்பாட்டிற்கு சமணத்தின் கொடை

***6. 2. 6. 1. சமண இலக்கியமும் வளர்ச்சியும்***

சமணர்கள் இந்தியப் பண்பாட்டில் தங்களின் அழிக்கமுடியாத முத்திரைகளைப் பதித்திருக்கிறார்கள். பிராகிருதம், தமிழ், பாலி, போன்ற மொழிகளைப் படித்து அவற்றின் மூலம் சமயக் கருத்துக்களைப் பரப்பி மொழியை வளர்த்தார்கள். தொல்காப்பியம், நன்னூல், சீவகசிந்தாமணி, வளையாபதி போன்ற தமிழ் நூல்களை அளித்தவர்கள் சமணர்களே மற்றும் இந்தி, குஜராத்தி, மராத்தி, கன்னடம், சமஸ்கிருதம் போன்றவற்றிலும் சமண இலக்கியங் களையும், தத்துவங்களையும் அளித்துள்ளனர்.

***6. 2. 6. 2. சமணர்களின் அறக்கோட்பாடுகள்***

மனித உயிர் தனது கர்ம வினைகளிலிருந்து விடுபட அகத்தூய்மை, புறத்தூய்மை வேண்டும் என்பதால் பிச்சையெடுத்தல், உண்ணா நோன்பு போன்ற செயல்களைப் புறத் தூய்மைக்கும், பணிவு, பணி, கல்வி. தியானம், உடலை வெறுத்துப் பாவத்திற்குப் பரிகாரம் தேடல், உண்மை பேசுதல், தவம் போன்றவை அகத்தூய்மைக்கும் பின்பற்ற வேண்டிய நெறிமுறைகளாக சமணத்தில் கூறப்பட்டுள்ளது.

நல்ல நம்பிக்கை, நல்ல அறிவு, நல்ல ஒழுக்கம் என்ற மூன்று இரத்தினங்களைப் பின்பற்றி ஆன்ம விடுதலையாகிய நிர்வாண நிலையை அடைய வேண்டிய வழியை வகுத்துக் காட்டுகின்றன.

இல்லற வாழ்வில் ஈடுபட்டு இருப்பவர்கள் அகிம்சை, சத்தியம் அஸ்தேயம், அப்பரிகிரஹம், பிரம்மசர்யம் போன்ற ஐம்பெரும் நோன்புகளையும் கடைபிடிக்க வேண்டும். இந்த அனுவிரதங்களோடு சில ஒழுங்கு முறைகளை சமணத்துறவிகள் பின்பற்றும்போது அவை மகா விரதங்கள் எனப்படுகின்றன.

www.tntextbooks.in

### *6. 2. 6. 3. அகிம்சை*

சமணர்க்குரிய பல்வேறு அறங்களுள் அகிம்சையே தலை சிறந்ததாகும். சிந்தை, சொல், செயல் இவற்றால் பிற உயிர்க்கும் துன்பச் செய்யாமல் அன்பையும், கருணையையும் காட்டுவதே அகிம்சை ஆகும்.

### *6. 2. 6. 4. சமணத் தத்துவம்*

உலகில் உள்ள எல்லா ஜீவனும் மற்றும் அஜீவனும் ஒன்றையொன்று சார்ந்திருப்பதால் ஏற்படும் பிறப்பு, இறப்பு என்ற நீண்ட பயணத்திலிருந்து விடுபட வேண்டும். அதற்குக் கடுமையான அறக்கோட்பாடுகளையும், நெறிகளையும் பின்பற்ற வேண்டும் என்பது சமணத் தத்தவம்.

### *6. 2. 6. 5. கலை*

சமணர்கள் தங்கள் ஞானிகளை பெருமைப்படுத்தும் வகையில் ஸ்தூபிகள் எழுப்பினார்கள். மதுரா, பந்தல்கண்ட், மத்திய இந்தியா போன்ற இடங்களில் சமண கட்டடக்கலையின் இடிபாடுகளும், கல்வெட்டுகளோடு கூடிய படிமங்களும், தீர்த்தங்கர்களின் சிலைகளும் காணப்படுகின்றன.

மைசூரில் சரவணபெலகுலாவில் காணப்படும் 59 அடி உயரமான கோமதீஸ்வரர் சிலை சமணக்கலைக்கு மேலும் சிறப்பைக் கூட்டுவதாக அமைந்துள்ளது. மேலும் உதயகிரியிலுள்ள புலிக்குகை, எல்லோராவிலுள்ள இந்திரசபை, அடி, கஜீரஹோ போன்ற இடங்களிலுள்ள ஆலயங்களும் சமணர்காலக் கட்டடக் கலைச் சிறப்பினை காட்டுகின்றன.

இவ்வாறு சமணம் சமயத்துறையோடு நில்லாமல் கலை, இலக்கியம், நடைமுறை வாழ்வில் பின்பற்றவேண்டிய ஒழுக்க நெறிகளை மேம்பாடு அடையச் செய்ததன் வாயிலாக இந்தியப் பண்பாட்டிற்கு பெருந்தொண்டாற்றியுள்ளது.



## 6. 2. பயிற்சி வினாக்கள்

**அ. ஓரிரு வரிகளில் விடையளி**

1. ‘ஜினர்’ என்ற சொல்லின் பொருள் யாது?
2. ‘தீர்த்தங்கரர்கள்‘ என்பவர் யார்?
3. சமண சமயத்தின் இருபிரிவுகள் யாவை?
4. சமண சமயக் கப்பலின் நங்கூரமாக போற்றப்படுவது யாது?
5. ‘பஞ்சமஹாவரதம்‘ என குறிப்பிடுவன யாவை?
6. ‘கோமதீஸ்வரர்’ சிலை எங்கு அமைந்துள்ளது?
7. சமணர்களால் உருவாக்கப்பட்ட தமிழ் நூல்கள் யாவை?
8. அகத்தூய்மையாக சமணம் பின்பற்ற வேண்டிய வழிகள் யாவை?

**ஆ. ஒரு பத்தி அளவில் அல்லது பத்து வரிகளுக்கு மிகாமல் விடையளி**

1. சமண சமயத்தின் தோற்றம் பற்றி எழுதுக.
2. ‘திகம்பரர், ‘சுவேதம்பரர்’ - விளக்குக.
3. மகாவீரர் போதித்த உண்மைகள் யாவை?
4. சமணர் கால ‘கலை வளர்ச்சியை’ எழுதுக.
5. சமணசமய ‘அறக்கோட்பாடுகள்’ யாவை?

www.tntextbooks.in

### இ. ஒரு பக்க அளவில் அல்லது முப்பது வரிகளுக்கு மிகாமல் விடையளி

1. ‘மஹாவீரரின்’ வாழக்கையை விவரி?
2. சமணசமயம் கூறும் ‘மும்மணிகள்’, ‘அநேகாந்த வாதம்’ பற்றி விவரி?
3. சமண சமயத்தில் கூறப்பட்டுள்ள “நவபதார்த்தம்” பற்றி நீவிர் அறிவன யாவை?

### ஈ. நான்கு பக்கங்களுக்கு மிகாமல் விடையளி

1. வர்த்தமானரின் வாழ்க்கை வரலாற்றையும் அவர் போதித்த உண்மைகளையும் கட்டுரை வடிவில் எழுதுக.
2. இந்தியப் பண்பாட்டிற்கு சமண சமயத்தின் பங்கினை விவரி.



## 6. 3. புத்த சமயம்

இந்து சமயத்தில் நிலவிய குறைபாடுகளான மூடப் பழக்கவழக்கங்கள் வேள்விகள், சடங்குகள், சாதிக் கொடுமைகள் போன்றவற்றை நீக்க வழி காண வேண்டும் என்ற சிந்தனையின் விளைவே புத்த சமயம் தோன்றக் காரணமாகும்.

புத்தமதமானது பாலி பௌத்தம், திருமறை பௌத்தம், தென்னாட்டு பௌத்தம், தேரவாதம் அதாவது ஸ்தவிரவாதம் என்றும் பல பெயர்களால் அழைக்கப்படுகிறது.

### 6. 3. 1. புத்தர்

புத்த மதத்தைத் தோற்றுவித்த புத்தரின் இயற்பெயர் சித்தார்த்தர் இவர் நேபாள நாட்டில் கபில வஸ்துவில் உள்ள லும்பினி வனத்தில் சுத்தோதனருக்கும் மாயா தேவிக்கும் மகனாகப் பிறந்தார். இவர் சாக்கிய வகுப்பைச் சேர்ந்தவர் என்பதால் “சாக்கிய முனி” என்றும் ஆன்மிகத் துறையில் “புத்தர்” எனவும் அழைக்கப்பட்டார்.

சுத்தோதனர், சித்தார்த்தருக்கு இளமையிலேயே “யசோதரை” என்னும் மங்கையை மணம் முடித்து வைத்தார். காலப் போக்கில் அரண்மனை வாழ்க்கை பிடிக்காமல் அமைதியை இழந்த அவர் பொழுது போக்கிற்காக அரண்மனையை விட்டு வெளியே சென்றுகொண்டிருந்தபோது அவர் கண்டகாட்சி - அவர் மனதை மாற்றியது. வயது முதிர்ந்த மனிதன், நோயாளி, பிணம், துறவி போன்றவர்கள் படும் துன்பத்தைக் கண்டு அதைப் போக்க வழிகாண முயன்றார். தனது 29வது வயதில் உண்மையைக் காண அரண்மனை வாழ்வை விட்டு வெளியேறினார்.

துறவியான புத்தருக்கு ஆசிரியர்களின் அறிவுரையும், கடுந்தவமும் பயனளிக்காத நிலையில் உருவேலாவிலுள்ள போதி மரத்தடியில் அமர்ந்து 7 வாரங்கள் தியானம் செய்தார். இறுதியில் ஒருநாள் கடுமையான தவம் செய்துக்கொண்டிருக்கும்போது “புதிய ஒளி” தோன்றியது. 36வது வயதில் ஞானோதயம் பெற்று *நிர்வாணம்* என்றும் உயரிய நிலையை அடைந்தது. முதல் அவர் “புத்தர்” என

www.tntextbooks.in

அழைக்கப்பட்டார். தனது 80வது வயதில் "குசி" நகரத்தில் இவ்வுலக வாழ்வை நீத்து "மகாநிர்வாண" நிலையை அடைந்தார்.

### 6. 3. 2. புத்தரது சமய போதனைகள்

புத்தர் தாம் கண்ட உண்மைகளை 45 ஆண்டுகள் பல இடங்களுக்கும் சென்று, படித்தவரும் பாமரரும் புரிந்துகொள்ளும். வண்ணம் போதனை செய்தார். அனைத்துச் சாதிப் பிரிவை சேர்ந்தவர்களும் புத்த சமயத்தில் சேர்த்துக்கொள்ளப்பட்டனர். ஆசையை ஒழித்தால் தான் மன அமைதியையும், ஆனந்தத்தையும் அடைய முடியும் என்றும், அதற்குத் தீமைகளைக் களைந்து நன்மைகளைச் செய்தால் ஆசை அகன்றுவிடும் என்று போதித்தார்.

#### *6. 3. 2. 1. நான்கு உயரிய உண்மைகள் (அ) ஆரிய சத்தியங்கள்*

1. 'இவ்வுலக வாழ்க்கை துன்பமயமானது' பிணி, மூப்பு, சாக்காடு ஆகிய துன்பங்கள் நம்மைத் தொடர்ந்து கொண்டிருக்கின்றன.
2. தான் இன்பமாக வாழவேண்டுமென்ற 'தன்னல ஆசையே' துன்பத்திற்குக் காரணம்.
3. 'தன்னல ஆசைகளை ஒழித்தால்' துன்பங்கள் அறவே நீங்கும்.
4. எண்வகை வழிகளை மேற்கொண்டால் ஆசைகளை ஒழித்து துன்பங்களிலிருந்து விடுபட்டு நிர்வாணம் என்னும் உயரிய நிலையை அடையலாம்.

#### *6. 3. 2 .2. எண்வகை வழிகள்*

1. *நல்ல நம்பிக்கை* - புத்தரிடத்திலும், அவரது கொள்கையிலும் நம்பிக்கை வைத்தல்
2. *நல்லெண்ணம்* - இல்லற வாழ்க்கையைக் கைவிடுதல், நல்ல நினைவுகளை மனதில் பதியச் செய்தல்.
3. *நல்மொழி* - புத்தருடைய கொள்கைகளைத் திரும்பத் திரும்பச் சொல்வது பிறர் உள்ளங்களைப் புண்படுத்தும் சொற்களைப் பேசாமல் உண்மையும் இனிமையும் கலந்த சொற்களைப் பேசுவது.



4. *நற்பணி* - துறவு வாழ்க்கையின் மூலம் நற்பணிகளைச் செய்தல்.
5. *நல்ல வாழ்க்கை* - பிச்சை எடுத்து வாழ்வதிலும் நல்ல நெறிகளைப் பின்பற்றி வாழ்வதாகும்.
6. *நல்ல முயற்சி* - சமயக் கோட்பாடுகளை முறையாகப் பின்பற்றி வாழ முயற்சிப்பது.
7. *நல்ல சிந்தனை* - மனித உடல் அசுத்தமானது என்றும், நிலையற்றது என்றும் மனதில் கொண்டு நல்லவற்றை நினைவில் கொள்ளுதல்.
8. *நல்ல தியானம்* - மனத்தை நல்லனவற்றில் நிலை நிறுத்தி மௌனத்தை மேற்கொண்டு மன அமைதி பெறுதல்.

#### *6. 3. 2. 3. இடைவழி அல்லது மத்திய மார்க்கம்*

பௌத்த சமயத்தில் அதிகம் உண்டு, உறங்கும் இன்ப வாழ்க்கைக்கு இடமில்லை. உண்ணாமல், உறங்காமல் தானே வருந்தி வாடுதலும் கூடாது என்ற கோட்பாட்டைக் கடைப்பிடித்து, உலக இன்பத்தை வெறுத்து, கடுந் தவம் புரியாமல் இருந்து துறவியானவர் புத்தர். எனவே இரு வகை உச்சநிலைகளையும் **(Extremes)** தவிர்த்து எளிய வழியில் நற்கதி அடைதல் வேண்டும். இதனை இடைவழி என்றும் **(Middle Path, Golden path)** வழங்குவர்.

#### *6. 3. 2. 4. நிர்வாணம்*

"ஆசையை அகற்றுவதே நிர்வாணம்" என்று சுத்த பீடகத்தில் கூறப்பட்டிருக்கிறது. பிறப்பு, இறப்பு என்ற துன்பங்களிலிருந்து விடுபட்டு நிர்வாண நிலையை அடைய தூய வாழ்வும், எண் வழி மார்க்கங்களைப் பின்பற்றுவதுமே இதன் அடிப்படையாக அமைகிறது.

#### *6. 3. 2. 5. கர்மவினை*

இந்து சமயத்தின் கர்மவினைக் கோட்பாட்டிலும், மறுபிறப்பிலும் புத்தர் நம்பிக்கைக் கொண்டிருந்தார். "வினை விதைத்தவன் வினை அறுப்பான், திணை விதைத்தவன் திணை அறுப்பான்" என்ற

www.tntextbooks.in

முதுமொழிக்கு ஏற்ப கடந்த கால வாழ்வின் பயனே இப்போதைய வாழ்வும் உடலும் ஆகும் என்றார். எனவே வினையிலிருந்து யாரும் தப்ப முடியாது என்பதை வலியுறுத்துகிறார் என அறிய முடிகிறது.

### *6. 3. 2. 6. ஒழுக்கம்*

இல்லறத்தாரும், துறவறத்தாரும் பின்பற்ற வேண்டிய ஒழுக்க நெறிகள் பத்து எனக் கணக்கிட்டு கீழ்க்கண்டவாறு முதல் ஐந்து இல்லறத்தாருக்கும், மற்ற ஐந்து துறவறத்தாருக்கும் கூறப்பட்டுள்ளது.

இல்லறத்தார் பின்பற்ற வேண்டியவை

1. வெஃகாமை (அ) பிறர் பொருள் விரும்பாமை
2. பொய்யாமை
3. கொல்லாமை
4. பிறன் மனை விழையாமை
5. கள்ளுண்ணாமை

### *6. 3. 2. 7. துறவறத்தார் பின்பற்ற வேண்டியவை*

1. ஆடல் பாடல்களில் பங்கு கொள்ளாமை
2. மலர், நறுமணப் பொருள்கள் போன்ற ஆடம்பரப் பொருள்களைப் பயன்படுத்தாமை
3. அகாலத்தில் உண்ணாமை
4. மகிழ்ச்சியளிக்கும் படுக்கைகளில் உறங்காமை
5. பணத்தை வைத்துக்கொள்ளாமை.

இவற்றால் புத்தரின் வாழ்க்கை, அவர் போதித்த கொள்கைகள் முதலியவற்றைப் பார்த்தோம். இனி புத்தர் பின்பற்றிய சமயம், அதன் நூல்கள் முதலியவற்றைப் பற்றி விரிவாகப் பார்ப்போம்.

பௌத்தமதத்தின் வேதநூல் திரிபிடகம் ஆகும். இதை மரபின் மூன்று கூடைகள் அதாவது மூவகைச் சட்டம் அல்லது புனிதக் கொள்கைகொண்ட திருமறை என்றும் கூறுவர். அவை சுத்த அல்லது



புத்தர் திருவாய் மலர்ந்த மொழிகள், வினயம் அல்லது அறநெறிகள், அபிதமம் (அ) தத்துவ இயல்பான ஆய்வுகள் என மூன்று வகைப்படும்.

### 6. 3. 3. புத்த சமயத்தின் பிரிவுகள்

புத்த சமயம் ஹுனயானம், மஹாயானம் என இரண்டு பிரிவாக உள்ளன.

ஹீனயானம் என்பது போதிசத்துவர்களால் பின்பற்றப்பட்டது. பழமையான உண்மைகளை ஏற்றுக்கொள்வது. இச்சமயத்தின்படி புத்தர் சாதாரண மனிதராக மதிக்கப்பட்டார். புத்தரின் நல்லொழுக்க நெறிகளின் மூலம் நிர்வாணம் அடையலாம் என்பதை வலியுறுத்திய சமயம் ஹுனயான புத்தசமயமாகும். தத்துவக் கோட்பாடுகள் பாலி மொழியில் எழுதப்பட்டன. இப்பிரிவு அசோகர் காலத்தைச் சார்ந்தது.

மஹாயானம், புத்தரைக் கடவுளாக நினைத்து வணங்குவதன் மூலந்தான் நிர்வாண நிலையை அடைய முடியும் என்பதை வலியுறுத்தியது. எனவே புத்தருக்கு ஆலயங்கள் எழுப்பி சிலை வைக்கப்பட்டது. சடங்குகள், வேள்விகள் நடத்தப்பட்டன. மஹாயான புத்தசமயக் கோட்பாடுகள் சமஸ்கிருத மொழியில் எழுதப்பட்டன. இப்பிரிவு கனிஷ்கர் காலத்தைச் சார்ந்தது.

### 6. 3. 4. இந்தியப் பண்பாட்டிற்கு பௌத்த சமயத்தின் கொடை

1. புத்தரின் உயர்ந்த அறக்கோட்பாடுகள், அறக்கொள்கைகள் மக்களின் உணர்வுகளுக்கு ஏற்பவும், அனைவரும் அறிந்திருந்த மொழியிலும், நீதிக் கதைகள் மூலமாகவும் கற்பிக்கப்பட்டன.
2. தியாகம், தூய்மை, அறம், உண்மை, தன்னடக்கம், அன்பு, இரக்கம் போன்ற உயரிய பண்புகளை வலியுறுத்தியதோடு மனித நலனுக்காகப் பணிபுரிய வேண்டும் என்பதையும் புத்தர் உணர்த்தினார்.
3. புத்தரின் அகிம்சைக் கொள்கை இந்து சமயத்தில் காணப்பட்ட தேவையில்லாத சடங்குகளும், வேள்விகளும் மறையக் காரணமானது. மஹாயான புத்தமதத்தினரைப் பின்பற்றி

www.tntextbooks.in

ஆலயங்களும் மடங்களும் ஏற்படுத்தப்பட்டது. உருவ வழிபாடும் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

## இலக்கிய வளர்ச்சி

1. "விஹாரங்கள்" எனப்படும் பௌத்த மடாலயங்கள் உருவாக்கப் பட்டன. "பிராக்கிருதம்" எனப்படும் பேச்சு மொழியில் இலக்கியங்கள் பெரும் வளர்ச்சியைக் கண்டன.
2. பௌத்த பிக்குகளும், பெண் துறவிகளும், படிக்காத பாமரர்களும் புரிந்துக்கொள்ளும் வகையில் அவர்களது பேச்சு மொழியில் சமயக் கருத்துகளைப் பரப்பினர்.
3. புத்த சமய வேத நூல் - திருமுறை. இது பாலி மொழியில் இயற்றப்பட்டது.
4. "ஆயுர் வேதம்" என்னும் மருத்துவநூல் நாகார்ஜுனர் என்பவராலும் சமயத்தொடர்பான உரைநடை நூல்கள், நாடகங்கள் போன்றவை "அசுவகோஷா" "ஹர்ஷர்" போன்றவர்களாலும் எழுதப்பட்டன.

## சம உரிமையும், சகிப்புத் தன்மையும்

1. சாதி, இனம், பால் என்ற வேறுபாடின்றி எல்லோரும் புத்த சமயத்தில் சேர்ந்து அதன் கோட்பாடுகளைப் பின்பற்றி வாழ்வில் உயர்நிலை அடையலாம் என்னும் வாய்ப்பை புத்த சமயம் அளித்தது.
2. இதனால் சாதிக் கொடுமைகள் மறைந்து சமத்துவம் நிலைத்தது.
3. அமைதி, அன்பு, கருணை, பொறுமை, சகிப்புத்தன்மை போன்ற உயரிய பண்புகள் இந்திய பண்பாட்டிற்கு அளித்த பெருமை புத்த சமயத்தையே சாரும்.
4. புத்தர் தன்னுடைய சீடர்கள் சமயக் கொள்கைகளை கண்மூடித் தனமாக ஏற்றுக்கொள்ளாமல் பகுத்தறிவினைப் பயன்படுத்தி ஆராய்ந்து ஏற்றுக்கொள்வதை விரும்பினார்.



## பௌத்த கலை

புத்த மதம் தோன்றுவதற்கு முன்பு இருந்த வேதகால இந்தியாவில் கலை என்பது ஒரு ஏவற் பெண்ணாகக் கருதப் பட்டதால் கட்டடக்கலையோ, சிற்பக்கலையோ வளர்ச்சியடைய வில்லை. வேள்வி செய்வதற்கான யாகசாலைகளும், பலிபீடங்களும் கட்டப்பட்டன.

புத்தர், போதிசத்துவர், இவர்களின் நினைவுச் சின்னங்களின்மீது கல்லால் கட்டப்பட்ட ஸ்தூபிகள் போன்ற கட்டடக்கலைகள் மனிதனின் ஆன்மாவை வெளிப்படுத்தி சிறப்பு செய்தது. ஆலயங்கள், விஹாரங்கள், நினைவுச் சின்னங்கள் ஆகியவற்றில் அழகிய வேலைப்பாடுகளோடு புத்தரின் வாழ்க்கை வரலாறுகள் செதுக்கப்பட்டன. குகைக்கோயிலை உருவாக்கியவர்களும் இவர்களே. பர்ஹட்ம், சாஞ்சி, அமராவதி போன்ற இடங்களிலுள்ள தூண்களும் கன்ஹேரி, கர்லே போன்ற இடங்களிலுள்ள குகைக்கோயில்களும் பௌத்த சமயச் சிற்பக் கலையினைப் பறைசாற்றும் மிகச் சிறந்த கலைச் சின்னங்களாக விளங்குகின்றன. கனிஷ்கர் காலத்தில் தான் "காந்தாரக் கலை" தோன்றியது.

புத்த சமயம் இந்தியாவில் தோன்றியதால் இந்தியப் பண்பாட்டின் தனித்தன்மை நீங்கி வெளிநாடுகளுடன் தொடர்பு கொள்ளும் வாய்ப்பு ஏற்பட்டது. புத்தபிக்குகளும், அறிஞர்களும் புத்த சமயத்தைப் பரப்ப வெளிநாடுகள் சென்றபோது இந்தியப் பண்பாட்டையும் தங்களோடு சுமந்துசென்றதால் சீனா, மங்கோலியா, மஞ்சூரியா, கொரியா, ஜப்பான், பர்மா, சாவகம் சுமத்திரா, இந்தோசீனா போன்ற நாடுகளில் இந்தியப் பண்பாடு பரவியது. புத்த சமயத்தை தழுவிய அந்நியர்கள் புண்ணிய பூமியான, வேற்றுமையில் ஒற்றுமை கண்ட இந்தியாவிற்கு புனிதப் பயணம் மேற்கொண்டதாலும் இந்திய பண்பாட்டின் சிறப்பு மேலும் வெளிநாட்டில் பரவக்காரணமாயிற்று.

## முடிவுரை

இவ்வாறு சமயங்கள் இந்தியப் பண்பாட்டின் ஊற்றுக்கண்களாகத் திகழ்ந்தன. உயரிய வாழ்வியல் நெறிகளை அறிந்து பின்பற்றுமாறு செய்துள்ளன.

## 6. 3. பயிற்சி வினாக்கள்

***அ. ஓரிரு வரிகளில் விடையளி***

1. ‘புத்தரின்’ இயற்பெயர் என்ன?
2. ‘இடைவழி’ அல்லது ‘மத்திய மார்க்கம்’ பற்றி எழுதுக.
3. புத்தசமயத்தின் இருபிரிவுகள் யாவை?
4. பௌத்த மடாலயங்களின் பெயர் என்ன?
5. புத்தசமய ‘வேதநூல்’ எது? அது எம்மொழியில் எழுதப்பட்டது?
6. ‘காந்தாரக் கலை’ என்றால் என்ன?
7. பௌத்த சமயம் எந்நாடுகளில் பரவியது?

***ஆ. ஒரு பத்தி அளவில் அல்லது பத்து வரிகளுக்கு மிகாமல் விடையளி***

1. நான்கு ‘ஆரிய சத்தியங்கள்’ யாவை?
2. ‘எண்வகை வழிகளை’ விளக்குக.
3. துறவறத்தார் பின்பற்ற வேண்டுவனவாக புத்தர் கூறுவன யாவை?
4. புத்தசமயத்தின் இருபிரிவுகளை விளக்குக.
5. பௌத்த சமய இலக்கிய வளர்ச்சி பற்றி விவரி.

***இ. ஒரு பக்க அளவில் அல்லது முப்பது வரிகளுக்கு மிகாமல் விடையளி***

1. புத்தரின் வாழ்க்கை வரலாற்றை விவரி.
2. ‘நிர்வாணம்’, ‘கர்மவினை’, ‘ஒழுக்கம்’ பற்றிய புத்தரின் கருத்துகளை விவரி?
3. பௌத்தர் கால கலை வளர்ச்சியை நும் திறம் கொண்டு ஆய்க.

***ஈ. நான்கு பக்கங்களுக்கு மிகாமல் விடையளி***

1. புத்தரின் வாழ்கையையும், சமய போதனைகளையும் விவரி.
2. இந்தியப் பண்பாட்டிற்கு பௌத்த சமயத்தின் கொடையை விவரி.

www.tntextbooks.in

# 7. இந்தியப் பண்பாட்டிற்கு பேரரசுகளின் கொடை

## 7. 1. மௌரியர் காலப் பண்பாடு

மௌரியர்கள் வருகை இந்திய வரலாற்றில் அரசியல், பண்பாட்டுத் துறைகளில் ஒரு புதிய அத்தியாயத்தைத் தோற்றுவித்தது எனக் கூறலாம். இந்த அரசு மரபு. சந்திர குப்த மௌரியரால் நிறுவப்பெற்றது. மௌரியர்கள் ஒரே சீரான நிருவாக முறையை நடத்தி வந்தனர். இவர்களது ஆட்சிக் காலத்தில் அரசியல் ஒற்றுமை, சமுதாயத்தில் அமைதி, பொருளாதார வளர்ச்சி, சமய சகிப்புத் தன்மை இவையனைத்தும் சிறப்பான நிலையில் இருந்ததையும் காணலாம். கட்டடக் கலை, இலக்கியம், போன்றவை உன்னத நிலையில் இருந்ததையும் காண்கின்றோம்.

### 7. 1. 1. காலம்

சந்திர குப்த மௌரியன் கி.மு. 322-லிருந்து கி.மு. 298 வரையும், பிந்துசாரன் கி.மு. 298 லிருந்து கி.மு. 273 வரையும், அசோகன் கி.மு. 273 முதல் கி.மு. 232 வரையும், அசோகருக்குப் பிறகு ஆட்சிக்கு வந்த அரசர்கள் கி.மு. 232 முதல் கிமு. 182 வரையும் ஆண்டு வந்தாக அறிகிறோம்.

### 7. 1. 2. சான்றுகள்

மௌரியர்களுடைய ஆட்சியைப் பற்றி அறிந்து கொள்ள மெகஸ்தனிஸ் எழுதிய ‘இண்டிகா’ சாணக்கியர் எழுதிய ‘அர்த்த சாஸ்திரம்’ விசாகதத்தர் எழுதிய ‘முத்ரா இராட்சஸம்’ என்ற அரசியல் நாடகம், சமண, பௌத்த சமய நூல்களும் (தீபவம்சம், மகாவம்சம்) புராணங்களும், கலை, கல்வெட்டுகள், சிற்பங்கள் மற்றும் நாணயங்கள் ஆகியவை மௌரியர்களின் நல்ல பண்பாட்டு வாழ்க்கை பற்றி அறிய உதவும் சான்றுகளாக விளங்குகின்றன.

www.tntextbooks.in

### 7. 1. 3. முக்கிய அரசர்கள்

1. சந்திரகுப்த மௌரியன் (கி.மு. 322 - கி.மு. 298)
2. பிந்து சாரன் (கி.மு. 298 - கி.மு. 273)
3. அசோகன் (கி.மு. 273 - கி.மு. 232)

### 7. 1. 4. அரசியல் நிலை

***மைய அரசு***

மைய அரசு, அரசின் நேரடி நிர்வாகத்தின் கீழ் இருந்தது. அரசர் அனைத்து அதிகாரங்களையும் கொண்டவராக இருந்தாலும், மக்கள் அவரை எளிதில் அணுக முடிந்தது. அரசர் படைத் தலைவராகவும் முதன்மை நீதிபதியாகவும் திகழ்ந்தார். எத்துறையிலும்அவனுடைய முடிவே இறுதி முடிவாக இருந்தது.

மைய அரசு நிருவாக நுணுக்கங்களையும் அமைச்சர்களின் பணிகளையும், இராணுவ செயல் திறனையும், நாட்டில் நடைபெறும் ஏனைய நிகழ்வுகளையும், ஒற்றர்களின் பணியையும் செவ்வனே பராமரிக்க வேண்டும். அமைச்சர்களைத் தவிர அரசனுக்கு அவசர காலங்களில் ஆலோசனை வழங்க 'மந்திரி பரிஷத்' என அழைக்கப்படும் ஆலோசர்களும் இருந்தனர்.

***செயலகம்***

அரசு அலுவல்களைக் கவனிக்கப் பல்வேறு துறைகளை உள்ளடக்கிய 'செயலகம்' நிறுவப்பட்டது. ஒவ்வொரு துறையும் 'அத்யக்ஷர்' என்னும் கண்காணிப்பாளரின் கீழ் இயங்கி வந்தது.

மாவட்ட ஆட்சியாளர்கள் 'அக்ரநாமி' எனவும், நகர ஆணையாளர்கள் 'அஸ்திநாமாய்' எனவும் அழைக்கப்பட்டனர். நகர நிருவாகத்தைக் கவனிக்க 'மகாமாத்திரர்கள்' என்ற உயர்ந்த அலுவலர்கள் நியமிக்கப்பட்டனர். எழுத்தர்கள் 'யுதா' எனவும், செய்தி நிருபர்கள் 'பதிவேடகர்கள்' எனவும் அழைக்கப்பட்டனர். உயர்ந்த நிலை பூசாரியைப் 'புரோகிதர்' என்றும் இளவரசரை 'யுவராஜா' என்றும் சேனைத் தலைவரை 'சேனாதிபதி' என்றும்



குறிப்பிட்டனர். பௌத்த சமய தருமத்தை மக்களுக்குப் பிரகடனப்படுத்தி, நீதி போதகர்களாகவும், சமய ஞானிகளாகவும் இருந்தவர்கள். 'தரும மகாமாத்திரர்கள்' என்ற ஒருவகை அலுவலர்களை அசோகர் நியமித்தார். கருவூல தணிக்கையாளர்களும் நியமிக்கப்பட்டு இருந்தனர்.

***மாநில அரசுகள்***

மௌரியப் பேரரசு பல மாநிலங்களாகப் பிரிக்கப்பட்டது. ஒவ்வொரு மாநிலத்திற்கும் அரசு குடும்பத்தைச் சேர்ந்த இளவரசர்கள் அல்லது அரச குடும்பத்தைச் சேர்ந்த குமாரரர்கள் தலைமையேற்று மாநில ஆளுநராக ஆட்சிப்பொறுப்பை நடத்தி வந்தனர். மாநிலங்கள் மாவட்டங்களாகப் பிரிக்கப்பட்டு அவற்றை 'ஸ்தானிகர்' என்போர் தலைமையேற்று நடத்தினர். மாவட்ட ஆட்சியாளர்கள் 'அக்ரநாமி' என அழைக்கப்பட்டனர்.

கிராமம் தான் நிருவாகத்தில் ஒரு சிறு தொகுதியாக இருந்தது. அதன் பொறுப்பை ஏற்ற அலுவலரைக் 'கிராமிகன்' எனவும் பத்து கிராமங்களுக்குப் பொறுப்புள்ள அலுவலர் 'கோபன்' எனவும் அழைத்தனர்.

***ஒற்றர் முறை***

மௌரிய அரசில் சிறந்த ஒற்றர் முறை இருந்தது. அரசு அலுவலர்களின் நடவடிக்கைகளைக் கண்காணிப்பதும் இரகசிய செய்திகளைத் துப்பறிந்து அரசுக்குத் தெரிவித்தும் வந்தனர். இவர்களைக் கௌடில்யர் 'குதபுருஷர்கள்' என்று அழைத்தார்.

***நீதி நிருவாகம்***

நீதி வழங்குவதற்கு அரசனே தலைவன் பாடலிபுத்திரத்தில் நாட்டின் உயர்ந்த நீதி வழங்கும் சபை இருந்தது. நாடு முழுவதும் நீதி மன்றங்கள் நிறுவப்பட்டு இருந்தன. அவைகட்கு மகாமாத்திரர்கள் மற்றும் இராசுக்கர்கள் என்போர் தலைமையேற்றனர். 'தருமஸ்தேயம்,' 'கண்டக்க சோதனம்' என்ற இருவகை நீதி மன்றங்கள் இருந்தன. சிறிய வழக்குகள் கிராமப் பஞ்சாயத்துகளால் தீர்க்கப்பட்டன. தண்டனைகள் கடுமையாக வழங்கப்பட்டன.

www.tntextbooks.in

*இராணுவ நிருவாகம்*

மௌரிய இராணுவம் காலாட் படை, குதிரைப்படை, யானைப்படை, தேர் படை மற்றும் கடற்படை போன்றவை அடங்கி இருந்தன. போர் வீரர்கட்கு சிறந்த முறையில் பயிற்சி அளிக்கப்பட்டு மிகத் திறமையாகவும் நல்ல ஒழுக்கம், கட்டுப்பாடுகளுடனும் செயல்பட்டு வந்தன.

*வருவாய்த் துறை*

நாட்டின் முக்கிய வருவாய் நிலவரியாகும். விளைச்சலில் நான்கில் ஒரு பங்கு, வரியாக வசூலிக்கப்பட்டது. நில வரியை, 'அக்ரநாமி' என்பவர் வசூலித்தார். வணிகர், கைவினைஞர் பல்வேறு தொழில் புரிபவர்களும் வரி செலுத்தி வந்தனர். மதுவின் மேலும் வரி வசூலிக்கப்பட்டது. நாணயமாகவும் பொருளாகவும் கிடைத்த வருவாயை அரசு மக்கள் நலனுக்குச் செலவிட்டது.

*நீர்ப்பாசனம்*

நீர்ப்பாசனப் பணிகளைக் கவனிக்க அதற்கென ஒரு துறை நிறுவப்பட்டு, நீர்த் தேக்கங்களைக் கட்டடக் கால்வாய்களை அமைத்து நீர் வேளாண்மைக்குக் கிடைக்க அனைத்துச் சிறந்த முறைகளையும் கையாண்டது மற்றும் நாடு முழுதும் ஆங்காங்கே ஏரிகள் அமைத்து கால்வாய் மூலம் பாசன முறை செம்மைப் படுத்தப்பட்டது.

*பொதுப்பணிகள்*

சாலை அமைப்பு முறைகளைக் கவனிக்க ஒரு துறை செயல்பட்டது. இதன் மூலம் புதிய சாலைகள் அமைக்கும் பணியும், பழைய சாலைகளை பழுது பார்க்கும் பணியும் மேற்கொண்டனர். சாலையோரங்களில் தங்கும் விடுதிகள் (தருமசாலா) அமைத்தனர். சாலைகளின் இரு மருங்கிலும் நிழல் தரும் மரங்கள் வளர்க்கப்பட்டன.

*நகராட்சி நிருவாகம்*

உஜ்ஜியினி, தட்சசீலம், பாடலிபுத்திரம் ஆகிய நகரங்கள் நகராட்சி, நிர்வாகங்களால் நிர்வாகம் செய்யப்பட்டது. இவற்றை



நிர்வாகம் செய்தவர்கள் 'நகரகர்' என்று அழைக்கப்பட்டனர். நகர ஆணையாளர்கள் 'அஸ்திநாமாய்' என்னும் அழைக்கப்பட்டனர். 'நகர நிர்வாகம்' செயல்படும் விதத்தைப் பற்றி 'அர்த்த சாஸ்திரம்' மிகவும் சிறப்பாக எடுத்துக் கூறுகிறது.

*மருத்துவ வசதிகள்*

மௌரியர் காலத்தில் பொது மக்கட்கும், விலங்குகட்கும் மருத்துவ வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தனர். அறுவை சிகிச்சைக்கு அதற்குரிய கருவிகளை தயார் செய்தனர். மருந்து மூலிகைகள் உற்பத்தி செய்யப்பட்டது. தாதிகளும், மருத்துவச்சிகளும் அக்காலத்தில் இருந்து வந்ததாக அறிகின்றோம். மேலும் பிறப்பு, இறப்பு மக்கட்தொகை கணக்கெடுப்பை முறைப்படுத்த ஒரு நிலையான துறை செயல்பட்டு வந்தது.

## 7. 1. 5. சமுதாய நிலை

*உயர்ந்த ஒழுக்கம்*

அன்றைய சமுதாயம் உயர்ந்த ஒழுக்கம் நிறைந்ததாய் அமைந்திருந்தது. மக்கள் எளிமையாகவும் சிக்கனமாகவும் வாழ்ந்து வந்தனர். அவர்களிடம் உண்மை, நேர்மை, நாணயம், தைரியம், அறிவாற்றல் ஆகிய அனைத்து நற்பண்புகளும் ஒருங்கே காணப்பட்டன.

அசோகரின் அறக்கோட்பாடுகளால் மக்கள் பாவம், புண்ணியம், இம்மை, மறுமை ஆகிய நம்பிக்கைகளுடன் வாழ்ந்து வந்தனர். திருட்டு என்பது சிறிதும் காணமுடியாத நிலை இருந்தது.

*சாதிப்பிரிவுகளும் கடமைகளும்*

மௌரியர்களின் சமுதாயத்தில் வேதகாலத்தில் காணப்பட்டது போன்று பிராமணர்கள், க்ஷத்திரியர்கள் வைசியர்கள், சூத்திரர்கள் என்று நான்கு வகை சாதி பிரிவுகள் காணப்பட்டன.

1. **பிராமணர்கள்:-** ஓதுதல், ஓதுவித்தல், வேட்டல், வேட்பித்தல், ஈதல், பெறுதல் போன்று அறுவகைப்பட்ட தொழில்கள் செய்தனர்.

www.tntextbooks.in

2. ***க்ஷத்திரியர்கள்:-*** ஓதுதல், வேட்டல், ஈதல், போர்புரிதல், நாட்டைப் பாதுகாத்தல் போன்ற தொழில்களைச் செய்தனர்.

3. ***வைசியர்:-*** ஓதுதல், வேட்டல், ஈதல், விவசாயம், வியாபாரம், ஆடு மாடு வளர்த்தல் முதலியன செய்தனர்.

4. ***சூத்திரர்:-*** மேற்கூறிய மூன்று சாதியினருக்கும் பணி செய்தல், ஆடு மாடு மேய்த்தல், கைவினைத் தொழில் புரிதல், ஆடலிலும், பாடலிலும் ஈடுபடுதல் போன்ற செயல்களைச் செய்தனர்.

### *திருமண முறை*

ஒரே சாதியில் திருமணம் செய்துக் கொள்ளும் பழக்கம் ஏற்றுக் கொள்ளப்பட்டது. இருப்பினும், கலப்பு சாதி திருமணமான அநுலோமாத் திருமணம் மற்றும் பிரதி லோமா திருமணம் (உயர்குலப் பெண் – தாழ்ந்த குல ஆண்) நடைமுறையில் காணப்பட்டது.

### *நான்குவகை ஆசிரமங்கள்*

பிற்கால வேதகால பண்பாட்டில் காணப்பட்டது போன்று மௌரியர்களின் சமூக அமைப்பிலும் தனி மனிதரின் வாழ்க்கை நெறியில் நான்குவகை ஆசரமங்களைக் கடைப்பிடிக்கப்பட்டது. அவை

1. பிரம்மச்சரியம்
2. கிரகஸ்தம்
3. வனபிரஸ்தம்
4. சந்நியாசம்

### *மெய்ஞானிகள்*

மெய்ஞானிகள் எனப்படுபவர், பிராமணர்கள், பிராமணிகர்கள், சிரமணர்கள், பௌத்தர்கள் என நான்கு வகை பிரிவினர் இருந்தனர்.

பிராமணர்களில் உதிசா பிராமணர்கள் (ஆசிரியர் புரோகிதர்) சதகஹண பிராமணர் (ஜோதிடம் தந்திரம்) என இரு பிரிவினர்



வாழ்ந்தனர். பிராமணிகர்கள் என்போர் ‘ஆன்மா மரணம் எய்தாது, மேனியே மரணம் எய்தும்’ என்று நம்பினர்.

சிரமணர்கள் (ஹைலோபியாய்) என்போர் துறவிகளாவர். மது, மாமிசம், பெண் இன்பம் நீக்கி காடுகளில் வாழ்ந்தனர். பௌத்தர்கள் என்போர் தூய்மையான அறவாழ்க்கையைப் போற்றி வாழ்ந்தனர்.

### *சமுதாயப் பழக்க வழக்கங்கள்*

‘சதி’ என்னும் உடன்கட்டை ஏறும் வழக்கம் நடைமுறையில் இருந்தது என்று ‘அரிஸ்டோ கூலஸ்’ என்ற ஆசிரியர் குறிப்பிடுகிறார். மௌரியர் காலத்தில் மக்கள் வேள்விக்காலம் தவிரப் பிற்காலங்களில் மது அருந்தியதாகத் தெரியவில்லை. அரிசி அவர்களுடைய நிலையான உணவாக இருந்தது. சந்நியாசிகளும் பிராமணர்கள் மாமிசம் சாப்பிட வில்லை. பொன்னாலான தட்டுகளில் தனித்தனியே அமர்ந்து சாப்பிடும் பழக்கமே மௌரியர்களிடம் காணப்பட்டதாக கிரேக்கர்கள் கூறுகின்றனர்.

### *ஆடை அணிகலன்கள்*

ஆடைகள் எளிமையாய் இருந்தன. சிலர் விலையுயர்ந்த ஆடைகளை அணிந்தனர். துறவிகள் மரவுரிகளையும் மான் தோல்களையும் அணிந்து திரிந்தனர். செல்வந்தர்கள் விலையுயர்ந்த மணிகள், பூ வேலைப்பாடுகள் அடங்கிய மஸ்லின் ஆடைகளை அணிந்தனர். வேட்டி, துண்டு, தலைப்பாகை அணிந்தனர்.

தந்தத்தாலும், தங்கத்தாலுமான அணிகலன்களைக் காது, மூக்கு, கழுத்து, இடுப்பு, கைகள் ஆகியவற்றில் பெண்கள் அணிந்துக்கொண்டனர்.

### *பெண்கள் நிலை*

சமுதாயத்தில் பெண்கள் நல்ல நிலையில் இருந்தனர் என்று கூற முடியாது. சிலர் தத்துவக்கல்வி பயின்று தன்னடக்கம் நிறைந்தவர்களாக வாழ்ந்தனர். சிலர் அடிமைகளாகவும் இருந்தனர். அரண்மனைகளில் நாட்டியமாடியும் பாடல்கள் பாடியும் மகிழ்வித்தனர். பெண்கள் தங்கள் கணவருடன் சமயச் சடங்குகளில்

www.tntextbooks.in

ஈடுபட்டனர். கணவர் ஈட்டிய பொருளை மனைவியிடம் கொடுத்தார். திருமணமான பெண்டிர் புனித நூல்களால் அறிவைப் பெறுவதற்குத் தடைவிதிக்கப்பட்டது எனக் கூறப்படுகிறது.

***கேளிக்கைகள்***

மக்கள் பல்வேறு விழாக்களைக் கொண்டாடி மகிழ்ச்சி அடைந்தனர். 'வசந்தகால விழா' 'தீபாவளி,' 'கிரிபூஜை' முதலிய விழாக்களைக் கொண்டாடினர். பெண்கள் பந்து விளையாடினர். வேட்டையாடுதல், படகோட்டுதல், நீந்துதல் முக்கியப் பொழுதுபோக்கு. வில்வித்தை கற்றல், விலங்குகளுடன் போரிடல், தேரோட்டப் பந்தயம் போன்றவையும் பிரசித்தமானவை. சதுரங்க விளையாட்டும் விளையாடினார்கள்.

ஆடல், பாடல், இசைக்கருவி மீட்டல் போன்றன பெண்களுக்கே உரிய தொழிலாகக் கருதப்பட்டன.

### 7. 1. 6. சமய வளர்ச்சி

வேதகாலச் சமயத்துடன் சமண சமயமும், பௌத்த சமயமும் மக்களிடையே பிரசித்தி பெற்றிருந்தன. சந்திர குப்த மௌரியர் சமண சமயத்தைப் பின்பற்றினார். தம் வாழ்நாள் இறுதியில் அரச பதவியைத் துறந்து 'பத்ரபாகு' என்ற சமயத்துறவியுடன் மைசூருக்கு அருகிலுள்ள 'சரவண பெலகொலா' என்ற இடத்தில் வந்து பகுதியில் வாழ்ந்தார். இறந்த பிறகு நினைவாக 'சந்திரபாஸ்டி' எனப்படும் கோயில் ஒன்று கட்டப்பட்டது.

மௌரிய பேரரசராக விளங்கிய அசோகர் கலிங்கப் போருக்குப் பிறகு புத்த துறவியான 'திஸா' எனப்படும் உபகுப்தருடன் பல இடங்களுக்குச் சென்று புத்த சமய கோட்பாடுகளை மக்களிடையே பரப்பி வந்தார். மெசபெடோமியா, சிரியா, எகிப்து, திபெத், சீனா, பர்மா போன்ற நாடுகளுக்கு புத்தத் துறவிகளை அனுப்பி வைத்தார்.

நாட்டில் மக்கள் தூய, ஒழுக்கமான வாழ்க்கையை வாழ வேண்டி, தர்ம மகாமாத்திரர்களையும், தர்மயுக்தரர்களை அசோகர் நியமித்தார்.



அசோகர் தம் மகன் மகேந்திரனையும் மகள் சங்கமித்திரையையும் இலங்கைக்கு அனுப்பி புத்தசமயக் கொள்கைகளைப் பரப்பினார்.

பௌத்தர்களுக்கிடையேயிருந்த வேற்றமைகளை அகற்றி ஒற்றுமை ஏற்படுத்த ஒரு மகாநாட்டைக் கூட்டி பௌத்த மதத்தின் வளர்ச்சிக்கு வழிகாட்டினார்.

தர்மநெறிக் கருத்துகளை நாடு முழுவதிலும் பரப்பி எக்காலத்திலும் மக்கள் அதனை அறியும் பொருட்டு கற்களிலும் தூண்களிலும், பாறைகளிலும், குகைக் கோயில்களிலும் பொறித்தார்.

பௌத்த நெறிக் கொள்கைகள் கொண்ட தர்மக்கட்டளைகளை நிறைவேற்ற பல தூதர்களை நியமிக்கப்பட்டதை கல்வெட்டில் கூறியுள்ளார். காஷ்மீர், காந்தாரம், மைசூர், வனவாசி, அபராந்தகம், மகாராஷ்டிரம், இமயமலைப் பகுதிகள், சுவர்ண நாடுகளுக்கு அனுப்பியுள்ளார்.

அசோகர் காலந்தவிர பிறகாலங்களில் வேதகால தெய்வங்களை வழிபட்டனர். விஷ்ணு, சிவன், ஸ்கந்தன் போன்ற தெய்வங்களை மக்கள் போற்றி வணங்கினர். சைவ, வைணவ வடிவில் பக்திநெறி நாடு முழுதும் பரவின.

அசோகர் காலத்தில் பௌத்த சமயம் அரசாங்கத்தின் சமயமாக விளங்கினாலும் மற்ற சமயத்தினர் துன்புறுத்தப்படவில்லை. வெளிநாடுகளிலும் இச்சமயம் பரவியது.

### 7. 1. 7. கலை வளர்ச்சி

***கல்வி***

மௌரியப் பேரரசின் பெரும்பகுதியில் பள்ளிகளும் உயர்கல்வி நிறுவனங்களும் அரசாலும், பொது அற நிலையங்களாலும் நடத்தப்பட்டன. பிராமணர்களும் புத்த துறவிகளும் பாடங்களைக் கற்பித்தனர்.

தட்சசீலம், உஜ்ஜயினி, காசி போன்ற இடங்களில் பல்கலைக் கழகங்கள் நிறுவப்பட்டன. இலக்கியம், சமயக்கல்வி கற்பிக்கப்

பட்டன. பாடத் திட்டத்தில் இலக்கணம், பேச்சுக்கலை, கலை, அரசியல், பொருளாதாரம் தருமசாத்திரம், தத்துவம் சேர்க்கப்பட்டிருந்தன. பெண்களுக்குக் கல்வி பெண் மடாலயங்களால் கற்பிக்கப்பட்டு வந்தது.

***நுண்கலைகள்***

மௌரியர்கள் காலத்தில் சிற்பக்கலை கட்டடக் கலை மிகவும் புகழ் பெற்ற விளங்கின. சாரநாத்தில் காணப்படும் கற்றூண் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த ஒன்று. நமது நாட்டின் தேசிய சின்னத்திலும் நாணயங்களிலும் நான்கு முக சிங்கங்கள் இடம் பெற்றுள்ளன. தேசியக் கொடியில் 'தர்மச்சக்கரம்' இடம் பெற்றுள்ளது.

அசோகர் எண்ணற்ற ஸ்தூபிகளை (8400) தம்முடைய நாடு முழுதும் நிறுவினார். இவற்றில் சிறப்பு வாய்ந்தது. சாஞ்சியிலும், வைசாலி, பருகட் என்ற இடத்திலும் நிறுவப்பட்டவையாகும். சாஞ்சி ஸ்தூபி 77$^{1}/_{2}$ அடி உயரமும் 12$^{1}/_{2}$ அடி குறுக்களவும் உள்ளது. இதன் நான்கு பக்கங்களிலும் உயரமான நுழைவாயில்கள் அமைந்துள்ளன. இத்தூண்கள் யாவும் சிற்பக்கலைக்கு சிறந்த எடுத்துக்காட்டுகளாகும்.

கட்டடங்கள் பெரும்பாலும் மரத்தாலும், கற்களாலும் கட்டப் பட்டிருந்தன. மௌரியர்கள் கட்டிய அரண்மனைகள் உலகத்திலேயே மிக அழகு வாய்ந்தவை. பாகியான் இதனை, "இக்கட்டடங்கள் கடவுளின் படைப்புகள் போன்று காட்சியளிக்கின்றன" என்பார்.

அசோகர் காலத்தில் செதுக்கப்பட்ட குகைகள் மிகவும் சிறப்புடையன. புத்தகயாவிற்கு வடக்கில் "பராபர் குன்றுகளில் காணப்படும் குகைகளும், நாகர்ஜுனக் குன்றுகளில் காணப்படும் குகைகளும் முக்கியமானவை. இராஜ கிருகத்திற்கு அருகில் 'சீதா மாருதி' அருகேயும் குன்று காணப்படுகிறது. 'லோமாரிஷி' குகை மிகவும் சிறப்புடையது. உட்புறம் கண்ணாடி போல் பளபளப்பாகவும், இருபுறத்திலும் இருதூண்கள் நிற்க வைத்து வீடு கட்டியது போல குகை அமைந்துள்ளது. நுழைவாயில் முக்கோண வடிவமான கூரையுடையது.



கல்லாலான ஸ்தூபிகளுக்கும், குகைக் கோயில்களுக்கும் கட்டடங்களுக்கும் மெருகு ஏற்றி பளபளப்பாக இன்றும் கண்ணாடி போல் மின்னும் வகையில் செய்துள்ளனர்.

அசோகர் தம்முடைய 7வது தூண் கல்வெட்டில் "தர்மமானது நீண்டநாள் வாழும் பொருட்டு எங்கெல்லாம் கற்றூண்களும், கற்பலகைகளும் காணப்படுகின்றனவோ (பாறைகள்) அங்கெல்லாம் (தர்மம் ஆணைகள்) பொறிக்கப் படுவதாக" என்று கூறியுள்ளார். ஆகவே, பல இடங்களில் காணப்படும் தூண்களின் அமைப்பையும், இடத்தையும் கருதி, அங்கெல்லாம் கல்வெட்டுக்களைப் பொறிக்கச் செய்தார்.

மௌரியர் காலக் கலையின் சிறப்புகளைக் கொண்டு அவற்றைக் கீழ்கண்டவாறு பிரிக்கலாம்.

1. அசோகரின் ஒற்றைக்கல் தூண்கள்
2. அசோகராலும் பிறராலும் குடையப்பட்ட குகைகள்
3. பாடலிபுத்திர அரண்மனை
4. சாஞ்சி, சாரநாத் கோயில்கள்
5. துமுளிகள் (ஸ்தூபம்)
6. இந்துக்கோயில்கள்
7. இதர கட்டடங்களும் சிற்பங்களும்

***இலக்கியம்***

மௌரியரின் ஆட்சி காலத்தில் சமஸ்கிருதம் பாலி, பிராகிருதம் போன்ற மொழிகள் வட இந்தியா முழுதும் சிறப்புப் பெற்றிருந்தன. மற்றும் கன்னடம், தமிழ் போன்ற மொழிகள் தென்னிந்திய திராவிட இனத்தவரின் மொழிகளாக சிறப்புற்று விளங்கின. இந்திய கிழக்குப் பகுதியில் பிராகிருத மொழியே அரசாங்க மொழியாக இருந்தது. இலக்கியத்திற்கு சமஸ்கிருதமும் பேச்சிற்கு பாலியும் மக்களிடத்தில் எளிமையாகக் கையாளப்பட்டன.

www.tntextbooks.in

1. கௌடில்யரின் - 'அர்த்த சாஸ்திரம்'
2. பத்ரபாகுவின் - 'கல்பசூத்திரம்'
3. வ்யாதியின் - 'வியாக்கரணம்' (இலக்கணம்)
4. பாணினீயின் - 'அஸ்டத்யாயி'
5. வாத்ஸ்யாயனரின் - 'காமசூத்திரம்'
6. 'சுபந்து' வின் - 'வாசவதத்தா நாட்டிய தாரா (நாட்டிய கலை)'
7. வருருசி என்பவர் - 'வருருச காவியம்'
8. பௌத்த சமயநூல் - 'திரிபீடகங்கள்'
9. காப்பியங்கள் - 'இராமயணம், மகாபாரதம்'
10. வேதாந்த நூல்கள் - 'கிருஹ்ய சூத்திரம்'
11. பிங்கலர் என்பவர் - 'சந்த சூத்திரங்கள்'
12. சிலாலின் கிருசாஸ்வர் - 'நாடக சூத்திரங்கள்'
13. வாமனர் என்ற கவிஞர் - 'காயியலங்கார சூத்தி விருத்தி'

போன்ற இலக்கிய படைப்புகள் மௌரியர் காலத்தில் எழுதப்பட்டனவாகும்.

### 7. 1. 8. இந்திய பண்பாட்டிற்கு மௌரியர்களின் கொடை

1. மௌரியர்களின் ஆட்சி முறையில் மைய அரசு, தலைமைச் செயலகம், மாநில அரசுகள் நிதி, நீதி நிருவாகம், பொதுப் பணித்துறை நகராட்சி முறை போன்றன நமக்கு அளிக்கப்பட்டுள்ள கொடைகளாகும்.
2. தட்சசீலம், உஜ்ஜையினி, காசி போன்ற மௌரியர்கால பல்கலைக் கழகங்கள் இன்றும் நமது இந்தியப் பண்பாட்டு மையங்களாகச் சிறந்து விளங்குகின்றன.
3. மௌரியர் கால கலை - கட்டடக் கலை, சிற்பக் கலை, கோயில்கள் மற்றும் மடங்கள் போன்றவை இந்தியப் பண்பாட்டின் பிரதிபலிப்பைப் பறை சாற்றுகின்றன.



4. இந்து தர்மக் கோட்பாடுகளையும் அன்பு, அஹிம்சை போன்ற பௌத்த சமய நெறிகளையும் வெளிநாடுகளில் பரப்பி இந்திய பண்பாட்டிற்குப் பெருமை சேர்த்தவர்கள் மௌரிய பேரரசர்கள்.
5. மௌரியர்கள் கல்வி, கலை, இலக்கிய வளர்ச்சியில் கவனம் செலுத்தியது போன்று, பிராகிருதம் (ஆட்சிமொழி) சமஸ்கிருதம் (இலக்கியமொழி) பாலி (எளிய மக்கள் பேசும் மொழி) போன்ற மொழிகளின் வளர்ச்சிக்கும் முக்கியத்துவம் கொடுத்தனர்.
6. கௌடில்லியரின் 'அர்த்த சாஸ்திரம்,' பௌத்த சமய நூலான 'திரிபீடகம்,' இலக்கண நூலான 'வியாக்கரணம்' போன்ற நூல்கள் இந்தியப் பண்பாட்டிற்கு மௌரியர் காலத்தில் வழங்கப்பட்ட கொடைகளாகும்.
7. பொதுப் பணித்துறைகளில் சாலைப்போக்குவரத்து, நீர்ப்பாசன வசதிகள் மற்றும் சாலையோரங்களில் தரும சாலைகள், மக்களுக்கும் விலங்குகளுக்கும் மருத்துவமனைகள் போன்றவை மௌரியர்களின் இந்தியப் பண்பாட்டின் கூறுகளாக விளங்குகின்றன.
8. அசோகரின் தர்மக் கோட்பாடுகளான 1. அஹிம்சை 2. சத்தியம் 3. தயை (இரக்கம்) 4. தானம் 5. சௌசம் (புறத்தூய்மை) 6. மார்த்தவம் (அருளுடைமை) 7. சர்துதா (அமைதி) 8. அபபந்ததா (சிக்கனம்) 9. சாம்யமா (புலனடக்கம்) 10. பாவ சுத்தி (அகத்தூய்மை) 11. கித தக்ஞுதா (நன்றியுடைமை) 12. தருத பக்திதா (அன்புடைமை) 13. சுஷ்ருசா (பெற்றோருக்குப் பணிவிடை) 14. அபிச்சித்தி ஆளரியர் (பெற்றோருக்கு மரியாதை) 15. தர்ம மகாமாதா (அறம் செய்தல்) 16. பயம் 17. பரிக்ஷா (தன்னம்பிக்கை) 18. உத்சாஹா (மகிழ்ச்சி) போன்றவை இந்திய பண்பாட்டிற்கு வழங்கப்பட்ட கொடையாகும்.

www.tntextbooks.in

## 7. 1. பயிற்சி வினாக்கள்

*அ. ஓரிரு வரிகளில் விடையளி*

1. மௌரியர்களின் ஆட்சிக்காலம் யாது?
2. 'சாணக்கியர்' (கௌடில்யர்) எழுதிய நூல் யாது?
3. மௌரிய மன்னர்களில் சிறந்தவர்கள் யாவர்?
4. 'மந்திரி பரிஷத்' சிறு குறிப்பு வரைக?
5. 'தரும மகா மாத்திரர்கள்' என்போர் யாவர்?
6. 'கிராமிகர்' குறிப்பு வரைக
7. 'குதபுருஷர்கள்' என்போர் யாவர்?
8. 'நகரகர்' சிறு குறிப்பு தருக
9. 'அக்கிரநாமி' என்பவர் யார்?
10. நகராட்சி நிருவாகம் இருந்த இடங்கள் யாவை?
11. நான்கு வகை ஆசரமங்கள் யாவை?
12. 'மெய்ஞ்ஞானிகள்' என்பவர் யாவர்?
13. 'சரவண பெலகொலா' குறிப்பு வரைக.
14. 'சிரமணர்கள்' என்போர் யாவர்?
15. ஆரிய மொழிகள் என்பவை யாவை?

*ஆ. பத்து வரிகளுக்கு மிகாமல் விடையளி*

1. மௌரியர்களைப் பற்றி அறிய உதவும் சான்றுகள் யாவை?
2. மௌரியர் கால பெண்களின் நிலையாது?
3. 'அநுலோமா,' 'பிரதிலோமா' திருமண முறை யாது?
4. மௌரியர் கால மக்களின் பொழுது போக்குகள் யாவை?



5. மௌரியர்கால ஆடை அணிகலன்களை விளக்குக
6. மௌரியர்கால நான்கு வகை சாதிகளும் கடமைகளும் யாவை?
7. மௌரியர்கால மைய அரசின் செயல்பாடுகள் யாவை?
8. மௌரியர்கால கலையின் சிறப்புகளைக் கொண்டு எத்தனை வகைகளாகப் பிரிக்கலாம்?
9. மௌரியர் காலக் கல்வி நிலை யாது?
10. அசோகரின் ஏழாவது கல்வெட்டின் செய்தி யாது,

*இ. ஒரு பக்க அளவில் விடையளி*

1. மௌரியர்கால அரசியல் நிலையை விளக்குக.
2. மௌரியர்கால சமூகநிலையை விளக்குக.
3. மௌரியர்கால சமய நிலையை விளக்குக.
4. மௌரியர்கால இலக்கிய வளர்ச்சியை விவரி.
5. மௌரியர்கால கலை வளர்ச்சியை விவரி.
6. மௌரியர் கால சமுதாயப் பாகுபாடு மற்றும் அவர்களுடைய பழக்க வழக்கங்களை விவரி.

*ஈ. நான்கு பக்க அளவில் விடையளி*

1. மௌரியர்காலப் பண்பாடு பற்றி ஒரு கட்டுரை வரைக.
2. இந்தியப் பண்பாட்டிற்கு மௌரியர்களின் கொடை மற்றும் கலை அம்சங்களைத் தொகுத்து ஒரு கட்டுரை வரைக.

www.tntextbooks.in

# 7. 2. குப்தர் காலப் பண்பாடு

குப்தப் பேரரசு இந்தியப் பண்பாட்டிற்கு வழங்கியுள்ள கொடை அளவிட்டுக் கூற இயலாது. இவர்கள் அரசியல், சமுதாயம், பொருளாதாரம், கல்வி, கலை, இலக்கியம், சமயம், இசை, நடனம் ஆகிய அனைத்து துறைகளிலும் மிகச் சிறந்த நிலையில் காணப்பட்டார்கள். அகவே தான் வரலாற்றில் குப்தர்காலம் பொற்காலம்' என்று கூறப்படுகிறது.

### 7. 2. 1. காலம்

கி.பி. நான்காம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் ஸ்ரீ குப்தர் என்பவர் பாடலிபுத்திரத்தில் சிறிய அரசு ஒன்றை அமைத்து குப்த மரபை தோற்றுவித்தார் என்று கூறப்படுகிறது. இவர்கள் காலம் கி.பி. 300 முதல் கி.பி. 500க்கும் இடைப்பட்ட காலமாக வரலாற்று அறிஞர்கள் கருதுகிறார்கள்.

### 7. 2. 2. சான்றுகள்

குப்தர்களின் வரலாற்றை அறிய இலக்கியங்களும், புராணங்களும், வெளிநாட்டவரின் குறிப்புகளும் மற்றும் தொல்பொருள் ஆராய்ச்சியாளர்களின் குறிப்புகளும் சான்றுகளாக கிடைத்துள்ளன.

1. விசாகதத்தர் எழுதிய 'முத்ரா இராட்சசம்',
2. காளிதாசரின் இலக்கியங்கள்
3. பாணரின் 'ஹர்ஷ சரிதம்'
4. பதினெட்டு புராணங்கள்
5. சீனப்பயணி 'பாகியானின்' குறிப்புகள்
6. சமுத்திர குப்தரின் அலகாபாத் கற்றூண்
7. நாணயங்கள்
8. முத்திரைகளும் வரலாற்றுச் சின்னங்களும்

ஆகியன நமக்குச் சான்றுகளாக கிடைக்கப்பெற்றுள்ளன.



### 7. 2. 3. முக்கிய அரசர்கள்

1. முதலாம் சந்திர குப்தர் (கி.பி. 320 - கி.பி. 330)
2. சமுத்திர குப்தர் (கி.பி. 330 - கி.பி. 380)
3. இரண்டாம் சந்திர குப்தர் (கி.பி 380 - கி.பி. 415)
4. ஸ்கந்த குப்தர் - (கி.பி. 456 - கி.பி 468)

### 7. 2. 4. அரசியல் நிலை

குப்தர்களின் காலத்தில் திறமைமிக்க மிகச் சிறந்த நிருவாக அமைப்பு நிறுவப் பெற்றிருந்தது. அவர்கள் தங்கள் நாட்டை பிரிவுகளாக பிரித்து சிறப்பாக ஆட்சி செய்தனர்.

1. மத்திய நிருவாகம்
2. மாநில நிருவாகம்
3. மாவட்ட நிருவாகம்
4. கிராம நிருவாகம்
5. நகர நிருவாகம்

#### *1. மத்திய நிருவாகம்*

மத்திய நிர்வாகத்திற்குத் தலைவன் அரசன் ஆவான். மன்னருக்கு சட்டமியற்றவும், நீதி வழங்கவும் நிர்வாகம் செய்யவும் அனைத்துப் பிரச்சினைகட்கும் தீர்வுகாணும் பொறுப்பினைப் பெற்றிருந்தான். நீதித் துறைக்கும் அரசனே தலைவனாக விளங்கினான். நாடு முழுவதும் உயர் அதிகாரிகளை நியமிக்கும் பொறுப்பு அரசனையே சார்ந்தது. படையெடுப்புகளைத் தாமே நடத்திச் சென்று மன்னர்கள் பல வெற்றிகளை நிலை நாட்டினர்.

அரசன் அனைத்து அதிகாரங்களும் பெற்றிருந்த போதிலும் அவன் தன்னிச்சையாகச் செயல்படவில்லை. அரசனுக்கு ஆலோசனை கூறுவதற்கு 'மந்திரி பரிஷத்' (மந்திரி மண்டலம்) என்ற அமைச்சர் குழு இருந்தது. அமைச்சரவையில் இருந்த மூத்த

www.tntextbooks.in

மந்திரிக்கு முக்கிய மந்திரி என்று பெயர். பொதுவாக அமைச்சரவை பரம்பரைப் பதவியாக இருந்தது.

*மத்திய நிருவாகத் துறைகள்*

1. மகா சேனாதிபதி (இராணுவ நிர்வாகம்)
2. மகா தண்ட நாயகன் (நீதித்துறை நிர்வாகம்)
3. இராணா - படகாரிகள் (போர்க்கருவிகள் மற்றும் உணவு சேகரித்தல்)
4. மகாபாலாதிகாரன் (இராணுவம் தங்குமிடம், போர்த் தந்திர முறைகள் போன்ற பணிகள்)
5. தண்டாபிஷேகன் (காவல் துறை)
6. மகாசந்துவி கிரிகன் (நாட்டைக் கண்காணிப்பது போர் (அ) அமைதி நிலைநாட்டுவது)
7. பண்டாரகாதிகாரன் (கருவூல அலுவலர்)
8. வினியோசித ஸ்தாபிகன் (சமயத்துறைத் தலைவன்)
9. மகாபக்ச பாலிதன் (அரசு அலுவலக கோப்பு மற்றும் செலவினங்கள் கவனித்தல்)
10. சர்வதியாக்சன் (மத்திய நிர்வாகத் தலைமைச் செயலர்)

*2. மாநில நிருவாகம்*

குப்த பேரரசு பல மாநிலங்களாகப் பிரிக்கப்பட்டு மாநிலத்தை புக்தி அல்லது தேசம், ராஷ்டிரம், மண்டலம் என அழைத்தனர். மாநிலங்களில் மன்னரின் பிரதிநிதியாக ஆளுநர்கள் நியமிக்கப்பட்டனர். பெரும்பாலும் இளவரசர்களே இப்பொறுப்பில் நியமிக்கப்பட்டனர். ஆளுநருக்கு உதவியாகப் பல்வேறு அதிகாரிகள் நியமிக்கப்பட்டனர்.

1. மகா தண்டநாயகர் (நீதித்துறையை கவனித்தல்)
2. தண்ட பாசாதி கரணிகர் (காவல் துறைத்தலைவர்)



3. பாலாதி கரணிகர் (இராணுவத் தளபதி)
4. மகா பிரதிகாரர் (ஆளுநரின் தலைமை அதிகாரி)
5. பாட்டியுபரிகர் (தலைமைக் கணக்காயர்)
6. கர்த்தா கிருத்திகர் (தலைமைச் செயவர்)
7. ஔதரங்கிதர் (வரிவசூல் புரியும் உயர் அதிகாரி)
8. அக்கிரகாரிகள் (அக்கிரகாரத்தை மேற்பார்வையிடுதல்)
9. ததாயுக்தர் (கருவூலத் தலைமை அதிகாரி)
10. ஆவசதிகர் (அற நிலையத் தலைமை அதிகாரி)
11. ஹிரண்யசமுதாயகர் (அக்கால சாலை உயர் அதிகாரி)

இவர்கள் உள்நாட்டுக் குழப்பங்களினின்றும் அந்நியரின் படையெடுப்பினின்றும் மாநிலங்களை பாதுகாத்தனர். மாநிலத் தலைவன் (ஆளுநர்) சட்டம், ஒழுங்கு, அமைதி போன்ற பணிகளை நிலைநாட்ட வேண்டும். பொதுப்பணித் துறையையும் கவனிக்க வேண்டும்.

*3. மாவட்ட நிருவாகம்*

மாநிலங்கள் ஒவ்வொன்றும் பல மாவட்டங்களாகப் பிரிக்கப்பட்டன. அவைகள் ‘புக்தி’ என்ற பெயருடன் அழைக்கப் பட்டன. ‘புக்தியின்’ தலைவர் ‘உபரிகர்’ என்று அழைக்கப்பட்டார். மேலும் ‘புக்திகள்’ (மாவட்டங்கள்) சிறுசிறு விஷயங்களாகப் (வட்டங்களாக) பிரிக்கப்பட்டன. விஷயத்தின் தலைவர் ‘விஷயாதிபதி’ ஆவார்.

மாவட்டத் தலைநகருக்கு ‘அதிட்டாணம்’ என்றும் மாவட்ட ஆட்சித்தலைவரின் அலுவலகம் ‘அதிகரணம்’ என்று அழைக்கப்பட்டன. மாவட்ட அதிகாரியின் கீழ்

1. சௌல்கிகர் (சுங்க அதிகாரி)
2. துருவாதி கரணிகள் (நிலவரி அதிகாரி)

www.tntextbooks.in

3. மகாட்ச படலிகர் (ஆவணக் காப்பாளர்)

4. பண்டாகாராதி கிரிதர் (காசாளர்)

போன்று பலர் இருந்தனர்.

*4. கிராம நிருவாகம்*

விஷயம் (வட்டம்) பல கிராமங்களாகப் பிரிக்கப்பட்டிருந்தது. கிராமம் 'பட்ட' என்றும் 'அக்கிரஹாரம்' என்றும் பிரிக்கப் பட்டிருந்தது. கிராமத்தின் தலைவர் 'கிராமேயகர்' எனப்பட்டார். கிராமத் தலைவருக்குத் துணையாக கணக்கர், எழுத்தர் (கரணிகர்), நிலவரி அதிகாரி, வருவாய்த்துறை அதிகாரி, நிலத்தகராறு தீர்க்கும் நியாயத்தர் என்ற பல அதிகாரிகள் செயல்பட்டனர்.

*5. நகர நிருவாகம்*

குப்தர் ஆட்சி காலத்தில் நகர நிருவாகம் இருந்து வந்தது. நகரத்தைப் 'புரம்' என்றும் அதன் ஆட்சித்தலைவனை 'புரபாலர்' (அல்லது) 'நகர ரட்சகன்' என்றும் அழைத்தனர். இவர் மாநில ஆளுநரால் நியமிக்கப்பட்டார். நகரத்தைச் சுற்றி கோட்டையும் அகழியும் அமைக்கப்பட்டிருந்தன.

***இராணுவம்***

குப்த அரசர்கள் வலிமை, வீரம், தந்திரம், ஆற்றல் மிக்கவர்களாக விளங்கினர். காலாட் படை, குதிரைப்படை, யானைப்படை, தேர்ப்படை என்ற நான்கு படைகள் இருந்தன. சிறந்த வீரர்களைத் தேர்ந்தெடுப்பதில் சமுத்திரகுப்தரே முன்னின்றார் என்பதால், படைகளின் வளர்ச்சிக்கு மன்னர் அளித்த ஊக்கம் மகத்தானதாகும்.

***நீதித்துறை***

குப்தர் காலத்து நீதிமுறைகளைப் பற்றி பிரகஸ்பதி, நாரதர், காத்தியாயனர்போன்றோர் குறிப்பிட்டுள்ளனர். வழக்குகளை 1. சிவில் வழக்குகள் 2. குற்ற இயல் வழக்குகள் (கிரிமினல்) என்று இருவகைப்படுத்தினர். நாரதர் 18 வகைப்பட்ட சட்டங்களை



விளக்கியுள்ளார். உயர்நீதி மன்றம் தலைநகரிலும் (மத்திய) மற்ற நீதிமன்றங்கள் மாநிலங்களில் முக்கிய நகரங்களிலும் இருந்தன. தீர்ப்புகளை சான்றோர்கள் கொண்ட ஒரு தனிக் குழு விசாரணை நடத்தும் திருப்தியடையாதவர் உயர்நீதி மன்றத்தில் மேல் முறையீடு செய்யலாம் அரவர் நீதியின் காவலராக இருந்து தலைநகரில் வழக்குகளை விசாரித்தார். தற்காலிக நீதிமன்றங்களும் அமைக்கப்பட்டிருந்தன. கிராமங்களில் கிராம பஞ்சாயத்து முறையும் இருந்தது.

### 7. 2. 5. சமுதாய நிலை

1. குப்தர்கள் சமுதாய நிலை சிறந்து விளங்கியது, குடும்பம், கூட்டுக் குடும்பமாக இருந்தது
2. இந்திய பாணியில் மக்கள் ஆடைகளை அணிந்தனர். அரசர்கள் ஆடம்பரமான ஆடைகளைப் பயன்படுத்தினர்.
3. ஆண், பெண் இருபாலரும் பலவகை அணிகலன்களை அணிந்து வந்தனர்.
4. உணவு வகையில் சைவ, அசைவ உணவுப் பொருள்களை உண்டனர். பெரும்பான்மையான மக்கள் சைவ உணவையே பயன்படுத்தினர்.
5. பெண்கள் உயர்ந்த நிலையில் வைத்து மதிக்கப்பட்டனர். மகளிர் கல்வியறிவு பெற்றனர்; நிர்வாகத்தில் பங்கு பெற்றனர்; சமூகத்தால் போற்றப்பட்டனர். கணவனின் நன்னடத்தைக்கு வழிகாட்டியாக மனைவி விளங்கினாள். கலப்புச் சாதியைச் சமுதாயம் ஏற்காவிட்டாலும், அது தவிர்க்க முடியாததாக்கியது. கணவன் இறந்த பிறகு உடன்கட்டை ஏறும்முறை வழக்கத்தில் இருந்தது.
6. பிரகத்சம்ஹிதையின் நான்கு சாதிமுறை இருந்ததாக குறிப்பிடப் பட்டுள்ளது. பிராமணர்கள் உயர்ந்தவர்களாக கருதப்பட்டனர். சண்டாளர்கள் (கலப்பு சாதியினர்) கீழ்சாதிக் காரர்களாகக் கருதப்பட்டனர். அவர்கள் தீண்டத்தகாதவர்களாகக் கருதி, ஊருக்குப் புறத்தே வசித்து வந்தனர்.

7. வேட்டையாடுதல் முக்கிய பொழுது போக்கு ஆகும். ஆடு, எருமை, யானை, மான் இவைகளுடன் சண்டை போடுவதும் விழாக்காலங்களில் ஆடிப்பாடி மகிழ்வதும் முக்கியப் பொழுதுபோக்கு.
8. போர்க்கைதிகள், கடனாளிகள், சூதாட்டத்தில் தோற்றவர்கள் அடிமைப்படுத்தப்பட்டனர்.

### 7. 2. 6. *சமய வளர்ச்சி*

குப்தர் காலத்தில் சமயநிலை மேலோங்கிய நிலையில் காணப்பட்டது. வேத சமயம் (இந்து சமயம்) புத்துயிர் பெற்றது. திருமாலும் சிவனும் உயர்ந்த கடவுளர்களாகக் கருதப்பட்டனர். சமய வேள்விகளும் சடங்குகளும் நடத்தப்பட்டன. சமுத்திர குப்தர் அசுவ மேதயாகங்கள் நடத்தினார்.

வாயு புராணம், மச்ச புராணம் போன்ற புராணங்கள் இயற்றிச் சிவபெருமானின் பெருமையைப் போற்றினர். மேலும், சிவன், திருமால் ஆகிய கடவுளர்களுக்குக் கோயில்கள் எழுப்பிச் சமயத்தை வளர்த்தனர். திருமாலின் அவதாரங்கள் உருப்பெற்று விழாக்கள் நடத்தப்பட்டன. சூரிய வழிபாடு, நாக வழிபாடு, சக்தி வழிபாடு, விநாயகர் வழிபாடு போற்றப்பட்டன. விஷ்ணுவின் பத்து அவதாரக் கோட்பாட்டினை நம்பினர். புனித இடங்களுக்கு யாத்திரை செல்லும் பழக்கம் மக்களிடம் இருந்தது.

இந்து சமயத்திற்கு ஆதரவு தந்த மன்னர்கள் புத்த, சமண சமயங்களை வெறுக்கவில்லை. சில குப்த மன்னர்கள் புத்த சமயத்தைப் பின்பற்றினர். மதுரா, உதயகிரி போன்ற இடங்கள் சமண மதத்தின் இருப்பிடங்களாக இருந்தன.

### 7. 2. 7. *கலை வளர்ச்சி*

***கல்வி***

வேதங்களும் புத்தசமயக் கருத்துகளும் கல்வி நிலையங்களில் போதிக்கப்பட்டன. குருகுல கல்வி முறையும் தொடர்ந்து நீடித்தது. ஆசிரியர்களுடன் மாணவர்கள் 14 வயது வரை தங்கிப் படித்தனர்.



பாடத்திட்டத்தில், நான்கு வேதங்கள், வேதாந்தங்கள், புராணங்கள் நியாய மீமாம்சங்கள், தனுர் வேதம், கந்தர்வ வேதம், அர்த்த சாஸ்திரம் போன்றவை சேர்க்கப்பட்டு கற்பிக்கப்பட்டு வந்தன. மேலும் வானவியல், கணிதம், சோதிடம் ஆகியவை குறிப்பிட்ட பாடங்களாகக் கற்பிக்கப்பட்டன. அளவை இயல், தத்துவம், நியாயம், இலக்கணம் போன்ற பாடங்களும் கற்பிக்கப்பட்டன.

***இலக்கியம்***

குப்தர் காலத்தில் பல இலக்கிய அறிஞர்கள் பல்வேறு வகை இலக்கியங்களை எழுதி வடமொழியில் புதிய மறுமலர்ச்சியை ஏற்படுத்தினர்.

1. காளிதாசர் - சாகுந்தலம், விக்கரமோர்வசியம் மாளவிகாக் னிமித்திரம் (நாடகம்) இரகுவம்சம், குமாரசம்பவம், (காப்பியங்கள்) மேகதூதம், ரிது சம்ஹாரம் (பாடல்கள்).
2. விசாகதத்தர் - முத்ரா ராக்ஷஸம், தேவிசந்திரகுப்தம் போன்ற நாடகங்கள்
3. வாத்ஸ்யாயனர் - காமசூத்திரம்
4. வராகமிஹிரர் - பிருகத் சம்கிதை (கவிதை) கணிதம், சோதிடம்
5. சந்திரர் - சந்திராச்சாரிய வியாக்கரணம் (இலக்கணம்)
6. ஜயினேந்திரர் - ஜயினேந்திர வியாக்கரணம்
7. அமரர் - அமரகோசம்
8. பாமகர் - காவியலங்காரம் (கவிதை)
9. வாக்பட்டர் - அஷ்டாங்க சங்கிரக, அஷ்டாங்க கிருதய சம்ஹிதை (மருத்துவம்)
10. ஆரியபட்டர் - கணித நூல்கள், வானவியல்
11. வராகமிகிரர் - பஞ்ச சித்தாந்தகம் (வானவியல்)
12. சாமண்டகன் - நீதிசாஸ்திரம்
13. வீரசேனர் - வியாகரணம்

www.tntextbooks.in

## கட்டடக்கலை

குப்தர்கள் கலை வளர்ச்சிக்கு ஆற்றியுள்ள தொண்டு மிகவும் போற்றத்தக்கதாகும். குப்தர் கால கலைவளர்ச்சியை கட்டடக்கலை, சிற்பக்கலை, ஓவியக்கலை, உலோகக்கலை, இசை, நடனம், நாடகக்கலை என வகைப்படுத்தலாம்.

குப்தர் காலத்தில் அழியாப் பொருளான கருங்கல் பயன்படுத்தி கட்டடங்கள் கட்டினார்கள். இவர்கள் காலத்துக் கட்டடக்கலையை நான்கு வகைகளாகப் பிரிக்கலாம்.

1. குகைக் கோயில்கள்
2. விமானமற்ற கோயில்கள்
3. மேடை மீது கட்டப்பட்டக் கோயில்கள்
4. செங்கற் கோயில்கள்

குகைக் கோயில்கள் அஜந்தாவில் உள்ளன. ஔரங்காபாத்துக்கு அருகில் கல்லில் குடைந்த பன்னிரண்டு குகைகளும் இதற்குச் சான்றாகும். பௌத்த, சமண, இந்து சார்புடைய குகைக் கோயில்கள் எல்லோரா என்னுமிடத்திலும் காணப்படுகின்றன. மேலும் சாஞ்சிக் கோயில், தியோகாவிலுள்ள கங்காளிக் கோயில் மற்றும் உதயப்பூர் கோயில் யாவும் இவ்வகையைச் சார்ந்ததாகும்.

நாச்சனக்குதாரா விலுள்ள பார்வதி கோயில், பூமாரா விலுள்ள சிவன் கோயில் போன்றன. விமானமற்ற (கூரை மட்டும் உண்டு) கோயில்களாகும்.

தோகரில்' காணப்படும் விஷ்ணுகோயில் நாச்சனக்குதாரா விலுள்ள உள்ள மகாதேவர் ஆலயம் மேடை மீது கட்டப்பட்ட கோயில்கள் ஆகும்.

பிதார்கான் கோயில் (கான்பூர் மாவட்டம்), தியோகார கோயில் (ஜான்சி மாவட்டம்) சாரநாத்தில் உள்ள பெரிய கோயில், திகாவா வில் உள்ள சிவன் கோயில் (ஜபல்பூர் மாவட்டம்) பூமாராவில் உள்ள சிவன் கோயில் (மத்திய பிரதேசம்) போன்ற கோயில்களை கருங்கல் மற்றும் செங்கற்கள் துணை கொண்டு கட்டினார்கள்.



## *சிற்பக்கலை*

குப்தர்கால சிற்பங்கள் மிகவும் அழகு வாய்ந்த, இந்தியக்கலைப் பாணியைத் தழுவியே காணப்பட்டன. இந்துக்கடவுளின் உருவங்களில் நரசிம்ம மூர்த்தி, வராக மூர்த்தி (உதயகிரி) சிவன், பார்வதி போன்றவை குறிப்பிடத்தக்கவை. புத்தரது எண்ணற்ற சிலைகள் சாரநாத் திலும் மதுராவிலும் கண்டெடுக்கப்பட்டுள்ளன. தியோகர் மற்றும் மதுராவில் உள்ள விஷ்ணு சிலை, காசியிலுள்ள கார்த்திகேயன் சிலை, கௌசாம்பியுள்ள சூரிய சிலைகள் மேலும் சிவலிங்கங்கள், சமண சிலைகள் போன்றன யாவும் குப்தர் காலச் சிற்பக்கலையின் சிறப்பைப் பறைசாற்றுகின்றன.

## *ஓவியக்கலை*

அஜந்தா, எல்லோரா, பாக் **(Bagh)** போன்ற இடங்களிலுள்ள ஓவியங்கள் மிக அற்புதமான ஓவியங்களாகும். பெண்கள் மெலிந்த இடையுடனும் அழகிய அணிகலன்களுடனும் காட்டப்பட்டுள்ளனர். அஜந்தாவில் காணப்படும் குகைகளின் ஓவியங்களில் தாயும் சேயும், புத்தரின் துறவு, மரணப்படுக்கையில் இருக்கும் அரசி, நடன மகளிர், குரங்குகள், புத்தர், திருஉருவங்கள் அவரது போதனைகள், வாழ்க்கை நிகழ்ச்சிகள் போன்றன சித்திரிக்கப்பட்டுள்ளன.

## *இசையும் நடனமும்*

குப்தர் காலத்தில் இசையும் நடனமும் செழித்தோங்கிய காலமாகும். இசையும் நடனமும் ஒன்றாகவே இருந்தன. மத்தளம், உடுக்கை, யாழ், பறை, சங்கு போன்ற இசைக்கருவிகளைக் கொண்டு நிற்கும் கலைஞர்களும் நடனமாதர் அபிநயம் பிடித்து ஆடும் காட்சிகளைக் கோயிலின் சிற்பங்களிலும் ஓவியங்களிலும் நாணயங்களிலும் காணப்படுகின்றன. காலக் கண்ணாடியாக அஜந்தா குகை ஓவியங்கள் இன்றும் மிளிர்வதைக் காணலாம்.

## *நாடகக்கலை*

காளிதாசரின் 'சாகுந்தலம்,' 'இரகுவம்சம்,' 'குமாரசம்பவம்,' 'மேகதூதம்' ஆகியன நாடகக் கலைக்குச் சிறந்த எடுத்துக் காட்டுகளாகும்.

www.tntextbooks.in

'தேவி சந்திரகுப்தம்,' 'கௌமுதி மகோத்சவம்' போன்ற நாடகங்களும் நடிக்கப்பட்டன. மேலும் நாடகக் குழுவினர்களுக்கு மன்னர்கள் பெரிதும் உதவி செய்தனர்.

### 7.2.8. இந்தியப் பண்பாட்டிற்கு குப்தர்களின் கொடை

1. மத்திய அரசு மற்றும் மத்திய நிருவாகத் துறைகள் மாநில அரசு மற்றும் மாநில நிருவாகத் துறைகள், மாவட்ட ஆட்சிமுறை, நகர மற்றும் கிராம நிருவாக சபைகள் போன்றவை இந்திய பண்பாட்டிற்கு குப்தர்களால் வழங்கப்பட்ட கொடைகள் எனலாம்.
2. காளிதாசரின் 'சாகுந்தலம்,' '.விக்கரமோர்வசியம்,' 'இரகுவம்சம்,' 'குமாரசம்பவம்,' 'மேகதூதம்' மற்றும் பல இலக்கிய படைப்புகள் குப்தர்காலக் கொடையாகும்.
3. மேலும் ஆரியபட்டரின் 'கணிதநூல்,' 'வானவியல்' வாக்பட்டரின் அஷ்டாங்க சங்கிரகம் (மருத்துவம்) வராக மிஹிரரின் பஞ்ச சித்தாந்தகம் (வானவியல்) சந்திரரின் சந்திராச்சாரிய வியாக்கரணம் (இலக்கணம்) மற்றும் அமரரின் நிகண்டு போன்ற நூல்கள் இந்தியப் பண்பாட்டு வளர்ச்சிக்கு உதவியாக இருந்தன.
4. குப்தர் கால நீதித்துறை மத்திய, மாநில அரசுகளின் கீழ் செயல்பட்டதை இன்றைய நீதித் துறையைப் போன்ற முறைகளையே பறைசாற்றுகின்றன.
5. குப்தர் காலத்தின் சமயச் சார்பற்ற ஆட்சிமுறையானது நமது இந்திய பண்பாட்டிற்கு அடிகோலியது எனலாம்.
6. குப்தர் கால குகைக் கோயில்கள் மற்றும் கட்டுமானக் கோயில்கள் குப்தர்களின் கலை வளர்ச்சிக்கும், சமயவளர்ச்சிக்கும் சிறந்த எடுத்துக்காட்டுகளாக விளங்குவதுடன் இந்தியப் பண்பாட்டு வளர்ச்சிக்கும் துணை புரிந்தன.
7. சாரநாத், மதுரா, அஜந்தா, எல்லோரா, பாக் **(Bagh)** போன்ற இடங்களில் உள்ள சிற்பங்கள், ஓவியங்கள் போன்ற கலை அம்சங்கள் யாவும் இந்தியப் பண்பாட்டின் சிறந்த கூறுகளாக விளங்குகின்றன. எனவே குப்தர் காலம் 'பொற்காலம்' என்பர்.



## 7. 2. பயிற்சி வினாக்கள்

### அ. ஓரிரு வரிகளில் விடையளி

1. குப்த மன்னர்களின் ஆட்சிக்காலம் யாது?
2. 'காளிதாசரின்' இலக்கியப் படைப்புகள் யாவை?
3. குப்த மன்னர்களில் மிகச் சிறந்தவர்கள் யாவர்?
4. குப்தர்களின் நான்கு வகைப்படைகள் யாவை?
5. சிவபெருமானின் பெருமைகளைப் போற்றும் புராணங்கள் யாவை?
6. குப்தர்கால வழிபாடுகள் யாவை?
7. குப்தர் கால நான்கு வகை கட்டடக் கலைகள் யாவை?
8. குப்தர்கால 'ஓவியங்கள்' எங்கு காணப்படுகின்றன?
9. குப்தர்கால 'நாடகக் கலைக்கு' சிறந்த எடுத்துக்காட்டுகள் யாவை?
10. குப்தர்கால 'சிற்பக்கலைக்கு' சில எடுத்துக்காட்டுகள் கூறு?
11. இசையும் நடனமும் குப்தர் காலத்தில் சிறந்து விளங்கியது என்பதை நீ எவ்வாறு அறிவாய்?

### ஆ. பத்து வரிகளில் விடையளி

1. 'குப்தர்காலம் பொற்காலம்' என்பதை நீ எவ்வாறு அறிவாய்?
2. குப்தர்காலம் பற்றி அறிய உதவும் சான்றுகள் யாவை?
3. குப்தர்கால 'மத்திய நிர்வாகம்' எவ்வாறு செயல்பட்டது?
4. குப்தர் கால 'நீதித்துறையின்' செயல்பாட்டு முறையினை விளக்குக.
5. குப்தர்காலச் சமய நிலையை விளக்குக.

www.tntextbooks.in

### இ. ஒரு பக்க அளவில் விடையளி

1. குப்தர் கால அரசியல் நிலையைப் பற்றி விளக்குக.
2. குப்தர்கால சமுதாயநிலை எவ்வாறு இருந்தது?
3. குப்தர் கால கல்வி மற்றும் இலக்கியம் குறித்து விளக்கி எழுதுக.
4. குப்தர்கால கலை வளர்ச்சி குறித்து விளக்கி எழுதுக.

### ஈ. நான்கு பக்க அளவில் விடையளி

1. ‘குப்தர்காலப் பண்பாடு’ பற்றி ஒரு கட்டுரை வரைக.
2. குப்தர்கால கலை, இலக்கிய வளர்ச்சிகள் குறித்து ஒரு கட்டுரை வரைக.
3. இந்தியப் பண்பாட்டிற்கு ‘குப்தர்களின் கொடை’ குறித்து ஒரு கட்டுரை வரைக.



# 7. 3. பிற்காலப் பல்லவர் காலப் பண்பாடு

பிற்காலப் பல்லவர்களின் ஆட்சிக்காலம் தமிழக வரலாற்றில் ஒரு பொற்காலமாகத் திகழ்ந்தது. இவர்கள் சோழ, பாண்டியர்களுக்கு ஆட்சித்துறையில் முன்னோடிகளாய் திகழ்ந்தனர் என்பர்.

பல்லவர்களின் பேரரசு தொண்டை மண்டலம் என்பர். இது வடக்கே கிருஷ்ணா நதி தீரத்திலிருந்து தெற்கே காவிரி வரை பரந்திருந்தது. அவர் தம் ஆட்சி முறையின் சிறப்புகளை இலக்கியங்களும் கல்வெட்டுக்களும் விளக்குகின்றன.

### 7. 3. 1. காலம்

இவர்கள் கி.பி. 6 ஆம் நூற்றாண்டு முதல் கி.பி. 8 ஆம் நூற்றாண்டு முடிய தொண்டை மண்டலப் பகுதியை சிறப்புடன் ஆட்சி செய்தனர்.

### 7. 3. 2. சான்றுகள்

பல்லவர்களின் ஆட்சிகாலம் பற்றி அறிய

1. காசக்குடி செப்புப் பட்டயம்
2. மகேந்திரனின் ‘மத்த விலாச பிரகசனம்’
3. மூன்றாம் நந்திவர்மனைப் பற்றிய ‘நந்திக்கலம்பகம்’
4. தேவாரப் பாடல்கள்
5. சீனப் பயணி யுவான் சுவாங்கின் குறிப்புகள்
6. ஆம்பூர் மற்றும் ஒலிக்கூரிலுள்ள வீரக்கற்கள்
7. மாமல்லபுர பஞ்சபாண்டவ ரதங்கள், கடற்கரைக் கோயில் குடவரைக்கோயில்கள்

www.tntextbooks.in

### 7. 3. 3. முக்கிய அரசர்கள்

1. முதலாம் மகேந்திரவர்மன் (கி.பி. 590 - கி.பி. 630)
2. முதலாம் நரசிம்ம வர்மன் (கி.பி. 630 - கி.பி. 668)
3. இரண்டாம் மகேந்திரவர்மன் (கி.பி. 668 - 670)
4. முதலாம் பரமேஸ்வரன் (கி.பி. 670- 690)
5. இராஜ சிம்மன் (கி.பி. 690 - கி.பி. 730)
6. இரண்டாம் நந்திவர்மன் (கி.பி. 731 - 796)

போன்றோர் குறிப்பிடத்தக்க மன்னர்கள் ஆவர்.

### 7. 3. 4. அரசியல் நிலை

பல்லவர்காலத்தில் மன்னர்கள் மக்களால் பெரிதும் போற்றப்பட்டனர். மன்னரை 'இறை' எனவும் 'கோன்' எனவும் அழைத்தனர்.

பல்லவருள் தந்தைக்குப்பின் மூத்தமகன் ஆட்சிக்கு வருவது ஒரு பண்பாடாகக் கருதப்பட்டது. வாரிசு அற்ற காலத்தில் முன்னாள் மன்னரின் சகோதரர் ஆட்சியின் பொறுப்பை ஏற்றான். நீதி, நிர்வாகம், இராணுவம் போன்றவற்றிற்கு அரசனே தலைவனாவான்.

அரசனுக்கு ஆலோசனை வழங்க 'மந்திரி மண்டலம்' என்ற குழு செயல்பட்டது. அமைச்சர்களுக்கு 'பிரம்மராஜன்,' 'பேரையன்' என்ற பட்டப்பெயர் வழங்கப்பட்டன.

அரசனுக்கு உதவியாக அந்தரங்க ஆலோசகர், இரகசிய வேலை செய்வோர், வாயில் காப்போர், பட்டய எழுத்தர், காரணிகர், தமிழ் அதிகரணிகர் போன்றோர் செயல்பட்டு ஆட்சி நிர்வாகத்திற்கு உதவி செய்தனர்.

வருவாய் துறை, நிலவரித்துறை நில அளவைத் துறை, காவல் துறை, வனத்துறை, இராணுவத்துறை என பல துறைகள் பிரிக்கப்பட்டு தனித்தனி உயர் அதிகாரிகளின் கீழ் சிறந்த முறையில் செயல்பட்டன.



*ஆட்சிமுறை*

பல்லவநாடு பல ராஷ்டிரங்களாகவும், (மண்டலம்), ராஷ்டிரங்கள் கோட்டங்களாகவும் (வளநாடுகளாகவும்), கோட்டம் நாடுகளாகவும், நாடு ஊர்களாகவும் பிரிக்கப்பட்டு நிர்வாகம் செய்யப்பட்டது. கோட்டங்கள் அதன் இயற்பெயரிலேயே ஆட்சி செய்யப்பட்டு வந்தன. அவை புழல் கோட்டம், களத்தூர் கோட்டம், ஆம்பூர் கோட்டம், வேலூர் கோட்டம் என 24 கோட்டங்களாகப் பிரிக்கப்பட்டிருந்தது.

'ராஷ்ரிகர்' என்பவர் மாநில ஆளுநராவார். இவர் கீழ் பல அதிகாரிகள் பணி புரிந்தனர். அரசகுமாரன் என்பவர் மாநிலப் பிரிவின் ஆட்சியாளராயிருந்தார்.

நாடு என்பது சிற்றூர்களை விடப் பெரியதும் கோட்டங்களை விடச் சிறியதுமாகும். அதனை நாட்டார் என்போர் கட்டுப்படுத்தினர். நாட்டுக்கு அடுத்தது ஊர். அதனை ஊரர் என்பவர் கட்டுப்படுத்தினர். ஆழ்வார் என்பவர் சிற்றூரை ஆண்டுவந்த அவையினர் ஆவர். மன்னர் விடுக்கும் திருமுகத்தை (ஆணை) நாட்டார் பொதுமக்கட்கு அறிவிப்பார். அதனை 'அறைஓலை' என்பர்.

சிற்றூர்கள் என்பது தல ஆட்சிப்பிரிவின் இறுதி அங்கமாகும். இச்சிற்றூர்களை பிரம்மதேயச் சிற்றூர்கள், தேவதானச் சிற்றூர்கள் என அழைத்தனர். ஒவ்வொரு சிற்றூரிலும் கிராம சபை ஒன்று இருந்தது. ஏரி வாரியம், தோட்ட வாரியம் எனப் பல்வேறு வாரியங்கள் கிராம சபையின் பணிகளைச் செய்து வந்தன.

*நீதிமுறை*

பல்லவர்காலத்தில் நகரங்களில் அறங்கூறும் அவைகள் இருந்தன. அவை 'அதிகரணங்கள்' என்று பெயர் பெற்றிருந்தன. இதன் தலைவர் 'அதிகரணிகர்' மற்றும் 'அதிகரண போசகர்' எனப்பட்டனர். இவர்கள் நீதி வழங்குமிடம் 'அதிகரணமண்டபம்' எனப்பட்டது. சிறிய ஊர்களில் இருந்த நீதிச்சபை 'கரணம்' எனப்பட்டது. இதன் தலைவன் 'கரணத்தான்' எனப்பட்டார். பல்லவர்

www.tntextbooks.in

கால நீதிமன்றங்கள் வழக்குகளை மூன்று வித ஆதாரங்களைக் கொண்டு விசாரித்தன. அவை 1. சாட்சி 2. ஆவணம் 3. அயலார் சாட்சி என்பதாகும்.

எல்லா நீதி மன்றங்களுக்கும் தலைமை நீதிமன்றமாக (பொதுமன்றம்) விளங்கிய நீதிமன்றம் தருமாசனம் என்பதாகும். இது அரசரது நேரடிக் கண்காணிப்பில் இருந்தது. காரண தண்டம், அதிகரணதண்டம் என தண்டனை வழங்கும் முறையும் இருந்தது.

இவற்றிற்கெல்லாம் மேலாக மன்னனே நாட்டின் தலைமையான நீதிபதியாகச் செயல்பட்டார்.

*படையமைப்பு*

பல்லவர் காலத்தில் யானைப்படை, குதிரைப்படை, காலாட் படை, தேர்ப்படை, மற்றும் கடற்படை என ஐந்து வகைப்படைகள் இருந்தன. 'கூரம்' பட்டயம் படையின் வலிமையையும் போர் முறைகளையும் கூறுகின்றது. மேலும், வேலூர் பட்டயம் படைக்கருவிகளைப் பற்றி தெளிவுப்படுத்துகின்றது.

இவர்கள் காலத்தில் சிறந்த கடற்படை இருந்ததெனத் தெரிகிறது. முதலாம் நரசிம்மன் தனது நண்பன் மாறவர்மனுக்காக இலங்கை மீது படை நடத்தி வெற்றிக் கொண்டான். கடற்படை உதவியால் இராஜ சிம்மன் லட்சத் தீவை வென்றான்.

### 7. 3. 5. *சமுதாய நிலை*

பல்லவர் காலத்தில் வருணாசிரம தர்ம முறை பின்பற்றப்பட்டது. பிராமணர், க்ஷத்தியர், வைசிரியர், சூத்திரர் என்ற நான்கு பிரிவுச் சமுதாயத்திற்குப் பல்லவர்கள் முக்கியத்துவம் கொடுத்தனர். இந்து சாஸ்திரக் கோட்பாடுகளைப் பின்பற்றி சமுதாயத்தை அமைத்தனர் என்று முதலாம் பரமேஸ்வரனின் 'கூரம்' பட்டயமும் நந்திவர்மனின் காசக்குடி பட்டயமும் குறிப்பிடுகின்றது. பிராமணர்கள், க்ஷத்திரியர் களைத் தவிர, வணிகர்கள், கலைஞர்கள், பொற்கொல்லர்கள், கருமான், தச்சன், உழவர்கள் போன்றோரைப் பற்றிய குறிப்புகளும் காணப்படுகின்றன.



மேலும் சமுதாயத்தில் பல்வேறு தொழில் செய்பவர்களும் இருந்தனர்.

*பெண்கள் நிலை*

பல்லவர் காலத்தில் பெண்கள் உயர்வாகக் கருதப்பட்டனர். அவர்கள் சமயத்திலும், கோயிற் பணிகளிலும் ஈடுபட்டனர். அவர்களுக்கு சொத்துரிமையும் இருந்தது. பெரும்பாலும் ஒருவன் ஒருத்தியையே மணக்கும் பழக்கம் காணப்பட்டது. அரசியரும் அரசகுலப் பெண்களும் பெரும்பாலும் கோயிற்பணிகளிலேயே ஈடுபட்டனர். மற்ற சமூகப் பெண்கள் நூல்நூற்றல், நெசவு செய்தல், பால் விற்றல், பூவிற்றல் போன்ற வியாபாரங்களில் ஈடுபட்டனர். நடன மாந்தர் கோயில் பணிகளில் ஈடுபட்டனர். திருமணம் பெற்றோரின் இசைவுடன் நடைபெற்றது.

*உணவுப் பழக்கம்*

செந்நெல், வெண்நெல், குத்தி அப்பம் கலந்த சிற்றுண்டி, கும்மாய அமுது (பருப்பும் வெண்ணெயும்) அக்கார அடிசில் (சர்க்கரைப் பொங்கல்) நெய் கலந்த சோறு, அவல் அமுது, மற்றும் தயிர்ச் சோறும் உண்டனர்.

*ஆடை அணிகலன்கள்*

பல்லவர் காலத்தில் பொதுவாக நீண்ட அங்கியான வேட்டி அணிந்தனர். செல்வந்தரும், அரசக் குடும்பத்தாரும் 'உத்தரீயம்' எனப்படும் ஆடையை அணிந்தனர். மேலும் கலிங்கம், பட்டு, பீதாம்பரம் போன்றவையும் செல்வந்தர்கள் அணிந்தனர். துவைத்த ஆடை, துவர் ஆடை போன்றவை சமயத் துறவிகளும் சந்நியாசி களும் அணிந்தனர். சிற்றாடை, மேலாடை, சேலை போன்றவற்றைச் சாதாரண மக்கள் அணிந்தனர்.

கழுத்து அணிகளும், காது அணிகளும், கால் கொளுசுகளும் அணியப்பட்டன.

அரசியர் தலையில் மகுடம், விலை உயர்ந்த நகைகள் அணிந்தனர்.

www.tntextbooks.in

### 7. 3. 6. சமய நிலை

பல்லவர்காலச் சமயவாழ்க்கை கோயிலைச் சுற்றியே அமைந்திருந்தது. சிவன், விஷ்ணு என்னும் கடவுளர் மீது பக்தி பெருக்கெடுத்தோடியது. சக்தி வழிபாடும் சிறப்புற்றிருந்தது மற்றும் சப்தமாதர், ஜேஷ்டா வழிபாடும் பிற்கால சமயத்தில் வளர்ச்சி பெற்றன. பல்லவர் காலத்தில் இந்துசமயத்தினை காணாபத்தியம், கௌமாரம், சௌரம், சாக்தம், சைவம், வைணவம் என்று ஆறுவகைச் சமயமாக பிரித்து மக்கள் வழிப்பட்டனர்.

பொய்கையாழ்வார், பூதத்தாழ்வார், பேயாழ்வார் முறையே காஞ்சி, மாமல்லபுரம், மைலாப்பூரிலும் பிறந்தவர்களாவர். திருமழிசை ஆழ்வார் செங்கற்பட்டு மாவட்டம் பூவிருந்தவல்லிக்கு அருகில் பிறந்தவர். திருமங்கை ஆழ்வார் ஆண்டாள் போன்றோர் பல்லவர் காலத்தில் வைணவ சமயத்தைப் போற்றி வளர்த்தனர்.

களப்பிரர் ஆட்சிக்காலத்திற்குப் பிறகு சைவ வைணவ சமயங்கள் செழித்தோங்கின. சமணமும் பௌத்தமும் மறையத் தொடங்கின.

சைவ சமயத்தில் பல கிளைகள் இருந்தன. பாசுபதம், காபாலிகம், காளாமுகம், மகாவிரம், போன்றவை குறிப்பிடத்தக்கவை.

எனவே, பிற்காலத்தில் கி.பி. 7ஆம் நூற்றாண்டிற்குப் பிறகு சமயவளர்ச்சியில் ஒரு மறுமலர்ச்சி, தோன்றியது. தேவாரம், நாலாயிரத் திவ்விய பிரபந்தம் போன்ற சமயநூல்கள் முறையே சைவ, வைணவ சமயங்களின் கருவூலமாக விளங்குகிறது.

#### சமணமும் பௌத்தமும்

***சமணம்***

பத்திரபாகுவுடன் சந்திரகுப்த மௌரியர் சரவணபெலகோலா (மைசூருக்கு அருகில்) வந்தது முதற்கொண்டே சமணம் தென்னகத்தில் பரவ ஆரம்பித்தது. ‘களப்பிரர்’ காலத்தில் அது மேன்மேலும் சிறப்பு பெற்று விளங்கியது.



வஜ்ஜிரநந்தியால் தோற்றுவிக்கப்பட்ட மதுரை திராவிட சங்கம் மூலம் சமணம்பெரும் முன்னேற்றம் கண்டு தமிழகத்தின் தென்கோடிவரை பரவலாயிற்று. காஞ்சி, வள்ளிமலை, பொன்னூர், திருக்காட்டுப்பள்ளி, செந்தலை, நாகமலைப் புதுக்கோட்டை போன்ற பகுதிகளில் தங்கி சமணர் சமண சமயத்தை வளர்த்தனர்.

முதலில் முதலாம் மகேந்திர வர்மன் திருநாவுக்கரசர் மற்றும் கூன் பாண்டியன் போன்றோர் சமண சமயத்திற்கே ஆதரவு நல்கினர் என்பது வரலாற்றின் கூற்றாகும்.

***பௌத்தம்***

அசோகர் காலத்திலிருந்து தமிழகத்தில் பௌத்த மதம் பரவியது. சங்க காலத்திற்குப் பிறகு முற்காலப் பல்லவர் காலத்தில் சமணமும் பௌத்தமும் நன்கு வளர்ச்சியுற்றது. பல்லவ மன்னர், பலர் இதற்கு ஆதரவு நல்கினர். யுவான் சுவாங் வருகையின் போது காஞ்சியில் 100 புத்த மடங்களும்அதில் 10,000 புத்த துறவிகள் இருந்ததாகவும் தமது குறிப்பில் கூறியுள்ளார்.

போதிமங்கை, பழையாறை, நாகை போன்ற இடங்களில் பௌத்த சமயம் செல்வாக்கு பெற்று விளங்கியது. சைவர்களும் வைணவர்களும் சமணர்களையும், பௌத்தர்களையும் பலவாதங்களில் வென்று இவர்களுடைய செல்வாக்கை ஒழித்ததுடன் சமண, பௌத்த துறவிகள் பலரைக் கழுவிலேற்றிக் கொன்றனர்; சமணப் பள்ளிகள் இடிக்கப்பட்டன. பௌத்த ஆலயங்கள் கொள்ளை அடிக்கப்பட்டன என்று கூறப்படுகிறது.

### 7. 3. 7. கலை வளர்ச்சி

இந்தியக் கோயிற் கட்டடக்கலையை நாகரக் கலை, வேசரக்கலை, திராவிடக் கலை என மூன்று பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டது. திராவிடக் கோயிற் கலை பல்லவர் காலத்தில் ஒரு பெரும் புரட்சியைக் கண்டது. கோயிற் கலையில் அழியாப் பொருளைக் கொண்டு முதலாம் மகேந்திர வர்மன் பெரும் புரட்சியை ஏற்படுத்தினான்.

www.tntextbooks.in

*கட்டடக்கலை*

பல்லவர்காலக் கட்டடக் கலையினை மூன்று பெரும் பிரிவுகளாகப் பிரிக்கலாம். அவை,

1. குடைவரைக் கோயில்கள் **(Rock Cut Temples)**
2. ஒற்றைக்கல் ரதங்கள் **(Monolithic Rathas)**
3. கட்டுமானக் கோயில்கள் **(Structural Temples)**

**1. குடைவரைக் கோயில்கள்**

தென் இந்திய வரலாற்றில் முதல் முறையான பல்லவர் காலத்தில் முதலாம் மகேந்திர வர்மனின் காலத்திலும், மாமல்லன் காலத்திலும் பாறையைக் குடைந்து கோயில்கள் உருவாக்கப்பட்டன.

மண்டகப்பட்டு, பல்லாவரம், வல்லம், மாமண்டூர், குரங்கண், மகேந்திரவாடி, சீயமங்கலம், தளவானூர், திருச்சி, சித்தன்னவாசல், ஆகியவை மகேந்திரவர்மன் காலத்தில் குடையப்பட்ட குடவரைக் கோயில்களாகும்.

மாமல்லன் பாணிக் குகைக் கோயில்கள், குடவரைக் கோயில்களுடன் இரதங்களையும் ஏற்படுத்தினான். மாமல்லனின் குடைவரைக் கோயில்கள் பெரும்பாலும் மாமல்லபுரத்திலேயே காணப்படுகின்றன. இக்காலத்து மண்டபங்களில் காணப்படும் தூண்களின் சிறப்பு அரிமா முன்னங்கால்களில் நின்று பின்னங்கால்களில் அமர்ந்துள்ளது போலக் காணப்படுவதாகும்.

**2. ஒற்றைக் கல் இரதங்கள்**

மாமல்லன் எனும் முதலாம் நரசிம்மனின் மிகப்பெரும் சாதனை மாமல்ல புரத்தில் ஒற்றைக் கல்லிலேயே செதுக்கப்பட்ட ரதங்கள் ஆகும். ஒரே இடத்தில் இருக்கும் ஐந்து இரதங்கள் மொத்தமாக 'பஞ்சபாண்டவ ரதங்கள்' என அழைக்கப்படும். அவையாவன. திரௌபதிரதம், அர்ச்சுனரதம், பீமரதம், தர்மராஜரதம், நகுல சகாதேவரதம் ஆகியனவாகும்.



**3. கட்டுமானக் கோயில்கள்**

பல்லவர் காலக் கட்டிடக் கலையின் ஒரு புதிய மாற்றத்தை இராஜசிம்மன் ஏற்படுத்தினான். இவ்வகைக் கோயில்களில் செதுக்கப்பட்ட கற்களைக் கொண்டு கருவறை, அதன்மேல் விமானம்) அர்த்த மண்டபம், முக மண்டபம், சுற்றுப்புறச் சுவர் போன்றவற்றை ஏற்படுத்தினான்

பல்லவர்காலக் கட்டுமான கோயில்களின் வகைகளை இராஜசிம்மன் பாணி, நந்திவர்மன் பாணி என இரு பிரிவுகளாகப் பிரிக்கலாம்.

மாமல்லபுர கடற்கரைக் கோயில்; பனை மலை சிவன் கோயில், காஞ்சி கயிலாயநாதர் கோயில், இராஜசிம்மன் பாணிக் கோயில்களாகும்.

காஞ்சி முத்தேசுவரர் கோயில், கூரம் பெருமாள் கோயில், திருத்தணி வாடாமல்லீசுவரர் கோயில், குடிமல்லம் பரமேஸ்வரர் கோயில் போன்றன நந்திவர்மன் பாணிக் கோயில்களாகும்.

*சிற்பக்கலை*

மாமல்லபுரத்தில் காணப்படும் ஒற்றைக்கல் சிங்கம், யானை, நந்தி, குரங்கு பேன்பார்க்கும் காட்சி, மகிஷாசுரமர்த்தினி மண்டப போர்க்கோல காட்சி, மும்மூர்த்தி மண்டபத்திலும் திரௌபதி ரதத்திலும் காணப்படும் சிற்பங்கள் கோவர்த்தனகிரியைக் கண்ணன் பிடிக்கும் காட்சியும் 'அர்ச்சுனன் தவக்கோலம்' எனப்படும் காட்சிகள் யாவும் சிற்பக்கலைக்குப் பிற்காலப் பல்லவர்களின் சிறந்த சான்றுகளாக இன்றும் விளங்குகின்றன.

*இசைக்கலை*

விருதுபெயர்களைக் கொண்டே பல்லவ மன்னர்கள் சிறந்து விளங்கினர். 'சங்கீரண சாதி,' 'பரிவாதினீ (வீணையில் வல்லவன்), சைத்தியக்காரி (குடைவரை கோவிலை கட்டியவன்)' போன்ற

பெயர்களை மகேந்திர வர்மனும்; 'வாத்ய வித்யாதரன்,' 'ஆதோத்ய தம்புரு' (ஆதோதிய வீணை வாசிப்பதில் வல்லன்), 'வீணாநாரதன்' போன்ற பெயர்களை இராஜசிம்மனும் பெற்றிருந்தனர்.

பல்லவர்கால இசைக்கருவிகளென யாழ், குழல், கின்னரி, கொக்கரி, வீணை, தக்கை, முழவம், மொந்தை, மிருதங்கம், மத்தளம், தந்துபி, தமுருகம், துடி, தாளம், உடுக்கை, கொடுகட்டி, தத்தலம், குடமுழா, முரசம், போன்றவை பயன்படுத்தப்பட்டதாக தேவாரப் பாடல்கள் மூலம் அறிகின்றோம். இசை பற்றிய செய்திகளை குடுமியான் மலைக் கல்வெட்டின்மூலம் அறிகின்றோம்.

***நடனம், நாடகக்கலை***

பல்லவர் காலத்தில் நடனக்கலை சிறப்பு பெற்றிருந்தற்கு சிறந்த எடுத்துக்காட்டுகளாக பல்லவரின் கோயில்களே விளங்குகின்றன. வைகுந்தப் பெருமாள் கோயிலில் காணப்படும் சுவர் சிற்பங்கள், காஞ்சி கயிலாயநாதர் கோயிற் சிற்பங்களும் ஓவியங்களும் நடனக்கலையின் சிறப்பை வெளிபடுத்துகிறது.

நடனக் கலையுடன் நாடகக் கலையும் சிறப்பு பெற்று இருந்ததை மகேந்திர வர்மனின் 'மத்தவிலாச பிரகசனம்' என்ற வடமொழி நாடக நூல் சமயக் கருத்தோடு மக்கள் வாழ்க்கைப் பற்றியும் எடுத்தியம்புகிறது.

***ஓவியம்***

சித்தன்ன வாசல், காஞ்சி கைலாய நாதர் ஆலயம், பனமலை கிரீஸ்வரர் ஆலயம் போன்றவற்றின் சுவர்களிலும், தூண்களிலும் மிக அழகிய வண்ண ஓவியங்கள் காணப்படுகின்றன.

முதலாம் மகேந்திரவர்மன் ஓவியம் எனும் சித்திரக் கலையில் சிறந்த ஆற்றல் பெற்றிருந்ததால் இவரைச் 'சித்திரக்காரப் புலி' என கல்வெட்டு பாராட்டுகிறது.

***கல்வி***

பல்லவர் காலத்தில் காஞ்சி, பர்கூர் பழம்பதி போன்ற இடங்களில் கல்விக் கூடங்கள் இருந்தன. இவை உயர்கல்வி



போதிக்கும் இடமாகவும், வடமொழி கற்பிக்கும் கூடமாகவும் சிறந்து விளங்கின. 'தர்மபாலர்' என்பவர் கல்வி கற்பதற்காக நாலந்தா பல்கலைக்கழகத்திற்குச் சென்றதாக குறிப்புகள் உள்ளன.

"கல்வியிற் கரையிலாத காஞ்சிமா நகர்" என அப்பர் புகழாரம் சூட்டியுள்ளார்.

மேலும், அக்கிரஹாரங்களும், பிரம்மபுரிகளும் கல்வி மற்றும் கலை வளர்ச்சியில் பெரிதும் துணை புரிந்தன. பல்லவர் காலத்தில் கோயில்களும் மடங்களும் கல்விக் கூடங்களாய் செயல்பட்டன. எடுத்துக்காட்டாக காஞ்சி கைலாசநாதர் ஆலயத்தில் சிற்பம், ஓவியம், இசை, நடனம், நாடகம் மற்றும் மகாபாரதம், இராமயணமும் கற்பிக்கப்பட்டன.

நாகை, காஞ்சி, ஸ்ரீபர்வதம், தான்யகடகம் முதலிய இடங்களில் பௌத்த விஹாரங்களும் கல்விச் சாலைகளும் மற்றும் திருப்பாதிரிப்புலியூர், திருப்பருத்திக் குன்றம் போன்ற இடங்களில் சமணப் பள்ளிகளும் இருந்ததாக கல்வெட்டுகள் மூலம் அறிகிறோம்.

***இலக்கியம்***

பிற்காலப் பல்லவர்காலத்தில், சங்க காலத்தைப் போன்று தூய்மையான தமிழ் இலக்கியமாக அமைந்திருக்கவில்லை. காரணம் பல்லவர்கள் பிற்காலத்தில் வடமொழியாகிய சமஸ்கிருதத்திற்குக் கொடுத்த செல்வாக்கேயாகும். அவர்கள் சாதவாகனரின் கீழ்பணி புரிந்தபோதும் களப்பிரார் காலத்திலும் பிராகிருதம், சமஸ்கிருதம் மொழிகளைப் போற்றினர். காஞ்சியில் ஒரு சமஸ்கிருத கல்லூரி வைத்து நடத்தினர். எனவே பல்லவர்கள் வட மொழிக்கு முக்கியத்துவம் கொடுத்து தமிழில் கலப்பு மொழி தோன்ற வழி வகுத்தனர் என்பர்.

***வடமொழி இலக்கியம்***

சிம்மவிஷ்ணுவின் காலத்திலிருந்து இராஜ சிம்மன் காலம் வரை (கி.பி. 557 முதல் கி.பி. 730 வரை) சமஸ்கிருத மொழியின் பொற்காலமாகும்.

www.tntextbooks.in

1. பாரவியின் - கிரதார் ஜூனியம் / பிரகசனம்
2. முதலாம் மகேந்திரவர்மனின் - மத்த விலாசப் பிரகசனம்
3. போதயானா - பாகவஜீகம்
4. தண்டின் - தசகுமாரகரிதம், அவந்தி சுந்தரி, கதாச் சாரம்

மற்றும் ‘சுவப்னவாசவதத்தா,’ ‘லோகவிபாகம்’ காவியதர்சனம் போன்ற சமஸ்கிருத நூல்கள் வடமொழி இலக்கியத்திற்கு அழகு சேர்ப்பனவாகும்.

### *தமிழ் இலக்கியம்*

பல்லவ பேரரசர்கள் வடமொழியைப் போற்றியது உண்மையெனில் அவர்கள் தமிழ் மொழியை நிராகரிக்கவில்லை. அவர் தம் கல்வெட்டுக்கள், பட்டயங்கள் ஆகியவற்றில் பெரும்பகுதி தமிழிலேயே வரையப்பட்டவையாயுள்ளன. எனவே, பல்லவர்கால தமிழ் வளர்ச்சி பற்றி இங்கு காண்பது மிக அவசியமாகும்.

1. சேரமான் பெருமாள் நாயனார் - ஞானவுலா, பொன்வண்ணத்து அந்தாதி, மும்மணிக் கோவை
2. கங்கநாட்டு மன்னன் கொங்கு வேளிர் - கொங்குவேளிர் மாகதை (பெருங்கதை)
3. மூன்றாம் சிம்மவர்மன் - சிவத்தளி வெண்பா
4. தோலா மொழித்தேவர் - சூளாமணி
5. பெருந்தேவனார் - பாரத வெண்பா
6. அப்பர், சுந்தரர் சம்பந்தர் - தேவாரம்
7. திருமங்கையாழ்வார் - திருவாய்மொழி
8. ஆண்டாள் - திருப்பாவை

மற்றும் ‘நந்திக்கலம்பகம் (3ஆம் நந்திவர்மனைப் பற்றியது) முத்தொள்ளாயிரம் (மூவேந்தர்களைப் பற்றியது), மற்றும் இலக்கண நூல்களாக சங்கயாப்பு பாட்டியல் நூல், மாபுராணம் போன்றவை இக்காலத்தைச் சார்ந்தவையாகும்.



## 7. 3. பயிற்சி வினாக்கள்

### அ. ஓரிரு வரிகளில் விடையளி

1. பிற்காலப் பல்லவர்களின் காலம் யாது?
2. ‘மந்திரி மண்டலம்’ குறிப்பு வரைக.
3. ‘அதிகரணங்கள்’ சிறுகுறிப்பு எழுது
4. இந்து சமயத்தின் ‘அறுவகைச் சமயங்கள்’ யாவை?
5. பிற்காலப் பல்லவர்கால ‘கட்டடக் கலையின்’ மூன்று பிரிவுகள் யாவை?
6. ‘சதுர்வேதி மங்களம்’ குறிப்பு வரைக.
7. பிற்காலப் பல்லவரின் ‘இசைக்கருவிகள்’ யாவை?

### ஆ. பத்துவரிகளுக்கு மிகாமல் விடையளி

1. பிற்காலப் பல்லவர் காலத்தை அறிய உதவும் சான்றுகள் யாவை?
2. பிற்காலப் பல்லவ மன்னர்களில் முக்கியமானவர்கள் யாவர்?
3. பிற்காலப் பல்லவர்களின் ‘நீதித்துறையை’ விளக்குக.
4. பிற்காலப் பல்லவர்காலப் ‘பெண்களின் நிலை’ யாது?
5. பிற்காலப் பல்லவர்களின் ‘இசைக்கருவிகள்’ யாவை?
6. பிற்காலப் பல்லவர்களின் ‘கல்வி நிலை’ பற்றி எழுதுக.
7. பல்லவர்கால ‘நீதிமுறை’ எவ்வாறு இருந்தது.
8. பிற்காலப் பல்லவர்களின் ‘சமய நிலை’ எவ்வாறு இருந்தது?

### இ. ஒரு பக்க அளவில் விடையளி

1. பிற்காலப் பல்லவர்களின் ‘அரசியல் நிலையை’ விளக்குக.
2. பிற்காலப் பல்லவர்களின் ‘சமூக நிலையை’ பற்றி விளக்கி எழுது.

www.tntextbooks.in

3. பிற்காலப் பல்லவர்களின் ‘இசைக்கலை’ பற்றி எழுது.

4. பிற்காலப் பல்லவர்கால ‘ஆட்சி முறையை’ விளக்குக.

5. பிற்காலப் பல்லவர்களின் ‘ஆடை அணிகலன்கள்’ யாவை?

6. பிற்காலப் பல்லவர்களின் ‘சமய வளர்ச்சி’ பற்றி விவரி.

7. பிற்காலப் பல்லவர்களின் ‘கட்டடக்கலை வளர்ச்சி’ பற்றி விளக்கி எழுது.

8. பிற்காலப் பல்லவர்களின் ‘இலக்கிய வளர்ச்சி’ குறித்து விரிவாக எழுதுக.

9. பிற்காலப் பல்லவர்களின் வடமொழி மற்றும் தமிழ்மொழி இலக்கிய நூல்கள் யாவை?

**ஈ. நான்கு பக்க அளவில் விடையளி**

1. பிற்காலப் பல்லவர்காலப் பண்பாடு பற்றி ஒரு கட்டுரை வரைக.

2. பிற்காலப் பல்லவர்கால கல்வி, கலை, இலக்கியம் குறித்து ஒரு கட்டுரை வரைக.



# 7. 4. பிற்காலச் சோழர்காலப் பண்பாடு

“சோழநாடு சோறுடைத்து” என்பது முதுமொழி. இது இந்நாட்டின் வளத்தைக் காட்டுகிறது. வானளாவிய கோவில்களும், கண்ணைக் கவரும் ஓவியங்களும், மனதை மயக்கும் சிற்பங்களும், கருத்தை தூண்டும் இலக்கியங்களும் நிறைந்து போற்றப்பட்ட சோழர்காலத்தில் மக்கள் திட்டமிட்ட மக்களாட்சியைக் கண்டனர். அனைத்து மக்களும் மனநிறைவோடு பணிபுரிந்து வளமான வாழ்க்கை வாழ்ந்து வந்தனர்.

சுருங்கக் கூறின், அனைத்து துறைகளும் முழு நிறைவு பெற்ற நிலையில் காணப்பட்டது. எனவே தான் தமிழக வரலாற்றில் சோழர் காலம் பொற்காலம் என்று போற்றப்படுகிறது.

### *7. 4. 1. காலம்*

பிற்கால சோழர்கள் ஏறக்குறை கி.பி. 846 முதல் கி.பி. 1279 வரை சிறந்த முறையில் ஆட்சி செய்து வந்தார்கள். கி.பி. 13 ஆம் நூற்றாண்டில் பிற்காலப் பாண்டியரின் எழுச்சியினால் சோழப் பேரரசு வீழ்ச்சிக்குள்ளானது என்பர்.

### *7. 4. 2. சான்றுகள்*

சோழர்கால ஆட்சியைப் பற்றி அறிந்து கொள்ள கல்வெட்டுகள், நாணயங்கள், கட்டடக்கலை, சிற்பக்கலை, ஓவியக்கலை, படிமக்கலை, முதலியனவும் **(Iconography)** சோழர்கால மிகச் சிறந்த புலவர்களாகிய ஔவையார், சேக்கிழார், கம்பர், ஒட்டக்கூத்தர், புகழேந்தி ஆகியோரின் இலக்கியப் படைப்புகள் மற்றும் காப்பியங்கள், இலக்கண நூல்கள், நிகண்டுகள் சைவத் தமிழ் இலக்கியங்கள், சைவ சித்தாந்த சாத்திரங்கள், மடங்கள், கோயில்கள் போன்றன சான்றுகளாக விளங்குகின்றன.

www.tntextbooks.in

### *7. 4. 3. முக்கிய அரசர்கள்*

1. பரகேசரி விஜயாலய சோழன் (கி.பி. 846 - கி.பி. 881)
2. இராஜகேசரி ஆதித்திய சோழன் (880 - கி.பி 907)
3. பரகேசரி முதலாம் பராந்தகன் (907 - 955)
4. முதலாம் இராஜராஜன் (கி.பி. 985 - கி.பி. 1012)
5. முதலாம் இராஜேந்திரன் (கி.பி. 1012 - கி.பி. 1044)
6. முதலாம் இராஜாதி ராஜன் (கி.பி. 1044 - கி.பி. 1054)
7. முதலாம் குலோத்துங்கன் (கி.பி. 1070 - கி.பி. 1120)

போன்ற அரசர்கள் பிற்கால சோழர்காலத்தில் முக்கிய அரசர்களாக விளங்கினர்.

### *7. 4. 4. அரசியல் நிலை*

சோழ மன்னர்கள் தஞ்சாவூர், கங்கை கொண்ட சோழபுரம், காஞ்சிபுரம் போன்ற இடங்களைத் தலைநகரங்களாகக் கொண்டு ஆட்சி செய்தனர். குடியாட்சியுடன் கூடிய முடியாட்சியில் சோழர் கால வாரிசுரிமையிலும் தேர்ந்தெடுக்கப்பட்ட முறையிலும் காணப்பட்ட சிறப்பு அம்சங்கள் வேறெந்த ஆட்சியிலும் காணப்படவில்லை.

சோழ மன்னர்கள் தங்களுக்குப் பிறகு ஆட்சிக்கு வருவதற்குரிய தம்முடைய புதல்வர்களில் மூத்தோனுக்கு தம் ஆட்சிக் காலத்திலேயே இளவரசுப் பட்டம் சூட்டி ஆட்சியில் அனுபவம் பெறச் செய்ததோடு படையெடுப்புகளையும் மேற்கொண்டு, ஆட்சி நிர்வாகத் திறமைக்கு அடி கோலினர். எடுத்துக்காட்டாக இராஜராஜன் காலத்தில், தம் மகன் இராஜேந்திரனுக்கு இளவரசுப் பட்டம் சூட்டிப் பல போர்களை மேற்கொள்ளச் செய்து நாட்டை விரிவாக்கினான்.

சோழர் ஆட்சியில் கிராம சபைகள் கொண்டுவந்த தீர்மானங்களை மத்திய அரச செயல்படுத்தக் கடமை பட்டிருந்தது. வழக்குகளை விசாரித்துத் தீர்ப்பளிப்பது கிராம சபையின்



பொறுப்பாக இருந்தது. கிராம சபையால் தீர்க்க முடியாதப் பிரச்சினைகளை அரசன் தன் அதிகாரிகளை அனுப்பி தீர்த்து வைத்தான். சில சமயம் மன்னன் விஜயம் செய்த இடங்களிலும் நீதி விசாரணை நடத்தி தீர்ப்பு வழங்கியதாக கல்வெட்டுகள் பகர்கின்றன. அதிகாரங்கள் அனைத்தும் மன்னனிடமே குவிந்திருக்க வில்லை. ஆகவே அரசன் தன்னிச்சையாக எதையும் செய்ய முடியாது.

சோழ மன்னர்கள் முடிசூட்டி அரச உரிமை பெரும் நன்னாளில், உடையார், சக்கரவர்த்திகள், திரிபுவன சக்கரவர்த்திகள், கோனேரின்மைக் கொண்டான். இராஜ கேசரிவர்மன், பரகேசரிவர்மன், கோப்பர கேசரி, இராஜாதி ராஜன் என்ற பட்டங்களை மாறி மாறி புனைந்து கொண்டனர்.

அரசியல் அதிகாரிகள் பெருந்தனம், சிறுதனம் **(Gazetted and Non-Gazetted officer)** என இருவகையாக செயல்பட்டனர். மன்னனின் செயலகத்தில் கீழ்கண்டவாறு பணியாளர்கள் நியமிக்கப்பட்டிருந்தனர்.

1. திருவாய்க் கேள்வி (அரசனின் ஆணைகளை உடனுக்குடன் வெளியிடுபவன்)
2. திருமந்திர ஓலை நாயகம் (மன்னனின் ஆணைகளை ஓலையில் எழுதுபவன்)
3. திருமந்திர ஓலை நாயகம் (தலைமைச் செயலாளர் - **Chief Secretary)**
4. கருமவிதின் (ஆணைகளை நாட்டின் பல இடங்களுக்கு கொண்டு செல்பவன்)
5. நாடு காவலதிகாரி (நாட்டில் அமைதி காப்பவன்)
6. புரவுவரித்திணைக் களத்தார் (நிலவரிக் கழகம்)
7. புரவுவரித்திணைக் களத்துக் கண்காணி (நிலவரிக் கணக்குகளை மேற்பார்வை செய்பவர்)
8. வரிப்பொத்தகக் கணக்கு (தணிக்கை அதிகாரி)

www.tntextbooks.in

9. திருமுகக் கணக்கு (அரண்மனைக் கணக்குகளை சரிபார்ப்பவன்)

10. நாடு வகை செய்வார் (விளை நிலத்தின் தரத்தைப் பிரிப்பவன்)

### *சோழப் பேரரசின் உட்பிரிவுகள்*

ஆட்சியில் நலனைக் கருதி சோழப் பேரரசை பல மண்டலங்களாகப் பிரித்திருந்தனர். ஒவ்வொரு மண்டலத்திற்கும் இளவரசர்கள் அல்லது உறவினர்கள் ஆளுநர்களாக நியமிக்கப்பட்டனர். மாநிலத்தில் அமைதிகாப்பது பிரச்சினைகளை மத்திய அரசுக்கு எடுத்துரைப்பது, மத்திய அரசின் ஆணைகளைச் செயல்படுத்துவது ஆகியவை அவர்களுடைய பணிகளாகும்.

ஒவ்வொரு மண்டலமும் பல வளநாடுகளாகவும் வளநாடுகள் பல நாடுகளாகவும் நாடுகள் கூற்றங்களாகவும் வழங்கப்பட்டன நாடுகளை அடுத்து சதுர்வேதி மங்கலம் எனவும், ஒவ்வொரு சதுர்வேதி மங்கலமும் சில சிற்றூர்களைக் கொண்டிருந்தன. மண்டல அதிகாரி மண்டலிகள் என அழைக்கப்பட்டனர். நாட்டு அதிகாரி நாடான்வான், நாட்டு நாயகம், நாடுடையான் என்று அழைக்கப்பட்டான்.

### *கிராம ஆட்சி முறை*

சோழர்கால ஊராட்சிமுறை உலகம் வியக்கும் வண்ணம் சிறப்புப் பெற்று இருந்தது. கிராம சபை தேர்ந்தெடுக்கும் முறை அதன் செயல்பாடுகள் குறித்து (உத்திரமேரூர் சதுர்வேதி மங்கலத்துச் சபையைப் பற்றி) உத்திரமேரூர் கல்வெட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது.

சபைகள் நான்கு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு இருந்தன. அவையாவன

1. சதுர்வேதி மங்கலத்திலிருந்த சபை பிராமணர்கள் பிரமதேய உரிமையுடன் வசித்தனர்.
2. திருக்கோயிலுக்குரிய தேவதானங்களில் இருந்த சபை
3. பிராமணர் அல்லாதவர் வாழ்ந்த ஊர்களில் காணப்படும் சபை
4. வணிகர்கள் வாழ்ந்த நகரங்களில் இருந்த சபை



ஊரின்கண் வசித்து வந்த தகுதி பெற்ற அனைத்து ஆண்மக்களும் கிராம சபையின் தகுதி பெற்ற உறுப்பினராவர். அச்சபைகளை பெருங்குறி என்றும் மகா சபை என்றும் கூறுவர். இச்சபையினர் நடத்தும் குடவோலை முறையில் தேர்ந்தெடுக்கும் தகுதிவாய்ந்த உறுப்பினர்கள் கிராமப் பணிகளில் ஈடுபடும் பல்வேறு வாரியங்களில் இடம் பெறுவர்.

### *தேர்தல் முறை*

தேர்தல் நாளன்று ஊர் மக்கள் அனைவரும் ஒன்று கூடுவர். முப்பது குடும்பங்களாகப் பிரிக்கப்பட்டு தகுதியுடையோரின் பெயர்களை ஓலையில் எழுதி அந்தந்த பகுதிகளைச் சார்ந்த ஓலை என்பதை அறிய அதனை தனித்தனியே முப்பது கட்டுகளாகக் கட்டிக் குடத்தில் விடுவர். பின்னர் சிறுவனை அழைத்து ஓர் ஓலைக்கட்டை எடுக்கச் செய்து, அவிழ்த்து மற்றொரு குடத்தில் இட்டு குலுக்கி அச்சிறுவனையே ஒரு ஓலையை மட்டும் எடுக்கச் செய்வர். இவ்வாறு தனித்தனியே முப்பது கட்டுகளிலிருந்தும் முப்பது பேர்கள் குடவோலை மூலம் தேர்ந்தெடுக்கப்படுவர்.

### *வாரியங்களும் கடமைகளும்*

குடவேலை முறையில் தேர்ந்தெடுக்கப்பட்ட பல்வேறு உறுப்பினர்களும் பல வாரியங்களில் சேர்க்கப்பட்டு பணிபுரிவார்கள்.

1. சம்வத் சரவாரியம் (ஊரின் பொது காரியங்கள் செய்வர்)
2. ஏரிவாரியம் (ஊரின் நீர்நிலைகளைக் கவனித்தல்)
3. தோட்ட வாரியம் (விளை நிலங்கள் புறம்போக்கு நிலங்களைக் கவனித்தல்)
4. பஞ்ச வாரியம் (பஞ்சத்தைச் சரிசெய்ய ஊர் மக்களிடம் தானியம் சேகரித்து பாதுகாத்தல்)
5. பொன் வாரியம் (பொன் உரைத்தல், பொற்காசுகளை ஆராய்தல்)
6. கணக்குவாரியம் (ஊர் கணக்கு கண்காணித்தல்)
7. கலிங்கு வாரியம் (நீர்ப்பாசனத்தைக் கண்காணித்தல்)
8. தடவழி வாரியம் (ஊர் வழிச்சாலைகளைச் செப்பனிடுதல்)

www.tntextbooks.in

***படை வகைகள்***

சோழர்காலப் படைகள் இருவகையாகப் பிரிக்கப்பட்டிருந்தன.

1. நிலப்படை 2. கப்பற்படை.

நிலப்படையில் யானைப்படை, குதிரைப்படை, காலாட் படைகள் இருந்தன. படைத்தலைவன் படை முதலி, சேனை முதலி என அழைக்கப்பட்டான். முப்படைத் தளபதியை "மாதண்ட நாயகன்" என அழைக்கப்பட்டான்.

### *7. 4. 5. சமுதாய நிலை*

***சாதிமுறை***

சோழர்கால சமூக நிலை சாதி அடிப்படையாகக் கொண்டு அமைக்கப்பட்டிருந்தது. ஒவ்வொரு சாதியும் அதன் தேவைகளையும், உரிமைகளையும் உறவுகளையும் பாதுகாத்துக் கொள்வதில் முழுகவனம் செலுத்தின. மரபு வழியில் தொழில்கள் பின்பற்றப்பட்டன. எனவே, வேதகால சாதிமுறைகளே சோழர் காலத்திலும் தொடர்ந்து இருந்தன என்றார்.

***பிராமணர்கள்***

பிராமணர்கள் கல்வியறிவும், வேதங்களை நன்கு கற்றவர்களாகவும் சிறந்து விளங்கினர். சமுதாயத்தில் உயர்ந்த நிலையில் காணப்பட்டனர். அவர்களுக்கு 'பிரம்ம தேயங்களும்' அளிக்கப்பட்டன. அரசருக்குரிய ஆச்சாரியர்களாகவும், அமைச்சர்களாகவும், படைத்தலைவர்களாவும் மற்றும் வேதங்கள் ஓதியும் வேள்விகள் செய்தும் மன்னர்களின் நம்பிக்கைக்குப் பாத்திரமானவர்களாகவும் இருந்தனர். இவர்களது பணிகளைப் பாராட்டி பிரமராய பட்டங்களும் 'ஏகபோக பிரமதேயமும்' அளிக்கப்பட்டன. கோயில் நிர்வாகத்தையும்அவர்களே கவனித்தனர்.

***சத்திரியர்கள்***

சத்திரியர்கள் நாட்டில் அமைதி காப்பதும் எல்லைகளைக் கண்காணிப்பதும், போர்க்காலங்களில் அரசனது வெற்றிகளுக்கு



உறுதுணையாக நிற்பதும் சத்திரியர்களின் பணிகளாகும். மன்னர்கள் தம்மை சத்திரியர் எனக் கூறிக் கொள்வதை பெரிதும் விரும்பினர். முதலாம் இராஜராஜன் தன்னை சத்திரிய சிகாமணி என்று கூறிக்கொண்டான்.

***வெள்ளாளர்***

வேளாண்மை முக்கியத் தொழிலாகக் கருதப்பட்டு, அரசாங்கத்தில் இவர்களுக்கு பல சலுகைகள் அளிக்கப்பட்டன. கொலை தண்டனையிலிருந்தும் விலக்கு அளிக்கப்பட்டது. எக்காரணம் கொண்டும் இந்த இனத்துப் பெண்களைச் சபைக்கு அழைத்து வரக் கூடாது என்று காவிரி பாக்கத்துக் கல்வெட்டு, கூறுகின்றது. தொன்று தொட்டு நிலத்தை உழுது சமுதாயத்தின் முதுகெலும்பாக இவர்கள் விளங்குவதால் இவர்களை 'சத்திரமேழி பெரிய நாட்டார்' என்றும் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

***வாணிகம்***

வாணிகம் செய்பவர் வாணியர், என்று அழைக்கப்பட்டனர். உள் நாட்டு வாணிகம் வெளிநாட்டு வாணிகம் சிறப்புப் பெற்று விளங்கியது. இவர்களில் நகரத்தார், மணிகிராமத்தார், வலஞ்சியர், நானா தேசியத் திசையாயிரத்து ஐநூற்றுவர் என்ற பல வணிகக் குழுக்கள் இருந்தன.

***பெண்கள் நிலை***

சோழர்காலப் பெண்கள் உயர்ந்த நிலையில் காணப்பட்டனர். அவர்களுக்கு சொத்துரிமை இருந்தது. சமய இலக்கியங்கள், புராணங்கள் ஆகியவற்றில் தேர்ச்சி பெற்று இருந்தனர். கணவன் இறந்தபின் தன் சொத்தைக் கோயிலுக்கு எழுதிவைப்பதும், கோயில்கள் கட்டி பல நிவந்தங்கள் அளிக்கும் உரிமையும் பெற்று இருந்தனர்.

கணவனை தெய்வமாக நினைத்து வழிபட்டனர். பெண்கள் கணவன் இறந்த பின் சிலர் உடன்கட்டை யேறியது பற்றியும் சிலர் குழந்தைகளுக்காக வேண்டி உயிர்வாழ்ந்ததையும் கல்வெட்டுக்களில் காணலாம்.

www.tntextbooks.in

### *திருமணங்கள்*

திருமணத்தின்போது பெண்ணுக்கு வரதட்சனையும், சீதனமும் நிலமாகவோ, பண்டமாகவோ கொடுக்கப்பட்டன. சொத்தை தனித்து எவரும் விற்க முடியாது. பெரும்பாலும் சாதித் திருமணங்களே நடைபெற்றன. ஒருவன் பல பெண்களை மணக்கும் பழக்கம் இருந்தது. எனினும் ஒருவர் மட்டுமே பட்டத்து அரசியாக இருந்தார்.

நடனமாந்தர் தேவரடியார் என்றும் 'தளிச்சேரி பெண்டுகள்' 'கோயில் பிணாக்கள்' என்றும் அழைக்கப்பட்டனர். கோயிலைத் தூய்மையாக வைத்து இருப்பதும், விழாக்காலங்களில் நடனமாடுவதும் மாலை கட்டுவதும், திருவாசகம் பாடுவதும் தொழிலாகக் கொண்டிருந்தனர். இவர்கள் அரண்மனையில் நடனமாடுவோர், கோயில்களில் நடனமாடுவோர் என இரு பிரிவுகளாகக் காணப்பட்டனர் இம்மாந்தர்கள்.

அடிமை முறையும் சோழர்காலத்தில் நிலவியது. ஆண்களும் பெண்களும் சிலர் அடிமையாக்கப்பட்டனர். நடனமாந்தர்கள் அரண்மனையிலும் கோயில்களிலும் காணப்பட்டனர். இவர்கள் காசுக்கு விற்கப்பட்டனர்.

### *ஆடை அணிகலன்கள்*

மக்கள் பருத்தியாலும் பட்டாலும் ஆடைகள் அணிந்தனர். 'தய்யான்' **(Tailor)** என்பவன் கோயில் சிலைகளுக்குத் துணிகளைத் தைத்து அணிவித்தான். ஆண் பெண் இருபாலரும் புடவை அணிந்தனர். மெல்லிய ஆடையையும் பெண்கள் விரும்பினர். படை வீரர்கள் 'வட்டுடை' அணிந்தனர்.

அணிகலன்களை ஆண்களும், பெண்களும் பெரிதும் விரும்பியணிந்தனர். முத்து, பவழம், மரகதம், மாணிக்கம், மணிமாலை போன்றவற்றை அணிகலன்களில் பயன்படுத்தினர். கழுத்து அணிகளும் கைகாப்புகளும் இடுப்பி அணிகளும் பெண்கள் அணிந்தனர்.



### *உணவுவகை*

செந்நெல் செஞ்சாலி, தூவெள்ளரிசி, பயிறு, வரகு, எள், தினை, மலையரிசி, சோளம், கம்பு, உளுந்கு, அவரை முதலிய தானியங்கள் வழக்கத்தில் இருந்தன. புளிச்சோறு, தயிர்ச்சோறு, நெய்ச்சோறு, கறியமுது முதலியன உணவாக சமைக்கப்பட்டன. இறைச்சி மற்றும் ஏழைகள் கஞ்சியையும் உணவாக உட்கொண்டனர்.

### *பொழுதுபோக்கு*

கோழிச்சண்டை, நீர் விளையாட்டு, பந்தாடுதல், இசைக்கருவி மீட்டல், நடனம், நாடகம் காணுதல், சமயச் சொற்பொழிவுகளைக் கேட்டல் மற்றும் வேட்டையாடுதல், குத்துச்சண்டையிடுதல் போன்றனவற்றை பொழுதுபோக்காகக் கொண்டிருந்தனர்.

### *நம்பிக்கைகளும் பழக்கங்களும்*

கால நேரம் பார்த்தல், ஜாதகம் பார்த்தல், குறி சொல்லல், பேய் பிசாசு, புண்ணியம், பாவம், பல்லி சொல்லுதல், காகம் கரைதல், கனவின் பலன், தும்மல் போன்றவற்றில் நம்பிக்கை கொண்டிருந்தனர்.

குழந்தை பிறந்த பின் மண் பொட்டிடல், ஜாதகம் கணித்தல், பெயர்சூட்டு விழா நடத்துதல் மற்றும் சமய சடங்குகள் போன்ற பழக்கங்களை மரபு வழியில் பின்பற்றி வந்தனர்.

## 7. 4. 6. சமய வளர்ச்சி

சோழர் காலத்தில் சமயத்துறையில் ஒரு புதிய அத்தியாயம் தொடங்கப்பட்டு இந்து சமயம் செழித்தோங்கின. சைவ, வைணவ சமயத் தத்துவக் கருத்துகள் வேரூன்றி கோயிற் பணிகள் உயர்ந்த நிலை அடைந்து சோழர் காலத்தை சமயத்துறையில் ஒரு பொற்கால மாக்கின. சோழ மன்னர்கள் கோயில்களுக்கும் மடங்களுக்கும் நிலம் தானமாக வழங்கி வளர்ச்சியுறச் செய்தனர். 1. தேவதானம் (சிவன் கோயில்) 2. திருவிடையாட்டம் (திருமால் கோயில்) 3. பள்ளிச் சந்தம் (சமண, பௌத்த கோயில்) 4. மடப்புறம் (மடங்கள்), 5. சாலபோகம் (அந்தணர், சிவயோகி) 6. பிரமதேயம் (வேதம் பயின்ற பிராமணர்)

www.tntextbooks.in

*வைணவம்*

தஞ்சை, கங்கை கொண்ட சோழபுரம், தாராசுரம் போன்ற நகரங்களில் பெரிய கோயில்கள் கட்டியதோடு அருகிலுள்ள கிராமங்களிலும் பல சிறிய கோயில்கள் கட்டப்பட்டு சமயப் பணிக்கு மன்னர்கள் பெரிதும் உதவி புரிந்தனர்.

சைவ, வைணவக் கோயில்கள் பல அமைக்கப்பட்டு, பல்வேறு கடவுளர் அவதாரங்களும், தோற்றங்களும், சிலைகளாக வடிவமைக்கப்பட்டு வழிபாடு செய்து வந்தனர். இது தவிர இந்துக் கடவுளாக வணங்கும் பல்வேறு கடவுளர்களின் சிலைகளும் கோயில்களில் அமைத்து சமய வளர்ச்சிக்கு மேலும் வித்திட்டனர்.

சோழ மன்னர்களைப் போன்றே அரசியரும் சமய வளர்ச்சிக்கும்பெரும்ஆதரவு தந்தனர். செம்பியன் மாதேவி, குந்தவை, பஞ்சவன் மகாதேவி, வானவன் மாதேவி, போன்றோர் 'நிவந்தங்கள்' அளித்து சமய வளர்ச்சிக்குப் பாடுபட்டனர்.

மேலும், சோழர்காலத்தில் ஆச்சாரியர்களும்சமயக் கொள்கைகளைத் தத்துவ முறையில் பரப்பினர். இராமானுஜர் விசிஸ்டாத்துவைத் தத்துவக் கொள்கையைப் பரப்பியதோடு தாழ்த்தப்பட்ட மக்களைக் கோயிலுக்குள் சென்று வழிபடச் செய்தார்.

முதலாம் பராந்தகனின் காலத்தவராக நாதமுனிகள் ஆழ்வார்களின் பாசுரங்களை 'நாலாயிரத் திவ்விய பிரபந்தம்' என்ற பெயரில் தொகுத்தளித்தார்.

*சைவம்*

சைவ சமய வளர்ச்சிக்கு நாயன்மார்களின் தொண்டு அரும்பெரும் தொண்டாகும். திருநாரையூர் நம்பியாண்டார் நம்பி பன்னிரு திருமுறைகளையும், சைவ சித்தாந்தத்தை சந்தானாசாரியர்களும் (மெய் கண்டார், அருள் நந்தி, மறைஞான சம்பந்தர், உமாபதி சிவம்) சமய வளர்ச்சிக்கு பெருந்தொண்டு புரிந்தனர்.



நடனக்கலை, நாடகக்கலை, இசைக்கலை மூலமாகவும் சமயக்கருத்துகளை எளிய முறையில் பாமரமக்களுக்குப் புரியும்படி எடுத்துரைத்தனர்.

மேலும், இலங்கைப் படையெடுப்பின் போது இராஜராஜன் அங்கு சிவாலயங்கள் கட்டியதோடு அக்கோயிலுக்கு பல நிலதானங்களும் கொடுத்ததாகக் கல்வெட்டு மூலம் அறியலாம்.

மற்றும், வேதநூல்கள், இராமாயணம், மகாபாரதம் முதலானவை பல வேதபாட சாலைகள் மூலம் கற்பிக்கப்பட்டு சமய வளர்ச்சியை ஊக்குவித்தனர்.

சோழர்கள் கோயில் விழாக்களை கொண்டாடினர். கோயில் விழாக்களின் போது நாடகத்தின் மூலம் சமயத்தைப் பரப்பினர். அங்கே சமய சாத்திரங்களையும் திருமறைகளையும் மக்களுக்கு அவ்வப்போது விரிவுரை செய்து சமயக் கொள்கைகளை எடுத்துக் கூறினர் எனக் கல்வெட்டுக்கள் மூலமாக அறியலாம்.

*சமணமும், பௌத்தமும்*

சோழ மன்னர்கள் பலர் பல நிவந்தங்கள் அளித்து சமண பள்ளிகளையும் பௌத்த மடாலயங்களையும் ஏற்படுத்தி கல்வி மற்றும் சமய வளர்ச்சிக்குப் பாடுபட்டனர்.

சோழர்காலத்துச் சமணநூல் திருத்தக்கதேவரின் 'சீவக சிந்தாமணி' யாகும். 'பள்ளிச் சந்தம்' எனப்படும் சமணக் கோயிலுக்கு வரியில்லா நிலதானம் அளித்துள்ளனர். முதலாம் ராஜராஜன், முதலாம் குலோத்துங்கள் காலங்களில் நிலதானம் அளித்து சமணசமயம் வளர்ச்சிக்கு பெருந்தொண்டாற்றியுள்ளனர்.

நாகப்பட்டினம் புத்தர்களின் முக்கிய பட்டினமாக சோழர் காலத்தில் விளங்கியது. நாகப்பட்டினம் பௌத்த விகாரத்துக்கு அளிக் கப்பட்ட கிராமதானம் பற்றி 'லீடனின்' செப்பேடுகள் கூறுகின்றன. காஞ்சியிலும் பௌத்த சமயம் செல்வாக்கு பெற்றிருந்தது.

இலங்கையில் நடைபெற்ற புத்த மகாநாட்டிற்கு சோழ நாட்டிலிருந்து புத்த பிட்சுகள் சென்றனர். அதன் பொருட்டு சிங்கள

www.tntextbooks.in

மன்னன் பல அன்பளிப்புகளைச் சோழ மன்னனுக்கு அளித்தான் என்று 'தீபவம்சம்' கூறுகின்றது.

### 7. 4. 7. கலை வளர்ச்சி

இன்று உலகம் போற்றும் உன்னத காலமாக சோழர்காலம் விளங்குவதற்கு அக்காலத்திய கட்டடக்கலை, சிற்பக்கலை, படிமக்கலை, இசைக்கலை, நடனக்கலை மற்றும் நாடகக்கலை போன்றவற்றின் வளர்ச்சியே காரணமாகும்.

சோழர்கால கோயில் கட்டடக் கலை :

1. முற்காலச் சோழர் கோயிற் கட்டடக் கலை (கி.பி. 866 முதல் 985 வரை)
2. பிற்காலச் சோழர் கோயிற் கட்டடக்கலை (கி.பி. 1170 முதல் 1270 வரை)

பிற்காலச் சோழர் கோயில்களில் தஞ்சாவூர் பிரகதீஸ்வரர் கோயில், கங்கை கொண்ட சோழாபுரம் கோயில், தாராசுரம் கோயில் திரிபுவணம் கோயில் ஆகியன புகழ்வாழ்ந்தவை இவற்றில் உலகப் புகழ்பெற்ற தஞ்சை பிரகதீஸ்வரர் ஆலயம் முதலாம் ராஜராஜனால் கட்டப்பட்டது. கங்கை கொண்ட சோழபுரம் கோயில் முதலாம் ராஜேந்திரனால் கட்டப்பட்டது.

#### சிற்பக்கலை (Sculpture)

'கல்லும் கவிபாடும்' என்பதற்கேற்ப சோழர்காலச் சிற்பங்கள் இப்புவி மாந்தர்களுக்கு எடுத்துக் கூறும். அத்தகைய சிற்பங்களைக் கீழ்கண்டவாறு பிரிக்கலாம்.

1. தெய்வ திருவடிவங்கள்
2. மனித உருவங்கள் (மன்னர்கள் உருவம்)
3. நாயன்மார்களின் வடிவங்கள்
4. நடனமாந்தர்களின் நடனப் படிமங்கள்
5. தூண் சிற்பங்கள்
6. விலங்குகளின் உருவங்கள்

போன்றனவாகும்.



#### படிமக்கலை (Iconography)

கல்லில் சிலை வடித்ததைப் போன்று உலோகங்களினால் வார்ப்புச் சிலைகள் உண்டாக்கப்பட்டு வழிபாடு செய்யப்பட்டது. அவை, செம்பு, வெண்கலம், வெள்ளி போன்றவற்றால் வடிவமைக்கப்பட்டன.

#### ஓவியக்கலை (Painting)

சோழர் காலத்தில் தஞ்சைக் கோயிலின் கருவறையின் சுவற்றில் காணப்படும் ஓவியங்கள் மிகச் சிறப்புடையதாகும். அவற்றில் தடுத்தாட் கொண்ட சுந்தரர் வரலாறும், சிவபெருமான் புலித்தோல் மீது அமர்ந்துள்ள கைலாய காட்சியும் சுந்தரர் வெள்ளை யானை மீது அமர்ந்து செல்லும் காட்சியும், சேரமான் பெருமாள் நாயனார் குதிரை மீது அமர்ந்து செல்லும் காட்சியும் மிகவும் அற்புதமானவையாக இருக்கின்றன.

#### நடனக்கலை (Dance)

சிதம்பரம், தஞ்சை, காஞ்சி போன்ற கோயில்களில் காணப்படும் நடனமாந்தர்களின் சிற்பங்களும், பெரியபுராணம், கம்பராமாயணம் காட்டும் நடனக்கலையும் சோழர்கால சிறந்த நடனக்கலைக்குச் சான்றாகும்.

கோயிலில் நடனம் பயிற்றுவித்தவன் 'நிருத்தப் பேரரையன்' என்று அழைக்கப்பட்டார். நாட்டியக் கலையில் சிறந்த பெண்களுக்குத் 'தலைக்கோலி' என்ற பட்டம் வழங்கப்பட்டது.

#### நாடகக்கலை (Drama)

ஸ்ரீ இராஜ ராஜச்சுரம், ஸ்ரீ இராஜ ராஜ விஜயம் போன்ற நாடகங்கள் நடைபெற்றன என்பதை தஞ்சையில் காணப்படும் கல்வெட்டுக்களின் மூலம் அறியலாம். இவை இராஜ ராஜனின் படை யெடுப்பு மற்றும் சாதனைகளை விளக்குவதாக அமைந்திருந்தன.

#### இசைக்கலை (Music)

நாயன்மார்கள் ஆழ்வார்கள் ஆகியோரின் பாடல்களை இசையுடன் பாட ஓதுவார்கள் இருந்தனர். யாழ் வாசித்துப்பாடும்

www.tntextbooks.in

பாணர்களும் இசைக்கேற்றபடி நடனமாகும் நடனமாந்தர்களும் இருந்தனர். மன்னர்கள் இசைக்கு முக்கியத்துவம் கொடுத்து வளர்த்தனர். கோயில்களில் காணப்படும் சிற்பங்களில் பலவகைப்பட்ட இசைக்கருவிகளைக் காணலாம். மேலும் நடராஜர் சிலையின் கையில் உடுக்கை இருப்பதையும் நடனமாந்தர்களின் நடனத்திற்கேற்ப பலவகைப்பட்ட தாளங்கள், மேளங்கள், இசைக்கருவிகள் யாவும் இசை வல்லுநர்களிடம் இருப்பதை கோயில் சிற்பங்களில் காணலாம்.

**கல்வி (Education)**

முதல் பராந்தகன் வேத பாட சாலை நடத்த மான்யம் அளித்துள்ள செய்தி காமப்புல்லூர் கல்வெட்டு பகர்கின்றது.

முதல் இராஜ ராஜன் காலத்தில் வேதங்களையும் இலக்கணங் களையும் கற்பிக்கும் ஆசிரியரின் தகுதிகளை அணியூரில் காணப்படும் கல்வெட்டு குறிப்பிடுகிறது.

முதல் இராஜேந்திரனின் எண்ணூர்க் கல்வெட்டில் அவ்வூரிலிருந்த கல்லூரியைப் பற்றியும் அங்கு பணிபுரிந்த ஆசிரியர்களின் ஊதியம், மாணவர்கள் பயின்ற பாடங்களைப் பற்றியும் கூறுகின்றது.

வீரராஜேந்திரனின் திருமுக்கூடல் கல்வெட்டில் கோயில் நிர்வாகத்தின் கீழ் கல்லூரி, மருத்துவமனை இருந்ததைக் குறிப்பிடுகின்றது.

விக்கிரம சோழனின் திருவிடைமருதூர்க்கல்வெட்டு மருத்துவம் பயிலும் மாணவர்கள் மடத்தில் உணவு பெற்றதையும், திருவொற்றியூர் கல்வெட்டில் ஒரு இலக்கண பாடசாலை அமைத்த செய்தியும், திருவிடைக்கழியிலுள்ள கல்வெட்டு, மலையாளத் திலிருந்து வந்து வேதாந்தம் பயிலும் மாணவர்களுக்கு மடத்தில் உணவு அளித்ததையும் கூறுகின்றன.

இவையன்றி இராமாயணம், மகாபாரதம், புராணங்கள் முதலியவற்றில் சொற்பொழிவு நடைபெற்ற செய்தியும் கல்வெட்டு கூறுகின்றது.



திருபுவனம், எண்ணாயிரம், திருவொற்றியூர், வேப்பூர் முதலிய இடங்களில் தமிழ் மொழிக்கல்விச் சாலைகள் இருந்தாக அறிகிறோம்.

**இலக்கியம்**

சோழர்காலத்தில் ஐம்பெரும் காப்பியங்களான சிலப்பதிகாரம், மணிமேகலை, வளையாபதி, குண்டலகேசி, சீவகசிந்தாமணி போன்றவைகளில் முதல் இரண்டு தவிர மற்ற மூன்று காப்பியங்களும் இலக்கிய வளர்ச்சிக்குச் சான்றுகளாக உள்ளன.

ஐஞ்சிறு காப்பியங்களான உதயன குமார காவியம், நாக குமார காவியம், யசோதா காவியம், சூளாமணி மற்றும் நீலகேசி போன்ற வற்றோடு சமண பௌத்த காப்பியங்களும் குறிப்பிடத் தக்கவையாகும்.

இவை தவிர இலக்கண நூல்களாகிய நன்னூல், வீரசோழியம் தண்டியலங்காரம் மற்றும் நிகண்டுகள் யாவும் சோழர்கால இலக்கிய வளர்ச்சிக்கு எடுத்துக்காட்டாக விளங்குகிறது.

**புகழ்வாய்ந்த புலவர்களும் படைப்புகளும்**

| | | |
|---|---|---|
| ஔவையார் | - | ஆத்திச்சூடி, கொன்றை வேந்தன், நல்வழி, ஞானக்குறள் |
| சேக்கிழார் | - | பெரியபுராணம் அல்லது திருத்தொண்டர் புராணம் |
| கம்பர் | - | கம்பராமாயணம், ஏரெழுபது சடகோபரந்தாதி, சரஸ்வதி அந்தாதி, இலக்குமி அந்தாதி |
| புகழேந்திப்புலவர் | - | நாளோபாக்கியானம் |
| ஒட்டக்கூத்தர் | - | மூவருலா, பிள்ளைத் தமிழ் (குலோத்துங்க சோழன்) |
| ஜெயங்கொண்டார் | - | கலிங்கத்துப்பரணி |
| கச்சியப்ப சிவாச்சியார் | - | கந்த புராணம் |

www.tntextbooks.in

போன்ற நூற்படைப்புகள் சோழர்கால இலக்கியத்திற்கு பெருமை சேர்ப்பவையாகும்.

நம்பியாண்டார் நம்பி என்பவர் சைவத் திருமுறைகள் பன்னிரண்டும் தொகுத்ததுடன், மேலும் பத்து நூல்களையும் தாமே இயற்றியுள்ளார்.

மேலும் சைவ சமயம் சாத்திரங்கள் பதிநான்கு நூல்களும் சேக்கிழார் காலத்தைத் தொடர்ந்து இயற்றப்பட்டு உள்ளன. இவையாவும் சோழர்கால இலக்கிய வளர்ச்சிக்கு சான்றுகளாக விளங்குகின்றன.

### *7. 4. 8. இந்திய பண்பாட்டிற்கு சோழர்களின் கொடை*

1. மன்னருக்கு வாரிசு இல்லாத போது அரச குடும்பம் சாராத ஒருவர் மன்னராக தேர்ந்தெடுக்கப்பட்ட முறை சோழர்காலத்தில் ‘குடியாட்சி’ முறை மலர்ந்ததற்குச் சிறந்த எடுத்துக் காட்டாகும்.
2. கிராம சபைகள் கொண்டுவரும் தீர்மானங்களைத் தான் மத்திய அரசு செயல்படுத்த வேண்டும் என்ற நிலை வலிமையான ஒரு சிறந்த ஜனநாயக ஆட்சிக்கு அடிகோலியது எனலாம்.
3. கிராம சபை உறுப்பினர்கள் ‘குடவோலை’ முறையில் தேர்ந்தெடுக்கப்பட்ட தேர்தல் முறையானது இந்திய பண்பாட்டிற்கு சோழர்கள் நல்கிய சிறந்த கொடையெனலாம்.
4. சோழர்காலத்தில் மக்களின் நலன் கருதி ஏற்படுத்தப்பட்ட பல்வேறு வாரியங்கள் (துறைகள்) இன்றுள்ள ஜனநாயக ஆட்சி முறைக்கு வழங்கப்பட்ட கொடை ஆகும்.
5. சோழர்காலத்தில் ஆன்மிகத்தின் மூலம் மக்களின் வாழ்க்கையை நெறிப்படுத்த நாயன்மார்களும் ஆழ்வார்களும் மற்றும் ஆச்சாரியார்களும் தொண்டு புரிந்து இந்தியப் பண்பாட்டு வளர்ச்சிக்கு பெரிதும் துணை புரிந்தனர்.
6. சோழர்கால கோயில் கட்டடக்கலை, சிற்பக்கலை, படிமக்கலை, இசைக்கலை, நடனக்கலை மற்றும் நாடகக்கலை போன்ற



வற்றின் சிறப்பான அம்சங்கள் யாவும் இந்தியப் பண்பாட்டிற்குச் சிறந்த கொடைகளாகும்.

7. ஐம்பெரு மற்றும் ஐஞ்சிறு காப்பியங்களும், இலக்கண நூல்கள், நிகண்டுகள் போன்றவை தமிழ் இலக்கியப் படைப்பிற்கும் இந்தியப் பண்பாட்டிற்கும் சிறந்த கொடைகளாக விளங்கு கின்றன.
8. நாதமுனிகளால் தொகுத்தளித்த ‘நாலாயிரத் திவ்வியப்பிரபந்தம்’ சோழர்காலத்தில் வழங்கப்பட்ட சிறந்த கொடையாகும்.
9. நம்பியாண்டார் நம்பி என்பவர் பன்னிரண்டு திருமுறைகளைத் தொகுத்ததோடு தாமே பத்து நூல்களை இயற்றி இந்து சமயத் திற்கும் இலக்கிய வளர்ச்சிக்கும் பெரிதும் தொண்டாற்றியுள்ளார்.
10. சைவ சித்தாந்த சாத்திரங்கள் பதினான்கை வழங்கியதும், இந்தியப் பண்பாட்டைப் பிரதிபலிக்கும் வால்மீகி ராமாயணத்தை தமிழில் கவிச்சக்கரவர்த்தி கம்பர் இயற்றியதும் சோழர்கள் இந்தியப் பண்பாட்டிற்குச் வழங்கிய கொடையாகும்.
11. சோழர்காலத்தில் வேதக்கல்வி மற்றும் மருத்துவக்கல்வி போன்றவை அனைத்தும் இந்தியப் பண்பாட்டிற்கு மெருகூட்டு வனவாக அமைந்துள்ளன.

## 7. 4. பயிற்சி வினாக்கள்

### *அ. ஓரிரு வரிகளில் விடையளி*

1. பிற்காலச் சோழர்களின் ஆட்சிக்காலம் யாது?
2. சோழ மன்னர்கள் புனைந்து கொண்ட ‘பட்டங்கள்’ யாவை?
3. ‘சதுர்வேதி மங்கள சபை’ குறிப்பி வரைக
4. ‘குடவோலை’ முறை என்றால் என்ன?
5. ‘சித்திரமேழி பெரிய நட்டார்’ சிறு குறிப்பு எழுதுக.
6. ‘தேவரடியார்’ என்போர் யாவர்?

www.tntextbooks.in

7. பன்னிரு திருமுறைகளைத் தொகுத்தளித்தவர் யார்?
8. சைவ சித்தாந்த நூல்களை எழுதியவர்கள் யார்?
9. ‘படிமக்கலை’ **(Iconography)** குறிப்பு எழுதுக.
10. ‘ஐம்பெரும் காப்பியங்கள்’ யாவை?
11. ‘ஐஞ்சிறு காப்பியங்கள்’ யாவை?
12. சோழர்கால இலக்கண நூல்கள் யாவை,
13. நாலாயிரத் திவ்வியப் பிரபந்தத்தைத் தொகுத்தளித்தவர் யார்?

### *ஆ. பத்து வரிகளுக்கு விடையளி*

1. பிற்காலச் சோழர் கால பண்பாட்டைக் குறிக்கும் முக்கிய சான்றுகள் யாவை?
2. பிற்காலச் சோழ அரசர்களில் முக்கியமானவர்கள் யாவர்?
3. சோழ மன்னனின் செயலகத்தில் பணிபுரிந்தவர்கள் யாவர்?
4. சோழப் பேரரசின் உட்பிரிவுகள் யாவை?
5. சோழர்கால ‘கிராம ஆட்சி’ முறையின் நான்கு பிரிவுகள் யாவை?
6. சோழர்கால ‘தேர்தல் முறை’ யாது?
7. சோழர்கால ‘வாரியங்களும்’ அதன் கடமைகளும் யாவை?
8. சோழர்காலப் ‘பெண்களின் நிலை’ யாது?
9. சோழர்காலப் ‘மடங்கள்’ எவ்வாறு செயல்பட்டன?
10. சோழர்காலச் ‘சிற்பங்கள்’ எவ்வாறு வகைப்படுத்தலாம்?
11. சோழர்கால ‘ஆடை அணிகலன்கள்’ யாவை?
12. சோழர்கால ‘கல்வி நிலை’ எவ்வாறு இருந்தது?
13. சோழர்காலச் ‘சிற்பக்கலையை’ எத்தனை வகைகளாகப் பிரிக்கலாம்? அவை யாவை?
14. சோழர்கால ‘இசைக்கலையைப்’ பற்றி விளக்கு.



### இ. ஒரு பக்க அளவில் விடை எழுதுக

1. சோழர்கால அரசியல் நிலையை விளக்குக.
2. சோழர்கால சமூகநிலை எவ்வாறு இருந்தது? விளக்குக.
3. சோழர்கால சமயவளர்ச்சி பற்றி விளக்கி எழுதுக.
4. சோழர்காலத்தில் ‘சமணமும்,’ ‘பௌத்தமும்’ எவ்வாறு செயல்பட்டன?
5. சோழர்கால, கல்வி மற்றும் இலக்கிய வளர்ச்சி குறித்து விளக்கி எழுதுக.

### ஈ. நான்கு பக்க அளவில் விடையளி

1. சோழர்காலப் பண்பாடு குறித்து ஒரு கட்டுரை வரைக.
2. சோழர்கால, கலை மற்றும் இலக்கிய வளர்ச்சி குறித்து ஒரு கட்டுரை வரைக.
3. இந்தியப் பண்பாட்டிற்கு சோழர்களின் கொடை குறித்து ஒரு கட்டுரை எழுதுக.

www.tntextbooks.in

# 7. 5. பிற்காலப் பாண்டியர் பண்பாடு

அரச குடும்ப மரபில் மிகப் பழமை வாய்ந்த சிறப்பு மிக்கவர்களுள் பாண்டியர்களும் ஆவர். இவர்கள் மதுரையை தலைநகராகக் கொண்டு தமிழகத்தின் தென்பகுதியை (மதுரை, இராமநாதபுரம், திருநெல்வேலி, கன்னியாகுமரி மாவட்டங்கள் அடங்கியது) ஆட்சி செய்தனர்.

பாண்டிய அரசு பதவி வாரிசு உடையதாகவே இருந்தது. மகன் இல்லாதபோது மன்னரின் சகோதரன் பதவிக்கு வந்ததுண்டு.

பாண்டியர்கள் பல்வேறு துறைகளில் குறிப்பிடத்தக்க சிறப்பு களைப் பெற்று நல்ல நேர்த்தியான பண்பாட்டினை உருவாக்கினர்.

பிற்காலப் பாண்டியர் காலத்தில் குடியிருப்புகள் அதிகமாயின. வாணிகம் பெருகியது. தரிசு நிலங்கள் விளை நிலமாக்கப்பட்டன. நீர் நிலைகளைப் பெருக்கி மக்கள் மகிழ்வுடன் எல்லா நலமும் பெற்று வாழ்ந்தனர். இதனால் கலைப் பணிகளில் புதிய பரிணாம வளர்ச்சி ஏற்பட்டது.

### 7. 5. 1. காலம்

பிற்காலப் பாண்டியர்கள் கி.பி. 1179 முதல் கி.பி. 1311 வரை ஆட்சி புரிந்தனர் என்று குறிப்பிடப்படுகின்றது. சோழருக்குத் தலைவணங்கி தலைநகர் மதுரையைத் துறந்த பின்னர் சடையவர்மன் குலசேகரன் (கி.பி. 1190-1216) காலத்தில் பாண்டியர் சோழர்களை அடக்கி ஆட்சி செய்தனர். மாறவர்மன் சுந்தர பாண்டியன் காலத்தில் முற்றிலும் சோழர்கள் தோற்கடிக்கப்பட்டனர்.

### 7. 5. 2. சான்றுகள்

பாண்டியர்களின் ஆட்சியைப் பற்றி கல்வெட்டுக்கள், செப்புப் பட்டயங்கள் தல புராணத்தில் அடங்கியுள்ள வரலாற்றுக் குறிப்புகள், அக்கால இலக்கிய நூல்கள், சமய நூல்கள், கோயில் கட்டடங்கள்



காசியல் (Numismatics) மற்றும் மார்க்கோபோலோவின் குறிப்புகள், சீனர்களின் குறிப்புகள் மற்றும் வாசுப், அமிர்குசுரு, இபின்பட்டுடா, பரணி போன்றோரின் குறிப்புகள் மூலம் நாம் அறிகிறோம்.

### 7. 5. 3. முக்கிய அரசர்கள்

1. சடையவர்மன் குலசேகரன் (கி.பி. 1190-1216)
2. முதலாம் மாறவர்மன் சுந்தரபாண்டியன் (கி.பி. 1216 - 1238)
3. இரண்டாம் மாறவர்மன் சுந்தரபாண்டியன் (கி.பி. 1239 - 1251)
4. சடையவர்மன் சுந்தரபாண்டியன் (கி.பி. 1251 - 1284)
5. முதலாம் மாறவர்மன் குலசேகரன் பாண்டியன் (கி.பி. 1268 - 1311)

போன்றோர் பிற்காலப் பாண்டிய மன்னர்களுள் தலைசிறந்து விளங்கினர்.

### 7. 5. 4. அரசியல் நிலை

மதுரையைத் தலைநகராகக் கொண்டு பிற்காலப் பாண்டியர் ஆட்சி புரிந்தனர். பாண்டிய நாடு நிர்வாக வசதிக்கென பல வளநாடுகளாகவும் (மண்டலங்கள்), வளநாடுகள் கூற்றங்களாகவும் (கோட்டம்), கூற்றங்கள் கிராமங்களாகவும் பிரிக்கப்பட்டிருந்தன.

வளநாடுகளை அரச குடும்பத்தினர் நிருவகித்து வந்தனர். மத்திய மாநில மற்றும் உள்ளாட்சி அமைப்புகளுக்கிடையே நல்ல தொடர்பு இருந்து வந்தது. அதனால் ஆட்சியின் நிருவாகம் வெற்றிகரமாகவும் வலிமையுடனும் செயல்பட்டு வந்தது.

நாட்டின் நிருவாகத்திற்கு மன்னரே முழுப் பொறுப்பு ஏற்றார். அதிகாரம் அனைத்தும் அவரிடமே இருந்தது. அரசனுக்கு ஆலோசனை வழங்க ஒரு குழு அமைக்கப்பட்டிருந்தது. அமைச்சர்கள் கல்வி அறிஞர்களாக மட்டுமின்றி தெய்வபக்தி நிரம்பியராகவும் நாட்டு நலனில் அக்கறை கொண்டவராகவும் விளங்கினர்.

www.tntextbooks.in

மன்னனுக்குத் துணையாக பல அதிகாரிகள் இருந்தனர். அவர்களுக்கு 'அகப்பிரிவார முதலிகள்' என்று பெயர். அவ்வதிகாரிகள் கொங்கரையார், காலிங்கராயன், மழவரையர், முனையகரயர், விழப்பரையர் என்று சிறப்புப் பெயர்களைப் பெற்றிருந்தனர் மற்றும்,

1. நாடுவகை செய்வோர் (நிலம் தரம் பிரித்து வரிவிதித்தல்)
2. திருமந்திர ஓலை (அரசின் ஆணைகளை எழுதுபவர்)
3. திருமந்திர ஓலைநாயகம் (ஆணைகளை கையொப்பமிட்டு வெளியிடுபவர்)
4. புரவுவரித் திணைக்கலம் (வருவாய்த் துறை உயர்குழு)
5. மகாதண்ட நாயகன் (படையின் உயர் தலைவன்)

போன்ற உயர் அதிகாரிகளும் பாண்டிய மன்னர்களின் ஆட்சிக்கு உறுதுணையாக இருந்தனர்.

***ஊராட்சி நிருவாகம்***

பாண்டியர்களின் ஆட்சியில் உள்ளாட்சி அமைப்புகள் வலிமை பெற்று திகழ்ந்தன. இதில் மூன்று வகை சபைகள் செயல்பட்டன.

1. பிராமணர்கள் இருந்த பிரமதேய சபை
2. பிரமதேயம் அல்லாத ஊர்களிலிருந்த சபை
3. வணிகர் வாழ்ந்து வந்த நகரசபை

மேற்காணும் சபைகளைப் பற்றி மானூர் கல்வெட்டில் தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளது. சபை உறுப்பினர்களை 'குடவோலை' முறையில் தேர்ந்தெடுத்து, தகுதிக்கேற்ப பல்வேறு வாரியங்களில் செயல்படச் செய்தனர்.

***படைவலிமை***

பாண்டியர்களின் போர்ப் படையில் தேர்ப் படை, யானைப் படை, குதிரைப் படை, காலாட் படை மற்றும் கப்பற் படையும்



இருந்ததாக அறிகிறோம். படைகளில் வலிமை மிக்க ஒரு பெரும் படை **(Regiment)** ஒன்று இருந்தது. இதில் எட்டு சிறிய படைகளும் இருந்தன. மகா சாமந்தன், மகா தண்ட நாயகன் என்போரும் படையின் உயர் தலைவர்களாகவும், சேனாதிபதி சாமந்தன், தண்டநாயகன் போன்றோர் படைகளின் தலைவர்களாகவும் இருந்தனர்.

கல்வெட்டுக்களின் 'முற்பேர்படையர்' 'வளவன் உள்ளிட்ட பெரும்படையர்,' 'வலங்கைமா சேனையர்' என்ற படைப்பிரிவுகள் குறிக்கப்பட்டுள்ளன.

***வருவாய்த்துறை***

வரிவிதிப்புத் துறையானது புரவுவரி திணைக்களம், இறைபட்டம், கடமை, இடைவரி, இனவரி, நிலவரி, துறைமுகவரி, தொழில்வாரி மற்றும் வணிகவரி போன்ற பல்வேறு வரிகள் வசூலிக்கப்பட்டு அரசுக் கருவூலத்தில் சேர்க்கப்பட்டன. நிலதானம் செய்பவர்களுக்கு நிலவரி வசூலிக்கப்படவில்லை.

***நீதித்துறை***

பாண்டியரின் ஆட்சிக்காலத்தில் முறையான நீதி நிர்வாகத் துறை இருந்ததாகத் தெரியவில்லை. இருப்பினும் ஊர் மக்களின் பிரச்சினைகளை 'ஊர்ச்சபை' தீர்த்து வைத்தது. நீதி வழங்கும் 'நியாயத்தார்' வராத நிலையில் வழக்குகள் அரசவைக்கு எடுத்துச் செல்லப்பட்டது. அரசனும் தகுந்த தண்டனைகள் வழங்கி நாட்டில் நீதியையும் அமைதியையும் நிலை நாட்டினான்.

### 7. 5. 5. *சமுதாய நிலை*

பாண்டியர் காலச் சமூதாயத்தில், அந்தணர், வணிகர், வேளாளர், மறவர், மருத்துவர் மற்றும் சோதிடர், என்ற பல பிரிவினர் வாழ்ந்து வந்தனர்.

பொதுவாக இவர்களை பிராமணர்கள், வேளாளர்கள், ஆயர்கள், கம்மாளர், நகரத்தார் வலங்கை - இடங்கை வகுப்பினர் மற்றும் 'பாஞ்சாலர்கள்' என அழைக்கப்பட்டு வந்தனர்.

www.tntextbooks.in

சமூகநிலைப் பற்றி மார்க்கோபோலோ மற்றும் வாசுப் ஆகியோரின் குறிப்புகள் :

1. பாண்டிய நாட்டில் வாழும் மக்கள் பசுக்களை போற்றி வணங்குவர்; அதைக் கொல்ல மாட்டார்கள்.

2. இல்லத்தை (வீடு) சாணம் போட்டு மெழுகி மிகவும் தூய்மையாக வைத்து இருந்தனர்.

3. உயர்வு - தாழ்வு இன்றி அனைவரும் தரையில் அமர்ந்தனர். "மண்ணில் பிறந்து மண்ணிலேயே மடிகிறோம் அதனால் மண்ணை மதித்து வாழ வேண்டும்" என்பர்.

4. இவர்களின் ஆடை ஆபரணங்கள் மிகவும் எளியதாக இருந்தது. ஆயினும், மன்னன் - அரசி ஆகியோரின் ஆடை - ஆபரணங்கள் விலை உயர்ந்ததாகக் காணப்பட்டன.

5. கூழானாலும் குளித்துக் குடிப்பர். வலக்கையில் மட்டும் உணவுண்பர். நீர் அருந்தும்போது குவளையை உதட்டில் வைத்து குடிக்காமல் மேலே உயர்த்தி குடிப்பர்.

6. தெருவில் படுத்து உறங்குவர். மது அருந்துவது தீமையெனவும், பாவமெனவும் கருதினர். மது அருந்துபவர் கூறும் சாட்சியை ஏற்றுக் கொள்வதில்லை.

7. பெண்கள் உயர்ந்த நிலையில் இருந்தனர். ஆண்களுக்கு நிகராகவே இல்லற வாழ்க்கையில் ஈடுபட்டிருந்தனர். பாய் முடைதல், நாற்று நடுதல், தயிர், மோர், வெண்ணெய், மீன் விற்றல் போன்ற தொழில்களில் ஈடுபட்டனர்.

8. பெண்கள் உயர்கல்வி கற்றுப் பாடல்கள் இயற்றினர். அரச குடும்பப் பெண்கள் சமயத்திற்கு முக்கியத்துவம் தந்து கோயில்களுக்கு நிலதானம் செய்தனர்.

9. மார்கழி மாதத்தில் கன்னிப் பெண்கன் நோன்பு இருந்தனர். கோலமிட்டு ஓவியத்தை வரைந்தனர். திருமணம் பெற்றோரின் விருப்பப்படியே நடந்தது. பெண்வீட்டாரே திருமணச் செலவை ஏற்றனர். மேலும், பெண்களுக்குச் சீதனமும் கொடுக்கப்பட்டது.



10. பெண்களில் தேவரடியார் என்ற வகுப்பினர் கோயில்களில் பணிபுரிந்தும் நடனமாடியும் வந்தனர். வசதி படைத்த பெண்கள் ஆண்டவனுக்கு அடிமையாகி சமயத்தொண்டு புரிந்த வந்தனர்.

11. கணவன்மார் இறந்ததும் மனைவியர் உடன்கட்டை ஏறும் பழக்கத்தையும் சமுதாயம் அவர்களை உயர்வாகப் போற்றுவதையும் காணமுடிகிறது.

12. பதின்மூன்று வயதானதும் ஆண்மகன் பொருளீட்டும் பொருட்டு வெளியில் அனுப்பப்பட்டான். அவனே தனக்கு உணவு தேட வேண்டும். தாய்க்கும் உணவளித்தான். ஒரு நாளும் தந்தையின் உழைப்பில் வாழவில்லை.

***முத்துக்குளித்தல்***

முத்துக்குளித்தல் பாண்டிய நாட்டின் ஒரு முக்கியமான தனிச்சிறப்பு வாய்ந்த பணியாகும். முத்துக்குளிக்கும்போது தங்கள் உயிருக்கு ஆபத்தில்லாமல் காக்கின்ற மந்திரவாதிகளுக்கு இருபதில் ஒரு பங்கு அளித்தனர் என்பது மார்க்கோபோலோவின் கூற்று.

### 7. 5. 6. சமய நிலை

இடைக்காலப் பாண்டியர் காலத்தில் சமயப் பூசல் இருந்து வந்தது. ஆனால், பிற்காலப் பாண்டியர் காலத்தில் சமயப்பூசல் இல்லை. பாண்டியர்கள் இந்து சமயத்தை முழுக்க முழுக்க ஆதரித்தனர். எனவே, சைவமும் வைணவமும் சிறந்து விளங்கியது.

களப்பிரர் காலத்தில் இந்துசமயம் சீர் குலைக்கப்பட்டது. சமணமும் பௌத்தமும் செழித்தோங்கின. சமணர்களின் ஆதிக்கம் தலை தூக்கியபோது மீண்டும் மதுரையில் பாண்டியர்களும், தொண்டை மண்டலத்தின் பல்லவர்களும் எழுச்சியுற்று இந்து சமயத்தை போற்ற ஆரம்பித்தனர். இதனால் கலகம் பிறந்தது. அமைதி அழிந்தது. கூன் பாண்டியன் காலத்தில் பல்லாயிரக் கணக்கான சமணர்களைத் துன்புறுத்தியதாகவும் கழுவிலேற்றிக் கொன்றதாகவும் வரலாறு கூறுகிறது.

குப்தர்களைப் போல பாண்டியர்களும்அசுவமேத யாகம், வாஜபேய யாகம் போன்ற யாகங்களையும்; ஹிரண்ய கர்ப்பம்,

www.tntextbooks.in

துலாபாரம் போன்ற தானங்களையும் செய்து அக்கிரஹாரம் பல ஏற்படுத்தி இந்து சமயத்திற்கு மீண்டும் புத்துயிர் ஊட்டினர் என பாண்டியரின் செப்பேடுகள், கல்வெட்டுக்கள் மூலம் அறியலாம்.

### சைவம் (Saivism)

பாண்டிய நாட்டில் சைவ சமயம் வளர்ந்ததற்கு மன்னர்கள் செய்த தொண்டு குறிப்பிடத்தக்கதாகும். பாண்டிய மன்னன் அரிகேசரி என்ற நின்ற சீர் நெடுமாறன் என்பவன் சமண சமயத்தைத் தழுவி இருந்தான். சைவ சமயக் குரவர் திருஞான சம்பந்தரின் முயற்சியால் அம்மன்னன் சைவ சமயத்துக்கு மாறி, பெரும் ஆதரவு வழங்கினான். அவரது மனைவி மங்கையர்க்கரசி, அமைச்சர் குலச்சிரையாரும் சைவ சமயத்திற்குப் பாடுபட்டனர்.

பாண்டிய மன்னர்கள் பலர் பல நிவந்தங்கள் வழங்கி சைவக்கோயில்களின் வளர்ச்சிக்கு பெருந்தொண்டு புரிந்துள்ளனர். வரகுண பாண்டியன் திருச்செந்தூர் செந்தில் ஆண்டவன் கோயிலுக்கும், முதலாம் சடையவர்மன் சுந்தர பாண்டியன் சிதம்பரம் கோயிலுக்கும், குலசேகரபாண்டியன் மதுரைக் கோயிலுக்கும் பல தொண்டுகள் புரிந்தனர்.

கோயில்களில் விழாக்காலங்களில் பக்திப்பாடல்களும் (மார்கழி மாதம்) நடனங்களும் நடத்தப்பட்டன. நாயன்மார்களின் உருவச் சிலைகள் கோயில்களில் வைக்கப்பட்டு ஒவ்வொரு நாயன்மார் பிறந்தநாள் நட்சத்திரத்திலும் விழாக் கொண்டாடப்பட்டன. மன்னர்கள் பிறந்த நாள்களிலும் விழாக்கள் கொண்டாடப்பட்டன.

ஆகமங்களை அடிப்படையாகக் கொண்டு உருவான சிவஞான போதக் கருத்துகள் பாண்டியர் காலத்தில் பரப்பப்பட்டன. அதற்கென நாடு முழுதும் மடங்கள் பல ஏற்படுத்தி சமயத்தைப் பரப்பினர் என்பதை இரண்டாம் மாறவர்மன் சுந்தரப்பாண்டியனின் கல்வெட்டு மூலம் அறிகிறோம்.

### வைணவம் (Vaishnavism)

ஆழ்வார்கள் காலத்தில் வைணவ சமயம் சிறப்பாக வளர்ச்சி பெற்றது. ஆழ்வார்களின் தெய்விகப் பாடல்களின் தொகுப்பு



'நாலாயிரத் திவ்வியப்பிரபந்தமாகும்.' இதை தொகுத்தளித் நாதமுனிகள் ஆவார். பாண்டிய நாட்டு ஆழ்வார்கள், நம்மாழ்வார், மதுரகவியாழ்வார், பெரியாழ்வார், ஆண்டாள் ஆகிய நால்வரும் வைணவ சமயத்தை வளர்த்தனர்.

சைவக் கோயில்களுக்கு நிவந்தங்கள் அளித்தது போன்றே பாண்டியர்கள் வைணவக் கோயில்களுக்கும் நிவந்தங்கள் வழங்கி வைணவ சமயத்தை வளர்த்தனர். மேலும் வைணவ மடங்கள் மூலமாகவும் வைணவ சமயத்தைப் போற்றி வளர்த்தனர்.

### சமண, பௌத்த சமயங்கள்

பாண்டியரின் இடைக்காலத்தில் சமண மதம் மதுரைப் பகுதிகளில் மிகவும் செல்வாக்குப் பெற்று திகழ்ந்திருந்ததை பெரியபுராணம் கூறுகிறது. பல்வேறு இடங்களில் சமணர் இருக்கைகள் இருந்ததற்கான ஆதாரங்கள் மண்டபங்களும் (மடங்கள்) கல்வெட்டுக்களும் காணப்படுகின்றன.

பிற்காலப் பாண்டியர் காலத்தில் 'சமணர் மலை' முக்கிய இடமாகத் திகழ்ந்தது. 'சிரவண பெல்கோலா' விலுள்ள (மைசூருக்கு அருகில்) மூலச் சங்கத்தைச் சார்ந்த 'பாலசந்திர தேவர்' மற்றும் 'ஆரிய தேவர்' போன்றோர் சமணர் மலையில் 'சல்லேகணம்' (உண்ணா நோன்பு பூண்டு வடக்கிருத்தல்) முறைப்படி உயிர் துறந்தனர்.

மற்றும், வஞ்சி, காஞ்சி, பூம்புகார் போன்ற இடங்களில் பௌத்த இருப்பிடங்கள் இருந்ததற்கான சான்றுகள் உள்ளன. 'தர்ம கீர்த்தி' என்பவர் பிற்காலப் பாண்டியர் காலத்தைச் சேர்ந்தவர். இவர் இலங்கையில் கூட்டப்பட்ட பௌத்த மாநாட்டில் முக்கிய பங்கேற்றவர் ஆவார்.

இவ்வாறு பாண்டியர் காலத்தில் இந்து சமயங்களான சைவமும் வைணமும் நன்கு வளர்ச்சி பெற்றது. பாண்டிய மன்னர்களும் அரசியரும் சமய வளர்ச்சிக்குப் பெரிதும் துணை நின்றனர். சமண சமயம், பௌத்த சமயம் ஓரளவுக்கே காணப்பட்டது எனலாம்.

www.tntextbooks.in

## 7. 5. 7. கலை வளர்ச்சி

### *கட்டிடக்கலை*

பிற்காலப் பாண்டியர் காலத்தில் கோயில் கட்டடக்கலையின் விரிவாக்கும் புதிய அமைப்பு முறைகள் ஆரம்பமானது. வெளிப்புறத்தில் உயர்ந்த அளவிலான கோபுரங்கள், கருவறை, அர்த்த மண்டபம், மகாமண்டபம் சுற்றுப்புறப் பிரகாரங்கள், பல தூண் களைக் கொண்ட மண்டபங்கள் போன்றன எழுப்பப் பட்டுள்ளன.

பிற்காலப் பாண்டியர் பத்தாம் நூற்றாண்டு முதற்கொண்டு நுழைவு வாயிலில் பெரும் கோபுரங்களை கட்டி, கட்டடக் கலையில் மாற்றத்தை ஏற்படுத்தினர். சிதம்பரம், ஸ்ரீரங்கம் போன்ற கோயில்களில் துணைக் கோயில்களையும் மண்டபங்களையும், மற்றும் கோபுரங்களையும் கட்டினர்.

மதுரை மீனாட்சிக் கோயில், திருநெல்வேலி, விசுவநாதர் கோயில், தென்காசி அழகர் கோயில், நெல்லை விசுவநாதர் கோயில் போன்றவை. குலசேகரப் பாண்டியர் காலத்தில் சிறப்படைந்தன. இவற்றில் அர்த்த மண்டபம், மணி மண்டபம், சன்னதி, முன் கோபுரம் முதலியவை கட்டப்பட்டன.

### *சிற்பக்கலை*

திருப்பரங்குன்றத்தில் காணப்படும் சோமாஸ்கந்தர் திருமால், துர்க்கை, கணபதி ஆகியோரின் சிற்பங்களும் நரசிம்மர் வராகர், நடராஜர், சிவகாமி குன்னக் குடியில் காணப்படும் விஷ்ணு சிற்பம் மேலும், மதுரை, திருநெல்வேலி, தென்காசி, சிதம்பரம் போன்ற இடங்களில் உள்ள சிற்பங்களும் சிற்பக்கலைக்கு சிறந்த எடுத்துக்காட்டுகளாகும். பிற்காலப் பாண்டியரின் பிந்திய காலச் சிற்பங்கள் விஜயநகரக் காலச் சிற்பங்களின் தன்மையோடு இணைந்து விட்டதைக் காணலாம்.



### *வார்ப்புக்கலை*

பல உற்சவ மூர்த்திகள் ஆழ்வார்கள் நாயன்மார்களின் செப்பு படிமங்கள் மற்றும் சிதம்பரம் நடராசரின் சிலையாவும் வார்ப்புக் கலை வளர்ச்சிக்குச் சிறந்த எடுத்துக்காட்டுகளாகும்.

### *இசை, நடனம், நாடகம்*

நடனக் கலைஞர்கள் அரண்மனையிலும், தேவரடியர்கள் கோயில்களிலும் நடனம் ஆடினர். நடனக்கலையின் சிறப்பு மற்றும் அதன் வளர்ச்சியினை கோயில்களில் காணப்படும் சிற்பங்கள்மூலம் அறியலாம். சிதம்பரம் மற்றும் திருப்பரங்குன்றத்தில் உள்ள நடராஜரின் சதுரதாண்டவத் திருக்கோலம்நடனக் கலைக்குச் சிறந்த எடுத்துக்காட்டாகும்.

இசையின் மேன்மையைப் பற்றி “மத்தளம் கொட்ட வரிசங்கம் நின்றூத” என்ற பாடலின் மூலம் நன்கு அறியலாம். பாண்டிய அரசர்களும் இசையைப் போற்றி வளர்த்தனர். மேலும் இசையைப் பற்றி, வீரமத்தளம், மத்தளம், திபிலை, சேமக்கலம், திருச்சின்னம் போன்ற இசைக்கருவிகள் யாவும் கோயிற் சிற்பங்களில் காணப்படுவதின் மூலம் பாண்டியர் இசையைப் போற்றி வளர்த்தனர் என்பதை அறிய முடிகிறது.

பாண்டிய மன்னர்கள் நாடகக் கலையையும் போற்றி வளர்த்தனர். கோயில்களில் நாடகங்கள் நடிக்கப்பட்டன. ‘அழகியப் பாண்டியன் கூடம்’ என்று நாடக அரங்கிற்குப் பெயரும் இருந்தது. நாடகத்தில் நடிப்போருக்கு ‘கூத்துக்காணி’ வழங்கப்பட்டது. ஆடல் மகளிருக்கு ‘தலைக்கோல்’ என்ற பட்டம் கொடுக்கப்பட்டது. கூத்து ‘சாந்திக் கூத்து,’ ‘வினோதக் கூத்து’ என இருவகைக் கூத்துகள் இருந்தன என்று ஆத்தூர் கோயில் கல்வெட்டு மூலம் அறிகின்றோம்.

### கல்வி

பாண்டியர் காலத்தில் கல்வி வளர்ச்சிக்கு பெரும் ஆதரவு தரப்பட்டது. கிராமங்களில் திண்ணைப் பள்ளிகூடங்களும், கோயில்களும், மடங்களும் மக்களுக்கு கல்வியறிவூட்டும் பணியில் ஈடுபட்டன. கோயில்களில் சிறு சிறு நூலகங்கள் இருந்தன.

www.tntextbooks.in

நூலகங்கள் 'சரஸ்வதி பண்டாரங்கள்' என அழைக்கப்பட்டன. சிதம்பரத்தில் 13 ஆம் நூற்றாண்டில் சுவாமி தேவர் என்பவர் நூலகத்தை அமைத்தார். 'சேரமா தேவி' என்ற இடத்திலும் நூலகம் இருந்தது. எல்லாவிதமான அதாவது கணிதம், வேதம், தத்துவம், சமயம் போன்ற பாடங்கள் கற்பிக்கப்பட்டன. இசை, நாட்டியம், நாடகம் போற்றி வளர்க்கப்பட்டன. பணிபுரியும் ஆசிரியர்களுக்குப் பட்ட விருத்தி, சாலபோகம் முதலியவை வழங்கப்பட்டன. அந்தணர்கள் வடமொழிக் கல்விக் கூடங்களை நடத்தினர். அவை 'கடிகை,' 'வித்யாஸ்தானம்' என்ற பெயர்களின் வழங்கப்பட்டன.

மாணவர்கட்கு ஒழுக்கம், நேர்மை, முக்கியமென கட்டாயப்படுத்தப்பட்டது. பாண்டிய நாட்டில் இருந்த சைவ, வைணவ, சமண, பௌத்த மடங்களும் ஆன்மிகக் கல்வி (சமயக்கல்வி) போதித்தன. சைவ சித்தாந்த வல்லுநர்கள் திருப்பத்தூர் மடத்தில் தங்கி பாடம் கற்பித்தனர். இக்காலத்தில் மேலும் வேதம், உபநிடதம், இதிகாச புராணங்கள், நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம் போன்றவை கற்பிக்கப்பட்டன. கோயில்களும் கல்வியை வளர்த்தன. வரியில்லா நிலதானங்களும் (நிலக்கொடை) அளித்து இசைக்கல்வியும், நாடகமும் போற்றப்பட்டது.

ஸ்ரீவல்லப் பெருஞ்சாலை (உயர்கல்வி கூடம்) கன்னியாகுமரியிலும், 'காந்தளூர் சாலை' திருவனந்தபுரத்திலும், ஆய் நாட்டில் பார்த்தீகசேகர புரத்தில் ஒரு கல்விச் சாலையும் நடைபெற்றன. மாணவர்களுக்கு இலவச உணவு வழங்க, நில தானங்களைச் சாலபோகமாக அளித்ததாக தெரிகிறது. வேதங்களேயன்றி, அரச நிருவாக பயிற்சி, ராணுவமும் தரப்பட்டன.

### இலக்கியம்

தமிழ் வளர்ச்சிக்கு பாண்டியர் பெரும் ஆதரவு தந்தனர். 'தமிழ்க்கூடல்' என்று மதுரையை சிவகாசிச் செப்பேடு புகழ்கிறது.

நம்மாழ்வார், மதுரகவியாழ்வார், பெரியாழ்வார், ஆண்டாள் ஆகியோரின் சமயப்பணியைப் போல் இலக்கியப் பணியும் போற்றுதற்குரியது.



1. நம்மாழ்வார் - திருவாய்மொழி
2. மதுரகவியாழ்வார் - நம்மாழ்வார் பற்றிய ஏழு பதிகங்கள்
3. பெரியாழ்வார் - பெரியாழ்வார் திருமொழி
4. ஆண்டாள் - திருப்பாவை
5. மாணிக்கவாசகர் - திருவெம்பாவை

போன்ற நூல்களை எழுதியுள்ளனர்.

பாண்டியர் காலத்தில் தமிழுக்கும் வடமொழிக்கும் ஊக்கம் அளித்து இலக்கிய வளர்ச்சிக்கு பேருதவி புரிந்தனர்.

"நால்வகை வேதமும் நவின்றுடன் வளர" என்று முதலாம் மாறவர்மன் சுந்தரனின் மெய்கீரத்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இரண்டாம் மாறவர்மன் சுந்தரனின் மெய்கீர்த்தியில், "சுருதியும் தமிழும் தொல் வளங்குலவ" எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

மாறவர்மன் குலசேகர பாண்டியனின் 18 ஆம் அண்டு மெய் கீர்த்தியில்,

"அருந்தமிழ் ஆரியமு மறு சமயத்தற நெறியும்
திருந்துகின்ற மனுநெறியுந் திறம்பாது தழைத்தோங்க
முத்தமிழும் மனுநூலும் நான்மறை முழுவதும்
எத்தவச் சமயமும் இனிதுடன் விளங்கவும்"

என்று கூறப்படுவதிலிருந்து வடமொழி, தென் மொழி என பாராது இரண்டிற்கும் சமமாக ஆதரவு தந்தனர். பாண்டிய மன்னர்கள் என்பதை இதன் மூலம் அறிகின்றோம்.

### 7. 5. 8. இந்திய பண்பாட்டிற்கு பிற்காலப் பாண்டியரின் கொடை

1. பாண்டியர்களின் கிராம ஆட்சி நிருவாக அமைப்பு முறை இந்திய ஜனநாயக அமைப்பைக் கொண்டு விளங்கியது. கிராம சபை உறுப்பினர்களைத் தேர்தல் முறையில் தேர்ந்தெடுத்தனர்.

www.tntextbooks.in

2. கோயிற் கட்டடக் கலையில் சிறந்த மாற்றங்களைக் கொண்டு வந்து பிற்காலக் கட்டடக்கலை வளர்ச்சிக்கு பெரிதும் துணை புரிந்தது.

3. கல்விச் சாலையில் இலவச உணவுடன் அரசு நிருவாகப் பயிற்சி மற்றும் இராணுவப் பயிற்சி அளித்ததின் மூலம் இன்றுள்ள அரசு நிருவாகத்திற்கு அவை ஒரு கொடையாக திகழ்கிறது.

4. 'சரஸ்வதி பண்டாரம்' போன்ற நூலகங்கள் ஏற்பட்டதின் மூலம் வேதங்கள், புராணங்கள் பயிற்றுவிக்கப்பட்டு இந்தியப் பண்பாட்டு வளர்ச்சிக்கு பெரிதும் துணை புரிந்தது.

5. பாண்டியர்கால கோயிலின் நுண்கலைகள் (இசை, நடனம், சிற்பம், ஓவியம்) யாவும் இன்றும் சிறப்பாகத் திகழ்வதுடன் அவை இந்தியப் பண்பாட்டு வளர்ச்சிக்குச் சிறந்த பொக்கிஷமாகத் திகழ்கிறது.

## 7. 5. பயிற்சி வினாக்கள்

### அ. ஓரிரு வரிகளில் விடையளி

1. பிற்காலப் பாண்டியர்களின் ஆட்சிக்காலம் யாது?
2. 'பாஞ்சாலர்கள்' என்போர் யாவர்?
3. 'இந்து சமய மடங்கள்' யாவை?
4. விசிட்டாத்துவைதக் கொள்கைகளைப் பரப்பியவர் யார்?
5. 'சிரவணபெலகோலா' குறித்து சிறு குறிப்பு வரைக.
6. 'தருமபாலர்' என்பவர் யார்?
7. பாண்டியர் கால இசைக்கருவிகள் யாவை?
8. 'தமிழ்க் கூடல்' - சிறு குறிப்பு எழுதுக.
9. 'சரஸ்வதி பண்டாரம்' - குறிப்பு எழுது.
10. தர்மகீர்த்தி என்பவர் யார்?



11. 'கூத்துக்காணி' என்பது யாது?
12. பிற்காலப் பாண்டியரின் இசைக்கருவிகள் யாவை?

### ஆ. பத்து வரிகளுக்கு மிகாமல் விடையளி

1. பிற்காலப் பாண்டியர்களைப் பற்றி அறிய உதவும் சான்றுகள் யாவை?
2. பிற்காலப் பாண்டிய மன்னர்களின் முக்கியமான அரசர்கள் யாவர்?
3. பிற்காலப் பாண்டியர் காலத்தில் சமண மனமும் புத்த மதமும் எவ்வாறு செயல்பட்டன?
4. பிற்காலப் பாண்டியர்கால சிற்பக்கலைக்கு சில எடுத்துக்காட்டுகள் தந்து விளக்கு.
5. பிற்காலப் பாண்டியர்கால வருவாய்துறை குறித்து விளக்குக.
6. பிற்காலப் பாண்டியர் நீதித்துறையைப் பற்றி விளக்குக
7. பிற்காலப் பாண்டியரின் இலக்கிய வளர்ச்சி பற்றி விளக்கு.
8. பிற்காலப் பாண்டியரின் 'ஊராட்சி நிர்வாகம்' எவ்வாறு செயல்பட்டது?
9. பிற்காலப் பாண்டியரின் 'நீதி முறை' யாது?

### இ. ஒரு பக்க அளவில் விடையளி

1. பிற்காலப் பாண்டியரின் அரசியல் நிலையை விளக்குக.
2. பிற்காலப் பாண்டியரின் சமூகநிலையை விளக்குக.
3. பிற்காலப் பாண்டியர்களின் சமூகநிலை குறித்து மார்க்கோபோலோ மற்றும் வாசுப் ஆகியோரின் குறிப்புகளை விவரி.
4. பிற்காலப் பாண்டியரின் 'சமய வளர்ச்சி' குறித்து விவரி.

www.tntextbooks.in

5. பிற்காலப் பாண்டியரின் ‘கலை வளர்ச்சி’ குறித்து விவரி.
6. பிற்காலப் பாண்டியரின் ‘இசை’, ‘நடன’, ‘நாடகக்கலை’ பற்றி விளக்குக.
7. பிற்காலப் பாண்டியரின் இலக்கிய வளர்ச்சியைக் குறித்து விளக்குக.
8. பிற்காலப் பாண்டியரின் ‘கல்வி நிலை’ குறித்து விளக்கி எழுதுக.
9. இந்தியப் பண்பாட்டிற்கு பிற்கால பாண்டியரின் ‘கொடைகள்’ யாவை?
10. பிற்காலப் பாண்டியரின் கட்டடக்கலை பற்றி விளக்குக.

**ஈ. நான்கு பக்க அளவில் விடையளி**

1. பிற்காலப் பாண்டியர்களின் பண்பாடு பற்றி ஒரு கட்டுரை வரைக.
2. பிற்காலப் பாண்டியர்களின் கலை, கல்வி மற்றும் இலக்கியம் குறித்து ஒரு கட்டுரை வகை.

www.tntextbooks.in

# 8. இந்தியப் பண்பாட்டிற்கு இசுலாம் மற்றும் கிறித்துவ சமயங்களின் பங்கு

## 8. 1. இசுலாம் விளக்கம்

'இசுலாம்' என்பது ஓர் அரபுச் சொல். அதன் பொருள் பணிதல், சரணடைதல், கீழ்ப்படிதல் என்ற மூலக்கூறுகளை உள்ளடக்கியது. 'இசுலாம்' என்ற சொல்லின் நேர்ப்பொருள் 'அமைதி' என்பதாகும். ஒருவன் உடலையும் உள்ளத்தையும் அல்லாவிடம் பணிவாக ஒப்படைக்கும் போது அமைதியைப் பெறுகிறான் எனப் பொருள் படும். அல்லாவின் விதி முறைகளுக்கேற்பப் பணிந்து செயல்படுபவர்கள் 'இசுலாமியர்கள்' என்பர்.

மேற்காணும் பண்புகளைப் பெற்றிருப்பவன் எந்த இனத்தையும், சமூகத்தையும், நாட்டையும் குலமரபையும் சேர்ந்தவனாக இருப்பினும் அவன் ஒரு 'முஸ்லீம்' என 'அபுல் – அலா – மௌளருடி' கூறுகிறார்.

### 8. 1. 1. நபிகள் நாயகம்

இசுலாம் சமயத்தின் தீர்க்கதரிசியாக முஸ்லீம்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டவர். முகமது நபியாவார். இவர் மெக்காவில் அப்துல்லா அமீனா என்ற தம்பதியருக்கு மகனாய்ப் பிறந்தார். 'கதீஜா' என்ற செல்வ சீமாட்டியை மணந்து பிறகு இல்லறத்திலிருந்து விலகி 'மெக்கா' நகரத்திற்கு அப்பால் இருந்த 'ஹீரா' என்ற குகையில் தவம் இருந்தபோது இறைதூதராகிய 'காபிரில்' **(Gabriel)** தோன்றி அல்லாவின் புனித வார்த்தைகளாகிய உண்மைகளை அவரிடம் கூறினார். அதன் தொகுப்பே இஸ்லாமியத்தின் புனித நூலான 'திருக்குரான்' ஆகும்.

www.tntextbooks.in

### 8. 1. 2. சமயக் கோட்பாடுகள்

"அல்லா ஒருவரே கடவுள். முகமது நபியே அவருடைய தீர்க்கதரிசி. ஏழுவகையான உடலசைவுகளுடன் ஒரு நாளைக்கு ஐந்துமுறை தொழுகை செய்வது, 'ரம்ஜான்' மாதத்தில் நோன்பு இருப்பதும் வட்டி வாங்காமல் இருப்பது, வாழ்க்கையில் ஒரு முறையாவது 'துல் - ஹிஜனா' என்னும் புனித மாதத்தில் மெக்காவிற்கு கட்டாயமாகச் சென்று வரவேண்டும்" என்பது இசுலாமியத்தின் ஐந்து தூண்களெனக் கருதப்படுகிறது.

இறை தூதரான காபிரில் அல்லாவின் வார்த்தையாக முகமது நபியிடம் கூறியதை ஏற்கும் 'சன்னி' பிரிவும், அல்லாவின் புனித வார்த்தைகளை ஏற்று, அதைப் பின்பற்றி இறைத் தன்மையை அடைந்த 'தீர்க்கதரிசி' எவரோ அவரை மதத்தலைவர் அதாவது 'இமாம்' என ஏற்றுக்கொண்டு வழி நடக்கும் 'ஷியா' பிரிவும் இஸ்லாமிய சமயத்தில் ஏற்பட்ட இருபிரிவுகள் ஆகும்.

ஒரு கடவுட்கோட்பாட்டை ஏற்கும் இசுலாம் உருவ வழிபாட்டை ஏற்றுக் கொள்ளவில்லை.

இயற்கையின் சீற்றங்கள் வாழ்க்கையின் முடிவை அறிவிப்பதாகவும், வினைப் பயனைப் பொறுத்து ஒவ்வொரு மனிதனும் 'சொர்க்கம்' 'நரகம்' என்பதை அடைவான் என்பதும் இசுலாமியர்களின் நம்பிக்கையாகும்.

இசுலாமியர்கள் தம் மதக்கோட்பாடுகளுக்கேற்ப பல்வேறு விழாக்களைக் கொண்டாடி வருகின்றனர். அவற்றில் பக்ரீத், மொஹரம், மிலாடி-நபி, ரம்ஜான் போன்ற விழாக்கள் முக்கியமானவை ஆகும். இவ்விழாக்களின் மூலம் நட்பு, அன்பு, அமைதி மற்றும் சகோதரத்துவம் ஆகியவற்றை வலியுறுத்துகின்றனர்.

### 8. 1. 3. இந்திய பண்பாட்டிற்கு இஸ்லாமிய சமயத்தின் கொடை

1. சட்டத்தின் முன் அனைவரும் சமம்.



2. மேலும், பஞ்சாயத்து முறை, பர்கானா அல்லது பிர்கா முறை (கிராமங்களின் ஒருங்கிணைப்பு), மாவட்டம் அல்லது சர்க்கார், மாநிலம் அல்லது சபா, என்ற அமைப்புகள் இசுலாத்தின் மூலம் இந்திய அரசியல் பண்பாட்டிற்கு அடிப்படையாக அமைந்துள்ளது.
3. இந்திய பண்பாட்டின் ஒற்றுமைக்கு அல்பரூனி என்ற முஸ்லீம் அறிஞர் 'சூபி இயக்கத்தை' ஒரு கொடையாக வழங்கி இந்து-முஸ்லீம் ஒற்றுமையை நிலைநாட்டினார்.
4. சாதி ஒழிப்பு, சமத்துவம், சகோதரத்துவம், தீயபழக்கங்களை ஒழித்தல், மூட நம்பிக்கைகளுக்கு முடிவுகட்டுதல் போன்ற கொள்கைகளைக் கொண்ட சூபி இயக்கமானது நமது இந்தியப் பண்பாட்டிற்கு வழங்கப்பட்ட ஒரு வரப்பிரசாதமாகும்.
5. தத்துவம், சோதிடம், மருத்துவம் போன்ற சமஸ்கிருத நூல்களைப் பாரசீக மொழியில் மொழியாக்கம் செய்து நமது இந்தியப் பண்பாட்டின் சிறப்பு அம்சங்கள் உலகிற்கு உணர்த்திய பெருமை இசுலாமியர்களையே சாரும்.
6. மொகலாயர்களின் கலையம்சங்களில் ஒன்றான பூச்சித்திர தையல் வேலைப்பாடுகள், பூ வேலைப்பாடுகள் அமைந்த மணி மண்டபங்கள், உலோகம் மற்றும் தங்க வேலைப் பாடுகள் போன்ற கவின் மிகு கலைகள் நம் இந்தியப் பண்பாட்டிற்கு மேன்மேலும் பெருமை சேர்ப்பனவாக அமைந்துள்ளன.
7. சமயச்சார்பற்ற பொது அடிப்படையில் அமைந்த விளையாட் டரங்கங்கள், நகர நுழைவாயில்கள், பூந்தோட்டங்கள், அரண்மனைக் கோட்டைகள், மசூதிகள் மற்றும் கட்டடக் கலையில் காணப்படும் வண்ணக்கற்கள், ஓடுகள், சலவைக்கற்கள் போன்றனயாவும் இந்தியப் பண்பாட்டின் சிறப்புக் கூறுகளாகத் திகழ்கின்றன. உலக அதிசயங்களில் ஒன்றான தாஜ்மகால் கட்டடக்கலைக்கு இஸ்லாத்தின் அளப்பரும் கொடை எனலாம்.
8. இந்தியப் பண்பாட்டின் சிறப்புக் கூறுகளாக விளங்கும் எண்குறியீட்டுமுறை, வானநூல், மருத்துவம், கணிதம்,

www.tntextbooks.in

குறிக்கணக்கியல் **(Algebra)** போன்ற நூல்கள் அராபியர் மூலம் ஐரோப்பா முழுதும் பரவி இந்தியாவின் பெருமையை மேலோங்கச் செய்தது.

9. இசுலாமிய சமயத்தாக்கத்தின் விளைவாக இந்திய முழுதும் பக்தி இயக்கம் தோன்றி அதன் மூலம் வட்டாரமொழிகளில் இலக்கியம் வளர்ச்சி பெற்றது.

## 8. 2. கிறித்துவம்

உலகம் முழுவதும் பெரும்பான்மையான நாடுகளில் பரவியிருக்கும் சமயம் கிறித்துவம் ஆகும். இந்தியாவில் இந்து சமயத்திற்கு அடுத்து பெரும்பான்மையான மக்களால் பின்பற்றப்படும் சமயம் கிறித்துவம் என்று கூறப்படுகிறது. இதனுடைய நற்செயல்களின் மூலம் இந்திய சமயங்களில் காணப்பட்ட மூடப்பழக்கங்களையும், தேவையற்ற சடங்குகளையும் நீக்கி ஒரு முழுமையான சமய வாழ்க்கையை ஏற்படுத்திக் கொள்ள காரணமாய் இருந்தது. கிறித்துவம் என்பது வரலாற்றின் மூலம் அறியும் உண்மையாகும். கிறித்துவம் என்பது ‘கிறிஸ்து’ அதாவது ‘ஏசு கிறிஸ்து’ என்ற இயற்பெயரிலிருந்து பெறப்பட்ட சொல்லாகும். ஏசு கிறிஸ்துவின் உயர்ந்த கோட்பாட்டு அம்சங்களைக் குறித்து கூறுவது ‘கிறித்துவம்’ எனலாம்.

### 8. 2. 1. ஏசுகிறிஸ்து

கிறித்துவ சமயத்தைத் தோற்றுவித்தவர் ‘ஏசு கிறிஸ்து’ ஆவார். இவரை ‘ஜீஸஸ்’ என்றும் யூத சமயத்தவர் அழைப்பர். இவர் ‘இஸ்ரலேல் நாட்டிலிலுள்ள ‘பெத்லஹேம்’ என்னுமிடத்தில் கன்னிமேரியின் குழந்தையாகத் தோன்றினார். இவருடைய தந்தை ஜோசப் ஆவார்.

### 8. 2. 2. சமயக்கோட்பாடுகள்

“மனித உயிர்கள் இறைவன் மீது இதயபூர்வமாகவும், தூய எண்ணத்துடனும் அன்பு செலுத்த வேண்டும்” எனவும்,



பரலோகத்திலிருக்கும் ‘பரமபிதா’ அல்லது ‘சொர்க்கம்’ என்பதை அடைய அன்பு, நீதி, கடமை போன்றவற்றைக் கடைபிடித்து ஒழுக வேண்டும் என்பதும் கிறித்துவ சமயத்தின் கொள்கை எனக் கூறப்படுகிறது. எனவே, அன்பு, கடவுள், நீதி, நம்பிக்கை போன்றவை முக்கிய கோட்பாடுகளாகக் கொள்ளப் படுகிறது. மேலும், உலகத்தில் பேசப்படும் வார்த்தைகள் யாவும் இறைவனையே சார்ந்தது என்பதும் கிறித்துவத்தின் கோட்பாடாகும். கிறித்துவ கோட்பாடுகள் அடங்கிய நூல் ‘பைபிள்’ அல்லது ‘விவிலியம்’ (புதிய ஏற்பாடு) என்பதாகும்.

கிறித்துவ சமயத்தினர் ஆங்கிலப் புத்தாண்டு, புனித வெள்ளி, ஈஸ்டர்ஸன்டே கிறிஸ்து ஜெயந்தி, நியூ ஈயர்ஸ் ஈவ் போன்ற முக்கிய விழாக்களைக் கொண்டாடி மகிழ்கின்றனர்.

விழாக்களின் மூலம் அன்பு, நட்பு, சகோதரத்துவம், சமத்துவம் ஆகிய நற்பண்புகளை வலியுறுத்துகின்றனர்.

### 8. 2. 3. கிறித்துவ சமயத் தொண்டு நிறுவனங்களின் பணிகள்

1. இனவேறுபாடுகளையும் சாதிக்கொடுமைகளையும் களைய கிறித்துவ சமயக் குழுக்கள் பெருந்தொண்டாற்றி வருகின்றன.
2. கலப்புத் திருமணங்கள் மூலம் ஒன்றுபட்ட சமுதாயத்தை உருவாக்குவதில் கிறித்துவ சமயம் பெரும்பங்கு ஆற்றிவருகின்றது.
3. அனாதை விடுதிகள், முதியோர் காப்பகங்கள் நிறுவி, வெள்ளம், பூகம்பம் மற்றும் பஞ்சம் போன்ற இயற்கையின் சீற்றங்களிலிருந்து விடுவிப்பதற்கான நிவாரணப் பணிகளை செவ்வனே செய்து வருகின்றன.
4. கிறித்துவ சமயக்குழுக்கள் நாடெங்கும் சிறந்த மருத்துவமனை களை நிறுவி, சமுதாய நலவாழ்வுப் பணிகளைச் செய்து வருகின்றனர்.
5. சமுதாயத்தில் காணப்படும் குறைப்பாடுகளைக் களைய, கிறித்துவ சமயம் துண்டுப்பிரசுரங்கள் மற்றும்நூல்கள் மூலம் பெருந் தொண்டாற்றி வருகின்றது.

www.tntextbooks.in

6. கிறித்துவ சமயக் குழுக்கள் பட்டிதொட்டிகளிலும் கல்விக் கூடங்கள் நிறுவி இலவச உணவு, உறையுள், கல்வி போன்றவற்றை வழங்கி ஒழுக்கம், கட்டுப்பாடு போன்ற உயரிய நெறிகளையும், நீதி போதனைகளையும் புகட்டி வருகின்றன.

7. கிறித்துவ சமயக் குழுக்கள் அந்தந்த வட்டார மொழிகளை நன்கு கற்று சமயத்தைப் பரப்பியதுடன், பல்வேறு நூல்களையும் ஆங்கிலத்தில் மொழி பெயர்த்து, அனைத்து இந்திய மொழிகளின் வளர்ச்சிக்கும் இலக்கிய வளர்ச்சிக்கும் பெருந்தொண்டாற்றி வந்துள்ளனர். குறிப்பாக வீரமா முனிவர், கால்டுவெல், ஜி.யு.போப் போன்ற பெரியோர்கள் தமிழ் மொழிக்கு ஆற்றியுள்ள தொண்டு அளவிட முடியாது எனலாம்.

8. தன்னலங்கருதாது, உலக சமுதாய நலனுக்காக மாபெரும் பணிகளைக் கிறித்தவ சமயப் பரப்புக் குழுக்கள் ஆற்றி வருகின்றன.

இவ்வாறு கிறித்துவ தொண்டு நிறுவனங்கள் யாவும் கல்வி வளர்ச்சிக்கும் சமூக நல வாழ்வுக்கு பல அரிய பணிகளைச் செய்து வருகின்றன.

### 8. 2. 4. இந்திய பண்பாட்டிற்கு கிறித்துவ சமயத்தின் கொடை

1. கிறித்துவ சமயத் தாக்கத்தின் விளைவாக இந்து சமயத்தினரின் மூடப் பழக்கங்கள் மற்றும் தேவையற்றச் சடங்குகளை நீக்க முற்பட்டனர்.

2. சாதி சமய வேறுபாடற்ற, உலக சகோதரத்துவம், சமத்துவம், அன்பு, நட்பு, நீதி, அமைதி போன்ற தத்துவக் கோட்பாடுகள் இந்திய பண்பாட்டிற்கு மிகவும் துணை புரிந்தன.

3. கிறித்துவ தொண்டு நிறுவனங்களின் சமய, கல்வி, சமுதாய நலவாழ்வுப் பணிகள் இந்தியப் பண்பாட்டு வளர்ச்சிக்கு மேலும் சிறப்பு செய்தன.

4. கிறித்தவ சமயக்குழுக்கள் இந்திய வருகையின் போது தம்முடன் அச்சுபொறி இயந்திரம் கொண்டு வந்தமையால் இந்தியருக்கு அது ஒரு வரப்பிரசாதமாக அமைந்தது.



5. வட்டார மொழிகளில் இலக்கியம் மற்றும் சமய நூல்களைத் தோற்றுவித்ததால் அனைத்து இந்திய மொழிகளின் வளர்ச்சிக்கும் இந்தியப் பண்பாட்டின் மேன்மைக்கும் கிறித்துவம் உதவி புரிந்தது.

6. கிறித்துவ சமயத்தாக்கத்தின் விளைவாக இந்து சமயத்தில் பல சீர்திருத்த இயக்கங்களென ஆரிய சமாஜம், பிரம்ம சமாஜம், பிரம்ம ஞான சபை மற்றும் இராம கிருஷ்ண இயக்கம் போன்ற இயக்கங்கள் தோன்றின.

7. வீரமா முனிவர் ‘தேம்பாவணியையும்,’ ஜி.யு. போப் அவர்கள் திருவாசகம், திருக்குறள், நாலடியார், புறநானூறு, புறப்பொருள் வெண்பா, போன்றவற்றையும் ஆங்கில மொழியில் மொழி பெயர்ப்பு செய்தார்.

## பயிற்சி வினாக்கள்

### அ. ஓரிரு வரிகளில் விடையளி

1. ‘இஸ்லாம்’ - வரையறு.
2. இஸ்லாம் என்பதன் பொருள் யாது?
3. இஸ்லாமியர் என்போர் யார்?
4. இஸ்லாம் பற்றி ‘அபுல்-அலா மௌருடி’ கூறுவன யாது?
5. இஸ்லாமியரின் ‘புனித நூல்’ யாது?
6. இஸ்லாம் சமயத்தின் ‘இருபிரிவுகள்’ யாவை?
7. ‘சூபி இயக்கத்தைத்’ தோற்றுவித்தவர் யார்?
8. இஸ்லாமியர் கொண்டாடும் விழாக்கள் யாவை?
9. ‘கிறித்துவம்’ என்ற சொல்லின் பொருளைக் கூறு.
10. கிறித்துவ சமயத்தின் ‘வேத நூல்’ யாது?

www.tntextbooks.in

11. வீரமா முனிவர் எழதிய நூலின் பெயர் என்ன?

12. ஜி.யு. போப் ஆங்கில மொழியாக்கம் செய்த தமிழ் இலக்கிய நூல்கள் யாவை?

13. கிறித்துவர்கள் கொண்டாடும் விழாக்கள் யாவை?

### ஆ. பத்துவரிகளில் விடையளி

1. இஸ்லாமிய சமயக் கோட்பாடுகள் யாவை?

2. கடவுள் குறித்து இஸ்லாமியரின் நம்பிக்கை யாது?

3. கிறித்துவ சமயத்தின் கோட்பாடுகள் யாவை?

### இ. ஒரு பக்க அளவில் விடையளி

1. இந்தியப் பண்பாட்டு வளர்ச்சிக்கு 'கிறித்துவ தொண்டு' நிறுவனங்களில் பணிகள் யாவை?

2. இஸ்லாம் மற்றும் கிறித்துவ 'சமயக் கோட்பாடுகளை' விளக்குக.

### ஈ. நான்கு பக்க அளவில் விடையளி

1. இந்தியப் பண்பாட்டிற்கு கிறித்துவ சமயத்தின் கொடை பற்றி ஒரு கட்டுரை வரைக.

2. இந்தியப் பண்பாட்டில் இஸ்லாம் மற்றும் கிறித்துவ சமயத்தின் கொடை பற்றி ஒரு கட்டுரை வரைக.

www.tntextbooks.in

# 9. பக்தி இயக்கம்
# ( இடைக்காலம் )

இந்து சமயம் மனிதன் நற்கதி அடைய பல்வேறு நெறிமுறைகளை உருவாக்கித் தந்துள்ளது. இந்நெறிமுறைகள் மனிதனின் உள்ளம், சிந்தனை, செயல்திறன் ஆகியவற்றிற்கு ஏற்ப அமைந்துள்ளன. அவரவர் மனநிலைக்கு எது எளியது, இனியது என்று தோன்றுகிறதோ அதனைப் பின்பற்றி நற்கதி அடையலாம். இத்தகைய பல நெறிகளுள் மிகச் சிறப்பாகக் கருதப்படுவன 1. பக்தி நெறி 2. கருமநெறி 3. ஞானநெறி. இந்நெறிகளுள் மிகவும் எளிமையானதும் எங்கும், எந்தச் சூழலிலும், எல்லோராலும் நடைமுறைக்கு எளியதுமானது பக்திநெறியாகும். பக்தி நெறி பற்றியும், அந்நெறியினை பரப்பியவர்கள் பற்றியும் விரிவாகக் காண்போம்.

## 9. 1. பக்தி நெறி விளக்கம்

இறைவனிடத்தில் நாம் செலுத்தும் ஆழ்ந்த அன்பே ‘பக்தி’ எனலாம். பக்தி என்னும் சொல் பஜ் என்ற சொல்லினின்று வந்ததாகக் கருதப்படுகிறது. இதன் பொருள் ‘வழிபாடு.’ எனவே பக்தி என்பது உள்ளார்ந்த அன்போடு இறைவனை வழிபடுவது என்பதாகும். மனித இனத்தின் பெரும் பகுதிக்கு ஏற்புடையதாக இருப்பது இந்த அன்பு நெறியாகும். அனைவரும் அமைதியுடன் வாழ ஒருவர் மீது ஒருவரும், ஒரு நாடு மற்ற நாட்டின் மீது அன்பு செலுத்த வேண்டும் என்பதும் நாம் அறிந்த உண்மையாகும். இந்து சமயம் “அன்பே சிவம்,” “.அன்பே கடவுள்” என்கிறது,

பக்தி நெறியாவது ஆழ்ந்த அன்போடு இறைவனை வழிபடும் மார்க்கம் எனப் பொருள்படும். இறைவனது வல்லமையை உணர்ந்து, விரும்பி, அன்புடன் செலுத்தும் அன்பினையே பக்தி எனச் சான்றோர் கூறுகின்றனர்.

### பக்தியின் வகைகள்

பக்தி இரு வகைப்படும். அவை அபரபக்தி, பரபக்தி என்பன வாகும். அபரபக்தி: இந்நிலையில் பக்தன் நல்ல தெளிவில்லாமல் சடங்குகளை செய்தும், பரந்த மனப்பான்மை இல்லாமல் குறுகிய வட்டத்துள் நின்று ஒரு குறிப்பிட்ட தெய்வத்தையே வழிபட வேண்டும் என்ற கருத்துடையவனாய் செயல்படுவான். பிற தெய்வங்களை வழிபடும் பக்தர்களை வெறுக்கிறான். அவர்களது வழிபாட்டுமுறைகளை, தெய்வத்தை ஏற்பதில்லை.

பரபக்தி : இந்நிலையில் பக்தன் அனைத்து தெய்வங்களையும் வழிபடுவதுடன், பக்தியின் உயர்ந்த இறுதி நிலையில் செயல் படுகிறான் உலகம் தழுவிய உயர்ந்த அன்பு நெறியே பரபக்தியாகும். இவ்விரு நெறிகளும் தொன்றுதொட்டு வந்தவையாகும்.

### 9. 1. 1. பக்தி நெறி தோன்றக் காரணங்கள்

1. பழமையான இந்துமதம் தன் தூய்மையையும் புனிதத் தன்மையையும் இழக்கத் தொடங்கியது.
2. மூடப்பழக்க வழக்கங்கள், சாதிப்பாகுபாடுகள், தவறான பழக்கவழக்கங்கள் மதத்தின் புனிதத் தன்மையை சீரழித்தன.
3. உயர் குடியினராக கருதப்பட்டவர்கள், பிற பிரிவினரைக் கொடுமைப்படுத்தினர். இழிவுபட்டவர்களாக கருதிச் செயல்பட்டனர்.
4. புதியதாய்த் தோன்றிய சமண, பௌத்த சமயங்கள் இந்து சமயத்தில் காணப்பட்ட தீமைகளைக் கண்டித்தன. எளிதாக ஏற்றுக் கொள்ளக் கூடிய நெறிகளை எடுத்துக் கூறிப் பின்பற்றச் செய்தன.
5. சமயக் கோட்பாடுகள் பாமர மக்கள் புரிந்துகொள்ளும் படி அமையவில்லை.
6. இந்தியாவில் புதியதாய் வந்த சமயத்தினர் வைதீக சமயமான இந்து சமயத்தவர்களையும் கவரும் வண்ணம் செயல்பட்டனர்.



7. பிற சமயத்தவர்கள் வெளிப்படையாக அறிவித்து செயல்பட்ட ‘ஒரு கடவுள் கோட்பாடு’ ‘உலகில் பிறந்தோர் அனைவரும் உடன்பிறந்தோரே’ என்ற கொள்கைகள் மக்களைக் கவர்ந்திழுத்தன.
8. பிற சமயங்களில் காணப்பட்ட சமத்துவக் கோட்பாடுகள் இந்து சமயத்தில் புறக்கணிக்கப்பட்டவர்களையும் கவர்ந்திழுத்தன.

மேற்கூறிய காரணங்களின் அடிப்படையில் சமயத்தை நன்னிலை அடையச் செய்ய வேண்டும் என்ற உயரிய நோக்கில் தோன்றிய இயக்கமே பக்தி இயக்கமாகும். இப்பக்தி இயக்கம் இந்து சமயத்தைச் சீர்திருத்தி, இனிய சமயப்பூங்காவாக்கி தெய்விக மணம் கமழும் வண்ணம் செய்தது. இக்காலத்தில் வடநாட்டிலும் தென்னாட்டிலும் பக்தி நெறியைப் பரப்ப, சமயச் சான்றோர்கள் பலர் தோன்றி இந்த அரிய பணியைச் சிறப்புடன் செய்தனர். சைவ, வைணவ மற்றும் இதர சமயப் பிரிவுகளைச் சார்ந்தவர்களும் நாடெங்கும், வட்டார மொழிகளில் பக்தி நெறியை, படிப்பறிவற்ற பாமர மக்களும் பின்பற்றும் வண்ணம் தத்தம் சொற்களாலும், செயல்களாலும் பரப்பினர்.

### 9. 1. 2. பக்தி இயக்கத்தின் சீரிய பண்புகள்

1. தெய்வங்களை பல்வேறு வடிவங்களில் வணங்கினாலும் அவை அனைத்தும் ஒரே இறைவனின் பல்வேறு தோற்றங்கள் என்பதை உணர்ந்து, ‘ஒருவனே தேவன்’, அவனையே வணங்கவேண்டும் என்ற பேருண்மையை வலியுறுத்தியது.
2. முறையான பக்தி நெறியில் சென்றால் நற்கதியாகிய வீடுபேற்றை அடையலாம்.
3. நல்ல குருவின் துணையுடன் தான் நாம் இறைவனை அடைந்து பேரின்ப நிலை அடைய முடியும் என்ற உண்மை உணர்த்தப்பட்டது.
4. மக்களுள் உயர்ந்தோர், தாழ்ந்தோர் என்னும் நிலை கூடாது. ‘எல்லோரும் சமம்’ எல்லோரும் உடன்பிறந்தோரே என்பதை உணர வேண்டும்.

www.tntextbooks.in

5. பாகுபாடு களையமுற்பட்டது.

6. மூடபழக்கவழக்கங்கள் நீக்கப்பட்டன.

7. ‘மறைநூல்களில்’ பொதிந்து கிடந்த அரிய பேருண்மைகள் எளிய வட்டார மொழிகளில் மொழியாக்கம் செய்யப்பட்டன. சமய உண்மைகள் எளிய நீதிக் கதைகளாகப் பாமரரும் உணரும் வண்ணம் வடிவமைத்துத் தரப்பட்டன.

8. பிற சமயத்தவருடன் ஒற்றுமை உணர்வை வளர்க்கச் சமயச் சான்றோர் பெரிதும் முயன்றனர்.

9. பக்தி நெறியைப் பரப்ப வந்தவர்களிடம் சாதி, மத வேறுபாடுகள் இல்லை. அவர்கள் ஏழை பணக்காரர், உயர்ந்தோர், தாழ்ந்தோர் என்ற பாகுபாடுகள் கருதாமல் அனைவருடனும் அன்புடன் பழகி, உண்டு உறங்கி, உறவாடினர். அவர்களது இன்ப துன்பங்களில் பங்கேற்று துன்பங்களைக் களைந்து சீரிய எடுத்துக்காட்டாய் வாழ்ந்தனர்.

10. பக்தி நெறியாளர்கள் இறைவனிடம் தன்னை முழுமையாக ஒப்படைத்து அவனை சரணடைய வேண்டும் என்ற ‘சரணாகதி’ தத்துவத்தை உலகிற்கு அளித்தனர்.

11. ஞான, கரும நெறிகளைக் காட்டிலும் பக்தி நெறியே எளியது, ஏற்றது, சிறந்தது எனப் போற்றும் வண்ணம் செய்தனர்.

12. இறைவனின் திருநாமத்தை இடைவிடாது ஓதுதல், துதித்தல் வேண்டும் என்றனர்.

மேற்சொன்னவற்றை வலியுறுத்துவதற்காக பக்தி நிறுவனங்கள் நிறுவப்பட்டன. இவை பண்பாட்டுப் பயிற்சி நிலையங்களாகவும், அற உணர்வு, ஆன்மிக உணர்வு மையங்களாகவும் செயல்பட்டன.

இத்தகைய செயற்கரிய சேவை மனப்பான்மை கொண்ட சமயச் சான்றோர்களால் நடைமுறைப்படுத்தப்பட்ட இப்பக்தி இயக்கம். இந்து மதம் தான் இழந்த பெருமையை மீட்டு, மீண்டும் பொலிவுடன் திகழப் பேருதவி செய்தது.



### 9. 1. 3. பக்தி இயக்கத்தின் விளைவுகள்

நாடு முழுவதும் பரவிய பக்தி இயக்கத்தால் பல்வேறு விளைவுகள் ஏற்பட்டன. அவையாவன:

1. சமயத் துறையில் குறிப்பாக இந்து சமயத்தைச் சீர்திருத்த இவ்வியக்கம் பெருந்துணைபுரிந்தது. வீணான சடங்குகள் விலகின. மூடநம்பிக்கைகள் அகன்று சமயம் தன் புனிதத் தன்மையை பெற்றது.

2. இந்து சமயமும் ‘ஒரு கடவுள் கோட்பாட்டையும்,’ ‘உலகில் அனைவரும் உடன்பிறந்தோரே’ என்ற கொள்கையையும் வலியுறுத்தியது. இது சமூக நல்லிணக்கத்திற்கு வித்திட்டது.

3. பக்தி இயக்கம் பஞ்சாபில் சீக்கிய சமயம் தோன்றக் காரணமாய் இருந்தது.

4. சமுதாயத்தில் இருந்த சாதி வேற்றுமைகள் வன்மையாக கண்டிக்கப்பட்டன. எனவே, இப்பாகுபாடுகள் நீங்க இவ்வியக்கம் பெருந்துணை புரிந்தது.

5. முக்கியக் கோட்பாடுகளில் இதர சமயங்களுடன் ஒருமித்த கருத்து நிலவியதால் மத நல்லிணக்கம் ஏற்பட்டது. ஒற்றுமை உணர்வு வலுப்பெற்றது.

6. இந்தியிலும் இதர வட்டார மொழிகளிலும் இலக்கியங்கள் தோன்றி ஆன்மிக உணர்வை வளர்த்தன.

7. பக்தி இயக்கத்தின் துணையால் தில்லியை ஆண்ட சுல்தான்கள் இந்து, முஸ்லீம் இருவரிடையே இணக்கத்தையும், கூட்டுறவையும் வளர்க்க முயன்றனர்.

8. பக்தி நெறி இஸ்லாமிய பேரரசரான அக்பரை இந்துக்களையும் முஸ்லீம்களையும் தமது பேரரசின் கீழ் சமமாக நடத்த வழிவகுத்தது.

9. மக்களிடையே அன்பு, அமைதி, சகோதரத்துவம், இரக்கம், கருணை முதலிய வாழ்வியல் நெறிகள் செழிக்கப் பெருந்துணை புரிந்தன.

10. ஆன்மிக வாழ்வும், அறவாழ்வும் மேன்மேலும் பெருகி மனித வாழ்வு மேம்பாடு அடைய பெருந் தொண்டாற்றியது.

## 9. 2. இடைக்கால பக்தி இயக்கம்

இந்திய வரலாற்றில் கி.பி. 1000 க்கும் கி.பி. 1707 க்கும் இடைப்பட்ட காலத்தில் பக்தி நெறி தனது சீரிய பணியை நிறைவேற்றியதை அறிகிறோம். தென்னிந்தியாவில் இராமானுஜர், மத்துவர், மெய்கண்டார் மற்றும் பசவர் ஆகியோர் தோன்றி இறை நம்பிக்கையை வலுப்படுத்தும் தத்துவ நெறிகளைப் பரப்பினர்.

வட இந்தியாவிலும் இக்காலத்தில் எண்ணற்ற சமயச் சான்றோர்கள் தோன்றி அரும்பணி ஆற்றினர். பல சமயங்களைச் சார்ந்தோரும், பல பிரிவுகளிலிருந்து வந்தோரும் இப்பணியை மேற்கொண்டனர். அவர்களது அரும் பணிகள் சிலவற்றை இப்பகுதியில் காண்போம்.

### 9. 2. 1. இராமனுஜர்

தமிழ்நாட்டில் செங்கல்பட்டு மாவட்டத்தில் திருப்பெரும்புதூரில் தோன்றியவர். இல்லற வாழ்வில் ஈடுபட்டு சிறிது காலத்தில் துறவு பூண்டார். வைணவ சமயப் பணிக்குத் தம்மை அர்ப்பணித்தார். இவரது கோட்பாடு விசிட்டாத்வைதமாகும். பேரின்பத்தை அடைய பக்தியே சிறந்த நெறி என்பது இவரது கருத்து. 'சரணாகதி' நெறியை வலியுறுத்தி சாதிவேறுபாடின்றி அனைவரம் முக்தி அடையத் தகுதி உடையவர் என்றார்.

### 9. 2. 2. மத்துவர்

தென் கன்னடத்தில் உடுப்பிக்கு அருகே சிறு கிராமத்தில் தோன்றினர். இவரது இயற்பெயர் வாசுதேவன். இளம் வயதிலேயே துறவு பூண்டார். அச்சுதப் பிரகாசரிடம் தீட்சை பெற்று பூரண பிரக்ஞர், ஆனந்த தீர்த்தர் எனவும் போற்றப்பட்டார். இவரது தத்துவம் துவைதம் என்பதாகும். துறவு, பக்தி, தியானத்தின் மூலம் இறைவனை நேரில் உணர்ந்து வீடுபேறு அடையலாம் என்பது இவரது கோட்பாடு.



### 9. 2. 3. இராமாநந்தர்

இவரது முயற்சியால் வைணவம் வடக்கே பரவியது. 'இராமர் - சீதை' வழிபாட்டை பரப்பினார். சாதிப் பாகுபாட்டினை அறவே வெறுத்தார். இறைவன் முன் அனைவரும் சமம் எனக் கூறினார். சமயக் கருத்துகளை முதன் முதலில் இந்தி மொழியில் பரப்பியவரும் இவரே ஆவார்.

### 9. 2. 4. நிம்பர்க்கர்

இவர் தென்னிந்தியாவில் கோதாவரி நதிக்கரையில் சிறு கிராமத்தில் பிறந்தார். வட இந்தியாவில் மதுராவிற்கருகேயுள்ள பிரஜா என்ற இடத்தில் வாழ்ந்தார். இவரது பக்தி நெறியைச் சேர்ந்தோர் 'இராதா - கிருஷ்ண' வழிபாட்டில் நம்பிக்கை கொண்டிருந்தனர். இவரும் 'சரணாகதி' நெறியை வலியுறுத்தினார். இவரது கொள்கை 'பேதா பேதம்' என்றழைக்கப்படுகிறது.

### 9. 2. 5. கபீர்

காசிக்கருகே 'லகர்டேலோ' என்ற ஏரியில் தாமரை மலரிலிருந்த குழந்தையை முஸ்லீம் நெசவாளரால் வளர்க்கப்பட்டவர். இராமானந்தரால் சீடராக ஏற்றுக் கொள்ளப்பட்டவர் இந்து-முஸ்லீம் சமய ஒற்றுமைக்குப் பெரிதும் பாடுபட்டார். கடவுளிடம் அன்பு செலுத்துவதே நற்கதி அடைய வழி என்றார். "உண்மையே இயல்பானது. அது எல்லோர் இதயத்திலும் உறைகின்றது. அவ்வுண்மை அன்பினால் வெளிப்படுகிறது" என்ற கருத்தை உடையவர் "பக்தியை வலியுறுத்தாத சமயம் சமயமன்று" என்றார்.

### 9. 2. 6. நாமதேவர்

மஹாராஷ்டிர மாநிலத்தில் பண்டரிபுரம் என்னுமிடத்தைச் சார்ந்தவர். சாதியை, உருவ வழிபாட்டை, பொருளற்ற சடங்குகளை வன்மையாகச் சாடினார். உண்மையான பக்தியும், கடவுள் வழிபாடுமே இவரது முக்கிய கொள்கையாகும்.

### 9. 2. 7. குருநானக்

சீக்கிய மதத்தைத் தோற்றுவித்த இவர் பஞ்சாப் மாநிலத்தில் இலாகூர் மாவட்டத்தில் "டால்வந்தி" என்ற கிராமத்தில் பிறந்தார்.

www.tntextbooks.in

இல்லற வாழ்வில் இருந்தாலும் காடு சென்று கடுமையான தியானத்தை மேற்கொண்டார். இவரது இனிய மற்றும் உள்ளத்தை உருக்கும் பாடல்கள் ‘ஆதிகிரந்தத்தில்’ இடம் பெற்றுள்ளன. ‘ஒன்றே கடவுள்’ என்ற கருத்தைக் கூறி இந்து-முஸ்லீம் ஒற்றுமையை உருவாக்க முயன்றார். சீக்கிய சமயம் இவரால் உருவாக்கப்பட்டது.

ஒழுக்கம், பணிவு, நேர்மை, தருமம், உண்மை, கருணை போன்றவை இவர் போதனைகளில் முக்கிய இடம் பெற்றன. இறைவனின் பெயரை எப்போதும் உச்சரித்தல், உடலாலும் உள்ளத்தாலும் குருவிற்குக் கீழ்ப்படிந்து நடத்தல் சீக்கியர்களின் முக்கிய கடமையாகும். இறைவனின் திருநாமங்களை இனிய பாடல்களால் இசையுடன் பாடி இதயத்தைத் தூய்மை செய்து கொள்ள வேண்டும் என்பது இவரது கொள்கை.

### 9. 2. 8. *வல்லபாச்சாரியார்*

இவர் காசியில் பிறந்தார். தென்னிந்தியாவிற்கு குடிபெயர்ந்து பெற்றோருடன் வாழ்ந்தார். தம் இளம் வயதிலேயே கற்றுத் தேர்ந்தார். புண்ணியத் தலங்களுக்கு சென்றார். இல்வாழ்வில் ஈடுபட்டு இரு புதல்வர்களைப் பெற்றார். வடமொழியிலும், பிரிஜ் மொழியிலும் நூல்களை எழுதினார். இவரது கோட்பாடு ‘சுத்த அத்வைதக் கோட்பாடு’ ஆகும். இதனை தூய ஒரு பொருள் கோட்பாடு என்பர். கிருஷ்ணனே உயர்ந்த பிரம்மம், ஆத்மாவிற்கும் பரமாத்மாவிற்கும் வேறுபாடில்லை. பக்தியின் மூலம் முக்தி அடைந்து பரமாத்மாவுடன் ஆத்மா கலந்து கொள்ளலாம் என்பது இவரது கோட்பாடு.

### 9. 2. 9. *மீராபாய்*

அரச குடும்பத்தைச் சார்ந்த இவர் வைணவ சமய மரபில் வளர்க்கப்பட்டார். கிருஷ்ணரிடம் மிகுந்த ஈடுபாடு குழந்தைப் பருவம் முதலே ஏற்பட்டது. தம் கருத்துகளை வட்டார மொழியான ‘பிரிஜ்’ மொழியில் பரப்பினார். பிறப்பு-இறப்பு என்னும் சுழற்சியினின்று விடுபட்டு பேரின்ப நிலையை அடைய கிருஷ்ணபக்தி அவசியம் என்றார். இவரது பக்திப்பாடல்கள்



இனிமையானவை. பக்தி நெறியைச் சுவையான பாடல்கள் வாயிலாகப் பரப்பினர். எளிய பக்தியும், நம்பிக்கையுமே வீடு பேற்றினை அடைய நல்வழி என்றார். பிறப்பால் எவரும் உயர்ந்தவர் இல்லை. உயர்விற்கு காரணம் “செயல்” என்னும் கருத்தைப் பரப்பினார்.

### 9. 2. 10. *சைதன்யர்*

வங்காள மாநிலத்தில் பக்தி நெறியைப் பரப்பிய இவர் ‘ஸ்ரீசைதன்ய மகா பிரபு’ என்று அழைக்கப்பட்டார். இல்வாழ்வில் ஈடுபட்ட இவர் தம் 25ம் வயதில் இல்வாழ்வைத் துறந்து இறைவன் திருப்பணிக்கு தம்மை ஈடுபடுத்திக் கொண்டார்.

கிருஷ்ணன் அல்லது ஹரி என அழைக்கப்படும் புருஷோத்தமன் மேல் ஆழ்ந்த நம்பிக்கையும் அன்பும் கொள்ள வேண்டும் என்பது இவரது கருத்து. “சடங்குகளிலிருந்து விடுபட்டு, ஆடிப்பாடி உணர்வுப் பிழம்பாய் இறைவனின் அருள் வெள்ளத்தில் திளைக்க வேண்டும். கண்ணனை வழிபட்டு, குருவைப் பணிந்து பணிபுரிந்து வந்தால் மாயையில் இருந்து விடுபட்டு இறைவன் திருவடிகளை அடையலாம்” என்றார்.

### 9. 2. 11. *துக்காராம்*

இவர் மஹாராஷ்டிர ஞானி. இல்வாழ்வைத் துறந்து பக்தனாகவும், சீர்திருத்தவாதியாகவும் செயல்பட்டார். மராட்டிய மக்களிடம் நாட்டுப் பற்றை வளர்க்க, சிவாஜி காலத்தில் வாழ்ந்த இவரது போதனைகள் உதவின. கடவுள் எங்கும் நீக்கமற நிறைந்திருப்பவர், வரம்பில்லா ஆற்றல் உடையவர் என்பது இவரது கருத்து. பேரரசர் சிவாஜி இவர் சீடர்களில் ஒருவர். சைதன்யரைப் போன்று பக்திப் பாடல்களை இயற்றியுள்ளார்.

### 9. 2. 12. *துளசிதாசர்*

இவர் சிறந்த பக்திமான், பண்பட்ட கவிஞர் ஆவார். இல்லற வாழ்விலிருந்து துறவற வாழ்வை மேற்கொண்டார். இராமாயணத்தை இந்தி மொழியில் ‘இராம சரிதமானஸ்’ என்ற பெயரில் படைத்தார்.

www.tntextbooks.in

இராம சரித மானஸ் பெரிய இலக்கியப் படைப்பு மட்டுமன்று, உயர்ந்த தெய்விக பக்திக் காவியமும் ஆகும். இராமனை இறைவனின் அவதாரம் எனக் கருதினார். அவரை மனிதன் பக்தியால் அணுகலாம் என்றார். சிறந்த வைணவ பக்தராகவும் ஆசார்யராகவும் போற்றப்படுகிறார்.

### 9. 2. 13. பசவர்

வீர சைவம் எனப்படும் இலிங்காயதம் என்னும் உயரிய நெறியை நிறுவியவர் பசவர் ஆவார். கர்நாட மாநிலத்தில் தோன்றியவர். சாளுக்கிய மன்னரிடம் அமைச்சராகப் பணியாற்றியவர். இந்நெறி ‘சிவனை’ மட்டுமே கடவுளெனக் கருதியது. சிவவழிபாட்டின் மூலம் வீடு பேற்றை அடையலாம் என்பது இவரது ஆழ்ந்த நம்பிக்கை. சாதிப்பாகுபாடு, சடங்கு, உருவ வழிபாடு இவற்றை களைவதில் பெரிதும் ஈடுபட்டார். தம்மைப் பின்பற்றுபவர்கள் புலால் உண்பதையும், கள் குடிப்பதையும் கைவிட வேண்டும் என்ற கடுமையான நிபந்தனை விதித்தார். சமூக சீர்திருத்த வாதியாக விதவை மறுமணத்தை ஆதரித்தும், குழந்தை திருமணத்தை எதிர்த்தும் செயல்பட்டார். இவரைப் பின்பற்றுவோர் லிங்காயத்துகள் என்றழைக்கப்பட்டனர்.

### 9. 2. 14. ஏகநாதர்

இவர் மஹாராஷ்டிரத்தைச் சேர்ந்தவர். பைத்தான் என்னும் ஊரில் பிறந்தார். சிறு வயதிலேயே இவரது உள்ளத்தில் பக்தி, கனல் விட்டு எரிந்தது. இல்வாழ்வில் ஈடுபட்ட இவர் தீண்டத்தகாதோரிடம் எல்லையற்ற அன்புடையவரானார். கண்ணனை அனைத்திலும் கண்டார். கண்ணனின் தீவிர பக்தர், பெரிய பாகவத புருஷர், சிறந்த இல்லற நெறியாளர், பெரிய ஞானி. இன்றும் மக்களுக்கு உயரிய எடுத்துக்காட்டாகத் திகழ்கின்றார்.

### 9. 2. 15. சூர்தாசர்

இவரைப் பற்றி கூறாமல் இருந்தால் பக்தி இயக்கம் நிறைவு பெறாது. இவர் உயர்ந்த ஞானி, நல்ல சமயபரப்புநர், சிறந்த சீர்திருத்தவாதியாவார். இந்தியில் மிகச் சிறந்த நூல்களை



எழுதியுள்ளார். இந்நூல்கள் அனைத்தும் தான் விரும்பும் தெய்வத்தின் பால் செலுத்த வேண்டிய அன்பையும் பக்தியையும் விளக்குகின்றார். இவர் எழுதிய சூர்சாகர் என்ற நூல் அன்பு, பக்தி இவற்றின் மேன்மையையும் கண்ணனைக் குழந்தையாய் கருதி சித்தரிக்கும் அற்புத நிலையையும் விளக்குகிறது. இவர் “வாழ்வு ஒரு விளையாட்டு, வீர தீரச் செயல், ஆனால் போராட்டமன்று; ஏமாற்றம் மிக்க கதையும் அன்று” என்கிறார். இவரது கவிதைகள் மனித இனத்தின் பால் வியத்தகு விளைவை ஏற்படுத்தியதுடன் பக்தி நெறியின் வழிகாட்டியாகவும் திகழ்ந்தன.

## 9. 3. ஆழ்வார்கள்

இந்து சமயம் குறிப்பிடும் அறுவகை சமயங்களுள் சைவம், வைணவம் இரண்டும் இன்றும் மிகவும் சிறப்புடன் போற்றப்பட்டு வருகின்றன. மனித உடலுக்குத் தலை சிறப்பான உறுப்பு. அதில் இருகண்கள் உயரிய இடத்தைப் பெறுகின்றன. அது போல இந்து சமயத்தின் இவ்விரு பிரிவுகளும் கண்களென போற்றத்தக்கவை எனலாம். இவ்விரு சமயங்களும் வாழ்விற்கு இன்றியமையாத நெறிகளை, விரிவாக பின்பற்ற வேண்டிய முறைகளை கூறுகின்றன. இவ்விரு சமயச் சான்றோர்கள் வாழ்ந்து காட்டிய வாழ்க்கை, அருளிச் செய்த அற்புதச் செயல்கள், மற்றும் இலக்கியங்கள் பெரிதும் போற்றத்தக்கவை. சைவ சமயத்தைச் சார்ந்த நாயன்மார்களும் வைணவ சமயத்தைச் சார்ந்த ஆழ்வார்களும் போற்றத்தக்கவர்கள். இப்பாடத்தில் ஆழ்வார்கள் மற்றும் நாயன்மார்களின் வரலாறு, அவர் தம் கோட்பாடுகள், இலக்கியச் சிறப்புகளை விரிவாகக் காண்போம்.

### 9. 3. 1. ஆழ்வார்கள் விளக்கம்

இறைவனின் அருள் வெள்ளத்தில் ஆழ்ந்து கிடப்பவர், இறைவனின் அன்பிலும், இன்பத்திலும் மூழ்கி இருப்பவர் ‘ஆழ்வார்’ எனப்பட்டனர். ‘திராவிட வேத’ மென போற்றப்பட்ட ‘திவ்யப் பிரபந்தத்தை’ அருளியதால் ‘திராவிடாசாரியர்கள்’ என்றழைக்கப் பட்டனர். இவர்களுக்கு ‘மயற்வற மதிநலம் அருளப் பெற்றவர்கள்,’ இருந்தமிழ்புலவர்கள், ஆதிபக்தர்கள் என்ற பெயர்களும் உண்டு.

இவர்கள் எண்ணிக்கையில் பன்னிருவர் ஆவர். வைணவ நெறியைப் போற்றிப் பரப்பியவர் ஆவார்.

*9. 3. 1. 1. ஆழ்வார்கள்காலம்*

ஆழ்வார்கள் அவதரித்த கால அடிப்படையில்

1. முற்காலத்தவர்கள்
2. இடைக்காலத்தலர்கள்
3. பிற்காலத்தவர்கள் எனப்பிரிக்கலாம்.

*9. 3. 1. 2. முற்காலத்தவர்கள்*

பொய்கை ஆழ்வார், பூதத்தாழ்வார், பேயாழ்வார், திருமழிசை, ஆழ்வார் அல்லது திருமழிசைப்பிரான் என்பவர்கள் முற்பட்டவர்கள்.

*9. 3. 1. 3. இடைக்காலத்தவர்கள்*

நம்மாழ்வார், மதுரகவியாழ்வார், குலசேகராழ்வார், பட்டர்பிரான் என்ற பெரியாழ்வார், கோதை நாச்சியார் என்ற ஆண்டாள் என்பவர்கள் இடைக்காலத்தவர்.

*9. 3. 1. 4. பிற்காலத்தவர்கள்*

தொண்டரடிப் பெரியாழ்வார், திருப்பாணாழ்வார், கலியன் என்ற திருமங்கையாழ்வார் என்பவர்கள் பிற்காலத்தவர் ஆவார்.

**9. 3. 2. ஆழ்வார்கள் பற்றிய குறிப்பு, பாடல்கள்**

*9. 3. 2. 1. பொய்கை ஆழ்வார்*

இவர் திருமாலின் கையிலுள்ள ‘பாஞ்ச சன்யத்தின்’ அம்சமாக பூவுலகம் பொலிவுற காஞ்சிபுரத்தில் ‘திருவெஃகா’ என்னும் இடத்தில் தோன்றினார். இவர் அருளிச் செய்தவை - முதல் திருவந்தாதி, பாசுரங்கள்.

இயற்கையே இறைவன், அருளே இறைவன், அன்பே இறைவன், அறிவே இறைவன் என்ற உயரிய கருத்துகளை இவர் பாடல்களில் காணலாம். முதலாழ்வார்கள் காலத்தில் சைவ வைணவ தமிழின் இனிமை, பெருமை, சிறப்பு, இயற்கைக் காட்சி அனைத்தையும் இவர் பாடல்களில் காணலாம்.



இவரது பாடலில் ஒன்று

“நயவேன் பிறர்பொருளை, நன்னேன் கீழாரோடு;
உயவேன் உயர்ந்தவரோடு அல்லால்; - வியவேன்
திருமாலை அல்லது தெய்வம் என்று ஏத்தேன்;
வருமாறு என் நம்மேல் வினை?”

இப்பாடல் ‘பிறர் பொருளை விரும்ப மாட்டேன்,’ கீழான தன்மை உடையவர்களுடன் நட்பு கொள்ள மாட்டேன். உயர்ந்தவரோடு சேர்ந்து வாழ்வேனே அல்லாமல் மற்றர்களோடு சேர மாட்டேன். திருமாலைத் தவிர வேறு தெய்வத்தையும் தெய்வம் என்று புகழ மாட்டேன், வணங்கமாட்டேன். ஆதலால் நம்மை நாடிப் பிறப்பு இறப்புத் துன்பத்தைத் தரும் வினை இனி வரமுடியாது. இத்தகைய உயர்ந்த சமயக் கருத்துகளின் கருவூலங்களாக ஒவ்வொரு பாடல்களும் திகழ்கின்றன.

*9. 3. 2. 2. பூதத்தாழ்வார்*

இவர் மகாபலிபுரத்தில் குருக்கத்தி மலரில் தோன்றினார். எம்பெருமானிடம் பக்தி நிறைந்தவராய் இரண்டாம் திருவந்தாதி எனும் பாசுரங்களை அருளிச் செய்தார். காஞ்சியில் கோயில் கொண்டுள்ள பெருமானைப் புகழ்ந்து பாடியுள்ளார்.

தமிழ் மொழியை ஞானத் தமிழ் என்றும், தன்னை தமிழன் என்று சொல்லிக் கொள்வதிலும் இருந்து தமிழ்மொழி மீது இவர் கொண்டிருந்த பற்றினையும் விருப்பத்தையும் வெளிப்படுத்துகிறது. இவர் சமய சமரச நோக்கம் உடையவர். அன்பு, சிந்தனை இவற்றால் ஞானத்தைப் பெற்ற நிலையைப் பின்வரும் பாடலால்,

“அன்பே தகழியா, ஆர்வமே நெய்யாக,
இன்புருகு சிந்தை இடுதிரியா, - நன்புருகி
ஞானச் சுடர்விளக்கு ஏற்றினேன் நாரணற்கு;
ஞானத் தமிழ் புரிந்த நான்”

என விளக்குகிறார்.

www.tntextbooks.in

அறிவை பெருக்கும் தமிழை விரும்பிய நான் அன்பையே அகலாக - எண்ணெய், திரி முதலியவற்றைத் தாங்கும் கருவியாக அமைத்து அறிவாகிய சுடர்விளக்கை ஏற்றினேன். ஆசையை நெய்யாக்கிக் கொண்டேன். எம்பெருமானை எண்ணி இன்பத்தால் உருகுகின்ற உள்ளத்தையே எண்ணெயில் இட்ட திரியாகக் கொண்டேன். நன்றாக மனம் உருகி ஞான ஒளியாகிய விளக்கைத் திருமாலுக்காக ஏற்றினேன் என்பது இப்பாடலின் கருத்தாகும்.

### *9. 3. 2. 3. பேயாழ்வார்*

இவர் சென்னையிலுள்ள மைலாப்பூரில் தோன்றியவர். இவர் அருளிச் செய்தவை மூன்றாம் திருவந்தாதி பாசுரங்கள்.

எந்த தெய்வத்தை வணங்கினாலும், கடவுளிடம் நம்பிக்கை வேண்டும். இந்த உறுதியான நம்பிக்கை கொண்டவர்களே உண்மையான பக்தர்களாவர். இவ்வுண்மையை கூறும் பேயாழ்வார் அருளிச் செய்த வெண்பா ஒன்றினையும் கருத்தையும் காண்போம்.

"அது நன்று, இது தீது என்று ஐயப்படாதே,
மது நின்ற தண்துழாய் மார்பன் - பொது நின்ற
பொன் அம் கழலே தொழுமின்! முழு வினைகள்
முன்னம் கழலும் முடிந்து"

என்கிறார் பேயாழ்வார். அது நல்லது. இது கெட்டது என்ற சந்தேகம் வேண்டாம். மனக்குழப்பம் வேண்டாம். தேன் சிந்துகின்ற, குளிர்ந்த அழகிய துளசி மாலையை அணிந்த மார்புடைய திருமால் எல்லோருக்கும் பொதுவானவன். அவனுடைய அழகிய திருவடிகளை வணங்க வேண்டும். அவனை நினைத்தாலே போதும், வணங்குவதற்க முன்பே உங்கள் வினைகள் எல்லாம் ஓடிப்போய் விடும். மீண்டும் அவை உங்களை அணுகாது என்பது உறுதி என்கிறார்.

இவரும் பொய்கையாழ்வார்; பூதத்தாழ்வார் போன்று சமரச நோக்குடையவர். பகுத்தறிவாகிய ஒளிவிளக்கைப் பயன்படுத்தி எந்த தெய்வத்தை வழிபட்டாலும் நன்மை அடையலாம் என்பது இவரது கோட்பாடு ஆகும்.



### *9. 3. 2. 4. திருமழிசையாழ்வார்*

இவர் திருமழிசை என்ற தலத்தில் அவதரித்தமையால் திருமழிசை ஆழ்வார் என்ற பெயர் பெற்றார். இவர் சக்ராம்சமாய் அவதரித்தார். சிவவாக்கியர் என்னும் பெயருடன் சைவ சமயத்தில் இருந்தார் என்றும் பேயாழ்வாரிடம் உபதேசம் பெற்று வைணவத்தைச் சார்ந்தவர் என்றும் கூறுவர். இவர் அருளிச் செய்தமை 1. நான்முகன் திருவந்தாதி, 2. திருச்சந்த விருத்தம்.

இறைவன் ஒருவனே என்ற உண்மை இவர் பாடல்களில் பொதிந்து கிடப்பதைக் காணலாம். இவர், 'எல்லாம் திருமால் மயம்' என எண்ணுகிறார். இறைவனிடமிருந்தே எல்லாம் பிறக்கின்றன. அவனிடமே எல்லாம் அடங்குகின்றன என்பதை சிறந்த எடுத்துக்காட்டுடன் விளக்குகிறார்.

கடல் எவ்வாறு அலைகளை உண்டாக்கி சீறி எழச் செய்து பின் தன்னுள்ளே அடங்கிவிடச் செய்கிறதோ, அது போல் இறைவனிடமிருந்து பிறந்த தாவரங்களும், மற்ற உயிரினங்களும் மீண்டும் இறைவனிடமே சென்றடைகின்றன. இத்தகு சீரிய இயல்புகள் இறைவனிடம் உள்ளன.

இக்கருத்தை

"தன்னுள்ளே திரைத்தெழும் தரங்கவெண் தடம்போல்
தன்னுள்ளே திரைத்தெழுந்து அடங்குகின்ற தன்மைபோல்
நின்னுள்ளே பிறந்து இறந்து நிற்பவம் திரிபவும்
நின்னுள்ளே அடங்குகின்ற நீர்மை நின்கண் நின்றதே"

என்ற பாடலால் விளக்குகிறார்.

### *9. 3. 2. 5. நம்மாழ்வார்*

திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள ஆழ்வார் திருநகரில் தோன்றியவர். இவருக்கு மாறன், சடகோபன், பராங்குசன், வகுளபூஷணன் என்ற சிறப்பு பெயர்கள் இருந்தன. இவர் மொத்தம் 1296 பாசுரங்களை இயற்றியுள்ளார். இப்பாசுரங்களை நான்காவது ஆயிரம் என்பர். இவர் திருவித்தம், திருவாசிரியம், பெரிய

www.tntextbooks.in

திருவந்தாதி, திருவாய்மொழி போன்ற பாசுரங்களை இயற்றியுள்ளார். இவருக்கிருந்த இடத்திலயே 108 வைணவத்தலங்களில் உள்ள பெருமாள் காட்சியளித்தார் என்பர்.

இவரது பாசுரங்கள் நான்கு வேதங்களின் சாரத்தை பிரதிபலித்தன. இவரது பாடல்கள் பெரும்பாலும் அகப்பொருள் துறையைச் சார்ந்தவை. இவர் தலைவியாக, நற்றாயாக, செவிலியாக, தோழியாக நின்று தலைவியின் காதலை பாடலாக பாடியுள்ளார். இவர் 108 வைணவத் தலங்களைப் பற்றியும், பாசுரங்கள் பாடியுள்ளார்.

சிறந்த வேதாந்தக் கருத்துகள், உயர்ந்த அறிவுரைகள், இயற்கை காட்சிகள், நல்ல உவமைகள், உருவகங்கள், சமரச சன்மார்க்க நெறி ஆகிய அனைத்துமே இலக்கியச் சுவை மிகுந்தவை; பழந்தமிழ்ப் பண்பாட்டை உணர்த்துபவை. படிக்கப் படிக்கத் தெவிட்டாத இன்பம் தருபவை. வைணவ தத்துவத்தை பாடல்கள் வாயிலாக மிகவும் சிறந்த முறையில் வெளியிட்ட பெருமை இவரைச் சாரும்.

பேரின்பம் பெறத் தடையாய் இருப்பது உலகப் பற்று. உலகப் பற்றினை விட்டு இறைவனைச் சரணடைந்தால் அனைத்தையும் பெறுவது எளிது. யான், எனது என்ற இருவகைப் பற்றுகளையும் ஒழித்தல் வேண்டும். நமது ஆத்மா இறைவனின் இல்லம் ஆதலால் அதை உரியவனாகிய இறைவனிடமே ஒப்படைத்துவிடுதலே முறை என்கிறார் நம்மாழ்வார்.

இதனை,

“வீடுமின் முற்றவும்
வீடு செய்து உம்முயிர்
வீடுடையானிடை
வீடு செய்துய்ம்மினே”

என்னும் பாடலில் விளக்குகிறார்.

### *9. 3. 2. 6. மதுரகவியாழ்வார்*

இவர் திருநெல்வேலி மாவட்டத்தில் ஆழ்வார் திருநகருக்கு அருகில் உள்ள திருக்கோளூர் என்னும் ஊரில் பிறந்தவர். இவர்



வேதம் உணர்ந்த நம்மாழ்வாரைத் தவிர வேறு தெய்வம் இல்லை என்றிருந்தவர். எனவே இவரது பாசுரங்கள் அனைத்தும் நம்மாழ்வாரைப் பற்றியனவாகவே இருந்தன. இருந்தாலும் நாதமுனிகள் இவரது பிரபந்தத்தையும் நாலாயிரத் திவ்யப் பிரபந்தத்தில் சேர்த்து பெருமைப்படுத்தினார்.

### *9. 3. 2. 7. குலசேகராழ்வார்*

இவர் கூடலர்கோன், கொல்லி கூவலன், குலசேகரப் பெருமாள் என்ற வேறு பெயர்களால் அழைக்கப் பெற்றார். கேரளத்தில் ‘திருவஞ்சிக்களம்’ என்னுமிடத்தில் அரச வம்சத்தில் பிறந்தார். இவர் பாடியது பெருமாள் திருமொழி எனப்படும்.

மண்ணாளும் செல்வத்தை விட, மகா விஷ்ணுவுக்குச் செய்யும் சேவைகளும், காட்டும் பக்தியும் சிறந்தவை.. இன்பம் தருபவை என்ற கொள்கை உடையவர். இவர் பாடல்கள் எல்லாம் தெவிட்டாத தேனாக, வற்றாத சுவைக் கடலாய் விளங்குகின்றன.

இவர் இராமாவதாரத்தில் மிகுந்த ஆர்வமும் ஈடுபாடும் உடையவராய் இருந்தார். பத்துப் பாடல்களில் இராமாயணக் கதையின் சுருக்கத்தைக் கொடுத்துள்ளார். இயற்கை வருணனை, பல அறிவுரைகள், அருள் மொழிகள், உயரிய சரணாகதி நெறி போன்றவற்றை தம்முள் கொண்ட பாசுரங்களைப் பாடினார்.

ஒரு பொருளின் மேல் நீங்காத அன்பு, ஆசை, காதல் உடையவர்கள். அப்பொருளை விட்டு எக்காரணத்தாலும் பிரிய விரும்ப மாட்டார்கள். இது மனிதரது இயல்பும் அன்பின் தன்மையுமாகும். இக்கருத்தை இவரது பாடல்கள் வெளிப்படுத்தின. எக்காலத்தும் அழியாத செல்வ வளங்களுடன் தேவலோக மங்கையர் புடைசூழ தேவலோகத்தினரை ஆளும் வாய்ப்பு கிடைத்தாலும் அந்நிலை வேண்டியதில்லை என பலமுறை தம் பாசுரங்களில் கூறியுள்ளார். மேலும் திருவேங்கட மலையில் உள்ள கோனேரிச் சுனையில் சிறு மீனாகப் பிறந்து இறைவன் வாழும் வேங்கட மலையை விட்டு நீங்காமல் இருக்க விரும்புவதாக கூறுகிறார். அனைவரின் நெஞ்சிலும் இறை பக்தியை ஊட்டுகிறார். இதனைப் பின்வரும் பாடலில் உணர்த்துகிறார்.

www.tntextbooks.in

"ஆனாத செல்வத்து அரம்பையர்கள் தற்சூழ
வானாளும் செல்வமும் மண்ணரசும் யான் வேண்டேன்
தேனார் பூஞ்சோலைத் திருவங்கடச் சுனையில்
மீனாய்ப் பிறக்கும் விதியுடையேன் ஆவேனே"

என்று அழகாகப் பாடுகின்றார்.

### *9. 3. 2. 8. பெரியாழ்வார்*

இவருக்குப் 'பட்டாபிரான்,' 'விஷ்ணுசித்தர்' என்ற பெயர்களும் உண்டு. இவர் பாண்டி நாட்டில் ஸ்ரீவில்லிபுத்தூரில் பிறந்தார். திருப்பல்லாண்டுடன் பெரியாழ்வார் திருமொழி பாசுரங்களைப் பாடியுள்ளார். நாலாயிரத் திவ்யப் பிரபந்தத்தில் முதலில் அமைந்துள்ள பாடல்கள் இவரது பாடல்களே.

இவரது பாடல்கள் இனிய ஓசை நயமுடையவை. தெவிட்டாத தேன் போன்ற சுவையுடையவை. இவர் பாடல்களில் குழந்தைகளின் உள்ளம், குறும்பு மனம், விளையாட்டு இயல்பு, நடையுடை பாவனைகளை அற்புதமாய் படம் பிடித்து காட்டப்பட்டுள்ளதைக் காணலாம். தாய்க்குத் தன் பிள்ளைகளிடம் காட்டும் அன்பையும், தாயின் தியாகத்தையும் இவரது பாடல்களில் காணலாம். இயற்கை எழில், உலகியல் நடை, பக்தியின் பெருமை, உய்வடையும் நெறிமுறைகளையும் இவரது பாசுரங்கள் விளக்குகின்றன.

சூழ்நிலையால் மனிதன் உருவாக்கப்படுகிறான். தீய சூழலில் வாழ்ந்தவன் நல்ல சூழலை நாடி வரும்போது முன்பு அவனிடமிருந்த தீய பழக்க வழக்கங்கள் நீங்கி விடுகின்றன. நல்ல சூழலில் வாழ்ந்த எவராவது அதனை விட்டு விலகித் தீய சூழலில் அகப்பட்டு சிக்கி துயரப்பட விரும்புவாரா? ஒரு போதும் விரும்பார். சூழலைப் பொறுத்தே அதாவது, நண்பர்களைப் பொருத்தே மக்கள் நல்லவர்களாகவோ, கெட்டவர்களாகவோ மாறுகின்றனர் என்ற பேருண்மையை விளக்குகிறார்.

### *9. 3. 2. 9. ஆண்டாள்*

இவருக்குக் கோதை, சூடிக் கொடுத்த நாச்சியார், என்ற பெயர்கள் உண்டு. பெரியாழ்வாரின் வளர்ப்புப் பெண் ஆண்டாள்.



இவ்விருவரும் ஒரே காலத்தவர். இவர் அருளிச் செய்த பாசுரங்கள் திருப்பாவை, நாச்சியார் திருமொழி என்னும் இரண்டு தலைப்புகளில் அமைந்துள்ளன.

இயற்கையில் எழில் வண்ணம், பக்திச்சுவை, உயரிய ஒழுக்க நெறி, மகளிர் மனப்பான்மை, காதலில் ஈடுபட்ட மகளிரின் மனநிலை, கற்புடை மகளிர் பண்பு, பெண்களின் கடமை, அரிய தத்துவக் கருத்துகள் ஆகிய அனைத்தும் ஆண்டாளின் பாடல்களின் கொஞ்சும் தமிழில் கொடுக்கப்பட்டுள்ளன. பண்டையத் தமிழ் மரபையொட்டிய அகப்பொருள் துறைக் கருத்துகள் ஆண்டாள் பாடல்களில் அமைந்துள்ளன.

இவரது பாடல்களின் தமிழரின் பழக்க வழக்கங்களைக் காணலாம். இனிமை, தெளிவு, எளிமை வாய்ந்தவை இவரது பாடல்கள். இவரது பாடல்கள் நாயக - நாயகி பாவத்தை உணர்த்துகின்றன.

திருப்பாவையின் இரண்டாம் பாடலில் 'பாவை நோன்பு' பற்றி மிகத் தெளிவாகக் கூறியுள்ளார். அறக் கோட்பாடுகள், அருள் உணர்வு நோன்புக்கு வேண்டிய உடல்நிலை, உள நிலை இவற்றை இப்பாடல் அழகாக எடுத்துரைக்கின்றது.

"வையத்து வாழ்வீர்கள்" எனும் பாடலில் பாவை நோன்பு இருப்பவர்கள் அதிகாலையில் எழுந்து நீராடி நெய், பால் உண்ணாது, மையிட்டு மலரிட்டு அழகு செய்து கொள்ளாமல் இருக்க வேண்டும். மேலும் தீய செயல்களில் ஈடுபடாமல், தன்னால் இயன்றவரை தகுதி கருதி தானமும், இல்லையென யாசிப்போர்க்கு தருமமும் செய்து அறவழியில் நிற்க வேண்டும். இப்பிறப்பினின்றும் உய்யும் வழியைக் கருதி திருமாலை வணங்க வேண்டும் என்பது இப்பாடலின் கருத்தாகும்.

### *9. 3. 2. 10. தொண்டரடிப் பொடியாழ்வார்*

இவர் கும்பகோணத்திற்கு அருகேயுள்ள திருமண்டங்குடியில் பிறந்தவர். திருமால் பாசுரங்களையும், திருப்பள்ளியெழுச்சி

பாசுரங்களையும் இவர் இயற்றினார். இவர் திருமாலே முழு முதற்கடவுள், வைணவமே உயர்ந்த சமயம் என்ற கொள்கை உடையவர். இவர் திரு அரங்கப் பெருமானை பற்றியேப் பாடினார்.

இவருடைய பாடல்கள் உலக நீதியையும் ஒழுக்கத்தின் உயர்வையும், வாழ்வின் நிலையாமையையும் எடுத்துக்காட்டுகின்றன.

“ஒன்றே குலம் ஒருவனே இறைவன்” என்ற கொள்கையில் சாதி வேற்றுமை இல்லை என்பதை வலியுறுத்தினர்.

### *9. 3. 2. 11. திருப்பாணாழ்வார்*

திருச்சியை அடுத்துள்ள உறையூரில் பிறந்த இவர் ‘அமலனாதிபிரான்’ என்னும் பத்துப் பாசுரங்களை அருளிச் செய்தார். ஏழைகள் மத்தியில் இறைவன் நடம்புரிகிறான் என்பதும் இறைவன் முன் ஏற்றத்தாழ்வுகள் இல்லை என்பதும் இவரது முக்கிய கோட்பாடாகும். இவர் திருஅரங்கப் பெருமானைப் பற்றியே பாடினார்.

### *9. 3. 2. 12. திருமங்கை ஆழ்வார்*

இவருக்கு பரகாலன், மங்கை மன்னன், ஆலிநாடன், நாலுகவிப்பெருமாள் என்ற பல பெயர்கள் உண்டு. தஞ்சை மாவட்டத்தில் திருவாலி நகரை அடுத்துளள திருக்குறையலூரில் தோன்றினார். இவர் பாடியவை பெரிய திருமொழி, திருக்குறுந் தாண்டகம், திருநெடுந்தாண்டகம், திருவெழு கூற்றிருக்கை, சிறிய திருமடல், பெரிய திருமடல் அடங்கிய பாசுரங்கள் ஆகும்.

திருவரங்கக் கோயிலின் சுற்றுச் சுவர்கட்டி கோயில் திருப்பணி செய்த பெருமையை உடையவர். அடியவர்களுக்கு அன்னமிடுவதை அரிய தொண்டாகக் கருதி செயல்படுத்தி வந்தவர். திருமாலின் அழகிய பண்புகளை இனிய பாடல்களால் பாடி மனம் உருகி அனுபூதி நிலையில் நின்று ஆனந்தம் பெற்றவர். இவரது பாடல்களில் பழந்தமிழர் பண்பாடும், அறநெறியும் ஒளிர்வதைக் காணலாம். வைணவர் அனைவரும் அறிந்து அன்புடன் பக்திச்சுவை ததும்ப பாடும் பாடல் ஒன்றினைக் காண்போம். அப்பாடல்



“குலம் தரும்; செல்வம் தந்திடும்; அடியார் படுதுயர்
ஆயின எல்லாம்,
நிலந்தரம் செய்யும்; நின் விசும்பு அருளும்; அருளொடு
பெரு நிலம் அளிக்கும்
வலம் தரும்; மற்றும் தந்திடும்; பெற்ற தாயினும்
ஆயின செய்யும்
நலந்தரும் சொல்லை நான் கண்டுகொண்டேன்;
நாராயணா வென்னும் நாமம்”

என்று ‘நாராயண’ மந்திரத்தின் சிறப்பைக் கூறுகிறது.

இப்பாடலின் பொருள். நாராயணன் என்னும் திருப்பெயரை நாள்தோறும் சொல்லி வந்தால் இழிந்த குடியிலே பிறந்தாலும் தாம் பிறந்த குடியை உயர்ந்த குடியாக்கும், உலக வாழ்விற்குரிய செல்வத்தைத் தரும்; மறுமைக்கு வழிகாட்டி அருளாகிய அழியாத செல்வத்தை அள்ளித் தரும். அடியவர்கள் அடைகின்ற துன்பங்கள் அனைத்தையும் அழித்துவிடும். அத்துயரங்கள் நிலைத்து நிற்கா வண்ணம் அழித்துவிடும். பெரிய இன்பம் நிறைந்த வானுலகத்தை அளிக்கும். அவ்வுலக இன்பத்தை நிரந்தரமாக்கும். நினைந்த காரியங்கள் யாவற்றினும் வெற்றியைத் தரும் எண்ணற்ற நன்மைகள், அளவிடற்கரிய இன்பங்களைத் தரும். ஈன்றெடுத்த தாயைக் காட்டிலும் பெருங்கருணை பூண்டு அளவற்ற நன்மையை தரும். ஆகவே அத்தகைய அளவிடற்கரிய நன்மை தரும் சொல்லாகிய “நாராயணா” என்னும் சொல்லை மனதார போற்றி உச்சரிப்போமாக!

மேலும் இவர் வைணவத்தில் மட்டுமன்றி சைவ நெறியிலும் ஈடுபாடு கொண்டவர். இக்கருத்தை “மன்னுமலை அரையன் பொற்பாவை” - எனத் தொடங்கும் சிவனது நடனத்தை விளக்கும் பாடலை அருளியுள்ளார். இப்பாடல் பெரிய திருமடல் என்னும் பகுதியில் அமைந்துள்ளது.

இவ்வாறு பன்னிரு ஆழ்வார்களும் வைணவ சமய நெறிகளையும், வாழ்வியல் நெறிகளையும், ஆன்மீக உணர்வையும் ஊட்டி வைணவ சமயத்தைப் புதுமெருகூட்டி ஒளிபெறச் செய்தனர்.

www.tntextbooks.in

### 9. 3. 3. ஆழ்வார்களின் அரிய தொண்டு

1. வைணவ பக்தி இயக்கம் இந்து சமயத்திற்கு புதிய தெம்பையும், புதிய ஆற்றலையும், பெருஞ்செல்வாக்கினையும் அளித்தது. இதற்கு முக்கிய காரணம். ஆழ்வார்களே ஆவர்.
2. ஆழ்வார்களால் தமிழ் இலக்கியம் நல்ல வளர்ச்சி அடைந்தது.
3. வைணவ சமயக் கருத்துகளையும், விஸிஷ்டாத் வைதக் கருத்துகளையும், அனைவரும் புரிந்து கொள்ளும் வண்ணம் எளிய இனிய நடையில் தமிழில் கொடுத்த பெருமை ஆழ்வார்களையேச் சாரும்.
4. பக்தி இயக்கத்தைச் சார்ந்தவர்கள் இந்தியாவின் பல்வேறு பாகங்களில் பேசப்படும் வட்டார மொழிகளில் தத்துவ, ஆன்மீக கருத்துகளை வெளியிட்டனர். ஆழ்வார்களும் இப்பணியில் பெரும்பங்கு வகிக்கின்றனர்.
5. சாதி, இனப் பாகுபாடுகளைக் கடந்த நிலையில் சமயப் பணியை மேற்கொள்ள வேண்டும் என்பதற்கு முன்மாதிரியாய் இவர்களது வாழ்வு அமைந்தது. ஆழ்வார்களின் திருக் கூட்டத்தில் பல இன மக்கள் இருப்பதையும் காண்கிறோம்.
6. எளிய 'சரணாகதித் தத்துவத்தை' தங்கள் பாசுரங்களில் அனைவரும் அறிந்து பின்பற்றும்படி விளக்கியுள்ளனர்.
7. 'திருப்பாவை'யில் ஆண்டாள் சிறப்பித்துக் கூறியுள்ள 'நாயகநாயகி' உறவுமுறை இறைவனிடத்து அடியார் மேற்கொள்ள வேண்டிய அன்பு நெறியினை உலகறியச் செய்கிறது.
8. வேதங்கள், உபநிடதங்கள், புராணங்கள், காவியங்கள் அனைத்திலும் உள்ள உயரிய நெறிகளையும், தத்துவங் களையும் இவர்களது எளிய பாடல்கள் எடுத்துக்கூறுகின்றன. அவர்களின் தூய வழியில் செல்ல தூண்டுகின்றன.



9. ஆழ்வார்கள் உருவ வழிபாட்டில் மிகுந்த நம்பிக்கை கொண்டிருந்தனர். இறைவனை ஆராதிப்பதில் மிகுந்த ஈடுபாடு கொண்டிருந்தனர். இது பாமர மக்களை நல்வழிப்படுத்த உதவியது.
10. உலக இன்பங்கள் நிலையற்றவை, பிறப்பு, இறப்பு இல்லாத இறைவனின் திருவடிகளைப் பற்றி நற்கதி அடைவதே நிலையானது என்ற அறநெறியைப் பரப்பினர்.
11. பேரின்ப நிலையை அடைவது எவ்வித வேற்றுமைகளும் தடையாக இருக்கக் கூடாது என்ற உணர்வுடன் சமத்துவ மனப்பான்மையுடன் சேவை புரிந்தனர்.
12. ஆலயத் திருப்பணிகளுக்கும், சமூக நற்பணிகளிக்கும் ஆழ்வார்கள் தங்கள் வாழ்வை அர்ப்பணித்துக் கொண்டனர்.
13. இவ்வாழ்வார்கள் நாடு முழுவதுமுள்ள வைணவத் தலங்களை

    வடநாடு–நேபாளம், துவாரகை
    மலை நாடு - திருவனந்தபுரம்
    நடுநாடு - திருக்கோவிலூர், திருவேங்கடம்
    தொண்டை நாடு - காஞ்சிபுரம்

    எனப் பிரித்து அவ்விடங்களில் கோயில் கொண்டுள்ள பெருமானைப் புகழ்ந்து பாடியும், மங்கள சாசனம் செய்துள்ளனர்.
14. இவர்களின் 'அருளிச் செயல்கள்,' 'நாலாயிரத் திவ்யப் பிரபந்தமாகத்' தொகுக்கப்பட்டுள்ளன.

www.tntextbooks.in

| பெயர் | எண்ணிக்கை | பாசுரங்கள் |
|---|---|---|
| பொய்கையாழ்வார் | 100 | முதலாம் திருவந்தாதி |
| பூதத்தாழ்வார் | 100 | இரண்டாம் திருவந்தாதி |
| பேயாழ்வார் | 100 | மூன்றாம் திருவந்தாதி |
| திருப்பாணாழ்வார் | 10 | அமலனாதிபிரான் |
| திருமழிசையாழ்வார் | 216 | திருச்சந்த விருத்தம், நான்முகன் திருவந்தாதி |
| நம்மாழ்வார் | 1296 | திருவாசிரியம், திருவாய்மொழி, திருவிருத்தம், பெரிய திருவந்தாதி |
| மதுரகவியாழ்வார் | 11 | கண்ணினுன் சிறுத்தாம்பு, |
| பெரியாழ்வார் | 473 | பெரியாழ்வார் திருமொழி, திருப்பல்லாண்டு |
| ஸ்ரீஆண்டாள் | 173 | நாச்சியார் திருமொழி, திருப்பாவை |
| குலசேகராழ்வார் | 55 | பெருமாள் திருமொழி பெரிய திருமொழி, திருக்குறுந்தாண்டம், திருநெடுந்தாண்டகம் |
| திருமங்கையாழ்வார் | 1361 | பெரிய திருமடல், திருவெழு கூற்றிருக்கை, சிறிய திருமடல் |
| தொண்டரடிப் பொடி யாழ்வார் | 55 | திருமலைத் திருப்புகழ்ச்சி |
| | 4000 | |

சுருங்கக் கூறின், ஆழ்வார்கள் “எல்லாரும் எல்லாமும் பெற வேண்டும்; இல்லாமை இல்லாத நிலை வேண்டும்” என்ற உயரிய நோக்கத்துடன் சமயப் பணிகளையும், சமுதாய நற்பணிகளையும் இணைத்து அருந்தொண்டாற்றினர்.

## 9. 4. நாயன்மார்கள்

தமிழகத்தில் சைவநெறியைத் தழைத்தோங்கச் செய்த பெருமை நாயன்மார்களைச் சாரும். இவர்கள் எளிய, இனிய மனம் படைத்தவர்கள். அவர்கள் தத்துவத்தையும், இறைஞானத்தையும் போதிக்க வந்த போதகர்கள் அல்லர். எளிய தம் வாழ்க்கை



முறையால், தியாக மனப்பான்மையால் மக்களிடம் அன்பு, அருள் நெறியினைப் பரப்பியவர்கள். இத்தகைய அடியவர்களாக நாயன்மார்கள் போற்றப்படுகின்றனர். இவர்களைப் பற்றியும், இவர்களது எளிய வாழ்க்கை மற்றும் அரிய செயல்களையும் இப்பாடத்தில் காண்போம்.

### 9. 4. 1. சமயாசாரியர்

சமயத்தை வளர்த்து, தனி மரபை ஏற்படுத்தியவர்கள் என்பது பொருள். நாயன்மார்கள் அறுபத்தி மூவராவர். இவர்களுள் திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர், மாணிக்க வாசகர் என்னும் நால்வரே சமயாச்சாரியர் என்னும் உயரிய நிலையைப் பெற்றவராவர். அன்பும் பக்தியும் கலந்த வாழ்க்கையாலும், தளராத உழைப்பாலும், பக்திப் பரவசமூட்டும் பாடல்களாலும் தமிழகத்தில் சைவநெறி தழைத்தோங்க பெருந்துணை புரிந்தனர் என்பது குறிப்பிடத் தக்கது.

### 9. 4. 2. நாயன்மார்களுள் சிலர் - சிறுகுறிப்பு, பாடல்கள்

நாயன்மார்கள் அறுபத்து மூவரில் சமயச் சாரியர்கள் நால்வரோடு சிறுத்தொண்டர், மங்கையர்கரசியார், திருமூலர், பூசலார், கண்ணப்பர், திருநீலகண்டர், அப்பூதி அடிகளார். காரைக்கால் அம்மையார் போன்றோர் குறிப்பிடத்தக்கவராவர். சைவ சமய பக்திப் பாடல்களைத் தொகுத்து அளித்தவர். நம்பியாண்டார் நம்பி ஆவார். இவற்றைப் பன்னிரு திருமுறைகளாக வகைப்படுத்தினார். சமயச்சாரியர்கள் என்று சிறப்பிக்கப்படும் நால்வரும் ‘சைவசமயக் குரவர்’ எனவும் அழைக்கப்படுவர். இவர்களது வரலாற்றையும் அரிய செயல்களையும் கோட்பாடுகளையும் காணலாம்.

#### *9. 4. 2. 1. திருஞான சம்பந்தர்*

சோழநாட்டு சீர்காழியில் சிவபாத இருதயர் திருமகனாய் அவதரித்தார். மூன்றாம் வயதில் உமாதேவியாரால் ஞானப்பால் ஊட்டப் பெற்றார். தமிழ் நாடெங்கும் சுற்றி, தலங்கள் தோறும் இசைப் பதிகங்கள் பாடி, மக்களை சிவநெறியில் ஆற்றுப்படுத்தினார். வேத நெறியிலும் தமிழர் நெறியிலும் ஈடுபாட்டுடன் சிவபெருமானை

வழிபட்டு தமிழர் சமயக் கோட்பாடுகளை மேற்கொண்டார். தேவாரம் அருளிச் செய்து அம்மையப்பரைக் கண்குளிரக் கண்டு களித்தார்.

சமணர்களை வென்று சைவ சமயத்தை நிலை நாட்டினார். சமணர்களை வெல்லும் வாதப் போரில் நெருப்பில் தமது ஏடுகளை இட்டும் வேகாமல் பசுமையுடன் எடுத்தும், வைகை ஆற்று நீரில் எதிர்த்தோடும் படியும் செய்தார். இதனையே அனல்வாதம், புனல் வாதம் என்பர். திருக்கொள்ளம்புதூரில் பதிகம் பாடி ஓடத்தை ஓடச் செய்தார். திருவோத்தூரில் ஆண்பனையை பெண்பனையாக்கினார். திருமைலாப்பூரில் எலும்பைப் பெண்ணாக்கினார். திருநல்லூர் பெருமணத்தில் வைகாசி திங்களில் மூலநட்சத்திரத்தில் முக்தியடைந்தார்.

இவர் நிகழ்த்திய அற்புதங்களைக் குறிக்கும் பாடல் வருமாறு

“புனலில் ஏடெதிர் செல்லெனச் செல்லுமே
புத்தனார் தலை தத்தெனத் தத்துமே
கனலில் ஏடிடப் பச்சென்றிருக்குமே
கதவு மாமறைக் காட்டில் அடைக்குமே
பனையில் ஆண்பனை பெண்பனையாகுமே
பழைய என்புபொற் பாவையது ஆகுமே
சின அராவிடந் தீரெனத் தீருமே
சிறந்த சம்பந்தர் செந்தமிழ்ப் பாடலே”

### சமயக் கருத்து

இவரது தேவாரம் முழுவதும் சிவனையே முழு முதற் கடவுளாக கூறுகிறது. சிவனுடைய பல வடிவங்களையும், பல பெயர்களையும், அவன் அடியவர்கட்கு செய்த பல அருட்செயல்களையும், பல திருவிளையாடல்களையும் அவன் எழுந்தருளியுள்ள பல பதிகளையும் அவருடைய தேவாரப் பாடல்கள் எடுத்துக் கூறுகின்றன. இவர் பாடல்களில்

1. சிவபெருமான் மக்களுக்கு கடவுள்
2. பிறப்பு, இறப்பு இல்லாதவன்



3. உலகத்தினிடத்தும், உயிர்களிடத்தும் ஒன்றாயும் வேறாயும், உடனாயும் இருப்பவன்
4. உயிர்களின் பிறவிப்பிணிகளை நீக்குபவன்
5. தன்னை வந்தடைபவர்களது பாவங்களை நீக்கி முக்தி தருபவன்
6. தான் இன்புற்றிருப்பதைப் போல தன்னை அடையும் உயிர்களையும் இன்புற்று இருக்கச் செய்கிறான். தன் அடியார்களுக்குப் பல வழிகளில் அருள் செய்து அவர்களை ஆட்கொள்கிறான் போன்ற கோட்பாடுகளைக் காணலாம்.

### சிவனை வழிபடுவதால் கிடைக்கும் பலன்கள்

சிவனைத் தம் கடவுளாகவும், தம்மை அவன் திருவடிகளை வணங்கும் அடியாராகவும் உள்ளத்தில் கொண்டு வணங்கும் மக்கள் பின்வரும் நன்மைகளைப் பெறுவர் என்கிறார்.

1. தமக்கு நேரும் துன்பங்களிலிருந்து விடுதலை பெறுவர்.
2. வினைகளில் இருந்து விடுதலை அடைவர்.
3. இன்பம் அடைகின்றனர்.
4. மறுபிறப்பினின்று நீங்குகின்றன.
5. வீடு போற்றை அடைகின்றனர்.

இவரது வாழ்க்கை இரு பெரும் தத்துவங்களை உணர்த்துகிறது.

1. இறைவனுடைய புதல்வர் என்ற பெருந்தகுதியை பெற்றார். சத்புத்திர மார்க்கத்தை உணர்த்துகிறது.
2. தமக்கென்று வாழாமல், உயிர்கட்கு உதவி செய்ய வேண்டுமென்ற ‘தன்னலமற்ற வாழ்க்கை’ நெறி என்பனவாகும்.

www.tntextbooks.in

### *9. 4. 2. 2. அப்பர்*

திருநாவுக்கரசு சுவாமிகளே 'அப்பர்' என வழங்கப்படுகிறார். திருஞானசம்பந்தரால் 'அப்பரே' என அழைக்கப் பெற்றார். இவரது இயற்பெயர் 'மருள்நீக்கியார்' ஆகும். இவர் திருமுனைப்பாடி நாட்டில் திருவாமூரில், வேளாளர் மரபில் பிறந்தார். இவரது பெற்றோர் புகழனார். மாதினியார் ஆவர். இவரது தமக்கையர் திலகவதியார்.

இவர் சமண சமயத்தை சார்ந்து தருமசேனர் என்றழைக்கப் பட்டார். அச்சமய நூல்களில் வல்லவரானார். திலகவதியார் திருவதிகையில் சிவத்தொண்டு செய்து வந்தார். இறைவன் இவருக்கு சூலை நோய் உண்டாக்கினார். அந்நோய் பெறாது தமது தமக்கையாரிடம் வந்து சேர்ந்தார். திலகவதியாரும் சிவாலயம் சென்று சிவனை வணங்கி நோய் நீங்கும் வண்ணம் பதிகம் பாடி திருநீற்றினை வயிற்றில் தடவ நோய் நீங்கப் பெற்றார். சைவ சமயத்திற்கு மீண்டார்.

இச்செயலை அறிந்த பல்லவன் இவரை சுண்ணாம்பு நீற்றறையால் வைத்தும், விஷத்தைக் கொடுத்தும், யானையை ஏவிக் கொல்லச் செய்தும், கல்லில் பிணைத்துக் கட்டி கடலில் தள்ளியும் பலவித தீங்குகளைச் செய்தார். இறை அருளால் அவை அனைத்தையும் வென்றார்.

அருஞ் செயல்கள்

1. திருத்தூங்கானை மாடத்தில் தனது தோளில் ரிஷப, சூலமுத்திரைகளை பொறிக்கப் பெற்றார்.
2. அப்பூதி அடிகளாரின் மகனை பாம்பு தீண்ட, இறை அருளால் அவ்விஷத்தை நீக்கி அருளினார்
3. திருமறைக்காட்டில் வேதங்களால் அடைக்கப்பட்ட கதவினைப் பதிகம் பாடி திறக்கச் செய்தார்.

திருவையாற்றிலேயே கயிலைக் காட்சியைக் கண்டு களித்தார். திருப்புகலூரில் சித்திரை மாதம் சதயத் நாளில் இறைவனடி



சேர்ந்தார். இவரது அற்புதங்களை விளக்கும் பாடல்

"தலைகொள் நஞ்சமு தாக விளையுமே
தழலின் நீனு தடாகம தாகுமேறு
கொலை - செய் யானை குனிந்து பணியுமே
கூர் அரா விடந் தீரெனத் தீருமே
கலைகொள் வேதவனப் பதி தன்னுள்ளே
கதவு மீண்டு கடுகத் திறக்கும்
அலைகொள் வாரியில் கல்லும் மிதக்குமே
அப்பர் போற்றும் அருந்தமிழ்ப் பாடலே"

இவரது கோட்பாடுகள் :

1. சிவன் பிறப்பில்லாதவன்
2. "என்கடன் பணி செய்துகிடப்பதே" என்றார்
3. சொற்களால் விவரிக்க முடியாத பெருமை உடையவன் என்கிறார்.

சிவபெருமானை வழிபடுவதால்

1. துன்பத்தினின்று விடுபட்டு, இன்பம் அடைகின்றனர்
2. வினையினின்று விடுபடுகின்றனர்
3. பிறப்பு, மூப்பு, பெரும்பசி, பிணி, இறப்புகளில் இருந்து நீங்குகின்றனர் என்றார்.

அற்புதமான தத்துவ பூசனை முறை,

"காயமே கோயிலாகக் கடிமனம் அடிமையாக
வாய்மையே தூய்மையாக மனமணி இலிங்கமாக
நேயமே நெய்யும் பாலா நிறைய நீ ரமைய ஆட்டிப்
பூசனை ஈசனார்க்குப் போற்றவிக் காட்டினோமே"

இதன் கருத்து - உடம்பே கோயிலாகவும் காக்கப்படுகின்ற மனம் அடிமையாகவும் வாய்மையே பரிசுத்தமாகவும், பரிசுத்தம் பெற்ற மனத்திலுள்ள ஒளியே அழகிய இலிங்கமாகவும், அன்பே

நெய்யும் பாலுமாக நன்கு நிறைய அபிஷேகம் செய்து துதியை உணவாக்கி, ஈசனுக்குப் பூசனை செய்யும் முறையைக் கூறுகிறார்.

### *9. 4. 2. 3. சுந்தரர்*

திருக்கயிலாயத்தில் ஆண்டவனுக்குத் திருத்தொண்டு செய்து வந்த ஆலாலசுந்தரர். திருநாவலூரில் சடையனார், இசைஞானியார் என்பவர்களுக்கு மகனாய்ப் பிறந்தார். இவருக்கு திருமணம் நடந்த காலத்தில் இறைவன் அடிமை ஓலை காட்டி, தடுத்தாட் கொண்டார். திருவதிகையில் இறைவனின் திருவடி சூட்டப்பெற்றார். ஆரூரில் பரவையாரை மணந்தார். அடியாரது பெருமையை விளக்கும் 'திருத்தொண்டர் தொகையைப்' பாடி அருளினார். குண்டையூரில் நெல்மலை பெற்றார். திருப்புகலூரில் செங்கல்லைப் பொன்னாக்கிக் கொண்டார். திருமுதுகுன்றில் இறைவன் அளித்த பொன்னை ஆற்றில் போட்டு திருவாரூர் குளத்தில் எடுத்துக் கொண்டார்.

திருவொற்றியூரில் சங்கிலியாரை மணந்தார். பரவையார் ஊடலை இறைவனைத் தூது விடுத்துப் போக்கிக் கொண்டார். திருவையாற்றில் காவிரி நீர்ப்பெருக்கடங்கி வழிவிடபதிகம் பாடினார். அவிநாசியில் முதலை வாய்ப்பிள்ளையை மீட்டருளினார். ஆடிமாதம் சுவாதி நன்னாளில் வெள்ளையானையில் அமர்ந்த சேர மன்னருடன் கயிலாய மலை சென்று, தான் முன் செய்த திருத்தொண்டைச் செய்து வந்தார். இச்செய்தியை விளக்கும் பாடல்

"வெம்கரா வுண்ட பிள்ளையை நல்குமே
வெள்ளை வாரண மீதில் இருத்துமே
மங்கை பாகரைத் தூது நடத்துமே,
மருவி ஆறு வழிவிட்டு நிற்குமே
செங்கல் ஆனது தங்கமதாகுமே
திகழும் ஆற்றிட்ட செம்பொன் அளிக்குமே,
தூங்க வான்பரி சேரற்கு நல்குமே
துலங்க சுந்தரர் செந்தமிழ்ப் பாடலே"



இவரது பாடல் கருத்துகள் :

1. சிவன் பிறப்பில்லாதவன்
2. இன்ன தன்மையன் என்று உயிர்களில் அறியப்படாதவன்
3. ஓராயிரம் பேரும் உடையவன்
4. பெண் வடிவோ ஆண்வடிவோ இல்லாதவன்
5. அடியார் செய்யும் பிழைகளைப் பொறுத்தருள்பவன் என்பனவாகும்.

### வழிபாட்டுப் பயன்கள்

#### *சிவனை வழிபடுபவர்கள்*

1. மும்மலங்களை அறுப்பர் (மும்மலங்களாவன ஆணவம், கன்மம், மாயை என்பன).
2. சிவலோகம் எய்துவர்
3. பசி, பிணி இவைகளிலிருந்து விடுபடுவர்
4. பிறப்பினின்று நீங்குவர்
5. வினையை விட்டொழிப்பர் என்கிறார். மேலும் கடுந்தவம் புரிவோர்க்கு வேண்டுவற்றை தடையின்றி கொடுப்பவர்.

#### *தேவாரப் பாடல்*

இவர் தான் இறைவனுக்கு அடிமை என்பதை பல பாடல்களால் விவரிக்கிறார். அவனை என்றும் மறக்காமல் அடிமையாய் இருக்க வேண்டும் என்பதை உணர்த்தும் பாடல் ஒன்றைக் காண்போம்.

பாடல்

"பித்தாபிறை சூடிபெருமானே அருளாளா
எத்தான்மற வாதேனினைக் கின்றேன் மனத்துன்னை
வைத்தாய் பெண்ணைத் தென்பால் வெண்ணெய்
நல்லூர் அருள்துறையுள்
அத்தாவுனக் காளாய்இனி அல்லேன் எனலாமே"

www.tntextbooks.in

இதன் கருத்து : அடியார்க்கு அருள்புரியும் வகையில் பெருங் கருணையில் பித்தர் போன்றவனே, பிறைச் சந்திரனை முடியில் சூடிக் கொண்டவனே, எல்லா உயிர்களுக்கும் தலைவனே, அருளையே செல்வமாக உடையவனே, இனி நான் உன்னை மறவாமல் இடைவிடாமல் தியானிப்பேன். இவ்வாறு நினைக்கின்ற என் மனத்திலே எழுந்தருளியுள்ள, பெண்ணையாற்றில் தென்கரையில் உள்ளதாகிய திருவெண்ணெய் நல்லூரில் திருவருட்துறை என்னும் ஆலயத்தில் அமர்ந்தருளிய என் அய்யனே! இனி நான் உனக்கு என்றென்றும் அடிமை என்கிறார், திருநாவுக்கரசர்

*9. 4. 2. 4. மாணிக்கவாசகர்*

சமயம் ஒரு காலத்தில் செழிப்புற்று வளரும். மற்றொரு காலத்தில் மெலிவுற்றுத்தளரும். அச்சமயத்தில் இறையருளால் ஈடு இணையற்ற அடியார் தோன்றுவர். ஒரு காலத்தில் பௌத்த மதத்தினரால் நமது இந்து மதம் தாக்கப்பெற்று தளர்ச்சியுற்றது. அவ்வேளையில் மாணிக்கவாசகர் திருவாதவூரில் தோன்றினார். பாண்டிய நாட்டின் மந்திரியாகத் திகழ்ந்தார். திருப்பெருந்துறையில் குருவருள் பெற்றுத் திருவாசகம் பாடியருளினார். சிதம்பரத்தில் பௌத்தர்களை வாதில் வென்றார். ஊமைப் பெண்ணை பேசுமாறு செய்தார். “திருச்சிற்றம்பலக் கோவையாரை” பாடியருளினார். இவர் “செய்ய திருவாசகங்கள் அறுநூறும், திருக்கோவை நானூறும்” மொழிந்தருளினார். ஆனிமாதம் மக நட்சத்திரத்தில் திருச்சிற்றம் பலத்தில் இறைவனுடன் இரண்டறக் கலந்தார்.

இறைவன் இவர் பொருட்டு நரிகளைக் குதிரைகளாக்கினார். வையை நதியை பெருக்கெடுத்தோடச் செய்தார். பிட்டுக்கு மண் சுமந்தார் பிரம்படிபட்டார். ஏடு, எழுத்தாணி கொண்டு இவர் கூறியனவற்றை எழுதினார். இந்த அற்புத நிகழ்ச்சிகளை பின்வரும் பாடலால் அறியலாம்.

“பெருகும் வையை தனை அழைப்பிக்குமே
பிரம்படிக்குப் பிரான்மேனி கன்றுமே
நரியெலாம் பரியாக நடத்துதுமே



நாடி மூகைதனைப் பேசுவிக்குமே
பாரிற் பாட்டுக்கு மண்சுமப் பிக்குமே
பரமன் ஏடெழுதக் கோவை பாடுமே
வருகும் புத்தரை வாதினில் பாடலுமே
வாதவூரர் வண்தமிழ்ப் பாடலே”

இவரது பாடல் கருத்துகள் :

1. சிவன் முன்னனப் பழம்பொருட்கும் முன்னைப் பழம்பொருள்
2. பிறரால் இன்ன தன்மையன் என அறியமுடியாதவன்
3. ஆண், பெண், அலி என்ற வடிவில்லாதலன்; ஆக்கல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என்ற தொழில்களைச் செய்பவன்
4. உயிர்களின் பிறப்பை நீக்குபவன்
5. பிறப்பு, இறப்பு இல்லாதவன் என்பனவாம்.

**உயிர்க்கோட்பாடுகள்**

1. உலக உயிர்கள் எண்ணற்றவை. அவை ஆணவம், கன்மம், மாயை என்ற மும்மலங்களின் விளைவாகப் பிறப்பை அடைகின்றன.
2. புல், மரம், ஊர்வன, நீர்வாழ்வன, விலங்கு, மக்கள், தேவர் என்ற ஏழுவகைப் பிறப்புகளையும் அடைகின்றன.
3. உயிர்கள் அவனருளாலேதான் அவன் தாள் வணங்க வேண்டும்.
4. உயிர்கள் மும்மலங்களிலிருந்து விடுபடும்போழ்து சிவபெருமானை அடைகின்றன என்றார்.

இறைவன் பெருமையைக் கூறும் திருவாசகப் பாடல்

“வானாகி மண்ணாகி வளியாகி ஒளியாகி
ஊனாகி உயிராகி உண்மையுமாய் இன்மையுமாய்க்
கோனாகி யான் எனது என்(று) அவர் அவரைக் கூத்தாட்டு
வான் ஆகி நின்றாயை என் சொல்லி வாழ்த்துவனே”

www.tntextbooks.in

**இதன் கருத்து**

இறைவன் நிலம், நீர், நெருப்பு, காற்று, ஆகாயம் என்னும் ஐம்பெரும் பூதங்களாய் விளங்குபவன். எங்கும் நீக்கமற நிறைந்திருப்பவன். அறியாமையால் யான், எனது உலகப் பற்றால் மயங்கி கூத்தாடும் படி செய்பவன். எம் தலைவனாகிய உன்னை எவ்வாறு வாழ்த்துவேன்! என்கிறார்.

### *9. 4. 2. 5. திருநீலகண்டர்*

திருநீலகண்டர் தில்லையில் வாழ்ந்தவர். இளமையும் அருந்ததிக்கு நிகரான கற்புமிக்க மனைவியிருந்தும், இன்பத் துறையில் எளியராய் பரத்தைபால் சென்று வந்தார். அதைக் கண்ட அவர் மனைவியார், “தீண்டுவீராயின் எம்மைத் திருநீலகண்ட மென்றார்.”

இறைவன் மீது ஆணை கேட்ட பெரியவர், எம்மை என்றதனால் மற்ற பொது மாதர்களையும் என மனத்தினாலும் தீண்டேன் என்று கூறி விலகினார். மாதர் மீது வைத்த காதலை அறவே துறந்து இறைவன் மீது வைத்த பேரன்பினைப் பெரிதாய் மதித்ததால் இவர் பெரியராயினர். இவ்விரதத்தை இனிது பேணிய இவரது இறை அன்பின் திறத்தை உலகிற்கு அறிவித்து இறைவன் அருள் புரிந்தான். உலக இன்பங்களிலும் இறையின்பமே ஏற்றமுடையது என்பதை இவரது வரலாறு விளக்குகிறது.

### *9. 4. 2. 6. இயற்பகை நாயனார்*

இவரது பக்தியை உலகிற்கு உணர்த்த இறைவன் திருநீறு பூசியவராய் வேடம் பூண்டு வந்தார். வந்த சிவனடியார் இவரது மனைவியை வேண்டிநிற்க மனமகிழ்வுடன் மனைவியை அழைத்த “உன்னை இவருக்குக் கொடுத்தேன்” என்றார். மனைவியார் கணவரிடம் “தங்கள் கட்டளைப்படி நடப்பதே என் கடமை. என் உயிருக்கும் துணைவராகிய நீர் சொன்னபடி செய்வதையன்றி வேறு சிந்திப்பதற்கு வேறு யாதும் இல்லை” எனக் கூறி இசைந்து சென்றார். சுற்றத்தார் சினத்துடன் வந்து இயற்பகையை எதிர்க்க



அவர்கள் மீது வாள்போர் புரிந்து வெற்றி பெற்றார். இறைவன் இவரது செயற்கருஞ் செயலை கண்டு பாராட்டி இவருக்குச் சிவலோக பதவி அளித்துச் சிறப்பித்தார்.

நாம் உலகில் அனுபவித்து வரும் மண், பெண், பொன் எனும் செல்வங்கள் இறைவனுக்கே உரியன. அதை இறைவனோ இறைவன் அடியார்களோ வேண்டுமென விரும்பும்பொழுது கொடுத்து விடுவதே முறையாகும். அதனையே இயற்பகையார் மேற்கொண்டார் என்பார்.

### *9. 4. 2. 7. இளையான்குடிமாறனார்.*

இவரது சரித்திரத்தால் அடியார்கள் இம்மைச் செல்வம் அனைத்தையும் இறைவன் அடியவர்களுக்கு அளிக்கச் சிறிதும் தயங்காதவர்கள் என்பது தெரிகிறது.

### *9. 4. 2. 8. மெய்ப்பொருள் நாயனார்*

இவரது வரலாறு மிகவும் வியப்பினை உண்டாக்கும் அற்புதச் செயலாகும். மாறுவேடம் பூண்டுவந்த முத்தநாதனை இவர் வரவேற்பதிலிருந்தும், அவனிடம் உபதேசம் பெற முறைப்படி அமர்ந்திருந்தும் இவரது உயர்ந்த சிவபக்தியை தெரிவிக்கிறது. புத்தகம் அவிழ்ப்பவன் போலப் பையிலிருந்து ஆயுதத்தை எடுத்து ஊறு செய்த போதும் அவனைத் தொழுது நின்றதிலிருந்து சிவனடியார்களைச் சிவனெனக் கருதும் இவரது சிறப்பு விளங்குகிறது.

### *9. 4. 2. 9. சிறுத் தொண்டர்*

சிறுத்தொண்டர் தனது அருமைப் புதல்வனை அடியவருக்கு அமுதூட்ட வாளால் அரிந்தார். குழந்தையிடத்தில் இவர் கொண்ட அன்பு அளவற்றதெனினும், இறைவனடியாரை அமுதூட்டி உபசரிக்கும் பேற்றின் முன் அவ்வன்பு பெரிதாக போற்றப் படவில்லை.

### *9. 4. 2. 10. சேரமான் பெருமாள் நாயனார்*

சேரமான் பெருமாள் நாயனார் யானை மீது பவனி வரும் பொழுது உவர் மண் சுமந்து வெண்ணிற மேனியனாய் வந்த

www.tntextbooks.in

சலவையாரை வணங்கினார். மேனி முழுதும் திருநீறு பூசிய சிவனடியராய் கருதி வணங்கினார். சலவையாளர் மிகவும் அஞ்சி தான் இன்னார் என அறிவித்த பிறகும் வணங்கி

"திருநீற்றின் வாரவேடம் நினைப்பித்தீர்
வருந்தா தேகும் என"

விடுவித்ததிலிருந்தும், அரசாட்சியை ஏற்குமாறு மந்திரி முதலானோர் வந்து வேண்டிய பொழுது "இன்பம் பெருகும் திருத்தொண்டுக்கு இடையூறாக இவர் மொழிந்தார்" எனக் கூறியதிலிருந்தும் இவரது உள்ளத்தின் உயர்வும் சிவபெருமானிடம் கொண்ட பக்தியும் விளங்குகின்றது.

### *9. 4. 2. 11. மங்கையர்க்கரசியார்*

ஆண்பாலரைப் போலவே பெண்பாலரும் அடியார்களாய் அருந்தொண்டாற்றினர். அவர்கள் மங்கையர்க்கரசியார், காரைக்கால் அம்மையார், இசை ஞானியார் என்போர் ஆவர். இவர்களுள் மங்கையர்கரசியார் "மங்கையர்க்கு தனி அரசி எங்கள் தெய்வம்" என்று சேக்கிழார் சுவாமிகளால் பாராட்டப் பெற்றுள்ளார்.

பாண்டி நாட்டில் சைவம் தளர்ந்து சமணம் வளர்ந்ததைப் பாண்டிமா தேவியார் கண்டு வருந்தி, திருமறைக் காட்டிலிருந்த சம்பந்தரை மதுரைக்கு வரவழைத்ததும், பாண்டியன் நெடுமாறன் சுர நோய் உற்றபொழுது சம்பந்தரைக் கொண்டு தீர்க்கச் செய்ததும், சம்பந்தர்க்கு சமணர்கள் இடையூறு செய்வார்களோ என வருந்தியதும், அம்மையாரின் சமயப்பற்றை இனிது விளக்குகின்றது. சம்பந்தர் சமண மதத்தை வென்று சைவத்தை நிலை நாட்ட உறுதுணையாய் இருந்தவர் இவ்வம்மையாரே ஆவார்.

சம்பந்தர்,

"மங்கையர்க்கரசி வளர்கோன் பாவை வரிவளைக்கை
பங்கயச் செல்வி பாண்டிமாதேவி"

என இவரைப் பதிகத்தில் பாராட்டியுள்ளார்.



இசைஞானியார் சடையனாருக்கு இசைந்த ஞானியராகி சடையனாரது மனைவியராய் இல்வாழ்க்கை நடத்தி, சுந்தரரை மகனாகப் பெரும் பேறு பெற்றார்.

### *9. 4. 2. 12. திலகவதியார்*

இவர் தனது பெற்றோர் தனக்கென மணம் பேசிய கலிப்பகையார் இறக்க, அது கேட்டுத் தானும் உயிர்விடத் துணிந்ததில் இருந்து அவரது உயர்ந்த பண்பு விளங்குகின்றது தம்பியராகிய நாவுக்கரசர் உயிர்வாழ வேண்டித் தவநிலை ஏற்று வாழ்ந்ததும், சமணம் சார்ந்த தம்பியை சைவ சமயத்தில் சாரும்படிச் செய்ததும் அவரது சைவப் பண்புகளை நன்கு விளக்குகின்றன.

இதர அடியார்களின் வரலாற்றைப் பெரிய புராணத்தில் கண்டு, ஆராய்ந்து அறிந்து, அடியார்களிடத்து மதிப்பும் மரியாதையும் கொண்டு, அவர்களது குருபூசை விழாவினைக் கொண்டாடி அடியார்க்கு அடியாராகி, நாம் ஆண்டவன் அருள் பெற்று வாழ்வோமாக.

### 9. 4. 3. சந்தானாச்சாரியார்கள்

மெய்கண்டார், அருணந்தி சிவசாரியார், மறைஞானசம்பந்தர், உமாபதிசிவம் எனும் நால்வரும் சந்தனாசாரியர்கள் எனக் கூறப்படுவர். சந்தானம் - இச்சொல்லுக்கு பரம்பரை என்பது பொருள். சந்தானம் அகச்சந்தானம், புறச்சந்தானம் என இருவகைப்படும்.

அகச்சந்தானத்தார் - கயிலை மலையில் வாழ்வோராவர். இவர்கள் ஸ்ரீகண்ட பரமசிவனிடம் சிவஞான உபதேசம் பெற்ற நந்திதேவர், சனற்குமாரர், சத்திய ஞான தரிசனங்கள், பரஞ்சோதியர் ஆவர்.

புறச்சந்தானம் - அகச்சந்தானத்தார் பரம்பரையில் நிலவுலகில் தோன்றிய மெய்கண்ட தேவர் முதலாயோர் ஆவர். பரஞ்சோதி முனிவரிடம் மெய்கண்ட தேவரும், அவரிடம் அருணந்தி சிவமும், அருணந்தி சிவத்திடம் மறைஞான சம்பந்தமும், மறைஞான சம்பந்தரிடம் உமாபதி சிவமும் உபதேசம் பெற்றனர். இதை மெய் கண்ட சந்தான பரம்பரை என்பர்.

www.tntextbooks.in

அருளிச் செய்த நூல்கள்

மெய்கண்ட தேவர் - சிவஞான போதம்

அருணந்தி சிவாசாரியார் - சிவஞான சித்தியார், இருபா இருபஃது

உமாபதிசிவம் – சிவப்பிரகாசம் முதலிய ‘சிந்தாந்த அஷ்டகம்’ எனும் எட்டு நூல்கள்

***உமாபதி சிவம்***

தில்லை மூவாயிரவரில் இவரும் ஒருவர். மறைஞான சம்பந்தரிடம் உபதேசம் பெற்றவர். சிவப் பிரகாசம் முதலிய சித்தாந்த அஷ்டகம் எனும் எட்டு நூல்களை இயற்றியுள்ளார். தில்லையில் ஏறாதிருந்த கொடியைக் ‘கொடிக்கவி’ பாடி ஏற்றினார். சித்திரை மாதம் ஹஸ்த நட்சத்திரத்தில் இறையருளில் கலந்தார்.

### 9. 4. 4. நாயன்மார்களின் சமயத் தொண்டு

நாயன்மார்களின் சமயத்தொண்டு அளவிடற்கரியது. அவற்றுள் சிலவற்றை காண்போம்.

1. பக்தி நெறியை நாயன்மார்கள் வளர்க்கப் பெருந்துணை புரிந்தனர்.
2. சில நாயன்மார்கள் ஆலயப் பணிக்கே முழுமையாகத் தங்களை அர்ப்பணித்துக் கொண்டனர்.
3. ஆலயங்கள் கட்டுதல், குடமுழுக்கு செய்வித்தல், அடியார்களுக்கும், பக்தர்களுக்கும் தொண்டு செய்தல் முதலியவற்றில் சிலர் ஈடுபட்டனர். உழவாரப் பணிகளை மேற்கொண்டனர். ‘என் கடன் பணி செய்து கிடப்பதே’ என்றார் அப்பர் பெருமான்.
4. சைவ சமயத் தத்துவக் கோட்பாடுகளையும், சைவ சமயத்தைப் பின்பற்றுவோர் மேற்கொள்ள வேண்டிய நெறிமுறைகளையும் நாயன்மார்கள் தங்கள் வாழ்வில் வாழ்ந்து காட்டினார்கள்.
5. சைவ சமயத்தை உலகறியச் செய்த பெருமை நாயன்மார் களையே சாரும்.



6. நாயன்மார்களால் சைவம் புத்துணர்வு பெற்றது. தனக்கென ஒரு மரபையும் உருவாக்கிப் பொலிவடைந்தது.
7. நாயன்மார்கள் பல சமய நூல்களை இயற்றியதன் மூலம் தமிழ் இலக்கியம் வளர வழி செய்தனர்.
8. நாயன்மார்கள் எல்லா சாதிப் பிரிவுகளிலிருக்கும் வாழ்க்கை நிலையிலிருந்தும் பொருளாதாரப் பிரிவுகளிலிருந்தும் தோன்றினர். இதனால் ஒருமைப்பாட்டு உணர்வும் சமத்துவ மனப்பான்மையும் சகோதரத்துவமும் வேரூன்றித் தழைத்தது.
9. நாயன்மார்களின் சமுதாய நல்வாழ்வுப் பணிகள், ஆலயப் பணிகள் மக்கள் மனதில் சேவை மனப்பான்மையை வளர்த்தது.
10. நாயன்மார்களில் சமயக் குரவர் எனப் போற்றப்படும் நால்வர் வாழ்ந்து காட்டிய நன்னெறிப் பாதை போற்றத்தக்கதாகும்.

**பன்னிருதிருமுறை**

| | | | | |
|---|---|---|---|---|
| 1. | திருஞானசம்பந்தர் | 1, 2, 3 ஆம் திருமுறைகள் (திருக்கடைக்காப்பு) | | (தேவாரம்) |
| 2. | திருநாவுக்கரசு | 4, 5, 6 ஆம் திருமுறைகள் | | |
| 3. | திருசுந்தரர் | 7-ஆம் திருமுறை - (திருப்பாட்டு) | | |
| 4. | திருமாணிக்கவாசகர் | 8-ஆம் திருமுறை - திருவாசகம் | | |
| 5. | திருமளிகைத் தேவர், சேந்தனர் மற்றும் அருளாளர்கள் பாடியது | 9-ஆம் திருமுறை | திருவிசைப்பா, திருப்பல்லாண்டு | |
| 6. | திருமூலர் | 10-ஆம் திருமுறை | திருமந்திரம் | |
| 7. | திருவாலவுடையார் பட்டினத்தடிகள், காரைக்காலம்மையார் மற்றும் நம்பியாண்டார் நம்பிகள் பாடல்கள் | 11-ஆம் திருமுறை | தோத்திரப்பாடல்கள் | |
| 8. | சேக்கிழார் பெருமான் | 12-ஆம் திருமறை | பெரிய புராணம் | |

## பயிற்சி வினாக்கள்

**அ. ஓரிரு வரிகளில் விடையளி**

1. பக்தி நெறியின் சிறப்பு யாது?
2. பக்தி என்ற சொல்லின் பொருள் யாது?
3. பக்தியின் இருவகைகள் யாவை?
4. தென்னகத்தின் பக்தி இயக்கத்தை பரப்பியோர் யாவர்?
5. இராமானுஜரின் கோட்பாட்டையும், தத்துவத்தையும் எழுது.
6. மத்துவர் இறைவனை அடையும் வழியாகக் கூறுவன யாவை?
7. இராமநந்தரின் பக்தி நெறி யாரை மையமாய் கொண்டது?
8. சீக்கிய மதத்தை தோற்றுவித்தவர் யார்?
9. சீக்கியரின் புதை நூல் எது?
10. வங்காளத்தில் பக்திநெறியைப் பரப்பியவர் யார்?
11. துக்காராம் பற்றி சிறுகுறிப்பு வரைக.
12. இராமாயணத்தை ஹிந்தி மொழியில் எழுதியவர் யார்? அதற்கு அவர் இட்ட பெயர் என்ன?
13. பசவர் பரப்பிய நெறியாவது யாது?
14. ஆழ்வார்களுள் முற்காலத்தை சார்ந்தோர் யாவர்?
15. ஆழ்வார்களுள் இடைக்காலத்தை சார்ந்தோர் யாவர்?
16. ஆழ்வார்களுள் பிற்காலம் சார்ந்தோர் யாவர்?
17. பெரியாழ்வாரின் வேறு பெயர்கள் யாவை?
18. சமயச்சாரியர் எனப்படும் நால்வர் யார்?
19. சைவ சமய பக்திப் பாடல்களைத் தொகுத்தவர் யார்?



20. அப்பர் பெருமானின் அருஞ்செயலென ஆசிரியர் கூறுவன யாவை?
21. நாயன்மார்களுள் பெண்பாலடியார்கள் சிலரைக் கூறுக.
22. சந்தானச் சாரியர் – குறிப்பு வரைக.
23. அகச்சந்தானத்தார் குறிப்பு வரைக.
24. புறச் சந்தானத்தார் குறிப்பு வரைக.
25. உமாபதி சிவம் பற்றி குறிப்பெழுதுக.
26. ‘சிவஞான போதம்’ இயற்றியவர் யார்?
27. அருணந்தி சிவாசாரியாரின் நூல்கள் யாவை?
28. உமாபதி சிவாசாரியாரின் நூல்கள் யாவை?

**ஆ. ஒரு பத்தி அளவில் அல்லது பத்து வரிகளுக்கு மிகாமல் விடையளி**

1. பக்தியின் இருவகைகளை விவரி.
2. இராமானுஜரின் பக்தி இயக்கப் பணியைக் கூறுக.
3. மத்துவர் பக்தி இயக்கப் பணியைக் கூறுக.
4. இராமாநந்தர் பக்தி இயக்கப் பணியைக் கூறுக?
5. நிம்பர்க்கர் பக்தி இயக்கப் பணியைக் கூறுக?
6. கபீர் தாசர் பக்தி இயக்கப் பணியைக் கூறுக?
7. வல்லபாசாரியார் பக்தி இயக்கப் பணியைக் கூறுக?
8. துளசிதாசர் பக்தி இயக்கப் பணியைக் கூறுக?
9. வீர சைவம் அல்லது இலிங்காயதம் பற்றி ஆசிரியர் கூறுவன யாவை?

www.tntextbooks.in

10. ஏகநாதர் பற்றி குறிப்பு வரைக?

11. சூர்தாசர் பற்றி கூறு?

12. ஆழ்வார்கள் - விளக்குக.

13. மதுர கவி ஆழ்வார் பற்றி செய்திகளைக் கூறுக.

14. ஆண்டாளைக் குறிக்கும் வேறு பெயர்களைக் கூறுக.

15. தொண்டரடிப் பொடியாழ்வார் பற்றி குறிப்பு தருக?

16. திருப்பாணாழ்வார் பற்றி குறிப்பு தருக?

17. திருமங்கை ஆழ்வார் பற்றி குறிப்பு தருக?

18. நாயன்மார்களுள் சிலரைக் குறிப்பிடு?

19. சிவனை வழிபடுவதால் அடையும் நன்மைகளாக சம்பந்தர் கூறுவன யாவை?

20. மாணிக்கவாசகர் செய்த அரிய செயல்களைக் கூறுக.

21. சிறு குறிப்பு வரைக.

அ. திருநீல கண்டர்

ஆ. இயற்பகை நாயனார்

இ. இளையான் குடிமாறனார்

ஈ. சிறுத்தொண்டர்

உ. சேரமான் பெருமாள் நாயனார்.

**இ. ஒரு பக்க அளவில் அல்லது முப்பது வரிகளுக்கு மிகாமல் விடையளி**

1. பக்தி இயக்கம் தோன்றக் காரணங்கள் யாவை?

2. பக்தி இயக்கத்தின் சீரிய பண்புகள் யாவை?



3. பக்தி இயக்கத்தின் விளைவுகள் யாவை?

4. குருநானக்கின் தோற்றம், போதனைகளை விவரி.

5. மீராபாய், சைதன்யர் ஆகியோரது பக்தி இயக்கப் பணிகளைக் கூறுக.

6. பின்வரும் ஆழ்வார்களது தோற்றம், அருளிச் செய்த அருஞ்செயல்களை கூறுக.

அ) பொய்கை ஆழ்வார் ஆ) பூதத்தாழ்வார்

இ) பேயாழ்வார் ஈ) திருமழிசையாழ்வார்

உ) நம்மாழ்வார் ஊ) குலசேகர ஆழ்வார்

எ) பெரியாழ்வார் ஏ) ஆண்டாள்

7. "நாராயணா" என்ற நாமத்தை உச்சரிப்பதால் அடையும் நன்மைகளாக திருமங்கை ஆழ்வார் கூறுவன யாவை,

8. திருஞானசம்பந்தரின் வரலாற்றையும், அவரது சமயக் கருத்துகளையும், கடவுள் கோட்பாடையும் கூறுக?

9. அப்பரின் வரலாற்றையும், அவரது சமயக் கருத்துகளையும் கடவுள் கோட்பாடையும் கூறுக.

10. சுந்தரர் வரலாற்றையும் அவரது சமயக் கருத்துகளையும் கடவுள் கோட்பாட்டையும் கூறுக?

11. மாணிக்கவாசகர் வரலாற்றையும், அவரது சமயக் கருத்துகளையும் கடவுள் கோட்பாட்டையும் கூறுக?

12. மங்கையர்க்கரசியார், திலகவதியார் அருஞ்செயல்களைக் கூறுக?

www.tntextbooks.in

**ஈ. நான்கு பக்கங்களுக்கு மிகாமல் விடையளி**

1. பக்தி இயக்கம் பற்றியும், அதற்கான காரணங்கள் சீரிய பண்புகள் பற்றி விவரி.

2. இடைக்காலம் பற்றி இயக்கம் பற்றியும், பக்தி இயக்கத்தை பரப்பியோருள் சிலரது பணிகளையும் விவரி.

3. ஆழ்வார்களது தோற்றம் பற்றியும், பன்னிருவரில் எவரேனும் நால்வரது அரும்பணிகளையும் விவரி.

4. ஆழ்வார்களின் அரிய அருட்தொண்டுகளை விவரி.

5. நாயன்மார்கள் சைவ சமயத்திற்காற்றிய அரும்பணிகளை விவரி.

www.tntextbooks.in

# 10. சமய, சமுதாய சீர்திருத்த இயக்கங்கள்

## 10. 1. சமய, சமுதாய சீர்திருத்த இயக்கங்கள் தோன்றக் காரணங்கள்

### 10. 1. 1. இந்தியாவின் நிலை

பதினெட்டாம் நூற்றாண்டின் இடைக்காலத்தில் நமது நாட்டில் அரசியல், சமுதாய, சமய, பொருளாதாரத் துறைகளில் சீர் குலைவு ஏற்பட்டது.

அரசியலில் ஒற்றுமை இல்லாத காரணத்தால் நாட்டில் குழப்பமும், வன்முறைகளும், அராஜகமும் தலைவிரித்தாடின. நாட்டில் சட்டம் ஒழுங்கு, மக்களுக்கு பாதுகாப்பு போதுமான அளவு இல்லாத நிலை இருந்தது. சமயத்துறையில் மக்கள் குறுகிய மனப்பான்மையுடையவராயினர். மூடநம்பிக்கைகள் மிகுந்து காணப்பட்டன. குழந்தை மணங்கள், வரதட்சணை, பெண் சிசுக் கொலை, சாதிக் கொடுமைகள் போன்றவை பரவியிருந்தன. சமயத்தின் பெயரால் மக்கள் ஏமாற்றப்பட்டு பகுத்தறிவுக்கு ஒவ்வாத செயல்களைச் செய்ய தலைப்பட்டனர். ஆண்களின் ஆதிக்கம் மிகுந்தும், பெண்கள் ஒடுக்கப்பட்டவராயும் இருந்தனர்.

இந்தியாவில் பத்தொன்பதாம் நூற்றாண்டில் அரசியல், பொருளாதார, சமய, சமுதாய, பண்பாட்டு, இலக்கியத் துறைகளில் பல மாற்றங்கள் தோன்றின. ஆங்கிலேயப் பேரரசு தன் ஆட்சியை நாடு முழுவதும் மேற்கொண்டது. ஆங்கிலேய ஆட்சியில் நாட்டின் பல்வேறு துறைகளில் மாற்றங்களும் வளர்ச்சியும் ஏற்பட்டது. மேலைநாட்டுப் பண்பாட்டின் தாக்கத்தால் மக்களுடைய பொருளாதார, சமூக, அரசியல் துறைகளில் பல மாற்றங்கள் தோன்றின. இம்மாற்றங்களை விழிப்புணர்வு என்றே கூறலாம். இந்த விழிப்புணர்வையே 'மறுமலர்ச்சி' என்று கூறுகின்றனர்.

www.tntextbooks.in

இம்மறுமலர்ச்சி பல்வேறு துறைகளில் குறிப்பிடத்தக்க மாற்றங்களை ஏற்படுத்தியது. உண்மையாகவே இன்றைய இந்தியா தனது நிலைக்கு மறுமலர்ச்சிக்கு நன்றி செலுத்தக் கடமைப்பட்டுள்ளது என பி.என். லூனியா கூறுகிறார்.

### 10. 1. 2. சீர்திருத்த இயக்கங்கள் தோன்றக் காரணிகள்

1. ஆங்கிலேய ஆட்சி நாடு முழுமையும் பரவியதையடுத்து இந்நாட்டில் நிலவிவந்த அராஜக சூழ்நிலையும், குழப்ப சூழ்நிலையையும் அகற்றத் தன் பணியை மேற்கொண்டது. இதன் விளைவாக நாட்டில் அமைதியும் பாதுகாப்பும் ஏற்படுத்தப்பட்டன. இது இந்திய மக்கள் மனதில் தங்களது உண்மையான நிலையை அறிந்து கொள்ள வாய்ப்பை அளித்தது.

2. கி.பி. 1835 ஆம் ஆண்டு மெக்காலே பிரபுவின் முயற்சியால் ஆங்கிலம் பயிற்று மொழியாக்கப்பட்டது. இதன் வாயிலாக இந்தியர்கள் மேற்கத்திய நாகரிகத்தை எளிதில் அறிந்தனர். மேலை நாடுகளின் முன்னேற்றத்தையும் முன்னேற்ற முறைகளையும் அறிந்து கொள்ளும் சந்தர்ப்பம் கிடைத்தது. மேலும் ஆங்கிலக் கல்வி முறை அறிவியல் கல்வி முறையால் அறிவியல், தொழில்நுட்ப அறிவை விளக்கும் ஆர்வத்தை உண்டாக்கியது.

3. மேலைநாடுகளின் வரலாற்றுச் செய்திகளின் வாயிலாக அவர்கள் பின்பற்றிய எளிய போக்கும், செயற்கையான போலியான வாழ்க்கை முறைகளும் இல்லாததையும் தெரிந்து கொண்டனர். மக்களிடையே நம் நாட்டையும் சமுதாய தீய பழக்க வழக்கங்களில்லாத நாடாக மாற்ற வேண்டும் என்ற உணர்வு தோன்றியது. இதற்கு முன்னோடியாக வித்திட்டவர் இராஜாராம் மோகன்ராய் என்றால் அது மிகையாகாது.

4. கிறிஸ்தவ சமயப் பரப்புக் குழுக்களின் கல்விப் பணியும், சமய வளர்ச்சிப் பணியும் குறிப்பிடத்தக்கது. இந்து சமயத்திலும், சமுதாயத்திலும் காணப்பட்ட ஏற்றத்தாழ்வுகள் சுட்டிக்காட்டப்பட்டன. எனவே சமயத்துறையிலும் சமுதாயத் துறையிலும் குறிப்பாக பிரம்மசமாஜம், ஆரியசமாஜம், பிரம்மஞான சபை போன்ற சீர்திருத்த இயக்கங்கள் உருவாயின.

5. ஆங்கிலேய ஆட்சியின் விளைவாக இந்தியா, அறிவியல் தொழில்நுட்பத்துறைகளில் முன்னேறி உலக நாடுகளுடன் தொடர்பை உண்டாக்கிக் கொண்டது. இத்தொடர்பு இந்திய மக்களிடையே முற்போக்கு சிந்தனை மனப்பான்மை, பொருளாதாரம் மற்றும் தொழில்துறைகளில் முன்னேற வேண்டும் என்ற ஆர்வத்தைத் தூண்டியது.

### 10. 1. 3. சீர்திருத்த இயக்கங்களின் விளைவுகள்

1. நம் நாட்டின் உயரிய பண்பாட்டையும், தன்னம்பிக்கையையும் மறந்து வாழ்ந்து வந்த மக்களுக்கு இச்சீர்திருத்த இயக்கங்கள் ஒரு வரப்பிரசாதமாய் அமைந்தன. நமது பாரம்பரிய பெருமையை உலகறியும் வண்ணம் வேதங்களையும், உபநிடதங்களையும் சமஸ்கிருத மொழியிலிருந்து மேலைநாடுகளில் மொழிபெயர்த்தனர். இது மக்களிடையே நாட்டுப் பற்றையும், நாமும் உலக அரங்கில் உயர வேண்டும் என்ற உயரிய எண்ணத்தையும் ஏற்படுத்தியது.

2. நமது நாட்டு இலக்கியங்கள், கையெழுத்துப்பிரதிகள், கல்வெட்டுகள், நாணயங்கள், புதைபொருள் ஆய்வுகள் மூலம் பெற்ற பொருள்களை ஆதாரமாய்க் கொண்டு மேலை நாட்டு வரலாற்று ஆசிரியர்கள் இந்திய வரலாற்றை எழுதினர். இவற்றை அறிந்து இந்தியர்கள் தாங்கள் மேலும் தக்க ஆதாரங்களுடன் இந்திய வரலாற்றை தெளிவாக உலகம் வியக்கும் வண்ணம் எழுதினர்.

3. இந்து சமயத்திலேயே சீர்திருத்தங்களை பல சீர்திருத்தவாதிகள் மேற்கொண்டனர். பிரம்மசமாஜம், ஆரிய சமாஜம், பிரம்மஞான சபை மற்றும் இராமகிருஷ்ண இயக்கம் போன்ற சமய சமூக சீர்திருத்த இயக்கங்கள் வாயிலாக இந்து சமயச் சிறப்பை உலகிற்கு எடுத்துரைத்து இந்து சமயத்தை அழிவுப் பாதையிலிருந்து காப்பாற்றின. சுவாமி விவேகானந்தர் உலகச்

www.tntextbooks.in

சமய மாநாட்டில் சிகாகோவில் இந்து சமயச் சிறப்பை பற்றி ஆற்றிய உரை உலகறிந்த ஒன்றாகும்.

4. இந்து சமயத்தில் நிலவிவந்த பல்வேறு தீமைகளையும், மூடப்பழக்கவழக்கங்களையும் மக்கள் அறியத் தொடங்கினர். கிறிஸ்தவ சமயப்பரப்பு குழுவினர் சமுதாயத்தில் காணப்பட்ட ஏற்றத்தாழ்வுகளை பயன்படுத்தி பாதிக்கப்பட்டவர்களை தங்கள் பால் ஈர்த்தனர். இதைக் கண்டு சீர்திருத்தவாதிகள் விரைந்து செயல்பட்டு அவர்களது நிலை மேம்பாடு அடைய அயராது உழைத்தனர். சதியென்னும் உடன்கட்டையேறுதலையும், குழந்தை மணத்தையும் இராஜாராம் மோகன்ராய் வன்மையாகக் கண்டித்தார். ஆரிய சமாஜம், பிரம்ம ஞான சபை, இராமகிருஷ்ண இயக்கம் வாயிலாக சமய, சமுதாய சீர்திருத்தங்கள் பெருமளவில் செயல்படுத்தப்பட்டன. தீண்டாமை என்னும் கொடுமையைக் களைய மகாத்மா காந்தியடிகள் ஒரு பெரும் இயக்கத்தினை வழிநடத்தி வெற்றியும் கண்டார். பகுத்தறிவுச் சிந்தனை மக்கள் மனதில் வேரூன்றியது. மக்கள் மனதில் குறுகிய கண்ணோட்டம் அகன்று பரந்த மனப்பான்மையும் சமத்துவ, சகோதரத்துவ மனப்பான்மையும் மேலோங்கியது.

6. ஆங்கிலேயர் ஆட்சி, கல்வித்திட்டம் பெண்கள் நிலையை உயர்த்தியது. ஆங்கிலேயர் பெண் கல்வியில் பெரும் அக்கறை காட்டினர். ஆண்களுக்கு சமமாய்ப் பெண்களும் கல்வி கற்று அனைத்துத் துறைகளிலும் முன்னேற வழிவகுக்கப்பட்டது. 'பர்தா' முறை ஆரிய சமாஜத்தில் கடுமையாக எதிர்க்கப்பட்டது. 'விதவை மணம்' பல சீர்திருத்தவாதிகளால் ஆதரிக்கப்பட்டது. குழந்தை மணம் சட்டரீதியாக தவறு என உணரத்தப்பட்டது. 'சாரதா' சட்டம் நிறைவேற்றப்பட வேண்டிய அளவு மக்கள் உணர்ந்தனர். மகளிர் முன்னேற்றத்திற்கு மாபெரும் தொண்டாற்றியவருள் ஈசுவர சந்திர வித்யாசாகர் குறிப்பிடத்தக்கவர் ஆவார்.

7. அறிவியல் கல்வியறிவு தாமும் கற்று, கற்றவற்றை நம் நாட்டிலேயே செயல்படுத்தவும் துணைபுரிந்து, இளைஞர்



முன்னேற்றத்துக்கு வழிவகுத்தது. இந்திய இளைஞர்கள் அறிவியல் ஆய்வுகளில் ஈடுபட ஆரம்பித்தன. கணித மேதை இராமானுஜம், ஜெகதீஸ் சந்திர போஸ் போன்றோரது கண்டுபிடிப்புகள் உலகை வியப்படையச் செய்து இந்திய புகழை உலகறியச் செய்தன.

8. நமது பாரம்பரியம் மிக்க நுண்கலைகள் வளர்ச்சி பெற்றதற்கு மறுமலர்ச்சி முக்கிய காரணம் எனலாம். மேலை நாட்டினர் நம் அழகுக் கலைகளை நூல்களாக எழுதி உலகறியச் செய்தனர். இசை, ஓவியம், சிற்பம், நாட்டியம், கட்டடக்கலை போன்ற கலைக்கென கல்வி நிறுவனங்களும் தோன்றின.

9. தொழில் துறையில் வியத்தகு முன்னேற்றம் காணப்பட்டது. பல புதிய தொழில்கள் உருவாயின. வணிக நிறுவனங்கள் தோன்றின. வேளாண்துறையில் வளர்ச்சியும் புதிய முறைகளும் காணப்பட்டன. இந்தியாவில் பல பொருள்கள் தயாரிக்கப்பட்டன. நூற்பு ஆலைகளும், நெசவு ஆலைகளும் தோன்றின.

10. ஆங்கிலேயர் வருகையாலும், ஆளுகையாலும் சமுதாய நிலையில் மாற்றங்கள் காணப்பட்டன. எழுத்தர்களும், அலுவலகம் பணியார்களும் சமுதாயத்தில் மதிக்கப்பட்டனர். ஆங்கிலம் தெரிந்தோர் உயர்ந்தவர்களாக சமுதாயத்தில் மதிக்கப்பட்டனர்.

11. மொழித் துறையில் வியத்தகு முன்னேற்றம் ஏற்பட்டது. ஆங்கில இலக்கியத்தில் உள்ள புதினம், கவிதை, நாடகம் முதலானவை இந்திய மொழிகளில் தோன்றின. ஆங்கில முறையில் பின்பற்றப்பட்ட விமர்சன முறையும் பாங்கும் இந்திய மொழிகளில் பிரதிபலித்தன. இலக்கியத்துறையில் உலகம் போற்றும் இலக்கிய மேதைகள் உருவாயினர்.

12. இந்திய மறுமலர்ச்சி இந்நாட்டு மக்களிடையே பண்டைய பெருமையை உணரச் செய்தது. மேலை நாட்டுப் பண்பாட்டில் நாகரிகத்திலும், அறிவியலிலும் கண்ட நல்ல தீய கூறுகளை மக்கள் அறிந்து பின்பற்றி உயரச் செய்தது.

www.tntextbooks.in

## 10. 2. பிரம்ம சமாஜம்

பிரம்மசமாஜத்தை நிறுவியவர் இராசாராம் மோகன் ராய் ஆவார். இவரைப் புதிய இந்தியாவை நிறுவியர் என்னும் புதிய மறுமலர்ச்சியை தொடங்கி வைத்தவர் என்றும் கூறுவர். பிரம்மசமாஜம் கி.பி. 1828ல் நிறுவப்பட்டது. இதுவே முதல் சீர்திருத்த இயக்கமாகும். இராசாராம் மோகன்ராய் கி.பி. 1772ல் பிறந்தார். வங்காளத்திலுள்ள வசதி படைத்த வைதிக பிராமண குடும்பத்தைச் சேர்ந்தவர். இவர் கற்றறிந்த மொழிகள் ஆங்கிலம், பிரஞ்சு, இலத்தீன், ஹீபிரு, கிரேக்கம், சமஸ்கிருதம் மற்றும் இந்தி போன்றவைகளாகும். இந்து சமய தரும சாத்திரங்கள், வேதங்கள், உபநிடதங்கள் போன்ற பிறவற்றையும் ஆழ்ந்து பயின்றிருந்தார். ஆங்கில நாகரிகத்தில் அதிக நாட்டம் கொண்டதால் பலமுறை இங்கிலாந்து சென்று திரும்பினார். அவர் தமது நாற்பதாவது வயதில் வேலையை விட்டு விலகினார். எஞ்சிய வாழ்நாளைச் சமுதாயப் பணிக்காக அர்ப்பணித்தார். அவர் இந்து சமுதாயத்தில் இருந்த மூடநம்பிக்கை களுக்கும் மற்றும் ஏனைய தீமைகளுக்கும் எதிராகக் குரல் எழுப்பினார். இந்த நிறுவனத்தை நிறுவியதன் மூலம் அவர் ஒரு புதிய சமயத்தைப் பரப்ப விரும்பவில்லை. மாறாக இந்த அமைப்பில் அனைத்துச் சமயங்களின் அரிய கோட்பாடுகள் அமைந்திருந்தன. எல்லா மக்களும் சாதி, சமய பாகுபாடின்றி ஒன்றாக சேர்ந்து ஒரே இறைவனை வழிபட இந்நிறுவனம் வழிவகுத்துக் கொடுத்தது.

கிழக்கிந்திய நிறுவனத்தில் பணியாற்றிக் கொண்டிருந்த போது கிறித்துவப் பாதிரியார்களின் தொடர்பு அவருக்குக் கிடைத்தது. இதன் விளைவாக இந்து சமயத்தை சீர்திருத்தி அமைக்க வேண்டுமென விரும்பினார். கி.பி. 1815ல் கல்கத்தாவில் 'ஆத்மிக சபை' என்பதை நிறுவினார். இதில் நடுத்தர, கீழ் தர மக்கள் கலந்து கொண்டனர். 1819ல் வேதாந்த சாத்திரங்களின் சாரத்தை ஆங்கிலத்திலும், வங்காள மொழியிலும் வெளியிட்டார். பின்பு நான்கு உபநிடதங்களை மொழிபெயர்த்தார். 1820ல் ஏசுவின் போதனைகளை திறனாய்வு செய்து, 'ஏசுவின் கொள்கைகள் – அமைதிக்கும் ஆனந்தத்திற்கும் வழிகாட்டி' என்ற நூலை வெளியிட்டார். கிறித்துவ திருச்சபைக் குருக்கள் அதற்கு மறுப்புத் தெரிவித்தனர். அவற்றையெல்லாம்



சிறிதும் பொருட்படுத்தாது, கிறித்துவ மக்களுக்கு ஒரு முறையீடு என மூன்று கட்டுரைகள் வெளியிட்டார்.

### 10. 2. 1. பிரம்மசமாஜத்தின் தொண்டுகள்

#### *10. 2. 1. 1. சமயத்தொண்டு*

'ஒரு தெய்வ' வழிபாட்டைத் தான் இந்நிறுவனத்தை சார்ந்தோர் பின்பற்ற வேண்டும். இதனை பிரம சமாஜ பொறுப்பாவணத்தில் இராசாராம் மோகன்ராய் தெளிவுபடுத்தியுள்ளார். இறைவனை இரு கைகளால் மட்டுமின்றி இதயத்தாலும் வழிபட வேண்டும். 'தான்' என்ற அகந்தையை அழித்து விட்டு தனது ஆத்மாவை இறைவனுக்கு திருப்படையல் செய்ய வேண்டும். ஒன்றே குலம், ஒருவனே தேவன் என்பதையும் மக்கள் அனைவரும் சகோதரர்களே என்பதையும் இவர் வலியுறுத்திக் கூறினார். எல்லாச் சமயங்களையும் அவற்றின் சமய இலக்கியங்களையும் நன்மதிப்புடன் போற்றினார். இந்த இயக்கத்தின் கதவுகள் எப்பாகுபாடும் இல்லாமல் அனைவருக்கும் திறந்து விடப்பட்டிருந்தன. இந்து சமயத்தை விட்டு விலகாமல் அதே நேரத்தில் மேலைநாட்டுத் தாக்கத்தால் தோன்றிய நல்ல கருத்துகளையும் தன்வயப்படுத்திக் கொண்டு விரிந்த பரந்த உணர்வுடன் செயல்பட விரும்பியது இந்த இயக்கம்.

#### *10. 2. 1. 2. சமுதாயத் தொண்டு*

இத்துறையில் இவரது பணி அளவிடற்கரியது. பயனற்ற சமுதாய பழக்கவழக்கங்களைச் சட்டத்திற்குப் புறம்பானது என்று அறிவிக்க ஆங்கில ஆட்சியாளரின் துணையை நாடினார். 'சதி' அல்லது 'உடன்கட்டை ஏறுதல்' என்ற பழக்கம் அந்நாளில் இருந்த வந்தது. வில்லியம் பெண்டிங்கை அது சட்டத்திற்கு புறம்பானது என அறிவிக்கச் செய்தார். அவர் வாழ்ந்த காலத்தில் வங்காளத்தில் இளம் விதவைகளுக்கு எண்ணற்ற இன்னல்கள் இழைக்கப்பட்டன. பல இளம் விதவைகள் இதனால் இஸ்லாமிய சமயத்தைத் தழுவினர். விதவைகள் மறுமணம் செய்து கொள்வதை இராசாராம் மோகன்ராய் ஆதரித்தார். பலதாரமணத்தையும், குழந்தை மணத்தையும் வன்மையாகவே எதிர்த்தார். பெண் குழந்தைகளைக் கொல்வதையும்

www.tntextbooks.in

கண்டித்தார். உருவ வழிபாட்டையும், வேள்விகளையும் முற்றிலுமாகச் சாடினார். மகளிர் நலனுக்காக போராடினார். பெண்கள் சொத்துரிமை பற்றியும் கலப்பு மணத்தை பற்றியும் சமுதாயத்திற்கு உணர்த்தினார்.

### *10. 2. 1. 3. எழுத்துரிமை*

செய்தித்தாள்கள் முழு உரிமையுடன் செயல்படவேண்டுமென்றார். மனிதன் எண்ணுவதிலும், எழுதுவதிலும் எந்தவிதமான கட்டுப்பாடும் இருத்தல் கூடாது என்பதே இவரது கருத்து. செய்தித்தாள்கள் மீது விதிக்கப்பட்ட தடைகளை எதிர்த்தார்.

இதுவரை நாம் கண்ட சமுதாயப் பணிகளோடு மேலும் இவர் ஏழை உழவர்களின் நிலை உயர பாடுபட்டார். ஜமின்தார்கள் அவர்களுக்கு விதித்த நிலத்தீர்வைகளைக் குறைக்கும்படி கோரினார்.

### 10. 2. 2. இராசாராம் மோகன்ராய் - ஒரு மதிப்பீடு

இவர் சமுதாய சீர்திருத்தவாதி மட்டுமல்லாமல் சிறந்த நாட்டுப்பற்று உடையவராகவும் திகழந்தார். மக்களிடையே அரசியல் விழிப்புணர்வைத் தோற்றுவிக்க முயன்றார். இந்தியாவின் "புத்துலகச் சிற்பியென" இவரைக் கூறினால் அது மிகையாகாது. சமயம், அரசியல், தத்துவம், சமுதாயம், கல்வி, இலக்கியம் மற்றும் சட்டம் போன்ற துறைகளில் பல சீர்திருத்தங்களைக் கொண்டு வர இவர் காரணமாக இருந்தார். மகளிர் நலனுக்காகவும் விடுதலைக்காகவும் இதற்கு முன்பு இவரைப் போல் எவரும் பாடுபட்டதில்லை என்பதை உறுதியாகக் கூறலாம்.

தீண்டாமையை எதிர்த்து போர்க்கொடி உயர்த்தினார். அக்காலத்தில் நல்ல இலக்கிய புலமை நிறைந்தவராக இருந்தார். இலக்கிய படைப்புகளை அளித்தவராகவும் இருந்தார். இவர் உருது, வங்காளம், இந்தி, சமஸ்கிருதம், பாரசீகம் மற்றும் ஆங்கில மொழிகளில் பல நூல்களை எழுதியுள்ளார். 'சம்வத் கௌமதி' என்ற வங்காளப் பத்திரிக்கையை 1819ல் நிறுவி அதன் ஆசிரியராக பணியாற்றினார். அதற்கு மூன்று ஆண்டுகளுக்குப் பின்பு பாரசீக மொழியில் 'மிராதுல் அக்பர்' என்ற இதழையும் வெளியிட்டார். செய்தித்தாள் உலகில் முன்னோடியாக விளங்கி, இளம்



எழுத்தாளர்களுக்கு வழிகாட்டியாகத் திகழ்ந்தார்.

அரசியல் வானில் இவர்தான் புதிய இந்தியாவின் தீர்க்கதரிசியாக (வருவது உரைப்பவராக) இருந்தார். உரிமை பெற வேண்டும் என்பதும் அதனைச் சட்டத்தின் மூலமே பெற வேண்டும் என்பதும் இவரது கொள்கையாக இருந்தது.

மானியர் வில்லியம்ஸ் என்பவர் 'இராசாரம் மோகன்ராய் தான் முதன் முதலில் சமய ஒப்புமை ஆய்வை அறிவியல் முறையில் அக்கறையுடன் செய்ய முற்பட்டவர்' என்று கூறுகிறார். உலகம் தழுவிய மனித நேய உறவை வலியுறுத்திய எளிய தூய மனிதாபிமானியாகவும் திகழ்ந்தார். பட்டுப் போகாத பழமைக்கும் வளரும் புதுமைக்கும் இணைப்புப் பாலமாகவே இவர் இருந்தார். 'இவர் இந்தியாவில் புதிய காலத்தைத் தொடங்கி வைத்தவர்' என இரவீந்திர நாத தாகூர் கூறுகிறார்.

### 10.2.3. பிரம்மசமாஜம் - இராசாராம் மோகன்ராய் காலத்திற்குப்பின்

இராசாராம் மோகன் ராய் 1833ல் பிரிஸ்டல் என்ற இடத்தில் அகால மரணமடைந்தார். இதன் விளைவாக இவ்வியக்கம் பெரும் அதிர்ச்சிக்குள்ளாயிற்று. நிர்வாக அமைப்பு முறைகளும், சட்டதிட்டங்களும் முறையாக இல்லாத காரணத்தினால் அதன் முன்னேற்றம் தடைபெற்றது. 1843-ல் தேவேந்திரநாத் தாகூர் இவ்வியக்கத்தில் சேர்ந்து இதைப் புதுப்பித்தார். அவருடைய தலைமையின் இவ்வியக்கம் வெற்றி நடைபோட்டது. அவர் மாதா கோயில் வழிபாட்டு முறை, நன்றி நவிலும் தொழுகை முறை, புகழஞ்சலி வழிபாடு போன்றவற்றை அறிமுகப்படுத்தினார். 'கேசவ சந்திர சென்' என்பவர் 1862-ல் இவ்வியக்கத்தில் சேர்ந்தார். கிறித்துவ மற்றும் வைணவ போதனைகளை வலியுறுத்தினார். இது மற்றவர்களால் பெரிதும் வெறுக்கப்பட்டது. இதன் விளைவாக இவ்வியக்கம் இரண்டாக பிளந்தது. 1884-ல் கேசவ சந்திர சென் மறைந்தார். பிரம சமாஜத்தில் பல உட்பிரிவுகள் இருந்தாலும் இவ்வியக்கத்திற்குப் பின் தோன்றிய 'ஆர்யசமாஜம்' போன்று செல்வாக்குடன் விளங்கவில்லை. இந்துக்களின் இதயங்களை

www.tntextbooks.in

மாற்றுவதிலும், மேலைநாட்டுக் கருத்துகளைச் சிந்திக்க வைப்பதிலுமே இவ்வியக்கம் பெரும் பங்காற்றியது.

## 10. 3. ஆரிய சமாஜம்

ஆரிய சமாஜம் கி.பி. 1875-ல் தோற்றுவிக்கப்பட்டது. இதைத் தோற்றுவித்தவர் சுவாமி தயானந்த சரஸ்வதி ஆவார் அவரது இயற்பெயர் மூலசங்கரன். கி.பி. 1824-ல் குஜராத்தில் வசதியுள்ள பிராமண குடும்பத்தில் பிறந்தார். இவரது தந்தையின் பெயர் 'அம்பா சங்கரர்' ஆகும். இவரது 20வது வயதில் திருமணம் முடிக்க இவரது தந்தை விரும்பினார். அதில் விருப்பம் இல்லாமல் வீட்டை விட்டு வெளியேறினார். உண்மையைத் தேடி இந்தியா முழுமைக்கும் சுற்றி பல இடங்களில் கல்வி கற்றார். 15 ஆண்டுகள் அலைந்து, திரிந்து இறுதியாக மதுராபுரிக்குச் சென்றார். அங்கு சுவாமிஜி வீராஜானந்தரிடம் சீடராக ஆனார். அதன் பின்பு 'சத்தியார்த்த பிரகாசம்' என்ற நூலை எழுதினார். அவர் தம் வாழ்நாளை வேத சமயத்தைப் பரப்புவதிலும் இந்து, சமய, சமுதாயப் பணிகளிலும் கழித்தார். ஐந்தாண்டுகளுக்குள் பல்லாயிரக் கணக்கானோர் இவரைப் பின்பற்றத் தலைப்பட்டனர்.

### 10. 3. 1. ஆரியசமாஜம் - விளக்கம்

'ஆரியா' என்பதன் பொருள் கடவுளின் குழந்தை என்பதாகும். **(Arya means son of God).** அனைத்து ஆன்மாக்களும், கடவுளின் குழந்தைகள் என்றும், அவை கடவுளுக்கு கீழ்படிதல் உள்ளவையாக இருக்க வேண்டும் என்பதும் தயானந்தரின் கருத்துகளாகும்.

### 10. 3. 2. ஆரியசமாஜத்தின் கோட்பாடுகள்

1. அனைவரும் கடவுளின் குழந்தைகள் என்பதால் அவர் களிடையே சாதி, மத, இன வேறுபாடுகள் அர்த்தமற்றதாகும்.
2. மரம், உருவம், கோள்கள், மனிதர்கள், புத்தகங்கள் இது போன்ற இன்ன பிற பொருள்களை முன்னிறுத்தி வழிபாடு செய்வதை வேதங்கள் போதிக்கவில்லை.



தியானத்தின் மூலமாகவும், தன்னலமற்ற நற்செயல்களின் மூலமாகவும் வேதங்களை பரப்புவதன் மூலமாகவும் கடவுளை வழிபட முடியும்.

3. கடவுளிடம் நமது குறைகளை முறையிட எந்தவொரு பிரதிநிதியும் **(Agents)** தேவையில்லை. மாறாக அனைத்து ஆண்களும், பெண்களும் கடவுளின் பிரதிநிதிகளே. கடவுளைப் பற்றியும், அவரது கருத்துகளைப் பரப்புவதற்கும் மக்கள் அனைவரும் படைக்கப்பட்டிருக்கிறார்கள்.
4. ஆன்மாவின் பயணம் முடிவற்றது. அது பல்வேறு பிறப்பு மற்றும் இறப்புகளின் மூலம் தன்னை சுத்தப்படுத்தி மேன்மை அடையச் செய்கிறது.
5. இறப்பு என்பது முடிவற்றது. தவிர்க்க முடியாததும் கூட. எனவே அதனைப் பற்றிய அச்சம் கூடாது. வாழ்வில் மேற்கொள்ளும் நற்செயல்கள் மூலமாக இறப்பை, அடுத்த பிறவியல் அதனை புனிதப் பிறப்பாக்கிக் கொள்ளலாம்.
6. ஆன்மா பிறப்பதும் இல்லை. இறப்பதும் இல்லை. கடவுளைப் போன்றே ஆன்மாவும் நிலையானது.
7. தீபம் ஏற்றுதல் என்பது அதன் ஒளியில் எதிர்காலத்தில் நற்செயல்களைச் செய்தற்கு திட்டமிடுதல் ஆகும்.
8. நாளைய செயல்கள் என்பது கடமையாகும். அதுவே இன்றைய கடமையாக மாறுகிறது. அக்கடமையினை முழுமனத்துடன் செவ்வனே செய்யும்போது, அது அடுத்த பிறவிக்கான கருவூலமாக மாறுகிறது.
9. ஆன்மா பாவம் அற்றது. அது கடவுளின் கோட்பாடுகளை மீறும் போது பாவமடைகிறது. ஆன்மாவானது மன எழுச்சிக்கு அடிமையாகும் போது இச்செயல் நடைபெறுகின்றது. எனவே மன எழுச்சியானது ஆன்மாவைப் பாதிக்கா வண்ணம் பார்த்துக் கொள்வது அவசியமாகிறது.

www.tntextbooks.in

10. எல்லா பாவத்தினின்றும் விடுதலை பெருவதே வீடுபேறாகும். பல்வேறு பிறப்பு மற்றும் இறப்பின் மூலமாகவே வீடு பேற்றை அடைய முடியும்.

11. சொர்க்கமும், நரகமும் இப்புவியில்தான் உள்ளது. வேறெங்கும் இல்லை. தன் செயல்களின் மூலமாகவே சொர்க்கத்தையும் நரகத்தையும் தானே நிர்ணயம் செய்து கொள்ளுகிறான்.

12. ஆணும் பெண்ணும் சரிநிகர் சமானம். ஆன்மாவிற்கு பாலின வேறுபாடுகள் கிடையாது. ஆன்மா முழுமையானதும் புனிதமானதும் ஆகும்.

13. சமயச் சடங்குகளின் வழி முறைகள் மூலமாக உலகில் அமைதியை ஏற்படுத்த முடியும்.

14. மதம் மற்றும் மதநம்பிக்கைகள் மூலமாக மட்டும் இன்றைய பிரச்சினைகளுக்கும் தீர்வு காண இயலாது. மாறாக அறிவுப்பூர்வமான சிந்தனை மற்றும் செயல்பாட்டினால் மட்டும் தீர்வுகாண இயலும்.

## 10. 3. 3. ஆர்ய சமாஜத்தின் செயல்பாடுகள்

இது ஆரம்பிக்கப்பட்ட காலம் முதல் மனித சமுதாய மேம்பாட்டிற்கு பல சமுதாயப் பணிகளை மேற்கொண்டு வந்துள்ளது. இந்து சமயத்தில் இருந்து வரும் தீமைகளைக் களையவும் வேத சமயத்திற்கு புத்துயிர் அளிக்கவும் முயற்சிகள் மேற்கொண்டுள்ளது.

### *10. 3. 3. 1. வேதங்களைப் பரப்புவது*

வேதங்கள் மிகவும் நம்பத்தகுந்த செய்திகளை உள்ளடக்கி இருப்பதால் அதனைப் பரப்ப நூற்றுக்கணக்கான போதகர்களும், துறவிகளும் நாடு முழுமைக்கும் பயணம் செய்ய ஏற்பாடுகள் செய்யப்பட்டது. வேதக் கருத்துகளில் உடன்பாடு இல்லாதவர்கள் அதைத் திரித்துக் கூற நினைத்தவர்களிடம் விவாதம் நடத்தி அவர்களுக்குத் தேவையான விளக்கங்களைத் தருவதும் அவர்களது கடமையாகும். மேலும் போதகர்கள் ‘ஒரு கடவுள் கோட்பாட்டினை’ வலியுறுத்தி வருகிறார்கள்.



### *10. 3. 3. 2. இந்தியப் பண்பாட்டை மக்களிடம் எடுத்துச் செல்வது*

சமஸ்கிருதம் மற்றும் இந்தி ஆகிய மொழிகளில் ஈடுபாடு ஏற்படும் வகையிலும் பண்டைய நாகரிகங்களை அறியும் வகையிலும் இச்சமாஜத்தின் ஊழியர்கள் செயல்படுகின்றர். நம் மூதாதையர்கள் கூறிச் சென்றுள்ள அறிவியல் கருத்துகளை ஆய்வு **(Research)** செய்வதற்கு இன்றைய இளைஞர்களை ஊக்குவிக்கும் வண்ணம் அதன் செயல்பாடுகள் அமைந்துள்ளன.

### *10. 3. 3. 3. கல்வி நிறுவனங்களை உருவாக்குதல்*

ஆரியசமாஜத்தின் கல்வி நிறுவனங்களை இரண்டு வகைகளாகப் பிரிக்கலாம். அவற்றிலொன்று ‘குருகுலம்’ மற்றொன்று ‘பள்ளி மற்றும் கல்லூரிகளாகும். குருகுலத்தில் குறிப்பாக சமஸ்கிருத மொழியிலும் சமயம் மற்றும் மதம் பற்றிய கருத்துகளும் பயிற்றுவிக்கப்படுகின்றன. பள்ளி மற்றும் கல்லூரிகள் **Dayanand Anglo vedic** பள்ளிகள் மற்றும் கல்லூரிகள் என்ற பெயர்களைக் கொண்டிருக்கும். சம்பந்தப்பட்ட அரசாங்கத்தின் கல்வித்துறை அல்லது பல்கலைக்கழகங்களில் ஒப்புதலோடு மேற்கூறிய கருத்துகளை கற்பிக்கின்றனர். **Dayanand Anglo vedic** பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் மாணவர்களும், மாணவிகளும் தனித்தனியாக பயிலவும், ஒன்றாகப் பயிலவும் வசதிகள் செய்யப்பட்டுள்ளன. சில நிறுவனங்களில் வணிகப்படிப்பும் **(Commercial Education)** சொல்லித்தரப்படுகின்றன. நாடு முழுமைக்கும் கல்வி நிறுவனங்கள் இச்சமாஜத்தால் நடத்தப்படுகின்றன. ஒரே நகரில் பல கல்வி நிறுவனங்களும் நிறுவப்பட்டுள்ளன. இந்திய நாட்டில் இளைஞர்களும் இளம் பெண்களும் ஏற்றம் பெறும் வகையில், வாழ்க்கையில் மாற்றங்களை ஏற்படுத்திய பெருமை இவ்வியக்கத்தையே சாரும்.

## 10. 3. 4. சமுதாயத் தொண்டு

### *10. 3. 4. 1. பெண்கள் நலம்பேணுதல்*

பல நகரங்களில் அநாதை ஆசிரமங்கள் நிறுவப்பட்டுள்ளன. அவற்றில் எண்ணற்ற ஆண் குழந்தைகளும், பெண் குழந்தைகளும்

பேணிக் பாதுகாக்கப்படுகின்றனர். மேலும் அவர்களுக்கு அடிப்படை மற்றும் தொழில் கல்விகளும் போதிக்கப்படுகின்றன. இதனால் வாழ்க்கையில் தனக்குத் தேவையானவற்றை தாங்களே பெற்றுக் கொள்ள வழிவகை கிடைக்கின்றது.

*10. 3. 4. 2. குழந்தைகள் இல்லம்*

படிப்பறிவு இல்லாத ஏழைப் பெற்றோர்களின் குழந்தைகளுக்குக் கல்வி புகட்ட ஆஜ்மீர் நகரில் குழந்தைகள் இல்லத்தை இந்நிறுவனம் ஏற்படுத்தியுள்ளது.

*10. 3. 4. 3. விதவைகள் இல்லம்*

பல குடும்பங்களில் விதவைகள் மனிதாபிமானமின்றியும், ஈவு இரக்கம் இல்லாமலிலும் நடத்தப்படுகின்றனர். மேலும் பல வழிகளில் அவர்கள் துன்பப்படுத்தப்படுகின்றனர். எனவே விதவைகள் வீட்டை விட்டு வெளியேறும் நிலை ஏற்பட்டுள்ளது. அப்படிப்பட்ட விதவைகளுக்கு புகலிடமாக விதவைகள் இல்லங்கள் நிறுவப்பட்டுள்ளன. மேலும் அவர்களுக்கு சரியான துணை கிடைக்கும்போது மறுமணம் செய்து கொள்ளவும் ஏற்பாடு செய்யப்படுகின்றது.

*10. 3. 4. 4. கைவிடப்பட்ட / அநாதைப் பெண்களுக்கான ஆசிரமம்*

கைவிடப்பட்ட / அநாதைப் பெண்களுக்காக சில ஆசிரமங்களை இவ்வியக்கம் ஏற்படுத்தியுள்ளது. அத்தகைய பெண்களுக்கு தன்னம்பிக்கை உண்டாகவும் தம் வாழ்விற்கு தேவையானவற்றை தாமே சம்பாதித்து கொள்ளவும் தொழிற்கல்விகள் இங்கு போதிக்கப்படுகின்றன.

*10. 3. 4. 5. தொண்டர் குழுக்கள்*

'தைரியமான ஆரியன்' என்ற தொண்டர் படையும் இந்நிறுவனத்தால் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இக்குழுக்கள், மக்களை மகிழ்விப்பதற்கான பொது விழாக்களை ஏற்பாடு செய்வது மட்டுமன்றி தூய்மையான குடிநீர் கிடைக்க செய்வதிலும், மருத்துவ மனைகளை ஒழுங்காக செயல்பட வைப்பதிலும் பங்கேற்கின்றனர்.



மேலும் இளைஞர்கள் உடலையும் உள்ளத்தையும் தூய்மையாக வைத்துக் கொள்ள யோகா மற்றும் தியானம் ஆகியவைகளை கற்றுத் தருகின்றனர்.

**10. 3. 5. சமுதாய மறுமலர்ச்சி**

இச்சமாஜம்சமுதாய மறுமலர்ச்சிக்கு பல்வேறு வகைகளில் பாடுபடுகின்றது. அவையாவன.

*10. 3. 5. 1. குழந்தை மணத்திற்கு எதிராக*

சமுதாயத்தில் மிகவும் கொடிய பழக்கமாக குழந்தை திருமணம் உள்ளது. இதனால் எண்ணற்ற பெண்கள் இளம் வயதிலேயே விதவையாகும் நிலை ஏற்பட்டுள்ளது. இந்த தீய நடைமுறையை இவ்வியக்கமானது முற்றிலுமாக எதிர்க்கிறது. இதனை தடுக்க ஆரிய சமாஜம் சாரதா சட்டத்தை **(Saradha Act)** ஆதரித்தது. அரசாங்கமும் 18 வயதிற்குட்பட்ட பெண்ணும் 21 வயதிற்குட்பட்ட ஆணும் திருமணம் செய்துகொள்ள கூடாது என்று சட்டம் இயற்றியுள்ளது. மீறியவர்கள் தண்டனைக்குட் படுத்தப்படுவார்கள்.

*10. 3. 5. 2. பலதார மணத்திற்கு எதிராக*

இந்து சமுதாயத்தில் உள்ள மற்றுமொரு இழிச்செயல் ஒரு ஆண் பல பெண்களை மணந்து கொள்வது என்பதாகும். தற்போது இந்து மதத்தைச் சார்ந்த எந்தவொரு ஆணும் பெண்ணும் இரண்டு திருமணங்கள் செய்து கொள்ள முடியாதவாறு அரசாங்கம் சட்டம் இயற்றியுள்ளது. பலதார மணத்தை ஆரிய சமாஜம் எப்போதும் எதிர்த்து வந்துள்ளது.

*10. 3. 5. 3. வயதான ஆண்மகனின் திருமணத்திற்கு எதிராக*

வயதான ஆண், இளம் வயது பெண்ணை திருமணம் செய்து கொள்வதை இவ்வியக்கம் கடுமையாக எதிர்க்கிறது.

*10. 3. 5. 4. ஆண்களும் பெண்களும் சரிநிகர் சமானம்*

சமுதாயத்தில் கணவனுக்குத் தேவையான பணிவிடைகளை செய்து, நான்கு சுவர்களுக்குள் முடங்கி கிடப்பதே பெண்ணின்

www.tntextbooks.in

கடமை என்று கருதப்பட்டு வந்தது. இதை ஆரிய சமாஜம் வன்மையாக எதிர்க்கிறது. ஆண்களையும் பெண்களையும் சமுதாயத்தின் இருகண்களாகவே பாவிக்கின்றது. கடமைகளும் உரிமைகளும் இருபாலருக்கும் சமமாக இருக்க வேண்டுமென்று கூறுகிறது. கணவன் இறந்துவிட்டால், வேறொரு ஆணின் துணை அவசியமென்று உணரும் பட்சத்தில் பெண்கள் மறுமணம் செய்து கொள்ளலாம் என்று கூறுகிறது.

### *10. 3. 5. 5. சாதி முறைகளும் தீண்டாமையும்*

இந்தியாவில் தொன்று தொட்டு இருந்து வந்த சாதி முறைகளையும் தீண்டாமையையும் ஆரிய சமாஜம் ஆரம்ப காலம் முதலே எதிர்க்கிறது. மேலும் பிறந்த ஜாதியினால் உயர்ந்தவரோ தாழ்ந்தவரோ இல்லை என்று வலியுறுத்துகிறது. மேலும் எவன் ஒருவன் உன்னதமான செயல்களை செய்கிறானோ அவனையே உயர்ந்தவனாக கருத வேண்டும் என்று கூறுகிறது. இந்நிறுவனம் நூற்றுக்கணக்கான கலப்புத் திருமணங்களை நடத்தி வைத்துள்ளது. அதில் பல்லாயிரக்கானோர் பங்கேற்றுள்ளனர். எனவே அவர்களது உள்ளத்தில் இருந்து சாதி மற்றும் தீண்டாமை போன்ற எண்ணங்கள் மறைவதற்கான வாய்ப்புகள் உள்ளன.

### *10. 3. 5. 6. புனிதப்படுத்துதல் (Shuddhi)*

ஆரிய சமாஜம் தோன்றுவதற்கு முன் பிற மதத்தை சார்ந்த எவரும் இந்து மத கோட்பாடுகளை ஏற்று இந்துவாக மாறமுடியாத நிலை இருந்தது. ஆனால் ஆரிய சமாஜமோ இந்து மதத்தின் கதவுகளை எல்லோருக்கும் திறந்து வைத்துள்ளது.

### *10. 3. 5. 7. ஆரியசமாஜத்தின் தொண்டுகள் நடைபெறும் இடங்கள்*

இந்தியாவில் நிறுவப்பட்டாலும் இதன் கிளைகள் அயல்நாடுகளிலும் பரவியுள்ளன. இந்தியர்கள் குடியேறி வாழ்கின்ற இலண்டன் மற்றும் நியூயார்க் போன்ற பெருநகரங்களில் இதன் கிளைகள் தொடங்கப்பட்டுள்ளன. வடஇந்தியாவில் மாவட்டம் தோறும் இதன் கிளைகள் அமைந்துள்ளன. பெரு நகரங்கள்



மட்டுமல்லாது சிறு கிராமங்களிலும் இதன் கிளைகள் விரிந்து கிடைக்கின்றன.

### 10. 3. 6. சுவாமி தயானந்தர் ஒரு மதிப்பீடு

சுவாமி தயானந்தர் சிறந்த சீர்திருத்தவாதி. வேத சமயம், நாகரிகம், பண்பாடு இவை மூன்றையும் உலகிலேயே சிறந்தவையாக அவர் கருதினார். இவற்றிற்கு புத்துயிர் அளித்தால் தான் இந்தியா மேம்பாடு அடைய முடியும் என்றும் கருதினார். வேறு சமயத்திற்கு மாறிய இந்துக்கள், இந்து சமயத்திற்கு திரும்பி வர புனித சடங்குகளை பின்பற்றினார். இந்துக்களிடம் நாட்டுப்பற்றை வளர்க்க பெரிதும் பாடுபட்டார். 'இந்தியா இந்தியருக்கே' என்ற முழக்கத்தை எழுப்பியவரும் இவரே. நம்மை நாமே ஆண்டு கொள்வதுான் நல்லாட்சியாகும் எனக் கருதினார். இவர் அடிக்கடி சுயராஜ்யம் (நமது அரசு) சுய பாஷை (நமது மொழி) சுய தர்மம் (நமது சமயம்) என்று மக்களிடையே கூறியது விடுதலை உணர்வை, மக்களிடையே தோற்றுவித்தது.

### சுவாமி தயானந்தர் ஒரு சிறந்த ஞானி

கடந்த காலத்தையும் நிகழ்காலத்தையும் இணைக்கும் பாலமாக அவர் விளங்கினார். 'உண்மையே வெல்லும்' 'மீண்டும் வேதங்களுக்கு செல்' என்பன அவருடைய பொன் மொழிகளாகும்.

அவர் மறைந்த பின்னும் அவரது வழித் தோன்றல்கள் அவர் விட்டு சென்ற பணிகளை தொடர்ந்து மேற்கொண்டனர். இவ்வியக்கம் லாலா லஜபதிராய், சுவாமி சிரத்தானந்தர் போன்ற பெருந்தலைவர்களை நாட்டிற்கு தந்துள்ளது. சுவாமி தயானந்தா ஆரிய சமாஜத்தை நிறுவிய 8 ஆண்டுகளில் அகால மரணமடைந்தார். அதன் பின் மகாத்மா ஹன்ஸ்ராஜ் என்பவர் தயானந்த ஆங்கில வேத கல்லூரி நிறுவினார்.

1902-ல் ஆரிய சமாஜத்தில் டி.ஏ.வி **(D.A.V.)** கல்லூரி பிரிவு, குருகுலப் பிரிவு என இரு பிரிவுகள் தோன்றலாயின. குருகுலப்பிரிவு குருகுல கங்கேரி என்ற ஒரு நிறுவனத்தை தொடங்கியது. அது பின்னர் பல்கலைக்கழகமாக வளர்ந்தது. இந்தியத் திருநாட்டில்

www.tntextbooks.in

இளைஞர்களும் இளம்பெண்களும் ஏற்றம் பெறும் வகையில் வாழ்க்கையில் மாற்றங்களை ஏற்படுத்திய பெருமை இவ்வியக்கத்தையே சாரும். இவ்வியக்கமானது மனித சமுதாயத்தை 'ஒன்றே குலம் ஒருவனே தேவன்' என்ற பாதையின் கீழ் வரவேற்கிறது.

## 10. 4. இராமகிருஷ்ண இயக்கம்

### 10. 4. 1. இராமகிருஷ்ணரின் வாழ்வு

இந்தியாவில் குழப்பமும் அமைதியின்மையும் தலை விரித்தாடிக் கொண்டிருந்தபொழுது அமைதியையும் அறிவொளியை யும் நல்க இந்திய வானில் தோன்றிய விடிவெள்ளி இராமகிருஷ்ண பரமஹம்சர். இவர் தமது மனமென்னும் ஆய்வுக் கூடத்தில் ஆன்மா பற்றிய ஆராய்ச்சியை நடத்திக் கொண்டிருந்தார். தூய கங்கை நதிக்கரையில் கல்கத்தாவிற்கு அருகிலுள்ள தக்ஷிணேஸ்வரம் என்ற இடத்தில் அமைந்திருந்த காளிகோயிலில் தமது காலத்தைக் கழித்த இவர், எல்லாச் சமயங்களின் சாரத்தையும் அறிந்து, உண்மைகளை உணர்ந்து சுவைத்து வாழ்ந்து காட்டிய ஞானி, 1875 ஆம் ஆண்டு இறுதியில் அவருடைய ஆய்வுகள் முடிந்தன. பின்பு கேசவ சந்திரசென்னும் பிரம்ம சமாஜமும் காணவிரும்பிய மறுமலர்ச்சி எண்ண அலைகளோடு தொடர்பு கொண்டார். பின்பு 1886ல் அவர் மகாசமாதி நிலையை அடையும்வரை 11 ஆண்டுகட்கு எளிய சொற்களில் இனிய நடையில் கதைகள், நீதிக்கதைகள் அன்றாட நிகழ்ச்சிகளை வைத்து அரிய சமய, தத்துவ கருத்துகளை எவரும் புரிந்து கொள்ளும் வண்ணம் போதித்தார். படித்தோரும், பாமரரும் ஆடவரும், பெண்டிரும், இளைஞரும், முதியோரும் கேட்டு இன்புற்று அறநெறியில் நிற்க முனைந்தார். சாரதா தேவியார் இவருக்கு உற்ற துணையாக இருந்து, இவருடைய சமயப் பணிகள் சரிவர நடைபெறப் பல்லாற்றானும் துணை புரிந்தார்.

இவர் 1834 ஆம் ஆண்டு வங்காளத்தில் ஹுக்ளி மாவட்டத்தில் காமர் புக்கூர் என்ற கிராமத்தில் பிராமண குடும்பத்தில் தோன்றினார். தமது குலதெய்வத்தை ஒன்பதாவது வயதிலே வழிபடத் தொடங்கி, பின்பு தக்ஷிணேஸ்வரக் காளியுடன் நெருங்கிய தொடர்பு ஏற்பட்டது.



காளியைக் காண வேண்டுமென்று பல மணிநேரம் இவர் ஆழ்ந்த தியானத்தில் இருந்துவிடுவார். நாளடைவில் காளியைக் கண்டு, கண்ட அந்தப் பேரின்ப நிலையிலே இருப்பார். பின்பு பல்வேறு அநுபூதி நிலைகளில் கண்ணனையும் இராமனையும் கண்டு பேரானந்தம் எய்தினார். இவரை இளம்வயதில் 'கதாதரீ' என அழைப்பர்.

### 10. 4. 2. இராமகிருஷ்ணரின் கொள்கைகள்

சமயவெறியில் நிற்பதெனின் இறைவனை உணருதல் என்பது இவரது கருத்து. சமயத்தைப் புறக்கணிப்பது என்பது சமயத்திற்கு பெரும் தீங்காகக் கருதப்படுகின்றது. இது சமயத்தைப் பின்பற்றாமல் இருப்பதை விடக் கீழாகக் கருதப்படுகின்றது. தொண்ணூறு கோடி மக்கள் இரண்டாயிரம் ஆண்டு காலம் வாழ்ந்த வாழ்வின் முழுமைச் சின்னம் இராமகிருஷ்ணர், அவர், பல்லாயிர மக்களின் குரல்கள், மனித இன நம்பிக்கைகள் கூடி அமையப் பெற்ற இயைபுடைய சீரிய பவ்வியமாக விளங்கினார் என உரோமன் ரோலந்து கூறுகிறார். சமயம் ஓர் அனுபவம் விந்தை நிறைந்தது சமயம். இதை இலக்கணமும், அளவை இயலும் (Logic) விளக்கிவிட முடியாது. அனுபவத்தின் ஆண்டவனைக் கண்டோர் அதைக் குறித்து வாதிடுவதில்லை, கண்டவர் விண்டிலர்; விண்டவர் கண்டிலர் என்பது இவரது கருத்து.

வாழ்வின் சீரிய குறிக்கோள் இறையனுபவம், அடிப்படைத் தத்துவ நுணுக்கங்களையும், தத்துவ உரையாடல்களையும் தவிர்த்தார். இறைவனை அடைய வேண்டுமென்ற ஏக்கம், இறைவன் பால் அன்பு இவைகளே வேண்டுபவை; ஆனால் இறைவனைப் பற்றிய அறிவென்று உருவவழிபாடு சமயவாழ்விற்கு இன்றியமையாதது எனக் கருதினார். அனைத்துத் திருவுருச் சிலைகளிலும் ஆண்டவன் நிறைந்திருப்பதைக் காணலாம் என்பது இவரது கருத்து. இறைவனை அடைய உருவ வழிபாடு ஒரு வழி. அதுவே முடிந்த முடிவு அன்று. குறிக்கோள் இறையனுபவம். இவரது சமயம் நடைமுறை வாழ்விற்கு ஏற்ற ஒன்று. இவர் பண்டைய உண்மைகளை விளக்கவந்த ஓர் ஆன்மப்பெட்டகம், அழியாத சமயச் சின்னம். இவர், "இறைவனும் மனிதனும் கலந்த வியத்தகு கலவை" என விவேகானந்தர் கூறுகிறார்.

www.tntextbooks.in

### 10. 4. 3. சுவாமி விவேகானந்தர்

விவேகம் + ஆனந்தம் = விவேகானந்தம். விவேகத்தால் ஆனந்தம் பெற்றதால் விவேகானந்தர் என அழைக்கப் பெற்றார்.

இராமகிருஷ்ணரின் மிகச் சிறந்த சீடர் விவேகானந்தர். இவர் 1863 ஆம் ஆண்டில் சில்லாவைச் சேர்ந்த தத்தா குடும்பத்தில் கல்கத்தாவில் பிறந்து, ஆங்கிலப் பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் பயின்று புலமை பெற்றார்.

இவரை இளம் வயதில் நரேந்திரர் அல்லது நரேந்திரநாதர் என அழைப்பர். இவரது தந்தை விஸ்வநாத தத்தா, தாயார் புவனேஸ்வரி தேவி. மேலை நாட்டு அறிவியல் கல்வியும், பகுத்தறிவு மனப்பான்மையும், குழந்தைப் பருவத்திலே இறை நம்பிக்கையும், வைதீக நம்பிக்கையும் சரியா என வினவத் தலைப்பட்டன. இவற்றின் விளைவாக இவரது அறிவென்னும் அடிவானம் அகன்ற நிலையை அடைந்தது.

பின்பு பிரம சமாஜத்தின் உறுப்பினரானார். இங்கும் இவரது ஆன்ம திருப்திக்கு உணவு கிட்டவில்லை. உண்மையே உய்த்துணரப் பலரையும், பல இடங்களையும் நாடிச் சென்றார். இறுதியில் எழுத்தறிவில்லா ஞானி இராமகிருஷ்ணரைத் தக்ஷிணேஸ்வரத்தில் நேருக்கு நேர் சந்தித்தார். பரமஹம்சர் இதுபோன்ற வீரம் செறிந்த ஆன்மாவை எதிர்நோக்கிக் கொண்டிருந்தார். அவர் இவரால்தான் விரும்பிய தெய்விகப்பணி நிறைவேறும் என நம்பி இருந்தார். கல்வியாலும் பண்பாலும் இரு துருவங்களைப் போன்ற இரண்டு உள்ளங்கட்கு ஏற்பட்ட சந்திப்பு இறைவனின் திருக் கருணையால் ஏற்று, இவருக்கு இறையுணர்வை உணர்த்தித் தம் சீடராக ஏற்றுக் கொண்டார். நரேந்தரரின் ஐயப்பாடுகள் அகன்றன. மனதில் அமைதி தோன்றியது. குழப்பங்களுக்கு தீர்வுகள் கிடைத்தன.

இராமகிருஷ்ணரின் ஆன்மிகச் செய்தியை அனைத்துலகிற்கும் பரப்பத் தகுந்த அருட்செல்வராக உருவானார். பின்பு இவர் 'விவேகானந்தர்' என அழைக்கப்பட்டார். இவரது ஆசானின் ஆன்மா இவருள் குடிகொண்டமையால் அயராது சமயப்பணிகளை ஆற்றத் தலைப்பட்டார். இராமகிருஷ்ணரின் இறுதிநாள்களில் அறிவாற்றல் நிறைந்த ஒரு இளைஞர் கூட்டம் அவரைச்



சூழ்ந்திருந்தது. அன்னையின் பரிவோடும் பாசத்தோடும் அவர்களை வளர்த்து சமயப் பணிகளுக்குப் பெறச் செய்தார். அவர்களை விவேகானந்தரிடம் ஒப்படைத்ததாக 'உனது பராமரிப்பில் அவர்களை விடுகிறேன். அவர்கள் திரும்பாமல் பார்த்துக்கொள்' என விவேகானந்தரிடம் பரமஹம்சர் கூறினார். இவர்கள் இராமகிருஷ்ணரிடம் தீக்கை பெற்றனர்; துறவற வாழ்வை மேற்கொண்டனர். எதிர்கால இராமகிருஷ்ண இயக்கத்தினைச் சார்ந்தோராக இவர்கள் மாறினார்

### 10. 4. 4. இராமகிருஷ்ண இயக்கம் நிறுவப்படல்

1896 ஆம் ஆண்டு தமது குரு இராமகிருஷ்ண பரஹம்ஸரின் நினைவாக, விவேகானந்தர் இராமகிருஷ்ண இயக்கத்தை நிறுவினார். இந்தியப் பண்பாட்டை உலகெங்கும் பரப்புவது இதன் முக்கிய குறிக்கோள். விவேகானந்தர், ஐரோப்பாவிலும் அமெரிக்காவிலும் பரவலாகப் பயணம் செய்து வேதாந்த தத்துவத்தைப் பரப்ப முயன்றார். நடைமுறை வாழ்விற்கும் பயன்தரும் வகையில் நாகரிக உலகிற்கு இந்து சமயத்தை எடுத்துரைத்தவர் விவேகானந்தர். இந்திய பண்பாடு, நாகரிகம் இவைகளின் சீரிய நிலைமை உலகுக்கு உரத்த குரலில் உணர்த்திய உத்தமர் இவர்.

உலக அரங்கில் இந்தியாலை உன்னத நாடாகக் கருதச் செய்தமையால் இவரை நாட்டுப்பற்று மிக்க ஞானியென அழைத்தனர். இவர் ஏழ்மையை மூட நம்பிக்கைகளை, தீமைகளை அறவே நீக்க முற்பட்டார் அனைவரும் கல்வி பெற வேண்டும். சமுதாயத்தின் அடிமட்டத்திலிருப்போருக்குப் பணி புரிய வேண்டும் என மக்களைத் தூண்டினார். இராமகிருஷ்ண இயக்கத்தின் கிளைகள் உலகெங்கும் உள்ளன. இந்த இயக்கம் ஆன்ம வளர்ச்சியில் நாட்டம் கொண்டோருக்குப் பயிற்சி அளித்து, அவர்களைக் கல்வி, சமய, சமுதாயப் பணிகளைச் செய்யவும், நன்கொடை திரட்டவும் அனுப்பி வைக்கின்றது. தூய வேதாந்தக் கருத்துகளை உயர்ந்த பணியிலும் ஈடுபட்டுள்ளது. இந்தியாவில் பல்வேறு கிளைகளைக் கொண்டு மருத்துவமனைகள், பள்ளிகள், கல்லூரிகள், நூலகங்கள், அனாதை இல்லங்கள் போன்றவற்றை நிறுவி மிக சிறிய பணிகளை செய்து வருகின்றது.

www.tntextbooks.in

சிகாகோ உலகச் சமய மாநாட்டில் விவேகானந்தர் இந்து சமயத்தைப் பற்றி வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த உரை நிகழ்த்தி இந்தியாவிற்குப் பெரும் விளக்கத்தைக் கேட்டு அமெரிக்கர்களும் பிற நாட்டுச் சமயச் சார்பாளர்களும் பெரிதும் வியந்தனர். விவேகானந்தர் சமத்துவத்திலும் சமய ஒற்றுமையிலும் நம்பிக்கை கொண்டிருந்தார்.

### 10. 4. 5. இராமகிருஷ்ண இயக்கத்தின் நோக்கங்களும் குறிக்கோள்களும்

1. இராமகிருஷ்ணா எடுத்துரைத்த வண்ணம், வேதாந்தக் கொள்கைகள் அடங்கிய கல்வியைப் புகட்ட வேண்டும். இதைப் புகட்ட அவருடைய அன்றாட நடைமுறை வாழ்வில் கண்ட எடுத்துக்காட்டுகளைப் பயன்படுத்த வேண்டும். பிற சமய இறையியலுடனும் ஒப்பிட்டுச் சென்மையாகச் செய்தல் வேண்டும்.
2. கலைகள், அறிவியல்கள், தொழில்கள் பிறவற்றையும் புகட்டுவதும், மேம்பாடடையச் செய்வதுமாகும்.
3. மேலே கூறிய துறைகள் அனைத்திலும் ஆசிரியர்களைப் பயிற்றுவித்து அவர்கள் பொதுமக்களை அணுகும் வழிவகை செய்தல்
4. பொது மக்களும் கல்வி புகட்டும் பணியினைத் தொடர்ந்து செய்துவரல்
5. பள்ளிகள், கல்லூரிகள், அனாதை இல்லங்கள், தொழிற் சாலைகள், ஆய்வுக்கூடங்கள், மருத்துவமனைகள், மருந்தகங்கள், உடலுறுப்பிழந்தோருக்கும் பிணியாளர்கட்கும் துயருறுவோருக்கும் உறைவிடங்கள் மற்றும் பிற கல்வி நிறுவனங்கள், அறப்பணிகள் போன்றவற்றை நிறுவிப் பேணி வளர்த்துத் தொடர்ந்து அப்பணிகளைச் செய்துவரல்.
6. இவ்வியக்கம் தன் நோக்கங்களை நிறைவேற்றி, எவற்றை விரும்பத் தக்கதெனச் சிந்திக்கின்றதோ அதற்குரிய



சஞ்சிகைகளை, பருவ இதழ்களை, நூல்களை தூண்டுப் பிரசுரங்களை அச்சடித்துப் பதிப்பித்து விற்றல் அல்லது இலவசமாக வழங்கல்

7. மேலே கண்ட நோக்கங்களைக் கணக்கிடப்பட்ட முறையில் நேரடியாகவோ, மறைமுகமாகவோ, நிறைவேற்றத் தொடர்புடைய பணிகளையும், பிறபணிகளையும் எவற்றை எல்லாம் இயக்கம் செய்யத் தகுதி வாய்ந்ததெனக் கருதுகிறதே அவையனைத்தையும் செய்தல்.

இவ்வியக்கம் கீழ்கண்ட பணிகளையும் செய்தன

1. மருத்துவப்பணி
2. கல்விப் பணி
3. கிராமத்தில் உழைப்பாளிகட்கும், பிற்பட்டோர்க்கும் பணி புரிதல், கிராமிய முன்னேற்றத்திற்குப் பாடுபடல்
4. வெள்ளம், புயல், பெருமழை, நிலநடுக்கம், நாகரிகம், தத்துவம், சமயம் இவற்றை வெளிநாடுகளில் பரப்புதல்
5. ஆன்ம, பண்பாட்டுத்துறைகளில் பணிபுரிதல்.
6. மகளிர் நலனுக்காகப் பல நிறுவனங்களை நிறுவிப் பணிபுரிதல். இவ்வாறாக இராமகிருஷ்ண இயக்கம் இன்றும் உலகெங்கம் உயர்ந்த பணிகளை ஆற்றி வருகின்றது.

### 10. 4. 6. விவேகானந்தர் பொன்மொழிகள்

இளைஞர்களே, உங்களுக்கு என்னிடம் நம்பிக்கை இருக்குமானால், என்னை நம்புவதற்குரிய தைரியம் இருக்குமானால், ஒளிமயமான எதிர்காலம் உங்களுக்குக் காத்திருக்கிறது என்பேன்.

பலவீனம் இடையறாத சித்திரவதையாகவும் துன்பமாகவும் அமைகிறது.

பிறரது பாராட்டுக்கும் பழிக்கும் செவிசாய்த்தால் மகத்தான காரியம் எதையும் செய்ய முடியாது.

www.tntextbooks.in

இந்தியாவை முன்னேற்றமடையச் செய்ய விரும்பினால், பாமர மக்களுக்காக நாம் வேலை செய்தாக வேண்டும்.

அடிமைகள் எல்லோருக்கும் பெரிய சனியனாக இருப்பது பொறாமையே ஆகும். நமது நாட்டைப் பிடித்த சனியனும் அதுதான்.

ஏழை, எளியவர்கள், ஒதுக்கப்பட்டவர்கள், கல்வியறிவில்லாதலர்கள் ஆகிய இவர்களே உன்னுடைய தெய்வங்களாக விளங்கட்டும்.

பகை, பொறாமை ஆகியவற்றை நீ வெளியிட்டால், அவை வட்டியும் முதலுமாக மீண்டும் உன்னிடமே திரும்பி வந்து சேர்ந்துவிடும்.

உண்மைக்காக எதையும் துறக்கலாம்; ஆனால் எதற்காகவும் உண்மையைத் துறக்காதே.

வலிமையே மகிழ்ச்சிகரமான, நிரந்தரமான, வளமாக, அமரத்துவமான வாழ்க்கை ஆகும்.

தன்னலம் சிறிதும் இல்லாமல், நிறைந்த அன்புடன் பழகுபவர்களே இப்போது உலகத்திற்குத் தேவைப்படுகிறார்கள்.

இரக்கம் உள்ள இதயம், சிந்தனை ஆற்றல் படைத்த மூளை, வேலை செய்யக் கூடிய கைகள் ஆகிய இந்த மூன்றும் நமக்குத் தேவை.

வீரர்களே, கனவுகளிலிருந்து விழித்தெழுங்கள்! தளைகளிலிருந்து விடுபடுங்கள்!

இளைஞனே, வலிமை, அளவற்ற வலிமை - இதுவே இப்போது தேவை

சிறந்த லட்சியத்துடன் முறையான வழியைப் பின்பற்றித் தைரியத்துடன் வீரனாக விளங்கு!

உடல் பலவீனத்தையோ, மன பலவீனத்தையோ உண்டாக்கும் எதையும் அணுகக் கூடாது.



## 10. 5. பிரம ஞான சபை

பிற இயக்கங்கள் சமுதாய சீர்திருத்தங்களை மேற்கொண்டதைப் போலவே பிரம ஞான சபையும் இந்திய மக்களின் வாழ்வைச் சீர்ப்படுத்துவதில் பெரும்பங்காற்றியுள்ளது. இச்சபை முதன் முதலில் 1875 ஆம் ஆண்டு அமெரிக்காவில் நியூயார்க் நகரில் நிறுவப்பட்டது. ஹெச்.பி. பிளவாட்ஸ்கி என்ற ரஷ்ய மாதுவும், கர்னல் ஹெச்.எஸ். ஆல்காட் என்ற அமெரிக்கரும் சேர்ந்து இச்சபை நிறுவினர். பின்பு இவர்கள் சென்னைக்கு வந்து அடையாற்றில் தலைமை அலுவலகத்தைத் தொடங்கினார். அவ்வியக்கத்தின் வெற்றிக்கு திருமதி. அன்னிபெசன்ட் அம்மையார் பெரிதும் உதவினார். இவ்வியக்கத்திற்குத் தலைமைப் பொறுப்பையும் ஏற்றார்.

1847–ஆம் ஆண்டு ஆங்கில அயர்லாந்து பிறந்தவர் இவர் 1897–ஆம் ஆண்டு இந்தியா வந்தார். 1898 ஆம் ஆண்டு காசியில் மத்திய இந்திய கல்லூரியைத் தொடங்கினார். சுயமரியாதையும் பண்டைய கோட்பாடுகளில் நம்பிக்கையும் பெருமையும் கொண்டதாக இருந்தது. எதிர்காலத்தில் நம்பிக்கை உடையதாகவும் இருந்தது. அம்மையார் உபநிடதங்களின் அறிவுச்சாரம், கீதை, வீரகாவியங்கள், புராணங்கள், தரும சாத்திரங்கள், ஸ்மிருதிகள், கதைகள் மற்றும் தொல் மரபுகள் ஆகியவற்றை இந்து, பௌத்த மதங்களிலிருந்து எடுத்து அதற்கு மிக எளிய உயர்ந்த விளக்கங்களை அளித்தார்.

இந்துக் கோட்பாடுகளான கருமவினை, மறு பிறவி, ஆன்மாவின் அழியாத இயல்பு, பல்வேறு யோக நிலைகள் மற்றும் அவதாரங்கள் போன்றவற்றை மிக அற்புதமாக அனைவரும் அறிந்து கொள்ளும் வண்ணம் விளக்கி இந்துக்களின் அகக் கண்களைத் திறந்தார். எனவே இந்து சமய மறுமலர்ச்சி இயக்கங்கள் அவருக்கு நன்றிகடன் பட்டனவாக இருக்க வேண்டும். இந்து சமயச் சடங்குகளுக்கும் பழக்க வழக்கங்களுக்கும் அம்மையார் முழு மனதான ஆதரவைக் காட்டினார். அறிவியல் வளர்ச்சியால் ஏற்பட்ட மேல்நாட்டு பொருளியல் கோட்பாட்டை வன்மையாகக் கண்டித்தார். அதன்

www.tntextbooks.in

விளைவாக இந்து சமயத்தில் ஒரு விழிப்புணர்ச்சி தோன்றியதுடன், மக்கள் அதை மிகுந்த ஊக்கத்துடன் பின்பற்றத் தலைப்பட்டனர். பல்லாயிரக்கணக்கான ஆங்கிலம் கற்ற நம் நாட்டு மக்களின் உள்ளத்தில் இந்து சமயத்தை மீண்டும் குடியேற வழிவகை செய்தார். இந்தியாவின் உடனடியாக தீர்க்க வேண்டிய பண்டைய கோட்பாடுகளின் துணையை நாடி தீர்த்து வைத்தார். 1898ல் காசியில் மத்திய இந்து பள்ளியை நிறுவினார். இந்து சமயத்தை ஈட்டி முனையாக்கி அதற்கு ஒரு எதிர்காலத்தை உருவாக்கி உறுதிப்படுத்தி மக்கள் உள்ளத்தில் அதை படியச் செய்ய ஆவன செய்தார். இந்து பள்ளி வளர்ச்சி அடைந்து நாளடைவில் கல்லூரியாகவும் பின்பு பல்கலைக் கழகமாக மாறியது.

இந்திய அரசியல் அரங்கில், இந்தியா சுதந்திரம் பெறுவதற்கும் சமுதாயச் சீர்திருத்தங்களைப் புகுத்துவதற்கும் இவர் ஆற்றிய தொண்டு இவரை பெரும் தலைவராக்கியது மட்டுமில்லாமல் உலகத்தின் முக்கியத் தலைவர்களில் ஒருவராகவும் கருதும்படி செய்தது.

பிரம்ம ஞான சபையின் கிளைகள் உலகெங்கும் உள்ளன. அவற்றின் மூலம் இந்தியாவின் ஆன்மிகச் சிறப்பு உலகெங்கும் பரவியது. கீழை நாட்டுச் சமயங்களான இந்து சமயம், பௌத்த சமயம், போன்றவற்றில் பொதிந்துள்ள அறிவுக் கருவூலங்களின் மதிப்பை வெளிக்கொணர இச்சபை பெருந்தொண்டாற்றியது. இச்சபையின் 'மறைவியல் கல்விப் பள்ளி' **(Esoteric School),** இந்திய மறைவியலை **(Occultism)** இந்தியாவில் மட்டுமின்றி மேலை நாட்டிலும் மிகப் பிரசித்தமாக்கியது.

இச்சபை கீழை நாட்டுச் சமய இலக்கியங்களை மேலை நாடுகளில் பரவியது. தொழில் பொருட்காட்சிகளைச் சீராக அமைத்தது. சுதேசி இயக்கம், பால்ய விவாகத் தடை, மது விலக்கு அறசமயக் கல்வியை பள்ளியில் போதித்தல், மகளிர் கல்வியைப் பரப்புதல், எழுத்தறிவின்மையை அகற்றுதல் மற்றும் பர்தா முறையை ஒழித்தல் போன்ற அரும்பணிகளை இந்த இயக்கம் செய்து வந்தது. இதனுடைய கல்வி நிறுவனங்கள் இந்தியப் பண்பாட்டையும், கலைகளையும் பரப்பும் மையங்களாகத் திகழ்ந்தன. கீழை



நாடுகளிலும் மேலை நாடுகளிலும் நிற வேறுபாட்டால் மக்களிடையே வெறுப்புணர்வு கொழுந்து விட்டு எரிந்தபோது அதைத் தணித்து உலகில் எல்லோரும் உடன்பிறந்தோரே என்ற கோட்பாட்டை உணரச் செய்த சமத்துவத்தை நிலை நாட்ட முயன்றது.

இவ்வியக்கம் ஒரு சமயமாகவோ, சாதீய இயக்கமாகவோ அல்லது தனிப்பிரிவை சார்ந்ததாகவோ அமைந்திருக்கவில்லை. மாறாக எல்லா சமயங்களும் ஒரே உண்மையைப் போதிக்கின்றன என்பதே இவ்வியக்கத்தின் கருத்தாகும். பல்வேறு சமயங்களை சார்ந்தோர்கள் இச்சங்கத்தின் உறுப்பினர்கள் ஆனார்கள். இந்தியர்கள் குழந்தைகள் அல்லவென்றும் அவர்கள் பொறுப்புள்ள மனிதர் களென்றும் அவர்களுக்குச் சுதந்திரம் வழங்கப்படல் வேண்டும் என்பதும் அம்மையாரின் கருத்துகளாகும்.

இவ்வாறாக இச்சபை பலவழிகளிலும் இந்திய விடுதலைக்கும், சமூக மறுமலர்ச்சிக்கும், நாட்டுயர்விற்கும் இடையறாது பாடுபட்டு வந்தது.

## 10. 6. காந்தியடிகள் வாழ்க்கை வரலாறு

வாழ்க நீ எம்மான், இந்த
வையத்து நாட்டிலெல்லாம்
தாழ்வுற்று வறுமை மிஞ்சி
விடுதலை தவறிக் கெட்டுப்
பாழ்பட்டு நின்ற தாமோர்
பாரத தேசத் தன்னை
வாழ்விக்க வந்த காந்தி
மகாத்மா! நீ வாழ்க! வாழ்க.

என மகாகவி பாரதியாரால் பாராட்டப்பட்ட மகாத்மா காந்தியைப் பற்றி நாம் அறிவது மிகச் சிறந்ததாகும். அடிமைகளாய், கோழைகளாய், ஏழைகளாய் ஆங்கில ஆட்சியில் அவதியுற்று, அல்லல்பட்டு எவ்வுரிமையின்றி இருளில் வாழ்ந்தோம். இந்திய மக்களை இருளினின்றும், வெளிச்சத்துக்கு கொணர ஓயாது உழைத்தவர். அகிம்சை வழிநின்று, விடுதலை பெற்றுத் தந்த மகான்.

www.tntextbooks.in

அன்பு நெறியைப் போதித்த உலக உத்தமர்கள் வரிசையிலே, உயர்வான இடத்தைப் பெற்றவர் காந்தியடிகள். தேசத் தந்தை என்று இந்தியரால் பாசத்தோடு அழைக்கப்படும் பண்பாளர். அவருடைய வாழ்க்கை, உண்மையானது, எளிமையானது, மனித இனத்துக்கும் மகத்தான பாடமாக என்றும் விளங்குவது ஆகும்.

இவர் 1869 -ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 2-ஆம் நாள் குஜராத்திலுள்ள போர்பந்தரில் பிறந்தார். காந்தி என்பது குடும்பப் பெயர். காபர் காந்தி என்று அழைக்கப்பட்ட கரம்சந்த் காந்திக்கும், புத்திலிபாய் அம்மையாருக்கும் நான்காவது குழந்தையாகப் பிறந்தவரே 'மோகன்தாஸ் கரம்சந்த் காந்தி' என்பதாகும்.

### 10. 6. 1. மகாத்மாவின் இளமைப்பருவம்

படிக்கும் காலத்தில் ஒருவருடைய கையெழுத்து தெளிவாகவும், திருத்தமாகவும் இருக்க வேண்டும். அப்படிப் பழகிக் கொள்வது நல்லது. பள்ளிப் பருவத்தில் காந்தி தம் கையெழுத்துக்கு அவ்வளவு முக்கியத்துவம் கொடுக்காமல் இருந்தார். பிற்காலத்தில் அதற்காக அவர் வருந்தினார். 'நல்ல கையெழுத்தும் படிப்பின் ஒரு பகுதியே'என்பதை அவர் மக்களுக்கு வலியுறுத்தி வந்தார்.

காந்தி பாடப் புத்தகங்களை அக்கறையோடு படித்து வந்ததோடு தந்தையாரிடமிருந்து புத்தகங்களையும் ஆர்வத்தோடு படித்து வந்தார். அவ்வாறு அவர் படித்த ஒரு நூல் 'சிரவணன் பிதிர் பக்தி நாடகம்' என்பது. அந்நூலிலிருந்து பெற்றோர்களிடம் ஒரு பிள்ளை எந்த அளவிற்கு பயத்தோடும், பக்தியோடும், பண்போடும், பாசத்தோடும் நடந்து கொள்ள வேண்டும் என்பதை அறிந்து கொண்டார்.

தம் இளமைப் பருவத்திலே காந்தியின் மனத்தை மிகவும் பாதித்த ஒரு நாடகம் ஹரிசந்திரன் ஆகும். அந்த நாடகத்தை அடிக்கடி பார்த்தார். தாமும் எந்த நிலையிலும் பொய்யே பேசக் கூடாது என்று தமக்குள் உறுதி செய்து கொண்டார்.



சிறு வயதிலேயே எம்மதமும் சம்மதம் என்ற எண்ணம் அவர் நெஞ்சில் பதிந்துவிட்டது.

காந்தியடிகள் தனது 13-வது வயதில் கஸ்தூரிபாயை மணந்தார். அதன் பின்பு தொடர்ந்து கல்வி பயின்றார். காந்தி உயர்கல்விக்காக இங்கிலாந்து செல்ல விரும்பினார். ஆனால், மிகவும் ஆசாரமாக இருந்த அவர் அன்னை அவரை அங்கு அனுப்ப விரும்பவில்லை. அங்கு சென்றால் அவர் பாழ்பட்டு விடுவார் எனக் கருதினார். ஆனால் காந்தி, தாம் இங்கிலாந்து சென்றால் மதுவையும், மாமிசத்தையும், பிற மாதினியையும் அறவே தொடமாட்டேன் என சத்திய வாக்கு அளித்தார். இங்கிலாந்து செல்ல அனுமதிக்கப்பட்டார். வழக்கறிஞர் **(Barrister)** பட்டம் பெற்று இந்தியா திரும்பினார்.

காந்தியடிகள் சில காலம் ராஜ்கோட்டிலும், பம்பாயிலும் வழக்கறிஞராகப் பணியாற்றினார். பின்பு ஒரு இஸ்லாமிய நிறுவனம் சார்பாக தென்னாப்பிரிக்கா சென்றார். அங்கு வெள்ளையர்கள் இந்தியர்களுக்கு இழைக்கும் இன்னல்களைக் கண்டு அமைதிப் போராட்டத்தை ஆரம்பித்தார். இதன் விளைவாக நீதிக்குப் புறம்பான சட்டங்கள் அங்கே அகற்றப்பட்டன. அங்கு வாழ்ந்த இந்திய மக்களுக்குத் தன்னம்பிக்கையை ஊட்டினார். அவர்கள் அச்சம் தவிர்த்து, தீமை எதிர்த்து உண்மையறிய உதவினார். தென்னாப்பிரிக்காவில் தாண்டவமாடிய நிறவெறிக் கொடுமையை அகற்ற மகாத்மா ஆற்றிய தொண்டு அளவிட்டுக் கூற முடியாது.

### 10. 6. 2. இந்திய விடுதலையும் மகாத்மாவும்

1914-ஆம் ஆண்டு காந்தி இந்தியாவிற்குத் திரும்பினார். அப்போது முதல் உலகப்போர் தொடங்கியது. ஆங்கிலேயர் மேல் கொண்ட நம்பிக்கையின் பால் இந்தியர்களை இப்போரில் ஈடுபட்டு ஒத்துழைக்குமாறு கேட்டுக்கொண்டார். பின்பு 1918-ஆம் ஆண்டு ஆங்கில அரசு இந்தியர்களுக்கு வேண்டிய சலுகைகளை அளிக்கவில்லை. பின்பு அரசு ரௌலட் சட்டத்தை மக்களுடைய விருப்பத்திற்கு எதிராக நிறைவேற்றியது. இதைக் கண்டு மகாத்மா காந்தி வேதனையுற்று மக்களை வேலை நிறுத்தம் செய்யச் சொன்னார். பஞ்சாபில் நிலைமை மிகச் சீர்கேடு அடைந்தது.

www.tntextbooks.in

போர்க்காலச் சட்டத்தை அரசு பிரகடனப் படுத்தியது. ஜெனரல் டையர் அமிர்தசரசில் நிகழ்ந்த ஜாலியன் வாலாபாக் படுகொலைக்கு காரணமாக மகாத்மா காந்தி பிரிட்டானியாரிடமிருந்து நீதியையும் நேர்மையையும் சிறிதும் எதிர்பார்க்க முடியாது என்ற முடிவுக்கு வந்தார். இந்து-முஸ்லீம் ஒற்றுமையை உருவாக்க ஓர் இயக்கத்தை ஆரம்பித்தார். அதனால் நல்ல பலன் கிட்டியது.

1920-ல் பாலகங்காதர திலகர் மறைவுக்குப் பின் மகாத்மா காந்தி காங்கிரஸின் தலைமையை ஏற்றார். இவர், பின்னர் பல முறை நாட்டு நலன் கருதிப் பல போராட்டங்களில் ஈடுபட்டுச் சிறை சென்றார். இவர் இரண்டாவது வட்ட மேஜை மாநாட்டில் கலந்து கொள்ள இங்கிலாந்து சென்று பிரிட்டானிய அரசின் போக்காலும் இந்தியா திரும்பினார். இந்நாட்டிற்குக் கத்தியின்றி இரத்தமின்றி 1947-ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 15-ஆம் நாள் விடுதலை பெற்றுத் தந்தார். விடுதலை பெற்றுத் தந்த இந்த உத்தமரை நாத்துராம் கோட்ஸே பிரார்த்தனையில் ஈடுபட்டுக்கொண்டிருந்தபோது ஜனவரி 30-ஆம் நாள் 1948-ல் சுட்டுக் கொன்றான்.

இவர் ‘வெள்ளையனே வெளியேறு’ என்ற இயக்கம், ஒத்துழையாமை இயக்கம், சுதேசி இயக்கம், உப்புச் சத்தியாகிரக இயக்கம் போன்ற பல்வேறு இயக்கங்களை நடத்தினார். இவரது பணிகள் பல்வேறு துறைகளைத் தழுவியுள்ளதோடு ஒவ்வொரு துறைக்கும் புதிய கொள்கையையும் நடைமுறை நெறிகளையும் அளிந்துள்ளன. சபர்மதியில் ஓர் ஆசிரமத்தை நிறுவித் தமது கொள்கையையும், கோட்பாடுகளையும் நடத்திக் காட்டி, அவை நடைமுறைக்கு ஒவ்வாத வெறும் வரட்டுத் தத்துவங்கள் அன்று நடைமுறை வாழ்வுக்கு உகந்தவை தாம் என நிரூபித்தார்.

### மகாத்மா - சொல் விளக்கம்

மகாத்மா என்பது ஆழ்ந்த பொருளுடையது. அது வெறும் மகான் எனும் பொருளில் மட்டும் அடங்கிக்கிடப்பதன்று. மகாத்மா என்பது பெரிய ஆத்மா என்னும் பொருளுடையது. கடவுள் பெரிய ஆத்மா செயற்கரிய செய்வது கடவுள். கடவுளருளால் செயற்கரிய செயல் செய்வோரும் மகாத்மா ஆவர். மகாத்மாக்கள் தமக்கென்று வாழாதவர். பிறர்க்கென்று வாழ்பவர்.



மகான் எனும் சொல்லுக்குப் பெரியவர் என்று பொருள். இஃது உலக வழக்கு. மகான்களால் நற்செயல் நிகழ்த்தல் கூடும். செயற்கரிய செய்தல் அரிது.

மகாத்மா என்பதற்கு தமிழில் அடிகள் என்பதாகும். ஆன்ற ஒழுக்கத்திற் சிறந்த அறவோரை அடிகள் என்று சொல்வது தமிழ் வழக்கு, கவுந்தி அடிகள், இளங்கோ அடிகள், அறவண அடிகள், வாதவூரடிகள். பட்டினத்தடிகள் என்றழைப்பது தமிழர் வழக்கு.

மானிட இனத்துவ ஒற்றுமை

“உயிர்களிடத்தில் அன்பு வேணும்
தெய்வமுண்டு என்று தான்றிதழ் வேண்டும்”

என்பதற்கேற்ப வாழ்ந்தவர் காந்தியடிகள். எல்லா உயிர்களிடத்தும் இறைவன் நீக்கமற நிறைந்திருப்பதால் உலகிலுள்ள எல்லோரும் உடன் பிறந்தாரோ என்ற கருத்தை பலமாக ஆமோதித்தார். இதை அடிப்படையாகக் கொண்டே அகிம்சை கோட்பாட்டை வலியுறுத்தினார்.

### *10. 6. 2. 1. சுதேசி இயக்கம்*

நாட்டுக்குரிய இயற்கை வாழ்வே சுதேசியமென்பதாகும். ஒரு நாட்டுக்கு இயல்பாய் அமைந்துள்ள மொழி, பழக்க வழக்கங்கள் ஒழுக்கம், அரசு, அறம், உணவு, உடை முதலிய யாவும் ஒன்றாய் சேர்ந்ததே சுதேசியமாகும். சுதேசியமென்பது நமது சமய வாழ்வில் விடுதலை பெறுவதாகும். இதன் மூலம் ஆன்மீகத் துறையில் இறையன்பை பெற முடியும் என்பது அவரது கருத்து. இந்து-முஸ்லீம் ஒற்றுமை, தீண்டாமை முதலியனவும் சுதேசியமேயாகும். ஒரு நாட்டில் வாழும் மக்கள் அனைவரும் ஒரு மனிதன் போல் வாழ்தல் வேண்டும். பிறப்பாலோ வேறு எதனாலோ வேற்றுமை நிகழின், அது நாட்டைத் துண்டாடிவிடும். ஆதலால் மக்கள் மன ஒற்றுமை சுதேசியத்தின் உயிர் போன்றது.

“மனிதன் தன் சம மனிதனிடம் நேயத்தைக் காட்டத் தனது சிந்தனை, சொல் மூலம் மட்டும் அல்லாமல் செயல் மூலமும் காட்ட வேண்டியுள்ளது. அதற்கு ஒரே உன்னதமான வழி அவனுடைய

www.tntextbooks.in

உழைப்புக்கு மதிப்பளித்து, அவன் உற்பத்தி செய்யும் பொருள்களை வாங்கிப் பயன்படுத்துவது. இது இயற்கை நியதியோடு இணைந்த தர்மமாகும்" என்பது காந்தியடிகள் கருத்தாகும். "இந்தியாவின் முதுகெலும்பு கிராமம்". இந்தியா கிராமங்களில் தான் வாழ்கிறது என்பது காந்தியடிகளின் கருத்தாகும். வேளாண்மையை முதன்மைத் தொழிலாய் கொண்ட கிராமங்களை முன்னிறுத்தி, கதரும், கிராமக் கைத்தொழிலும் சிறக்க பாடுபட்டார். பிறநாட்டுப் பொருள்களை தவிர்த்து இந்தியப் பொருள்களை பயன்படுத்துவதையே குறிக்கோளாகக் கொண்டார்.

சுதேசி இயக்கம் மூலம் ஆங்கிலேயரிடம் மனமாற்றத்தை உண்டாக்கி, அமைதிப் புரட்சியை நாம் கொண்டு வர முடிந்தது. "உன்னைப் போல் உன் அயலானையும் நேசி" என்ற இயேசு பெருமானின் கூற்றுக்கு மனித நேயச் செயல் திட்ட விளக்கமாகச் சுதேசி அமைந்தது. நூற்பும் நெசவும் புத்துயிர் பெற்று வேளாண்மைக்கு இணைதொழிலாய் மாறின. மனித உழைப்புக்கு மதிப்புக் கூடியது. வாணிகத்தில் நேர்மை திரும்பியது. தன்னாட்சிக்கு வித்திட்டது. கலையுணர்வும், மனித நேயமும் இந்த சுதேசி இயக்கத்தால் தழைத்தன.

### *10. 6. 2. 2. சுயராஜ்ஜியம்*

சுதேசியத்தின் காரியமே சுயராஜ்ஜியமாகும். சுயராஜ்ஜியம் என்பது ஒவ்வொருவரும் உரிமை பெறுவது. "நாமார்க்குங் குடியல்லோம்" என்றார். திருநாவுக்கரசர். சுய ஆட்சி எனது பிறப்புரிமை என்றார் பாலகங்காதர திலகர்.

"நம் நாட்டில் தீண்டப்படாதோரும் உரிமை பெறவே, நான் சுயராஜ்ஜியம் என்பதற்கு கொண்ட பொருள்" என்கிறார் காந்தியடிகள். சுயராஜ்ஜியம் கடவுளாலும் கொடுக்கப்படுவதன்று அதை நமக்கு நாமே முயன்று பெறுதல் வேண்டும். சுயராஜ்ஜியம் கோழைகளின் உடைமையன்று. அஃது அஞ்சா நெஞ்சினர் கடமை. சுயராஜ்ஜியத்துக்கு அடிப்படை அகத்தூய்மை. அகத்தூய்மையில்லா ஒருவன் பல கேடுகளுக்கு அடிமையாவான். உலகில் எத்துணை பேர் பொய்ம்மை, பொறாமை, சீற்றம், காமம் முதலியவற்றிற்கு



அடிமைகளாக நிற்கின்றனர். இதனின்றும் விடுதலை அடைவது **ஆத்ம** சுயராஜ்ஜியமென்பதாகும். இச்சுயராஜ்ஜியம் பெறவே மக்கள் படைக்கப்படுகிறார்கள். புறச் சுயராஜ்ஜியம் நமக்கு இன்றியமை யாததாகும். நம் உடலுக்குத் தீங்கு வராது காப்பது போல நம் நாட்டுக்கும் அயல் நாட்டவரால் தீங்கு வராமல் காத்தல் அவசியமாகும். நாடு அதை நாடு என்பதற்கு ஏற்ப நாட்டின் மீது அதன் தொன்மை, பண்பாடு, கல்வி, சமயத்தின் மீதும் பற்றுக் கொண்டு பிறரிடமிருந்து அதனைக் காப்பதே புறசுயராஜ்ஜியம் ஆகும்.

### *10. 6. 2. 3. சர்வோதயம்*

'கடையனுக்கும் கடைத் தேற்றம்' என்ற ஜான் ரஸ்கின் கருத்தின் அடிப்படையில் சமூகத்தில் உள்ள அனைவரும் நலம் பெறுவதே சர்வோதயம் என்பது காந்தியடிகளின் கருத்து. சமுதாயத்தின் கடைநிலையில் இருப்பவர்கள் அரசியல், பொருளாதார, சமூக சமயத் துறைகளில் ஏற்றம் பெறுவதே இதன் நோக்கமாகும்.

"எல்லாரும் எல்லாமும் பெற வேண்டும் - இங்கு
இல்லாதார் இல்லாத நிலை வேண்டும்"

என்பதே இதன் சாராம்சமாகும்.

### *10. 6. 2. 4. அகிம்சை*

அ + ஹிம்சை = அஹிம்சை. அ என்பதற்கு இல்லை என்பது பொருள். ஹிம்சை என்பதற்கு துன்பம் என்ற பொருள். ஆதலால் அகிம்சை என்பது துன்பம் இழைக்காமையும், பிறர் நமக்கு துன்பம் இழைக்கும்பொழுது அதனை அன்பால் பொறுத்துக் கொள்வதேயாகும். சிந்தனை, சொல், செயல் இம்மூன்றாலும் உலகில் வாழும் எவ்வுயிர்க்கும் தீங்கு நினையாததும் அகிம்சையே.

அகிம்சையானது தன்னுள் அன்பு, இரக்கம், அனுதாபம், பரிவு, அச்சமின்மை போன்ற நற்பண்புகளை உள்ளடக்கியது. அது மேலும் உண்மையை உள்ளீடாகக் கொண்டுள்ளது.

அகிம்சைக்குப் பேராற்றல் தேவை. அஞ்சாமை தேவை.

www.tntextbooks.in

உண்மை தேவை. கருவி கொண்டு பிறரைத் தாக்க முயல்பவன் ஆற்றல் உடையவன் அல்லன். அவன் அச்சத்தால் ஆயுதம் தாங்குகிறவன். எனவே, அகிம்சை அஞ்சாமையின் உச்சியில் நிலவுவதேயாகும். அகிம்சை உயிர் ஆற்றல் வாய்ந்தது. உயிராற்றல் உள்ள ஒருவனுக்கு கையில் ஆயுதம் தேவையில்லை. அது மரணத்துக்கு அஞ்சாதவன் பற்றி நடக்கும் தகுதியுடையது.

ஹிம்சை தாழ்மையில் கொண்டு போய் விடும். அகிம்சை என்பது கடவுள் சார்புடையது. அவருடைய உதவி பெற வேண்டுமானால் தாழ்மையோடும், கனிவோடும் அவரிடம் அணுக வேண்டும் என்பது காந்தியடிகளின் கருத்து.

மனிதன் உடலன்று, உயிர் அவன் தன்னை உயிரென்று நினைத்தால் அவனிடத்தில் இயல்பாகவே அகிம்சை விளங்கும். அகிம்சா தர்மம் மனிதனுக்குரிய இயற்கை அறம். தனக்கு தீங்கு இழைக்க எந்த மனிதனும் உடன்பட மாட்டான். இது மனித இயல்பு. இவ்வியல்புடையோன் பிறர்க்கும் தீங்கிழைக்க மாட்டான். நினைப்பானேல் அந்நினைப்பு இயற்கைக்கு மாறுபட்டதாகும். தன்னைப் போல பிறரையும் கருதுதல் மனிதனது இயல்பு.

“தன்னுயிர் வைகலும் பரிந்தோம்பு மாறுபோல,
மன்னுயிர் வைகலும் ஓம்பி வாழுமின்”

என்றார் திருத்தக்க தேவர். இந்நிலை எய்திய பெரியோர் உள்ளமே “ஆண்டவன் உறைவிடமாகும்”

“எத்துணையும் பேதமுறா தெவ்வுயிருந் தம்முயிர்போல்
எண்ணி உள்ளே
ஒத்துரிமையுடைவராய் உவக்கின்றார் யாவரவர்
உளந்தான் சுத்த
சித்துருவாய் எம்பெருமான் நடம்புரியும் இடமென நான்
தெரிந்தேன் அந்த
வித்தகர் தம் அடிக்கேவல் புரிந்திட என் சிந்தைமிக
விழைந்த தாலோ”

என்ற அருள் மொழியையும் நாம் உற்று நோக்கல் வேண்டும்.



அகிம்சை உயர்ந்த தத்துவமாகும். அதாவது மனிதன், விலங்கு மற்றும் தாவரங்கள் ஆகிய எல்லா உயிரினங்களுக்கும் ஆன்மா உண்டு என்பதேயாகும்.

அகிம்சை என்னும் ஞாயிறு எழும்போது, பகைமை, சீற்றம், காழ்ப்பு முதலிய இருள்கள் மனிதனை விட்டு அகன்றுவிடும் என்பது காந்தியடிகளின் செம்மொழியாகும்.

ஆதலால் அகிம்சையானது ஆன்ம சக்திக்குப் பயன்படுவது, வீரம் என்ற பண்புக்கு அடிப்படையானது தியாக உணர்வை வளர்ப்பது என்பதாகும்.

“வாடிய பயிரைக் கண்ட போதெல்லாம் வாடினேன் என்ற இராமலிங்க சுவாமிகள் கருத்தும் இத்தகையதே.

### *10. 6. 2. 5. சத்தியாகிரஹம்*

‘சத்யாகிரஹம்’ என்ற சொல்லை சத்ய+ஆக்ரஹ எனப் பிரித்துப் பொருள் கொள்ளல் வேண்டும். கடவுளை உண்மை (சத்யம்) மூலம் உணர்ந்து பற்றிக் கொள்ளுதல் (ஆக்ரஹ) எனலாம். அன்பும், தன்னைத்தானே துன்புறுத்திக் கொள்ளுதலும் (உண்ணாநோன்பு) என்ற இரண்டும் இணைந்து செயல்படுவதே சத்தியா கிரஹம் ஆகும். அது தமிழில் “உண்மையைக் கடைப்பிடித்தல்” என்பதாகும்.

உண்மைக்காக சிறிதும் மனச்சலனமின்றி தனியாக நின்று அறவழியில் போரிடல் ‘சத்தியாகிரகம்’ எனப்படும். **“Fight for the right cause”.**

இறைக் கொள்கைளை ஏற்று வளர்ந்த காந்தியடிகள் கடவுளை உருவமான ஒன்றாகத் தான் கண்டார். கடவுளே உண்மை **(God is truth)** என்பதை மாற்றி உண்மையே கடவுள் **(Truth is God)** எனக் கொண்டார்.

கடவுள் என்ற சொல் யாவருக்கும் ஒரே பொருளைத் தருவதாக இல்லை. ஆனால் உள்ளது என்ற பொருள் தரும் **‘Truth’** ஒரே பொருளில் எல்லோராலும் பேசப்படுகிறது. கடவுள் இருப்பதை

www.tntextbooks.in

ஏற்றுக்கொள்ளாதவர்களும் ‘உண்மை’ என்பதை ஏற்றுக் கொள்வார்கள். கடவுள் என்ற சொல்லைச் சொல்லும்போது உண்டாகின்ற வேறுபாடுகள் உண்மை, சத்யம் **(Truth)** என்று சொல்லும்போது உண்டாவதில்லை. எனவே, உள்ளது **(Truth)** (சத்) என்பது ஒருவகை ஒற்றுமையை உண்டாக்கும் சொல் என்று கொண்டார்.

கடவுள் நம்பிக்கை உடையவர்களிடம் கூட அக்கடவுளைப் பற்றிய எண்ணங்களில் கருத்து வேறுபாடுகள் உள்ளன. மேலும், சிலர் கடவுள் என்ற தத்துவத்தையே ஏற்றுக் கொள்வதில்லை. எனவே கடவுள் என்று சொல்லும் போது வேறுபாடு வளர்வதையும் ‘சத்யம்’ என்று சொல்லும் போது ஒற்றுமை உணர்வு மேலோங்குவதையும் காந்தியடிகள் கண்டார். இதனையே அவர் ‘சத்யாகிரஹம்’ என்ற சொல்லால் தந்தருளினார். அதற்குச் சத்தியத்தின் ஆற்றல் **(Truth force)** என்று விளக்கம் அமைத்துக் கொண்டார் காந்தியடிகள். சத்தியத்தின் ஆற்றலை **(Truth force)** ஆன்மிக ஆற்றலாகிய அன்பினால் பெறலாம் என்ற முடிவுக்கும் வந்தார்.

நம் முன்னோர்கள் இந்நெறியை “உண்மைநெறி என்றும் அருள்நெறி என்றும் திருநெறி என்றும், நல்லாறு என்றும், சன்மார்க்கம் என்றும் அழைத்தனர். உயிருக்கு உடல் எத்தன்மையதோ அத்தன்மையுடையது வாழ்விற்குச் சத்தியாகிரஹம்.

காந்தியடிகள் இளமையில் கொண்ட தாயன்பு, தீண்டாமையில் வெறுப்பு, வாய்மை, ஒழுக்கத்திலுணர்வு முதலியன அவரது சத்தியாகிரக வாழ்விற்குச் சாரமாக அமைந்தது.

மேலும் சத்தியாகிரகத்தின் நேர்மையையும், பெருமையையும் உணர்த்தி அவரை விழிக்கச் செய்தது. இயேசு பிரானின் மலைப் பிரசங்கமே ஆகும். (புதிய ஏற்பாடு) இதனையே காந்தியடிகள். கிறிஸ்து நாதரின் மலைப்பொழிவை யான் வாசித்தபோது, அதிலுள்ள (தீமையைத்) தீமையால் எதிர்த்து நிற்க வேண்டாம். ஒருவன் உன்னை வலது கன்னத்தில் அறைந்தால், அவனுக்கு மறு கன்னத்தையும் திருப்பிக் காட்டு (மத்தேயு 5:39) என்பதையும் உங்கள் சத்ருக்களில் அன்பு கூருங்கள்; உம்மை இம்சைப்படுத்துகிறவர்களுக்காக ஜெபஞ்



செய்யுங்கள்; இப்படிச் செய்தால் பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவுக்கும் பிள்ளைகளாயிருப்பீர்கள். (மத்தேயு 5:44-5) என்பதைக் கண்ட வேளையில் எனக்கு மகிழ்ச்சி வரம்பின்றிப் பொங்கித் ததும்பி வழிந்தது. இவ்வெண்ணத்தை பின்பு பகவத் கீதையைப் படித்த போதும் உணர்ந்தேன். அதன் பின் டால்ஸ்டாய் எழுதிய பரலோக ராஜ்யம் உன்னுள்ளத்திருக்கிறது எனும் நூல் பசுமரத்தாணி போல் பதியச் செய்தது, என்று தம் சுயசரிதையில் விளக்குகிறார்.

காந்தியடிகளைப் பண்படுத்திய அத்திருமொழி எந்த நாட்டினரையும், உலகோரையும் பண்படுத்தல் வேண்டும். ஆதலால் உண்மையின் வழியில் நின்று, அறவழியில் நின்று தீமையை வெல்லுவதே ‘சத்யாகிரஹம்’ ஆகும்.

### 10. 6. 3. சமுதாய சேவைகள்

#### *இந்து முஸ்லீம் ஒற்றுமை*

இந்து-முஸ்லீம் ஒற்றுமைக்குப் பெரும்பாடுபட்டவர் காந்தி, பல்வேறு சமயத்தவர். இனத்தவர்களிடம் ஒற்றுமையை நிலை நாட்ட வந்த அருளாளர் எல்லோரும் உடன்பிறந்தார் என்ற உணர்வுடன் வாழ வேண்டும் என விரும்பினார். பல்வேறு இடங்களில் இந்து - முஸ்லீம் போராட்டங்கள் ஏற்பட்டு பலர் உயிரிழந்தனர். மகாத்மா காந்தி இவ்விடங்கட்கு சென்று அமைதியை நிலை நாட்டினார்.

#### தாழ்த்தப்பட்டோர் தரம் உயர

தாழ்த்தப்பட்டோர் வாழ்வின் தரம் உயர அயராது பாடுபட்டார். பல்லாயிர ஆண்டுகாலமாகச் சாதிப்பாகுபாட்டில் ஊறித் திளைத்த இந்துக்கள் தாழ்த்தப்பட்டோரைத் தரைக்குறைவாக நடத்தினர். ஆலயத்தின் உள் நுழைய அவர்கள் அனுமதிக்கப்பட வில்லை. அவர்களிடம் காணப்பட்ட தப்பெண்ணங்களைத் தவிர்த்து, அவர் களை ஆலயத்திற்குள் அனுமதிக்க வேண்டினார். தீண்டாமையை எதிர்த்து உரத்தகுரல் எழுப்பினார். தாழ்த்தப்பட்டோரை, அரிசனங்கள் எனப் பெயரிட்டு அழைத்தார். ‘ஹரிஜன்’ என்ற செய்தித்தாளைத்

www.tntextbooks.in

தொடங்கி தாழ்த்தப்பட்டோரின் தரம் உயரவேண்டும் என்ற கருத்து அடங்கிய கட்டுரைகளை எழுதினார்.

### பெண்களின் நிலை உயர

பெண்ணுரிமை பெறவும், ஆண்களோடு சரிநிகர் சமானமாக அவர்களை நடத்தவும் பெரிதும் பாடுபட்டார். ஆண்கள் அனுபவித்த உரிமைகள் அனைத்தையும் பெண்கள் பெற வேண்டும் என்பதற்காக அயராது உழைத்தார். பெண்கள் அனைவரும் கல்விபெற வேண்டுமென்பதை மிகவும் வலியுறுத்தினார். அவருடைய சமுதாய அரசியல் பணிகளில் பல பெண்கள் ஈடுபட்டிருந்தனர்.

### மதுவிலக்கு

மது மக்களின் உடல் நலனை, ஒழுக்கத்தை, பொருளாதாரத்தை, மனநிலனைப் பெரிதும் பாதிப்பதால், இதில் பணத்தை செலவிடக் கூடாதெனக் காந்தி கருதினார். அகவே, மதுவிலக்குக் கோட்பாட்டைக் கடுமையாக அரசு வலியுறுத்த வேண்டுமென விரும்பினார்.

### கல்வி முறைகள்

மனிதனின் அறியாமையைக் கலைந்து அறிவை விளக்கி அவனது வாழ்வை நேர்மையால் செலுத்தவல்லவது கல்வி.

“தாய்மொழியின் வழி பிள்ளைகளுக்கு கல்வி பயிற்றல் மிக முக்கியமானது. தாய்மொழியை அவமதிப்பது நாட்டுத் தற்கொலை யாகும். தாய்மொழி வழி கல்விகற்று அறிவு விளங்கப்பெற்று பின்னர் உலகில் உள்ள மொழிகளையெல்லாம் கற்கலாம்” என்பது காந்தியடிகளின் கருத்தாகும்.

**உயிரும், உடலும், மனமும் ஒருங்கிணைந்த வளர்ச்சியே கல்வியாகும்.** இன்றைய கல்விமுறை பயனற்றது எனக் காந்தி கூறினார். மிகுந்த பொருட் செலவுள்ள கல்வி எல்லாருக்கும் கிடைக்கக் கூடியதன்று. குழந்தைகளின் சூழலோடு ஒட்டிய கல்வி இதுவன்றுக் கூறினார். அடிப்படைக்கல்விக் கொடுத்தார்.



தொழிற்கல்வியோடு கூடிய கல்விதான் நாட்டுக்கு நலம் பயக்க கூடிய கல்வி எனக்காந்தி கருதினார். “ஆளும் வளரனும், அறிவும் வளரனும்”, அதுவே கல்வியின் வளர்ச்சி என்றார்.

### *மேலைநாட்டுத்தொழில்மயம்*

காந்தி, மேலைநாட்டுப் பாணியில் இந்தியா தொழில் மயமாவதை விரும்பவில்லை. சிலர் பல்வேறு பொறிகளின் துணைகொண்டு பொருள்களை உற்பத்தி செய்வதால், பலர் வேளாண்மை சார்ந்த தொழில்களை இழக்கும் நிலை ஏற்படுகிறது. இதனால் இவர் தன்னிறைவுள்ள குடிசைத் தொழிலை ஆதரித்தார். இது பலருக்கு வேலைவாய்ப்பு அளிக்கிறது. இவர் வேலை நிறுத்தத்தையும், கதவடைப்பையும் எதிர்த்தார். கிராமப் பொருளாதாரம் தாய்மைப் பொருளாதாரமாகும். இதனை நிலைத்த பொருளாதாரம் எனவும் கூறுவர்.

### மகாத்மா காந்தியின் மணிமொழிகள்

1. எல்லாரும் உடன்பிறந்தோர் அனைவருடைய நலனே வாழ்வின் குறிக்கோளாக அமைதல் வேண்டும்.
2. உலகம் ஒன்றே, அது மனித உள்ளங்களாலும் இதயங்களாலும் உண்மையாகவே ஒன்றாக வேண்டும்.
3. எல்லாரும் மகிழ்ச்சியை அடையாவிடின், நம்மில் எவரம் மகிழ்ச்சியைப் பெற முடியாது.
4. உலகம் ஒன்றுபடாவிடின், இவ்வுலகில் வாழந்து நாம் எந்த இன்பத்தையும் அடைய முடியாது.

### ஏழு சமுதாயத் தீவினைகள்

காந்தி, தமது மறைவுக்கு முன்னர் அக்காலத்தில் நிலவி வந்த ஏழு சமுதாயத்தீவினைகளைக் கூறி, அவற்றினை அகற்றப் பாடுபட்டார்.

1. கொள்கையில்லா அரசியல் 2. உழைப்பில்லா செல்வம்

www.tntextbooks.in

3. மனச்சான்றில்லா மகிழ்ச்சி 4. பண்பில்லா அறிவு
5. நாணயமில்லா வாணிபம் 6. மனித இயல்பில்லாத அறிவியல்
7. தியாகமில்லா வழிபாடு

### ஆரோக்கிய சூழ்நிலை அமைப்புகள்

இந்நாட்டு மக்களின் ஏழ்மையை அகற்றாதவரை, ஆரோக்கியம் வாழ்விற்கேற்ற சூழ்நிலைகளை மக்களுக்கு அமைத்துத் தருவது அவர்களே. அவ்விதி முறைகளைப் பின்பற்றி அச்சூழலே அமைத்துக் கொள்வதும் இயலாத ஒன்று எனக் கூறினார். இருப்பினும் அவர் தமது ஆசிரமத்தில் ஆரோக்கியச் சூழலை அமைக்க எளிய முறைகளைக் கையாண்டார். இந்நாட்டு மக்கள் தொகையில் பெரும் பகுதியான கிராம மக்கள் பின்பற்றக் கூடிய முறையில் காந்தியின் ஆரோக்கியச் சூழ்நிலை அமைப்புகள் உள்ளன.

### பிரச்சினைக்கட்குத் தீர்வு

ஏழ்மையையும் வேலையின்மையையும் போக்க அவர் கண்ட வழி கையால் நூற்றல், நெய்தல், குடிசைத் தொழில்கள் போன்ற கைத்தொழில்களைப் புதுப்பித்தல், மேலைநாட்டார் இம்முறையினை எள்ளி நகையாடினாலும், இந்தியர்கள் இதன் சிறப்பை உணர்ந்து கைத்தொழில்களைப் பேணி வளர்த்தனர், இந்தியத் தட்பவெப்ப நிலை இவைகட்கு ஏற்றதாக அமைந்திருந்தது. ஏழை உழவர்கள் ஆண்டில் குறிப்பிட்ட காலங்களில் பயிரிட முடியாமையால் அவர்கள் கைத்தொழில்களில் ஈடுபட்டனர். இவை பொருளியல் ரீதியில் பயனுடையனவாக இருந்தன.

### இயற்கையோடிமைந்த வாழ்வு

காந்தி எளிய ஆடம்பரமில்லா வாழ்வு நடத்தும்படி இந்தியர்களுக்கு அறிவுறுத்தினார். இயற்கையோடு இயைந்த எளிய செயற்கை முறைகளை புகுத்தாத, வாழ்வே உடலுக்கும் உள்ளத்துக்கும் நலம் பயக்கக் கூடியது எனக் கூறினார். இயற்கை



மருத்துவ முறையே உடலுக்கு ஊறு செய்யாத முறை மேலைநாட்டு மருந்துகள் பயனற்றவை என்பது இவரது முடிவு. உடலுக்கு ஊட்டம் தரும் எளிய உணவு முறையைப் பின்பற்றச் சொன்னார்.

### கூட்டு வழிபாடு

அனைவரும் ஆன்ம ஈடேற்றம் பெறவேண்டுமென காந்தி விரும்பினார். கூட்டுவழிபாட்டு முறை இறையுணர்வை மட்டுமன்று ஒற்றுமையுணர்வையும் மக்களிடையே தோற்றுவித்தது.

மகாத்மா காந்தியின் மகத்தான வாழ்விலும் பணிகளிலும் இந்திய மறுமலர்ச்சி எவரெஸ்ட் சிகரம் போன்று உயர்ந்து நிற்பதைக் காணலாம்.

### சமயம்

மனிதன் தெய்வத்தோடு தொடர்பு கொண்டு வாழும் சத்யாக்கிரக வாழ்வே சமய வாழ்வென்பது. மனிதனிடம் விலங்கு தன்மையும் உண்டு. மனிதத் தன்மையும் உண்டு, முன்னையதைக் களைந்து, பின்னையதை விளங்கச் செய்வது சமயமாகும். “தன்னை உணர்தலும்” சமயமாகும். சமயம் என்பது ஒழுக்கம். நாம் ஒழுக்கத்தினின்று தவறினால் சமய நெறியின்று பிறழ்ந்வராகிறோம்.

சமயத்தின் சாரம் ஒழுக்கமே. சமயமில்லா வாழ்வு பற்றுக் கோடில்லாதது. பற்றுக் கோடில்லா வாழ்வு, சுக்கானில்லாக் கப்பல் போன்றது.

நமது சமயம் அகிம்சையை அடிப்படையாகக் கொண்டது. அஃது அன்பின்றி வேறில்லை. அன்பெனின் சுற்றத்தாரையும், நண்பரையும் மட்டும் நேசிப்பதன்று. மாற்றாரையும் நேசிப்பது அன்பு.

“சத்தியம் ஒரு சமய வேதத்துக்கு மட்டும் உரிய உடைமையன்று”

“குரானை ஏற்பதில் எனக்குச் சிறிதும் தயக்கமில்லை. பைபிள், ஜெந்த அவஸ்தா, கிரந்தாசாகிப், புத்த சமண நூல்கள் முதலிய எம்மத நூல்களையும் யான் ஏற்பேன். மறைமொழி ஒரு நாட்டுக்கோ, ஒரு வகுப்புக்கோ மட்டும் உரியதன்று”

www.tntextbooks.in

"நாம் அனைவரும் ஒரே பரம பிதாவின் பிள்ளைகள். அப்பிதாவை ஹிந்து, முஸ்லீம், கிறிஸ்துவன் என வெவ்வேறு பெயரால் போற்றுகிறார்கள்.

"எம் மதமோ எந்நாடோ அநீதிக்கும், பொய்மைக்கும், கொலைக்கும் இடந்தருமாயின், அது பூமியின் மீது அழிக்கப்படும். கடவுள் ஒளியாயிருக்கிறார். இருளாயில்லை; கடவுள் அன்பு; பகைமையன்று கடவுள் உண்மை, பொய்மையன்று; கடவுள் ஒருவரே பெரியவர்."

மேற்கூறிய யாவும் சமயம் பற்றி காந்தியடிகளின் கருத்துகளேயாகும்.

அறநெறி என்ற வித்திற்குச் சமயம் என்ற நீர் வார்க்கப்படாவிடின் அதிலிருந்து செடி வளராது. அறநெறி என்ற அடிப்படையில்லாத சமயம் அழிந்தே போகும். ஆகவே, இரண்டும் இணைந்தே செல்ல வேண்டும் என்பது காந்தியின் கருத்து.

அறநெறியை அரசியலில் புகுத்தி வெற்றி கண்டவர் காந்தியடிகள். அரசியலும், பொருளியலும் அறநெறியின் பாற்பட்டதாக அமைதல் வேண்டும்.

இறுதியாக, உள்ளத்தைத் தூய்மையாக வைத்திருப்பதே ஒழுக்கம். ஒழுக்கத்தைத் தராத கல்வியினால் ஒரு பயனும் இல்லை என்பது காந்தியடிகளின் அசைக்க முடியாத நம்பிக்கையாகும்.

மனித குலம் காந்தியடிகளின் அகிம்சை வழியில் சென்று உன்னத நிலையை எய்த வேண்டும்.

### ஒழுக்கம்

கல்வியறிவின் பயன் ஒழுக்கமாகும். பன்னூல் பயின்ற ஒருவன் ஒழுக்கமில்லாதவனாயின் அவன் கல்வியாளன் ஆகான். நூலே பயிலாது ஒருவன் ஒழுக்கமுடையவனாயின் அவன் கல்வியாள னாகிறான். நன்றிக்கு வித்து நல்லொழுக்கக் கல்வியேயாகும். இதனையே வள்ளுவர் பெருந்தகை. "ஒழுக்கத்தினால் எய்துவர் மேன்மை" என்கிறார். "கற்ற அறிஞர் குணநலத்தை இழப்பாராயின், மற்றெல்லாவற்றையும் இழந்தவராவர்



என்றும், "வெறும் ஏட்டுக்கல்வி மனிதனது ஒழுக்க நிலையை உயர்த்துவதாகா என்பதும் - ஒழுக்க வளர்ச்சி அக்கல்வியினின்றுந் தனித்து நிற்பதென்பதும். எனது வாழ்வில் எனக்கு நன்றாக அறிவுறுத்தியிருக்கின்றன" என்று கல்வியை ஒழுக்கத்தோடு இயைபுபடுத்தி காந்தியடிகள் கூறியுள்ளார். வள்ளுவப் பெருந்தகையும்

"ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம்
உயிரினும் ஓம்ப ப்படும்"

என்கிறார். காந்தியடிகள் மூன்றுவிதமான ஒழுக்கங்களை வலியுறுத்துகிறார். அதாவது தனிமனித ஒழுக்கம், இல்லற ஒழுக்கம், சமுதாய ஒழுக்கம் என்பனவாகும். அவர் மூன்று குரங்குகளின் வாயிலாக நமக்கு ஒழுக்கத்தை அறிவுறுத்துகிறார்.

தீயவற்றைக் கேட்காதே
தீயவற்றைப் பார்க்காதே
தீயவற்றைப் பேசாதே - என்பதேயாகும்.

### ஆன்ம முன்னேற்றம்

ஆன்ம முன்னேற்றத்திற்கு புத்தகப் படிப்பால் ஆன்ம ஞானம் கை கூடாதென்றும், அதற்கு வாழ்வுப் பயிற்சியே இன்றியமையாதென்றும் வலியுறுத்துகிறார் காந்தியடிகள். ஆன்ம முன்னேற்றம் என்பது அறிவின் பாற்பட்டதே. இறைவனை பற்றிய மெய்ஞானம் பெறும்பொழுது ஆன்மா முன்னேற்றம் அடைகிறது.

ஆன்ம முன்னேற்றம் அடைய உடல் நலம் பேணல் அவசியம். பின்பு மன நலம் பேண வேண்டும். உடலும் மனமும் ஒருங்கிணையும் பொழுது ஆன்ம முன்னேற்றம் அடைகிறது. விலங்கின் இயல்பிலிருந்து மனிதன் தெய்வநிலைக்கு மாறுவதாகும். கவியரசு கண்ணதாசன் இதனையே மிருகத்தன்மை அழிந்து தெய்வத்தன்மை பெற்று மனம் சாந்தி அடைகிறது என்கிறார்.

ஆன்ம முன்னேற்றத்திற்கு மனத்தூய்மை, பிரம்மச்சரியம், உண்ணாநோன்பு, கொல்லாமை, கள்ளாமை, கள் உண்ணாமை, பிறர் மனை நோக்கா பேராண்மை போன்றன உறுதுணை புரியும் என்பது உறுதி.

www.tntextbooks.in

## பயிற்சி வினாக்கள்

### அ. ஓரிரு வரிகளில் விடையளி

1. மறுமலர்ச்சி என்பது யாது?
2. ஆங்கிலக் கல்வி முறையால் ஏற்பட்ட நன்மைகள் இரண்டினைக் கூறுக.
3. பிரம்ம சமாஜத்தை தோற்றுவித்தவர் யார்?
4. சுவாமி தயானந்தரால் ஏற்படுத்தப்பட்ட அமைப்பின் பெயர் என்ன?
5. சுவாமி தயானந்தர் எழுதிய அரியநூல் எது?
6. ஆரிய சமாஜம் கூறும் புனிதப்படுத்துதல் என்றால் என்ன?
7. இராம கிருஷ்ணரின் சீடர் யார்?
8. பிரம்ம ஞான சபை யாரால் தோற்றுவிக்கப்பட்டது?
9. மகாத்மா காந்தியின் இயற்பெயர் என்ன?
10. மகாத்மா - சொல் விளக்கம் தருக.
11. நாட்டு விடுதலைக்கு மகாத்மா காந்தி மேற்கொண்ட அறப்போர் முறைகள் யாவை?
12. கல்வி பற்றி காந்தியடிகளின் கருத்துகளைக் கூறுக.
13. இந்து முஸ்லீம் ஒற்றுமைக்கு காந்தியடிகளின் சேவையைக் கூறு.
14. மதுவிலக்கு பற்றி மஹாத்மா கூறுவன யாவை?

### ஆ. ஒரு பத்தி அளவில் அல்லது பத்து வரிகளுக்கு மிகாமல் விடையளி

1. பதினெட்டாம் நூற்றாண்டின் இடைக்காலத்தில் இந்தியாவின் நிலை எவ்வாறு இருந்தது?



2. ஆங்கிலேயர் ஆட்சி, கல்வித் திட்டம் பெண்களின் நிலை உயர ஆற்றிய பணிகளை விவரி.
3. ஆரிய சமாஜம் - விளக்கம் தருக.
4. ஆரிய சமாஜத்தின் கல்விப் பணியை விவரி.
5. சுவாமி தயானந்தர் பற்றி மதிப்பீடு தருக?
6. மகாத்மாவின் இளமைப் பருவம் பற்றி நீவிர் அறிவன யாவை?
7. அஹிம்சைக்கு காந்தியடிகளின் விளக்கம் யாது?
8. சத்யாக்கிரஹம் பற்றி காந்தியடிகள் கூறுவன யாவை?

### இ. ஒரு பக்க அளவில் அல்லது முப்பது வரிகளுக்கு மிகாமல் விடையளி

1. இந்தியாவில் சீர்திருத்த இயக்கத்திற்கான காரணிகளைத் தொகுத்துக் கூறு?
2. பிரம்ம சமாஜத்தின் கொள்கைகளை விவரி.
3. ஆரிய சமாஜத்தின் கோட்பாடுகள் யாவை?
4. பிரம்ம ஞான சபை பற்றியும், அதன் கோட்பாடுகளைப் பற்றியும் விவரி.
5. இராமகிருஷ்ண இயக்கத்தின் நோக்கங்கள், குறிக்கோள்கள் விவரி.
6. விவேகானந்தர் பொன்மொழிகளைக் கூறுக.
7. சுதேசி இயக்கம் பற்றிய காந்தியின் கருத்துகளை விவரி.
8. சுயராஜ்ஜியம் பற்றிய காந்தியின் கருத்துகளை விவரி.
9. கூட்டு வழிபாடு பற்றி காந்தியின் கருத்துகளை விவரி.
10. ஒழுக்கம் பற்றிய காந்தியடிகளின் கருத்துகளை விவரி.

www.tntextbooks.in

### ஈ. நான்கு பக்கங்களுக்கு மிகாமல் விடையளி

1. இந்திய சீர்திருத்த இயக்கங்களால் ஏற்பட்ட விளைவுகளைத் தொகுத்து எழுது.
2. இராஜாராம் மோகன்ராய் அவர்களின் வாழ்க்கையையும், அவரது அரிய சேவையையும் விவரி.
3. ஆரிய சமாஜத்தின் செயல்பாடுகள், சமூக, சமுதாய சேவைகள் விவரி.
4. விவேகானந்தர் வாழ்க்கை வரலாற்றையும், கொள்கைகளையும் சமுதாய சேவைகளையும் விவரி.
5. மகாத்மா காந்தியின் வாழ்க்கையையும், அவரது அரிய கொள்கைகளையும் விவரி.
6. சீர்திருத்த இயக்கங்கள் தோன்றுவதற்கான காரணங்களையும், விளைவுகளையும், அதன் காரணிகளையும் தொகுத்து எழுதுக.

www.tntextbooks.in

# 11. உலகப் பண்பாட்டிற்கு இந்தியாவின் கொடை

கால வெள்ளத்தில் அடித்துச் செல்லப்படாமல் இன்றும் சீரும் சிறப்புமாக நிலை பெற்றிருப்பதே இந்தியப் பண்பாடு. பல அன்னியப் படையெடுப்புகளாலும், புரட்சிகளாலும் சமயப் பூசல்களாலும், இயற்கையின் பாதிப்புகளாலும், மேலை நாட்டுத் தாக்கத்தாலும், அழிந்துபோகாமல் இன்றும் இளமை மாறா நிலையில் இருந்து வருகிறது இந்தியப் பண்பாடு.

## 11. 1. பிற நாடுகளில் இந்தியப் பண்பாடு

பௌத்த சமயமும் இந்து சமயமும் கீழைநாடுகளின் பல பகுதிகளில் கி.பி. 100-லிருந்து 1500 வரை பரவியிருந்ததை வரலாறு மூலம் அறிகின்றோம். இந்து சமயம் தென்னிந்தியாவிலிருந்தும், பௌத்த சமயம் வட இந்தியாவிலிருந்தும் இப்பகுதிகளுக்கு சென்றன. அசோகர் காலத்திலிருந்து இப்பகுதிகளுக்கு சென்றன. அசோகர் காலத்திலிருந்து பௌத்த சமயக் குழுக்கள் மத்திய ஆசியாவின் பல பகுதிகளுக்குச் சென்று பௌத்த மடாலயங்களைத் தோற்றுவித்து பௌத்த சமயத்தைப் பரப்பினர்.

கிழக்கு துருக்கிஸ்தானிலிருந்து (Turkestan) சீனாவரை பரவியிருந்தது. இப்பகுதிகளில் அகழ் வாராய்ச்சியில் மடாலயங்கள், ஸ்தூபிகள், கல்வெட்டுகள், கையெழுத்து பிரதிகள் போன்றவைகளின் பௌத்த அழிபாடுகள் கண்டுபிடிக்கப்பட்டன. திபெத்தில் ஏழாம் நூற்றாண்டில் பௌத்த சமயம் அறிமுகப்படுத்தப்பட்டது. ஒன்பதாம் நூற்றாண்டில் திபெத்திய அரசர்கள் பல இந்தியர்களையும் திபெத்திய அறிஞர்களையும் கூட்டிவைத்து சமஸ்கிருத மொழியிலிருந்த பௌத்த சமய நூல்களை திபெத்திய மொழியில் கொணர்ந்தனர்.

பௌத்த சமயம் கி.பி முதலாம் நூற்றாண்டில் பர்மாவிற்குள் நுழைந்தது. பின்பு அங்கு நிலைபெற்றது, பர்மாவில் நூற்றுக்கணக்கான பௌத்த விஹாரங்களை இன்றும் காணமுடிகிறது.

www.tntextbooks.in

சீனாவில் நான்காம் நூற்றாண்டில் ஐம்பது பௌத்த சமஸ்கிருத நூல்கள் சீனமொழியில் கொணரப்பட்டன. சீனாவிலிருந்து பௌத்த சமயம் நான்காம் நூற்றாண்டில் கொரியாவிற்கு சென்றது. பின்பு அங்கிருந்து அது ஜப்பானுக்கு வெகு வேகமாகப் பரவியது.

அசோகருடைய முயற்சியால் இலங்கையிலும் பௌத்த சமயம் வெகு வேகமாகப் பரவி நிலையான தன்மையைப் பெற்றது. இந்து சமயமும் சாவகம், பாலி, போர்னியோ, மலேயா, சயாம், கம்போடியா சம்பா போன்ற கீழை நாடுகளில் பரவி அங்கு தனது ஆதிக்கத்தை செலுத்தியது. இவற்றையெல்லாம் பல வரலாற்று சான்றுகளும் அகழ்வாராய்ச்சிகளும் கல்வெட்டுகளும், இலக்கியங்களும், அழகு கலைகளும் பழக்க வழக்கங்களும் நமக்கு மிகத் தெளிவாக எடுத்துகாட்டுகின்றன. சமய நூல்களும், கல்வெட்டுகளும், இலக்கியங்களும் அழகுக் கலைகளும், பழக்க வழக்கங்களும் நமக்கு மிகதெளிவாக எடுத்துக்காட்டுகின்றன. சமய நூல்களும், அழகுக் கலைகளும் இந்தியாவின் சமய நூல்களான வேதங்கள், உபநிடதங்கள், வீர காவியங்கள், பகவத் கீதை, பௌத்த சமய நூல்கள் இவை அனைத்தும் மேலை நாட்டு கீழை நாட்டு மொழிகளில் மொழியாக்கம் செய்யப்பட்டு உலகெங்கும் பரவின. இந்தியக் கட்டடக்கலை, ஓவியக்கலை, இசை, நடனம், சிற்பக்கலை இவற்றை மேலை நாட்டார் பாராட்டியதுடன் அப்பாணிகளை அங்கு புகுத்தவும் தலைப்பட்டனர்.

### 11. 1. 1. பௌத்த சமயம்

கீழை நாடுகளில் பெரும் செல்வாக்குடன் இன்றும் திகழ்ந்து வருவது பௌத்த சமயம். அது தோன்றிய நாட்டில் சிறப்பான நிலையை பெற்றிராவிடினும், இந்நாடுகளில் நிலையான இடத்தை பெற்றுள்ளது, இச்சமயம் வலியுறுத்தும் அஹிம்சைக் கோட்பாடு அனைவராலும் இன்றும் போற்றிப் புகழப்பட்டு ஏற்றுக்கொள்ளப் பட்டுள்ளது. இச்சமயத்தை சுமந்துசென்ற பௌத்த துறவிகள் அந்நாடுகளுக்கு இந்நாட்டின் பண்பாட்டு நாகரிகக் கூறுகளையும் அழகுக்கலைப் பாணிகளையும், பழக்க வழக்கங்களையும் உடன் சுமந்து சென்றனர்.

இறைவனை அடைய இந்து சமயம் மூன்று முக்கிய நெறிகளை கூறுகின்றது. அவை முறையே ஞான மார்க்கம் (அறிவு நெறி) கரும



மார்க்கம் (கடமை நெறி) பக்தி மார்க்கம் (அன்பு நெறி) எனப்படுபவை.

வாழ்வில் வளம்பெற்று இறைவன் திருவடிகளை அடைய இந்த மூன்று நெறிகளும் மிகச் சிறந்தவை எனக் கருதப்படுகின்றன. இந்நெறிகளை மேலை நாட்டுத் தத்துவ ஞானிகளும் சமயச் சான்றோர்களும் பாராட்டுகின்றனர்.

### 11. 1. 2. சமஸ்கிருதமும் தமிழும்

சமஸ்கிருத மொழியில் உள்ள காளிதாசனின் நாடகங்கள், இராமாயணம், மகாபாரதம் போன்ற வீர காவியங்கள், பகவத்கீதை உபநிடதங்கள், வேதங்கள் போன்றவை மேலை நாட்டு மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டு அவற்றில் பொதிந்துள்ள சமய, தத்துவக் கருத்துக்களை போற்றி பாராட்டி உலகமே பின்பற்ற முயல்கின்றது. காளிதாசனின் சாகுந்தல நாடகமும் இராமாயணமும் இன்றும் உலகெங்கும் நாடகங்களாக நடிக்கப்பட்டு வருகின்றன. “வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான்புகழ் கொண்ட தமிழ்நாடு”. திருக்குறள் உலகத்தின் முக்கிய மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டது, நமக்கு மிகுந்த பெருமையை அளிக்கக் கூடிய ஒன்று. ஜெர்மானியத் தத்துவ ஞானிகளாகிய கதேஸ்கோப்பளார், பிக்டே ஹெகல் போன்றோர் சமஸ்கிருத மொழியில் ஈர்க்கப்பட்டு இந்திய இலக்கியங்களை பயின்று அவற்றால் தாங்கள் பெற்ற அறிவுச் செல்வத்திற்காக இந்தியாவை மிகவும் பாராட்டியுள்ளார்கள். இம்மைக்கும் மறுமைக்கும் அமைதியையும் ஆனந்தத்தையும் தருபவை உபநிடதங்கள் என ஸ்கோப்பளார் கூறுகின்றார். இதே போன்று எமர்சன், தோரோ, வால்ட்விட்மென் போன்ற அமெரிக்க அறிஞர்களும் இந்திய இலக்கியங்களுக்கும் தத்துவ நூல்களுக்கும் தாங்கள் கடப்பாடுடையவர்கள் எனக் கூறிக்கொள்கின்றார்கள்.

### 11. 1. 3. இந்திய விடுதலையும் மகாத்மா காந்தியும்

குருதி கொட்டாமல், குழப்பம் விளைவிக்காமல் பிரிட்டானியரிடமிருந்து அஹிம்சை நெறியைக் கடைபிடித்து மகாத்மா காந்தி இந்நாட்டிற்கு விடுதலை பெற்றுத்துத் தந்த இச்செயல் உலகெங்கும் பாராட்டும் நிலையை உருவாக்கியுள்ளது. இதே வழிமுறைகளை மார்டின் லூதர்கிங் போன்றோர் தங்கள்

www.tntextbooks.in

செயல்களைச் சாதித்துக்கொள்ள கடைப்பிடித்தனர். இவர் கையாண்ட சத்தியாக்கிரக இயக்கத்தையும் அஹிம்சை நெறி முறைகளையும் இவருக்கு முன்பு எவரும் உலக வரலாற்றில் அரசியல் அரங்கில் பெரிய அளவில் நடைமுறைப்படுத்தியதில்லை.

### 11. 1. 4. தேர்தல்கள்

உலகிலேயே மிகப் பெரிய குடியரசு நாடு இந்தியா. இக்குடியரசு நாட்டில் இந்தியர்கள் சுதந்திரம் பெற்ற பின்பு பல முறை தேர்தல்கள் அமைதியாக, வெற்றிகரமாக நடத்தியுள்ளனர். இவை அனைத்தும் சட்டத்தின் அடிப்படையில் ஜனநாயக முறைப்படி மிக நல்ல முறையில் நடந்துள்ளன. இதை இன்றும் பல நாடுகள் பின்பற்றி வருகின்றன.

### 11. 1. 5. அறக் கோட்பாடு

வாழ்வின் அடிப்படைக் கோட்பாடாக அமைந்திருப்பது அறமாகும். அறநெறியில் நின்று, பொருள் ஈட்டி அறவழியில் இன்பத்தைத் துய்த்து வீடு பேறு அடைய வேண்டும் என்பதற்காக உறுதிப் பொருள்கள் நான்கில் அறத்தை அல்லது தருமத்தை முதன் முறையாக நமது சமயம் வைத்துள்ளது. இந்திய நாட்டை நம் முன்னோர் “தரும பூமி” என்றழைத்தனர். நமது சமயத்தையும் தருமம் என்ற சொல்லால் அழைத்தனர். இத்தரும பூமி ஆன்ம விடுதலையை மிகவும் வலியுறுத்துகின்ற நாடு. இதை மையமாகக் கொண்டே இந்த நாட்டின் பண்பாடு அமைந்துள்ளது. இக்கோட்பாடும் உலகெங்கும் உள்ள மக்களுக்கு உகந்த கோட்பாடாகும்.

### 11. 1. 6. பஞ்ச சீலம்

பஞ்சசீலக் கோட்பாடும் இந்தியப் பண்பாட்டு உணர்வை அடித்தளமாக கொண்டு உருவாக்கப்பட்டது அல்லலுறும் உலகிற்கு அருமருந்தாகத் திகழ்வது இப்பஞ்சசீலக் கோட்பாடாகும் அவையாவன :

1. அமைதியான கூட்டு வாழ்வு
2. பிறநாட்டு நடவடிக்கைகளில் தலையிடாதிருத்தல்



3. வலியப்போருக்குச் செல்லாமை
4. நாட்டைக் கூறுபோடாமை
5. வாணிக ஒப்பந்தம்

### 11. 1. 7. வேறு சில இந்தியப் பரிசுகள்

இந்தியா குறிப்பாக ஐரோப்பியர்கட்கு நறுமணப் பொருள்களைப் பயன்படுத்தும் வழிமுறைகளைக் கற்றுத் தந்தது. இறைச்சியுணவை உட்கொள்ளும் அவர்கள் இப்பொருள்களை இந்தியாவிலிருந்து பெற்று வருகிறார்கள். நெல், கரும்பு, பருத்தி போன்றவை இங்கிருந்து மேலை நாட்டிற்கு எடுத்துச் செல்லப்பட்டு உலகின் பல பாகங்களிலும் இன்று பயிரிடப்பட்டு வருகின்றன. சதுரங்க விளையாட்டு, அனைத்து நாடுகளும் பின்பற்றும் எண்முறை, பதின்கூறான கணக்கீடு முறை **(Decimal System)** போன்றவை இந்தியா உலகுக்களித்துள்ள பரிசுகளாகும்.

### 11. 1. 8. பல்வேறு இயக்கங்கள்

இராமகிருஷ்ணன் இயக்கம், பிரமஞான சபை, பிரமசமாஜம், ஆரியசமாஜம் போன்றவை உலகெங்கும் தங்கள் கிளைகளை நிறுவி. இந்நாட்டின் வளமிக்க சமத்துவ சமுதாயச் சீர்திருத்தக் கோட்பாடுகளை உலகுக்கு உயர்ந்த கொடையாக வழங்கியுள்ளன.

#### *11. 1. 8. 1. மனித நேயம்*

இந்தியப்பண்பாடானது, மனித நேயத்தை அடிப்படையாகக் கொண்டது. உயிர்களிடத்தில் அன்பு காட்டுதல், எவ்வுயிரையும் தன்னுயிர் போல் பாவிக்கும்பொழுது இறைவனின் அருள் கிட்டும் என்பதையும் உணர்த்துகின்றது. பண்பாடு மனித நேயத்தை மட்டுமின்றி ஆன்ம நேயத்தை உலகிற்கு அளித்துள்ளது.

#### *11. 1. 8. 2. உயர்ந்த தத்துவங்கள்*

இப் பண்பாடு உயர்ந்த தத்துவங்களின் மொத்த கூறுகளாகவே விளங்குகின்றது. மனிதன் வெறும் சடப்பொருள் அன்று. அவனுக்கு ஆன்மா உண்டு. அந்த ஆன்மா அழிவற்றது. ஆன்மா வீடு பேறு அடைவதே இதன் நோக்கமாகும்.

www.tntextbooks.in

### *11. 1. 8. 3. சிறந்த உலகத்தரம் வாய்ந்த இலக்கியங்கள்*

'பிறன்மனை நோக்காப் பேராண்மையினையும், சகோதரத்துவத்தையும்' இராமாயணம் எடுத்தியம்புகிறது.

'தர்மத்தின் வாழ்வுதனை சூது கவ்வும் தர்மம் மறுபடியும் வெல்லும்' என்று மகாபாரதம் உலகத்திற்கு உணர்த்துகிறது. ரிக், யஜூர், சாமம் அதர்வணம் போன்ற வேதங்கள், பகவத்கீதை, திருக்குறள், காளிதாசரின் சாகுந்தலம் போன்றவை இன்றும் உலக மக்களால் பெரிதும் பாராட்டப்படுகின்றன. பகவத்கீதையானது மனிதகுலத்திற்காக இந்திய நாட்டின் கொடையாக வழங்கப்படுகிறது.

### *11. 1. 8. 4. தாய்மை, பெண்மை*

பாரத நாட்டின் பண்பாட்டுக் கூறுகளில் மிக முக்கியத்தன்மை வாய்ந்த ஒன்று அன்னை வழிபாடு, பாரதத்தாய் என்று நம் நாட்டை தாயின் பெயரால் போற்றுகின்றோம். தாய்நாடு என்றே அழைத்து மகிழ்கிறோம். ஆறுகள், மலைகள் இவற்றினை பெண்மையின் பெயராலேயே மிகவும் அழைக்கப்படுகின்றது. பெண்மையைப் போற்றாத எந்த நாடும் மேன்மை அடையாது என்பதை இந்தியப் பண்பாடு உலகிற்கு எடுத்துரைக்கின்றது.

### *11. 1. 8. 5. அகிம்சை*

சத்யம் என்பது உள்ளது அல்லது உண்மையெனப் பொருள்படும், இவ்வுலகம் சத்யத்தின் மீது கொண்ட நம்பிக்கையில் தான் இயங்கிக்கொண்டுள்ளது. 'சத்தியம் தவறாத உத்தமராக வாழவேண்டும்' என்பதை வலியுறுத்துகின்றது.

### *11. 1. 8. 6. அமைதி*

சுமார் பத்தாயிரம் ஆண்டுகளாக இந்தியா எந்தவொரு நாட்டின் மீது வலியச் சென்று போர் தொடுத்தாக வரலாறு இல்லை. எத்தனையோ படையெடுப்புகளால் பாதிக்கப்பட்டிருந்தபோதிலும் கூட, அது அமைதியையே நாடுகிறது. மேலும் உலக அமைதிக்காக இன்றுவரை உலக அரங்கில் போராடிவருகிறது.

### *11. 1. 8. 7. நுண்கலை*

கலைகளின் பிறப்பிடம் இந்தியாவாகும். ஆய கலைகள் அறுபத்தி நான்கு என்பர். இக்கலைகள் எழில் உணர்வால்



தோன்றியவை. இசை, கவிதை, ஓவியம், சிற்பம், கட்டடக்கலைப் போன்றன நுண்கலைகளில் போற்றத் தக்கன. இவை மனிதப் பண்பாட்டை வளர்க்க இன்றியமையாதன. இவை மனிதன் முழுமையான, மகிழ்ச்சியான வாழ்வு வாழப்பெரிதும் துணை புரிகின்றன. ஒவ்வொரு மாநிலத்திற்கும் ஒரு நடனம் என்றும், வட இந்திய தென்னிந்திய இசை என்றும் இந்திய இசை பிரிக்கப் பட்டுள்ளது. பரதம், கதகளி, கதக், மோகினியாட்டம், குச்சிப்புடி, ஒடிசி போன்ற நடனங்கள் மூலமாக இந்தியப் பண்பாட்டை உலக நாடுகளில் பரவச் செய்கின்றது.

### *11. 1. 8. 8. யோகா*

'யோகா' என்பது ஜீவாத்மாவையும் பரமாத்மாவையும் இணைப்பதேயாகும். உடலும், மனமும் ஒன்றிணைந்து செயல்படுவதே யோகம் ஆகும். உடலை போற்றுதல் மட்டும் போதாது உள்ளத்தையும் பண்படுத்துதலின் அவசியத்தை யோகா கல்வியின் மூலம் உலகிற்கு இந்தியப் பண்பாடு எடுத்துரைக்கிறது.

### *11. 1. 8. 9. எளிமையானவாழ்வும் உயர்ந்த சிந்தனைகளும்*

இப்பண்பாடு எளிமையான வாழ்வினை வலியுறுத்துகின்றது. அக்காலத்தில் இயற்கை உணவு, உண்ட காரணத்தால், நோய்கள் நீங்கி மிக எளிய வாழ்க்கை வாழ்ந்தனர். காந்தியடிகளின் கதர் ஆடை இன்றளவும் உலக மக்களால் போற்றுதற்குரியதாகும், எனவே எளிய உடை, உணவு பழக்கவழக்கங்கள் போன்றவற்றை உலகக்கொடையாக இந்தியப்பண்பாடு வழங்கியுள்ளது.

காடுகளில் வசித்த ஞானிகள் மூலமாக உயர்ந்த சிந்தனைகள் நமக்கு கிடைத்துள்ளன. ஸ்ருதி, ஸ்மிருதிகள் போன்றவை உயர்ந்த உள்ளங்களின் சிந்தனைத் தொகுப்பேயாகும். எனவே, இந்தியப் பண்பாடு தியாக வாழ்வை வலியுறுத்துவதாகவே அமைந்துள்ளது.

### *முடிவுரை*

இன்றும் ஐக்கிய நாட்டுச் சபையில் இந்தியா உலகெங்கும் அமைதியை நிலைநாட்டப் பெரும் பாடுபட்டு வருகிறது. அமைதியை நாடும் இந்நாட்டினர் பிறநாட்டு மக்களுடன் அமைதியுடன் வாழ விரும்புவதில் வியப்பொன்றுமில்லை.

www.tntextbooks.in

## பயிற்சி வினாக்கள்

**அ. ஓரிரு வரிகளில் விடையளி**

1. இந்தியப் பண்பாட்டின் சிறப்பினை விவரி?
2. காளிதாசனின் நாடக நூல்கள் எவை?
3. உபநிடதங்கள் பற்றி ஸ்கோப்னர் கருத்து யாது,
4. சமய சமுதாய சீர்திருத்த கோட்பாடுகளை உலகறிய செய்த அமைப்புகள் யாவை?
5. மனித நேயம் பற்றி சிறு குறிப்பு தருக?

**ஆ. ஒரு பத்தி அளவில் அல்லது பத்து வரிகளுக்கு மிகாமல் விடையளி**

1. புத்த சமயம் எவ்வாறு வெளிநாடுகளில் பரவியது?
2. பஞ்ச சீலக் கொள்கையை விவரி.
3. இந்தியா ‘தரும பூமி’ என அழைக்கப்பெறுவதேன்?
4. உலகிற்கு இந்தியா அளித்துள்ள பரிசுகள் யாவை?
5. நுண்கலை - உலகப் பண்பாட்டிற்கு இந்தியக் கொடை எவ்வாறு?

**இ. ஒரு பக்க அளவில் அல்லது முப்பது வரிகளுக்கு மிகாமல் விடையளி**

1. இந்தியப் பண்பாடு வெளிநாடுகளில் பரவிய முறையை விவரி.
2. இந்தியப் இலக்கியங்கள் உணர்த்தும் அறவாழ்வு நெறிகளை விவரி.
3. இந்தியப் பண்பாடு பெண்மையை போற்றும் பாங்கினையும், அமைதி, அகிம்சை பற்றியும் விவரி.

**ஈ. நான்கு பக்கங்களுக்கு மிகாமல் விடையளி**

1. “இந்தியப் பண்பாட்டிற்கு இந்தியாவின் கொடை” என்ற தலைப்பில் நீவிர் தரும் செய்திகளை விவரி.

www.tntextbooks.in

# 12. இந்தியப் பண்பாடும், சுற்றுச் சுழல் கல்வியும்

## 12. 1. சுற்றுப்புறச் சூழல் கல்வி - விளக்கம்

காக்கை குருவி எங்கள் சாதி – நீள்
கடலும் மலையும் எங்கள் கூட்டம்

என்ற பாரதியின் கருத்தினை உள்ளடக்கியதே இந்தியப் பண்பாடும், சுற்றுப்புறச் சூழலும் ஆகும். இயற்கையின் மிகப்பெரிய உள்ளடக்கம் சுற்றுப்புறமும், **(environment)** மற்ற உயிரினங்களும் ஆகும். இவை இரண்டிற்கு இடையே உள்ள இந்த உறவுகளையெல்லாம் பற்றி கற்கும் கல்விக்கு சூழ்நிலையியல் **(Econology)** என்று பெயர்.

வீடு என்று பொருள் உணர்த்தும் ஆய்காஸ் என்ற கிரேக்கச் சொல்லும், கற்றல் என்ற பொருள் உணர்த்தும் லோகாஸ் என்ற கிரேக்கச் சொல்லும் சேர்க்கப்பட்டு 'யிகோலஜி' **(Ecology)** என்ற சொல் உருவாக்கப்பட்டது.

உயிருள்ளவைகளும், **(Biotic)** உயிரற்றவைகளும் **(Abiotic)** அடங்கிய இயற்கையின் தொகுப்பிற்கு சூழ்மண்டலம் அல்லது சூழ்நிலைத் தொகுப்பு **(Ecosystems)** எனப்படும்.

மனித வாழ்க்கைக்கு இன்றியமையாதன. சுவாசிப்பதற்கு நல்ல தூய காற்று, பருகுவதற்குச் சுவையான நீர் மற்றும் ஊட்டச்சத்து மிக்க நல்ல உணவு ஆகியவை ஆகும். இவை அனைத்தும் கொண்டதே தூய்மையான சுற்றுச்சூழல் ஆகும்.

மலை, நதி, கடல், சூரியன், ஆகாயம், காற்று மற்றும் விலங்கினங்கள் இவற்றைப் பற்றி அறிவதும் அவற்றில் மனிதனின் பங்கினைப் பற்றியும் தெரிந்து கொள்வதே சுற்றுப்புறச் சூழல் கல்வியாகும். அதாவது இயற்கையோடு இயைந்த வாழ்வு என்பதேயாம்.

www.tntextbooks.in

புல்லாகிப் பூண்டாகி பல்விருகமாகிப் பலவகைப் பிறவி களெடுத்து மனிதனாய்ப் பிறப்பெடுப்பது இவ்வையத்தில் வாழ்வாங்கு வாழ்வதற்காகவே.

எப்படி வேண்டுமானாலும் வாழலாம் என்றில்லாது இப்படித்தான் வாழவேண்டுமென்று வாழ்வதுதான் திட்டமிட்ட வாழ்க்கை. நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம். ஆனால் இன்றுள்ள உலகில் மனிதன் தான் விரும்புவதுபோல் உடல்நலத்துடன் வாழ முடிவதில்லை.

நமது உலகம் அழிந்து வருகிறது. ஆனால் இந்த அழிவை இயற்கை உருவாக்கவில்லை. மனிதர்களாகிய நாம் உருவாக்கி வருகிறோம். நம் ஒவ்வொருவருக்கும் இரண்டு வீடுகள் இருந்து வருகின்றன. ஒன்று நாம் வாழ்ந்து வரும் வீடு, மற்றொன்று நாம் வாழ்ந்துவரும் உலகம். வீட்டைச் சுத்தமாக வைத்திருக்கிறோம். ஆனால் உலகம் என்ற இன்னொரு வீட்டை மாசுபடுத்தி வருகிறோம். உலகம் என்ற வீட்டை நாம் தூய்மையாக வைத்துக்கொள்ளா விட்டால் நம் நாட்டைச் சுற்றிலும் இருந்துவரும் பலதரப்பட்ட மாசு நம் வீட்டையும் தூய்மையற்றதாக மாற்றிவிடும்.

ஆனால், நமது பண்பாடு எவ்வாறு சுற்றுப்புறத்திற்கு முக்கியத்துவம் கொடுத்துள்ளது என்பதை பின்வரும் ஒவ்வொரு தலைப்பின் கீழ் காண்போம்.

## 12. 2. இந்திய சுற்றுச்சூழல்

“பாரதநாடு பழம் பெரும் நாடு
நீர் அதன் புதல்வர் இந்நினைவகற்றாதீர்”

என்றான் பாரதி. இப்பாரத பூமி பண்பாட்டின் சிகரமாக திகழ்கின்றது. இந்தியப் பண்பாட்டிற்கு இந்தியச் சுற்றுச்சூழல் ஒரு சிறப்பம்சமாகும்.

இந்தியா கிழக்கே வங்காள விரிகுடாவாலும், மேற்கில் அரபிக்கடலாலும், தெற்கே இந்து மகா கடலாலும், வடக்கே இமயமலையாலும் சூழப்பட்டுள்ளது. இந்தியாவின் அமைவிடம் மிகச் சிறப்பு வாயந்ததாகும். உலகிலேயே அதிக மழைபெறும் இடம் சிரபுஞ்சியாகும். உலகிலேயே மிக உயரமான எவரெஸ்ட் சிகரம்



இங்கு தான் அமைந்துள்ளது. இந்தியாவில் உற்பத்தியாகும் பனியாறுகளில் மிக முக்கிய ஆறு கங்கையாகும். இது இந்தியாவின் ‘புனிதநதி’ என்று அழைக்கப்படுகின்றது. கங்கை, யமுனை, சரஸ்வதி ஆகிய மூன்று நதிகளின் சங்கமமானது ‘திரிவேணி சங்கமம்’ என்று அழைக்கப்படுகிறது.

இந்தியாவை கடகரேகையானது தீபகற்ப இந்தியா, புறதீபகற்ப இந்தியா என இரண்டாகப் பிரிக்கிறது. இங்கு பாலைத் தாவரங்கள் முதற்கொண்டு பசுமை மாறாத் தாவரம் வரை பரவியுள்ளது.

### 12. 2. 1. மலைகள்

நம் பண்பாட்டில் அனைத்து மலைகளையும் கடவுள் எனப் போற்றுகின்றோம். எல்லா மலைகளையும் இறைவனின் வடிவமாக பாரதப் பண்பாடு ஏற்கின்றது. கைலாய மலையை சிவன் உறையும் இறைத்தன்மை உடையது என்று சொல்கிறார்கள். திருப்பதிமலையும் இறைவன் வடிவமாகும். திருமால் அங்கு உறைகின்றார். ஆகவே, அதனைக் காலால் மிதியாமல் முழங்காலிட்டே தவழ்ந்து ஏறினார் ஒரு வைணவப் பெரியார். ‘காரைக்கால் அம்மையாரும்’ கைலாயத்திற்குத் தலையால் நடந்து போனதாகச் சொல்வார்கள். பராசக்திக்கு விந்திய மலையாகும். அதனால் ‘விந்தியாசல நிவாசினி’என்றும், சாமுண்டி மலையின் மீது வாசம் பண்ணுவதால் ‘சாமுண்டீஸ்வரி’ என்றும் போற்றப்படுகின்றாள். திருச்சியில் பிள்ளையார் மலை உச்சியில் இருப்பதால் ‘உச்சிப் பிள்ளையார்’ என்று பெயர் பெறுகிறார். சபரிமலையை ஐயப்பனுக்குச் சமர்ப்பிக்கிறோம்.

குன்று இருக்கும் இடமெல்லாம் குமரன் இருக்குமிடம் என்பதால் முருகனை ‘குன்றுதோறும் ஆடுபவன்’ என்பர். திருத்தணியும், திருப்பரங்குன்றமும், பழனியும், விராலி மலையும் அதற்குச் சான்று.

‘திருவண்ணாமலையே சிவனின் வடிவம்’ என்று மகரிஷி கூறியுள்ளார். ஆகையால், இறைவனையே “அருள் நிதி தர வரும் ஆனந்த மலையே” என்று ஒருவர் பாடினார். எனவே நமது பண்பாட்டில் மலை ஒரு முக்கிய கூறாகச் செயல்பட்டு வருகின்றது.

www.tntextbooks.in

### 12. 2. 2. நதிகள்

இந்தியப் பண்பாட்டில் அனைத்து நதிகளும் இறைவன் மயம். சில நதிகளுக்கு இறைவனின் திருநாமத்தையே வைத்திருக்கிறார்கள். உதாரணம் கிருஷ்ணா, பிரம்மபுத்திரா போன்றவைகள். சில நதிகளோடு இறைவனின் பெருமையை இணைத்துச் சொல்கின்றோம். கங்கை திருமாலின் திருவடியை கழுவுகின்றது என்றும், சிவபெருமானின் முடியில் உறைகிறது என்றும் கூறுகிறோம். யமுனை நதியில் கண்ணன் விளையாடினான். சரயு நதிக்கரையில் ராமன் வாழ்ந்தான். நர்மதை நதியில் ஒவ்வொரு கூழாங்கல்லும் சிவனின் வடிவம் என்ற பழமொழிகள் கூறுகின்றன.

கங்கையோடு தொடர்புடையதால் முருகனுக்கு ‘காங்கேயன்’ என்று பெயர். ஆடி பதினெட்டாம் பெருக்கில் நதிகளின் பொங்கி வரும் புது நீரை வழிபடுகின்றோம். இவ்வாறு நதிகள் யாவும் இந்தியப் பண்பாட்டில் ‘பரம்பொருளின் வடிவம்’ என்று நம் மக்கள் நம்புகின்றார்கள்.

நதிகள் பெண்மைத்தன்மையுடையன. எனவே அவற்றைத் தாயாகப் போற்றுகிறோம்.

### 12. 2. 3. மரங்கள்

நயக்ரோத, உதும்பர, அசுவத்த என்ற மரங்கள் விஷ்ணுவின் நாமங்கள் என்று போற்றப்படுவதாக. விஷ்ணு சகஸ்ரநாமம் கூறுகிறது. அதாவது அத்திமரம், ஒதிய மரம், அரச மரம் ஆகிய யாவுமே இறைவனின் திருவடிவங்களாகப் போற்றப் படுகின்றன. அதனால் இறைவனின் உருவத்தை மரக்கட்டைகளாலும் செய்து வழிபடும் வழக்கம் பாரதத்தில் உண்டு. நம் மரபில் வேப்ப மரத்தை மாரியம்மனோடு இணைத்துப் பேசுகின்றோம். ஆலமரத்தின் அடியில் அறிவுக்கடலாகிய தட்சிணா மூர்த்தியும், அதன் இலையில் பாலகிருஷ்ணன் படுத்திருப்பதாக நாம் பேசுகின்றோம். திரிவேணி சங்கமத்தில் ஆலமர வடிவத்தில் விஷ்ணு வணங்கப்படுகிறார்.

“கதம்ப வனக்குயிலே” எனப் பராசக்தியை கதம்ப மரத்தோடு இணைத்துப் பேசுகின்றோம். முருகனையும் ‘கடம்பன்’ என்று கூறுவது வழக்கம். அரசமரத்திற்கு பிள்ளையார். இதனால் தான்



ஒவ்வொரு மரத்திலும் இறைவன் இருப்பதாக உணர்ந்த நம் முன்னோர்கள் ‘தலவிருட்சம்’ என்ற பெயரில் ஒவ்வொரு திருத்தலத்திலும் புனிதமான மரங்களை வணங்க வேண்டுமென்று விதித்து இருக்கிறார்கள்.

‘குறும்பலா’ குற்றாலத் தலவிருட்சமாகும். திருவானைக் காவலில் ‘நாகலிங்க மரம்’ வணங்கப்படுகிறது. ‘புன்னை மரத்தை’ மயிலையிலும், மாமரம் காஞ்சிபுரத்திலும் தலவிருட்சமாகப் போற்றப்படுகின்றன. ‘பனைமரம்’ திருப்பனந்தாளில் தெய்வமாக வணங்கப்படுகிறது. நெல்லிமரத்து நிழலில் சித்தர்கள் வாழ்ந்தார்கள். இப்படி எல்லா மரங்களும் தெய்வ வடிவமாக வணங்கப்படுகிறது. இதனையே, ‘ஈசா வாஸ்யம் இதம் ஸர்வம்’ என்று பாரதப்பண்பாடு விளங்குவதோடு அதன் அடிப்படையிலும் அமைந்துள்ளது.

இன்றைய அறிவியலும் மரங்களும் உயிருள்ளவையென கூறுகிறது.

### 12. 2. 4. பறவைகளும் விலங்குகளும்

“எங்கு எங்கு பார்த்தாலும் எவ்வுயிர்க்கும் அவ்வுயிராய்
அங்கு அங்கு இருப்பது நீ அன்றோ பராபரமே”
என்று தாயுமானவர் கூறுகின்றார்.

திருமாலின் அவதாரங்களில் மீன், ஆமை, பன்றி, சிங்கம் ஆகிய வடிவங்கள் அடங்கும். கருடனைத் திருமாலும், காளையை சிவனும், முஞ்சூற்றினை பிள்ளையாரும், மயிலை முருகனும் புலியை ஐயப்பனும், கிளியை மீனாட்சியும், சிங்கத்தைப் பராசக்தியும், யானையை இந்திரனும் வாகனமாய் ஏற்றிருப்பது அவற்றின் இறைத் தன்மையை அனைவரும் உணர வேண்டும் என்பதற்காகத்தான்.

எருமையைக் கூட எமனின் வாகனம் என்கிறோம். காக்கை சனிபகவானுக்கும், ஆந்தை இலக்குமிக்கும். அன்னம் சரஸ்வதிக்கும் வாகனமாகும்.

பாம்பைத் திருமாலின், படுக்கையாகவும் சிவனின் அணியாகவும் வழிபடுகின்றோம். கோகுல கண்ணனை பசுக்களோடு சேர்ந்து தியானிக்கிறோம்.

www.tntextbooks.in

இப்படி விலங்குகள், பறவைகள் அனைத்தும் ஏன் உயிர்கள் அனைத்தும் தெய்வத்தன்மை பெற்றவை என்று இந்தியப் பண்பாடு கருத்துரைக்கின்றது.

காஞ்சிபுரம் வரதராஜர் கோயிலில் பல்லியையும், இராஜஸ்தான் கோயிலில் எலிகளையும் திருவானைக் காவல் கோயிலில் சிலந்திப் பூச்சிகளையும் தெய்வத்தோடு சேர்ந்து வணங்கி வருகின்றோம்.

### 12. 2. 5. கடலும், காடும்

காட்டில் தவம் புரிந்த ஞானிகள் ரிஷிகள் தாங்கள் உணர்ந்த யாவற்றையுமே இறைவடிவமாகக் கண்டனர். இதனையே நம் வேதங்கள் "ஆரண்யம்" என்றழைத்து மகிழ்ந்ததுண்டு. இராமயணத் திலும் 'ஆரண்ய காண்டமே' முக்கியத்துவம் பெற்றிருந்தது. ஆகவே, காட்டையும் இறைவனாக அவர்கள் கண்டது வியத்தகு ஒன்றாகும்.

**கடல்**

திரையறியாப் பெருங்கடலே என்று சிவபெருமானை புலவர் ஒருவர் போற்றிப் புகழ்ந்தார். இன்றைக்கும் ஆடி அமாவாசைக்கும், தை அமாவாசைக்கும், கிரகணங்கள் அன்றும் கடலில் நீராடுதல் நமது வழக்கம்.

உலகிலுள்ள தீர்த்தங்கள் அனைத்திற்கும் புனிதத்தன்மை தருபவன் இறைவன்.

திருச்செந்தூரின் கடலோரத்தில் செந்தில் நாதன் எழுந்தருளி யுள்ளான். திருபாற்கடலில் திருமால் பள்ளி கொண்டுள்ளான். இலக்குமி கடலில் பிறந்தவள், எனவே 'கடல் மகள்' என்றும் அழைக்கப்படுகிறாள். எனவே, இந்தியப் பண்பாடு கடலினையும் தெய்வமாகக் காண்கின்றது.

### 12. 2. 6. பஞ்சபூதங்கள்

நிலம், நீர், நெருப்பு, காற்று, ஆகாயம் ஆகியன ஐந்தும் பஞ்சபூதங்கள் என அழைக்கப்படுகின்றன. தமிழகத்தில்



சிவபெருமானின் ஐந்து தலங்களும் பஞ்சபூதத் தலங்களாக வழிபடப்படுகின்றன.

காஞ்சி ஏகாம்பரநாதரும், திருவாரூர், இராமேஸ்வரம் ஆகிய திருத்தலங்களில் சிவன் மண் வடிவத்தில் வணங்கப்படுகிறார்.

"மண்ணை இருந்து துழாவி வாமனன்
மண்ணிது வெண்ணும் என்று ஆழ்வார் பாடுகின்றார்.

திருவானைக் காவலில் சிவபெருமான் நீர் வடிவத்திலும் காற்று வடிவத்தில் காளத்தியிலும், சிவபெருமான் வணங்கப்படுகிறார். மேலும், ஆகாய வடிவத்தில் சிதம்பரத்திலும், ஜோதி (நெருப்பு) வடிவத்தில் திருவண்ணாமலையிலும் இறைவனை போற்றி வணங்குகின்றோம்.

## 12. 3. இயற்கையோடு இயைந்த வாழ்வு

இந்தியப் பண்பாட்டின்படி இயற்கையின் அழகான அமைப்பில் புழு, பூச்சி முதல் மனிதன் வரை அனைவருக்கும் ஒரு நிரந்தரமான மதிப்புமிக்க இடம் உண்டு. மனிதன் தான் வாழ்வதற்கு எப்படி உரிமை உண்டோ, அதைப்போலவே துளசிச் செடிக்கும், அருகம்புல்லுக்கும், வில்வ மரத்துக்கும், விஷத்தன்மையுடைய ஜீவராசிகளுக்கும் உரிமையுண்டு.

இயற்கையில் மனிதன் மதிக்கத் தகுந்தவனாக இருப்பதைப் போலவே, அனைத்து உயிரினங்களும், கடல், நதி, மலைகளும், காடுகளும் போற்றத்தக்கவை. இறைத்தன்மை வாய்ந்தவை. தனக்குள் இருக்கும் இறையம்சத்தை வெளிக்காட்ட வல்லவை என்று இந்தியப் பண்பாடு எடுத்துரைக்கின்றது.

ஆகவே தான் புராணங்களில் பசுக்களும், யானைகளும், பாம்பும் எலியும் கடவுளை வணங்கி பெருமை அடைந்ததாக நாம் கேள்விப்படுகின்றோம். பாரதப் பண்பாட்டில் அறிவியல் இயற்கையோடு இணைந்து மனிதன் வாழவேண்டும் என்கிறது. இயற்கையை இயற்கையின் போக்கில் விடுவது நலம். அதனை போற்றுதல் நமது கடமை. மனிதன் தன்னுடைய அன்பை, தன்னலமின்றி, சுற்றத்தை மீறி மனித குலம் முழுவதும் செலுத்த வேண்டும். உயிருள்ள அனைத்தையும் போற்றிப் பாதுகாத்தல்

வேண்டும். படைப்புகள் அனைத்தையும் நேசிக்க வேண்டும். இதனையே "வள்ளலாரும் வாடிய பயிரைக் கண்ட போதெல்லாம் வாடினேன், பசியால் இளைத்தேன்" என்று உரைக்கின்றார். இப்படிப் படைப்பு முழுவதிலுமே தன்னையே காண மனிதனுக்குக் கற்றுத் தருவது இந்தியப் பண்பாடாகும்.

நாம் எல்லோரும் விரும்புவது வேண்டுவது, வாழ்க்கையில் மகிழ்ச்சியாக, இன்பமாக இருக்க வேண்டும் என்பது தான். உடலும், உள்ளமும் நலமாகவும், வாழ்வு வளமாகவும் இருந்தால் இன்பத்திற்கு குறை இருக்காது. சுற்றுச் சூழலையும் பண்பாட்டையும் நாம் பாதுகாப்போம் எனில் நம் வாழ்வு மட்டுமல்லாது. நம் வருங்கால சந்ததியினர் வாழ்வும் நலமடையும்.

## 12. 4. சுற்றுப்புறச் சூழலில் மாணவர்களின் பங்கு

1. மாணவர்கள் தங்கள் வகுப்பறையையும், விளையாட்டு மைதானத்தையும் தூய்மையாக வைத்திருத்தல் வேண்டும். இது அவர்களின் தலையாய கடமையாகும்.
2. மக்கள் தொகைப் பெருக்கத்தினால் ஏற்படும் விளைவுகளை மாணவர்கள் உணர்தல் வேண்டும். மக்கள் தொகையை கட்டுப்படுத்தும் வழிமுறைகள் பற்றி மக்களிடையே எடுத்துரைத்தல் வேண்டும். சுற்றுச் சூழல் கேடு அடைவதற்கு இதுவும் ஒரு காரணம் என அறிதல் அவசியம்.
2. "வீட்டுக்கு ஒரு மரம்" "நட்டமரங்கன்றுகளை காப்போம்" என்ற அரசு எடுக்கும் நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பு நல்க வேண்டும். புதிய காடுகளை உருவாக்க வேண்டும்.
3. "மரம் நடுவோம். மழை பெறுவோம்" என்பதற்கு ஏற்ப, மாணவர்கள் தங்கள் வீட்டில் ஒரு சிறுசெடியாவது வளர்க்க வேண்டும்.
4. புகை கக்கும் வண்டிகளின் பயன்பாட்டைக் குறைத்தல் வேண்டும். சிறிய தூரத்திற்கு நடந்து செல்ல பழக வேண்டும். முடிந்தவரை மிதிவண்டிகளை பயன்படுத்துதல் வேண்டும்.
5. மின்சக்தியை பயன்படுத்துவதை முடிந்த மட்டும் குறைத்து கொள்ள வேண்டும்.



6. அறிவியல் முன்னேற்றத்தாலும் தேவைகளாலும் கண்டு பிடிப்புகள் அதிகரித்துவிட்டன. இதன் காரணமாக தொழிற் சாலைகள் பெருகி விட்டன. அத்தொழிற்சாலைகள் ஏற்படுத்தும் கழிவுகள் சுற்றுப்புறத்தை மாசு அடையச் செய்கின்றன. எனவே, தேவைகளை குறைத்து எளிய வாழ்வு வாழப் பழகிக் கொள்ள வேண்டும்.
7. சுற்றுப்புறத்துத் தூய்மை பற்றிய விழிப்புணர்வினை மக்களிடையே எடுத்துச் சொல்ல வேண்டும்.

   "சுத்தம் சோறு போடும்"
   "கந்தையானாலும் கசக்கிக் கட்டு"
   "கூழானாலும் குளித்துக் குடி"

   போன்ற பழமொழிகளின் பொருளை மக்களுக்கு உணர்த்தல் வேண்டும்.
8. நாம் மட்டும் தூய்மையாக இருந்தால் போதாது. நாம் வாழும் உலகத்தையும், சுற்றுச்சூழலையும் தூய்மையாக வைத்துக் கொள்ள வேண்டியது நமது கடமையென உணர்தல் மிக அவசியம்.
9. நம் பண்பாட்டின் முக்கியத்துவம் அறிதல் வேண்டும். இந்தியப் பண்பாடு எவ்வாறு சுற்றுச் சூழலோடு தொடர்பு கொண்டுள்ளது என தெரிந்து கொள்வது நன்று.
10. இந்திய மக்கள் இயற்கையோடு இயைந்த வாழ்வு நடத்தினார்கள் என்பதையும், அதனால் நோயற்ற வாழ்வு வாழ்ந்தனர் என்ற விழிப்புணர்வையும் மக்களிடையே பரப்புதல் அவசியம்.
11. உலக பூமி தினம், உலக சுற்றுப்புறச் சூழல் தினம், உலக சுகாதாரதினம் போன்ற தினங்களை மாணவர்கள் கொண்டாடி, அதன் முக்கியத்துவத்தை பிறருக்கு எடுத்துரைக்க வேண்டும்.
12. குப்பைகளை முறையாக அப்புறப்படுத்தும் வழிமுறைகளைக் கடை பிடிக்க வேண்டும்.
13. பிளாஷ்டிக் பொருள்களைப் பயன்படுத்துவதைத் தவிர்க்க வேண்டும்.
14. நீர்நிலைகளை மாசு படுத்துவதைத் தவிர்க்க வேண்டும்.
15. இயற்கையோடு இயைந்த வாழ்வு வாழ வேண்டும்.

www.tntextbooks.in

## பயிற்சி வினாக்கள்

**அ. ஓரிரு வரிகளில் விடையளி**

1. சுற்றுச்சூழல் கல்வி என்றால் என்ன?
2. சூழ்நிலையியல் கல்வி என்பது என்ன?
3. யிகோலஜி **(Ecology)** என்றால் என்ன?
4. சூழ்நிலைத் தொகுப்பு **(Eco Systems)** என்பது என்ன?
5. பஞ்சபூதங்கள் யாவை?

**ஆ. ஒரு பத்தி அளவில் அல்லது பத்து வரிகளுக்கு மிகாமல் விடையளி**

1. இந்தியச் சுற்று சூழலினை விவரி.
2. இந்தியப் பண்பாட்டில் மலைகளுக்கு அளிக்கப்படும் சிறப்பினைக் கூறுக.?
3. இந்தியப் பண்பாட்டில் நதிகளுக்கு அளிக்கப்படும் சிறப்பினைக் கூறுக?
4. இந்தியப் பண்பாட்டில் மரங்களுக்கு அளிக்கப்படும் சிறப்பினைக் கூறுக?
5. இந்தியப் பண்பாட்டில் பறவை மற்றும் விலங்குகளுக்கு அளிக்கப்படும் சிறப்பினைக் கூறுக?

**இ. ஒரு பக்க அளவில் அல்லது முப்பது வரிகளுக்கு மிகாமல் விடையளி**

1. சுற்றுச் சூழலைப்பேணுவதில் மாணவர்களின் பங்கை விவரி.
2. இந்தியர்கள் இயற்கையோடு இயைந்த வாழ்வு வாழ்ந்தனர் என்பதை விளக்குக.

**ஈ. நான்கு பக்கங்களுக்கு மிகாமல் விடையளி**

1. இந்தியப் பண்பாடும், சுற்றுச்சூழலும் பற்றி கட்டுரை வரைக.



# இந்தியப் பண்பாடு

## மாதிரி வினாத்தாள்

**நேரம் : 3 மணி** **மதிப்பெண்கள் : 200**

### பகுதி - அ

**எல்லா வினாக்களுக்கும் விடையளி. ஒவ்வொன்றிற்கும் ஓரிரு வரிகளில் விடையளி.** **15 x 2 = 30**

1. பண்பாடு பற்றி வால்டேர் கூறுவது யாது?
2. உலகின் உறுதிப் பொருள்கள் யாவை?
3. இந்தியாவின் உயரிய தனிச் சிறப்பு யாது?
4. சிந்துவெளி நாகரிகக் காலம் எது?
5. ‘ஜனா’ என்றால் என்ன?
6. பண்டையத் தமிழரின் பண்பாட்டை அறிய உதவுவன யாவை?
7. நாடக உலகின் இமயம் எனப் போற்றப்படுபவர் யார்?
8. பிரம்ம ஞான சபை யாரால் தோற்றுவிக்கப்பட்டது?
9. இந்து சமயத்தின் சிறப்பம்சம் யாது?
10. ‘நிஷ்காமகர்மா’ என்றால் என்ன?
11. மௌரியர்கள் பற்றிய ஆதாரங்கள் யாவை?
12. குடவோலை முறை என்றால் என்ன?
13. வீரமா முனிவர் எழுதிய நூலின் பெயர் என்ன?
14. ‘சிவஞானபோதம்’ இயற்றியவர் யார்?
15. சுற்றுச்சூழல் கல்வி என்றால் என்ன?

www.tntextbooks.in

## பகுதி ஆ

**எவையேனும் ஆறு வினாக்களுக்கு ஒவ்வொன்றிற்கும் பத்து வரிகளுக்கு மிகாமல் விடையளி. 6 x 5 = 30**

16. 'இந்தியப் பண்பாடு அழியாத் தன்மை உடையது' எங்ஙனம்?
17. 'வேற்றுமையில் ஒற்றுமை' என்னும் கோட்பாட்டை விவரி.
18. சுருதி, ஸ்மிருதி பற்றி நீவிர் அறிவன யாவை?
19. கற்புடைமை பற்றி சங்க இலக்கியங்கள் கூறுவன யாவை?
20. இராஜா சர் அண்ணாமலைச் செட்டியார் தமிழிசைக்கு ஆற்றிய அரும்பணி யாது?
21. உலகத் தோற்றம் பற்றி தொல்காப்பியர் கூறுவன யாவை?
22. 'குடைவரைக் கோயில்' விளக்குக.
23. பக்தியின் இருவகைகளை விவரி.

## பகுதி இ

**எவையேனும் ஆறு வினாக்களுக்கு ஒவ்வொன்றிற்கும் ஒரு பக்க அளவில் விடையளி. 6 x 10 = 60**

24. சிந்துசமவெளி நாகரிக, நகர் அமைப்பு பற்றி விவரிக்க.
25. பிற்கால வேதகாலத்தின் சமுதாய நிலையைப் பற்றித் தொகுத்து எழுது.
26. நாடகக் கலை பற்றி பெருமைப்பட வேண்டிய செய்திகளைத் தொகுத்து எழுதுக.
27. சோழர்கால சமூக நிலை மற்றும் சமய நிலையை விவரி.
28. கிறித்துவர்கள் ஆற்றிய சமுதாய நல்வாழ்வுப் பணிகளைப் பற்றி விவரி.
29. பக்தி இயக்கத்தின் விளைவுகள் யாவை?
30. இந்தியப் பண்பாடு வெளிநாடுகளில் பரவிய முறையை விவரி?



31. சுற்றுப்புறச் சூழலைப் பேணுவதில் மாணவர்களின் பங்கை எழுதுக.

## பகுதி ஈ

**எவையேனும் நான்கு வினாக்களுக்கு ஒவ்வொன்றிற்கும் நான்கு பக்க அளவில் விடையளி. 4 x 20 = 80**

32. இந்தியப் பண்பாட்டின் சிறப்பியல்புகளைத் தொகுத்து ஒரு கட்டுரை வரைக.
33. சிந்துவெளி நாகரிகம் பற்றி விவரித்து ஒரு கட்டுரை வரைக.
34. பழந்தமிழரின் சீரிய பண்பாட்டுக் கூறுகளைத் தொகுத்து ஒரு கட்டுரை வரைக.
35. இந்தியப் பண்பாட்டிற்கு மௌரியர்களின் கொடை மற்றும் கலையம்சங்களைக் குறித்து ஒரு கட்டுரை வரைக.
36. உலகப் பண்பாட்டிற்கு இந்தியாவின் கொடை என்ற தலைப்பில் நீவிர் தரும் செய்திகளை விவரி.
37. இந்தியப் பண்பாடும் சுற்றுப்புறச் சூழலும் பற்றி ஒரு கட்டுரை வரைக.

www.tntextbooks.in

## துணை நூற்பட்டியல்


அரசு அருட்காட்சியகம், (1999). ***பழங்காலப் பண்பாடும் பழங்குடிகள் பண்பாடும்.*** சென்னை.

ஆறுமுக நாவலர், K. (2003). ***இந்துமத இணைப்பு விளக்கம்.*** மதுரை.

கந்தையா பிள்ளை, ந.சி. (1966). ***தமிழர் பண்பாடு.*** சென்னை.

கல்யாணசுந்தரனார், வி. (1975). ***மனித வாழ்க்கையும் காந்தியடிகளும்.*** சென்னை

கேந்திரத் தொண்டர், (2003). ***பாரதப் பண்பாடு.*** தூத்துக்குடி.

சந்திரசேகரன், P. (2001). ***தமிழக வரலாறு.*** ராஜபாளையம்.

சுப்பிரமணியன், (1987). ***இந்தியப் பண்பாட்டு வரலாறு.*** மதுரை.

சுவாமிநாதன், A. (1984). ***தமிழக வரலாறும் பண்பாடும்.*** சென்னை.

............................ (1998). ***இந்திய சமுதாயப் பண்பாட்டு வரலாறு (கி.பி. 1556 வரை).*** சென்னை.

............................ (1998). ***தமிழ்நாட்டு சமுதாயப் பண்பாட்டு வரலாறு.*** சென்னை.

............................ (1994). ***தமிழ்நாட்டு சமுதாயப் பண்பாட்டு வரலாறு.*** சென்னை.

சேதுராமன், G. (2001). ***தமிழக வரலாறு.*** ராஜபாளையம்.

தமிழ்நாட்டுப் பாடநூல் கழகம், (2004). ***வரலாறு மேல் நிலை முதலாம் ஆண்டு.*** சென்னை.

தமிழ்நாட்டுப் பாடநூல் கழகம், (2001). ***சமூகவியல்.*** ஒன்பதாம் வகுப்பு. சென்னை.

தமிழக அரசு பாடநூல் நிறுவனம், (1996). ***இந்தியப் பண்பாடு.*** சென்னை.





பரிமேலழகர் உரை. ***திருக்குறள்.*** சென்னை.

பழநியப்பன், எஸ். (2002). ***சூழ்நிலையியல்.*** சென்னை

பாண்டியன், ச. ஜெயராஜ் சா. மகாத்மா காந்தி நேசிப்பது எப்படி? ***சுதேசி.*** மதுரை.

பாஸ்கரன், க. (2002). ***தத்துவமும் பண்பாடும்.*** தஞ்சாவூர்.

புரட்சிதாசன், (1993). ***சிந்துவெளி.*** சென்னை.

மெர்சிபாஸ்கர், (2004). ***சுற்றுச்சூழல் புதிய கல்வி.*** திண்டுக்கல்.

லஷ்மணன், கி. (2002). ***இந்திய தத்துவஞானம்.*** சென்னை.

ஸ்ரீசத்யசாய் புக்ஸ் அண்ட் பப்ளிகேஷன்ஸ், (2003). ***தெய்வத்திருவாக்கு.*** சென்னை.

ஸ்ரீ சத்யசாய் பாலவிகாஸ் கல்வி அறக்கட்டளை, பிரசாந்தி நிலையம். (1986). ***தெய்வீகப் பாதை.*** சென்னை.


### ENGLISH


Basant Kumar lal, (1978). ***Contemporary Indian Philosophy***. Delhi

International Vedic Centre, (2003). ***Know Your Religion.*** Chennai.

Lunia, B.N. (1971). ***Evolution of Indian Culture,*** Ludhiana.

Neela Kanda Sastri, K.A. (1993). ***Sangam Age*** (Its Cults & Culture). Chennai.

Pandey & Singh, (1979). ***Evolution of Indian Culture***. Ludhiana.

Prithiviraj Shastri, (1998). ***A concise childrens guide for Sandhya and Yagna.*** Chennai.

Tamil Nadu Arya Samaj Educational Society, (2003). ***Moral Education.*** Chennai.

www.tntextbooks.in

## அருஞ்சொற் பொருள்

### கலைச் சொற்கள்

| | | |
|---|---|---|
| Administration | - | நிர்வாகம் |
| Archaeology | - | தொல்பொருள் ஆய்வு |
| Architecture | - | கட்டடக்கலை |
| Art | - | கலை |
| Assembly | - | சபை |
| Belief | - | நம்பிக்கை |
| Bliss | - | பேரானந்தம் |
| Cavalary | - | குதிரைப்படை |
| Cave Temple | - | குகைக்கோவில் |
| Celibacy | - | பிரம்மச்சரியம் |
| Chariotry | - | தேர்ப்படை |
| Citizen | - | குடிமகன் |
| Civil-disobedience | - | சட்ட மறுப்பு |
| Civilization | - | நாகரிகம் |
| Commerce | - | வர்த்தகம் |
| Concept | - | கருத்து |
| Contemporary | - | சமகாலம் |
| Contact | - | தொடர்பு |
| Creation | - | படைப்பு |
| Culture | - | பண்பாடு, கலாசாரம் |
| Decentralisation | - | பரவலாக்குதல் |



| | | |
|---|---|---|
| Devotion | - | பக்தி |
| District | - | மாவட்டம் |
| Divine | - | தெய்விகம் |
| Doctrine | - | கோட்பாடு, கொள்கை |
| Eco System | - | சூழ்நிலைத் தொகுப்பு |
| Ecology | - | சூழ்நிலையியல் |
| Eight fold path | - | எண்பான் நெறி |
| Elephantary | - | யானைப்படை |
| Emperors | - | பேரரசர்கள் |
| Environment | - | சுற்றுச் சூழல் |
| Epic | - | இதிகாசம் |
| Epics | - | இதிகாசங்கள் |
| Excavation | - | அகழ்வாய்வு |
| Festivals | - | பண்டிகைகள் |
| Fine Arts | - | நுண்கலை |
| Flexibility | - | நெகிழும் தன்மை |
| Forest | - | காடு |
| Granary | - | தானியக் களஞ்சியம் |
| History | - | வரலாறு |
| Humanity | - | மனித சமுதாயம் |
| Icon | - | படிமம் |
| Ignorance | - | அறியாமை |
| Immortality | - | அழியாத்தன்மை |

www.tntextbooks.in

| | | |
|---|---|---|
| Infantry | - | காலாட்படை |
| Internal Development | - | அகவளர்ச்சி |
| Irrigation | - | நீர்ப்பாசனம் |
| Karma Theory | - | கர்மவினைக் கோட்பாடு |
| King | - | அரசன் |
| Literature | - | இலக்கியம் |
| Logic | - | அளவையியல் |
| Middle Path | - | இடைவழி |
| Monism | - | ஒரு பரம்பொருள் கோட்பாடு |
| Monolithic | - | ஒற்றைக் கல் |
| Monotheism | - | ஒரு கடவுட் கோட்பாடு |
| Mountain | - | மலை |
| Museum | - | அருங்காட்சியகம் |
| Music | - | இசை |
| Neem Tree | - | வேப்பமரம் |
| Non-co-operation | - | ஒத்துழையாமை |
| Non-stealing | - | திருடாமை |
| Non-Violence | - | அகிம்சை |
| Orphanage | - | அனாதை இல்லம் |
| Painting | - | ஓவியம் |
| Pantheism | - | அனைத்து இறைக்கோட்பாடு |
| Philosophical ideas | - | தத்துவக் கருத்துகள் |
| Philosophy | - | தத்துவம் |



| | | |
|---|---|---|
| Pictography | - | சித்திர எழுத்து |
| Pipal Tree | - | அரசமரம் |
| Planning | - | திட்டமிடுதல் |
| Polytheism | - | பல கடவுட்கோட்பாடு |
| Prince | - | இளவரசன் |
| Race | - | இனம் |
| Reality | - | உண்மை இயல்பு |
| Rebirth | - | மறுபிறவி |
| Religion | - | சமயம் |
| Rituals | - | சடங்குகள் |
| Rivers | - | நதிகள் |
| Sacrifice | - | தியாகம் |
| Sage | - | துறவி |
| Salvation | - | வீடுபேறு |
| Science | - | அறிவியல் |
| Sculpture | - | சிற்பம் |
| Sea | - | கடல் |
| Self-confidence | - | தன்னம்பிக்கை |
| Smirthi | - | எழுதப்பட்டவை |
| Soul | - | ஆன்மா |
| Sources | - | ஆதாரங்கள் |
| Sruthi | - | காதால் கேட்கப்பட்டவை |
| Sub-continent | - | துணைக்கண்டம் |

www.tntextbooks.in

| | | |
|---|---|---|
| Terracotta | - | சுடுமண் பொம்மை |
| Theism | - | இறைக் கோட்பாடு |
| Theology | - | இறையியல் |
| Theosophical society | - | பிரம்ம ஞான சபை |
| Trade | - | வாணிபம் |
| Transport | - | போக்குவரத்து |
| Truth | - | உண்மை |
| Ultimate Reality | - | பரம்பொருள் |
| Universe | - | பிரபஞ்சம் |
| Untouchability | - | தீண்டாமை |
| Value | - | மதிப்பீடு |
| Village Administration | - | ஊராட்சி நிர்வாகம் |
| Virtue | - | ஒழுக்கம் |
| Worship | - | வழிபாடு |
| Yagas | - | வேள்விகள் |